# ரா.கி.ரங்கராஜன்



# அடிமையின் காதல்

# அடிமையின் காதல்

## ரா.கி.ரங்கராஜன்

தமிழ்நேசன் மின்நூலகம்
www.tamilnesan1981.blogspot.in

# அடிமையின் காதல்

## ரா.கி.ரங்கராஜன்

### முன்னுரை

வரலாற்றைப் பின்னணியாக வைத்துப் பல கட்டுரைகளும் சிறுகதைகளும் எழுதியவர் தி.நா. சுப்பிரமணியம். ஒருமுறை அவரிடம் நான் சரித்திரக் கதைகள் எழுத ஆசைப்படுவதாகச் சொன்னபோது, 'வெள்ளைக்காரன் சென்னையில் குடியேறிய காலம் ரொம்பச் சுவாரஸ்யமானது. அதற்கான தகவல்களும் வண்டி வண்டியாகக் கன்னிமரா லைப்ரரியில் கிடைக்கும். அதை வைத்து எழுது' என்றார்

சென்னை கார்ப்பரேஷனின் மூன்றாவது நூற்றாண்டையொட்டி ஒரு சிறப்பு மலர் வெளியிடப்பட்டிருந்தது. அதில் ஒரு கட்டுரையில், சென்னை நகரில் அடிமை வியாபாரம் நடந்ததாக ஒரு கட்டுரை படித்தேன்.

எம்.எஸ். சுப்பிரமணிய ஐயர் என்பவர் அந்த நாளில் சின்னச் சின்ன வாக்கியங்களில் விறுவிறுப்பாகக் கதை கட்டுரைகள் எழுதி வந்தார். அவருடைய நடை என்னை மிகவும் கவர்ந்தது.

எடிட்டர் எஸ்.ஏ.பி. அவர்கள் 'The Man From Rio' என்ற ஆங்கில படத்தைப் பார்த்துவிட்டு வந்து, அதில் வரும் உல்லாசமான உற்சாகமான, ஆபத்துக்களைச் சிரித்துக் கொண்டே எதிர்நோக்கும் ஹீரோவைப் போல அடிமையின்

காதல் கதாநாயகனைப் படைக்கும்படி யோசனை சொன்னார் இவை எல்லாமாகச் சேர்ந்ததுதான் அடிமையின் காதல்:

முதல் இரண்டு மூன்று அத்தியாயங்கள் வரை கதாநாயகனுக்குச் சரியான பெயர் கிடைக்காமல் காஞ்சிபுரத்தான் என்று குறிப்பிட்டு வந்தேன். பிறகு அதையே நிரந்தரமாக வைத்து விட்டேன். தி.மு.க.கட்சியும் அறிஞர் அண்ணாவும் ஆட்சிப் பீடத்தை நெருங்கிக் கொண்டிருந்த சமயமாகையால் 'காஞ்சிபுரத்தான்' என்ற பெயருக்கு மவுசு கூடியது.

பல வருடங்களுக்குப் பிறகு இந்த நாவலை அழகிய முறையில் பதிப்பித்துள்ள அல்லயன்ஸ் நிறுவனத்தை நெஞ்சாரப் பாராட்டுகிறேன்.

ரா.கி.ரங்கராஜன்

# வாழ்த்துரை

'இது சத்தியம்' கதாசிரியர், குமுதம் 'அரசு' நடந்த காலத்தில் 'அ' 'ர' 'சு'வில் 'ர' இவர்தான் என்ற பரவலான பேச்சு, இப்படித்தான் தெரியும் திரு.ரா.கி.ர.வை எனக்கு. பிற்பாடு நல்ல எழுத்தாளர்களுடன் கலந்தாலோசித்து திரைக்கதை உருவாக்க வேண்டும் என்ற எனது ஆவலில் திரு. ரா.கி.ர. வை அணுகிய போது உடனே ஒப்புக் கொண்டார்.

கதை, விவாதம், சின்ன வாக்குவாதங்கள், சந்தோஷமான பல மணி உரையாடல்கள், குமுதம் காரியாலயத்து கதைகள் என எங்கள் நட்பு வளர்ந்து கொண்டிருந்தது. வயது வித்தியாசம் அறியாத நட்பு, வயதை ஒரு பொருட்டாக மதிக்காத நட்பு, இருதரப்பிலும்.

ஒருநாள் 'நெஜமா சொல்லுங்க, உங்களுக்கு மிகவும் பிடித்த எழுத்தாளர் யாரு?" என்றார் ரா.கி.ர.

ஜெயகாந்தன், சுஜாதா என்றே பதில் இருக்கும் என்று எதிர்பார்த்திருப்பார் என்று நினைக்கிறேன். அதுவும் உண்மைதான் என்றாலும், 'என்னைத் தொடர்ந்து சரித்திரத் தொடர்கதை படிக்க வைத்தது சாண்டில்யன் கூட இல்லை. மோகினி என்ற ஒரு அம்மையார்' என்றேன்.

லேசாக ஒரு நமட்டுச் சிரிப்புடன், 'அப்பிடியா? ஏன் அந்தப் பொம்பளயப் பிடிக்கும்?' என்றார்.

சரி, குமுதம் பத்திரிகைக்கும் அந்த அம்மாளுக்கும் ஏதோ கருத்து வேறுபாடு, அப்படி கருத்துக்கள் வேறுபட ரா.கி.யும் காரணமாக இருந்திருப்பார் போல இருக்கிறது. அதனால்தான் நமட்டுச் சிரிப்பும் எகத்தாளமும் என்று நினைத்து, 'ஒங்களுக்கு

அவங்களைப் பிடிக்கலைன்னாலும் எனக்குப் பிடிக்கும்' என்றேன்.

'ஏன் அப்படிச் சொல்றீங்க? எனக்கும் பிடிக்கும்; ஆனா என்ன, அது பொம்பளயே இல்ல, ' என்றார் ரா.கி.ர.

என் சந்தேகம் ஊர்ஜிதமானது. நல்ல பெண் எழுத்தாளரைப் பார்த்து ரா.கி.ர.வுக்குப் பொறாமை என்று மனதுக்குள் நினைத்தேன். பிற்பாடு அந்த மோகினி அவதாரம் எடுத்த ரங்கராஜன் தானேதான் என்று அவர் தெரிவித்த போது வியப்பும் அசடும் பொங்கி வழிந்தது என் முகத்தில்.

அற்புதமான பல மணி நேரங்கள் என் பால்ய காலத்தில் எனக்குத் தந்த அந்த மோகினிக்கும், பிற்பாடு 40 வயதுக் கமல்ஹாசனுக்கும் நேரம் போவதே தெரியாமல் உரையாடியும் 'மஹாநதி' என்ற ஒரு அற்புதமான படைப்பைச் செதுக்க உதவிய சிற்பியாகவும் விளங்கிய ரா.கி.ர.வுக்கு ஒரு நன்றி. . இவர் புராணம் ஒருபுறமிருக்க, 'அடிமையின் காதல்' என்னுள் ஏற்படுத்திய மாற்றங்களுக்கு வருவோம். சரித்திரப் படங்கள் என்ற பெயரில் தமிழ்த் திரையுலகம் பல அபத்தங்களை நிகழ்த்திக் கொண்டிருந்த வேளை அது. புராணமும் சரித்திரமும் கலந்த ஊசிய ரசம் தமிழ்த் திரையில் ததும்பிக் கொண்டிருந்த நேரம். அந்தக் காலக் கட்டத்தில் சரித்திர நாவல்கள் அதிகம் படிக்காத ஒரு சிறுவனுக்கு ஞானக்கண் திறந்த மாதிரி இருந்தது 'அடிமையின் காதல்..' சின்ன வயதில் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடிய விஷயங்களை, பருவமும் பக்குவமும் வரும் போது கீழே இறக்கி வைக்க வேண்டிய சங்கோஜம் கலந்த நிர்ப்பந்தம் வரும். அந்த நிர்ப்பந்தத்தை அடிமையின் காதல்' எனக்கு ஏற்படுத்தவே இல்லை. இன்றும் என்னை வாசிக்கத் தூண்டும் நாவல் அது. இன்றும் அதை

தலையில் வைத்துக் கொண்டு ஆடத் தயார் என்பதற்குச் சான்றே இந்த உரை.

காஞ்சிபுரத்தான் வீட்டில் கோபித்துக் கொண்டு புறப்படும் வேளை தொட்டு, இந்திய ஆங்கிலேய உறவின் கதையின் நடு அத்தியாயத்தில் காஞ்சிபுரத்தான் கதையைக் கொண்டு போய், கோட்டை வாசலில் முடித்திருப்பார் ரா.கி.ர.

'என் மதறாஸ் இப்படியும் இருந்ததா?' என வியக்க வைக்கும் நுண்ணிய பல சரித்திரத் தகவல்கள்.

சாந்தோம் சர்ச் பக்கம் செல்லும் போதெல்லாம் தன் தோளில் வளர்ப்பு ஒணானுடன் மாலை வாக்கிங் செல்லும் ஆங்கிலேயப் பாதிரியார் நினைவுக்கு வருவார்.

என் மனமெல்லாம் வியாபித்த கதை அடிமையின் காதல்" சரித்திர நாவல்களைப் படிக்க வேண்டும் என்ற ஆவலை என்னுள் ஏற்படுத்திய முதல் நாவல் அடிமையின் காதல்'. மீண்டும் ஒரு தலைமுறையை இது வியக்க வைக்கும். இதை ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்தால் ஆங்கிலமே படிக்கும் தமிழரில் சிலர் தமிழ்ச் சரித்திர நாவல்களைப் படிக்க ஈர்க்கப்படலாம்.

வாசக நன்றியுடன்,

கமலஹாசன்

# (1)

பின்கட்டுக் கதவை முழங்கையால் அழுத்திக் கொண்டு கொக்கியை விலக்கினான். ஓசையில்லாமல் கதவு திறந்து கொள்ள, வெளியே வந்தான்.

மடியிலிருந்த பொற்காசுகள் கலகலத்தன. அவற்றையும் ஓசை வராதபடி இறுக்கமாய் முடிந்து கொண்டான்.

இரட்டைக் காளை பூட்டிய வில்வண்டி காத்திருந்தது. 'தம்பி மச்சிலே இருக்கிறாயா?" என்று உள்ளே குரல் கேட்டது.

அன்னை. ஒரு விநாடி தயங்கினான். பிறகு, வண்டியில் ஏறி அமர்ந்து, மூக்கணாங்கயிற்றைத் தளர்த்தினான். வைக்கோலுக்குக் கீழேயிருந்து சாட்டையை உருவும் ஓசையை ஜாதிக் காளைகள் மோப்பம் பிடித்தன.

காஞ்சிபுரத்தின் அழகிய வீதிகளில் கடகடவென்று ஓடத் தொடங்கியது வண்டி.

"எங்கே இந்தக் காலை வேளையில்?' என்று சில பேர் விசாரித்தார்கள்.

அவன் பதில் தரவில்லை. வண்டியை நிறுத்தவில்லை. புன்முறுவல் செய்தான்.

சடக் சடக், சடக் சடக். நகரத்துக்குள் தறிகளின் ஓசை கேட்டுக் கொண்டிருந்தது. சளக் சளக், சளக் சளக். வயல் வெளிகளில் நாற்று நடுவோரின் ஓசை கேட்டது.

காஞ்சி நகரின் மாளிகைகளும் கோபுரமும் பார்வையிலிருந்து மறைந்துவிட்டன.

'போய் வருகிறேன்!" என்று கைவீசி விடை பெற்றான் அவன்.

போய் வருகிறேன், அப்பா! உங்கள் இரும்புப் பெட்டிக்குக் காவல் கிடக்க என்னால் முடியாது. போய் வருகிறேன். அத்தை மகளே! உன் வைரக் கழுத்தில் தாலியைக் கட்டி, சப்ர மஞ்சத்தின் ஐந்தாவது காலாகப் பழி கிடக்க எனக்கு மனமில்லை. பொற்கிண்ணங்களே, பால் பாயசமே விடை கொடுங்கள். உங்கள் அசட்டுத் தித்திப்பு எனக்கு அலுத்து விட்டது.

அவன் விடைபெற்று விடைபெற்றுப் போய்க் கொண்டே யிருந்தான்.

சுதந்திரங்கள் நிறைந்த சென்னைப் பட்டினம் அவனை அழைத்தது. வாய்ப்புக்கள் மலிந்த புதிய நகரம் அவனைக் கூப்பிட்டது.

வண்டியை அந்தப் பாதையில் செலுத்தினான். காலைச் சூரியனின் இளஞ்சூடு இதமாயிருந்தது. அதன் ஒளி, மாடுகளின் கொம்பிலிருந்த பித்தளைக் குப்பிகளில் பிரதிபலித்து அவன் கண்ணைக் கூசச் செய்தது. விரைந்து எதிர் வந்த காற்று, அவனது சுருண்ட கேசத்தை வருடிவிட்டுச் சென்றது.

வீட்டில் காலைப் பூசையை அப்பா முடித்திருப்பார். பூவையும் பழத்தையும் எடுத்துக் கொண்டு அம்மா மச்சுப் படியின் கீழே வந்து நிற்பாள். 'தம்பி! தம்பி! இறங்கி வந்து திருநீறு குங்குமம் வாங்கிக் கொள்ளப்பா என்னால் படியேறி வர முடியவில்லையடா ராஜா' என்று குரல் கொடுப்பாள்.

'தம்பி' வரமாட்டான். அம்மா மச்சுக்குப் போய்ப் பார்ப்பாள். கொஞ்ச நேரத்தில் வீடு...

உதட்டைக் கடித்துக்கொண்டு, மாட்டின் வாலை முறுக்கி விட்டான் அவன். பழக்கமில்லாத தண்டனை, பஞ்சாய்ப் பறந்தன காளைகள்.

சுமைதாங்கிக் கல் தெரிவித்தது:

திருப்பெரும்புதூர்.

வெய்யில் உச்சிக்கு வந்திருந்த வேளை, காளைகளின் வேகம் மட்டுப்படத் தொடங்கிய பிறகே அவனுக்கு நினைவு வந்தது. காலையிலிருந்து ஆகாரம் எதுவும் போடாமலேயல்லவா ஒட்டி வந்திருக்கிறான்!

ஏர்க்காலிலிருந்து காளைகளை அவிழ்த்து, வைக்கோல் போட்டான். அருகிலிருந்த குட்டையில் தண்ணிர் குடிக்க வைத்தான்:

மறுபடி வண்டியைக் கட்டிக்கொண்டு புறப்பட்டான். வேகமாக ஒட்ட முடியவில்லை. குறுக்கும் நெடுக்குமாக ஜனக்கூட்டம். கும்பல். சந்தடி.

'என்ன விசேடம் இந்த ஊரில்?' என்று விசாரித்தான்.

'சந்தை நடக்கிறது.'

"எங்கே?'

'பெருமாள் கோயிலுக்குப் பின்புறம் மைதானம் இருக்கிறது. போய்ப் பாருங்கள்.'

அவன் நுழைந்த பகுதியில் மாடு வியாபாரம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அங்கே சத்தம் இல்லை. வாங்குகிறவரும் தரகரும் மேல் வேட்டிக்குள் கையை மறைத்துக் கொண்டு, சைகை மொழியில் பேரத்தை முடித்துக் கொண் டிருந்தார்கள். எந்த விரலைத் தொட்டால் எத்தனை பணம் என்று அவனுக்குத் தெரியும். மூலைக்கு மூலை நடை பெற்றுக்கொண்டிருக்கும் இந்த மூடு மந்திரத்தைப் பார்த்துச் சிரித்தபடி, அரசமரத்தின் கீழிருந்த ஒரு மேடையில் ஏறி நின்று கொண்டான். கையைப் பட்பட்டென்று தட்டினான். வியாபாரிகள் நாலைந்து பேர் அருகில் வந்து நினறார்கள்.

'ஜோடிக் காளை விற்கப் போகிறேன். வண்டியோடு எடுத்துக் கொள்ளலாம். மூன்றே வராகன்!'

நான் நான்! எனக்கு எனக்கு!

போட்டி போட்டுக்கொண்டு முண்டி வந்தார்கள் பல பேர். பணத்தை முதன் முதலில் நீட்டியவனிடம் அவன் பெற்றுக் கொண்டான். வண்டியை ஒட்டி வந்து மூக்கணாங் கயிற்றை ஒப்படைத்தான்.

'போய் வாருங்கள்!' ஜோடிக் காளைகளுக்கு ஆளுக்கொரு செல்லத் தட்டு கிடைத்தது முதுகில்.

அருகிலேயிருந்த சத்திரத்திலிருந்து சூடான சமையலின் இனிய மணம் காற்றில் தவழ்ந்து வந்தது. வாழை இலையில் உணவை வாங்கிக் கொண்டு குளக்கரையில் அருந்தி முடித்தான். கை கழுவிவிட்டுப் படியேறி வந்த போது, மண்டபத்தின் பின்னே உற்சாகமான பேச்சுக் குரல் கேட்டது.

"ஆள், பார்க்கிறதுக்குத்தான் பொம்மை ராஜா மாதிரி இருக்கிறான். மற்றபடி சுத்த ஏமாந்த சோணகிரி. இல்லா விட்டால் வண்டியையும் மாட்டையும் இப்படி ஏமாளித் தனமாய்க் குறைந்த விலைக்கு விற்றிருப்பானா?''

மாட்டை வாங்கிக் கொண்டவனின் பேச்சு அது - ஒரு தோழனிடம்.

காஞ்சிபுரத்து இளைஞன் சிரித்துக் கொண்டான். மாடு வாங்கியவனின் தோளில் ஒரு தட்டுத் தட்டி, இப்படி வா என்று சாடை காட்டினான். வண்டியிடம் அழைத்துச் சென்றான்.

வலப்புறமிருந்த மாட்டினிடம் சென்று, "பார்' என்று சுட்டிக் காட்டினான்.

'ஐயையோ இது பாடைச் சுழி என்பார்களே!' என்று பதறினான் மாட்டை வாங்கியவன்.

'ஆமாம். இந்த மாடு இருக்கிற வீடு உருப்படாது. எவனுக்காவது இனாமாகவாவது தள்ளிவிடவேண்டும் என்று என் அப்பா சொல்லிக் கொண்டிருந்தார்."

அவன் நடையைக் கட்டினான்.

"சாமி! சாமி!' என்று கூப்பிட்டுக்கொண்டே ஓடி வந்தான் மாட்டை வாங்கியவன்.

'சாமியா? அதோ அங்கே!' என்று கோயில் கோபுரத்தைக் காட்டிவிட்டு அவன் சந்தைக் கேளிக்கைகளை ஒவ்வொன்றாக ரசித்துப் பார்க்கத் தொடங்கினான்.

வளையல், பாசி மணி மாலைகள் முதலியன விற்பனையாகிக் கொண்டிருந்த இடத்தில் கலகலவென்று பெண்களின் சிரிப்பொலி கேட்டது. அவன் மெதுவாய் நடக்கலானான்.

ஒரு சிறுமி அழுது கொண்டிருந்தாள். 'போ, குழந்தை! வராது" என்று கடைக்காரன் விரட்டிக் கொண்டிருந்தான்.

அவன் நின்றான். 'குழந்தை என்ன கேட்கிறாள்?"

"மாலை வேண்டுமாம். அரைக் காசை வைத்துக் கொண்டு கேட்கிறது!" கடைக்காரனின் ஏளனமான சிரிப்பு ணங்கென்ற ஓசையினால் நின்றது.

காஞ்சிபுரத்தான் சுண்டியெறிந்த நாணயம் கடைக்காரரின் பெட்டி முன்னால் விழுந்தது.

"கொடு, குழந்தை கேட்பதையெல்லாம்' அவன் குனிந்து, சிறுமியின் தலையைக் கோதிவிட்டான். 'வாங்கிக் கொள் பாப்பா, அழக்கூடாது. அழவே கூடாது."

அவன் மேலே நடந்தான்.

**ஆ**தவனுக்கு அலுவல் நேரம் முடிவடைந்து விட்டது.

கடைசிக் கிரணங்களின் மூலம் அலைகளிடம் விடை பெற்றுக் கொண்டு எதிர் வானத்தில் இறங்கிக் கொண்டிருந்தான்.

இதுதான் சென்னைப் பட்டிணமா? அவன் ரசித்தவாறு நின்றிருந்தான்.

பொழுது சாய்வதற்குள், நடையிலேயே அவன் சென்னைப் பட்டிணத்தை வந்தடைந்திருந்தான். நம்பற்கரிய அந்தச் சாதனையில் கால்கள் வருந்தியிருக்குமே! அலைகள் அவற்றை வருடி வருடித் தேற்றிவிட்டுத் திரும்பின.

ஈர மணலுக்கு இழுத்து வரப்படும் கட்டு மரங்கள்; கடைசி மூச்சுக்காகப் போராடும் பெரிய மீன்கள்; மீனையும் கணவனையும் வரவேற்கும் மீனவப் பெண்கள். இங்கொன்று அங்கொன்றாய்க் குடிசைகள். வெகு தொலைவில் பாய்மரக் கப்பல்கள்.

பச்சை மலையெனப் பரந்து அடர்ந்து நிற்கும் தென்னந் தோப்பு. அவைகளுக்கு மேலே தெரியும் திருவல்லிக்கேணி கோயில் கோபுரம். மூன்றாள் உயரத்துக்கு எழும்பி நிற்கும் புதிய கோட்டை. கும்பினிக்காரன் கட்டிக் கொஞ்ச நாள் தான் ஆகிறதாம். மதில் சுவர்களில் துருத்திக் கொண்டு அச்சுறுத்தும் பெரிய பீரங்கிகள்.

கோட்டை வாசலில், பளபளவென்று சிவப்பு அங்கி யுடன் வெள்ளுடைக்காரச் சிப்பாய்கள் சிலர் காவலிருந்தனர்.

இதுநாள் வரை, கிழவர்களை மட்டுமே கவரும் புண்ணிய ஷேத்திரமாக விளங்கியது சென்னை நகரம். அதை, குமரர்களையும் ஈர்க்கும் சாகச நகரமாக்கியவர்கள் இந்த வெள்ளைக்காரர்கள் தானே?

குபுகுபுவென்று அவனுக்குள் உற்சாகம் பெருக்கெடுத்தோடியது. புதிய மண்ணை மிதித்ததால் புதிய ரத்தம் ஊறிய மாதிரி தோன்றியது.

திடீரென்று அவன் காலை எதுவோ குறுகுறுத்தது.

"மோஸஸ் அறிமுகமில்லாமல் அன்னியரிடம் போகக் கூடாது. வா இப்படி' என்றழைக்கும் குரலொன்று கேட்டது.

திகைத்துத் திரும்பினான் அவன். பல ஆச்சரியங்கள் ஒரே சமயத்தில் சூழ்ந்து கொண்டன.

அவன் காலைக் குறுகுறுக்கச் செய்துவிட்டு ஓடிய ஜந்து, ஒரு பச்சோந்தி. அதன் கழுத்தில் சிறிய வளையம் மாட்டி, அதில் அழகிய பட்டு நூலைக் கட்டி, நாயை அழைத்து வருவது போல அழைத்து வந்திருந்தவர் ஒரு வெள்ளைக் காரக் கிழவர்.

காஞ்சிபுரத்தில் அவன் பார்த்துள்ள மற்ற பரங்கியரைப் போல ஆங்கிலத்திலோ பிரெஞ்சு மொழியிலோ இவர் பேசவில்லை. திருத்தமான தமிழில் பேசினார்.

"மோஸஸ்' என்று கூப்பிடப்பட்டதும் அந்தப் பச்சோந்தி குடுகுடுவென்று ஓடி, கிழவரின் கால்வழியே ஏறி, அவருடைய தோளில் ஆரோகணித்துக் கொண்டது.

"ஊருக்குப் புதியவனா நீ?" என்று அவர் கேட்டார்.

அவன் தலையசைத்தான்.

'கோட்டையில் இருக்கிறவன் நான். சாப்ளின்அதாவது, பாதிரியார்.'

அவன் நினைத்துக் கொண்டான். இவர் வேறு வகையான பாதிரியார் போலும். கத்தோலிக்க சாமியாராயிருந்தால் நீண்ட அங்கி, ஜபமாலை இருக்குமே?’’

"போகலாமா மோஸ்ஸ்?" என்று அவர் பச்சோந்தியைக் கேட்டார். புரிந்து கொண்டதோ இல்லையோ, அது தலையசைத்தது. அவர் போய்விட்டார்.

"எல்லா வெள்ளைக்காரனும் குள்ளநரியல்ல. இவரைப் போல அரைக் கிறுக்கும் இருப்பார்கள் போலிருக்கிறது!" அவன் சிரித்துக்கொண்டே அவருக்கு எதிர் திசையில் திரும்பினான்.

கிடுகிடுவென்று இருட்டலாயிற்று. அவனுக்குப் பசியெடுத்தது.

கோட்டைக்கு வடபுறம் நடந்தான். கோட்டையிலுள்ள கும்பினிக்காரரர்களின் வர்த்தகத்துக்குத் துணையாக, அதை ஒட்டிய பகுதியில் சுறுசுறுப்பாக ஒரு பேட்டை முளைத்திருந்தது. அதைத் தாண்டிச் சென்றால் ராயபுரம் கிராமம்.

புதிய பேட்டையில் - வெள்ளைக்காரர்கள் பிளாக் டவுன் என்று அழைத்த இடத்தில் அவன் நடந்தான். தெருக்களில் நுழைந்ததுமே எது தமிழர்கள் வீதி, எது தெலுங்கர்கள் பகுதி, எது முசல்மான்கள் குடியிருப்பு என்று புலப்பட்டது. சாய நூலை வடம் வடமாகத் தோளில் போட்டுக்கொண்டு செல்லும் நெசவுத்தொழிலாளர்களை அவன் கண்டான்; கோச்சு வண்டியில் ஆரோகணித்தவாறு தங்களையும் வெள்ளைத் துரையென்று கற்பனை செய்து கொள்ளும் புதுப் பணக்காரர்களை அவன் பார்த்தான். அம்மன் கோயிலுக்குக் கோபுரம் கட்டிக்கொண்டிருந்தார்கள். உயரமான சாரத்திலிருந்து சரசரவென்று இறங்கும் கொல்லத்துக்காரர்கள்; துறைமுகத்திலிருந்து திரும்பும் படகோட்டிகள், இடுப்பில் குழந்தையும் கையில் புஷ்பத் தட்டுமாகக் கோயிலுக்கு விரையும் பெண்மணிகள் - இவ்வளவு பேரையும் பார்த்தவாறே ஓர் உணவு விடுதிக்குள் அவன் புகுந்தான்.

'ரசம் இன்னும் கொஞ்சம்.'

நுனி வாழையிலை போட்டு ருசித்துச் சாப்பிட்டுக் கொண் டிருந்தான் அவன்.

தொன்னையில் ஆவி பறக்கும் ரசம் வந்தது மணக்க மணக்க.;

உயரத்திலிருந்து தொங்கிய லஸ்தர் விளக்குகள் அசைந்தாடின. கன்னங் கரேலென்ற பாறைச் சுவர்கள் சிறைக் கோட்டத்தை நினைவூட்டின.

அவன் நடு நடுவே தலை நிமிர்ந்தான். உன்னிப்பாய்க் கேட்க முயன்றான்.

பிரமையா, அசலா?

இன்னதென்று விளங்காத கூச்சலொன்று இடையிடையே கேட்டுக் கொண்டிருந்தது, அருகிலிருந்த கட்டிடத்திலிருந்து. அது காதில் விழும்போதெல்லாம், மற்றவர்கள் ஒருவரை யொருவர் திகிலுடன் பார்த்துக் கொண்டார்கள்.

ஏன்? என்னவாயிருக்கும் அது?

திடீரென்று ஒரு நிசப்தம்.

பேச்சை நிறுத்திக் கொண்டனர் அனைவரும். தங்கள் தங்கள் கலங்களை அவசரமாக எடுத்துக் கொண்டனர். ஆசனங்களையும் ஓரமாக நகர்த்திவிட்டு ஒதுங்கிக் கொண்டார்கள் பலர். விடுதி முதலாளியும் ஊழியர்களும் கை கட்டிக் கொண்டு நின்றார்கள்.

கருகருவென்று மீசையை முறுக்கி விட்டுக் கொண்டு ஆஜானுபாகுவான ஒரு முரட்டு ஆள் உள்ளே வந்தான். அவன் கையிலிருந்த நீண்ட சவுக்கு சொடேர் சொடேர் என்று தரையில் மோதியது. மார்பிலும் திரண்ட புஜத்திலும் அடர்ந்திருந்த ரோமம், இரும்புக் கம்பிகளைப் போலச் சிலிர்த்து நின்றது.

விடுதி அதிபரே வந்து, 'அண்ணனுக்கு என்ன கொண்டு வரட்டும்?' என்று கேட்டார் மீசைக்காரனை.

காஞ்சிபுரம் இளைஞன் ருசிப்பதற்காகக் கையில் பிடித்திருந்த தொன்னையை வெடுக்கெனப் பறித்தான் வந்தவன்.

'என்ன இது?" என்று விடுதிக்காரரைக் கேட்டான்.

'மிளகு ரசம்.

முகர்ந்து பார்த்துவிட்டு, 'நாய்கூடக் குடிக்காது' என்று மூலையில் எறிந்தான் வந்தவன். 'சாப்பாடு கொண்டுவா. '

மூலையில் கவிழ்ந்த ரசத்தை எந்தச் சிப்பந்தியும் முன் வந்து எடுத்து வைக்கவில்லை. விட்டத்திலிருந்து குதித்த ஒரு கறுப்புப் பூனை, சிந்தியிருந்த ரசத்தை நக்கியது.

காஞ்சிபுரத்தான் அமைதியாகக் கூப்பிட்டான் ஒரு சிப்பந்தியை. "வேறு தொன்னையில் ரசம் கொண்டு வாருங்கள். நான் வைத்திருந்ததை நாய் பூனையெல்லாம் நக்கி விட்டது,' என்றான்.

மீசைக்காரனின் மந்த மூளைக்கு அதிலிருந்த இளக்காரம் புலப்படவில்லை; சாப்பிடத் தொடங்கினான்.

'வென்னீர்,' என்றான்.

'இதோ, ' என்று ஆற்றித் தரலானார் விடுதிக்காரர்.

மீசைக்காரன் உண்டு முடித்தான். காஞ்சிபுரத்தானின் அருகில் வந்து நின்றான். "எந்த ஊர்?' என்றான்.

'மரியாதை கொடுக்கத் தெரிந்த ஊர், ' என்று பதில் வந்தது.

“நாக்கு நீளுகிறதே?"

'இன்னும் முழு நீளத்தையும் காட்டவில்லை, ' என்று திருப்பித் தந்தான் காஞ்சிபுரத்தான்.

'அண்ணன் அங்கே வந்தால் தேவலை.' கை கட்டி வாய் பொத்தி மீசைக்காரனை அழைத்தான் ஓர் ஆள்.

'ஏண்டா? '

"இன்னேரத்துக்கு மேலே ஐந்தாறு கிராக்கி வந்திருக்கிறது. நம் ஆட்கள் பல பேர் வீட்டுக்குப் போய் விட்டார்கள்...'

மீசைக்காரன் வெறியுடன் சிரித்தான். சாட்டையைச் செல்லமாகத் தடவிக் கொடுத்து, "உனக்குச் சாப்பாடா?" என்று கொஞ்சினான். புறப்பட்டு விட்டான்.

**சா**ப்பாடு நேரம் முடிந்துவிட்டது. திறந்த முற்றத்தில் பல பிரயாணிகளில் ஒருவனாகக் காஞ்சிபுரத்தானும் படுத்திருந்தான். ஆனால் உறக்கம் வரவில்லை. மீண்டும் அந்த மர்மமான ஓசைகள்...

உணவு விடுதியிலிருந்து வெளிப்பட்டான் அவன். அடுத்த கட்டிடத்தைப் பார்த்தான். கோட்டைச் சுவர் போல எழும்பியிருந்தது அது.

தெருவில் காலடியோசை கேட்டது.

கையில் விலங்கிட்டு ஓர் ஆளை அழைத்து வந்து கொண்டிருந்தான் ஒருவன். " விலகு, ' என்று காஞ்சிபுரத்து வாலிபனை அதட்டி விட்டு உள்ளே சென்று விட்டான்.

"ஓ, காவல்கூடமா?" உரக்கவே சொல்லிவிட்டான் போலும்.

'இல்லை, கசையடி விடுதி,' என்ற திருத்தம் வந்தது. சற்று முன் அவனுக்குச் சாப்பாடு போட்ட உணவு விடுதிச் சிப்பந்திதான் அப்படிச் சொன்னவன்.

'கசையடி கொடுப்பதற்கு ஒரு விடுதியா? யாருக்குக் கசையடி?"

வேறுப்புடன் பதில் வந்தது மற்றவனிடமிருந்து, 'அடிமைகளுக்கு!'

'அடிமை? உவமையாகச் சொல்கிறாயா?"

'உண்மையாகச் சொல்கிறேன். சென்னைப் பட்டினத்தில் அடிமை வியாபாரம் அமோகமாக நடந்து கொண்டிருக்கிறது. தெரியாதா உனக்கு?"

காஞ்சிபுரத்தானின் கண்கள் வியப்பினால் விரிந்தன.

சிப்பந்தி சொன்னான்: 'எஜமானின் கோபத்துக்கு ஆளான அடிமைக்குக் கசையடி கொடுப்பதற்காகவே இந்த விடுதி... இவ்வளவு அடிக்கு இவ்வளவு கட்டணம் என்று பணம் கொடுத்து அனுப்பி வைப்பார்கள்... '

தண்டனை பெற்றுக் கொண்டு வெளியில் வந்து கொண்டிருந்தான் ஓர் அடிமை.

காஞ்சிபுரம் இளைஞனின் கண்கள் எரிந்தன. அந்த அடிமையின் மார்பிலும் முதுகிலும் தோளிலும் ஜிவு ஜிவு வென்று எத்தனை தழும்புகள் மரவட்டைப் பூச்சி மாதிரி! செக்கச் சிவக்க எவ்வளவு தடிப்புகள்!

காஞ்சிபுரத்தான் சுற்றும் முற்றும் கவனித்தான். அவனைத் தடுக்க யாரும் காணோம். உள்ளே நுழைந்தான்.

சுவர்களில் தீப்பந்தங்கள் செருகப்பட்டிருந்தன.

சுரங்கப்பாதை மாதிரி ஒரு நேர்வழி சென்றது. இந்தப் பக்கம் ஒரு திண்ணை. அதற்கு அப்பால் இரும்புச் சட்டங்களால் கூரை போட்ட மண்டபம். வலப்புறம் இன்னொரு பாதை. பிரம்மாண்டமான கிணறு. அதற்குத் தள்ளி ஓர் அரசமரம்.

இருளில் சுவரோடு சுவராக ஒட்டியபடி நகர்ந்தான். கண் கொட்டாது பார்த்தான்.

அது போன்ற நரகத்தை அவன் கண்டதில்லை.

சில அடிமைகள் தூணில் கட்டப்பட்டிருந்தார்கள். வேறு சிலரின் கையையும் காலையும் சுற்றிய கயிறுகள் சுவரிலிருந்த பெரிய இரும்பு வளையங்களுடன் பிணைக்கப்பட்டிருந்தன. பளபளவென்று மின்னிய தோல் நாக்குகள் அடிமைகளின் உடலை நக்கின, பெரும் ஓசையுடன்.

ஒவ்வோர் அடிமைக்கும் இரு புறத்தில் இருவர் நின்று கொண்டிருந்தனர். ஒருவன் ஒன்று, இரண்டு என்று அடிகளை எண்ணிக்கொண்டிருந்தான். மற்றவன் கையில் தண்ணிர்க் குவளையுடன் நின்றிருந்தான். அடி விழுந்த இடத்தில் அவ்வப்போது குவளைத் தண்ணிரை வீசுவது அவன் வேலை.

மண்டபத்தின் நடுவில், மேஜை போட்டு அமர்ந்திருந்தார் ஒரு கிழவர். மெழுகுவத்தியின் ஒளியில் அவர் ஓலையில் ஏதோ குறித்துக்கொண்டிருப்பதையும், மேஜை மீதுள்ள காசுகளை எண்ணுவதையும் காஞ்சிபுரத்தான் கண்டான். அவர் கணக்கப் பிள்ளை போலும். விடுதியில் கண்ட மீசைக்காரன் சாட்டையைச் சொடுக்கியவாறு நடு நடுவே வந்து கணக்குத் தெரிவித்தான் அவரிடம். கசையடி ஆட்களுக்கு அவன் தலைவனென்று தெரிந்தது.

திடீரென்று

'அம்மா! அம்மா!'

பெண்குரல்.

காஞ்சிபுரத்தான் கூர்ந்து கவனித்தான், விழிகளை இடுக்கிக்கொண்டு.

மண்டபத்தின் மறு கோடியில் அவளைக் கண்டான் பெண்ணடிமையை.

அவள் மேனியே அப்படியொரு சென்னிறமோ துலக்கிய செப்பு விக்கிரகம்போல? அல்லது ரத்தக்கறைகள் உடம்பு பூரா

தெறித்திருந்ததால் இந்தச் சிவந்த நிறமோ? அவிழ்ந்து விழுந்திருந்த கூந்தல், வியர்வையில் நனைந்து முகத்தின் பாதியில் ஒட்டிக்கொண்டிருந்தது. சரியான இளமை, மூங்கில் போலச் செழுமையான தோள். கயிறு கட்டப்பட்டிருந்ததால் அது புடைத்துத் திமிறிக் கொண்டிருந்தது.

சொடேர் சுளிர் சாட்டை தீ கக்கியது.

'இருபத்தொன்று... இருபத்திரண்டு... ' உதவியாளன் எண்ணினான்.

'அம்மா! அம்மா!' என்று அவள் அலறினாள்.

காஞ்சிபுரத்தான் பல்லைக் கடித்தான். கணகணவென்று எங்கேயோ மணி அடித்தது. சாட்டைகளைக் கீழே போட்டார்கள் ஆட்கள்.

'வாங்கடா, ஓய்வு மணி அடிக்கிறது' என்று ஒருவன் குரல் கொடுத்தான். அனைவரும் நீர்த் தொட்டியில் கை கழுவச் சென்றார்கள். கணக்கப்பிள்ளை மட்டும் எழுந்திருக்கவில்லை.

காஞ்சிபுரத்தான் பக்கத்தில் பார்த்தான். பானை வரிசைகள் அடுக்கப்பட்டிருந்தன. பதுங்கிக் கொண்டான். கசையடி ஆட்கள் வெளியேறினார்கள்.

மண்டபம் நிசப்தத்தில் மூழ்கியது - அடிமைகளின் வேதனை முனகல்களைத் தவிர.

பானையின் மீது அவன் டொக் டொக்கென்று முட்டியினால் சப்தித்தான்.

'யாரது!' அதட்டல் போட்டார் கணக்கப்பிள்ளை.

மீண்டும் ஒசைப்படுத்தினான்.

அவர், சத்தம் கேட்ட இடத்துக்கு வந்தார்.

விநாடி வேலைதான். அவரைக் கீழே வீழ்த்தினான். வாயையும் கையையும் அவருடைய மேல் வஸ்திரத்தினாலேயே கட்டி, பானைகளின் பின்னே தள்ளினான்.

விரைந்தான் அந்தப் பெண்ணிடம்.

அவள் இடுப்பிலிருந்த கயிற்றை ஒரு கை அகற்றியது. மறு கை, அவளுடைய முகத்தை மறைத்திருந்த கூந்தலைச் சரேலென ஒதுக்கியது. ஆ என்ன பேரழகுப் பெட்டகம்!

அவள் வதனத்தை அவன் உள்ளங்கை தடவிக் கொடுத்தது.

வைரப் பேழை போன்ற நெற்றி; விசாலமான கண்கள்; தந்தத்தில் கடைந்த நாசி, சதைப்பிடிப்பான கன்னம்; ரோஜா உதடு.

உதட்டில் கை பட்டதும், அவன் உள்ளம் துடித்தது.

இதழ்க்கடையில் கசியும் ரத்தத்தை வழித்தெறிந்தான்.

கயிற்றுக் கடடை வேகமாக அவிழ்த்தான்.

அவள் அச்சமும் பரபரப்பும் கொண்டாள். "வேண்டாம், வேண்டாம்! போய்விடுங்கள்! உங்களுக்கு ஆபத்து!" என்றுஅந்தக் குரலில்தான் என்ன மாதுரியம்! - கெஞ்சினாள்.

மற்ற அடிமைகள், "சீக்கிரம் ஆகட்டும் அவர்கள் திரும்பி விடுவார்கள்!' என்று துரிதப்படுத்தினார்கள்.

கணக்குப்பிள்ளை திமிறுகிறார் போலும். மடமடவென்று சில பானைகள் உருண்டு சிதறின.

"சீக்கிரம் சிக்கிரம்" என்று அந்தப் பெண்ணும் உடலை நெளித்தாள். அதன் விளைவாக, தளர்ந்திருந்த முடிச்சுகள் மீண்டும் இறுகின.

"அசையாதே அசையாமலிரு!" என்றான் அவன். அவள் பின்னே குந்தி உட்கார்ந்தான். மணிக்கட்டின் மீதிருந்த முடிச்சைப் பல்லால் கடித்தான். அவளுடைய துடிக்கும் விரல்கள் அவன் மோவாயை வருடின. நன்றி கூறின. பதைப்பு வெளிப்படுத்தின.

'டேய்'

அவன் பின்னாலிருந்து ஓர் உறுமல்!

அவள் முகம் பேயறைந்த மாதிரி ஆயிற்று.

## (2)

உஸ்! உஸ்! சத்தம் கூடாது.

சிங்காவரம் கோட்டை. குன்றின் உச்சியில் இருந்த அரண்மனையில் பரபரப்பான நிசப்தம். சாரைப் பாம்பு ஒடுகிற மாதிரி, ஓசையெழுப்பாத வேகம்!

டக்டக்கென்று நடந்த பணியாளொருவன் எச்சரிக்கையைக் கேட்டதும், சத்தம் போட்ட காலணிகளைக் கழற்றிக் கையில் எடுத்துக் கொண்டு நடையைத் தொடர்ந்தான். பயத்தினாலேயே பணிப் பெண்ணொருத்தி, வெள்ளிக் கூஜாவை நழுவவிட்டு விட்டாள். வெள்ளைப் பளிங்குத் தரையில் அது ணங்ணங் வென்று உருண்டது. கொலை செய்துவிட்ட மாதிரி அவள் வெளிறிப் போனாள்.

உஸ்!

மகாராஜா கிருஷ்ணப்பருக்கு உடல் நிலை சரியில்லை. பதினைந்து நாளாகிறது படுக்கையில் விழுந்து. இன்று சிறிது தேவலை. ஆனால் ஓய்வு அவசியமாம்.

அரண்மனைத் தலைமைக் காவல்காரன், பீரங்கியினருகே நின்றிருந்த காவலாளைக் கூப்பிட்டான். "வைத்தியர் திரும்புகிற நேரம். பையன் தயாராயிருக்கிறானா?''

"ஆம், தலைவரே. தீவட்டி கொளுத்தி வரப் போயிருக்கிறான்' என்று பதில் கிடைத்தது. அது நல்ல வெயில் நேரம். ஆனால் ஆஸ்தான வைத்தியர் வரும்போதும் திரும்பும் போதும் தீவட்டி கொளுத்திக் கொண்டு ஒருவன் முன்னே செல்ல வேண்டுமென்று சம்பிரதாயம், மரியாதை.

தானும் சென்று பார்க்கலாமா? தலைமைக் காவல்காரன் யோசித்தான். பச்சைக் கற்கள் இழைத்த தலைப்பாகையைக் கழற்றிக் கையில் வைத்துக்கொண்டான்.

ஆனால் வைத்தியருடன் கூட யார் இருக்கிறார்கள் என்று தெரிந்ததும் அவன் தயங்கினான்.

'பெரியவரும் இருக்கிறார்' என்று காவலாள் கூறியதே காரணம்.

பெரியவர் என்றது, கிருஷ்ணப்பரின் மாமனாரும் பிரதம ஆலோசகருமான ரகுநாதரைத்தான்.

தலைமைக் காவலாளி தயங்கித் தயங்கி உள்ளே சென்றான். முத்துக்கள் பதித்த கதவுகளை அவன் கைகள் திறந்தன. சித்திர வேலைகள் செய்த தரைகளை அவன் பாதங்கள் அளந்தன. கண்களைப் பறிக்கும் பட்டுத் திரைகளை அவன் விரல்கள் விலக்கின. அது கோடைக்காலப் பிற்பகல் வேளை. ஆயினும், அரண்மனை, குன்றின் உச்சியிலிருந்ததால் குளிர் காற்று சில்லென்று உட்புகுந்தது.

சயனக் கிருகத்துக்கு வெளியே தலைமைக் காவலாளி நின்றான். சுவரோடு சுவராக ஒட்டிக் கொண்டான். எட்டிப் பார்த்தான் கவலையோடு.

ஆறுதல் ஏற்பட்டது. மகாராஜா கிருஷ்ணப்பர் மஞ்சத்தில் கிடக்கவில்லை. எழுந்து வந்து வேறோர் ஆசனத்தில் அமர்ந்திருந்தார். முகத்திலும் சற்று பொலிவு ஏற்பட்டிருந்தது. கண்களில் தெளிவு தெரிந்தது. உடல் சிறிது மெலிந்திருந்தது.

அகிற்புகையின் நறுமணம், குன்றின் குளிர்ந்த காற்றில் தவழ்ந்து வந்தது. வண்ணக் குவியலான மஞ்சமும் மெத்தையும், விளக்குகளும் திரைகளும், பாண்டங்களும் ஆசனங்களும் கண்ணைப் பறித்தன.

மன்னரின் மணிக்கட்டில் பட்டுத் துண்டைச் சுற்றினார் வைத்தியக் கிழவர். நாடி பார்த்தார். மௌனமாகப் பித்தளைப் பெட்டியைத் திறந்தார். சின்னச் சிமிழ்களிலிருந்து சூரணங்களை எடுத்தார். உள்ளங்கையில் வைத்துக் கலக்கலானார்.

அவர்களிருவருக்கும் பின்னே குறுக்கும் நெடுக்குமாக உலாவிக் கொண்டிருந்த ரகுநாதர், நின்றார். 'மகாராஜாவின் நிலை எப்படி இருக்கிறது, வைத்தியரே?' என்று கேட்டார். அவரது சரீரமும் பருமன்; குரலும் அழுத்தம். .

மன்னர் கிருஷ்ணப்பர், மனைவியின் தந்தையைத் திரும்பி நோக்கினார். விரக்தியுடன் சிரித்தார்: "மாமா! பாவம் வைத்தியரை ஏன் மேலும் மேலும் பொய் சொல்லத் தூண்டுகிறீர்கள்? அவரைக் கேட்டால் மகாராஜாவுக்கென்ன, நாளைக்கே குணமாகி எழுந்துவிடுவார் என்று தானே சொல்வார்?

"அப்படியில்லை... மெய்யாகிலுமே..." தடுமாறினார் வைத்தியர். மேலே பேசத் தெரியவில்லை. சூரணக் கலவையில் தேன் விட்டுக் குழைத்தார். வழித்தார். வெற்றிலையில் வைத்து மடித்து, மன்னரிடம் கொடுத்தார்.

முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டார் கிருஷ்ணப்பர். 'என்னை விட்டுவிடுங்கள், வைத்தியரே, விட்டு விடுங்கள்! மருந்தினால் இந்தப் பாவியைக் காப்பாற்ற முடியாது!...'

வைத்தியர் மன்றாடினார். "சமூகத்தில் அப்படிச் சொல்லக் கூடாது..."

அறைக்கு வெளியில் நின்றிருந்த தலைமைக் காவல்காரனுக்குப் பொறுக்கவில்லை. கண்ணைத் துடைத்துக் கொண்டான். உள்ளே பிரவேசித்தான். 'மகாராஜா மருந்தை மறுக்கக் கூடாது. தாங்கள் திடகாத்திரமாக இருந்தால்தானே ஏழைகள் நாங்கள் நன்றாயிருக்க முடியும்?' என்று தன்னை மறந்து பேசினான்.

'நீர் போகலாம்' என்று வைத்தியருக்கு ஜாடை காட்டினார் ரகுநாதர். மடித்த வெற்றிலையை அப்படியே வைத்து விட்டுக் கிழவர் வெளியேறினார்.

கிருஷ்ணப்பர் தலை நிமிர்ந்தார். தலைமைக் காவல்காரனைப் பார்த்தார். 'வீரண்ணா, நீ இத்தனை அன்பு என் மீது வைத்திருப்பது பற்றி ரொம்ப சந்தோஷம். ஆனால் என் நோய் மனநோய். அதற்கு வைத்தியம் செய்ய இவர்களால் ஆகாது. ஒருவேளை, நீ மனம் வைத்தால்...'

"நானா கட்டளையிடுங்கள் மகாராஜா இந்த நாய்க்கு! தோலைச் செருப்பாய்த் தைத்துப் போடமாட்டேனா?"

ரகுநாதர் குறுக்கிட்டார்.

"மன்னர் அதிகம் அலட்டிக் கொள்ளக் கூடாது."

'இல்லை, இல்லை. இன்றைக்கு என்னை விட்டு விடுங்கள்' என்று பிடிவாதத்துடன் தொடர்ந்தார் கிருஷ்ணப்பர். "வீரண்ணா! பதினேழு வருடம் முன்பு யானை லாயத்தில் வேலைக்கு இருந்தானே ஒரு கிழவன், நினைவிருக்கிறதா? வேல் பண்டிதன் என்று பெயர்.

அவனும் நீயும் செய்வதற்காக ஒரு காரியம் ஒப்படைத்தேனே, ஞாபகமிருக்கிறதா?"

வீரண்ணனின் முகம் அச்சத்தினால் கறுத்தது. "அதை... அதைத்தான் அப்போதே சரியாய் முடித்துவிட்டோமே, மகாராஜா?"

'ஆம் ஆம். அன்றோடு என் மன நிம்மதியையும் முடித்தாகிவிட்டது! வீரண்ணா, நீ போய் வேல்பண்டிதனை அழைத்துவா.'

"இங்கேயா மகாராஜா"

"இங்கேயேதான், இப்போது அழைத்து வா."

தலைமைக் காவல்காரனின் உள்ளத்தில் நூறாயிரம் குழப்பம். என்றைக்கோ முடிந்து விட்டதையெல்லாம் ஏன் மன்னர் கிளறுகிறார்? அதுவும், உடல்நிலை இப்படி இருக்கும் போது?

ஒட்டமும் நடையுமாக யானை மண்டபத்தை அடைந்தான். கிணற்றில் நீர் மொண்டு கொண்டிருந்த கிழவனைக் கைப்பிடியாய் மன்னரிடம் அழைத்து வந்தான்.

'வா, வேல்பண்டிதா. அருகில் வா.' கிருஷ்ணப்பர் அழைத்தார்.

கிழவனின் சரீரம் கூசியது. குறுகியது. கால்கள் வெட வெடத்தன. கை கட்டினான். வாய் பொத்தினான். எட்டவே நின்றான்.

"பரவாயில்லை, வா. உன்னைக் காட்டிலும் நானொன்றும் மேலானவனல்ல." கிருஷ்ணப்பர் சோகமாக நகைத்தார். 'அதிலும் நான் மரணத்தைச் சமீபத்துக் கொண்டிருக்கும் போது...'

"மகாராஜா அப்படிச் சொல்லாதீர்கள்!"

'உண்மையை மறைப்பதால் என்ன பயன்? இன்னும் கொஞ்ச நாளில்... நில், நில்!'' கிருஷ்ணப்பர் ஒரு விரலால் காதை

மடித்துக்கொண்டு எதையோ உற்றுக் கேட்டார். 'காதில் விழுகிறதா, மாமா?' என்று ரகுநாதரைப் பார்த்துக் கேட்டார்.

'செஞ்சிக் கோட்டையைச் சுற்றி, பீரங்கிகள் முழங்குகிற சத்தம் அது. ஜுல்பிகர்கானின் முற்றுகை, ' என்று விளக்கினார் ரகுநாதர்.

'ஆம். செஞ்சி மன்னன் ராஜாராமின் கதி, இந்த சிங்காவரம் கோட்டை அதிபனான எனக்கும் சீக்கிரமே ஏற்படலாம்.'

'ஒரு நாளும் ஏற்படாது. ராஜாராம் ஒரு பாவி. சொந்த சகோதரியையும் மகளையும் சிறை வைத்தவன். தானே சிம்மாசனத்தில் உட்கார்ந்து ஆட்சி செய்கிறவன். அதற்குரிய தண்டனையைக் கடவுள் தருகிறார்."

'மாமா! சகோதரியையும் சகோதரியின் குழந்தையையும் சிறை வைத்தவன் பாவி என்றால், சகோதரரையும் சகோதரரின் மனைவியையும், சகோதரரின் குழந்தையையும் கொலை செய்தவனை என்னவென்று அழைப்பீர்கள்?"

'யார் அப்படிச் செய்தது?"

"நான் தான்."

'பொய் பச்சைப் பொய் கத்தினார் ரகுநாதர். "அவர்கள் பட்டத்து யானை மீதேறி, ஒட்டன்குன்றுக்கு உல்லாசச் சவாரி சென்றிருந்தார்கள். திடீரென்று யானைக்கு மதம் பிடித்தது. அவர்களை மலைச் சரிவில் எறிந்துவிட்டது...'

"...என்று ஜனங்கள் நம்பும்படி நாடகம் நடத்தினேன். மாமா உண்மையில், யானையை அங்குசத்தினால் குத்திச் சீண்டி, அந்தப் படுகொலையை நடக்கும்படி செய்தவன் நான்தான். எனக்கு அந்தரங்கமாய்த் துணை செய்தவர்கள் இவர்கள்தான். உண்டா இல்லையா, கேளுங்கள்."

'என்ன என்ன!' பதறினார் ரகுநாதர். அவரது கனல் விழிகள் மூவரையும் மாறி மாறிப் பார்த்தன.

'அந்தப் பாவத்துக்குத்தான் நான் அனுபவிக்கிறேன்' கிருஷ்ணப்பரின் குரல் தழுதழுத்தது. கண்ணில் நீர் மல்கியது. 'அந்தக் கொடுஞ்செயலுக்குக் கழுவாய் தேடாமலே கண் மூடிவிடுவேனோ என்று நினைக்கும் போதெல்லாம் என் உள்ளம் துடிக்கிற துடிப்பு யாருக்குத் தெரியும்? வேல்பண்டிதா, இப்படி அருகில் வா. வாயேன். '

அங்குலம் அங்குலமாக நகர்ந்து முன் வந்தான் மாவுத்தக் கிழவன்.

"நன்றாய் நினைவுபடுத்திக் கொண்டு சொல்லு. அந்த 'விபத்தில் பெரிய மகாராஜாவும் ராணியும் இளவரசியும் இறந்து போனது நிச்சயம்தானா?"

கிழவன் தேம்பினான். 'என் கண்ணால் பார்த்தேனே மகாராஜா யானை ஒவ்வொருவராய்த் தூக்கி விசிறியடித்ததே, என் வாழ்க்கையில் மறக்க முடியுமா அந்தக் கோரக் காட்சியை?'

"ஐயோ! என் துயருக்கு விடிவே இல்லையா!' பட்டுத் திண்டில் முகம் புதைத்துக் கொண்டு விம்மினார் கிருஷ்ணப்பர். 'இந்தச் சிங்காவரம் சிம்மாதனம் எவருக்கு நியாயமாக உரியதோ, அவரை என்றைக்காவது ஒருநாள் அமர்த்தி விட்டோமானால், மனச்சாந்தியுடன் இறக்கலாம் என்ற எண்ணியிருந்தேனே, அந்த நம்பிக்கை வீண்தானா? சொல் வேல்பண்டிதா, சொல் வீரண்ணா இளவரசி - அந்த இரண்டு வயதுக்குழந்தை மீரா தேவி - அதாவது உயிர் தப்பியிருக்கிறதா? அவளையாவது சிம்மாதனத்தில் அமர்த்த முடியாதா?''

தலைமைக் காவல்காரனும் வேல்பண்டிதனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

கிருஷ்ணப்பர் மன்றாடினார்: "ஒரு வார்த்தை சொல்லுங்கள், இருக்கிறாளென்று. இந்தப் பட்ட மரம் துளிர்க்க அதுபோதும். ஒரு சொல் கூறுங்கள், இளவரசி உயிருடன் இருக்கக் கூடு மென்று. நலியும் இந்த ஜீவனுக்கு அது அமுதத் துளி'

தடாலென இரண்டு சரீரம் மன்னரின் முன் விழுந்தன நெடுஞ்சாண்கிடையாக.

'மன்னியுங்கள் எங்களை, மகாராஜா!' என்று விசித்தான் வேல்பண்டிதன். 'தங்கள் மனம் இப்படி வேதனைப் படும் போது எங்களால் மறைக்க முடியவில்லை... அந்தக் குழந்தை எங்கேயோ... எங்கேயோ...'

"இருக்கிறதா இருக்கிறதா' பாய்ந்தெழுந்தார் கிருஷ்ணப்பர் ஆசனத்திலிருந்து. அந்தஸ்தை மறந்தார். மார்புறத் தழுவிக் கொண்டார் அந்த மாவுத்தக் கிழவனை.

'மன்னர் உணர்ச்சிவசப் படக்கூடாது. ' ரகுநாதர் குறுக்கிட்டு இருவரையும் பிரித்தார். 'விவரமாய்ச் சொல்லு, கிழவா. என்ன நடந்தது?"

மாவுத்தக் கிழவனால் பேச முடியவில்லை. தலைமைக் காவல்காரனான வீரண்ணன்தான் விளக்கினான்: 'திட்டப்படி பெரிய அரசரும், ராணியாரும் மலைச்சரிவில் எறியப்பட்டு விட்டார்கள். குழந்தை மட்டும் ஒரு செடி இடுக்கில் சிக்கிக் கொண்டு கதறியழுதது. உயிருக்கு மன்றாடியது. எங்களுக்குப் பரிதாபமாய் இருந்தது... அதை எடுத்துக் கொண்டு சென்று...'

'சென்று? சென்று?"

'இரவோடிரவாகத் திருச்சிராப்பள்ளிக்குச் சென்றோம். எங்கேயாவது உயிருடன் இருக்கட்டும் என்று தோன்றியது. '

'திருச்சிராப்பள்ளியில் இருக்கிறாளா, என் செல்வி? உடனே போங்கள்! உடனே போய் அழைத்து வாருங்கள்...' துடித்தார் கிருஷ்ணப்பர்.

"ஐயோ! அது அவ்வளவு எளிதல்லவே மகாராஜா' என்று தலை குனிந்தான் மாவுத்தக் கிழவன். 'டச்சுக்காரர்கள் அங்கே அடிமைகள் வாங்குவதற்காக வந்திருந்தார்கள். அவர்களிடமல்லவா விற்றுவிட்டோம்?"

ரகுநாதர் இடைமறித்தார்: 'குழந்தையின் அடையாளங்களைப் பார்த்து வைத்துக் கொண்டீர்களல்லவா?''

"ஆமாம்."

'அப்படியானால் சென்னைப்பட்டினத்தில் எவனாவது செல்வந்தனின் வீட்டில் கண்டுபிடித்து விடலாம்?"

"ஆமாம்."

"ஆம். உடனே நீங்கள் இருவரும் சென்னைப் பட்டினம் செல்லுங்கள்' என்று கட்டளையிட்டார் கிருஷ்ணப்பர். 'மிக ரகசியமாக நடைபெற வேண்டும் உங்கள் வேலை. என்ன செய்வீர்களோ, எனக்குத் தெரியாது. எப்பாடு பட்டேனும் என் கண்மணியை என்னிடம் கொண்டு வந்து சேர்ப்பிக்க வேண்டும். அப்புறம்தான் என் உடலில் உயிர் தரிக்கும். '

'இப்போதே செல்கிறோம், மகாராஜா. தங்கள் விருப்பத்தை நிறைவேற்றியே தீருவோம்."

"தேவையான பணத்தைக் கஜானாவில் வாங்கிக் கொள்ளுங்கள்!" ரகுநாதர் அனுமதி கொடுத்து வழியனுப்பினார்.

இருவரின் காலடியோசையும் ஒரு திசையில் தேய்ந்தது. மறு திசையிலிருந்து கிண் கிண்ணென்ற சலங்கையொலி கேட்டது. இன்னொரு காலடியோசை வந்தது. அழகிய குஞ்சலங்கள் கட்டிய

திரையை விலக்கிக் கொண்டு வேகமாய்ப் பிரவேசித்தாள் ராணி சென்னம்மா. அவளுடைய சிவந்த மேனி, கோபத்தினால் மேலும் சிவந்திருந்தது. துடிக்கும் இமைகள் பின்னும் வேகம் கொண்டன.

'அரசருக்குப் பித்துப் பிடித்து விட்டதா?' என்று சீறினாள் சென்னம்மா.

"பித்தா? எனக்கா?"

'இல்லாவிட்டால், என்றைக்கோ, எங்கேயோ செத்து விட்டவளைத் தேடிப் பிடித்து வந்து பட்டாபிஷேகம் செய்ய முயலுவீர்களா? தஞ்சையில் குருகுல வாசம் செய்கிறானே, நம் செல்வன் சீரங்கன், அவனை ஆண்டியாக அடித்துத் துரத்தத் திட்டமிடுவீர்களா!'

சிரிப்புடன் எழுந்தார் கிருஷ்ணப்பர். இடையைப் பிடித்துக் கொண்டார். வாய்விட்டுச் சிரித்தார். சாளரத்தின் விளிம்பில் கையூன்றி நின்றார். விலாக் குலுங்கச் சிரித்தார்.

திகைத்த ராணி சென்னம்மா ரகுநாதரை அணுகினாள். "அப்பா என்ன இதெல்லாம்? உங்கள் மருகர்தான் அவசரப் புத்தியுடன் ஏதேதோ சொன்னாரென்றால், தாங்களுமா கேட்டுக் கொண்டிருப்பது? தங்கள் பேரன் சீரங்கனிடத்தில் தங்களுக்குக் கூடவா அக்கறையில்லை? அரியணையில் அமர வேண்டியவன் அவனே என்ற ஆசை தங்களுக்குக் கூடவா கிடையாது?"

ரகுநாதர், மகளின் தலையை அன்புடன் கோதினார். கிருஷ்ணப்பரைப் போல எக்காளமாக அவர் நகைக்கவில்லை. ஆனால் இதழ்களில் புன்முறுவல் பூத்தது. "செல்வி, ஆண்டவனின் சித்தமும் அரசரின் எண்ணமும் அறிய முடியாதவை என்று உனக்குத் தெரியாதா? உன் மகன் சீரங்கனுக்கு அரி யணையை உறுதிப்படுத்தத்தான் இந்த ஏற்பாடுகளெல்லாம்!"

'என்ன!'

"சொல்லுங்கள், மாமா சொல்லுங்கள் தங்கள் மகளுக்கு!" இடிஇடியென்று நகைத்தார் கிருஷ்ணப்பர். கள்ளுண்டவன் போல அவர் முகம் வெறியாட்டத்தில் ஆழ்ந்திருந்தது.

ரகுநாதர் கூறினார்: 'பூண்டோடு ஒழித்துவிட்டோம் மூத்தவரின் வம்சத்தை என்று இத்தனை நாளும் நினைத்திருந்தோமல்லவா? அப்படியல்ல, அவர்களுடைய குழந்தை மட்டும் சென்னையிலே உயிருடன் உலாவுகிறது என்ற செய்தியொன்று எட்டியது எங்கள் செவிக்கு. அதை உயிருடன் விடக்கூடாது என்று தீர்மானித்தோம். அந்த மாவுத்தனையும் வீரண்ணனையும் எப்படிக் கேட்பது? மிரட்டினால் வருமா மெய்யான தகவல்? அதற்காகவே அரசர் உடல் நலமில்லாத மாதிரி நடித்தார். இளக வைத்தார் அந்த ஆட்களின் நெஞ்சுகளை. கண்டுபிடிப்பார்கள் அவர்கள் அந்த விஷக் கொடியை. பிறகு வேரோடு கெல்லிவிட விநாடி போதுமே!'

**எ**திர்பாராமல் பிரவேசித்தவன், கசையடி விடுதியின் தலைவன்தான். சாட்டையைச் சொடுக்கியபடி காஞ்சிபுரத் தானின் முகத்தைத் திருப்பினான். அடையாளம் கண்டு கொண்டான்.

இகழ்ச்சியுடன் சிரித்து, "ஓ! நீதானா! எவனோ என்று எண்ணினேன்!' என்றான்.

'ஏன், எமனோ என்று நினைக்கவில்லையா?"

'நீயாடா எனக்கு எமன்? பிச்சைக்காரப் பயலே!' சாட்டைக்காரன், ஒரு பெரும் உறுமலுடன் அந்தக் காஞ்சி வாலிபன் மீது பாய்ந்து கீழே வீழ்த்தினான். கால்களை அசைக்க முடியாதபடி அழுத்தி அவற்றின்மீது உட்கார்ந்து கொண்டான். அவன் சிகையைப் பிடித்துத் தலையைத் தூக்கினான். கருங்கல் தரையில் நெற்றியைப் படேல் படேலென்று மோதினான்.

அடிமைப் பெண்ணினால் திரும்பிப் பார்க்க முடியவில்லை. ஆனால் தரையில் கசிந்த இரத்தம் அவள் பாதத்தில் சில்லிட்டது. அவள் கண்ணிர் அந்தச் செந்நீருடன் கலந்தது.

பேச்சு மூச்சைக் காணோம்.

திருப்தியுடன் எழுந்து கொண்டான் சாட்டைக்காரன். திகிலினால் வாயடைத்துப் போய்விட்ட மற்ற அடிமைகளைக் கண்டான். 'வாலாட்டினால் இந்தக் கதிதான் உங்களுக்கும்!"

என்று உறுமிவிட்டு முற்றத்துக் கல்லின் மீது அமர்ந்து இளைப்பாறினான். புகையிலைத் துண்டைக் கிள்ளின. அவன் விரல்கள்.

திடீரென ஒரு சந்தேகம். மெல்ல நெளிகிறானே அந்தப் பொடியன்? எதற்காக? என்ன செய்கிறான்?

விரைந்து பார்ப்பதற்குள்'

ஒடு!" என்று குரல் கொடுத்தான் காஞ்சிபுரத்தான். அடிமைப் பெண், தளர்ந்த கட்டுகளை உதறிக் கொண்டாள். புகுந்து கொண்டாள் பக்கத்தில் தெரிந்த ஒர் அறைக்குள்.

காஞ்சிபுரத்தான் சிரித்தான். அவன் மூர்ச்சையாகி விடவில்லை. அடிமைப் பெண்ணின் கால்பக்கம் மட்டும் ஒரு கட்டு பாக்கியிருந்திருக்கிறது. கசையடிக்காரனுக்குத் தெரியாமல் அதையும் மெல்ல அவிழ்த்து விடுவதற்காகவே சவம் போல் கிடந்திருக்கிறான். நோக்கம் நிறைவேறி விட்டது. இப்போது புலிபோல் பாய்ந்தான்.

சாட்டைக்காரனின் சதை மலை புரண்டது. உருண்டது. விழுந்தது, மோதியது. இறுதியாக ஓய்ந்தது.

காஞ்சி இளைஞன் நேரத்தை வீணடிக்கவில்லை. அடிமைப் பெண் ஒளிந்து கொண்டிருந்த அறைக்கு ஓடினான். அவள் கையும் காலும் வெடவெடத்தன. சுவரோடு சுவராக ஒண்டிக் கொண்டிருந்தாள்.

'பயப்படாதே' என்றான்.

அறையில் ஒரு சாளரம் இருந்தது. குறுக்கே தடித்த இரும்புக் கம்பிகள் போடப்பட்டிருந்தன. ஒரு கம்பியை எடுத்தால் போதும், வெளியேற வழி பிறக்கும்.

அவன் வளைக்கத் தொடங்கினான்.

அவன் உடம்பில் இரத்தத்தோடு வியர்வையும் கலந்தது. மூச்சுப் பிடித்தது. கம்பியை இழுத்தான். தசைநார்கள் புடைத்தன. முகம் இறுகியது. நெற்றி நரம்புகள் துடித்தன.

'நீ போ," என்றவன் அவள் இடையில் பிடித்துத் தூக்கி விட்டான். அவள் வெளிப்பக்கம் குதித்தாள். அவனும் குதித்தான்.

சாலை, இருட்டில் மூழ்கியிருந்தது. பிறைநிலா சிரித்தது.

'வா, விரைவாய்ப் போகலாம்.'

அவள் கையைப் பற்றி அழைத்துச் சென்றான்.

இருவரும் பேசவில்லை. வேகமாய் நடந்தார்கள்.

அங்காடி வீதி வந்தது. வெளிச்சம் தெரிந்தது. இங்கொன்று அங்கொன்றாகக் கடைகள் மூடப்பட்டுக் கொண்டிருந்தன. எதிர்ப்பட்ட இரண்டொருவர் வியப்புடன் பார்த்தார்கள். அந்த அலங்கோலமான நங்கையையும் வாலிபனையும்.

நாற்சந்தி வந்தது. நின்றான். அவள் முகத்தை ஏக்கத்துடன் நோக்கினான். நன்றி நிறைந்திருந்த கண்களின் அழகைக் குடித்தான்.

'போய் வா, பெண்ணே,' என்றான்.

அவள் அதிர்ச்சியுற்றாள். 'போவதா? நான் எங்கே போவது?' என்றாள்.

"உன் வீட்டுக்குத்தான்."

"எனக்கு ஏது வீடு? நான் அடிமைப் பெண். எஜமானனின் வீடுதான் என் வீடு. ஆனால் இவ்வளவு நேர்ந்தபின் அங்கே எப்படித் திரும்பிப் போவது?"

"பின்னே?"

"எனக்கு நீங்கள்தான் இனி எஜமானர். உங்களை விட்டு நான் போகமாட்டேன்."

அவன் கால்களைக் கட்டிக் கொண்டாள் அந்த அடிமைப் பெண்.

## (3)

ஏக்கம் நிறைந்த விழிகள். துடிக்கும் அதரங்கள். துவளும் கரங்கள். கெஞ்சும் கால்கள்.

கால்களைப் பிடித்துக் கொண்டவளைக் காஞ்சிபுரத்தான் எழுப்பி நிறுத்தினான்.

காஞ்சிபுரத்தான் காசுகள் முடிந்த மடியைத் தட்டிக் காட்டினான். 'பார்த்தாயா?"

அவள் தலையை அசைத்தாள்.

'இது ஒன்றுதான் எனக்குப் பந்தம். வேண்டுமானால் இதையும் எறிந்து விடுகிறேன். ' தூரத்தில் ஆரவாரிக்கும் கடலை நோக்கிக் கையை உயர்த்தினான்.

சட்டென அவள் தடுத்தாள்.

இருட்டில் மின்னுகின்ற கப்பல்களின் வரிசையை அவன் கண்டான். அவன் தோள்கள் தினவெடுத்தன. தாவும் அலைகளிலே பயணம்; பிறநாட்டுக் காற்றுகளிலே சுவாசம்; அறிந்திராத உணவுகளிலும் கண்டிராத போர்களிலும் வேட்டை... அந்தக் கனவுகளை விட்டுவிட முடியுமா?

கொடுமைக்காரர்களிடமிருந்து விடுவித்த அடிமைப் பெண்ணிடம் சொன்னான்: 'உனக்கு விடுதலை வாங்கித் தந்ததற்காக என்னை அடிமைப்படச் சொல்கிறாயா?"

''வேண்டாம். நான் போகிறேன். ' திரும்பி நடந்தாள் அவள்.

காஞ்சிபுரத்தான் பார்த்துக்கொண்டே நின்றான்.

அவன் செவிகளுக்கு மோப்ப சக்தி உண்டு. என்ன சத்தம் அது? குதிரைகளின் குளம்படிதான். எதிர்த் திசையிலிருந்து வந்தது.

இந்தப்புறம் அடர்த்தியான மாந்தோப்பு.

'ஸ்! வா இப்படி!' ஓரெட்டில் அவள் கையைப் பிடித்துத் தன்னிடம் இழுத்துக் கொண்டான் காஞ்சி வாலிபன். மரத்தோடு மரமாக ஒண்ட வைத்தான்.

தடக், தடக்.

அவள் இதயத் துடிப்பே போல இரண்டு குதிரைகள் மெல்ல நெருங்கின. அவர்களைத் தாண்டிச் சென்றன. இருளில் கரைந்தன.

'உன்னைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்...' இருட்டில் கிசுகிசுத்தான் காஞ்சிபுரத்து இளைஞன். உள்ளத்தால் எப்படியோ, உடலால் அவளை ஒட்டியிருந்தான் அவன். மரத்தை அணைத்திருந்த அவள் கையின் மேல் அவன் கை இருந்தது. மணிக்கட்டினருகே உடைந்து ஒட்டிக்கொண் டிருந்த கண்ணாடி வளையலை ஓசையின்றி நொறுக்கினான். கீழே எறிந்தான்.

'இது கடற்கரைப் பகுதி. அபாயமான இடம். போய் விடலாம்,' என்றாள் அவள்.

''எதனால் இது அபாயமான இடம்?"

"சாந்தோம் தேவாலயத்தில் இருக்கிறவர்களுக்கும் செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் இருக்கிறவர்களுக்கும் அடிக்கடி சண்டை நடக்கிற இடமாம். சொல்வார்கள்."

'இரு. அந்தக் குதிரைக்காரர்கள் திரும்பட்டும். பிறகு நாமும் புறப்பட்டு விடலாம். உன் பெயர் என்ன?''

''தாமரை.''

அவள் உள்ளங்கையின் மீது காஞ்சிபுரத்தானின் உள்ளங்கை இருந்தது. தாமரை என்று தனக்குள் சொல்லிக் கொண்டான் அவன். கிளையிலே தூங்கத் தெரியாத குருவிக் குஞ்சொன்று நழுவி அவன் தலையில் விழுந்தது. கீச் கீச் சென்று கத்திவிட்டு மரக்கிளைக்குத் தாவியது.

"உனக்கு எங்கே போக விருப்பம், சொல். பத்திரமாய்க் கொண்டு போய் விட்டு விடுகிறேன்."

'நீங்கள் பணமுடிச்சை எறிவதாகச் சொன்ன இடம் தான்.' சமுத்திரத்தை நோக்கிக் கையைக் காட்டினாள் அவள்.

'அவ்வளவு வெறுப்பா உனக்கு வாழ்க்கையில்?"

'இல்லை. பெரிய பெத்துவின் வீட்டுக்குப் போவதைக் காட்டிலும் இங்கே போவது வசதியானது என்பதற்காகச் சொன்னேன். '

"யாரது, பெரியபெத்து?"

'என் எஜமானர். மூன்று வயதுக் குழந்தையாயிருந்த என்னைத் தஞ்சாவூரில் விலைக்கு வாங்கியவர்.'

'அதற்கு முன்பு?'

'தாயின் இதமான அரவணைப்பு நினைவிருக்கிறது. அப்பாவின் தோளில் ஏறியமர்ந்தது ஞாபகமிருக்கிறது. வேறெதுவும் தெரியவில்லை."

'உஸ், "அவள் வாயைப் பொத்தினான் காஞ்சிபுரத்தான்.

புரவிகள் அவர்களைச் சமீபித்தன. தயங்கின. இப்படியும் அப்படியும் திமிறின. கரிய நிழல்களாக இரண்டு ஆட்களின் வெளிக்கோடுகள் புலப்பட்டன. பிறகு குளம்படிச் சத்தம். அப்பா! மெல்ல நகருகின்றன குதிரைகள்.

அவன் காதோடு பேசினான் அவள்.

'என்னை விட்டுவிடுங்கள். அவர்களுடன் பெரிய பெத்துவின் வீட்டுக்கே போய்விடுகிறேன். '

'போய்..?''

'கலகத்துக்குக் காரணமாயிருந்ததற்காக, கூட இருபது கசையடி கொடுப்பார்கள். வாங்கிக் கொள்கிறேன். தொடையில் என் பெயரையும் எஜமானரின் பெயரையும் மட்டும் சூடு போட்டு வைத்திருக்கிறார்கள். இனி இன்னொன்றும் போடுவார்கள். அல்லது கோவாவுக்கு அனுப்புவார்கள்.'

'கோவாவுக்கா?'

"ஆமாம். பாரத தேசத்தின் மிகப்பெரிய அடிமைச் சந்தை அங்கேதான் நடக்கிறது. உள்ளங்கையில் ஓட்டை போட்டு, கயிறு கோத்து, எல்லா அடிமைகளையும் பிடித்து வைத்திருப் பார்கள். அயல்நாட்டுக்கு அங்கிருந்து ஏற்றுமதி செய்வார்கள்."

'கூசாமல் பேசுகிறாயே?"

"துன்பம் பழகிவிட்டது.'

காஞ்சிபுரத்தான் நகர்ந்து கொண்டான். கவசம் போலிருந்த அவன் முதுகின் அழுத்தம் விலகியது.

"ஸ்.ஆ...'' ஏதோவொரு வேதனை முனகலுடன் அவளும் விலகினாள்.

'ஏன்? என்ன?'' அவள் தோளைத் தொட்டவன் திகைத்தான்.

இரத்தமா? ஏன் எப்போது? 'கசையடிக் காயமா அது?"

'இல்லை. ஒளிந்து கொண்டிருந்தபோது ஒரு முள் குத்தி விட்டது.'

'இத்தனை நேரமாய்ப் பொறுத்துக் கொண்டிருந்தாயா? கூச்சலிடவில்லையே நீ?"

குதிரைகள் சென்ற திசையைக் காட்டினாள் அவள். 'உபகாரம் செய்த உங்களையுமா அவர்களிடம் காட்டிக் கொடுப்பது? அவள் விழிகள் நன்றி கலந்த ஈரத்துடன் கசிந்தன.

குனிந்து ஒரு பிடி மண்ணெடுத்தான்... உள்ளங் கையில் தேய்த்துக்கொண்டான். இரத்தக் கறை அகன்றது. அவளுடைய சேலைத் தலைப்பால் அவள் தோளில் வழிந்த இரத்தத்தையும் 'துடைத்து விட்டான்.

'சரி, வா. இனி உன்னை விடுவதில்லை.'

ஆர்வத்துடன் அவன் கையை அவள் கோத்துக் கொண்ட விதம் புத்துணர்ச்சியையும் புது நம்பிக்கையையும் வெளிப்படுத்தின.

ஊர் மொத்தமும் உறக்கத்தின் வசப்பட்டிருந்தது. அப்படியும், பெரிய சாலைகளைத் தவிர்த்து, சிறிய தெருக்கள் வழியே அவளை அழைத்துச் சென்றான் காஞ்சிபுரத்தான். ஒளியை விடுத்து, இருளிலேயே பதுங்கிப் பதுங்கி நடந்தார்கள் இருவரும்.

அவன் சிரித்தான் ஒருமுறை.

'எதைக் கண்டு?'

'ஒரு வேடிக்கையான நினைப்பு. என் எதிர்காலம். மின்னல். உன் எதிர்காலம், இடி. இரண்டும் சேர்ந்தால் இந்தச் சென்னைப் பட்டினம் பிரளயம்தான்.'

'இந்தச் சந்தர்ப்பத்தில் அப்படித்தான் தோன்றும். இரவு ஓய்வெடுத்துக் கொண்டோமானால், காலையில் சூரியோதயம்போல தெளிவாய்த் தெரியும்.'

தீப்பந்தங்கள் செருகப்பட்ட விடுதியொன்று தென்பட்டது. முன் வாசலில் நின்றிருந்த பெருந்தலைப்பாக்காரனிடம் சென்றான் காஞ்சிபுரத்தான்.

'இருவர் தங்க இடம் கிடைக்குமா?" உள்ளேயிருந்து பாட்டும் சிரிப்பும் பீறிட்டுக் கொண்டு வந்தன.

தலைப்பாக்காரன் குரூரமாக இளித்தான். மண்டை மண்டையான மாட்டுப் பல்லைக் காட்டி, 'கணவன் மனைவியா?" என்றான்.

"ஆமாம்.

'தள்ளாடிக் கொண்டே உள்ளேயிருந்து வந்த ஒரு கிழவன், 'மனைவி. ஹாஹ்ஹா என் பச்சைக்கிளி' என்று தாமரையின் மோவாயைப் பிடித்தான்.

பளிரென்று அவன் கையை வெட்டித் தள்ளியது காஞ்சி புரத்தானின் எஃகுக் கரம். சாராயத்தின் நெடியை முதல் முறையாக அவன் நாசி முகர்ந்தது.

"தூ! மதுபானக் கடை! வா, வா, அவள் கையைப் பற்றிக் கொண்டு சாலை வழியே விரைந்தான்.

தாமரைக்குக் கால்கள் தள்ளாடின. தடுமாறின. உள்ளம் அவனுக்கிணையாக ஓடிற்று. உடல் ஒத்துழைக்கச் சக்தியற்றுப்

பின்தங்கியது. அணைத்தும் தூக்கியும் இழுத்தும் தாங்கியும் அவன் அவளைக் கொண்டு சென்றான்.

'மனம் தளராதே. அதோ பார், நம்பிக்கையின் ஒளி. அருளின் பிழம்பு.'

கபாலீச்சுரப் பெருமானின் கோபுரம் வான்முட்ட எழுந்து நின்றது. சுற்றிலுமிருந்த தென்னைகள் தூக்கம் கலைந்து மெல்லச் சளசளத்தன. மாணிக்கக் கற்கள் திருக்குளத்தினுள் விழுந்து விட்டனவோ? இல்லை. வானத்துத் தாரகைகள் நீரில் பிரதிபலிக்கின்றன.

"ஆகாகா! இதோ பார், உனக்காகவே நிர்மாணித்து வைத்துள்ள திருமாளிகை!' அவளை உற்சாகப்படுத்த வேண்டி, வேடிக்கையாகப் பேசினான் காஞ்சிபுரத்தான்.

அவன் காட்டியது, மரங்களின் நடுவே நிறுத்தப்பட்டிருந்த ஒரு பழைய கோச்சு வண்டியை. இரட்டைக் கதவுகளுடன், வைக்கோலும் பாயும் பரப்பிய தளத்துடன், தனியறை போலவே இருந்தது.

'அன்னச் சிறகு தூவிய அழகு மஞ்சம். ஆனந்தமாக உறங்கு ' என்று அவளுக்கு வழி காட்டினான். அவள் வண்டிக்குள் சென்று அமர்ந்து கொண்டாள்.

'நீங்கள்?"

'மாலையிலிருந்து நீ எதுவும் சாப்பிட்டிருக்க மாட்டாயே? பயப்படாமல் இங்கேயே இரு. பசிக்குப் பழமாவது வாங்கி வருகிறேன். '

'இருங்கள்... ஏதோ சந்தடி...'

'வெறும் பிரமை. இதோ வந்துவிடுகிறேன்."

பிரிய விருப்பமில்லாமல் அவன் கைகளைப் பிடித்துக் கொண்டாள் தாமரை. காஞ்சிபுரத்தான், மெல்ல அந்தப் பூவிரல்களை அகற்றிவிட்டுப் புறப்பட்டான்.

புயலே உனக்குப் பெயர்தான் புரவியா?

சிங்காவரம் கோட்டையிலிருந்து இறங்கும் செங்குத்தான மலைப்பாதை. சமதளத்தை முத்தமிடும் இடத்தில் புழுதி பறந்தது. குளம்போசையா அது? அல்ல, அல்ல. துரிதகதியில் வாசிக்கப்படும் மிருதங்கத் தாளம்.

எதிர்த்திசையின் அடிவாரத்தில் ஆதவன் இறங்கிக் கொண்டிருந்தான். செம்மண் புழுதி மஞ்சள் வெய்யிலில் எழும்பி இறங்கின. தங்கப் பொடிகளை ஆகாயத்தில் ஊதி விட்டால் இப்படித்தானிருக்கும் போலும்.

'வேல் பண்டிதரே சென்னைப்பட்டினத்துக்கு அது திசையல்ல.' கடிவாளத்தை இழுத்துப் பிடித்தான் தலைமைக் காவல் காரனான வீரண்ணன். உடனே வேகத்தை மட்டுப்படுத்த முடியாமல் அவன் குதிரை முன்னங்காலை உயரத்துக்கி இறக்கியது.

வேல்பண்டிதனின் கடிவாளம் இறுகவில்லை. மேலும் தளர்ந்தது.

வீரண்ணன் குரல் உரத்தது: "இது தஞ்சை செல்லும் சாலை. பாருங்கள், இப்போதே நெல் வயல்கள் ஆரம்பமாகி விட்டன. '

மாவுத்தக் கிழவனான வேல்பண்டிதனின் உதட்டில் ஒரு குறும்புப் புன்னகை மட்டுமே பிறந்தது. வயதுக்கு மீறிய சுறுசுறுப்பு. அவன் நரம்புகளில் என்றுமில்லாத ஆனந்தம் இதயத்தில்.

'பேசாமல் வா, வீரண்ணா. தெரிந்துதான் போகிறேன்."

"ரகுநாதர், இளவரசியைத் தேடச் சொன்னது சென்னைப் பட்டினத்தில்."

'வயதாகிவிட்டது வாஸ்தவம். ஆனால் எனக்குக் காது பழுதில்லை. '

குனிமேடு, புதுச்சேரி, தேவனாம்பட்டணம், பரங்கிப் பேட்டை, பாளையங்கோட்டை முதலிய பரங்கியர் குடியிருப்புகளின் வழியே அவர்களது குதிரைகள் பறந்தன. அந்த ஆண்டு தமிழ் நாடெங்கும் பெருமழை, வெள்ளம், நெல் வயல் சேதம், தானியத் தட்டுப்பாடு, பஞ்சம்.

ஊரைவிட்டு ஊர் பெயர்ந்தோடும் மக்களையும் கால் நடைகளையும் அந்தச் சிங்காவரத்துத் தூதர்கள் கண்டனர். தில்லையம்பதியில் சிற்றரசனொருவனின் ஆணைப்படி, தருமச் சாப்பாடு நடைபெற்றுக் கொண்டிருந்தது. வாழையிலை போட்டு, வரிசையாக அமர்ந்திருந்த வறியவர்களின் மத்தியில் அவர்களும் உண்ண அமர்ந்தனர். உண்ணுவோர் வரிசை நடுவே குதிரை மீதேறி மன்னன் வந்தான். 'வயிறார அருந்தினர்களா?' என விசாரித்த அவன் பண்பாட்டைப் பாராட்டிவிட்டுப் புறப்பட்டனர்.

கொள்ளிடத்தில் நொப்பும் நுரையும் பொங்கின.

'இப்போதும் சொல்ல மாட்டீர்களா?' என்றான் வீரண்ணன்.

'அக்கரை போனதும் சொல்கிறேன், ' என்றான் வேல் பாண்டியன். ஆற்றங்கரை மண்டபத்தில் அவர்களுடைய குதிரைகளுக்கு இடம் கிடைத்தது.

ஆற்றைக் கடக்கப் பரிசல் கிடைக்கவில்லை. இரு கரையையும் ஒரு கரையாக்கிவிட்ட வெள்ளம்தான் காரணம். முகில் மூடிய வானமோ மேலும் கொட்டுவேன் என்று பயமுறுத்தியது.

வீரண்ணன் தன் வசமிருந்த பணமுடிப்பைக் குலுக்கிக் குலுக்கி ஓசைப்படுத்தினான். இறுதியில் ஒரு பரிசலோட்டிச் சிறுவனை அது கவர்ந்தது. 'இருட்டு முன்னே திரும்பிவிட வேண்டும்' என்று சிறுவன் நிபந்தனை விதித்தான்.

வேல்பண்டிதன் அவன் முதுகில் தட்டினான்: "பைத்தியக்காரச் சிறுவனே! நான் போகிற இடத்திலே உனக்குச் சிபாரிசு செய்கிறேன். பரிசலுக்குத் தலை முழுகி விடு. அரண்மனை உத்தியோகம் கிடைக்கும், பார். '

சிறுவன் உற்சாகமாகக் குறுக்குக் கயிற்றைப் பிடித்துக் கொண்டான். பரிசலைச் சுழலில் சிக்காமல் சாமர்த்தியமாகச் செலுத்தினான். காற்று ஆத்திரத்துடன் ஊளையிட்டது.

கரையிறங்கினார்கள். 'சொல்லுங்களேன்' என்று துளைத்தான் வீரண்ணன்.

அதே மர்மப் புன்சிரிப்புடன் குதிநடை போட்டு நடந்தான் மாவுத்தக் கிழவன்.

சிவன் கோயிலொன்றின் பின்னாலிருந்த அகன்ற சாலையில் பிரவேசித்ததும் நின்றான். முகத்தில் கலவரம். குழப்பம்.

'இந்த இடம் இல்லை. தப்பாக ஒருவேளை...'

'யாரைத் தேடுகிறீர்கள்?'' பூக்குடலையுடன் சென்ற சிவன் கோயில் அர்ச்சகர் விசாரித்தார் அவர்களை.

வேல்பண்டிதன் பதற்றத்துடன் திருப்பிக் கேட்டான்: "சுவாமி, இங்கே சிவாஜி மகாராஜா நியமித்த உதவி ஹவுல்தார் ஒருத்தர் மாளிகை கட்டிக் கொண்டு வசித்தாரே! நல்ல தேவன் என்று பெயர்.'

'அடாடாடா! நீர் எந்தக் காலத்துக் கதையையோ அல்லவா பேசுகிறீர்?' அர்ச்சகரின் முகம் நீளமானது. பரிதாபத்தினால் மேலும் நீண்டது.

வேல்பண்டிதனின் நடுக்கம் அதிகரித்தது. 'அதாவது...'

'அதாவது நல்லதேவர் இருந்த மாளிகை தரை மட்டமாகிப் பல காலம் ஆயிற்று என்கிறேன். பரங்கிப்பேட்டை துறைமுகத்தில் ஒரு

டச்சுக் கப்பலைத் துரத்தப் போய், அவர் உயிர் பிழைத்ததே பெரும்பாடாயிற்று. ஊருக்குத் திரும்பினால், அவர் மாளிகையைத் தரைமட்டமாக்கியிருந்தார்கள், ஷேர்கான் லோடியின் பட்டாளத்தார்கள். பாவம், எங்கேயோ பிச்சையெடுத்துக் கொண்டு திரிகிறாராம் நல்லதேவன்.'

அர்ச்சகர் போய்விட்டார்.

சிவன் கோயில் பிராகாரத்தில் இடிந்து போய் உட்கார்ந்து விட்டான் கிழவன் வேல்பண்டிதன். 'என்னவெல்லாம் நினைத்திருந்தேன்! எப்படி ஆகிவிட்டது. ஐயோ! இளவரசிக்கு என்ன கதி ஏற்பட்டது என்றுகூடத் தெரியவில்லையே!''

'சரி, ஊருக்குத் திரும்பலாம் முதலில். போகும் வழியிலாவது எதையும் மறைக்காமல் நடந்ததைச் சொல்லும், ' என்றான் வீரண்ணன். வலுக்கட்டாயமாகக் கிழவனைப் பரிசல் துறைக்குத் திரும்ப அழைத்துச் சென்றுவிட்டான். எரிச்சலும் கேலியும் மிகுந்திருந்தன அவன் பேச்சில்.

இப்போது வெள்ளம் அதிகரித்திருந்தது. பரிசலிலும் ஒரு வயோதிகர் ஏற்கெனவே இடம் பிடித்திருந்தார். காய்ச்சலில் உடம்பு நடுங்க, கறுப்புக் கம்பளி அவரைப் போர்த்திக் கொண் டிருந்தது.

மழை ஓய்ந்து, இருள் மண்டிய வேளை. எக்கி எக்கி நகர்ந்தது பரிசல். பெருமூச்சுடன் கண்ணைத் துடைத்துக் கொண்டான் வேல்பண்டிதன். அளவுக்கு மீறிப் பொறுமையைச் சோதித்துவிட்ட வீரண்ணனிடம் சொன்னான்: "சீரும் சிறப்புமாய் வளர்த்து வருகிற பெண்ணை இப்போது நாம் திரும்ப கேட்டால் தருவாரோ மாட்டாரோ என்பதற்காக, குழந்தையை அடிமையாக விற்று விட்டேன் என்று அரசரிடம் சொல்லி வைத்தேன். விதி இப்படி விளையாடி விட்டதே!'

'குழந்தையைத் தூக்கிக் கொண்டு நீர் எங்கேயோ ஓடினது தான் தெரியும் எனக்கு. என்னிடம்கூட அடிமைக் கதைதான் அளந்தீர்கள். சீரும் சிறப்புமான எந்த இடத்தில் எப்படி அதை ஒப்படைத்தீர்கள்?' குடைந்தெடுத்தான் வீரண்ணன்.

கிழவன் தலை கவிழ்ந்தான்: 'தில்லைப் பெருமானின் சன்னதி. யாருமில்லாத வேளை. குழந்தையை என்ன செய்வது?'' தவித்துக்கொண்டு நின்றேன். 'எனக்கு ஒரு குழந்தை தர மாட்டாயா?" என்று வாய்விட்டு இறைவனைக் கெஞ்சும் ஒரு குரல் அருகில் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். நல்லதேவன்! உடனே...'

வேல்பண்டிதன் மேலே பேசவில்லை.

மின்னல் போல் அடுத்தடுத்து இரண்டு பிரமிப்பான நிகழ்ச்சிகள்.

'நீயா வேல்பண்டிதா?'' கூட வந்த வயோதிகப் பிரயாணி மாவுத்தக் கிழவனைப் பாய்ந்து கட்டிக் கொண்டார். "நீங்களா, ஐயா!' என்று வேல்பண்டிதனும் உணர்ச்சிவசப்பட்டான்.

ஆற்றின் நடுமத்தி அந்த இடம். எமதேவன் வரைந்த கோலங்கள் போல் சுழல்கள் வட்டமிடும் அபாயப் பிரதேசம். அந்த இடம் பார்த்தா பரிசலில் இந்த அமளி!

'ஐயா! ஐயா!' என்று அலறினான் பரிசலோட்டிய சிறுவன். பாதுகாப்பாக பிடித்திருந்த குறுக்குக் கயிற்றை அவன் கை நழுவவிட்டது.

பரிசல் வளைந்தது, சாய்ந்தது, திரும்பியது, கவிழ்ந்தது!

கண்ணிமைக்குமுன் காரியம் மிஞ்சிவிட்டது.

கவிழ்ந்த பரிசலைத் தொற்றிக் கொண்டு பரிசலோட்டி வெள்ளத்தோடு இணைந்தான்.

நல்லதேவனை மாவுத்தக் கிழவன் அணைத்துப் பிடித்துக் கொள்ள முயன்றான். வீரண்ணனோ கரையை நோக்கி நீந்தினான். இடையிடையே, "வேல்பண்டிதரே, என்னைப் பிடித்துக் கொண்டு வாருங்கள், வந்துவிடுங்கள், ' என்றும் கூவினான்.

நல்லதேவன் முழுகி முழுகி எழுந்தார். வேல்பண்டிதனால் அவரைக் காப்பாற்ற முடியவில்லை.

"தாமரை... என் செல்வி... ' நல்லதேவரின் தலை மூழ்கியது தண்ணிருக்குள். சில விநாடிகள் கழித்து மறுபடி மேல் மட்டத்துக்கு வந்தது... 'பாவிகள் சூறையாடி விட்டார்கள்... படாத பாடுபட்டு... கண்மணியை... குழந்தையை மட்டும் எடுத்துக்கொண்டு ஓடினேன்... தஞ்சாவூரில்...'

'தஞ்சாவூரில்?" வெறும் நீரைப் பார்த்து வேல்பண்டிதன் கேட்டான். நல்லதேவனின் தலை மீண்டும் மறைந்துவிட்டது.

அலை மோதித் தள்ளியது. கத்திபோல் வெட்டியது வாடை. "ஐயா! நல்லதேவரே! எங்கிருக்கிறீர்கள்?' என்று கத்தினான் மாவுத்தக் கிழவன்.

மயான அமைதி. நீரலைகளின் ஓயாத சளசளப்பு. திடுமென்று அவனுக்கு மிக அருகே குரல் கேட்டது. நல்ல தேவனின் குரல்.

'என் கண்மணி... தாமரை... அப்போது... தஞ்சாவூருக்குப் பெரிய பெத்து வந்திருந்தான்... சென்னைப் பட்டினத்தில் பெரிய வியாபாரி... அடிமை வியாபாரம்...'

'சொல்லுங்கள், சொல்லுங்கள்... ' அமிழ்ந்து கொண் டிருந்த நல்லதேவனைத் தூக்கி நிறுத்தினான் வேல்பண்டிதன். அவன் உடம்பு நடுங்கியது. அவன் எந்த விநாடியும் முழுகி விடுவான். ஒருவேளை பிழைத்தால்... "பெரிய பெத்துவிடம்? அப்புறம்?"

'தாமரை... பெரிய பெத்துவிடம்தான் சென்னைப் பட்டினத்தில்...'

'அடிமையாக இருக்கிறாளா, ஐயோ! அப்புறம்?"

பதிலில்லை. தளபதி நல்லதேவனின் மெலிந்த தலை மறுபடி மேலே வரவேயில்லை.

மிஞ்சிய பலத்தையெல்லாம் திரட்டிக் கொண்டான் கிழவன். முன்னே செல்லும் வீரண்ணனைக் குறி வைத்து நீந்தினான். செத்துப் பிழைத்துக் கரையேறினார்கள் இருவரும்.

ஆனால் களைப்புக்கும் பசிக்கும், இரவுக்கும் பகலுக்கும், உறக்கத்துக்கும் தாகத்துக்கும் அந்தக் கொள்ளிடம் நதியின் கரையிலேயே விடைகொடுத்து விட்டார்கள்.

ஒரே இலக்கு: சென்னைப்பட்டினம்.

முகவரி: பெரிய பெத்துவின் மாளிகை.

ஒரு வழியாய் இரண்டு குதிரைகள் வாங்கி, சவாரி செய்து அதை அவர்கள் அடைந்த அதே இரவுதான்-

தாமரை என்ற அடிமைப் பெண் அங்கிருந்து தப்பியோடியிருந்தாள்.

கசையடி விடுதியில் ஒரே ரகளையாம். பெரிய பெத்துவின் காவலாட்கள் பரபரப்பாகப் பேசிக் கொள்வதை வீரண்ணனும் வேல்பண்டிதனும் கேட்டார்கள்.

குதிரைகளுக்கு இளைப்பாறும் வாய்ப்புக்கூடத் தர வில்லை. கைக்கெட்டியது வாய்க்கெட்டாமற் போய்விடுமோ என்ற கவலை அவர்களை விரட்டியது. கசையடி விடுதியிலிருந்து ஒவ்வொரு தடயமாகக் கண்டுபிடித்துப் பின்பற்றி-

மயிலைத் திருக்குளத்தை நெருங்கினார்கள். குதிரைகள் இரண்டையும் படிக்கட்டில் மெல்ல இறக்கி, நீர் அருந்த வைத்தார்கள்.

மெதுவாய்க் கிழவனின் தோளைத் தட்டினான் வீரண்ணன். 'எங்கேயோ பக்கத்தில் ஓர் ஆண் குரலும் பெண் குரலும் கேட்கவில்லை?"

உற்றுக் கேட்டான் வேல்பண்டிதன். "ஆமாம்... ஓசைப் படுத்தாதே. இப்படியே இருளில் மறைந்தபடி அருகில் செல்வோம்...'

அடிமேலடி வைத்து முன்னேறினார்கள் இருவரும்.

நள்ளிரவைத் தாண்டிவிட்ட நேரம். அங்காடி வீதியில் ஒரு கடைகூடத் திறந்திருக்கவில்லை. வெறுங் கையோடா தாமரையிடம் திரும்புவது?

யோசித்தான் காஞ்சிபுரத்து வாலிபன்.

தாமரையின் வாடிய வயிற்றைத் தவிக்க விடுவதா?

கடைகளின் ஓரமாக நடந்தான். காலை எதுவோ வழுக்கியது. வாழைப்பழத் தோல். ஓ! பழக்கடையா?

நின்றான். சுற்றுமுற்றும் பார்த்தான். இருள் உற்சாக மூட்டியது.

அழுத்தமாக ஒரு நெம்பல். முட்டியால் ஒரு தட்டு. பூட்டு வழிவிட்டது. ஒவ்வொரு மூங்கில் கூடையில் ஒவ்வொரு வகையான பழங்கள். ஒரு கூடையில் பலவகைக் கனிகளை நிரப்பிக் கொண்டான். கதவைப் பழையபடி சாத்தினான்.

தவறல்லவா என்று நினைவு வந்தது. முறைகேடான காரியங்களை அடுத்தடுத்துச் செய்வதா?

மடியிலிருந்த முடிச்சிலிருந்து ஒரு பணம் எடுத்து, பணப் பெட்டியின் மீது வைத்தான்.

திரும்பினான் தோப்புக்கு. திகைப்பு, அதிர்ச்சி. குதிரை வண்டி எங்கே? இங்கேதானே இருந்தது? தவறான இடத்துக்கு வந்துவிட்டோமோ?

கோயிலைச் சுற்றிச் சுற்றி வந்தான். புகுந்து புகுந்து வெளிப்பட்டான். மரம் மரமாகப் பரிசோதித்தான். ஊஹூம்.

முட்டாள்தனம். ஏதோ சத்தம் கேட்கிறது என்று அவள் சொன்னாளே! அப்போதே எச்சரிக்கை அடைந்திருக்க வேண்டாமா?

பழக் கூடையைத் தோப்பிலேயே போட்டு விட்டு விறுவிறுவென்று நடந்தான்.

எங்கே போவது? அது பற்றி அவனுக்குத் துளியும் சந்தேகம் இருக்கவில்லை.

பெரிய பெத்து பெரிய பெத்து! எங்கே இருக்கிறது அந்த அடிமை வியாபாரியின் இல்லம்?

காஞ்சியிலிருந்து வந்தபோது பூவிருந்தமல்லி நெடுஞ்சாலையைக் கவனித்திருந்தான். வெள்ளைக்காரர்கள் பலரின் மாளிகைகள் அங்கே இருந்ததுண்டு. சில உள்ளூர்ச் செல்வந்தர்களும் குட்டியரண்மனைகள் கட்டிக் கொண்டிருந்தார்கள்.

அந்த வழியே ஓடினான். ஒரு பாராக்காரன் எதிர்ப்பட்டான். காஞ்சிபுரத்தானை எவனோ கள்வனென எண்ணி, தப்பாகப் பேசி, மண்ணை ருசி பார்த்த பின்னர் தகவல் தந்தான். 'நேரே போ. கும்பினிக்காரனின் கோட்டை மாதிரி இருக்கும் பெரியபெத்துவின் மாளிகை."

ஆம். கோட்டை மாதிரிதான் இருந்தது.

வாசலில், குறுக்கும் நெடுக்குமாகப் பாராக்காரர்கள் உலவினார்கள்.

வெளேரென்று வெளுக்கத் தொடங்கிவிட்டது கீழ்வானம். பெரிய பெத்துவின் மாளிகையைச் சுற்றிப் பற்பல நடமாட்டங்கள். ஆரவாரங்கள். நடவடிக்கைகள்.

சாலையிலிருந்த மதகுச் சுவரில் உட்கார்ந்து கொண்டான் காஞ்சி இளைஞன். என்ன செய்யலாம்? என்ன செய்யலாம்? மூளையும் கையும் துருதுருத்தன.

திடீரென்று

'தயிர் கெட்டித் தயிர்'

சரேலென எழுந்து கொண்டான் காஞ்சிபுரத்தான். கை, நாணயமொன்றை நீட்டியது. வாய் கேட்டது. "இங்கேயே கொஞ்ச நேரம் உட்கார்ந்திரு. பானையை என்னிடம் கொடு."

காஞ்சிபுரத்தானின் காசுக்கு, தயிருடன் பத்துப் பானைகள் தரலாமே? தயிர்க்காரன் மகிழ்ச்சியோடு கொடுத்தான்.

அங்கியைக் கழற்றி இடுப்பில் சுற்றிக் கொண்டான். தயிர்க் காரன் தந்த அழுக்குத் துணியில் முண்டாசும் சுற்றிக் கொண்டான். மாளிகை வாசலில் கம்பீரமாக, இயற்கையாக, பழக்கப் பட்டவன் போல நுழைந்தான். இல்லை, நுழையப் போனான்.

கூர் முனை கொண்ட ஒரு வேல் குறுக்கே மறித்தது.

காஞ்சிபுரத்தான் கூசாமல் கூறினான்: 'இன்று பெரிய பாட்டனாரின் திதி. தயிர் கொண்டுவரச் சொல்லியிருந்தார்கள்."

'கேட்டாயா அண்ணே?'' ஒரு காவல்காரன் இன்னொரு காவல்காரனைக் கைதட்டி வரவழைத்தான். குலுங்கக் குலுங்கச் சிரித்தான். 'மாளிகைக்குள்ளே இருக்கிற இருநூறு மாடு களுக்கும் திடீரென்று நேற்று ராத்திரியோடு பால் மரத்து விட்டதாம். இன்று காலையிலிருந்து இவனைத் தயிர் கொண்டு வரச் சொல்லியிருக்கிறார்களாம்!"

'உஷ்! எஜமானர் வருகிற நேரம்' மற்றவன் எச்சரித்தான்.

டும் டும் மாளிகைக்குள்ளிருந்து மேளம் ஒலித்தது. பூம் பூம் ஒருவன் கொம்பு ஊதிக்கொண்டு வெளிப்பட்டான்.

'ஒதுங்கடா மடையா வழியை அடைத்துக் கொண்டு!"காஞ்சிபுரத்தானை அப்பால் தள்ளினான் பாராக்காரன்.

மடேலென்று பானை விழ, தயிர் சிதறியது வழியெங்கும். 'அடேய்! அடேய் எஜமானர் வெளியே புறப்படுகிற நேரத்தில் அபசகுனம்' பரபரவென்று துடைத்தான் இன்னொரு பாராக்காரன்.

மேளதாளம், கொம்பு, தப்பட்டைகளுடன் ஒரு பல்லக்கு வந்தது. காஞ்சிபுரத்தானைக் கடந்து சென்றது. பின்னால் பரிவாரங்கள். அவர்களைத் தொடர்ந்து இன்னொரு பல்லக்கு.

அதில்-

ரோஜாவொன்றை முகர்ந்த வண்ணம் ஒய்யாரமாக அமர்ந்திருந்தாள் ஒரு நங்கை. சந்தன மேனியெங்கும் ஜக ஜோதியான ஆபரணங்கள்.

காஞ்சிபுரத்தானைக் கண்கொட்டாது பார்த்தாள். கீழே உடைந்து கிடந்த தயிர்ப் பானையையும் கண்டாள். உதட்டை மடித்து அனுதாபம் காட்டினாள். கையிலிருந்த ரோஜாப் பூவை எடுத்து வீசியெறிந்தாள் அவனிடம். போய்விட்டாள்.

அந்தப் பூவைக் கடித்துத் துப்பியவாறு மதகடிக்குத் திரும்பினான் காஞ்சிபுரத்தான். தயிர்க்காரனின் அருகில் அலுப்புடன் அமர்ந்தான்.

'உள்ளே நுழையப் பார்த்தாயே, முடியவில்லையா?" என்று தயிர்க்காரன் கேட்டான்.

'அங்கே நுழைய வழியே கிடையாது.'

'உண்டு. உனக்குத் தெரியவில்லை."

“என்ன அது?’’

'பல்லக்கின் பின்னாலேயே போ. கும்பினியான் கோட்டைக்கருகே வியாபாரமும் நடக்கும். உனக்கு வழியும் கிடைக்கும்.'

'என்ன வியாபாரம்?"

'போய்த்தான் பாரேன்.'

ஒட்டமும் நடையுமாகப் பெரிய பெத்துவின் பரிவாரத்தைப் பின் தொடர்ந்தான் காஞ்சிபுரத்தான்.

கடற்கரை ஓரம். ஏகப்பட்ட சந்தடி, கூட்டம்.

கட்டுமஸ்தான வாலிபர்களும், உழைப்பால் உரமேறிய பெண்களும் வரிசை வரிசையாக நின்றார்கள்.

''என்ன அது?' என்று ஒரு பையனிடம் வினவினான்.

"அடிமைகள் விற்பனைக்காக வந்திருக்கிறார்கள். பெரிய பெத்து வந்து தேர்ந்தெடுப்பார். வாங்கியவர்களைத் தன் மாளிகைக்கு அழைத்துப் போவார். '

காஞ்சிபுரத்தானுக்கு என்ன ஆனந்தம்!

ஒரே துள்ளல்.

ஆண்களின் வரிசையில் ஒருவனாகத் தானும் நின்று கொண்டான்.

## (4)

**அ**டிமைச் சந்தையிலே வரிசையில் நின்றிருந்தான் காஞ்சிபுரத்தான்.

கும்பினிக் கோட்டைக்கு அருகில் அந்த இடம். ஆண்களின் வரிசை. ஏழை எளியவர்கள். மெலிந்து நலிந்தவர்கள். தம்பி, இடம் கொடேன். பெரியவரே, நகருங்களேன். எந்த ஊர்? நேற்றுப் பூரா வேலை தேடினேன், கிடைக்கவில்லை. இப்படிப் பல

உரையாடல்கள். இவை காஞ்சிபுரத்தானின் காதில் விழவில்லை. சுளிர் சுளிர் அந்தச் சவுக்கடி ஓசை மட்டும் கேட்டது.

இதே நேரத்தில் தாமரை எங்கே இருப்பாள்? பெரிய பெத்துவின் மாளிகையில் கட்டுண்டு கிடக்கிறாளோ? கசையடி விடுதிக்கு மீண்டும் அனுப்பியிருப்பார்களோ? பொன்னான மேனி புண்ணாகிக் கொண்டிருக்குமோ?

நீண்டு கிடந்தது கடற்கரை. தொலைவிலே கும்பினியார் கோட்டையின் பெரிய வாசலில் அங்காடி. சிவப்புக் கோட்டு அணிந்த கும்பினியார் பற்பல பண்டங்களை வாங்கிக் கொண் டிருக்கிறார்கள். கும்பினி யாருக்குப் போட்டியாக முளைத்துள்ள தனிப்பட்ட பரங்கியரும் அங்கேதான் வாங்குகிறார்கள். இவர்கள் அணி ஒரு பக்கம். துணியையும் மணியையும் தானியத்தையும் பொன்னையும் கொண்டு வந்து விற்போரின் அணி மறுபக்கம்.

போர்தான். மூளைக்கும் மூளைக்கும் போர். ஆசைக்கும் மோசடிக்கும் போர். காசுக்கும் சாமர்த்தியத்துக்கும் போர். மனிதனை மனிதன் ஆழம் பார்க்கும் மகா தொன்மையான வியாபாரப் போர்.

அங்கே பண்டகச் சந்தை. காஞ்சிபுரத்தான் நின்றிருந்தது மனிதச் சந்தை.

அருகில் நின்றிருந்தவன் காஞ்சி இளைஞனின் விலாவில் இடித்தான். 'கும்பினியான் கொடி என்னமாய்ப் பறக்கிறது பார் கோட்டையிலே! ஹூம்!"

அந்தண்டை இருந்த ஒருவன் பதில் கொடுத்தான். 'ஏனய்யா வயிற்றெரிச்சல் படுகிறாய்? கெட்டிக்காரன் பிழைக்கிறான். ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் இந்த தேசத்தையே அவன்தான் ஆளப்போகிறான்!"

'து, தூ! பரங்கிக்கு அடிமைப்படுவோம் என்று வெட்க மில்லாமல் சொல்கிறாயே?"

'உஸ்' என்று அதட்டினான் கோடியிலிருந்த இன்னொரு ஆள். 'நமக்கு ஏனப்பா நாட்டு வளப்பம்? அதோ அவர்கள் வந்துவிட்டார்கள். வாயை மூடிக்கொள்.'

பெரிய பெத்து பல்லக்கிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தார். சரிகைத் தலைப்பாகை. முழங்காலுக்கும் கீழே தொங்கும் நீண்ட அங்கி. கழுத்தில் ரத்தின மாலைகள். முறுக்கிவிட்ட மீசை. அடிக்கடி சுண்டு விரலால் அதன் நுனிகளை நாசூக்காக மேல் நோக்காகத் தூக்கிவிட்டுக் கொண்டார். பாலிலும் நெய்யிலும் வளர்ந்த சிவந்த மேனி. ஆனால் கண்ணில் தந்திரக் காரனின் மினுமினுப்பு.

கணக்கப்பிள்ளை, ஓலையும் எழுத்தாணியும் தயாராய் ஏந்தி, அவர் பின்னால் வந்துகொண்டிருந்தான்.

இரண்டாவது பல்லக்கு இறங்கியது.

'அவள் யார்?' என்று காஞ்சிபுரத்தான் கேட்டான், பல் இடுக்கில் மிஞ்சியிருந்த ஒரு ரோஜாத் துமியையும் துப்பிவிட்டு.

'தம்பி, நீ ஆபத்தான ஆள்தான். நகரு, நகரு. வேறிடம் பார். "

'ஏன்?

'அவள் என்கிறாயே பின்னே? அவர்கள்தான் பெரிய பெத்துவின் ஒரே மகள்."

'பெயர்: '

'தெய்வநாயகி. '

“தாமரை என்பதுதான் அழகான பெயர்.'

'உனக்குப் பிறந்தால் வைத்துக் கொள்ளலாம். இப்போது வாயை மூடிக்கொள்.'

பெண்களின் வரிசையைப் பார்க்கத் தெய்வநாயகி போய் விட்டாள். அந்தப் பக்கம் கண்ணை உயர்த்தவே காஞ்சிபுரத்தானுக்குக் கூசியது. மானத்தைக் காக்கவும் வழியற்ற சகோதரிகள்; தாய்மார்கள். வயிற்றுக்குச் சாப்பாடு நிறைந்துவிடும். வெய்யிலுக்குக் கூரை வந்து விடும். இடுப்புக்குத் துணி கிடைத்துவிடும்; ஆனால், அந்த நீண்ட சவுக்கு மனித இரத்தத்துக்காக நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு காத்திருக்கும் கசை அந்தப் பயங்கரங்களை அறியாத அப்பாவிகள், பாவம்...

தாமரையும் இப்போது அடிவாங்கிக் கொண்டிருப்பாளோ! சே! அவளைத் தனியே விட்டுவிட்டுப் போனது என்ன மடமை!

திடீரென்று

"நிற்க முடியவில்லையப்பா...என்னாலே முடியலே...' காஞ்சிபுரத்தானின் வரிசையில் ஒரு கிழவன் விழுந்து விட்டான். எலும்பெடுத்த கால்கள் தொய்ந்தன; சுருண்டு விழுந்தான். 'தண்ணி... தண்ணிகூட இல்லையே?'

பல்லக்குத் தூக்கிகளில் ஒருவன் அட்டகாசமாய்ச் சிரித்தான். 'ஏன் இந்த வயதில் பொய் சொல்கிறாய் கிழவா? அதோ சமுத்திரம் பூரா தண்ணீர்தானே?"

காஞ்சிபுரத்தான், கிழவனைக் கையில் தாங்கினான். மெல்ல உட்கார்த்தி வைத்தான். 'இதோ தண்ணீர் கொண்டு வருகிறேன். '

பல்லக்கின் பக்கத்தில் ஓர் ஆள். அவன் கையிலே எஜமானரின் வெற்றிலைச் செல்லம். வெள்ளிக் கூஜாவில் தண்ணிர். வெடுக்கென பறித்து வந்தான் அதை. கிழவரின் வாயில் ஊற்றினான்.

சிப்பாயொருவன் அவனைப் பிடித்துத் தள்ளி, கூஜாவைக் கைப்பற்றினான். 'கெட்ட கேட்டுக்கு வெள்ளிக் கூஜாவில் தண்ணிர்

கேட்கிறதோ?'' பிரம்பு காஞ்சிபுரத்தானின் காலைப் பதம் பார்த்தது. கிழவன் பயந்து ஓடவே, இவனும் தன் வரிசைக்குத் திரும்பினான்.

அருகிலிருந்தவர்கள் அதிசயமாய் அவனைப் பார்த்தார்கள். 'சரியான வம்புக்காரனப்பா நீ பஞ்சத்தில் அடிபட்டவர்கள் நாங்கள். சோற்றுக்கில்லாமல், துணிக்கில்லாமல், அடைக்கலம் கொடுத்தால் போதும் என்று வந்து நிற்கிறோம். நீ போய் எஜமானரின் வெள்ளிக் கூஜாவைத் தட்டிக் கொண்டு வருகிறாயே?''

காஞ்சிபுரத்தானுக்குக் கோபம் வந்தது. "நீங்களெல்லாம் தன்மானத்தை இழந்துவிட்டீர்கள்! அடிமையாகப் பிழைத்தால்தான் உயிர் வாழ முடியுமா? பட்டணத்தில் எத்தனை நெசவுத் தொழிலாளிகள், தச்சர்கள், நெசவாளிகள் கும்பினிக்காரனிடம் சம்பளம் வாங்கிக்கொண்டு பிழைக்கிறார்கள்? அங்கே போகக் கூடாது?"

'அங்கெல்லாம் சல்லடை போட்டு வேலை தேடி விட்டுத்தான் இங்கே வந்தோம். ' காஞ்சிபுரத்தானுக்கு அடுத்திருந்தவன் சட்டென்று சிரித்தான்: "ஆமாம், இத்தனை பேசுகிறாயே தம்பி, நீ ஏன் இங்கே வந்து நிற்கிறாய்? காற்று வாங்கவா?"

'என் விஷயம் வேறே.'

"பட்டு அங்கி போட்டிருந்தால் எவன் உன்னை வாங்குவான்? கழற்றி இடுப்பில் சுற்றிக்கொள். விரலிலிருக்கிற மோதிரத்தையும் எடு. வேட்டியில் முடிந்து கொள். மெலிந்தவன் மாதிரி வேஷமாவது போடு. '

அவன் சொன்னதையெல்லாம் செய்தான் காஞ்சிபுரத்தான். தயாராய் நின்று கொண்டான்.

அவனுடைய வரிசையில் முப்பது பேர் இருந்தார்கள். மூன்றாவதாக நின்றிருந்தான் அவன்.

பெரியபெத்து அதிகம் பேசாதவர். எட்டத்தில் நின்று கொண்டார். வெள்ளிப் பூண்போட்ட நீளமான பிரம்பினால் அடிமைகளின் மோவாயை நிமிர்த்திப் பார்த்தார். உள்ளங் கையை விரிக்கச் சொன்னார். பிரம்பின் நுனியினால் நகங்களின் இடுக்கைப் பார்த்தார். சிலரை ஓடச் சொன்னார். சிலரை ஆடச் சொன்னார். சிலரின் இமைகளை விலக்கினார் - பிரம்பினாலேயே. அவர் 'ஊம்' என்று தலையசைத்ததும், ஊர், பெயர் களைக் குறித்துக் கொண்டார், கணக்கப்பிள்ளை.

காஞ்சிபுரத்தானின் முறை வந்தது. லேசாகத்தான் பார்த்தார். எதுவும் சொல்லாமல் நகர்ந்து விட்டார். அடுத்த ஆள், அதற்கடுத்த ஆள்.

காஞ்சிபுரத்தானுக்குப் பொறுக்கவில்லை. ஆறாவது ஆளாகப் போய் நின்று கொண்டான் மீண்டும். பெரியபெத்து அப்போதும் எதுவும் சொல்லவில்லை. ஊஹூம்' என்று உதட்டைப் பிதுக்கினார்: ஏழாவது எட்டாவது ஆட்களிடம் நகர்ந்துவிட்டார்.

மறுபடியும் ஒன்பதாவதாகப் போய் நின்றான் காஞ்சி வாலிபன். பிரம்பால் அவனை விலக்கிவிட்டு, பத்தாவதைப் பரிசோதித்தார் பெரியபெத்து.

தாளவில்லை காஞ்சிபுரத்தானுக்கு. முரட்டுத்தனமாக அவரை மறித்தாற்போல் நின்றான். 'என்னிடம் என்ன குறை? அடிமைக்குத் தேவையான உயரம் எடை, பலம் எல்லாம் எனக்கு இருக்கிறதே?' என்றான்.

'அடிமைக்கு இருக்கக் கூடாததும் ஒன்று இருக்கிறது, ' என்றார் பெரிய பெத்து.

'என்ன அது?’’

'திமிர்.'

கொல்லென்று சிரிப்பு எழுந்தது அந்தக் கூட்டத்தில். பணக்காரன் சொன்ன விகடமாயிற்றே! தேவைக்கு அதிக மாகவே நகைப்புக் கிடைத்தது.

உருமாலை விசிறிப் போட்டுக் கொண்டு பெரியபெத்து நகர்ந்தார். விஸ்ஸென்று விசிறிய பீதாம்பரத்தில் அத்தர் ஜவ்வாதின் அருமையான மணம். ஆனால் ஒரே விநாடிதான். அடிமைகளின் வியர்வை நாற்றத்தில் அது புறமுதுகிட்டு ஓடி மறைந்தது.

பெரியபெத்து ஏறிவந்த பல்லக்கு, காஞ்சிபுரத்தானின் கண்களில் பட்டது. குட்டி யானை போலக் கனம். தேரைப் போல அலங்காரம். விதானமும் கதவுகளும், இரும்பிலே செய்த கோட்டைகள்.

காஞ்சிபுரத்தான் அலட்சியமாக இரு கையாலும் அதைத் தூக்கினான். தோள்மீது வைத்துக் கொண்டான். பல விநாடிகள் கழித்து இறக்கினான். பெரியபெத்துவிடம் சென்று, 'நீங்கள் தேர்ந்தெடுத்திருக்கிற ஆட்களிலே எவனையாவது அப்படிச் செய்யச் சொல்லுங்கள், பார்க்கலாம், ' என்றான்.

பெரியபெத்து பதில் சொல்லவில்லை. பல்லக்கை நோக்கி நகர்ந்தார். மீசையின் நுனியுடன் சுண்டுவிரல் சல்லாபித்தது.

கும்பினியார் கோட்டையிலிருந்து ஒரு மெலிந்த ஆள் அவரிடம் வந்தான்.

பெரியபெத்துவின் பார்வை கோட்டைக்குச் சென்று திரும்பியது. ஏதோ எண்ணமிட்டார். "எப்படி இருக்கிறான்?"

'இன்னும் அடைத்துத்தான் வைத்திருக்கிறார்கள். ஆனால் சாப்பாடு ஏராளம். சாராயம் தாராளம்.'

'நல்லது. விரைவில் உதவி வருமென்று சொல்லு.'

'உத்தரவு. அவன் போய்விட்டான். இன்னோர் ஆள் கைகட்டி வாய் பொத்தி ஓடி வந்தான். 'அம்மா புறப்படலாமா என்று கேட்கிறார்கள். '

'உம். ' பெரியபெத்து தன் பல்லக்கில் ஏறிக்கொண்டார். காஞ்சிபுரத்தானின் உதடுகள் இறுகின. கண்களில் செம்மை பாய்ந்தது. எதிரில் பார்த்தான்.

தெய்வநாயகி தன் சிவிகையில் அமர்ந்துவிட்டாள். அவள் பார்வையும் கோட்டையின் மீது இருந்தது. பல்லக்குத் தூக்கிகள் சிவிகையைத் தூக்கும் சமயம்.

காஞ்சிபுரத்தான் சரேலெனப் பாய்ந்தான் முன்னே. சிவிகையை ஒரே எட்டில் அடைந்தான்.

அவள் வீற்றிருந்த பட்டு மெத்தையில் அழுத்தமாகக் கையை ஊன்றினான். அந்த அதிர்ச்சியில் பல்லக்கு ஒரு முறை குலுங்கியது.

காய்ச்சிய ஈயம்தான்! அப்படியோர் அறை காஞ்சிபுரத் தானின் கன்னத்தில் ஐந்து விரல்களின் முத்திரை!

நாகம்போல் சீறினாள் நங்கை. "என்ன துணிச்சல் உனக்கு!"

காஞ்சிபுரத்தான் வாய்மொழி தரவில்லை. உள்ளங்கையை விரித்துக் காட்டினான். வீலென்று கூச்சலிட்டாள் தெய்வநாயகி.

சிரித்துக்கொண்டே அவளுடைய பல்லக்கில் பிடித்த எதையோ வீசியெறிந்தான் அவன்.

நண்டொன்று குடுகுடுவென்று ஓடியது. கூச்சலைக் கேட்டு, பதறி வந்தார் தந்தை. "என்னம்மா, தெய்வநாயகி? என்ன நேரிட்டது?"

'ஒன்றுமில்லை அப்பா, இவன் என்னைக் காப்பாற்றினான்...'

'இந்தச் சோம்பேறியா?" பெரியபெத்து சிரித்தார்.

அவனது சிவந்த கன்னத்தின் மீது தெய்வநாயகியின் ஓரக்கண் ஒடிற்று. தலைகுனிந்தாள். 'தெரியாமல் செய்து விட்டேன், ' என்றாள் மெல்ல.

'தெரிந்தும் ஒன்று செய்துவிடுங்கள், சரியாகிவிடும்.' காஞ்சிபுரத்தான் புன்னகை செய்தான்.

'என்ன வேண்டும்?'' தெய்வநாயகி வினவினாள்.

'தங்கள் மாளிகையில் அடிமைப் பிழைப்பைத்தான் யாசிக்கிறேன்.'

தெய்வநாயகி நிமிர்ந்தாள். 'சேர்த்துக் கொள்ளுங்கள்' என்றாள் கணக்கப்பிள்ளையிடம்.

'உனக்குத் தெரியாது, தெய்வநாயகி. ' குறுக்கிட்டார் பெரியபெத்து. "இவன் சுத்த மேனி மினுக்கு. தீனிதான் செலவழியும். உடம்பு வணங்காது.'

'பார்க்கலாமே, அப்பா.' அவள் கண்ணசைந்தது. பல்லக்கு எழுந்தது. புறப்பட்டது.

"தந்திரக்காரன்தான்.'' பாராட்டிவிட்டுத் தன் சிவிகையில் ஆரோகணித்தார் பெரியபெத்து. 'நண்டு உண்மையிலேயே பல்லக்கில் இருந்ததா, அல்லது உன் கையில் இருந்ததா?''

காஞ்சிபுரத்தான் விடை தரவில்லை.

தேர்ந்தெடுக்கப்பட்ட அடிமைகளின் கூட்டத்தில் கலந்து விட்டான். சத்திரத்துக்குச் செல்ல வேண்டும். அடிமைகளை அங்கே பதிவு செய்வார்கள். ஓர் அடிமைக்கு அரை ரூபாய் கட்டணம்.

**பெ**ரியபெத்துவின் மாளிகை.

சுதந்திர புருஷனாக உள்ளே நுழைய முடியாத இடம், அடிமைக்கு வழிவிட்டது.

வேகமாக நுழைந்தவனை ஒரு சேவகனின் கரம் தடுத்தது. 'அடிமைகளுக்கு இந்த வழி. குனிந்து செல்ல வேண்டிய குறுகலான பாதையொன்றைக் காட்டினான் அவன்.

சுரங்கமா என்ன? இருட்டிலே துழாவிச் சென்றான் காஞ்சிபுரத்தான். மற்ற அடிமைகள் ஒவ்வொருவராய் ஓர் அறைக்குள் நுழைவது தெரிந்தது. செவியைக் கிழிக்கும் ஒரு கோரக் கூச்சல். பிறகு அவர்கள் வெளிப்பட்டார்கள். வேறு வழியாக மாளிகையின் பின்புறம் சென்றார்கள். நடையில் தள்ளாட்டம். முகத்தில் வேதனை.

என்ன நடக்கிறது அந்த அறையில்?

இருண்ட அறையினுள் நுழைந்த பின்னர் புரிந்தது.

தகதகவென்று ஓர் அடுப்பு எரிந்து கொண்டிருந்தது. இரும்புக் கோலொன்று அதிலே காய்ந்து கொண்டிருந்தது.

'திரும்பு' என்று ஒருவன் காஞ்சிபுரத்தானின் தோளைப் பிடித்துத் திருப்பி விட்டான். அடுப்பின் பக்கம் அவன் முதுகு திரும்பியது. மற்றவன் சூட்டுக்கோலை அடுப்பிலிருந்து எடுத்தான். திக்கென்றது காஞ்சிபுரத்தானுக்கு.

தாமரைக்காகப் பொறுத்துக் கொள்ள வேண்டியதுதான்.

அவன் முதுகில், வலது தோளின் கீழே, கூரிய கொள்ளி பாய்ந்தது.

பல்லை இறுகக் கடித்தான் காஞ்சிபுரத்தான். நாக்கு சிக்கியது நடுவில். குபுகுபுவென்று வாய்க்குள் ரத்தம் ஊறுவது தெரிந்தது. அதன் உப்புச் சுவையைக் கடிபட்ட நாக்கு உணர்ந்தது. முதுகில் பச்சைத்தோல் கருகும் நாற்றம்.

அந்த நிலையிலும் காஞ்சிபுரத்தானின் அறிவு மழுங்க வில்லை. முதுகில் எழுதப்படுவது என்ன என்று ஊகித்தான். "பெ" என்ற எழுத்து. பெரியபெத்து' என்பதன் சுருக்கம்.

'போ. ' அவன் முதுகைப் பிடித்து மறுபுறம் தள்ளி விட்டான் சூடு போட்டவன். 'எருமைத் தோலாடா உனக்கு? வாயே திறக்கவில்லையே?"

திறந்த முற்றம். பின்னர் மாட்டுக் கொட்டில். அருகில் குதிரை லாயம். அவற்றின் பின்புறம் பரந்த தோட்டம். நடு நடுவே சிறுசிறு கொட்டடிகள். தறிபோடுவோர்; சாயமிடுவோர்; மரம் வெட்டுவோர்; மாடுகளைக் குளிப்பாட்டுவோர்; குதிரைகளுக்கு உடம்பு பிடித்து விடுவோர். துணி துவைக்கவும் பாத்திரங்கள் கழுவவும் விறகு சுமப்போருமாகப் பல பேர்.

நாட்டாண்மைக்காரனொருவன் வந்தான். 'போய், கிணற்றிலிருந்து தண்ணிர் இழுத்துத் தோட்டத்துக்குப் பாய்ச்சு."

கூட வேலை செய்து கொண்டிருந்தவனிடம் கேட்டான்: 'பெண்கள் எந்தப் பக்கத்தில் இருக்கிறார்கள்?"

கூட்டாளி இகழ்ச்சியாகச் சிரித்தான்: 'இந்த நாய்ப் பிழைப் புக்கு அது வேறே தேவைப்படுதா? சீ. வேலையைப் பார். '

வேலையில் மனம் ஓடவில்லை. பல விதமான யோசனைகள். இங்குமங்கும் பார்த்தான்.

ஒரு கூரான குச்சி கிடைத்தது. கூட்டாளி கவனிக்காத தருணம். தண்ணிர் நிறைந்திருந்த தோல் பையில் சுருக்கென்று குத்திக் கிழித்தான். தண்ணீர் பொதபொதவென்று கொட்டியது ஓட்டை வழியே.

"அடடா ஓட்டையாகிவிட்டதே ஊசி இருக்கிறதா, தைக்க?"

"என்னிடம் ஏது? மேலாளைக் கேள்' என்றான் கூட்டாளி.

மேலாளுக்குக் கோபம் வந்தது. "நானென்ன பெண் பிள்ளையா, ஊசி வைத்திருக்க? அந்தப் பக்கம் போய்க் கேள்."

அதற்காகத்தான் கேட்டேன்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான் காஞ்சிபுரத்தான். கைகாட்டிய இடத்துக்குத் தாவினான்.

எதிர்பார்த்தபடியே பெண்ணடிமைகளின் கூட்டம் இருந்தது, மாளிகையின் மறுபுறத்தில். நெல் மூட்டைகளைப் பிரிப்பதும், குவிப்பதும், குத்துவதும், புடைப்பதும், அளப்பதும், கட்டுவதும் இவர்கள் வேலை.

தனியே வந்த ஒரு கிழவியிடம் விசாரித்தான்: 'தாமரை என்று இங்கே ஒருத்தி...'

குழி விழுந்த கண்களிலே நீர் திரண்டது. 'சாட்டையடி விடுதிக்கு அதைக் கொண்டு போனார்கள். எந்தப் பாவியோ அதைக் கடத்திப் போய் விட்டானாமே, தம்பி நல்ல பொண்ணு. நீ அதுக்கு உறவுக்காரனா?"

'அவளைத்தான் மறுபடி இங்கே பிடித்துக்கொண்டு வந்து விட்டார்களே, பாட்டி!'

'இல்லையே தம்பி? யார் சொன்னது? இங்கே வரவில்லையே அவள்!'

"நிச்சயமாய்த் தெரியுமா, பாட்டி?"

"சாமி சத்தியமாய்ச் சொல்கிறேன், தம்பி. அது இங்கே இருந்தால் நான் இப்படிக் கண்ணாலே தண்ணிர் விடுவேனா?"

காஞ்சிபுரத்தான் தனது பழைய இடத்தை நோக்கி நடக்கவில்லை. இனி இங்கே என்ன வேலை? வேறே யார் அவளைக் கொண்டு போயிருக்க முடியும்? ஒரு வேளை சாட்டை விடுதி ஆளோ? எதுவானாலும் உடனே அறிய வேண்டும். உடனே. உடனே.

திரும்பியவன் நின்றான். மடியிலே ஏன் வீண் கனம்! காஞ்சியிலிருந்து கொண்டு வந்த காசு, தன்னைத் தானே விற்றுக் கிடைத்த பணம். மொத்தத்தையும் பாட்டியின் கையில் தந்தான். சுதந்திரமாக நடையைக் கட்டினான்.

கிடுகிடுவென்று வாசலுக்கு நடந்தான். வெளியேறக் கால் வைத்தான்.

'டேய்! எங்கே போகிறாய்?" காவல்காரன் வழி மறித்தான்.

'என் இஷ்டம். '

'அடிமைக்கு இஷடம் வேறேயா, இஷ்டம்?"

பட் பட். பட் பட்.

உப்பரிகையிலிருந்து யாரோ கை தட்டினார்கள்.

பெரியபெத்து.

'அவனை இங்கே அனுப்பு.'

சலவைக் கல் பதித்த தளத்தில் கால் வைத்து ஏறினான் படிப்படியாய்.

மௌனமாய் அவனைப் பார்த்தபடி நின்றார் பெரியபெத்து. 'விடுதலை வேண்டுமா உனக்கு?"

காஞ்சிபுரத்தானின் விழியில் ஒளி.

"ஆள் வாட்டசாட்டமாயிருக்கிறாய். தந்திரக்காரன் வேறே. உன்னால்தான் முடியும்.'

‘'எது?"

'கும்பினிக்காரனின் கோட்டைக்குள் நுழைவது.'

'நுழைந்து?"

'கோல்கொண்டா நவாபுக்கு வலது கையாக இருந்தான், எனக்கு உறவினனான ஒரு பையன். சிவசிதம்பரம் என்று பெயர். கும்பினிக்காரர்கள் பிடித்துப் போய், கோட்டையில் சிறை வைத்திருக்கிறார்கள். மீட்டு அழைத்துவர வேண்டும், முடியுமா?"

'ஏன் முடியாது?’’

'வாசலுக்குப் போ. நான் வருகிறேன். '

மாளிகையின் நடுமத்தியைத் தாண்டிய சமயம்-

பட்டுத் திரையின் பின்னாலிருந்து ஒரு கைச் சொடுக்கல்.

மெல்லிய துணியின் பின்னே தெய்வநாயகியின் அழகிய உருவம்.

'வா இப்படி' என்று அழைத்தாள். போனான்.

'விடுதலை வேண்டுமா?"

"ஆமாம்.'

'என்னைக் கேட்டிருந்தால் கொடுத்திருப்பேனே?"

'ஏன்? '

'நீ ஓர் உதவி செய்தால் போதும்.'

‘'என்ன? '

தெய்வநாயகியின் குரல் தாழ்ந்தது. 'கும்பினிக்காரனின் கோட்டைக்குள் நுழைய வேண்டும்.'

சிரிப்பை அடக்கிக் கொண்டான். 'நுழைந்து?"

"எங்கள் உறவினர் - சிவசிதம்பரம் என்று பெயர். சிறைப்பட்டிருக்கிறார்.'

தன்னை மறந்து கேட்டுவிட்டான். "மீட்டு வர வேண்டும் அவரை?''

"அதுதான் இல்லை. தெய்வநாயகியின் குரல் ரகசியமாயிற்று. 'அவரை... ' கழுத்தைச் சீவுவதுபோல் சாடை காட்டினாள். 'அது முடியாவிட்டால்...' கையையும் காலையும் வெட்டுவது போல் சாடை காட்டினாள். 'என்ன செய்வாயோ, இங்கே அந்த ஆள் வராதபடி செய்துவிட்டால் போதும்.'

## (5)

**சி**ரித்துக்கொண்டே வாசலுக்குச் சென்றான் காஞ்சிபுரத்தான்.

'இப்படி வா, ' என்றார் பெரியபெத்து.

அவர் மௌனமாக முன்னே நடந்தார். முன்புறத்திலிருந்த நந்தவனத்தை நோக்கிச் சென்றார். அழகிய தடாகத்தின் பளிங்குச் சுவரில் ஒரு காலை ஊன்றி நின்று கொண்டார்.

'சிவசிதம்பரத்தை மீட்டு வர நீ தான் தகுந்த ஆள். உனக்குச் சரியான சந்தர்ப்பம், வசதி எல்லா வற்றையும் நான் செய்து தருகிறேன். அதன் பிறகு புறப்படு. '

'அதந்கு எத்தனை நாளாகும்?'

'நாலு நாள், எட்டு நாள், ஒரு மாதம். யார் கண்டது? ஆனால் அதற்கு நீ தயாராயிருக்க வேண்டும்.'

'அத்தனை நாள் ஆகுமா? அதுவரை?'

"வெளியே போகலாம், வரலாம், சுதந்திரமாக இருக்கலாம்."

காஞ்சிபுரத்தானின் முகம் மலர்ந்தது. அவன் தோளைப் பிரம்பினால் தொட்டார் பெரியபெத்து. "ஆனால் ஓட முடி யாது.

அழிக்க முடியாத முத்திரை இங்கே இருக்கிறது. முதுகில் "பெ" என்று தோல் கருகிய இடத்தைப் பிரம்பினால் தடவிக் காட்டினார்.

'விடுதலையை நேர்மையாகவே வாங்கிக் கொள்வேன். பயப்படாதீர்கள். '

“எனக்கும் நம்பிக்கை உண்டு. எங்கே வேண்டுமானாலும் போ.'

**மே**ற்கே, செக்கர் வானத்தில் இறங்குகிற சூரியன். கிழக்கே, விடைகொடுக்கக் கை நீட்டும் கடலலைகள்.

காஞ்சிநகர் வாலிபன் மணலை அளாவியவாறு நடந்தான். கும்பினியானின் கோட்டை மீதே அவன் பார்வை பதிந்திருந்தது. தாமரையைத் தேடிச் செல்ல இங்கே ஒருவனை விடுவிக்க வேண்டுமாமே...!

குடிசையொன்றின் வாசல். 'தங்கச்சி, என்ன தேடுகிறாய்?" அம்மியினருகே துழாவிக் கொண்டிருந்த பெண்ணுக்குப் பார்வை இல்லை, பாவம்.

'துவையல் அரைக்கணும். கல் எங்கே அண்ணே இருக்குது?'

'இப்படிக் கொடு தங்கச்சி. நான் அரைத்துத் தருகிறேன்." அவள் கையிலிருந்த பருப்பையும் மிளகாயையும் வாங்கிக் கொண்டான். கொட்டைப் பாக்குக் கடிக்கிற நேரம். அம்மியிலிருந்து வழித்தெடுத்து, இலையிலே வைத்தான். அவள் கையிலே தந்தான்.

'இரு அண்ணே, கூலி வாங்காமல் போகாதே. ' குடிசைக்குள் சென்றவள், சுட்டு வைத்திருந்த தோசையைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

'ரொம்ப நன்றாக இருக்கிறது தங்கச்சி.'

'ஹூம், இப்படி வாய் நிறைய ஒரு நாளாவது என் அண்ணன் கூப்பிடுதா?”

"உன் அண்ணன் என்ன செய்கிறான்?"

'கும்பினிக்காரர்களுக்குப் படகு ஓட்டுது. ஊம்... அதையும் நாணயமாய்ச் செய்யாது. ஏன் அண்ணே, இருட்டிப் போச்சு, இல்லை?"

'இருட்டுகிற நேரம்தான். '

நீலப் பாயென விரிந்துள்ள கடல். பாய்மரங்களை மடக்கிக் கொண்டு காத்திருந்த பெருங் கப்பல், சின்ன மரக்கட்டை மிதப்பது போல் தெரிகிறது. துறைமுகம் இல்லாத குறையினால் கரைக்கு அருகில் வர இயலுவதில்லை. கப்பல் வந்திருப்பது தெரிந்ததும் கரையிலிருந்து மசூலா (மீன்) படகுகள் அனுப்ப வேண்டும். கப்பலிலிருந்து பிரயாணிகளையும் சரக்குகளையும் அவைதான் அழைத்து வரும்.

கரையிலே மசூலாப் படகுகளைக் காணோம். ஒன்றே ஒன்று கப்பலிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தது.

காஞ்சிபுரத்தானுக்குச் சுவையான பொழுது போக்கு. காட்சியை ரசித்துக் கொண்டிருந்தான்.

மணல் கரைக்குச் சற்றுத் தள்ளி, அலையிலேயே நிறுத்தப் பட்டது படகு. அங்கிருந்து பெட்டிகள், கூடைகள், படுக்கைகள் ஒவ்வொன்றாக எடுத்து வந்தார்கள் படகுக்காரர்கள். படகிற்குள் நின்று கொண்டிருந்த ஒரு பரங்கிக்காரி புரியாத மொழியில் கீச்சு கீச்சென்று கத்திக் கொண்டிருந்தாள். "மெல்ல-மெதுவாய்ஜாக்கிரதை' என்று ஒவ்வொரு கீச்சுக்கும் ஒவ்வொரு அர்த்தம் புரிந்து கொண்டான் காஞ்சிபுரத்தான்.

கோட்டைக்குள்ளிருந்து இரண்டு இந்தியச் சிப்பாய்கள் வந்தார்கள். சிவப்புக் கோட்டு, சிவப்புக் கால்சராய், டக்டக் கென்ற நடையுடன் அவர்களின் பின்னே, ஓர் ஆங்கிலேயர். வெய்யிலில் கன்றிப்போன சிவப்புக் கன்னம். செம்மறித் தாடி, பூனைக் கண்கள்.

"மேரி' கரையில் நின்றபடியே கைக்குட்டையை எடுத்து ஆட்டினார் அவர்.

வந்திருப்பவள் இவர் மனைவியா? உற்சாகமாய்ப் பதில் கொடுக்கிறாளே?

'எல்லாச் சாமான்களும் வந்துவிட்டதா?' காஞ்சிபுரத்தானுக்கு ஆங்கிலம் தெரியாதுதான். இருந்தாலும் கரையில் உள்ள பொருள்களைக் கைத்தடியால் தட்டிக் கேட்பதற்கு வேறென்ன அர்த்தம்?

'எல்லாம் வந்துவிட்டது, எஜமான். '

சிப்பாயிடம் கட்டளையிடுகிறார் துரை. 'கூலியைக் கொடுத்தனுப்பு.'

'இருங்கள், ' பார்த்துக் கொண்டிருந்த காஞ்சிபுரத்தான் குறுக்கிட்டான்.

'என்ன? '

'ஒரு பொருளை விட்டுவிட்டார்கள் இவர்கள். '

மூவர் முகமும் சிவக்கிறது.

'கிடையவே கிடையாது. எல்லாம் கொண்டுவந்து சேர்ப்பித்து விட்டோம். '

'தெரியாமல் சொல்கிறார்கள்.' காஞ்சிபுரத்தான் கிடுகிடு வென்று அலையில் இறங்கினான். படகை நோக்கி நீந்தினான்.

அடேயப்பா உப்புத் தண்ணிரில் இறங்கியது அவ்வளவு புத்திசாலித்தனமில்லை. சூடு போட்ட முதுகுப் புண் கொள்ளி யால் தீய்க்கிற மாதிரி எரிந்தது. நீந்தினான். படகை அடைந்தான். ஆட்கள் நின்று சாமான்களை இறக்கிய இடத்தில் மூழ்கினான். படகிலிருந்த துரைசானி, என்னவென்று புரியாமல் ஏதோ கேட்டாள். அவன் பதில் தரவில்லை. துழாவினான். மணல், கிளிஞ்சல், கற்கள்.

இதோ!

ஓர் இரும்புப் பெட்டி.

இடுப்போடு அணைத்தபடி கரைக்கு நீந்தினான். தண்ணிரில் தெரியாத கனம் கரைக்கு வந்ததும் தெரிந்தது.

படகிலிருந்தவாறே பெண்மணி ஏதோ கூவினாள். விலையுயர்ந்த பொருள்கள் கொண்ட பெட்டி போலும்.

துரைக்குக் கடுங்கோபம்.

'டேய் இந்த மாதிரி வேண்டுமென்றே கடலில் போட்டு விட்டு, பிறகு திருட்டுத்தனமாய்ப் போய் எடுத்துக் கொண்டு வருவதுதான் உங்கள் வேலையா?' பரங்கித் தமிழ்.

'ஐயையோ கிடையாது சாமி! இது எப்போது விழுந்ததோ? யார் போட்டார்களோ? '

"மூடு வாயை இதன் மீது என்ன பெயர் போட்டிருக் கிறது பார்! நல்லவேளை இந்தப் பையன் கவனித்திருந்தான். சிப்பாய்! கூலியைப் பாதியாகக் குறைத்துக் கொடு."

'எஜமான் இவன் பேச்சைக் கேட்டு... ' காஞ்சி இளைஞனைப் பார்த்துப் பல்லைக் கடித்தான் படகுக்காரன்.

காஞ்சி வாலிபன், உதட்டைப் பிதுக்கினான், கையை விரித்தான். 'எனக்குத் தெரியுமா, நீ வேண்டுமென்றே செய்தாய் என்று? தவறிப் போட்டு விட்டாயாக்கும் என்று எடுத்து வந்து தந்தேன். போ, போ. உன் தங்கச்சி பாவம், கண் தெரியாதவள் தடுமாறிக் கொண்டிருக்கிறது.'

'இரு, மேரி இரு' கத்தினார் துரை படகை நோக்கி, 'இறங்காதே, கால் நனையும். நாற்காலி வருகிறது.'

கோட்டைக்குள் சென்றிருந்த சிப்பாய்கள் ஒரு பல்லக்குப் போன்ற நாற்காலியைக் கொண்டு வந்தார்கள். அதில் உட்கார்த்தி அழைத்து வரவேண்டும்.

'இவனையும் அழைத்துப் போங்கள். நீங்கள் மூன்று பேர் போதாது' காஞ்சிபுரத்தானைச் சிபாரிசு செய்தார்துரை.

'இவன் எவனோ அயலான். '

'ஆனால் யோக்கியமானவன். இவனையும் அழைத்துப் போவதானால், பாதிக் கூலியாவது உண்டு. இல்லாவிட்டால் அதுவும் இல்லை. '

வேண்டா வெறுப்பாகச் சேர்த்துக் கொண்டார்கள். படகை அடைந்ததும் காஞ்சிபுரத்தான்தான் அவளுக்குக் கைலாகு கொடுத்து, நாற்காலியில் இறக்கிக் கொண்டான். வாசனைத் தைலத்தின் நெடி. வழுவழுப்பான மேனி. அந்தக் குளிர்நாளில் கூடப் புழுக்கம் தாளவில்லை அவளுக்கு. காகித விசிறியை விரித்து விசிறிக்கொண்டாள்.

துரைக்குத் தெரிந்த தமிழ்கூடத் துரைசானிக்குத் தெரிந்திருக்காது. அந்தத் தைரியத்தில் மீன் படகுக்காரன், காஞ்சி புரத்தானிடம் உறுமினான். 'டேய், எங்கள் வேலையிலே தலை கொடுத்தாயில்லையா? இரு, இரு. கவனித்துக் கொள்கிறோம்."

“ரொம்ப நன்றி. இந்தப் பட்டணத்திலே எனக்கு யாருமே இல்லை. பயமாயிருக்கிறது. கவனித்துக் கொள்கிறேன் என்று நீங்கள் சொன்னது கடவுளே சொன்ன மாதிரி இருக்கிறது. '

முறைத்தான் படகுக்காரன். 'கிண்டலா பண்ணுகிறாய்?" தோளில் மட்டும் சுமை இல்லாதிருந்தால் கைகள் கலந்திருக்கும்.

கரை வந்தது. நாற்காலி இறங்கியது. பிரிந்திருந்த தம்பதிகள் போலும். காஞ்சிபுரத்தான் நாசூக்குத் தெரிந்தவன். முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

துரைசானி, சிப்பாயிடம் ஏதோ ஆங்கிலத்தில் சொன்னாள். அவன் காஞ்சிபுரத்தானுக்கு மொழி பெயர்த்துக் கூறினான்: 'அந்தப் பெட்டியில் விலையுயர்ந்த நகைகள் இருக்கிறதாம். அம்மாவுக்கு ரொம்பவும் சந்தோஷம். '

கோட்டைக்கு வெளியிலேயே இவ்வளவும் முடிந்து விட்டன.

கையும் காலும் துருதுருவென்று பறந்தன காஞ்சிபுரத்துக் காளைக்கு. பெரியபெத்து ஒரு யானை. ஆடி அசையும். அதன் திட்டப்படி நடப்பதானால் எத்தனை வருடமாகும், இந்தக் கோட்டைக்குள் நுழைய?

இப்போது வாய்ப்பு கைக்கெட்டியிருக்கிறது. பார்த்தோம், புகுந்தோம், பிடித்தோம், கொண்டு வந்தோம் என்று... அவன் பெயரென்ன? சிவசிதம்பரம்... அவனை மீட்டு வரவேண்டியது தானே? விடுதலையைப் பெற்றுக் கொண்டு, தாமரையை நாடிப் புறப்பட வேண்டியதுதானே?

ஒரு நல்ல சூழ்நிலை உருவாகியிருக்கிறது. ஆனால் எப்படி இதைப் பயன்படுத்திக் கொண்டு உள்ளே நுழைவது? வாசலில் குறுக்கும் நெடுக்குமாய்ப் பாரா கொடுத்தான் அவன்.

இடுப்போடு இடுப்பாக அணைத்துக் கொண்டு செல்லும் துரையையும் துரைசானியையும் பார்த்தான். ஏமாற்றத்துடன் பெருமூச்சு விடுத்தான்.

துரை நின்றார்.

சிப்பாயிடம் அவர் கேட்பது காஞ்சிபுரத்தானுக்கும் கேட்டது: 'பார்பர் தயாராயிருக்கிறானா?"

'பார்பரா? எதற்காக?' துரைசானி விழித்தாள்.

துரை கூறினார்: 'உன் தலைக்குத்தான். இந்தத் தேசத்து உஷ்ணமும் வெய்யிலும் உனக்குத் தாளாது. இப்போதே உஸ் உஸ்ஸென்று பெருமூச்சு விடுகிறாயே! நம் நாட்டிலிருந்து வருகிற பெண்கள் செய்யும் முதல் காரியம், சுத்தமாய் மொட்டை அடித்துக் கொள்வதுதான். சிப்பாயிடம் அவர் மீண்டும் தமிழில் விசாரித்தார்: "எங்கே பார்பர்?"

"எவனும் வரவில்லை சார்.'

'வரவில்லையா? ஏன்?"

'டவுனில் கலகம். அடிதடி சண்டை. வலக்கை சாதி யாருக்கும், இடக்கை சாதியாருக்கும் கைகலப்பு. நடுவில் மாட்டிக்கொண்ட நாவிதர்கள் பயந்து ஓடிவிட்டார்கள் ஊரை விட்டு. '

'சட் ஒரு பாளையக்காரரர் நியமித்திருக்கிறோம். அவர் கீழே ஐம்பது தலையாரிகள் வேறே. அப்படியிருந்தும் இந்தச் சாதிச் சண்டைகளை ஒழிக்க முடியவில்லை இவர்களால். சரி, சரி, பார்பர் கிடைக்காமல் என்ன செய்வது?"

"நான் இருக்கிறேன், துரை." காஞ்சிபுரத்தான் ஒரே எட்டில் கோட்டைக்குள் புகுந்து விட்டான். வாசல் காவலர்களால் கூடத் தடுக்க முடியவில்லை. 'கூந்தலை வெட்டி மொட்டை அடிக்க எனக்குத் தெரியும். கத்தி மட்டும் கிடைத் தால் போதும். '

துரை அவனை வியப்புடன் பார்த்தார். "எதற்கும் கை கொடுக்கிறாயே? சரி, சரி. வா, என்னோடு."

குதி போட்டு நடந்தான் காஞ்சிபுரத்தான்.

அழகிய சிறு தெருக்கள். வசதியான மச்சு வீடுகள். பட்டுத் திரைகள். பூங்கொத்துக்கள். மெழுகுவத்தி வெளிச்சத்தில் அசைந்தாடும் ஏசுநாதரின் படங்கள். சிலர் தனியே இருந்தார்கள்.

சிலர் குடும்பத்துடன் காற்றுக்காக வாசலில் நின்றிருந்தார்கள். துரைக்கு மரியாதையாக எழுந்தனர். பெண்மணிகள், சீமையிலிருந்து வந்தவளுடன் கைகுலுக்கினர். சிரிப்புக்கள். சிறு உபசாரங்கள்.

காஞ்சிபுரத்தானின் கண் ஒரு விநாடி நின்றிருக்குமா? ஊஹூம்.

சிவசிதம்பரம் எங்கே இருப்பார்? எப்படி அவரை அடைவது?

துரையின் பங்களா வந்தது. "இந்தா' என்று ஒரு சவரக் கத்தி எடுத்து வந்து தந்தார்.

துரைசானியை நாற்காலியில் உட்கார்த்தி வைத்தான் காஞ்சிபுரத்தான். எந்த வேலையையும் இழிவானதென்று அவன் கருதுவதில்லை. சின்ன வயசில் ஒரு நாவிதரின் மகன் அவனுக்குப் பள்ளித் தோழன். பலநாள் பார்த்துப் பார்த்து மனசுக்குள் ஒரளவு தெரிந்திருந்தது. அன்னை இந்த நேரத்தில் தன்னைப் பார்க்க நேர்ந்தால்? கடவுளை நினைத்துக் கொண் டான். கன்னத்தில் இரண்டு தரம் போட்டுக் கொண்டான். தண்ணிரைத் தலையில் தெளித்துத் தேய்த்தான். வேலையில் இறங்கினான்.

சில நிமிடங்கள்தான். சீமைத் துரைசானி, பழனிக்குச் சென்று திரும்பும் கிராமத்துப் பெண்ணாகி விட்டாள். "அழகிய கூந்தல்' என்று பாராட்டி, வருத்தம் தெரிவித்தான் காஞ்சிபுரத்தான். அவளுக்கோ கண்ணில் நீர்.

ஒரு முழு ரூபாயை அவன் கையில் வைத்தார் துரை. 'சீக்கிரம் வெளியேறிவிடு. இங்கேயே வேலையில் இருக்கும் இந்தியரைத் தவிர வேறு யாரும் இருட்டிய பிறகு இருக்கக் கூடாது. பிரஸிடென்ட்டுக்குத் தெரிந்தால் வம்பு."

காஞ்சிபுரத்தான் சலாமிட்டான். நன்றி தெரிவித்தான். 'இதோ போகிறேன்' என்றான்.

புறப்பட்டான்.

ஆனால் கோட்டையை விட்டு வெளியேறவில்லை. மரங்களின் இருண்ட நிழல்கள் பாதுகாப்புத் தந்தன. பதுங்கிப் பதுங்கி, பார்த்துக்கொண்டே சென்றான்.

## (6)

இருண்ட பகுதிகள் தாம்பூலம் வைத்து அழைத்தன. அடர்ந்த இடங்கள் ஆசையுடன் அணைத்தன. அடிமேலடி. அடிமேலடி.

மழைக்காலம். தவளைகளின் இடைவிடாத ங்ணங்ணப்பு. பேயெனத் துருத்தி நிற்கும் பீரங்கிகளின் சில்லென்ற எஃகு உரசல். காஞ்சிபுரத்தான் நின்றான்.

எல்லா இடங்களிலும் அமைதி.

நடு மண்டபத்தில்? அது பெரிய துரையின் விடுதி போலும். ரைட் ஆனரபிள் கம்பெனியின் பிரஸிடெண்ட், முக்கிய நிகழ்ச்சிகளுக்காகக் கூடுகிற அத்தாணி மண்டபம். யாரோ பெரிய விருந்தினர்கள் வந்திருக்கிறார்களோ? நடனமும் பாட்டும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஜில், ஜில், டங், டங். காஞ்சிபுரத்தான் கேட்டிராத வாத்தியங்கள்.

சந்துகள் எங்கே இருக்கும்? ரகசிய அறைகளை எங்கே அமைத்திருப்பார்கள்? கோட்டையை ஒரு வட்டமடித்தால் தெரிந்துவிடும். சுவரை ஒட்டினாற்போலவே நடந்தான்.

திகைத்து நின்றான் திடுமென.

வேட்டியை யார் பிடித்து இழுப்பது? யாருமில்லை முள் செடி. சே என்ன அச்சம் நமக்கு சிரித்துக் கொண்டே நடையை வீசினான்.

கோட்டையின் சுவரில் அவனுடைய வெற்று முதுகு ஒட்டிக் கொண்டது. சொற சொறத்த பாறைக் கல் சருமத்தைக் குத்தியது.

ஏதோ சத்தம். தலைக்கு மேல்தான். கோட்டைச் சுவரின் உச்சியில்.

நிமிர்ந்...

தொபீர். இரும்புச் சிலையா அந்த மனிதன்? என்னமாய் விழுந்தான் காஞ்சிபுரத்தான் மீது!

அப்பா முதுகில் பலமான அடி. காஞ்சிபுரத்தானின் விலாவே முறிந்தாற் போலாயிற்று. உருண்டு விழுந்ததில் குதித்தவனும் அவனோடு உருண்டான்.

காஞ்சிபுரத்தான் தூசியைத் தட்டிக் கொண்டான். தலையைச் சரிசெய்து கொண்டான். சிராய்ப்புகளைத் தடவிக் கொண்டான். நிமிர்ந்து பார்த்தான்.

மேலே விழுந்தவன் ஒரு சிப்பாய். கும்பினியில் வேலை பார்க்கும் தமிழ்ச் சிப்பாய்.

கப்பென்று காஞ்சிபுரத்தானின் கையைப் பிடித்தான் அவன். தரதரவென்று இழுத்துச் சென்றான்.

மேலும் இருட்டான இடம். கடற்கரை ஓரம் போலும். அலை ஓசை கேட்டது. கோட்டை உயரத்துக்கு இரண்டொரு அலைத் திவலைகள் எழும்பித் தெறித்தன.

காஞ்சிபுரத்தானின் முகத்தருகே குனிந்தான் சிப்பாய். ஹாவ் என்று மூச்சை வெளியிட்டான். கேட்டான்: 'சாராய நெடி அடிக்கிறதா?''

'எட்டுக் காதத்துக்கு." காஞ்சிபுரத்தான் மூக்கைத் துடைத்துக் கொண்டான்.

'அப்படியானால் தொலைந்தேன். சிப்பாய் காஞ்சி புரத்தானின் கையைப் பிடித்துக் கொண்டான், கெஞ்சுதலாக; 'மன்னாரு, நீ தான் என்னைக் காப்பாற்றணும்.'

சரிதான். சரியான போதை. ஆள் அடையாளம் கூடத் தெரியவில்லையே?

'என் பேர் அதுவல்ல. '

'பார்த்தாயா, பார்த்தாயா? உதவி கேட்டவுடனேயே, உன் பேரே வேறு, உனக்கும் எனக்கும் சினேகிதமே கிடை யாது என்று நழுவுகிறாயே? நியாயமா?" கையை விட்டு விட்டு, காஞ்சிபுரத்தானின் காலையே பிடித்துக் கொண்டான் அந்தக் குடிகாரச் சிப்பாய். 'மன்னாரு, உனக்கே தெரியும். பெரிய துரை எத்தனை கண்டிப்பாய் உத்தரவு போட்டிருக்கிறாரென்று. நேற்று என்னடாவென்றால், சாராயக் கடையிலே இந்த உடையை அடமானம் வைத்துக் குடித்துவிட்டு வந்தேன். என் மாதிரி கம்பெனி மானத்தை வாங்குகிறவர்களுக்குக் கடுமையாய்த் தண்டனை வைத்திருப்பதுகூட எனக்கு மறந்துவிட்டது. மன்னாரு, இன்றைக்குப் பார், உடையை மீட்டு வரலாமென்று போனேன், லேசாய்த்தான் போட்டேன். நேரம் வேறே ஆகிப்போச்சு. அதனால்தான் சுவரேறிக் குதித்தேன். மன்னாரு, மன்னாரு... நீதான்...'

"நான் தான்?"

'என் ட்யூட்டியை நீ தான் பார்த்துக்கணும், மன்னாரு... அடடே... உன் உடையெல்லாம் எங்கே? சலவைக்கு அனுப்பி யிருக்கிறாயா? பரவாயில்லை... இந்தா...' மளமளவென்று தன் உடைகளைக் களைந்தான் அவன். குவியலாகச் சுருட்டி, காஞ்சிபுரத்தானின் கையில் திணித்தான். 'சீக்கிரம், சீக்கிரம். '

காஞ்சிபுரத்தான், சீருடையை மாட்டிக் கொண்டான். கால்சராய் முட்டியைப் பிடித்தது. இடுப்புப்பட்டை தொள தொளத்தது. தொப்பி சரிந்து விழுந்தது. உடைவாள் நடையைத் தடுக்கிற்று.

'போ, போ.

"ஆமாம், எங்கே எனக்கு வேலை...'

'நீ பெரிய கிண்டல்காரன், மன்னாரு. நீயும் நானும் மாற்றி மாற்றிப் பார்க்கிற வேலை எதுவென்று நானா சொல்லணும்? போ, போ...'

சிப்பாய் போய்விட்டான்.

காஞ்சிபுரத்தான் நடந்தான்.

"பாண்டியா! எங்கேயடா பராக்குப் பார்த்துக் கொண்டே போகிறாய்?' புதிய குரல்.

சமையலறைப் பகுதி. ஆனால் மூன்றாம் ரக, நாலாம் ரக நபர்களுக்குத் தயாரிக்கப்படும் பகுதி மாதிரி இருந்தது.

வெளிச்சம் பற்றாக்குறை, ஈரம் அபரிமிதம். கூளங்கள் கொள்ளை. வடித்த கஞ்சியின் பிசுக்குகள். மீனின் மிச்சங்கள்; காய்கறித் தோல்கள்.

குசினிக்காரக் கிழவன் ஒற்றைக் கண்ணன். அவன் தான் கூப்பிட்டவன். ட்யூட்டி, ட்யூட்டி என்றானே, அது இங்கே தானா!

'டேய் பாண்டியா, ஏண்டா இப்படி அக்கிரமம் பண்ணுகிறாய்? ஒரு நாளைப் போல ஊர் சுற்றணுமா?"

காஞ்சிபுரத்தான், 'இல்லை... வந்து... ' என்று சமாளிக்கப் பார்த்தான்.

'டேய், தெரியுமடா எனக்கு. டவுனில் பன்றிகள் ஜாஸ்தி, பிடித்துத் தந்தால் பணம் உண்டு என்று தண்டோரா போட்டானில்லையா? கிளம்பி விட்டாய் காசு சம்பாதிக்கலாம் என்று அது தானே? மனுசன் பாவம் சாப்பாடு வரவில்லையே என்று காத்துக்கொண்டிருப்பாரே. அதை நினைக்க வேண்டாம்? போடா எடுத்துக்கொண்டு!"

பல தட்டுக்களில் சாப்பாடு வைக்கப்பட்டிருந்தது. முகத்தைக் காட்டவில்லை காஞ்சிபுரத்தான். சட்டென்று ஒரு தட்டை எடுத்துக் கொண்டான்.

புறப்பட்டவனைத் தடுத்தது குசினிக்காரனின் கரம். சற்றுமுற்றும் பார்த்துவிட்டு, தணிந்த குரலில், “ஏண்டா, நீயும் நானும் தின்கிறதைப் போய் அவருக்கும் கொடுக்கிறேன் என்கிறாயா? சீ, வையடா அதை. இந்தா, இதை எடுத்துப் போ," என்று அலமாரி மறைவிலிருந்து வேறொரு சாப்பாட்டுத் தட்டைத் தந்தான் கிழவன்.

மூடி எடுத்துக் கொண்டான். வெளி நடந்தான்.

யாருக்குக் கொண்டுபோய்க் கொடுப்பது இதை? பேசாமல் சாக்கடையில் கொட்டி விடலாமா? சே, சே. யாரோ ஒருவர் பட்டினியாய்க் காத்திருக்கிறாராமே?

குறுகுறுவென்று ஓர் அறைக்குள்ளிருந்து வெளிவந்தது ஒரு பெண் குழந்தை. காஞ்சிபுரத்தானைத் தாண்டி ஓடியது. எவ்வளவு சுருட்டையான, அழகான தலை மயிர் எந்தத் துரையின் செல்வமோ? பொல்லாத வால். எல்லோரும் தூங்குகிற நேரத்தில்கூட இது விளையாடிக் கொண்டிருக்கிறதே!

பந்தை உருட்டிக் கொண்டே ஓடியது குழந்தை. ஒரு பெரிய தொட்டி. வழிய வழியத் தண்ணிர். எம்பிய பந்து எகிறி விழுந்து மிதந்தது அங்கே.

குழந்தை கையை நீட்டியது. எட்டவில்லை. ஒரு கல்லை எடுத்து எறிந்தது. பலனில்லை. நட்ட நடுவில் மிதந்து கொண்டிருந்தது பந்து.

தொட்டியில் தளும்பியது தண்ணிர். குழந்தையின் கண்ணிலும்தான்.

ஒரெட்டில் காஞ்சிபுரத்தான் அதை அணுகினான். பந்தை எடுத்துத் தந்தான்.

குழந்தைக்கு ஒரே மகிழ்ச்சி.

கவுன் நுனிகளைப் பிடித்துக் கொண்டு, முழங்காலை வளைத்து, குனிந்து நிமிர்ந்தது. "தாங்ஸ், ' என்றது.

கண்கொட்டாமல் அதைக் கவனித்துக் கொண்டிருந்தான் காஞ்சிபுரத்தான். அதை அப்படியே திருப்பிச் செய்தான். ஆனால் அவ்வளவு கச்சிதமாகக் குனிந்து நிமிரத் தெரியவில்லை.

பூக்களா உதிர்ந்தன? இல்லை. குழந்தை அப்படிச் சிரித்தது. "சாப்பாட்... சாப்பாட்..." கொச்சைத் தமிழை எங்கே தான் கற்றிருந்ததோ? தட்டைக் காட்டி, உண்ணுகிற மாதிரியும் சாடை செய்தது.

'யார்கு - சாப்பாட் - தெர்யும் - என்கு - தெர்யும் தெனம் பாக்றேன்!"

'யார்கு?' காஞ்சிபுரத்தானுக்கு ஒரே ஆவல்.

'காட்றேன் - வா - வா. '

குழந்தை, அடுத்த தெருவிலிருந்த முதல் வீட்டைக் காட்டியது. 'அப்ஸ்டேர்ஸ்... மச்சு மேலே."

பந்தைத் தட்டிக்கொண்டே திரும்ப ஓடிவிட்டது குழந்தை.

காஞ்சிபுரத்தான் அந்த வீட்டுக்குள் நுழைந்தான். படியேறினான். சாப்பாடு தரவேண்டிய இடம் தெரிந்துவிட்டது. ஓசைப்படாமல் வைத்துவிட்டு, ஓசைப்படாமல் வெளியேறி விட வேண்டும்.

அறைக் கதவைத் திறந்தான். இருட்டாயிருந்தது அந்தப் பகுதி. கையில் பட்ட ஒரு மேஜைமீது தட்டை வைத்தான். திரும்ப நினைத்தான்.

'யாரது? நில். '

இரும்புக் குரல். வெள்ளைக்காரனுடையதைப் போன்ற செருக்கு. அழுத்தம். ஆனால் இவ்வளவு சுத்தமாகத் தமிழை உச்சரிக்கிறாரே? அந்தப் பச்சோந்திப் பாதிரியாரோ ஒருவேளை?

'நீ புதியவனா இங்கே?'

சரி, அகப்பட்டுக் கொண்டோம் கடைசியில்.

'திருட்டுத்தனமாய் நுழைந்தாயா?"

வெளியே நிலா சற்று எட்டிப் பார்த்தது. திறந்த முற்றத்தில் வெளிச்சம் சிந்தியது.

குரல் வந்த திசையைக் கூர்ந்து கவனித்தான். ஏதோ கம்பிகள் போல் தெரிகிறதே? கையால் ஸ்பரிசித்தான். கனத்த இரும்புப் பட்டங்கள். சங்கிலிகள். ஒரு பூட்டு.

நெஞ்சு படபடத்தது. ஆர்வம். அவசரம். அப்படியும் இருக்குமோ?

ஆமாம். இது ஒரு சிறைதான். பூட்டி வைத்திருக்கிறார்கள். உள்ளே ஒரு மெலிந்த உருவம். தளர்ந்த தோற்றம். கண்ணில் ஆழமும் ஒளியும். தேகம், வெறும் கூடு. ஆனால் குரலில் உறுதி, நிமிர்வு.

'ஐயா, நீங்கள்தான் சிவசிதம்பரமா?" கேட்டான் காஞ்சிபுரத்தான்.

"ஆமாம், நீ யார்? "

பதில் தரவா அவகாசம் இருக்கிறது? மச்சின் ஒரு மூலைக்கு ஓடி, கீழே பார்த்தான். யாரையும் காணோம். மறு முனைக்கு ஓடி ஆராய்ந்தான். அங்கும் எவருமில்லை. திரும்ப விரைந்து வந்தான்.

பூட்டு மாட்டப்பட்டிருந்த சங்கிலி பலமானது. ஆட்ட ஆட்ட, பயங்கரமான ஓசைதான் வெளிப்பட்டது. சுற்று முற்றும் தேடினான். பீரங்கிக்கு அடிக்கிற இரும்புக் குண்டு ஒன்று கிடைத்தது. பட் பட். உயிர் நாடி பார்த்து நாலு தட்டுத் தட்டினான். விட்டுக் கொண்டது வாய். சங்கிலியை உருவி, கழற்றிப் போட்டான்.

கரகர. கீச். கதவு திறந்து கொண்டது. "நேரம் அதிகமில்லை. வாருங்கள் சீக்கிரம் ஊம், ஊம்!"

காஞ்சிபுரத்தானின் காரியங்கள் அனைத்தையும் ஆரம்ப முதல் மௌனமாக நோக்கியவாறு இருந்தார் சிவசிதம்பரம். அவர் அசையவில்லை, நகரவில்லை.

'வாருங்கள். ' காஞ்சிபுரத்தான் அவருடைய மெலிந்த கையைப் பற்றி இழுத்தான்.

அங்குலமும் நகராமல் திடமாக நின்றார் அவர்.

சிவசிதம்பரத்தின் சிரிப்பு மட்டுமல்ல, பேச்சும் இடியாயிருந்தது காஞ்சிபுரத்தானுக்கு. "நான் விடுதலையை இப்போது நாடவில்லை. அப்படி நாடும்போது, உன் தயவு எனக்குத் தேவையுமிருக்காது. எனக்கு உதவி செய்ய இங்கேயே என் ஆடகள் இருக்கிறார்கள். '

குசினிக்காரக் கிழவன் உயர்ந்த சாப்பாட்டைக் கைதிக்கு எடுத்துத் தந்த மர்மம் இதுதானா?

'ஏன் தம்பி, என்னை விடுவிப்பதிலே உனக்கென்ன அவ்வளவு அக்கறை?' சிவசிதம்பரம் கேட்டார்.

'பெரியபெத்துவின் கட்டளை."

'ஓ! பெரியபெத்து அனுப்பி நீ வந்தாயா? சரிதான். என்னை ஏன் அவர் விடுவிக்க ஆசைப்படுகிறார் தெரியுமா?"

'தெரியாது."

'தன் மாப்பிள்ளையாக ஆக்கிக் கொள்ள.'

'தங்கமாய்ப் போயிற்று. '

'எனக்கு அந்த வயதும் தாண்டிவிட்டது. விருப்பமுமில்லை. பரங்கிக்காரனுக்குப் பல்லாண்டு பாடுகிறவர் அவர். தாளத்தை நான் தூக்குவேன் என்று மனக்கோட்டை கட்டுகிறார். அப்படியில்லை, தம்பி, அப்படியில்லை."

குறுக்கும் நெடுக்குமாகச் சிறையை அளந்தன. சிவசிதம்பரத்தின் கால்கள். அவர் சொன்னவை பல. காஞ்சிபுரத் தானுக்குப் புரிந்தவை சில.

மதுரை மங்கம்மா, செஞ்சி ராஜாராம், மராட்டிய யேசுபாய், ராமனாதபுரம் கிழவன் சேதுபதி - இவர்களெல்லோரும் அபாயமென நினைத்திருப்பது, டெல்லி பாதுஷாவின் ஆட்சியைத் தான். உண்மை நிலை அப்படியல்ல. அவுரங்கசீப்பின் ஆட்சியோடு முகலாய சாம்ராஜ்யம் அஸ்தமித்து விடுவது நிச்சயம். பாரத தேசத்துக்குப் புதிய பகைவர்களாகக் கிளம்பியிருப்போர், இந்தப் பரங்கிக்கார்கள். அதற்கு அஸ்திவாரம், இந்தச் சென்னைப் பட்டணத்து செயின்ட் ஜார்ஜ் கோட்டை வர்த்தகர் களாக வந்திருப்பவர்கள் வேரூன்றப் பார்ப்பதைத் தடுத்தாக வேண்டும். சிவசிதம்பரத்தின் லட்சியம் அதுதான். கோல்கொண்டா சுல்தானின் பிரதிநிதியான லிங்கப்பா என்பவன், கொஞ்ச காலம் முன்னால் வரை இந்தப் பரங்கியரின் கண்ணில் விரலை விட்டு ஆட்டி வந்தான். ஆனால் அவனால் நன்மை விளையுமென்று சிவசிதம்பரம் எதிர் பார்த்தது வீணாயிற்று. கும்பினியாரைத் துன்புறுத்துவதாக நினைத்துக் கொண்டு, சென்னைக்கு வரும் உணவு தானியங்களைத் தடுப்பதும், கும்பினிக்கு வேலை செய்யும் ஆட்களை மிரட்டுவதும் லிங்கப்பாவின் வழக்கம். அதன் விளைவு: கும்பினியானுக்குக் கஷ்டமல்ல; சென்னைப் பட்டணத்தில் வாழும் ஜனங்களுக்குத்தான் துன்பம். லிங்கப்பா ஒரு போக்கிரி என்று பெயரெடுத்துக் கொள்வதிலேதான் அது முடிந்தது.

சொல்லி முடித்தார் சிவசிதம்பரம்: 'நான் நேரிடையாகவே இந்தக் கோட்டைக்கு வேட்டு வைக்கப் போகிறேன். என்னால் தன் வியாபாரச் சலுகைகள் போய்விடப் போகிறதே என்று பெரியபெத்துவுக்கு நடுக்கம். மகள் தெய்வநாயகியை வலுக்கட்டாயமாக எனக்குக் கொடுத்து, ஊர் பேர் தெரியாத இடத்துக்கு என்னை அனுப்பிவிடலாமென்று பார்க்கிறார். அது நடக்கப் போவதில்லை."

காஞ்சிபுரத்தான் கேட்டுக் கொண்டான். 'ஐயா, நீங்கள் பெரியபெத்துவுக்காக வராவிட்டாலும் எனக்காகவாவது தப்பித்து வரத்தான் வேண்டும். எனக்கே செய்கிற உதவி அது."

'உனக்கு உதவியா?" சிவசிதம்பரம் ஆச்சரியப்பட்டார். "ஆமாம், ஐயா. உங்களை நான் விடுவித்தால்தான் எனக்கு விடுதலை. எனக்கு விடுதலை கிடைத்தால்தான் என் காதலி உயிரோடு இருப்பாள்.'

'யார் அவள்?"

“தாமரை." சுருக்கமாகத் தன் கதையைச் சொன்னான் காஞ்சிபுரத்தான்.

“தாமரை" சிவசிதம்பரத்தின் புருவங்கள் ஏறியிறங்கின. விரல்கள் சிறைக்கம்பியைத் தட்டின. 'தாமரை... அந்தப் பெயரை... ஆமாம். சாயந்தரம் யாரோ பேசிக் கொண்டார்கள்...'

'தாமரையைப் பற்றியா? எங்கே? எப்போது?" சிவ சிதம்பரத்தின் மெலிந்த உடல், காஞ்சிபுரக் காளையின் கடினப் பிடியில் குலுங்கியது.

அவர் சொன்னார்: "சிப்பாய்கள்தான். வேலூர் வழியாக வந்தார்களாம் சென்னைப்பட்டணத்துக்கு. அந்தப் பாதையில் தீவட்டிக் கொள்ளைக்காரர்கள் அதிகமாயிருந்ததால், எதிர்ப்பட்டவர்களிடம் எச்சரித்துக் கொண்டே வந்தார்களாம், அந்த வழியாகப் போகவேண்டாமென்று. இரண்டு குதிரை வீரர்கள் ஒரு பெண்ணை அழைத்துப் போய்க்கொண்டிருந்தார்கள். அவர்களிடமும் சொன்னோம். அந்தப் பெண் ரொம்ப அழகி. தாகத்துக்குத் தண்ணிர் கேட்டாள். கொடுத்தேன். தாமரை என்று பெயர் சொன்னாள் என்று ஒரு சிப்பாய் இன்னொரு சிப்பாயிடம் விவரித்துக் கொண்டிருந்தான்...'

'வேலூர் பாதையிலா இப்போதே நான் போக வேண்டும்... '

"இரு, இரு. அந்தச் சிப்பாய் எனக்குத் தெரிந்தவன்தான். விசாரிப்போம். உன் காதலிதானா அவள். அல்லது...'

சிவசிதம்பரத்தின் பேச்சு தடைபட்டது.

'உஸ்! யாரோ மச்சுப்படி ஏறி வருகிறார்கள். சீக்கிரம் ஒளிந்துகொள்.'

காஞ்சிபுரத்தான் இங்குமங்கும் பார்த்தான். நிலா உச்சி வானுக்கு வந்துவிட்டது. எங்கெங்கும் தகத்தகாயமான வெளிச்சம். எப்படி மறைவது?

சரக்கென்று அவனை உள்ளே இழுத்தார் சிவசிதம்பரம். 'இந்தச் சிறைதான் பத்திரமான இடம். அந்த இருட்டான மூலையில் பதுங்கிக்கொள்.'

காஞ்சிபுரத்தான் ஒளிந்தான். சிவசிதம்பரம் உள்ளிருந்த படியே கதவைச் சாத்தினார். கம்பிகளுடே கையை நீட்டிச் சங்கிலியையும், பூட்டையும் மாட்டி அழுத்தினார்.

இரண்டு சிப்பாய்கள் வந்தார்கள். ஒருவன் கதவைத் திறந்தான். சிரித்தான்.

'இங்கே இரண்டு மடையர்கள் இருக்கிறார்கள், அண்ணே!'

திக்கென்றது காஞ்சிபுரத்தானுக்கு. முதல்வன் தொடர்ந்தான்: "ஆமாம், அண்ணே. சாப்பாடு எடுத்து வந்தவன் ஒரு மடையன். சரியாய்ப் பூட்டாமல் போயிருக்கிறான். இந்த ஆள் ஒரு மடையன். தப்பித்து ஓடாமல் இருக்கிறான். '

காஞ்சிபுரத்தானுக்கு மூச்சு வந்தது.

'எங்கே வந்தீர்கள்?" சிவசிதம்பரம் கடுமையாகக் கேட்டார். "விசாரணைக்குக் கூட்டிவரச் சொன்னார்களாக்கும்?உங்கள்

துரைமார்களுக்குத்தான் நள்ளிரவில் பல பொழுது போக்குகள் உண்டே? கைதிகளை விசாரித்தால்தான் நேரம் நகருமா? "

'இந்தாப்பா, நீ எப்பவுமே பெரிய சண்டைக்காரன். உன்னோடு வாயாட எங்களாலே முடியாது. வா, வா. துரை அழைத்துக் கொண்டு வரச் சொன்னார்."

சிவசிதம்பரம் வெளியேறினார். ஆட்கள் கதவை மீண்டும் பூட்டிவிட்டு அகன்றார்கள். நிசப்தம் நிலவியது.

குபிரென்று எழுந்தான் காஞ்சிபுரத்தான். கதவை இழுத்தான். வரவில்லை.

இறுகச் சாத்தியிருந்த கதவு இளித்தது. சிக்கெனப் பிடித் திருந்த பூட்டு சிரித்தது.

## (7)

துருவேறிய கம்பிகளைப் பிடித்துப் பிடித்துக் கைகள் சிவந்து விட்டன. கம்பிகளின் இடுக்கில் முகத்தைப் பதித்துப் பதித்து நெற்றியும் கன்னமும் விண்விண்ணென்று தெறித்தன.

சிவசிதம்பரம் எப்போதுதான் திரும்பி வருவார்?

காஞ்சிபுரத்தானுக்கு இருக்கை கொள்ளவில்லை. என்ன கட்டாயச் சிறைவாசம் இது. வெளித் தாழ்வாரத்தில் செருகியிருந்த எண்ணெய்ப் பந்தமும் அவன் நம்பிக்கையும் ஒன்றாயின. இரண்டிலும் ஒளி குன்றுகிறதே!

அப்பாடா! யாரோ வருகிறார்கள். கீழே நடமாட்டம் கேட்டது.

இல்லை. சிவசிதம்பரமல்ல. வேறு இரண்டு சிப்பாய்கள் பேசிக்கொண்டே செல்கிறார்கள்.

“என்ன, தாண்டிப் போகிறாயே! அந்தப் புரட்சிக்காரன் அறைக்கும் சேர்த்துத்தானே ரோந்து?' என்றான் ஒருவன்.

'யார், சிவசிதம்பரத்தைச் சொல்கிறாயா? ஒரே இடத்திலே வைக்கக் கூடாதென்று கொஞ்சம் முன்னாடி மாற்றி விட்டார்களே, உனக்குத் தெரியாதா? இப்போது ஆசாமியை வடக்குக் கோடிக்குக் கொண்டு போய்விட்டார்கள்."

சிவசிதம்பரம் இங்கே திரும்ப மாட்டாரா? அப்படி யானால் - இந்தக் கதவு மறுபடி திறக்கவே திறக்காதா?

அவன் நெஞ்சு உரம் கொண்டது. கையில் திமிர் மண்ட, அறிவு தடம் கண்டது.

முதல் தடவை பூட்டை உடைக்கப் பயன்பட்ட பீரங்கிக் குண்டு இன்னும் அதோ கிடக்கிறதே?

கையை நீட்டி அதைப் பற்ற முயன்றான். தோள்வரையில் எக்கியும் தொட முடிந்ததே தவிர, கவ்வ முடியவில்லை. வரக்வரக்கென்று இழுக்கப் பார்த்ததில், விரல் நுனிகளுக்கு எரிச்சல்; நக முனைகளுக்கு நோவு. கடைசி முயற்சியில் -

அந்த இரும்புக் குண்டு வழுக்கியது. கோலி விளையாடினாற் போல் எதிர்த்திசைக்கு ஓடியது. தாழ இருந்த நிலைப்படி அதைத் தடுக்காமல் வழிவிட்டது. டொக் டொக்கென்று ஓசை. மரத்தாலான மச்சுப்படியில் விழுகிறது. பிறகு சரசர வென்று உருளும் ஓசை, மீண்டும் அடுத்த படியில் விழும் சத்தம். நல்லவேளை, உருளுவது நின்றுவிட்டது.

மொத்தம் பதினெட்டு அல்லது இருபது படி இருக்குமே? அவ்வளவிலும் அந்த இரும்புக் குண்டு விழுந்து உருளும் ஓசை, யார் காதிலாவது விழுந்தால்?

விழுந்தே விட்டது. நிச்சயமாய், எவரோ படியேறி வரும் சத்தம்தான் அது. ஆனால் வேகமாய் வரவில்லை. மெல்லப் பூப்போல வருகிறார்கள்.

இருட்டு ஒரமாக மறைய முயன்றவனுக்குச் சிரிப்பு வந்தது. சிரித்தவாறே கிராதியினருகே திரும்பினான்.

படியேறி வந்தது சிப்பாயல்ல; காவலாளல்ல; சிவ சிதம்பரமுமல்ல. சற்று முன் தண்ணிர்த் தொட்டியருகே சினேகம் செய்து கொண்டதே - அதே குழந்தைதான்.

'பந்து - நீ - போட்டியா?" என்றது அது. 'நீ நல்லவன் - ஏன் - ஜெயிலில் போட்டாங்கோ?"

'நீயும் நல்லவள் தானே, கண்ணே? அந்தப் பந்து நான் தான் போட்டு விட்டேன். எடுத்துக்கொண்டு வந்து தாயேன்,' என்றான் காஞ்சிபுரத்தான். பட்டுப் போன்ற மோவாயை வருடியது அவன் கரம்.

"ஒ." குதித்தோடிக் கொண்டு சென்றாள் குழந்தை. போன சுருக்கிலேயே திரும்பினாள் வெறும் கையோடு.

'ஊஹூம்.' மாதுளை உதட்டைப் பிதுக்கினாள் காஞ்சி புரத்தானைப் பார்த்து. "ரொம்ப ரொம்ப - வெய்ட் - தூக்க முடியலே-'

காஞ்சிபுரத்தான் பாதி கெஞ்சினான். பாதி கொஞ்சினான்: 'நம்மால் முடியாதது என்று எதுவுமே இருக்கக் கூடாது, கண்ணே மறுபடியும் போய்ப் பார்: முயற்சி செய்: நிச்சயமாய் இந்தத் தரம் முடியும். போ, போ. '

திரும்பவும் ஒடிய குழந்தை, மச்சுப் படியண்டை நின்றாள். "நான் போய் - அப்பா - கூப்பிட்றேன். அவர் தூக்குவார்...'

'இந்தா, இந்தா வேண்டாம்! யாரையும் கூப்பிடாதே!'

பயனில்லை. குழந்தை போய்விட்டாள். குழந்தையை ஏமாற்றி விடலாம். ஆனால் வரப்போகிற அதன் தகப்பன் - சிப்பாயோ, அதிகாரியோ? எப்படி அவனிடமிருந்து தப்புவது?

'என்ன சிவசிதம்பரம், புத்தகம் ஏதேனும் கேட்டனுப்பினாயா? என் பெண் வந்து ஏதோ கேட்கிறாளே!'

''வணக்கம் ஐயா...' வெளிச்சத்துக்கு வந்து முகத்தைக் காட்டினான் காஞ்சிபுரத்தான். 'தங்கள் செல்லப்பிராணி சௌக்கியமா? மோஸஸ் - என்ற அந்தப் பச்சோந்தி?"

பாதிரியாரின் முகத்தில் வியப்பின் முத்திரை. ''என்ன ஆச்சரியம்!"

'எனக்குக் கூடத்தான் ஐயா, ஆச்சரியம். பாதிரியார்களுக்கு ஏது குடும்பமும் குழந்தையும்?'

'நான் கத்தோலிக்கச் சாமியார் அல்ல. இங்கிலாந்திலிருந்து வந்திருக்கிற பிராடெஸ்டெண்ட் பாதிரியார். என் சீடனாக நீ ஆனபிறகு அதையெல்லாம் விளக்குகிறேன். உன் கதையைச் சொல்லு முதலில். போடக்கூடாத உடை இருக்கக் கூடாத இடம் செய்யக் கூடாத முயற்சி! இதற்காகத்தான் பட்டணத்துக்கு வந்தாயா?"

'தப்பு எதுவும் பண்ணிவிட்டுச் சிறைக்கு வரவில்லை, ஐயா,' என்று உடனேயே தெரிவித்தான் காஞ்சிநகர் இளைஞன்.

"அது புரிகிறது. தீய உள்ளத்தினால் குழந்தையைக் கவர முடியாது. என் குழந்தையின் அன்பைப் பெற்ற நீ நல்லவன்தான்."

'நன்றி ஐயா!' தன் கதையைச் சுருக்கமாக விளக்கினான் காஞ்சிபுரத்தான்.

பாதிரியார் முறுவலித்தார். 'காதலுக்காக உயிரைக் கொடுத்தவனையும், சாம்ராஜ்யத்தைத் துறந்தவனையும் உலகம் கண்டதுண்டு. ஆனால் காதலுக்காக அடிமையாகி முதுகிலே சூடு

போட்டுக் கொண்ட முதல் ஆள் நீதான். அது போகட்டும், சிவசிதம்பரம் திரும்புகிற வரையில் உனக்குச் சிறைவாசம் தானா?'

'அவர் இங்கே திரும்பவே மாட்டாராம். வேறிடத்துக்கு மாற்றிவிட்டார்களாம். பேசிக் கொண்டு போனார்கள். '

'என்ன, என்ன! இங்கே திரும்பி வர மாட்டாரா?' பாதிரியாரின் முகத்தில் ஏனிந்தக் கலவரம்? 'தம்பி, அதோ அந்த இருட்டு மூலையில் இருக்கிற கல்லை நகர்த்து.'

காஞ்சிபுரத்தானுக்குத் திகைப்பு. 'ஏன், என்ன அங்கே?'

'நகர்த்து, சொல்கிறேன். '

இருண்ட மூலைக்குச் சென்றான் காஞ்சிபுரத்தான். சுவரில் சற்றே துருத்திக் கொண்டிருந்த ஒரு கல்லை அசைத்தான். பெயர்த்தான். அவன் அதுவரை கண்டிராத பொருள்கள் சில அவன் கையில் தட்டுப்பட்டன.

'அவைதான்! அவைதான் கொண்டு வா! இப்படிக் கொடு!"

என்ன இதெல்லாம் ? நூதனமான, விந்தையான பொருள்கள் அழகுக்கா, உபயோகத்துக்கா, அழிவுக்கா? என்ன சாதனங்கள் இவை?

'புத்தகங்கள் தம்பி, இதெல்லாம். எழுத்தாணியால், ஓலைச் சுவடிகளில் நீங்கள் எழுதுகிறீர்களே அவைகளையே இங்கே அச்சடிக்கிறோம். வெகு காலத்துக்குப் பத்திரமாய் இருக்கும். இவை காணாமற் போயிருந்தால்...' மார்போடு அணைத்துக் கொண்டு பேசினார் அவர்.

புத்தகம்? அச்சு? புரியாவிட்டாலும், புதுமையாயிருந்தது காஞ்சிபுரத்தானுக்கு. "கொஞ்சம் இப்படிக் கொடுங்கள் -' என்று வாங்கிப் பார்த்தான். ஆம். தமிழ் எழுத்து ஆனால் ஓலையில் இல்லை. 'ஐயா, இதை நீங்களே செய்தீர்களா?"

"ஆமாம். ஐரோப்பாவிலிருந்து அச்சு எழுத்து வரவழைத்துச் செய்தேன். தரங்கம்பாடியில் ஓர் அச்சகம் ஏற்படுத்தக்கூட முயற்சி பண்ணி வருகிறார்கள். இன்னும் பத்து பதினைந்து வருடங்களில் இங்கேயே தமிழ் நூல்களை அச்சிட்டுக் கொள்ளலாம். நாலைந்து புத்தகங்களும் அவரது அங்கியில் பத்திரமாகச் சுருட்டப்பட்டன. "இப்படிப்பட்ட பொக்கிஷங்களை இழக்கவிருந்தேன், பார் ரொம்ப நன்றி, தம்பி.'

'சிவசிதம்பரம் ஏன் பதுக்கி வைத்திருந்தார் இவைகளை ? ' "

பாதிரியார் திறந்த முற்றத்துக்குச் சென்றார். எட்டிப் பார்த்தபின் திரும்பினார். குரல் தாழ்ந்திருந்தது. 'அவன் புரட்சிக்காரக் கைதி. நான், அவனுக்கு எதிர்முகாமில் இருப்பவன். தமிழ் ஆராய்ச்சியும், தமிழ்ப்பற்றும் எங்களைப் பிணைத்திருக்கின்றன. ஆனால் அவனுடன் எவ்வித நட்பும் கொள்ளக்கூடாதென்று அதிகாரிகள் எனக்குத் தடை விதித் திருக்கிறார்கள். அதனால்தான் வெடிகுண்டைக் காட்டிலும் ரகசியமாகக் கொடுத்து வாங்க வேண்டியிருந்தது. மறுபடியும், ஒரு முறை உனக்கு நன்றி. வருகிறேன் தம்பி.'

படியிறங்கிச் சென்றுவிட்டார் பாதிரியார்.

தாளைப் புரட்டிய விரல்களும் அச்செழுத்தைப் பார்த்த கண்களும் அந்தப் புதுமையான அனுபவத்திலேயே மூழ்கியிருந்தன. சில விநாடிகள் கழித்தே காஞ்சிபுரத்தான் விழிப்புப் பெற்றான்.

அடடா! அந்த இரும்புக் குண்டைக்கூட எடுத்துத் தராமலே அல்லவா போய்விட்டார்?

உடனே இன்னொரு நினைவு.

அந்தப் புத்தகங்களை எடுத்த இடத்தில், சுவரில் பதித் திருந்த கல் எப்படி அவ்வளவு சுலபமாகப் பெயர்ந்து வந்தது?

தடவிப் பார்த்தான். தரையிலிருந்து சாண் உயரத்தில் அந்தத் துவாரம் இருந்தது. இன்னொரு கல்லை மூச்சுப் பிடித்து இழுத்தான். கையோடு வந்தது. அதைத் தொடர்ந்து மற்றொரு கல். பிறகு மூன்றாவது!

திகைப்பு, பிரமிப்பு, திகில்.

கையை உள்ளே நுழைத்துப் பார்த்தான். தோள்வரையில் கை சென்றது. அப்படியானால்? அதற்கு மேலும் பொந்து செல்கிறதா? காலை உள்ளுக்குள் நுழைத்துப் பார்த்தான். ஒரு படிக்கட்டுத் தெரிந்தது.

மேலும் மூன்று கற்களைப் பெயர்த்தான். ஆள் நுழைய இடம் கிடைத்தது. தவழ்ந்த நிலையில் உட்புகுந்தான். சாக்கடைப் பாதைபோல, குறுகலான வழி சென்றது. சுரங்கத்துக்கே உரிய வெப்பத்தினால் உடல் வியர்த்தது. சுவரும் தரையும் சிராய்த்தன.

ஊர்ந்தவாறே முன்னேறினான் - மனத்துக்குள் உத்தேசமாகக் கணக்கும் செய்தபடி. காலடிக் கணக்கில், சுமார் நூற்றைம்பது அடிகள் தாண்டியிருப்பான். பாதை சட்டென்று முற்றுப்பெற்று விட்டது. தலை, ஒரு சுவரில் தான் இடித்தது.

நுழைந்த வழி மாதிரியே வெளியேறும் வழியும் அடைத்திருக்கிறது போலும். அங்கேயும் துழாவி, துருத்திக் கொண் டிருக்கும் கல்லைக் கண்டுபிடித்தான்.

வெளியேறும் துவாரம் கிடைத்தது. ஆனால் படிக்கட்டோ, தரையோ தட்டுப்படவில்லை. கண்ணை மிகத் துன்புறுத்திக் கவனித்தான். பத்தடிக்கும் கீழே தரை தெரிந்தது. மேல்தளத்தின் வழியாகவே வந்திருக்கிறோம் என்பது அப்போதுதான் ஞாபகம் வந்தது. இது கீழ்த்தளத்து அறை,

அறை என்று கூற முடியாது. பெரிய கிடங்கு. ராட்சதக் கதவு ஒன்று தொலைவில் தெரிந்தது. ஒரு காரமான நெடி சுவாசப் பைகளை உறுத்தியது.

எவ்வித அரவமும் கேட்கவில்லை. குதித்தான். கருங்கல் பாவிய தரை, குதிகாலில் சுரீரென்று குத்தியது.

பெட்டிகள் - பெட்டிகள் - பெட்டிகள். எல்லாம் மரப் பெட்டிகள். பொக்கிஷ அறையோ ஒருவேளை? ஆனால் இந்தக் குடலை உருவும் நெடி? அவனுக்கு இருமல் வந்தது. தொண்டையைக் கமறிக் கமறி வாட்டியது. அடக்கிக் கொண்டு நடந்தான். எதிர்த் திசையில் ஒரு சிறிய கதவு தெரிந்தது. அசைத்துப் பார்த்தான். மறுபுறம் பூட்டப்பட்டிருந்தது. ஆனால் கதவின் கீல் இந்தப் பக்கம் இருப்பதால், கழற்ற முடியும். மூட்டிலிருந்து அலக்காகக் கதவைத் தூக்கினான். ஓசை கூடாது ஓசை கூடாது என்று ஒவ்வொரு சுவாசத்தோடும் ஓர் எச்சரிக்கையை வெளியிட்டுக் கொண்டிருந்தது உள்ளம்.

கூச்சத்துடன் கண்ணைத் திருப்பிக் கொண்டான் காஞ்சி புரத்தான். காரணம்-

கதவு திறந்த இடம் ஒரு படுக்கை அறை.

படுத்திருக்கிறாள் ஒரு பரங்கிப் பெண்மணி!

அவன் பண்பாடு, அந்த அறைக்குள் அடியெடுத்து வைப்பதைத் தடுத்தது. அதை மீறிக்கொண்டு நுழைந்தாலும், தாண்டிச் செல்லும்போது அவள் விழித்துக் கொண்டால்?

கதவைப் பழையபடி சாத்தினான். பெரிய கதவுகளை நோக்கி நடந்தான். அதைத் திறக்க ஒருநாளும் முடியாது. வந்த பாதையில் திரும்புவதா? பத்தடி உயரம் ஏற வேண்டும். இந்தப் பெட்டிகளை அடுக்கலாமா?

குமைந்து குமைந்து கிளம்பிற்று இருமல்; நெஞ்சை அழுத்தி நிறுத்திக் கொண்டான்.

கள்ளக் கடத்தல்காரன் பயந்து பயந்து எடுத்து வரும் பொருளைப்போல, பெரிய கதவுகளின் சந்து வழியே நட்சத் திரங்களின் வெளிச்சம் ஓரளவு வந்தது.

அருகிலிருந்த மரப்பெட்டியின் மீது குனிந்து ஆராய்ந்தான். கோணலான சிவப்பு நிற எழுத்துத் தெரிந்தது. தமிழில்தான். படித்தான்.

'வெடிமருந்து - அபாயம்.'

உடல் குப்பென்று வியர்த்த அதே சமயத்தில், சிவசிதம்பரம் பாதை போட்டுள்ள பயங்கரத் திட்டமும் விளங்கி விட்டது. வெடிமருந்துக் கிடங்கு அருகிலிருப்பதை உள்ளாட்கள் மூலம் அறிந்து, அவற்றைக் கவர்ந்து செல்லவோ, அல்லது இப்படியே நெருப்பு வைக்கவோ திட்டமிட்டிருக்கிறார் போலும்!

பெரிய கதவுக்குச் சென்றான். கை வைத்தான்.

மறுபுறத்திலும் யாரோ கை வைப்பதை உணர்ந்தான்.

பல்லி மாதிரி அப்படியே ஒட்டிக்கொண்டான் கதவோடு கதவாக.

கிறிச்சென்ற ஓசையுடன் கதவு திறந்துகொண்டது. கதவுடன் கூடவே காஞ்சிபுரத்தானும் நகர்ந்து கொண்டதால், உள்ளே வந்தவர்களின் பார்வையில் படவில்லை.

ஒருவன் தாட்டியானவன், மற்றவன் நெட்டை முதல் ரகம்.

அவர்கள் முதுகைக் காட்டிய மறுவிநாடியே சாரைபோல் வெளியே நழுவினான் காஞ்சிபுரத்தான். அப்பாடா! என்ன இதமான குளிர் காற்று! ஆனால் ஒரு விநாடிகூட நின்று சுவாசிக்க அவகாசமிருக்கவில்லை. அவன் வெளிவந்த இடம் ஒரு

திறந்தவெளி. கொஞ்சதூரமாவது ஓடினால்தான் கட்டட வரிசையில் பாதுகாப்புக் கிட்டும்.

திறந்தவெளியின் நடுவே ஒரு பெட்டி வண்டி நின்று கொண்டிருந்தது... அதன் காலடியில் போதுமான இருட்டு... வந்தவர்கள் திரும்புகிறவரையில் அங்கே ஒண்டிக் கொள்ளலாம்.

நாலு எட்டில் அந்தப் பாதுகாப்பை அடைந்தான். ஆனால் அதுவும் அதிக நேரத்துக்கு அல்ல. கிடங்கைச் சாத்திப் பூட்டிய இருவரும் இந்த வண்டியை நோக்கி அல்லவா வருகிறார்கள்?

வண்டியின் இருபுறமும் கதவுகள் இருந்தன. மறுபுறத்துக்கு நழுவினான். கதவைத் திறந்து கொண்டு வண்டிக்குள்ளே புகுந்தான். சே, சே! இங்கும் பெட்டிகள்தானா? சலிப்புடன் ஓரத்தில் ஓடினான். அதே சமயம் கிடங்கைப் பார்த்தாற் போலிருந்த கதவுகளைத் திறந்து மேலும் இரண்டு பெட்டிகளை வண்டிக்குள் வைத்தார்கள் அவர்கள்.

"மெல்ல, மெல்ல ஜாக்கிரதை' கோட்டைக்கு வெளியே இவர்கள் போகிறார்கள். நாமும் போக வேண்டியதுதானே.

வெடி மருந்துகளின் நெடி அவன் சுவாசத்தை மீண்டும் குத்தத் தொடங்கியது.

க்சக் க்சக் ஹை!

கோட்டைத் தெருக்களில் சக்கரங்கள் சடசடத்தன. ஓரங்களிலும் மூலைமுடுக்குகளிலும் கொஞ்ச நஞ்சம் சந்துகள் தென்பட்டன. அவற்றின் மூலம் காஞ்சிபுரத்தான் சுத்தமான காற்றைச் சுவாசிக்க முயன்றான். நள்ளிரவின் இதமான காற்று பட்டு நூல்போல் உள்ளே புகுந்து மேனியைத் தொடும் போதெல்லாம் அம்மா என்ன சுகம் ஊரெங்கும் நிசப்தம். எங்கோ ஓர் ஆந்தை மட்டும் கேள்விமேல் கேள்வியாகக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

திருவல்லிக்கேணி கிராமத்தின் பக்கமிருந்த வாசலை வண்டி கடக்கிறது. தோப்பு மரங்களின் சளசளப்பிலிருந்து ஊகித்தான்.

'நில்." ஓர் அதிகாரியின் கட்டளை.

வண்டி நின்றது.

'ஜுல்பிகர்கானிடம் சேர்ப்பிக்க வேண்டிய சரக்கு. தெரிகிறதல்லவா!'

"ஆமாம், ஐயா...'

'நழுவி விழுந்து விடாமல் பத்திரமாகப் பெட்டிகளை வைத்திருக்கிறீர்களா?"

"வைத்திருக்கிறோம், ஐயா...'

காஞ்சிபுரத்தானுக்கு ஒரே படபடப்பு.

சரியா இல்லையா என்று பார்க்கக் கதவைத் திறந்தால்...!

'போ."

அதிர்ஷ்டம் அவன் பங்கில் இருந்தது. மொத்து மொத் தென்ற மணல் பாதை. அரட்டையடித்த சக்கரங்கள் வாயடைத்து ஊர்ந்தன. மரங்கள் அடர்ந்த பகுதியில் இறங்கி விடலாமென்று காஞ்சிபுரத்தான் காத்திருந்தான்.

வண்டியோட்டியும் அவன் தோழனும் வெகுநேரம் வரை பேசவில்லை. பிறகு ஒருவன் குரல் கேட்டது: "என்ன, இப்படி ஒட்டுகிறாய்? செஞ்சிக்குப் பாதை மறந்து விட்டதா? இது...'

மற்றவன் நகைத்தான்: ‘‘நீ கிணற்றுத் தவளை, உனக் கென்ன தெரியும்? செஞ்சிக்குச் செல்லும் பாதையை ராஜா ராமின் ஆட்கள் மொய்த்துக் கொண்டிருக்கிறார்கள். அகப்பட்டுக் கொண்டால் நாம் அப்பளம்தான்."

'அதனால்?"

'இது வேலூர்ப் பாதை. சுற்றி வளைத்துத்தான் நாம் செஞ்சியை அடைய வேண்டும்.'

குதிப்பதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்த காஞ்சிபுரத்தான் சட்டெனப் பின் வாங்கினான். வேலூர்ப் பாதையா!

ஒரே ஒரு தடை: இந்த நெடி. மூச்சை அடைக்கும் இந்த விஷக் காற்று.

தாங்கிக்கொண்டுதான் ஆகவேண்டும். வேறு வழியில்லை. நடையிலே சென்று தாமரையைப் பிடிப்பதைக் காடடிலும், இந்த வண்டி மும்மடங்கு மேல். தாழ்ப்பாளைத் தடவுவதை நிறுத்திக் கொண்டான். ஒரு பெட்டியின் மீது தலை; இன்னொரு பெட்டியின் மீது கால். ராஜா போல சயனித்துக் கொண்டான்.

சிறிது சிறிதாக அந்த நெடிக்கு மூக்குப் பழக்கப்பட்டது. தூக்கமில்லாத இரண்டு இரவுகள். போஜனத்தைக் கண்டு வெகு நேரமான காலி வயிறு. முதுகிலே எரியும் அந்த முத்திரைச் சூடு. எல்லாம் சேர்ந்த களைப்பு அவன் விழிகளை இழுத்துப் போர்த்தின.

வண்டி மேட்டில் ஏறுவது தெரிந்தது. விடுவிடுவென இறங்குவது புரிந்தது. நீர்க்கரையோரமாகச் செல்வது உறைத்தது. இளம் சூரியனின் சூடு தொட்டது. இத்தனைக்கும் நடுவில் அவன் அரை மயக்கமாகவே கிடந்தான்.

திடீரென்று மார்பை அடைக்கிற மாதிரி இருந்தது. மூச்சுத் திணறியது. இத்தனை நேரம் தூங்கியதன் விளைவாக, கந்தக வாயுவை அளவுக்கதிகமாகச் சுவாசித்து விட்டான். காலங் கடந்தே உணர்ந்தான் அதை.

கையும் காலும் தடுமாறின. புலன்கள் பஞ்சடைவதும் தெளிவடைவதுமாகக் கண்ணாமூச்சி ஆடின. இனி ஒரு விநாடியும்

தாக்குப் பிடிக்க முடியாது. அடக்கி ஒடுக்கி வைத்திருந்த அந்த இருமலும் தொண்டையைப் பிய்த்துக் கொண்டு கிளம்பிவிடும்.

கடைசி நிமிடத்தில் தான் ஞாபகம் வந்தது - தான் அணிந்திருக்கும் உடைகளைப் பற்றி. கும்பினி உடையுடன் வெளியே உலவுவதில் என்னென்ன சங்கடம் விளையுமோ? களைந்து, மூட்டையாகக் கட்டிக் கொண்டான்.

தாழ்ப்பாளை விலக்கினான். வெளியே உச்சி வெய்யிலில், சாலைப்புழுதி வெள்ளிப் பொடியாக மினுமினுத்தது. ஏதோ ஒரு கோயிலின் மதில் சுவரை ஒட்டினாற் போல் வண்டி ஒன்று சென்று கொண்டிருந்தது. தடாலென்று குதிக்கக்கூடாது. வண்டி ஒரு குலுங்கல் குலுங்கி விடும். மெதுவாக வெளிப் புறம் நழுவினான். அச்சின் பக்கமிருந்த இரும்புத் துண்டைப் பிடித்துக் கொண்டு காலைத் தரையில் தொட்டான். கரடு முரடான பாதை. வண்டியின் வேகத்தில் சிராய்ப்புகள் ஏற்பட்டன. இரு சக்கரங்களிலும் சிக்கிக் கொள்ளாதவாறு சாமர்த்தியமாக உடம்பை வளைத்து, பிடியை விட்டான். வண்டியின் ஓசையில் அவன் விழுந்த ஓசை கலந்துவிட்டது.

பாதையின் திருப்பத்தில் வண்டி மறைந்தது. பிறகே காஞ்சிபுரத்தான் எழுந்து கொண்டான். அடக்கி வைத்திருந்த இருமல்கள் அடுக்கடுக்காய்ப் புறப்பட்டன. அவைகளுக்கு முழுச் சுதந்திரம் தந்தான். திறந்த வெளியின் சுத்தக் காற்றை ஆசைதீர இழுத்தான். ஆனால் சுவாசப் பையை அடைத்திருந்த விஷக்காற்று முழுதும் வெளியேற மறுத்தது. அதன் விளைவாக, தேகம் அவன் ஆணைக்குட்படத் தயங்கியது.

'ஏனய்யா நடுச் சாலையில் தள்ளாடுகிறாய்? உடம்பு சுகமில்லையா? திருக்குளத்துக்கு மேற்கே வைத்தியர் வீடு இருக்கிறது, போய்ப்பார்" ஆடு ஓட்டிக் கொண்டு வந்த ஒரு சிறுவன் சொல்லிக் கொண்டே சென்றான்.

வைத்தியர் வீடு... மருந்து கூட வேண்டாம். ஒரு கை தண்ணிர், ஒரு கவளம் சோறு. அவை போதும், புதுத் தெம்பும் புத்துயிரும் கொடுக்க.

இன்னும் நடை நேராகவில்லை. ஆனால் வைத்தியரின் வீட்டைக் கண்டுபிடிக்கும் அளவுக்குப் புலன்கள் ஒத்துழைத்தன. கண்கள் செருக, வாசல் பக்கம் இருந்த கூட்டத்தைக் கண்டான். கடந்து உள்புறம் சென்றான். வைத்தியரின் கைப்பெட்டியும், சூரண டப்பாக்களுமே மேஜை மீது இருந்தன. வைத்தியர் வேறெங்கோ போயிருக்கிறாரோ?

"வைத்தியரே! ஐயா வைத்தியரே!' காஞ்சிபுரத்தான் அல்ல - அவன் பின்னாலிருந்து வேறொருவன் கூப்பிட்டான்.

'அட, உம்மைத் தானப்யா வைத்தியரே' அவன் முதுகில் தட்டியது ஒரு கரம்.

என்னது? நான் வைத்தியரா? காஞ்சிபுரத்தானுக்குப் பழைய தடுமாற்றத்தோடு புதிய குழப்பம்.

'இப்படி வாருங்கள். ' கூப்பிட்டவன், அவனைக் கையைப் பிடித்து அழைத்துச் சென்றான் மறுபுறத்துக்கு.

ஒரு பல்லக்கு பட்டுத் திரை தொங்கவிடப்பட்டிருந்தது. அதற்குப் பின்னாலிருந்து ஒரு பெண்ணின் கை தெரிந்தது.

காஞ்சிபுரத்தான் கண்ணைத் தேய்த்து விட்டுக் கொண்டிருக்கையில், அழைத்துச் சென்றவன் பேசினான்: ‘‘என்ன தயங்குகிறீர்கள்? அவர்கள் பெரிய இடம், வைத்தியர் ஐயா. திரைக்குப் பின்னாலிருந்து கையை மட்டும்தான் நீட்டுவது வழக்கம். உங்களுக்குத் தெரியாததா?’’

செதுக்கிய சிற்பமா? கடைந்தெடுத்த தந்தமா? உரசிய சந்தனமா? உருப்பெற்ற அகில் மணமா?

கண்கொட்டாமல் பார்த்தவாறு நின்றான் காஞ்சிபுரத்தான். பட்டுத் திரைக்குப் பின்னாலிருந்து நீட்டிக் கொண் டிருந்தது பட்டுக் கை.

அதில், ஒரு பூ பச்சை குத்தியிருந்தது - தாமரை!

## (8)

அந்தப் பூங்கரத்தில்தான் என்ன சிலிர்ப்பு நெற் கதிர்களின் மேலே தென்றல் ஓடும்போது அப்படி இருக்கும். கண்டிருக்கிறான் காஞ்சிபுரத்தான்.

அப்படியானால்? அவளுக்கும் தன்னைத் தெரிந்துவிட்டதா?

சற்று அழுத்தினாலும் கன்றிவிடும் மென்விரல்கள்; இரத்தப் பொட்டு வைத்த மாதிரி செக்கச் சிவந்த திசு நுனிகள்.

மயங்கியிருந்த அவனது எண்ணங்கள் மீண்டன.

காஞ்சிப் பாதையில் மாட்டு வண்டி, பச்சோந்திப் பாதிரியார்; சுளிர் சுளிர் - சவுக்கடி விடுதியில் அடிமைப் பெண்ணின் அவல நிலை; மீட்டவளுடன் மயிலைத் திருக்குளத்தருகே மகிழ்ந்திருந்த அற்ப நேரம்; கொள்ளியெனச் சுட்ட அடிமைச் சூடு, பரங்கியரின் கோட்டை; சிவசிதம்பரத்தின் சுரங்கம்; கந்தக் நெடியிலே பிரயாணம்; மயக்கம் தெளிந்த போது இந்த மனோகரச் சந்திப்பு!

"வைத்தியர் ஐயா, சீக்கிரம் பாருங்கள், ' பதைப்புடன் வேண்டிக் கொண்டான் அவனை அழைத்து வந்தவன்.

பல்லக்கில், பட்டுத் திரைக்குப் பின்னாலிருப்பவள் அவள் தானா? இன்னும் நன்றாய் நிச்சயப்படுத்திக் கொள்ள-

“எத்தனை நாளாய்க் காய்ச்சல்?'

'இப்போதுதான் - சற்று முன்னால், ' படைவீரன் பதில் அளித்தான்.

'நீ சும்மா இரு. அவர்கள் சொல்லட்டும்."

'காலையிலிருந்துதான். திருக்குளத்துத் தண்ணிர் ஏற்கவில்லை போலிருக்கிறது.'

அது செய்தியல்ல - அமுது: தேனாகப் பாய்ந்த அந்தத் தீங்குரல் தாமரையினுடையதுதான். சாமர்த்தியமாகத் தங்கள் சந்திப்பையும் உணர்த்திவிட்டாளே!

குறிப்பாகப் பேசுகிறாள் என்றால், இவர்கள் எவரோ அன்னியர்கள். தாமரையைக் கடத்திக் கொண்டு போகிறார்கள். தடுத்து மீட்டாக வேண்டும்.

'பித்தம்தான்...' நாடியைப் பிடித்திருந்தது அவன் கரம். சூழ்நிலையை நோட்டமிட்டது கண்.

வீட்டின் விலாப்புறம் அது. திறந்த முற்றம். பின்பக்கம் ஒரு கதவு இருக்கிறது. ஒரு வாதாமரம் முன்புறத்தில். மரத்தடியில் ஒரு சின்ன மேடை.

அங்கே உட்கார்ந்திருந்தார் ஒரு கிழவர். லொக் லொக் கென்று இருமல். காஞ்சிபுரத்தான் "பித்தம்..." என்று சொன்னது அவருடைய இருமல் சத்தத்தில் மறைந்துவிட்டது. படை வீரனுக்குக் கோபம். "பெரியவரே, இங்கே கவனித்த பிறகு தான் வைத்தியர் உம்மிடம் வருவார். ஏன் சும்மா இருமிக் காட்டுகிறீர்?' என்று அதட்டியதும் அவர் இருமல் நின்று விட்டது.

காஞ்சிபுரத்தான் கணக்கெடுத்தான். பல்லக்குத் தூக்கிகள் நால்வர். துணை வந்த வீரர்கள் இருவர். ஆறுபேரை வேறிடத்துக்கு விரட்டியாக வேண்டும். பிறகு தாமரையுடன் பின் புறம் வெளியேறிவிடலாம்.

'இந்தாப்பா, இப்படி வாருங்கள். ' பல்லக்குத் தூக்கிகளில் இருவரை அருகில் அழைத்தான். 'ஓர் உதவி பண்ணுகிறாயா?"

'ஓ, என்ன வேண்டும்?" "ஆள் கிடைக்காமல் பத்து நாளாய்த் தவிக்கிறேன். ஆற்றங் கரையிலே நிறையப் பாறாங்கல் கிடக்கிறது. பெரியதாய், அம்மிக் குழவிக்கு உபயோகப்படக் கூடியதாய் இரண்டு எடுத்து வந்து தருகிறீர்களா? என்னாலே தூக்கி வர முடியவில்லை...' 'அதற்கென்ன வைத்தியரே, இதோ போகிறோம், ! இரண்டு பேர் புறப்பட்டார்கள்.

"எதற்கும் நீயும் போப்பா. ஒரு கை கொடுத்த மாதிரி இருக்கும். மூன்றாமவனையும் அனுப்பி விட்டான்.

'வீதிக் கடைசியிலே ஒரு புளியமரம் இருக்கிறதே, பார்த்தீர்களா?" நாலாமவனிடம் கேட்டான்.

'இல்லையே, ஐயா. '

'மரத்திலே ஏறி, நுனிக் கொம்பிலிருந்து ஒரு துளிர் கிள்ளிக்கொண்டு வாருங்களேன்! அங்கே ஒரு மாடு இருக்கும். கொஞ்சம் பொல்லாதது. இரண்டு பேராய்ப் போங்கள்.'

அவர்களும் புறப்பட்டார்கள்.

ஆறாமவனை?

திண்ணையிலிருந்த கிழவர் மறுபடியும் இருமினார்.

'சொன்னேனே, ஐயா! அறிவில்லையா?' ஆறாமவன் அவரை விரட்டிக் கொண்டிருக்கையில் - "லேகியம் தீர்ந்து போச்சு வைத்தியர் ஐயா" - ஒரு பெண்பிள்ளை அந்தக் கிழவரை நெருங்கி முறையிட்டாள்.

படைவீரன் பரிகசித்தான். 'ஏனம்மா, அவர்தான் கிழவர், கண் தெரியாது. உனக்குமா? வைத்தியர் இதோ இருக்கிறார், பார்' காஞ்சிபுரத்தானைக் காட்டினான்.

வந்தவள் சுடச் சுடத் திருப்பினாள்: 'ஏனய்யா, உனக்குத் தான் பைத்தியம் என்றால் எனக்குக் கூடவா? நான் இந்த ஊரிலே முப்பது வருஷமாய் இருக்கிறவள். இவர்தான் வைத்தியர். நீயும் புது ஆள். அதோ பல்லக்குக்குப் பக்கத் திலே இருக்கிறவனும் புது ஆள். '

அயர்கிற ராசி காஞ்சிபுரத்தானுடையது அல்ல. இருந்தாலும் சால்வையைப் போர்த்திக்கொண்டு, இருமல் கிழவர் எழுந்து வந்தபோது அவனுக்குத் திக்கென்றுதான் ஆயிற்று.

“என்ன தம்பி, என் வீட்டுக்குள்ளேயே நீ கடை வைக்கப் பார்க்கிறாயா? யார் நீ?" என்றார் வைத்தியர்.

"அட புரட்டுப் பயலே!' படைவீரன் கப்பென்று பிடித்தான் காஞ்சிபுரத்தானின் கரத்தை. முதுகுப்புறம் வளைத்தான்.

'சீ, விடு!" ஒரே உதறல். கை விடுபட்டது.

காஞ்சிபுரத்தானுக்கு நாக் கூசவில்லை. 'லொக் லொக் கென்று இருமினால்தான் வைத்தியரென்று அர்த்தமா? நானும் ஒரு வைத்தியன்தான், ஐயா- சென்னைப் பட்டணத்தில்."

அசல் வைத்தியரின் புருவங்கள் நெற்றிக்கு ஏறின. 'ஓகோ, எங்கே தம்பி படித்தாய்?"

"காஞ்சிபுரத்தில். '

'காஞ்சிபுரத்திலா? எனக்குத் தெரியாதவர்களே கிடையாதே! யாரிடம் படித்தாய்?"

'சொக்கநாதப் பண்டிதரிடம். '

'ஹூம். அவர் இறந்தபோது நீ பிறந்திருக்கவே மாட்டாய்."

சிரித்தாள், காஞ்சிபுரத்தானைக் காட்டிக் கொடுத்த பெண்மணி.

"புளியங்கொம்பு ஒடிக்க இரண்டு ஆள்! அம்மி எடுத்து வர மூன்று பேர் எல்லாரையும் அனுப்பிவிட்டு எதையப்பா அடித்துக் கொண்டு போகத் திட்டமிட்டிருந்தாய்?' கிழட்டு வைத்தியரின் குரலில் சூடு ஏறியது.

'நானும் வைத்தியன்தான்." காஞ்சிபுரத்தான் வலியுறுத்தினான்.

'இரு" கிழவர் உள்ளே சென்றார். சில விநாடிகளில் திரும்பினார். உள்ளங்கையில் வைத்திருந்த பொடியில் ஒரு சிட்டிகை எடுத்தார். 'வாயைத் திற. சித்த வைத்தியத்தில் அரிச்சுவடி படித்தவன் கூடச் சொல்லிவிடுவான் இது என்ன சூரணமென்று. நீ சொல், பார்க்கலாம்.'

காஞ்சிபுரத்தான் வாயைத் திறந்தான். சூரணத்தைத் தூவினார் வைத்தியர்.

விநாடி தயங்கினாலும் விபரீதமாகுமே. அவன், கண்ணிமைக்கும் அவகாசம்கூடத் தரவில்லை. 'மந்தார சூரணம்' என்றான்.

பக்கத்திலிருந்த படைவீரனிடம் கட்டளையிட்டார் வைத்தியர்: "இந்த ஆளைத் துணோடு கட்டி வை. பிறகு தலையாரியிடம் ஒப்படைக்கலாம்.'

புளியமரத்துக்குப் போயிருந்தவர்கள் திரும்பிவிட்டார்கள். ஆற்றங்கரை சென்றவர்களும் அம்மிக்கல் கொணர்ந்து விட்டார்கள்.

ஒருவருக்கிருவராகப் பிடித்துக் கொண்டார்கள். துணோடு துரணாகக் கட்டினார்கள். வீரர்களிலொருவன் வியந்து கூறினான்: "இவன் போட்ட வேடத்தில் நாங்கள் கூட ஏமாந்து விட்டோம், ஐயா. நொடியில் தோலுரித்து விட்டீர்களே!'

'பின்னே? சாதாரணத் திருநீறைப் போய்ச் சூரணம் என்கிறானே, அயோக்கியன்!' வைத்தியர் பல்லக்கினருகே குனிந்தார். 'கையை இப்படி நீட்டு, அம்மா."

காஞ்சிபுரத்தான் நிதானித்தான். இது தணிந்து போக வேண்டிய தருணம்.

"வைத்தியர் ஐயா, சும்மா விளையாடினேன். தயவு செய்து மன்னியுங்கள். '

'விளையாட்டா?' வைத்தியர் அவன் பக்கம் முகம் திருப்பவில்லை. 'விளையாடுவதற்கு வேறு துறை உண்டு, தம்பி. உயிர் அல்ல. '

கட்டப்பட்ட கைகளைக் கழற்றப் பார்த்தான். இயலவில்லை.

பல்லக்கை நோக்கிக் கண்கள் தாவின. காற்றில் சற்று அசைந்தது பட்டுத்திரை. ஒரு விநாடி- ஒரே வினாடிதாமரையின் மலர் முகம் தென்பட்டது. அந்த விழிமுனையில் மின்னுவது என்ன வைரப் பொட்டா? அல்ல. கண்ணிர்த்துளி.

படைவீரன் பணிவுடன் தெரிவித்தான்: "வைத்தியர் ஐயா, அவர்கள் பெரிய இடத்தைச் சேர்ந்தவர்கள். ரொம்பப் பத்திரமாக அழைத்துச் செல்ல நினைத்தோம். வழியில் காய்ச்சல் வந்துவிட்டது...'

வைத்தியர் உதட்டின் மீது விரல் வைத்தார். 'சளசளவென்று பேசாதே."

திடீரென ஓர் ஒசை.

பதறப் பதற ஓடிவந்தாள் ஒரு பெண்மணி, வீட்டுக்குள்ளிருந்து.

'உங்களைத்தானே, வாருங்களேன், இங்கே. '

"ஸ். என்ன குடி முழுகிவிட்டது?" கடிந்து கொண்டார் வைத்தியர்.

'குடி முழுகித்தான் போய்விட்டது. பெரிய பையனை வந்து பாருங்கள். என்னவோபோல் ஆடுகிறான். குதிக்கிறான். கையில் அந்தத் துப்பாக்கி! அவன் பக்கத்திலே கைக்குழந்தை ஜோதி வேறே... வாருங்களேன்...' -

வைத்தியர் கலவரத்துடன் வீட்டுக்குள் சென்றார்.

தகவல் சுவாரஸ்யமாயிருந்ததால், குழுமியிருந்த கூட்டம் அவர் பின்னால் சென்றது.

ஒரே விநாடி. முற்றம், முற்றும் காலி. அவன் பல்லக்கைப் பார்த்தான். தாமரை, மின்னல் போல் வெளிப்பட்டாள்.

'ஐயோ... உங்களுக்கு... உங்களைப்போய்... ' பரபர வென்று அவனுடைய கைக் கட்டுக்களை அவிழ்த்து விட்டாள்.

'அன்று நீ. இன்று நான். உனக்கும் எனக்கும் எத்தனை ஒற்றுமை பார்த்தாயா, தாமரை? அவளுடைய தந்தச் செப்பான மோவாயை நிமிர்த்தினான் காஞ்சிபுரத்தான். சோர்ந்த வதனம் அவனுக்குக் கலக்கம் தந்தது. ‘‘தாமரை உனக்கு என்ன உடம்பு?'

"வைத்தியராக நடித்து நீங்கள் தோற்றீர்கள். நோயாளியாக நடித்து நான் வெற்றி கண்டேன்."

'என்ன? '

"ஆமாம். எப்படியும் நீங்கள் தேடி வருவீர்கள் என்று எதிர்பார்த்தேன். பயணத்தைக் கொஞ்சமேனும் தாமதப் படுத்தலாமென்றுதான் காய்ச்சல் என்றேன்.'

'யார் இவர்கள்? எங்கே அழைத்துப் போகிறார்கள் உன்னை? '

'எனக்கும் தெரியவில்லை. பூமியில் பாதம் படாதபடி என்னைத் தாங்குகிறார்கள். ஏனென்று புரியவில்லை. மேனியில் ஒரு துரும்பும் படாதபடி காக்கிறார்கள். எதற்காக என்று விளங்கவில்லை. மகாராணி மாதிரி மரியாதையுடன் அழைத்துச் சொல்கிறார்கள்."

'நீ மகாராணிதானே தாமரை- என் மன சாம்ராஜ்யத்தில்?"

கண்களைத் துடைத்துக் கொண்டாள் தாமரை. 'அந்த ஒரு பதவி எனக்குப் போதும். இந்த வீரர்களின் மர்மமான நடவடிக்கை

எனக்குப் பயமாயிருக்கிறது. நான் உங்களுடன் வந்து விடுகிறேன். எங்கு வேண்டுமானாலும் அழைத்துப் போங்கள். இப்போதே போய்விடலாம், அவர்கள் வருவதற்குள். '

"பொறு, பொறு." அவள் தோளில் ஆறுதலாகத் தட்டி னான் காஞ்சிபுரத்தான். 'இது பகல் வேளை. இரவில் ஏதாவது வழி செய்கிறேன்."

"சாயந்தரமே இவர்கள் கிளம்பிவிட்டால்?"

"கிளம்பும்படி விடமாட்டேன், பயப்படாதே. நீ போய்ப் பல்லக்கில் இருந்து கொள். நான் இதே ஊரில் வேறெங்கானும் ஒளிந்து கொள்கிறேன். எப்படித் தப்பினான் என்று கேட்டால், தானே கட்டுகளை அவிழ்த்துக் கொண்டு ஓடி விட்டான்' என்று சொல்லிவிடு. '

வைத்தியரின் வீட்டுக்கு மூன்று கட்டு. முதல் கட்டிலிருந்து காஞ்சிபுரத்தான் வெளியேறிய சமயம், இரண்டாவது கட்டில் பலவிதமான கூக்குரல்கள்.

''வேண்டாமடா, கண்ணா! கீழே போட்டுவிடு. '

''வேண்டாம், வேண்டாம். கீழே போடவேண்டாம். குழந்தை மீது போட்டுவிடப் போகிறான். '

என்னவாயிருக்கும்? போனான் அங்கு.

வைத்தியரின் மகன் எட்டு வயதுச் சிறுவன் ஆடிக் குதித்துக் கும்மாளமிட்டுக் கொண்டிருந்தான். அவன் கையில் ஒரு பெரிய துப்பாக்கி இருந்தது. தரையில் அவன் பக்கத்தில் ஒரு சின்னஞ்சிறு குழந்தை, கத்திக் கொண்டிருந்தது பரிதாபமாக.

வைத்தியரின் மனைவி மன்றாடினாள்: 'கண்ணப்பா! என் செல்லமில்லையா கீழே போட்டு விட்டு வா கண்ணா, என்னிடம்.'

'மாட்டேன்! சுடப் போகிறேன்! இதோ சுடப் போகிறேன். பையன் குதித்தான்.

வீரிட்டு வீரிட்டு, சிசுவின் உடல் விறைத்துக் கொண் டிருந்தது.

'விடுங்கள்! என்ன வந்தாலும் வரட்டும். ' திமிறினாள் வைத்தியரின் மனைவி. அவளை மடக்கிப் பிடித்துக் கொள்ள இரண்டு ஆள் தேவைப்பட்டது.

துரத்தில் எட்டி நின்றிருந்தார்கள் அத்தனை பேரும். துப்பாக்கியைப் பார்த்தவர் அநேகமாய் யாருமில்லை. அது பற்றிக் கேள்விப்பட்டிருந்ததோ, அவர்கள் மிரட்சியை அதிகரித்தது.

எவனோ ஒருவன் காஞ்சிபுரத்தானைக் கேட்டான்: 'அந்தப் பையன் பிடித்திருப்பது என்ன?''

'அதன் பெயர் துப்பாக்கி. ஆனால் அது இங்கே எப்படி வந்தது?"

"வைத்தியரோட மூத்த பையன் பரங்கிக்காரனின் பட்டாளத்தில் இருந்தான். பாவம், செத்துவிட்டான். அவன் ஞாபகமாய் இதைக் கொடுத்தனுப்பினார்களாம். வீட்டிலே வைத்திருந்ததை விளையாட்டுப் பொருள் என்று எடுத்து விட்டான். சின்னக் குழந்தையையும் வைத்துக் கொண்டு ஆட்டம் போடுகிறான்.'

'அது சரி. பையன் ஏன் இப்படித் தள்ளாடுகிறான்?"

'இப்பத்தான் வைத்தியர் சொன்னார் - மருந்துக்காக வைத்திருந்த பேய்த் தண்ணியைக் குடித்துவிட்டானாம்.'

'பேய்த் தண்ணியா?"

'கள்ளு, ஐயா, பனங்கள்ளு. பெரியவர்கள் கூட அதைத் தொடமாட்டார்கள். பச்சைப் பிள்ளை குடித்தால் என்ன கதி ஆகிறது?"

'ஐயா, ஐயா. நீங்கள் கொஞ்சம் கவனியுங்களேன். ' வைத்தியக் கிழவர், பல்லக்குடன் வந்த படைவீரர்களிடம் மன்றாடினார்.

மறுத்துவிட்டார்கள் இருவரும்.

"எங்களுக்குப் பழக்கம் கிடையாதே. வைத்தியர் ஐயா, விசையிலே கை வைத்திருக்கிறான் பையன். இசகுபிசகாய்ச் சுட்டுவிட்டால் என்ன ஆவது!"

பச்சிளம் சிசுவின் மேனி நீலம் பாரித்து விட்டது அத்தனை அழுகை நீர்வீழ்ச்சி போலக் காதைக் குடைந்தது அந்த ஓலம்.

'நகருங்கள்" காஞ்சிபுரத்தான் விலக்கிக் கொண்டு முன்னே பாய்ந்தான்.

படைவீரன் கூவினான்: ''டேய் மோசடி கட்டவிழ்த்துக் கொண்டு எப்படி வந்தாய்? வைத்தியர் வேடம் மாதிரி இல்லை இது சுட்டுத் தள்ளிவிடப் போகிறான் பார். '

கண்வெட்டும் நேரம்தான். பறித்தான் துப்பாக்கியை ஒரு கரத்தால்; அணைத்தான் சிசுவை மறு கரத்தால்.

ஓடி வந்தாள் பெற்றவள். அவள் கண்களிலிருந்து வடிகிறதே, அதற்குப் பெயர்தான் ஆனந்தக் கண்ணிரா?

'தம்பி! நீ தெய்வம், தெய்வம், தெய்வமேதான்!'

பேய்த் தண்ணி குடித்த பையனைப் பாய்ந்து பிடித்துக் கொண்டார் வைத்தியர்.

‘‘மடையா ஊரையே கலக்கி விட்டாயே!' என்று ஒரு வேலையாளிடம் அவனைத் தள்ளினார்.

'கிணற்றடிக்கு அழைத்துப் போ. தலையில் பச்சைத் தண்ணிரைக் குடம் குடமாய்க் கொட்டு."

காஞ்சிபுரத்தானின் பக்கம் திரும்பினார். பாராட்டாதிருக்க முடியுமா? "பெரிய விபரீதத்திலிருந்து காப்பாற்றினாயப்பா. நீ கெட்டிக்காரன்தான். '

"வைத்தியம்தான் தெரியாது, ' காஞ்சிபுரத்தான் சிரித்தான்.

'நீ நல்லவன். காரணமில்லாமல் வேடம் போட்டிருக்க மாட்டாய். என்ன உதவி வேண்டுமானாலும் என்னைக் கேள். செய்கிறேன். '

'மிக்க நன்றி, ஐயா", காஞ்சிபுரத்தான் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டான்.

மொத்தக் கூட்டமும் கரைந்து விட்டது. வைத்தியரிடம் கிசுகிசுத்தான், காதோடு.

பல்லக்கு இருந்த இடத்துக்குத் திரும்பி வந்தார் வைத்தியர்.

வீரர்களிலொருவன் சொன்னான்: 'இருட்டிவிட்டால் கஷ்டம், ஐயா. இன்னும் ரொம்ப தூரம் போகவேண்டும்.'

நாடியை மீண்டும் பிடித்தார் வைத்தியர். கேட்டார்: 'எவ்வளவு தூரம்?"

'சொல்லக் கூடியதாயிருந்தால் கேட்கிற வரையில் வைத்துக் கொண்டிருப்போமோ? இவர்கள் பெரிய இடம்...'

'பெரிய இடம், பெரிய இடம் என்கிறீர்கள். ஆனால் இத்தனை அலட்சியமாயிருந்திருக்கிறீர்களே? மார்பில் கபம் கட்டியிருக்கிறது. இரவு வேளையில் பிரயாணம் செய்தால், நான் பொறுப்பல்ல. '

'எங்களை என்ன செய்யச் சொல்கிறீர்கள்?"

'ஒன்றும் வேண்டாம். இன்று இரவு இங்கேயே தங்கி விட்டு, காலையில் பயணத்தைத் தொடருங்கள்.'

"இங்கேயா ' இருவரும் ஒரே குரலில் கேட்டார்கள். 'வசதியாயிருக்கும். பயப்படாதீர்கள். என் மனைவி கவனித்துக் கொள்வாள்.'

ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். "தாங்கள் இவ்வளவு தூரம் சொன்ன பிறகு மீறமாட்டோம்.'

பல்லக்கினருகில் கைகட்டி வாய் பொத்திக் குனிந்தான் ஒருவன். 'சௌகரியப்படுமா, அம்மா? வைத்தியர் சொல்கிறார். மெதுவாய் எழுந்து வாருங்கள். மெதுவாய், மெதுவாய், " என்றான்.

தாமரைக்கு இப்போது சிரிப்பு. சற்றுமுன் வைத்தியர் அவள் உடல்நிலையைப் பற்றிச் சொன்னபோது திகைப்பு. யாருடைய திட்டம் என்று ஊகித்ததும் பூரிப்பு.

வைத்தியரின் மனைவி வந்தாள். மூன்றாவது கட்டுக்கு அழைத்துச் சென்றாள் தாமரையை.

வீரர்களில் ஒருவன் சுடுதண்ணீர் கொணர்ந்து தந்தான். மற்றவன், ஒரு தூசுமில்லாமல் மஞ்சத்தைத் தட்டினான். சாளரங்களை அகலத் திறந்தான் முதல்வன். ஊதுவத்திகளைக் கொளுத்தி வைத்தான் இரண்டாமவன்.

பழமும் பாலும் வந்தன. மாடவிளக்குகள் குளிர்ந்த ஒளியைக் கொட்டின.

அனைவரும் போய்விட்டார்கள்.

அன்னச் சிறகு புதைத்த மஞ்சம்.

பொற்கொடி அதிலே புரண்டது.

என்ன பாட்டா? மெல்லப் பாடுவது போல் ஒரு குரல் எங்கிருந்து!

"நான்தான் தாமரை. இவ்வளவு உபசாரம் செய்தவர்கள் ஒன்றை மறந்துவிட்டார்களே! அதை நான் செய்தேன்!' கட்டிலுக்குக் கீழேயிருந்து காஞ்சிபுரத்தான் வெளிப்பட்டான்.

மலர்ந்தது தாமரை முகம். 'எதை மறந்துவிட்டார்கள் அவர்கள்?"

'தாலாட்டுப் பாட. '

அவள் சிரித்தாள். இதய தாகம் தீர வாய்விட்டு, ஆனால் ஓசைப்படாமல், சிரித்தாள்.

'உயிரைத் துரும்பாக மதித்துப் பையனையும் குழந்தையையும் காப்பாற்றினர்களாமே? வைத்தியரின் மனைவி சொன்னார்கள். '

காஞ்சிபுரத்தான் நகைத்தான்: 'துப்பாக்கியிடம் பழக்கமில்லாததால் மிரண்டு போயிருந்தார்கள் அவர்கள். ரொம்பப் பழைய காலத்தது அது. மருந்துகூடக் கெட்டித்திருக்காது. அப்படியே இருந்தாலும், அதை எளிதாக வெடிக்க வைக்க முடியாது. ''

"வீரம், விவேகம் இரண்டும் ஒன்றுதான். நீங்கள் ஒன்றை மறுத்தால் இன்னொன்று இருக்கிறது. சரி, நாம் புறப்படலாமா?"

கதவுத் தாளில் கை வைத்தான் அவன். 'பின்புறத் தெரு வழியாகப் போ. விநாயகர் கோவிலொன்று வரும். பிராகாரத்தில் காத்திரு. வண்டி தயார் செய்து கொண்டு அங்கே வருகிறேன்."

உற்சாகத்துடன் காஞ்சிபுரத்தான் நடைவிரித்தான். கடை வீதிபோல் ஒரு தெரு. மாடுகள், வண்டிகள் நின்றிருந்தன.

ஆ! அதோ! சேணத்துடன் குதிரையொன்று காத்திருந்தது. சொந்தக்காரன் எங்கே? அதோ கடையில் பலகாரம் வாங்கிக் கொள்கிறானே! அட! இவனா? தாமரையை அழைத்து வந்த இருவரில் ஒருவன் அல்லவா இவன்? எங்கே புறப்பட்டான் இவன் மட்டும் தனியாக?

சேணத்தின் இடுக்கில் துருத்தியிருந்தது ஒரு மரக்குழல். லிகிதம் வைத்து அனுப்பப்படும் குழல்

யாருக்கு நிருபம் கொண்டு செல்கிறான்? இத்தனை அவசரமாக ?,

நொடி நேரம்தான். லிகிதத்தைக் கைப்பற்றினான்; குழாயைத் திரும்ப வைத்தான்.

வேகமான நடை. வீட்டுத் திண்ணையொன்று வந்தது. அமர்ந்து கொண்டான். மாடத்து அகல் விளக்கு, படிக்கப் போதுமானது.

படித்தான்: 'சிங்காவரம் மகாராஜா அவர்களின் திவ்ய சமூகத்துக்கு, பணிவுடன் எழுதிக் கொண்டது.

மிகுந்த சிரமத்தின் பேரில் இளவரசியாரைக் கண்டுபிடித்து அழைத்து வந்துவிட்டோம். யாருக்கும் தெரிவிக்காமல் மிக ரகசியமாக வைத்திருக்கிறோம் விஷயத்தை, இளவரசியாரிடம் கூடச் சொல்லவில்லை. வரும் வழியில் அவர்களுக்கு லேசான காய்ச்சல், வைத்தியரிடம் காட்டினோம். தங்கிவிட்டுப் போகச் சொல்கிறார். இரண்டு நாட்களில் இளவரசியைத் தங்களிடம் சேர்ப்பித்து விடுகிறோம் ' இளவரசி!

காஞ்சிபுரத்தான் திரும்பத் திரும்பப் படித்தான். அவனுடைய உள்ளம் துவண்டது. என்ன பைத்தியக்காரத்தனம் செய்யவிருந்தோம்! அவன் நடந்தான். ஆனால் விநாயகர் கோவிலின் பக்க மல்ல, வைத்தியரின் வீட்டுக்கு.

வாசல்புறத்தில் தூங்கிக் கொண்டிருந்தான் இரண்டா மவன். எழுப்பினான்.

'நீங்கள் பல்லக்கில் அழைத்து வந்த பெண், தப்பியோடப் பார்க்கிறாள். விநாயகர் கோவிலருகில் இருப்பாள். போய்ப் பாருங்கள்' என்று தெரிவித்தான். -

வாரிச் சுருட்டிக் கொண்டு அந்த ஆள் ஓடினான். காஞ்சிபுரத்தான் ஒரு பெருமூச்சுடன் நின்றான்- தாமரை படுத்திருந்த அறையைப் பார்த்தவண்ணம்.

பிறகு, சென்னைப்பட்டணம் செல்லும் பாதையில் திரும்பி நடக்கலானான்.

அங்கே சிங்காவரத்தில். மலையுச்சியில் ஒரு கண்காணிப்பு ஸ்தூபி. அதை ஒட்டிய திறந்த மச்சு. மூன்று உருவங்கள் அமைதியற்று உலவுகின்றன. ரகுநாதர், கிருஷ்ணப்பன், சென்னம்மா.

சுழல் படிகளில் இறங்கி வந்தான் காவலாள் ஒருவன். ஆவலுடன் நெருங்கினார்கள் மூவரும். 'என்ன, ஏதேனும் தெரிகிறதா?" கவலையுடன் விசாரித்தார் ரகுநாதர்.

'நன்றாய்ப் பார்த்து விட்டேன். எவரையும் காணோம். சென்னைப் பட்டணப் பாதையிலும் சரி, திருச்சிப் பாதையிலும் சரி, யாரும் வரக்காணோம். ' பணிவுடன் வணங்கி விட்டுப் போய்விட்டான் அவன்.

சென்னம்மாவின் விழிகளிலே சீற்றம். உதட்டில் துடிப்பு. 'நன்றாக ஏமாந்துவிட்டீர்கள். '

'என்ன அரசி? '

''ஹும். செத்துப்போன நாகத்துக்கு உயிரூட்டியிருக்க வேண்டாம். '

'எதைக் குறிப்பிடுகிறாய், சென்னம்மா?"

"வேறெதை அடிமையாக மறைந்துவிட்ட தங்கள் அண்ணன் மகள் திரும்பக் கிடைப்பாள், ஒழித்து விடலாம் என்றெல்லாம் நீங்கள் நினைத்திருப்பது வெறும் மனக் கோட்டை'

'அப்படியல்ல. அவள் வந்ததும் பார், என்ன நடக்கிறதென்று" சூளுரைத்தான் காளிங்கன்.

## (9)

கறுத்தது. பழுத்தது. பழுத்தது. சிவத்தது. சிவத்தது. வெளுத்தது.

வானத்தில் ஓவியம் தீட்டினான் தெய்வக் கலைஞன். பலபலவென்ற காலைப்பொழுது. உற்சாகத்தை வரவழைத்துக் கொண்டான் காஞ்சிபுரத்தான். கையையும் காலையும் உதறி மார்பை நிமிர்த்திக் கொண்டான். சுமைதாங்கிக் கல் ஒன்று எதிர்ப்பட்டது. தாவியேறி அமர்ந்து கொண்டான்.

பொட்டென்று தலையில் விழுந்தது ஓர் இலந்தைப் பழம். அண்ணாந்து பார்த்தான். ஒரு மந்தி இளித்தது.

பழத்தைச் சுவைத்துத் துப்பிவிட்டு, 'நன்றி' என்றான். 'இன்னொன்று போடேன். '

கிளையை ஓர் உலுக்கு உலுக்கியது குரங்கு. ஆலங் கட்டி மழை போல இலந்தைகள் விழுந்தன. கை நிறையப் பொறுக்கிக் கொண்டான்.

வானரத்துக்கு மகா ஆனந்தம். காஞ்சிபுரத்தானிடம் என்ன தோழமையோ அருகில் வந்து உட்கார்ந்து கொண்டது. 'என்ன வருத்தம் உனக்கு? என்று வினவுவது போல் ஏக்கத்துடன் பார்த்தது.

'அவள் போய்விட்டாள்' என்று பதில் கூறினான் காஞ்சிபுரத்தான். கரத்திலிருந்த ஒலை அதன் சின்னத் தலையை மெல்லத் தட்டியது.

'எவள்?"

'என்னுள் இரண்டறக் கலந்தவள். என்னவள் என்று கோட்டை கட்டியிருந்த மின்னற்கொடி.."

மந்தி தலையைச் சாய்த்து விழிகளை உருட்டியது. அடடா! என்ன ஆயிற்று அவளுக்கு? ஏன் உன்னைப் பிரிந்து போனாள்?

"அவள் போகவில்லை. நான்தான் பிரிந்து வந்து விட்டேன். அவள் நாடோடியல்ல, நாடாளப் பிறந்தவள் என்று தெரிந்தது. அப்புறம் உறவு கொண்டாடலாமா? நீயே சொல்லு."

'ஊஹல்ம் ஊஹூம்' என்று தலையை ஆட்டியது மந்தி. மறு விநாடியே எதிர் மரத்தில் எதைக் கண்டதோ, தாவிவிட்டது.

தாமரை பல்லக்கில் போய்க்கொண்டிருப்பாள், தனக்குரிய இடத்தை நோக்கி. இனிமையானவள்; எந்த வழிப்போக்கரும் அவளுக்கு உணவு தந்து உபசரிப்பார்கள்...

காஞ்சிபுரத்தான் சுமைதாங்கிக் கல்லிலிருந்து குதித்து நடையைத் தொடர்ந்தான். வெய்யில் ஏறுமுன் அடைந்து விட வேண்டும் -

சென்னைப் பட்டணத்தையா? ஆம். பெரியபெத்து வைத்த நம்பிக்கையை மோசம் செய்யக் கூடாது.

வழிகாட்டி மரம் அவனைச் சற்றே நிறுத்தியது. 'காஞ்சிபுரம்' என்று எழுதப்பட்ட கை, 'உன் அன்னை அங்கே இருக்கிறாள்' என்று நினைவூட்டுவது போல் நீண்டு நின்றது

ஒரு விநாடி தயங்கினான். ஜல் ஜல் ஜல். இரட்டைக் காளை பூட்டிய கட்டை வண்டி அவனையொட்டி வந்து நின்றது. 'ஏறிக்கொள், தம்பி' என்றான் வண்டிக்காரன்.

வண்டி நிறைய நெல் மூட்டைகள். அரியாசனத்து அரசி போல அதன்மீது அமர்ந்திருந்தாள் ஒரு பெண். கலகலவென்று நகைத்துவிட்டுச் சொன்னாள் அவள்: 'திகைத்துப் போய் விட்டார் பார்த்தீர்களா, அண்ணே!' காஞ்சிபுரத்தானிடம் கேட்டாள்.

'சென்னைப்பட்டணத்திலே பெரியபெத்துவோட வீட்டுக்குத்தானே போகிறாய்?"

திகைப்பு இரட்டித்தது. "யார் சொன்னார்கள் உங்களுக்கு?" 'உன் முதுகு. பளிச்சென்று பதில் தந்தான் வண்டிக் காரன். 'கிராமத்தார்களுக்குப் பதில் தெரியாது என்று நினைத்தாயா? ஏறிக்கொள், ஏறிக்கொள். வண்டி அங்கேதான் போகிறது." காஞ்சிபுரத்தான், மேல் துண்டைப் பிரித்துப் போர்த்துக் கொண்டான்.

சூட்டுக்கோலால் போடப்பட்ட பெ.பெ. என்ற எழுத்தை மறக்கலாம். ஆனால் மறைக்க முடியாது.

கரும்புத் துண்டைக் கடித்துக் கொண்டிருந்தாள் அந்தப் பெண். அந்தத் துண்டினாலேயே பக்கத்தில் தட்டினாள். "தாத்தா, நகர்ந்து கொள். இன்னோர் ஆள் வருகிறது."

ஏறிக்கொண்டிருந்த காஞ்சிபுரத்தான் அந்தக் கிழவனைப் பிறகுதான் கவனித்தான். என்ன இது வேடம்?

வாய்க்குமேலே, கண்ணுக்குக் கீழே முகத்தைச் சுற்றி ஒரு துண்டு போட்டுக் கட்டிக் கொண்டிருந்தான் அவன். மூக்கு, கன்னம், காது மூன்றும் அந்தக் கட்டுக்குள் புதைந்திருந்தன. எதற்காக இந்த வேடம்?காஞ்சி இளைஞனுக்குப் புரியவில்லை. "பட்டணம் போகிற பிள்ளையா? ஏறிக்கொள், ஏறிக் கொள்' என்று இடம் கொடுத்தான் அந்தத் தொண்டுக்கிழவன். 'தங்கம்மா, இந்த ஆள்கிட்டே நிச்சயமாய் விலை போய் விடும் பார்' என்றான் பேத்தியிடம்.

'ஐயையோ! நல்ல ஆளாயிருக்கிறாரே! இவர் மாட்டிக் கொண்டாரா, பாவம்'

திகில் ஏற்பட்ட மாதிரி நடித்தான் காஞ்சிபுரத்தான். 'நீங்கள் இரண்டு பேரும் பேசிக் கொள்வதைப் பார்த்தால் பயமாயிருக்கிறது. நான் இறங்கிக் கொள்கிறேன். வண்டிக்காரரே, கொஞ்சம் நிறுத்துங்கள்."

அந்தப் பெண் கரும்புத் துண்டால் அவன் கையில் அடித்தாள். "பயப்படாதே ஐயா, தாத்தா உன்கிட்டே ஏதோ வியாபாரம் பண்ணலாமென்றுதான் பார்க்கிறார்."

'வியாபாரமா அது இன்னும் பயங்கரமாச்சே! சரி, சரக்கை எடுங்க. '

முன்புறமிருந்த வண்டிக்காரன், "என்ன, தாத்தா பட்டாக் கத்தியை எடுத்து விட்டாரா?' என்று புதிர் போட்டான்.

காஞ்சிபுரத்தானின் திகைப்பு, கணத்தில் நீங்கியது. காரணம், நெல்மூட்டைகளின் அடியிலிருந்து ஒரு நீண்ட வாள் வெளிப்பட்டது. பழமையானது. வேலைப்பாடுகள் மிகுந்த உறை கொண்டது. கனமானது.

'இதுதான் தம்பி. விலைக்கு எடுத்துக் கொள்கிறாயா?" முனைகளை நெருடினான் காஞ்சிபுரத்தான். கையிலிருந்த ஓலை விழுந்ததைக் கூட கவனிக்காமல் ரசித்தான். நல்ல எஃகு. பிடியில் மதுரை நாயக்கரின் முத்திரை பொறித்திருந்தது.

'பெரியவரே வாங்கிக் கொள்ள ஆசைதான்! ஆனால் பணத்துக்கு எங்கே போவேன்!"

கிழவர் தன் வேடிக்கையான முகத்தினால் அவனை உற்றுப் பார்த்தார். 'நல்ல பையன் நீ. சும்மாவே வைத்துக் கொள், போ விலைக்கு எடுத்துக் கொள்கிறாயா என்று கேட்டுக் கேட்டு எனக்கு அலுத்துப் போச்சு!"

கரும்புக் கன்னி கைகளைப் படபடவென்று கொட்டி னாள். "அண்ணே தாத்தா தலைமுழுகி விட்டார் பட்டாக் கத்திக்கு!'

வண்டிக்காரனுக்கும் உற்சாகம். 'போவுது போ இனி எவன் மண்டையும் உருளாது!'

'என்னிடம் அகப்பட்டாலொழிய' என்று திருத்தினான் காஞ்சிபுரத்தான். ‘‘தாத்தா என் கையெல்லாம் துறுதுறுக்குது. ஏதாவது பட்டாளத்தில் சேர வேண்டும் போல் இருக்கிறது.'

'ஐயையோ வேண்டாம் தம்பி அந்த ஆசை!’’ என்றார் பெரியவர். 'சேர்ந்தால், அறுபது எழுபது வருஷத்துக்கு முன்னாலே சேர்ந்திருக்க வேண்டும். அப்போது நடந்ததெல்லாம் தர்ம யுத்தம். இப்போது நடப்பதெல்லாம் வெறும் காட்டுமிராண்டித்தனம். மைசூர் நாயக்கர் 'மூக்கு யுத்தம்' நடத்தினாரே, அதிலிருந்து எல்லாமே கெட்டுப் போச்சு.'

'அதென்ன தாத்தா, மூக்கு யுத்தம்?"

"இரு, இரு, இரு வண்டியை நிறுத்தினாள் அந்தப் பெண். 'முகத்திலிருக்கிற கட்டை அவிழ்த்துக் காட்டிவிடுவார், தாத்தா. நான் போகிறேன் அண்ணனிடம்" அவள் வண்டியிலிருந்து குதித்தாள்.

கிழவர் சொன்னார்:

'மைசூர் நாயக்கருக்கும் மதுரை நாயக்கருக்கும் யுத்தம் நடந்தது, முப்பது நாற்பது வருடம் முந்தி. அப்போது நான் மதுரை பட்டாளத்திலே இருந்தேன். என்னவோ, யுத்தமென்றால் தோற்கிறதுதான். எதிரியிடம் சிறைப்படுகிறதுதான். ஆனால் இந்த மைசூர்க்காரங்க - சீ, சீ. அகப்பட்ட ஆட்களை யெல்லாம் கண்டதுண்டமாய்...'

'வெட்டிப் போட்டார்களா?"

'போட்டிருந்தால் பரவாயில்லையே! மூக்கையும் மேலுதட்டையும் மட்டும் வெட்டி, மைசூர் நாயக்கருக்கு அனுப்பிக் கொண்டிருந்தார்கள். அவர் மிகவும் சந்தோஷப் பட்டார். இவர்கள் உடனே வழியில் கண்ட ஆட்களையெல்லாம் தாக்கி மூக்குகளை வெட்டிச் சேகரித்து மூட்டை மூட்டையாய்க் கட்டி அனுப்பி வைத்தார்கள். இவ்வளவு மூக்குகளுக்கு இவ்வளவு பணம் என்று

மைசூர் நாயக்கர் வெகுமானம் தந்தார். அந்த மேலுதட்டில் கருகருவென்று மீசை இருந்தால், வெகுமானம் இன்னும் அதிகப்படி - செத்தவன் இளைஞன் என்பதால்!'

“என்ன கோரம்' காஞ்சிபுரத்தானின் பார்வை கிழவனின் முகத்தில் நிலைத்தது.

"ஆமாம், கோரம்தான். அந்தச் சித்திரவதையில் கொஞ்சம் கொஞ்சமாகச் செத்தார்கள் பெரும்பாலானவர்கள். என்னைப் போல் சிலருக்கு நல்ல பச்சிலை கிடைத்தது. காயத்தை ஆற்றிக் கொண்டோம். ஆனால் முகத்தை வெளியே காட்டினால் பார்க்கிறவர்களுக்குக் குலை நடுக்கம் ஏற்படும்...'

வண்டி சென்னைப் பட்டணத்துக்குள் நுழைந்து கொண் டிருந்தது.

வாளை நெருடினான் காஞ்சிபுரத்தான். அதன் ஒசிவு, தாமரையின் உடலை நினைவூட்டிற்று. அதன் கூர்மை, அவள் மோவாய். அதன் நீளம், அவள் விழிகள்.

பின்கை கட்டிக் கொண்டு உலாவினார் பெரியபெத்து. சுண்டு விரலின் நுனி மீசையின் கொடுக்கைச் சீண்டியது.

கணக்கப்பிள்ளையின் கையில் மாவு இருந்திருந்தால் கூழாகியிருக்கும். அப்படிப் பிசைந்து கொண்டிருந்தார். உடம்பு பதறிக் கொண்டிருந்தது.

"காணாமற் போன அந்த அடிமைப் பெண்ணை இன்னுமா ஐயா கண்டுபிடிக்க முடியவில்லை?”

'இல்லை... வந்து... தாமரை...'

“தாமரையாவது, மல்லிகையாவது காசுக்குப் புண்ணியமில்லாத ஆள் நீர். காசி வீரண்ணா அண் கோவில் சோற்றுக்குப் போதாத

சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தீர். நான் அதிகச் சம்பளத்துக்கு இங்கே வேலை போட்டுத் தந்தேனே, எதற்கு?"

கணக்கப்பிள்ளை பரிதாபமாகப் பார்த்தார். பேசவில்லை. “எதற்கு, ஐயா? சொல்லுங்களேன். வியாபாரத்தை நன்றாய் விருத்தி பண்ணுவீரென்று. இப்படி, விலை கொடுத்து வாங்கிய அடிமையைக் காணோமென்று கை விரிப்பதற்காக அல்ல. '

காஞ்சிபுரத்தான் அந்த நேரம் பார்த்து உள்ளே வந்தான். பெரியபெத்துவின் சிடுசிடுப்பில் பாதி குறைந்தது.

'அடிமைகளெல்லாம் ஒட்டம் பிடிக்கிற காலம் இது, நீயாவது திரும்பினாயே! நேர்மையானவன்தான். காயா, பழமா? '

'இரண்டுமில்லை. மொட்டு" என்றான் காஞ்சிபுரத்தான்.

'பிட்டுச் சொல்லு.'

'சிவசிதம்பரம் வர மறுக்கிறார். தடியெடுத்து அடித்தால் கூடப் பழுக்காது.'

'நீ என்னைக் கேட்காமல் அத்தனை அவசரமாய்க் கோட்டையில் புகுந்திருக்கக் கூடாது."

'மன்னிக்க வேண்டும்... சந்தர்ப்பம் கிடைத்தது.'

'பிரயோசனம் ?'

வளையோசையின் கட்டியம்.

தெய்வநாயகி உள்ளே வந்தாள். காஞ்சிபுரத்தானைக் கண்டதும் ஒரு கேள்விக்குறி - என்ன பண்ணினாய்?" என்பது போல்.

“என்னம்மா?' பெரியபெத்து விசாரித்தார். 'மாடசாமி அந்தக் கசையடி விடுதிக்குப் போய் ரகளை செய்திருக்கிறான் - தாமரை

காணாமற் போனதற்காக. ஏழெட்டுப் பேராகச் சேர்ந்து அவனைச் சக்கையாய்ப் பிழிந்து விட்டார்களாம்.'

மாடசாமி, அடிமைகளுக்குக் கங்காணியாயிருப்பவன்; அலி.

பெரிய பெத்து சினந்தார். 'பின்னே? பேரி செட்டி, பொங்கல் பண்டிகையின்போது கும்பினி கோட்டைக்குப் போனால் ஐந்து குண்டு போட்டு மரியாதை செய்வார்களே, அது மாதிரி கிடைக்கும் என்று நினைத்தானா? யார் அவனை ரகளை செய்யச் சொன்னது?"

'இரக்கமேயில்லை அப்பா, உங்களுக்கு. பாவம், உங்களிடம் ஏதோ சொல்ல வேண்டுமென்று முனகுகிறான்."

‘‘எனக்குத் தலைக்குமேல் வேலை." 'அவன் எவ்வளவு நல்லவன், அப்பா. உங்களுக்குத் துணையாக எத்தனை ஊர்களுக்கு வந்திருக்கிறான்'

'சரியம்மா, சரி. இறந்தால், சிறந்த முறையில் ஈமக் கடன்கள் நடத்துவோம்.'

'இரக்கமில்லாமல் பேசுகிறீர்களே, அப்பா என்னவோ உங்களுடன் இரண்டு வார்த்தை சொல்ல வேண்டுமென்று ஆசைப்படுகிறான். வாருங்கள். '

பெரிய பெத்து புறப்பட்டார். காஞ்சிபுரத்தானைக் கண்ணால் நிறுத்தினாள் தெய்வநாயகி. தனியே பேச வேண்டுமென்று குறிப்புக் காட்டினாள்.

ஆனால் பெரியபெத்து இடந் தரவில்லை. "நீயும் வா, தெய்வநாயகி' என்று அழைத்துப் போய்விட்டார்.

தோட்டத்தில், அரசமரத்தடியில் கும்பல். அலி மாடசாமியின் உடலில் பல இடங்களில் காயம். பெரியபெத்துவின் நடையோசைகூட்டத்தை விலக்கியது. பெரியபெத்து சுற்றுமுற்றும் பார்த்தார். அழுக்கு, அருவருபபு, அசுததம.

பெரியபெத்துவின் அருகிலிருந்த ஒருவன் சொன்னான்: 'தங்களிடம் ஏதோ சொல்ல வேண்டுமென்று புலம்புகிறான் பாவம்... தாமரை, தாமரை என்று வேறே முனகல்...'

'என்னவென்று நீதான் கேளேன். ' 'பெரிய ஐயா வந்திருக்கிறார்கள்' அவன் கத்தினான். பயனில்லை.

'நீ கேட்டுப் பார். மகளை ஏவினார். அவள் குனிந்து கேட்டாள். 'உங்களிடம்தான் ஏதோ சொல்ல வேண்டுமாம். சலிப்புடன் அவள் அகன்று விட்டாள்.

வேறு வழியில்லை. குனிந்தார். 'அந்தப் பெண் தாமரை... பதினேழு... வருடங்களுக்கு முன் தஞ்சையில் வாங்கினோம்.... சிங்காவரம் சிம்மாதனத்தின் வாரிசு... போதாத காலம் நம்மிடம் விற்றார்கள்... இத்தனை நாள் மறைத்ததற்கு மன்னியுங்கள்...'

என்ன பிரமிப்பான செய்தி! 'மருத்துவமனையில் சேர்த்து இவனை உடனே கவனியுங்கள், ' என்றார்.

பலவிதமான யோசனைகள்... மீசையைச் சுண்டியபடி நடந்தார்.

தோட்டத்தின் மூலையில் ஒரு கிடங்கு இருந்தது. வண்டியிலிருந்து நெல் மூட்டைகளை இறக்கிக் கொண்டிருந் தார்கள்.

பெரிய பெத்துவுக்குச் சீற்றம் ஏற்பட்டது. பொதேர் பொதேரென்று எப்படித் தள்ளுகிறார்கள் கீழே!

'அடேய் என்ன அலட்சியமடா உங்களுக்கு ஒவ்வொரு நெல்லும் ஒரு மகாலட்சுமி எத்தனை சிந்தியிருக்கிறீர்கள் கீழே ஊம்?' ஆத்திரத்துடன் பூமியில் விழிகளைச் சுழற்றினார்.

என்ன அது?

ஓலையா? "யாரடா போட்டது இதை?" எடுத்துக் கொண்டே கேட்டார். 'வண்டியிலே யாருக்கெல்லாமோ இடம் கொடுத்தோம், யார் போட்டார்களோ தெரியவில்லையே..."

வண்டிக்காரனின் பதிலை அவர் கேட்டுக் கொண்டிருக்கவில்லை. சிந்தனைகள் சுழன்றன. கால்கள் விரைந்தன. கண்கள் திரும்பத் திரும்ப அந்த ஓலையை வட்டமிட்டன.

''சிரமத்தின் பேரில் இளவரசியாரைக் கண்டுபிடித்து விட்டோம்.... இளவரசியாரிடம் கூடச் சொல்லவில்லை... அழைத்து வருகிறோம்...' - எங்கேயோ அனுப்பப்பட்ட ஓலை தவறுதலாக நெல் வண்டியில் விழுந்து இங்கே வந்திருக்கிறது. அலி மாடசாமி தாமரையைப் பற்றிச் சொன்னது... அடிமைப் பெண் தாமரை காணாமற் போனது... சிங்காவரம் மன்னனுக்கு அனுப்பப்பட்ட இந்த ஓலை...

அப்படியானால், யாருக்கும் தெரியாமல் ஓர் அரசகுமாரி இங்கே அடிமைப் பெண்ணாக இருந்திருக்கிறாள்...! -

பரபரத்தது உள்ளம். துறுதுறுத்தது கை. பெரிய பொக்கிஷக் கிணற்றைப் பார்த்தாயிற்று... அதை எடுக்க எதுவோ தேவை... என்ன அது...

'தெய்வநாயகியை வரச்சொல்...' கட்டளை பிறப்பித்து விட்டு, கணக்கப்பிள்ளையின் அறைக்குத் திரும்பினார்.

'கூப்பிட்டீர்களா அப்பா?" 'மகாராணி மாதிரி மெதுவாய் வருகிறாயே!' காரணம் தெரியாமலே கோபம் வந்தது பெரியபெத்துவுக்கு.

தூத்துக்குடி முத்தைக் கழுத்தில் அல்லவா அணிந்திருக்கிறாள்! பின்னே அதரங்களுக்கிடையில் பளிச்சிடுகிறதே!

"சொன்னாலும் சொல்லாவிட்டாலும், நான் ராணிதான் அப்பா பெரியபெத்துவின் மகள் என்றால், சிற்றரசிக்குச் சமானமில்லையா?" என்றாள் மகள்.

ராணி, சிற்றரசி!

பெரியபெத்துவின் கண்கள் ஒளியுடன் மின்னின. மீசையின் நுனிகள் ஆசையினால் துடித்தன.

"கணக்கப்பிள்ளை நெல் வண்டி வந்திருக்கிறதே, எந்தப் பாதையில்?'

'வேலூர் வழியாக, ஐயா...'

'இரண்டு ஆட்களை உடனே அங்கே குதிரையில் அனுப்புங்கள். காற்றாய்ப் பறக்க வேண்டும். புரிகிறதா? இங்கிருந்து தப்பிப்போன தாமரை என்கிற பெண்ணை, சிங்காவரம் கோட்டைக்கு அழைத்துப் போய்க் கொண்டிருக்கிறார்கள். அவளை மடக்க வேண்டும். விடிவதற்குள் எனக்குத் தகவல் கிடைக்குமா?"

'ஏற்பாடு செய்கிறேன், ஐயா...'

'இரும். ' போனவரை நிறுத்தினார். 'அந்த அடிமைப் பெண் தாமரைக்கு ஏதாவது விசேட அடையாளம் உண்டா?"

"ஆமாம், ஐயா. வலது மணிக்கட்டினருகில் ஒரு தாமரைப் பூவின் படம் பச்சை குத்தியிருக்கும்.'

'நல்லது. பச்சைக் குத்தத் தெரிந்த யாராவது இருந்தால் இங்கே வரச்சொல்... தெய்வநாயகி, உனக்குப் பச்சைக் குத்திக் கொள்ள ஆசை உண்டல்லவா?"

"என்ன அப்பா, இதெல்லாம்?' என்றாள் தெய்வநாயகி. 'ஒன்றுமில்லை. என் மூளை, உன் அதிர்ஷ்டம், நாட்டின் நிலைமை

மூன்றும் ஒன்று சேர்கின்றன. பெருமையுடன் மீசையைத் தட்டிக் கொண்டார் பெரியபெத்து.

## (10)

"ராணியை அடிமைப்படுத்தி விட்டேன் கொக்கரித் தார் ரகுநாதர்.

'ஹாஹ்ஹா' தொடையைத் தட்டிக்கொண்டு சிரித்தார் கிருஷ்ணப்பர். 'தங்கள் வெற்றி குறிப்பிடத்தக்கதுதான், மாமா. அடிமைகள் ராணியாகிற காலமல்லவா இது!"

'பேச்சு, பேச்சு, பேச்சு. மீண்டும் பேச்சு" முகம் சுளித்தாள் சென்னம்மா. சதுரங்கம், அவளுக்குப் பிடிக்காத ஆட்டம். அவள் அதரம் குளிர் ரசத்தைச் சுவைத்துக் கொண்டிருந்தது. விழிகளோ கனலைக் கக்கின.

சதுரங்கப் பலகையை நகர்த்தினார் ரகுநாதர். மகளை நோக்கி முறுவலித்தார். "ஏச்சு, ஏச்சு, ஏச்சு. மீண்டும் ஏச்சு. சென்னம்மா, பேச்சை இகழ்வது பெருந் தவறு. பார்க்கப் போனால், ஆண்டவன் செய்த வஞ்சகத்தை எதிர்த்து நிற்பது மனிதனின் பேச்சு ஒன்றுதானே!"

அரசி சென்னம்மா முகத்தைத் திருப்பிக் கொண்டாள். ஆனால் கிருஷ்ணப்பர், "அதென்ன மாமா, புதிதாயிருக்கிறது?" என்றார்.

‘‘பாருங்களேன். மனிதனுடைய எல்லா உறுப்புக்களையும் உலகத்தார் கண்ணில் படும்படி வெளிப்படையாய் அமைத்திருக்கிறான் ஆண்டவன். இந்த நாக்கை மட்டும், தில்லித் துருக்கரைப்போல், வாய்க்குள் மூடி மறைத்திருப்பது வஞ்சனையில்லையா? பேசப் பேச, தெய்வத்தின் சதியை உடைக்கிறோமென்றுதானே பொருள்!"

"முற்றிலும் உண்மை, மாமா' கிருஷ்ணப்பர் ஆமோதித்தார். ‘‘இன்றைக்குத் தமிழ் நாட்டிலேயே மிகப் பெரிய அறிவாளி என்று போற்றப்படுபவர் யார்? சாந்தை என்கிற பெண்மணி! ஏன்? நாக்குக்கு உரிய மதிப்புக் கொடுப்பதால். மாபெரும் மேதைகள் அவளெதிரில் தர்க்கத்திலும் வாதத்திலும் தோற்றோடுகிறார்கள்! பேச்சின் பெருமையே பெருமை."

உப்பரிகையின் வழியே எட்டிப் பார்த்தாள் சென்னம்மா. 'தங்கள் பேச்சுக்கு இதோ ஒரு பயிற்சி, அப்பா. புறப்பட்டவர் இரண்டு பேர். திரும்பியவன் ஒருவன்தான். என்ன அர்த்தம் இதற்கு?"

திகைப்புடன் ராணியை நெருங்கினார் கிருஷ்ணப்பர். பின்னாலேயே சென்று நின்றார் ரகுநாதர். அரண்மனைக்கென்று ஏற்பட்ட அந்தரங்கப் பாதையில் புரவி வீரனொருவன் ஏறி வந்துகொண்டிருந்தான்.

'கையில் லிகிதக் குழல் வைத்திருக்கிறானே? கிழவன் வேல்பண்டிதன் ஏதோ செய்தி அனுப்பியிருக்கிறான், !" ரகுநாதர் விளக்கினார்.

குதிரையை ஓரமாக நிறுத்திவிட்டு அவன் வந்தான். "வாழ்க மன்னர்' என்றவாறு குனிந்து வணக்கம் செலுத்தினான். 'சென்ற காரியம் வெற்றி அரசே. வேல்பண்டிதர் கொடுத்த ஓலை இதோ" என்றான்.

கிருஷ்ணப்பர் குழலைப் பெற்றுக் கொண்டார். மூடியை அகற்றினார்.

வெற்றுக் குழல் அவரைத் திகைக்க வைத்தது. 'நீ விளையாடுகிறாயா, இல்லை, வேல்பண்டிதனா?’’ இடியென இறங்கியது அரசனின் குரல்.

'அதற்குள்... இருந்ததே... எங்கே விழுந்திருக்கும்?" தூதன் தடுமாறிப் போனான்.

பதறாதிருந்தவர் ரகுநாதர் ஒருவர்தான். 'பரவாயில்லை. ஓலையைக் காணாவிட்டால் என்ன? நீயே சொல் செய்தியை."

கிருஷ்ணப்பர் குறுக்கிட்டார்: "அதெப்படி? ராஜாங்க வேலையில் அஜாக்கிரதை என்பது...'

'மன்னிக்க முடியாத குற்றம்தான். ஆனால் இப்போதல்ல." ரகுநாதர் வீரனின் பக்கம் திரும்பினார். 'சொல்லப்பா."

கண்ணில் நன்றியுடன் கூறினான் அவன்: "இளவரசியாரைக் கண்டுபிடித்து அழைத்து வந்தோம். இளவரசியாருக்குக் காய்ச்சல் ஏற்பட்டதால், வேலூருக்குப் பக்கத்திலே ஒரு கிராமத்தில் தங்கியிருக்கிறார்... இரண்டு நாளில் வந்து விடுவார் "

கிருஷ்ணப்பர் மாமாவின் கண் ஜாடையைக் கண்டார். உடனே, பீறிட்டது புலம்பல். 'என் கண்மணி கிடைத்து விட்டாளா? வந்து கொண்டிருக்கிறாளா ராணி? போ, போ. உடனே ஏற்பாடுகளைச் செய். அரண்மனையெங்கும் தீபங்கள் ஏற்றப்படட்டும். வாத்தியங்கள் முழங்கட்டும். திருக்கோயில்களில் வழிபாடுகள் தொடங்கட்டும்...' -

'அரசர் அவசரப்படக் கூடாது," இடைமறித்தார் ரகுநாதர். 'இளவரசியார் கோட்டைக்குள் வந்து சேருகிற வரையில் எவருக்கும் தெரியாமல் ரகசியத்தைக் காப்பாற்றுவதே மேல்," குதிரை வீரனுக்குக் கட்டளை பிறந்தது.

'நீ போய் வேல்பண்டிதனையும் இளவரசியாரையும் பத்திரமாய் அழைத்துவா. இந்தா, உன் சேவைக்கு ஒரு சிறு பரிசு. " ஒரு முத்து மாலையைக் கழற்றினார். அவன் கழுத்தில் போட்டார்.

கெட்டித்த பீரங்கிதான். அப்படிக் குமுறிக் கொண்டிருந்தாள் சென்னம்மா. புரவி வீரன் அகன்றதுமே வெடித்தாள்.

"ரகசிய ஓலையைக் காணாது அடித்துவிட்டு வந்திருக்கிறான். இவனே ரகசியத்தை ஊரெங்கும் பரப்புகிறானோ என்னவோ?

தண்டனைதான் கொடுக்கவில்லை. பரிசு வேறு கேடா என்ன அக்கிரமம்'

ரகுநாதர் புன்னகை புரிந்தார்; காவலாளொருவனை விளித்தார். "சித்திரைத் திருவிழாப் போட்டிக்காக அரண்மனை ஆட்கள் பயிற்சி செய்து கொண்டு வருகிறார்களா ஒழுங்காக?"

"ஆம், ஐயா. வசந்த மண்டபத்தில் இப்போதுகூட நடந்து கொண்டிருக்கிறது பயிற்சி' என்றான் அவன்.

சென்னம்மாவுக்கு எத்தனை எரிச்சல்!

'ஏனப்பா, மகுடாபிஷேகக் கேளிக்கைகளை முன்ன தாகவே தொடங்கலாமென்று விசாரிக்கிறீர்களா?"

ரகுநாதர் காவலாளியிடம் சொன்னார்: 'பயிற்சியாளர்களில் ஊமையன் ஒருவன் இருப்பான். அவனை அழைத்து வா. "

கிருஷ்ணப்பர் கூடப் பொறுமை இழந்தார். "வேடிக்கை விளையாட்டுக்கு இதுவா நேரம், மாமா?"

ரகுநாதர் புன்னகையுடனேயே இருந்தார். ஊமையன் வந்தான். அம்மம்மா மனிதனா அல்லது அரக்கனா? இரண்டாள் உயரம் சரீரம். கொள்ளிக் கண். நெற்றிப் புருவம், காட்டுப் புதர். எமனிடம் சூலம் போல, கையில் வில். .

கருங்காலி முதுகில் தட்டிக் கொடுத்தார் ரகுநாதர். 'பயிற்சியெல்லாம் சரியாய் நடக்கிறதா?’’

'ஊம். '

"இலக்கு எத்தனைதூரமானாலும் அடித்து வீழ்த்துவாயா?"

"ஊம். '

"இலக்கு, அசையாப் பொருளல்ல. நகர்ந்து கொண் டிருக்கும் பொருளானால்?"

'ஊம், ஊம். '

"எங்கே, அதோ பார். ' ஊமையன் மட்டுமல்ல. கிருஷ்ணப்பரும், சென்னம்மாவும் கூடப் பார்த்தார்கள் அவர் கை சுட்டிய திசையை.

மலையடிவாரப் பாதையில் அந்தப் புரவி வீரன் திரும்பிக் கொண்டிருந்தான்.

'காட்டு உன் சாமர்த்தியத்தை,' என்றார் ரகுநாதர். பேயெனப் புறப்பட்டது கணை. வெற்றுக்குழல் கொண்டுவந்த வீரன் விழுந்தான். 'அருமை!' என்று மூன்று குரல்கள் பாராட்டின.

'அவன் கெட்டிக்காரத்தனத்தைப் பாராட்டி ஒரு முத்து மாலை தந்தேன் சற்று முன்னால். போய் எடுத்துக் கொள். அவனைக் காட்டிலும் நீதான் கெட்டிக்காரன்."

விகாரமாய் இளித்தபடி ஊமையன் திரும்பினான். "நில்" என்றார் ரகுநாதர். 'வேலூர் சாலையில் இரண்டு மூன்று வீரர்களுடன் போ. ஒரு பெண்ணை அழைத்துக் கொண்டு வேல்பண்டிதன் வந்து கொண்டிருப்பான். அந்தரங்கப் பாதை வழியாக அவர்களை அழைத்து வா."

என்ன பிசிறில்லாத நடவடிக்கைகள் இரு ஜோடிக் கண்கள் அவரை வியப்புடன் நோக்கியவாறு நிலைகுத்தி நின்றன.

தாமரைக்குத் துளியும் சந்தேகம் ஏற்படவில்லை. இருட்டோடு இருட்டாக, விநாயகர் கோவில் வாசலுக்கு, பல்லக்கு வந்து நின்றது.

'குதிரையல்லவா கொண்டு வருவதாகச் சொன்னிர்கள்!" என்றவாறு வெளிவந்தாள்.

அதிர்ச்சிக்குமேல் அதிர்ச்சி. உள்ளங் கவர்ந்த இளைஞனுக்குப் பதில் கடத்தி வந்த கிழவன் காத்திருக்கிறானே! பல்லக்கும், பழைய பல்லக்கே.. தூக்கிகளும் பழைய ஆட்களே.

'அமருங்களம்மா. நாம் போகலாம்' என்றான் வேல் பண்டிதன.

'அவர்... அவர்...'

'அந்தப் பட்டணத்துப் பையனா? அவன் திரும்பி விட்டான் சென்னைப் பட்டணத்துக்கே."

ஏன்? ஏன்? தலைசுற்றியது தாமரைக்கு. 'நாம் போக வேண்டியது இன்னும் வெகு தூரம் இருக் கிறது. புறப்படுங்கள்' என்று கிழவன் துரிதப்படுத்தினான்.

ஆத்திரம் தாமரையின் அடக்கத்தை அழித்தது. 'நான் எங்கேயும் வரத் தயாராயில்லை."

"யோசித்துப் பேசுங்கள். இங்கே ஓர் உயிர் பலியாகும்.'

"என் உயிர்தானே? அது சென்னைப் பட்டணம் போய் விட்டது. தாராளமாய் இந்த உடம்பை வெட்டிப் போடலாம்.'

'தங்களைச் சொல்லவில்லை. என்னைச் சொல்லிக் கொண்டேன்.' உருவிய வாள், வேல்பண்டிதனின் கழுத்திலே இருந்தது. 'உரிய இடத்தில் தங்களை நான் சேர்ப்பிக்கா விட்டால், கடமையிலிருந்து தவறினேன் என்று அர்த்தம். அதன் பிறகு நான் ஏன் உயிருடன் இருக்க வேண்டும்?"

ஒரு பெருமூச்சுடன் பல்லக்கில் அமர்ந்து கொண்டாள், தாமரை. எண்ணாததெல்லாம் எண்ணியது அவள் உள்ளம். 'அவர் திடீரென்று எங்கே போனார்? ஏன் போனார்? ஒன்று நிச்சயம். திட்டமிடுவதில் அவருக்கு நிகர் அவரே. எதற்காகவோ பதுங்கியிருக்கிறார். எந்த நிமிடத்திலும் பாயப் போகிறார்.

இவ்வாறு நினைத்த வண்ணமே தாமரை பயணம் செய் தாள். உச்சிப் பொழுதைத் தாண்டிய வேளையில்

'நிறுத்துங்கள் பல்லக்கை!" என்ற கூச்சலும் குதிரைகளின் குளம்படி ஓசையும் கேட்டன. பல்லக்கு திடுப்பென இறக்கப்பட்டது தரையில்.

'அவர்தான்! அவர்தான்! விநாடி நேரம் பூரித்தது தாமரையின் உள்ளம். எட்டிப் பார்த்தாள். துவண்டு போனாள். வாணலிக்குத் தப்பி அடுப்பிலே விழுவதென்பது இதுதானோ!

தடுத்து நிறுத்தியவர்கள் பெரியபெத்துவின் ஆட்கள்! தாமரை உடனே கண்டுவிட்டாள்.

பல்லக்குத் தூக்கிகள் நிராயுதபாணிகள். பாக்குக் கடிக்கும் நேரம்கூடத் தாக்குப் பிடிக்க முடியவில்லை. கிழவன் வேல் பண்டிதன் தன்னந்தனியாகப் போரிட்டான். இறுதியில், குருதி வெள்ளத்தினூடே அவனும் விழுந்தான்.

ஏக்கத்துடன் தாமரையைப் பார்த்தன அவன் கண்கள். என்ன சொல்ல விரும்புகிறான்? பல்லக்கின் மூலையில் பயந்து ஒடுங்கியிருந்த தாமரை துடித்தாள். அற்ப நேரமே பழகினார்களெனினும் அந்தக் கிழவனுக்குத்தான் எத்தனை பண்பாடு தாமரையிடம் எவ்வளவு மரியாதை!

அருகில் செல்ல நினைத்தாள். அதற்குள் அந்த முதியவனின் கண்கள் மூடிவிட்டன.

"தூக்குங்கள் பல்லக்கை!' என்று கட்டளையிட்டான் பெரியபெத்துவின் ஆட்களுக்குத் தலைமை தாங்கியவன்.

விழுந்து கிடக்கும் வேல்பண்டிதனைச் சொல்லவொண்ணா வேதனையுடன் பார்த்தாள் தாமரை. எங்கே அழைத்துப் போகவிருந்தான் அவன்? என்ன ரகசியத்தை அப்படிப் போற்றிப் பாதுகாத்தான்? இனி எவருமே சொல்லமாட்டார்களே அவளுக்கு!

பல்லக்கு, தரையிலிருந்து எழும்பியது. அடுத்த ஆச்சரியம். அடுத்த போர். எதிர்த் திசையிலிருந்து ஏழெட்டுக் குதிரை வீரர்கள் பாய்ந்து வந்தார்கள்.

ஓ! இப்போதுதான் அவர் வருகிறாரோ தாமரையின் கற்பனை மீண்டும் மலர்ந்தது; மீண்டும் மடிந்தது. இவர்கள் வேறு யாரோ அவரைக் காணோம்!

தீப்பொறி பறந்தது. ரத்தம் பீரிட்டது. தலைகள் உருண்டன. பல்லக்கினுள்ளே மூர்ச்சித்து விழுந்தாள் தாமரை.

குளிர்ந்த காற்று. மலைக்காட்டு மலர்களின் இனிய மணம். இதமான வெய்யில்.

விழிப்பு வந்தது. குன்றின் மேலிருக்கும் கோட்டையொன்றை நோக்கித் தன் பல்லக்குத் தூக்கிச் செல்லப்படுவதை உணர்ந்தாள் தாமரை.

என்ன கோட்டை? யாருடைய அரண்மனை? இங்கேதான் அந்தக் கிழவனும் தன்னை அழைத்து வருவதாக இருந்தானா? அப்படியானால் இந்த அரண்மனைக்கும் தனக்கும் என்ன சம்பந்தம்? விநாடியில் விடை கிடைத்தது.

''தாமரை வந்தாயா கண்ணே, வயிற்றில் பால் வார்த்தாயே செல்வமே' ஓடி வந்தார் மன்னர் கிருஷ்ணப்பர்.

ரகுநாதரின் ஒரு கண்ணசைப்பில், பல்லக்கு ஆட்கள் அகன்றுவிட்டனர்.

'வா, அம்மா. பதினெட்டு வருடங்களுக்குப் பிறகு பிறந்த வீட்டுக்கு வந்திருக்கிறாய். உனக்கு ஆண்டவன் எல்லா நலன்களும் அளிப்பாராக' கையை உயர்த்தி ரகுநாதர் ஆசி கூறினார்.

மார்போடணைத்து உச்சி மோந்தாள் ராணி சென்னம்மா. கிருஷ்ணப்பர், தாமரையின் திகைப்பைப் போக்கினார். ‘‘தாமரை இது உன் அரண்மனை அம்மா! இது உன் ராஜ்யம். உன் நாடு. உன் மக்கள். விதியின் சதியால் பிரிந்திருந்தாய். நீ என் அண்ணன் மகள். நீ அமரவேண்டிய சிம்மாதனத்தில் நான் உட்கார்ந்திருந்தேன் இத்தனை காலமும். அந்த முள்ளாசனத்திலிருந்து இன்றுதான் விடுதலை கிடைத்தது!"

புலன்கள் பஞ்சடைந்தன தாமரைக்கு. வாய், சொல்லை இழந்தது. கண், பார்வையை இழந்தது. மனம், எண்ணத்தை இழந்தது.

சுற்றுமுற்றும் நோக்கினாள். பிரமிப்புடன் ஏதோவொரு ஜன்மத்தில் இங்கே உறவு கொண்டிருந்த மாதிரி தோன்றியது.

ரகுநாதரின் கம்பீரமான குரல் முழங்கியது. "நாளையே முடிசூட்டு விழாவை வைத்துக் கொள்ள வேண்டும். யாரங்கே?'

இரண்டு பணிப்பெண்கள் ஓடிவந்தார்கள். "இளவரசியைச் சயன அறைக்கு அழைத்துச் செல்லுங்கள். இளைப்பாறட்டும்.'

கிருஷ்ணப்பர் சொன்னார்: "ராணி! நீயும் கூடச் சென்று இளவரசியாரைக் கவனிக்கலாமே!'

ஆனால் செல்லவில்லை சென்னம்மா. தாமரையின் தலை மறையுமட்டும் நின்றிருந்தாள். பிறகு சீறினாள்: "அழகுதான் மாமாவும் மருமகரும் செய்கிற காரியங்கள் ஒழிக்கப்பட வேண்டியவளுக்கு எதற்காக உபசாரமும் பணிவிடையும்? அகப்பட்ட இடத்திலேயே அழித்திருக்கலாம். செய்யாமல் அழைத்து வந்தீர்கள். இங்கேயாவது உடனே தலையைச் சீவி விட்டுப் போகாமல், விஷச் செடியை ஏன் வளரவிடுகிறீர்கள்?"

நகைத்தார் ரகுநாதர். "எலியின் உயிரைப் பூனை எப்படிப் பறிக்கிறது என்று நீ பார்த்ததில்லை, மகளே! வெறுமே தலையைச் சீவுவது கசாப்புக்காரனின் வேலை. இப்படிக் குளிப்பாட்டிச் சீராட்டி, கொலை செய்வதுதான் உண்மையான கலைஞனின் லட்சணம் போ சென்னம்மா, போ. இந்தக் கலை நிகழ்ச்சியில் உன் பங்கையும் ஆற்று. '

பன்னீர்த் துளிகள் குசலம் விசாரித்தன; சந்தனக் குழம்பு மேனியைக் குளிர்வித்தது; மயிலிறகு விசிறி, காற்றால் தாலாட்டியது.

எட்டுக் கண்ணாடிகள் எட்டுக் கோணங்களில் பிரதிபலித்தன தாமரையை. பொன்னும் மணியும் பட்டாடைகளும் மாறி மாறிப் பளபளத்தன. திகைப்பு, பிரமிப்பு, உவகை ஆகியவை மாறி மாறி மனத்தில் மோதின. அடிமைப் பெண்ணுக்கு அரச வாழ்வு சாட்டையடியால் தழும்பேறிய தேகத்துக்குச் சிங்கார அலங்காரம்!

கூந்தலை வாரி முடித்தாள் சென்னம்மா. பூச்சூட்டினாள். திலகமிட்டாள்.

"ராணி" உறுமியது கிருஷ்ணப்பரின் குரல். திரும்பினாள் சென்னம்மா. 'உன் இழிந்த உள்ளம் இன்றுதான் எனக்குப் புரிகிறது! சே, சே ஆண்டு அனுபவித்த அரசை, அண்ணன் மகள் பறிக்க வந்துவிட்டாளே என்ற காழ்ப்பு உனக்கு என்ன இருந்தாலும் எங்கிருந்தோ வந்தவள்தானே நீ! எங்கள் குலக் கொழுந்தி னிடம் வாஞ்சை எப்படிப் பிறக்கும்?"

“அரசே" விம்மினாள் சென்னம்மா. 'நான் ஒரு பிழையும் செய்யவில்லையே!'

'சிற்றப்பா அவர் ஒரு தவறும் செய்யவில்லையே?" என்று பரிந்து வந்தாள் தாமரையும்.

'உனக்குத் தெரியாது, கண்ணே!" என்றார் கிருஷ்ணப்பர். மீண்டும் ராணியிடம் கர்ஜித்தார்: "முடிசூட்டு விழாவுக்கு முதல்நாள், ராணிக்கு

என்ன அணிவிப்பது வழக்கம்? தெரி யாதா உனக்கு, அரண்மனைச் சம்பிரதாயம்?"

நவரத்தின மாலையைத் தாமரையின் கழுத்தில் அணிவித்தாள் சென்னம்மா.

தாமரையின் உள்ளம் நெகிழ்ந்தது. "சிற்றப்பா, இந்தச் சம்பிரதாயங்களையெல்லாம் செய்தால்தான் உங்கள் அன்பு வெளிப்படுமா? எங்கோ அடிமையாய் உழன்ற என்னைத் தேடிப் பிடித்து...'

''வேண்டாம், வேண்டாம்!" அவள் வாயைப் பொத்தினார் கிருஷ்ணப்பர். 'அந்தத் துன்பங்களை நீயும் மற. எனக்கும் நினைவூட்டாதே. அலங்காரங்களை முடித்துக் கொண்டு சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொள். நள்ளிரவு நேரத்துக்கு நீராடச் செல்லவேண்டும்...'

'நள்ளிரவிலா?"

'ஆம் குழந்தாய்! அரண்மனையின் தெற்குத் திசையில் அகழிக்குப் படித்துறை இருக்கிறது. காசி தீர்த்தம் என்று பெயர். அங்கே நன்னீராட வேண்டுமென்பது முன்னோர்கள் ஏற்படுத்தி வைத்த வழக்கம். நீராடிய பின்னர் ஊர்வலம். சென்னைப் பட்டணத்தில் கும்பினியார் விற்பனை செய்யும் உயர்ந்த பாரசீகக் குதிரைகளை இதற்கென்றே வாங்கி வைத் திருக்கின்றோம். சற்று ஓய்வெடுத்துக் கொண்டு தயாராயிரு..."

அரசர் வெளியேறினார். சென்னம்மா பின்தொடர்ந்தாள். சேடிகளும் அகன்றனர்.

கண்ணாடியைப் பார்த்தவாறு அமர்ந்திருந்தாள் தாமரை. நவரத்தின மாலையை அவள் விரல்கள் விளையாட்டாய் நெருடின. என்ன மின்னல் பிரகாசம் தலையைச் சாய்த்தாள். எட்டுப்

பிரதிபிம்பங்கள் சாய்ந்தன. செவியணியைச் சுண்டிவிட்டாள். குழந்தைகள் ஒடுவது போல் அறையெங்கும் ஒளி ஒடிற்று.

இப்போது அவர் பார்த்தால்... ஒரு கணம் அவள் உள்ளம் சாம்பியது. கண்களை மூடிக்கொண்டு மெல்ல மஞ்சத்தில் சாய்ந்தாள். உவகையின் போதையில் அவள் ஆழ்ந்திருந்த சமயம், அரண்மனையின் மறுபகுதியில் சினத்தின் உச்சியில் சீறிக் கொண்டிருந்தாள் சென்னம்மா.

'பார்க்கக்கூட எவருக்கும் தகுதியில்லை என்று பாதுகாத்து வருகிறேன், அந்த நவரத்தின மாலையை அந்த அடிமைக் கழுதைக்கு அணிவித்து விட்டீர்களே ஒரு நொடியில்!'

"ராணி எங்கே போகிறது அவ்வளவும் காசி தீர்த்தத்தில் நீராட்டப் போகு முன்பு, கழற்றிக்கொள் ஒன்று விடாமல்!"

ஆத்திரம் அளவு கடந்தது சென்னம்மாவுக்கு. "நீராட்டல் வேறு கேடாக்கும்! அதற்கப்புறம்?'

'அதற்கப்புறமா?' இடி இடியென்று கிருஷ்ணப்பர் சிரித்தார். 'அதற்கப்புறம் எதுவுமில்லை, ராணி! அதுதான் கடைசி நிகழ்ச்சி!'

'விளங்கச் சொல்லுங்கள். '

'வா, காட்டுகிறேன். '

சுரங்கம் போன்ற பாதை. வழி நடத்திச் சென்றார் கிருஷ்ணப்பர்.

'வேலூர் அகழியை மாதிரியாக வைத்து அமைத்தது நமது அகழி. அதன் சிறப்பு என்னவென்று உனக்குத் தெரியாதே?’’

'என்ன? ' *

முறுவல் பூத்தது மன்னர் முகத்தில். படித்துறையை அடையும் வரை அவர் பேசவில்லை.

அந்தி வேளை. சோம்பல் முறித்துக் கொட்டாவி விடுவதுபோல் மரங்களின் நிழல்கள் நீள விழுந்தன.

'யாரங்கே?' என்று கைதட்டினார் மன்னர். ஓடோடி வந்தான் ஒரு காவலாள். கொழுத்த பெரிய செம்மறியாடு ஒன்று அவன் கையில் இருந்தது.

"தூக்கிப் பிடி...' அகழித் தண்ணிருக்கு மேல் தூக்கிப் பிடித்தான். ஆட்டின் நிழல் தண்ணிரில் விழுந்ததும்ஏழெட்டு ராட்சத முதலைகள். நிழல் விழுந்த இடத்துக்குப் பாய்ந்து வந்தன. ஆவென்று வாயைத் திறந்தன. ஈட்டிப் பற்கள் நீட்டி நின்றன.

'போடு!" மன்னரின் கட்டளை பிறந்ததும் அவன் ஆட்டை எறிந்தான் தண்ணிரில்.

கிழித்துக் குதறின. அத்தனை முதலைகளும் ஒரு சேர. வினாடிதான். ஆட்டின் வளைந்த பெரிய கொம்புகூட மிச்சம் இருக்கவில்லை.

“தாமரை இங்கேதான் இறங்கி நீராடப் போகிறாள்!" என்றார் கிருஷ்ணப்பர்.

## (11)

'என்னடா பராக்குப் பார்த்துக்கொண்டு நிற்கிறாய்? வேலையைப் பார். '

காஞ்சிபுரத்தானின் கழுத்தைப் பிடித்து நெட்டித் தள்ளி னான் ஒரு மேலாள். சென்ற சில நாட்களாக நடந்தது; கண் விழித்தது; ஓடியது; தேடியது; துடித்தது; அம்மம்மா இது எலும்பில் செய்த உடல்தானா? அல்லது எஃகாலான யந்திரமா? கெஞ்சியது கொஞ்சம் படுக்கிறேனென்று.

எந்த மரத்தடியில் தலை சாய்க்கலாம் என்றுதான் நோட்டம் விட்டுக் கொண்டிந்தான். அதற்குள் பிடிபட்டு விட்டான்.

'ஊசி கொண்டு வருகிறேனென்று சொல்லி ஒட்டம் பிடித்த அயோக்கியனல்லவா நீ? போடா, போய் அங்கே கழுத்தைக் கொடு."

சுட்டிக் காட்டிய இடத்தைக் கண்டான். கண்ணில் ரத்தம் வந்தது.

கபிலை போட்டுத் தண்ணிர் இரைக்க வேண்டிய கிணற்றினருகே நுகத்தடியைக் காளைகள் சுமந்து கொண்டிருக்கவில்லை. பதினாலு வயதுப் பாலகனொருவன் ஏற்றிருந்தான் அதை.

"என்னடா யோசிக்கிறாய்? மாட்டுக்கு ஒய்வு கொடுத்து அனுப்பியிருக்கிறேன். நாளைக் காலையில்தான் வரும். அது வரையில் நீயும் அவனுமாய் இழுங்கள். போ' மேலாளின் கையிலிருந்த புளியங்கிளை காஞ்சிபுரத்தானின் முதுகைக் கொஞ்சியது.

'தம்பி, நான் பார்த்துக் கொள்கிறேன். சும்மா நீயும் இழுக்கிற மாதிரி பாசாங்கு செய், ' என்றான் சிறுவனிடம் ரகசியமாய்.

நுகத்தடியைக் கழுத்தில் வைத்து இழுத்தான் காஞ்சிபுரத்தான். சோவென்று கொட்டியது தண்ணிர். மீண்டும் இழுத்தான். இன்னொரு சால் தண்ணிர்.

அப்போது முற்பகல் நேரம். உச்சிக்கு வரவில்லை சூரியன். பெரிய பெத்துவின் தோட்டம் பூரா சந்தடியாயிருந்தது. அடிமைகள் போவதும் வருவதுமாக இருந்தார்கள். காஞ்சிபுரத்தானுக்கு நினைவு வந்தது. அன்று அடிமைகளை விற்பனை செய்யும் சந்தை நடைபெறுகிறது. புதியவர்கள் வருகிறார்கள். பழையவர்கள் போகிறார்கள். சிலர் தெற்குப் பிரதேசங்களுக்கு. சிலர் வெளிநாடுகளுக்கு. பிரிகிறவர்களின்

கண்ணிர். சந்தித்தவர்களின் சளசளப்பு.

திடீரென்று ஒரு அலறல். 'மாட்டேன்! என்னை விட்டுவிடுங்கள் விட்டுவிடுங்கள்!" எவனோ கதறிக் கொண்டிருந்தான்.

கபிலை இரைப்பதை நிறுத்திக் கொண்டான் காஞ்சிபுரத்தான். 'என்ன அது சத்தம் ஐயா?

'உன் கல்யாணத்துக்குக் கெட்டி மேளம் கொட்டுகிறார்கள் சீ நாயே, வேலையைப் பார்" உறுமினான் மேலாள்.

மறுபடி அந்தக் கதறல்! நுகத்தடியைக் கீழே போட்டுவிட்டுப் பாய்ந்தான் காஞ்சிபுரத்தான்.

கூச்சல் வந்த இடத்தில் கும்பல் கூடியிருந்தது ஆச்சரியமில்லை. ஆனால் அடுப்பின் மீது கொப்பரையொன்று கொதித்துக் கொண்டிருக்கிறதே, அது ஏன்? என்ன கொதிக் கிறது அதில்?

நெருங்கிப் பார்த்தான் காஞ்சிபுரத்தான். தளதளவென்று எண்ணெயல்லவா கொதிக்கிறது? "விட்டுவிடு, விட்டுவிடு." திமிறிக்கொண்டிருந்த அடிமை, இளைஞன். ஆனால் சரியான நோஞ்சான்.

அவன் கையை முறித்துக் கொண்டிருந்தவன் ஒரு மேஸ்திரி. சரியான காட்டுப் பன்றி. ‘‘ஏண்டா பயப்படுகிறாய் பின்னே? விடேன் கையை.'

மின்வெட்டென இடையில் புகுந்தான் காஞ்சிபுரத்தான். ‘‘என்ன நடந்தது?" அமைதியில் அழுத்தம் கலந்திருந்தது. 'நியாயம் கேட்க வந்துவிட்டாரடா துரை!' காஞ்சிபுரத்தானை லேசாய்த் தள்ளப் பார்த்தான் மேஸ்திரி. முடியுமா? தரையில் வேரூன்றியல்லவா இருக்கிறது கால்!

மீசையில் மண் ஒட்டாமல் மேஸ்திரி சமாளித்தான். 'தெரிந்துதான் ஆகனுமோ? சரி, சொல்கிறேன் கேள். இந்தத் திருட்டுப் பயல்....'

"பட்டம் அப்புறம், விஷயம் முதலில்." முறைத்தான் மேஸ்திரி. பின்னர் தொடர்ந்தான்: "இங்கே யிருந்து தினம் ஆடும் கோழியும் திருடிக்கொண்டு போய் விற்கிறான். கேட்டால் இல்லவே இல்லை என்கிறான்.'

'அதற்காக?'

"எண்ணெய்க் கொப்பரையில் கையை விடடா என்றேன்."

'விட்டால்?"

'இவன் சொல்வது சத்தியமானால் அந்தச் சத்தியமே இவனைக் காப்பாற்றாதா? இவன் கை எதுவும் ஆகாமல் அப்படியே இருந்தால் இவனை விட்டு விடுகிறேன். '

'உண்மை, உண்மை." தலையாட்டினான் காஞ்சிபுரத்தான். 'ஒரு சின்னச் சந்தேகம் கேட்கலாமா?"

'என்ன? '

"இவன் ஆட்டையும் கோழியையும் திருடினானென்ப தற்கு யார் சாட்சி?"

"நான்தான்! நான்'பார்த்தேனே கண்ணாலே" மேஸ்திரி மாரைத் தட்டிக் கொண்டான்.

"அப்புறம் என்ன? விவகாரம் தீர்ந்தது மேஸ்திரியாரே' அவன் விழித்தான் திருதிருவென்று. “எப்படி? எப்படித் தீர்ந்தது என்கிறாய்?"

"வேறொன்றுமில்லை. இவன் ஆடு திருடியதைக் கண்ணால் பார்த்தேன், சத்தியம், என்று சொல்லி நீரே எண்ணெய்க் கொப்பரையில் கையை விடும். உமது கை நல்லபடியாக இருந்தால், இவன் குற்றவாளி என்று ருசுவாகி விடாதா? ஊம், ஊம் ஆகட்டும். கையை விடும்." காஞ்சிபுரத்தான் நிதானமாகச் சொன்னான்.

'பலே! பலே! அதுதானே! நியாயம்தானே" பல குரல்கள் சளசளத்தன. நோஞ்சானின் கண்ணில் எத்தனை ஆனந்தம்!

'மூடுங்களடா வாயை" சீறினான் மேஸ்திரி. நழுவ முயன்ற நோஞ்சானின் கையை மறுபடி இறுகப் பிடித்தான்.

'அவன் மேல் கை பட்டதோ, உன் பன்றிச் சதை அங்குலம் அங்குலமாய்க் கிழிந்துவிடும் ஜாக்கிரதை' காஞ்சி புரத்தானின் விழிகள் கொள்ளிக் கட்டைபோல் தகதகத்தன.

'என்னடா வேடிக்கை பார்க்கிறீர்கள் எல்லோருமாய்!" மேஸ்திரி சீறவே, நாலைந்து பேர் காஞ்சிபுரத்தானை வளைத்துப் பிடித்துக் கொண்டார்கள்.

'இழுத்து வாருங்கள் கழுதையை எஜமானர் தரட்டும் தண்டனை. எவனடா அங்கே? நல்லதாய் ஒரு சவுக்கு எடுத்து வா' இறுமாப்புடன் முன்னே நடந்தான் மேஸ்திரி.

மாளிகையை அடைந்தார்கள். மேஸ்திரி குரல் கொடுக்கத் தேவையிருக்கவில்லை. கூச்சல் கேட்டு, பெரியபெத்துவே வெளியில் வந்தார்.

'இந்த ஆள் எல்லோரையும் கெடுக்கிறான், எஜமான். ரொம்பத் திமிரானவன். கொஞ்சம் முன்னே"- புகார் சொல்லிக் கொண்டே போன மேஸ்திரி நிறுத்திவிட்டான் பாதியில்.

பெரியபெத்துவின் கொடுக்கு மீசையின் கீழே ஒரு புன் சிரிப்பு

"அடேய் மக்கு இவன் கொஞ்சம் குறும்புக்காரன். அதைப் போய்ப் புகார் பண்ண வந்துவிட்டீர்களாக்கும்' என்றார்.

'இல்லை எஜமான்... இவன்...'

'தெரியுமடா எனக்கு வேலையிலே இவனில் பாதி நீங்கள் இருந்தீர்களானால் போதும் ஒடுங்களடா ஹல்ம்' குதிகால் பிடரியில் பட, வந்தவர்கள் திரும்பினார்கள்.

'மிக்க நன்றி ஐயா? 'காஞ்சிபுரத்தான் வணக்கம் செய்தான். குள்ளக் கணக்கப்பிள்ளை வேகமாக உள்ளேயிருந்து வந்தார். "ஐயா, கோட்டையிலிருந்து அழைப்பு வந்திருக்கிறது. கவர்னர்துரை அனுப்பியிருக்கிறார். '

'என்ன? எதற்கு?" அழைப்போலையைப் பார்த்துவிட்டுக் கணக்கப்பிள்ளை சொன்னார்: 'அக்கரைச் சீமையான சுமத்திராவிலிருந்து இளவரசர் வந்திருக்கிறாராம்... இன்று மாலை விருந்து, ஊர்வலம்....'

'சரிதான். அவனிடமிருந்து நாலு ஊராவது பறிக்க வேண்டாமா? கும்பினியான் விருந்தும் வைப்பான், அதற்கு மேலேயும் வைப்பான்.'

இளவேனில் மண்டபம். சலவைக்கல் தரை. இல்லாள் போன்ற இதமான வெய்யில்; குழந்தை போன்ற குறுகுறுப் பான காற்று. ஏழை உறவினர் போல் தயங்கி உதிரும் பூக்கள்.

திடீரென்று காஞ்சிபுரத்தானின் தேகத்தில் ஒரு முறுக்கு. உடம்பைக் கசக்கிப் பிழிகிற மாதிரி ஒரு புரளல். மூச்சை அழுத்துகிற மாதிரி ஒரு திணறல்.

திடுக்கிட்டுக் கண் விழித்தான். எழுந்தான். உட்கார்ந்தான். என்ன இது? ஏன் இப்படிப் படபடக்கிறது? உள்ளங் கையைத் தரையில் ஊன்றிக் கவனித்தான். விரல்கள் ஒன்று சேராமல் துடித்தன. முகத்திலும் மார்பிலும் வியர்த்துக் கொட்டி வழிந்திருந்தது. இதயம் அடித்துக்கொள்ளும் ஒசை எட்டுருக்குக் கேட்டது. -

'என்ன அண்ணே... என்ன உங்களுக்கு பதறிப் போனான் பக்கத்திலிருந்த சிறுவன்.

'கெட்ட கனவு கண்டேன்... தாமரைக்குத்தான் ஏதோ ஆபத்து...'' தலையை இரு கைகளால் பிடித்துக் கொண்டான்.

''தாமரை அக்காவுக்கா? உங்களுக்குத் தெரியுமா அண்ணே அவர்களை? ரொம்ப நல்லவர்கள். அவர்களுக்கு ஒரு கெடுதலும் நேராது" உறுதியளித்தான் பாலகன்.

'இல்லை... பெரிய அபாயம்.... நிச்சயமாய் அவளுக்கு ஏதோ ஆபத்து... இல்லாவிட்டால் என் மனம் இப்படி அடித்துக் கொள்ளாது...'

"தூக்கத்திலேகூட ஏதோ உளறினர்கள், அண்ணே... முதலை, முதலை என்று சொன்னீர்கள்...'

'முதலை, முதலை என்றா சொன்னேன். கெட்ட கனவில் ஏதோ ஒரு காட்சி காஞ்சிபுரத்தானுக்கு நினைவு வந்தது. "ஆமாம். ஆமாம்... முதலைதான்... அதோ என் எதிரில்...'

அவன் கண்ணைக் கசக்கிக் கொண்ட அதே வினாடி..

மறைவிலிருந்து அவனைக் கவனித்துக் கொண்டிருந்த பெரியபெத்துவின் உருவம் சரேலென அகன்றது.

'முதலை... முதலை...' திரும்பத் திரும்ப முணுமுணுத்தான் காஞ்சிபுரத்தான், மறையும் உருவத்தைக் கவனிக்காமலே. ''தாமரையை உடனே போய்ப் பார்க்க வேண்டும்." அப்போதே கிளம்பினான்.

முதலை சரசரவென மாளிகைக்குத் திரும்பியது. விழியில் சீற்றம். மீசையில் துடிப்பு. நாவில் ஆங்காரம்.

குறத்தியொருத்தி தெய்வநாயகிக்குப் பச்சை குத்திக் கொண்டிருந்தாள். பச்சிலைச் சாற்றில் குச்சியைத் தோய்த்துத்

தாமரைப் படம் வரைந்தாகிவிட்டது. நாலு ஊசிகளை ஒன்றாகக் கட்டி, மையில் தொட்டு, சித்திரத்தின் மீது குத்தலானாள்.

"ஸ்...ஆ... ' முனகிக் கொண்டிருந்த தெய்வநாயகி தந்தையிடம் கேட்டாள்: 'பார்த்தீர்களா அப்பா? அவன்தானா?"

"அவனேதான். ஆளைக் காட்டி, அடையாளமும் சொல்கிறார்களே?' பெரியபெத்து கணக்கப்பிள்ளையைக் கூப்பிட்டார். 'அந்தக் கசையடி விடுதிக்காரனையும், நெல் வண்டிக் காரனையும் அனுப்பிவிடுங்கள். அவர்கள் இனி தேவையில்லை. தோட்டக்கார மூக்கன் இருக்கிறானா?"

'இருக்கிறான், ஐயா. '

'அவனை வரச்சொல்லும்.' மகளின் பக்கம் திரும்பினார் பெரியபெத்து. 'நீ மறைவாய்ப் போய்ப் பச்சை குத்திக் கொள்ளம்மா. இந்தக் காஞ்சிபுரத்தானை நம்பகமானவனென்று நினைத்திருந்தேன், பார்! தற்செயலாய் வந்த கசையடிக்காரனல்லவா சொன்னான்? நெல்வண்டிக்காரப் பெண்ணும் அவனை வேலூர் பாதையில் அழைத்து வந்ததாகச் சொல்கிறாள்... இருக்கட்டும். அந்த அடிமைப் பெண் சிங்காவரம் அரசி என்பதும் இவனுக்குத் தெரியுமா? அது தெரியுமென்றால், அப்புறம் ஆசாமியை விட்டு வைக்கக் கூடாது...'

தோட்டக்கார மூக்கன் உள்ளே வந்தான். 'கும்பிடு கிறேன், ஐயா. '

"வா. தென்னந்தோப்பிலே ஒரு பெரிய கிணறு பழுதாயிருக்கிறதென்று சொன்னாயே? அதைச் சரி பண்ணியாயிற்றா?"

'இன்னும் இல்லை, எஜமான். பாதி சரிந்து விழுந்து விட்டது. உள்ளே யாரேனும் இறங்கியிருக்கிறபோது, கைப் பிடிச்சுவரை லேசாய்த் தொட்டாலும் போச்சு, கல் மொத்தமும் விழுந்து ஆள் தீர்ந்துவிடுவான்.'

'அதுதான் வேண்டும்." மீசையைச் சுண்டிவிட்டார் பெரியபெத்து. சுற்று முற்றும் பார்த்துக் கொண்டார். 'ஓர் ஆள் மீது சந்தேகம். ருசுவானால் அவனை உன்னுடன் அனுப்புகிறேன். அதே போல் பண்ணிவிடு. '

சொல்லி வாய்மூடவில்லை. தடதடவென்று உள்ளே நுழைந்தான் காஞ்சிபுரத்தான்.

'ஆயுசு நூறு, போ. உன்னைத்தான் நினைத்தேன்...' அவர் பேச்சு அவன் செவியில் விழுந்ததா? இல்லை, 'ஐயா, நான் அவசரமாய் வெளியூர் போகவேண்டும். இரண்டு நாளில் திரும்பிவிடுகிறேன். '

'ஓ, தாராளமாய்ப் போயேன்." பெரியபெத்துவின் முகத்தில் என்ன சாந்தமான புன்னகை "மறந்துவிட்டேனே? இந்த ஓலை தோட்டத்தில் கிடந்தது... யாருடையதென்று தெரியவில்லை. ' கிருஷ்ணப்பருக்கு எழுதப்பட்ட ஓலையை எடுத்துத் தந்தார்.

காஞ்சிபுரத்தான் வாங்கிக் கொண்ட போதும் சரி, பார்த்த போதும் சரி, படித்தபோதும் சரி - பெரியபெத்துவின் குரூரக் கண்கள் அவன் முகத்தையே ஆராய்ந்து கொண்டிருந்தன.

அ...ஆமாம்... என்னுடையதுதான்... ' அவசரமாய் இடுப்பில் செருகிக் கொண்டான் அவன். 'நன்றி... நான் போய் வரட்டுமா?"

'அவ்வளவு அவசரமா? ஒரு சின்ன உதவி செய்து விட்டுப் போயேன். '

'என்ன? '

தோட்டக்காரனைச் சுட்டிக் காட்டினார் பெரியபெத்து. 'இந்த மடையன், தென்னந்தோப்புக் கிணற்றிலே மண் வெட்டியைப் போட்டுவிட்டானாம். அதை எடுத்துக் கொடுத்து விட்டு உன் இஷ்டம் போல் போ. '

அவருடைய கண் ஜாடையை மூக்கன் மட்டுமே கவனித்துக் கொண்டான். காஞ்சிபுரத்தானின் பரபரப்பில் அதைக் கவனிக்க ஏது பொறுமை?

கும்பினியார் கோட்டையில் சத்திரத்து வாசல். டவுனை நோக்கி ஊர்வலம் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. சுமத்திராவிலிருந்து வந்திருக்கும் இளவரசருக்காக, கவர்னர் துரை நடத்தும் விசேட பவனி.

கோட்டைக்குள்ளே எட்டுத் திசையிலிருந்தும் பீரங்கிகள் முழங்கின. இருபத்து மூன்று மரியாதை வேட்டுக்கள் ஊரையே உலுக்கியெடுத்தன.

முன்னணியில் குதிரை வீரர்கள் பவனி வந்தார்கள். உயரத் தூக்கிய கைகளில் ஓங்கிப் பறக்கும் கும்பினிக் கொடிகள்நீலப் படுதாவில் இரட்டை வளையம் வரைந்தவை. ஊருக்குப் பெரிய அதிகாரியான பெரிய நாயகரும், முக்கிய வர்த்தகர்களும் ஒருபுறம். அவர்களுக்கு இருபுறமும் பியூன்கள் என்றழைக்கப் படும் சேவகர் பட்டாளம். அடுத்து யானைகள். முகபடாம் களின் பித்தளைக் குமிழ்கள் இளம் வெய்யிலில் மினுமினுக்கின்றன. யானைகளின் மீது கெட்டில் டிரம் வாத்தியங்கள் முழங்குகின்றன. அதற்கப்பால் பன்னிரண்டு பேர்கள் டிரம்பெட் ஊதிக் கொண்டு வருகிறார்கள். அவர்களைத் தொடர்ந்து மூன்று பிரிவுகளாகச் சிப்பாய்களின் அணிவகுப்பு.

வெள்ளைக் குதிரைகள் பூட்டிய திறந்த கோச்சு வண்டியில் கவர்னர் துரையும் சுமத்திரா இளவரசரும் அருகருகாக வீற்றிருக்கிறார்கள். பின்னால் பல்லக்குகளில் துரைசானிகள்; சீமாட்டிகள்.

ஊர்வலத்தில் செல்லும் நகரப் பிரமுகர்களிடையே எவ்வளவு வகை! ஒருபுறம், மாநகராட்சி மன்ற ஆல்டர் மேனான ஆலங்காத்த பிள்ளை. அவருடன், வெடிமருந்து வியாபாரியான நாகபட்டன்.

இன்னொருபுறம், பூந்தமல்லியில் தோட்ட வீடுகள் கட்டி, பரங்கித் துரைமார்களுக்கு வாடகைக்கு விடும் சின்ன வெங்கடாத்ரி, வர்த்தகர்கள் காளாசெட்டி, சூரி அப்பண்ணா, கண்ணப்பர்; கும்பினிச் சரக்குகளைக் கட்டியனுப்புவதற்கு மொத்த குத்தகை எடுத்திருந்த பெரியபெத்து. கும்பினித் தரகரும் வக்கீலுமான, கோபால் பண்டிதர்....

அவர்கள் பேச்சும் நின்றது; ஊர்வலமும் நின்றது. என்ன? என்ன? ஏன்? ஒவ்வொருவரும் கழுத்தை நீட்டிப் பார்த்தார்கள்.

கவர்னர் துரை, அருகிலிருந்த உதவியாளிடம் கேட்க, அவர் பெரியபெத்துவை விரட்ட, பெரியபெத்து ஆல்டர் மேனைக் கேட்க, ஆல்டர்மேன் விரைந்து சென்று விஷயமறிந்து வந்தார். கவர்னரிடம் கூறினார்.

'அதாவது... வேடிக்கை பார்ப்பதற்காக ஏராளமான பேர் ஒரு மரத்தின் மீது ஏறி உட்கார்ந்திருந்தார்களாம். பாதி மரம் அப்படியே முறிந்து விழுந்துவிட்டது... பாதை குறுக்காக மரம் கிடப்பதால் அப்புறப்படுத்த வேண்டியிருக்கிறது... மன்னிக்க வேண்டும்... இதோ வேலை முடிந்துவிடும்...'

ஆனால் நேரம் ஓடிக்கொண்டிருந்தது. ஒவ்வொருவராகப் பொறுமை இழக்கத் தொடங்கியபோது

நகர்த்தியாயிற்று, நகர்த்தியாயிற்று என்ற ஆரவாரம்! மறுகோடியிலிருந்து ஒவ்வொருத்தரையும் தொட்டுக் கொண்டே வந்த மாதிரி, பெரியபெத்துவுக்கும் அவர் நண்பர்களுக்கும் தகவல் வந்து சேர்ந்தது. 'ஊர்வலம் போகலாம்' என்றார் ஆல்டர்மேன்.

மேற்பார்க்கச் சென்றிருந்த நாகபட்டன் திரும்பினார்: "கலிகாலத்தில் அதிசயம் நிகழாதென்பார்கள். நிகழ்கிறது; பாருங்களேன். ஒரே ஆள். ஒற்றை ஆள். அத்தனை பேர் தோள் கொடுத்தும் தள்ள முடியாத மரத்தை, தானொருவனாகவே தள்ளிவிட்டான்'

'அட! அப்படியா!' என்று வியந்தார் தரகர் கோபால் பண்டிதர். கவர்னர் துரையிடமும் சுமத்திரா இளவரசரிடமும் அதை உடனே சென்று தெரிவித்தார்.

பெரியபெத்துவைத் தேடிக்கொண்டு வேகமாக வந்தார் சூரி அப்பண்ணா. 'ஒன்றி ஆள் இந்தக் காரியத்தைச் செய்வ தென்றால் ஆச்சரியமில்லை?"

'பின்னே? அதைச் செய்தவன் பெரிய பலசாலிதான். சந்தேகமென்ன?"

'அவன் வேறு யாருமில்லை. உம்முடைய அடிமை தான்!'

“என்... என் அடிமையா? பெரியபெத்துவின் புருவங்களில் முடிச்சு.

"ஆமாம், ஐயா. ஒரே நொடியில் கவர்னரிடம் நல்லபெயர் தட்டி விட்டீர்களே! இதோ வருகிறான் பாரும்", கவர்னரிடம் போய் விட்டார் சூரி அப்பண்ணா.

யாரோ அழைத்து வந்தார்கள் காஞ்சிபுரத்தானை. 'விடுங்கள், விடுங்கள். எனக்கு வேறு வேலை இருக் கிறது, ' முரண்டியபடி வந்தான் அவன்.

பெரியபெத்துவின் விழிகள் தெறித்தன. 'நீ...நீ...மூக்கனுடன் தோட்டத்துக்கு...' "அப்புறம் சொல்கிறேன், ஐயா, மன்னியுங்கள். அவசரமாய்ப் போகவேண்டும். '

'அந்தத் தோட்டக்காரனுடன் நீ போகவில்லை?"

'ஓ, அதைக் கேட்கிறீர்களா? பாவம், அந்தக் கிழவன்... கால் வழுக்கியது போலிருக்கிறது. கிணற்றுக்குள் விழுந்து விட்டான். பயப்படாதீர்கள். உடனே குதித்துக் காப்பாற்றி விட்டேன். வைத்தியர் வீட்டில் சேர்ப்பித்துவிட்டுத்தான் புறப்பட்டேன் ஊருக்கு. வழியில் இந்த மரம் கிடந்தது... போய் வரட்டுமா நான்?"

ஆல்டர்மேன் விரைந்து வந்தார். 'கவர்னர் துரையும் சுமத்திரா இளவரசரும் இவனைப் பார்க்க வேண்டும் என்கிறார்கள். நீங்களும் வாருங்கள். '

பெரியபெத்து நடிப்பிலே திலகம். ஏமாற்றத்தையும் சினத்தையும் எங்கே ஒதுக்கினாரோ? ஒரு காதிலிருந்து மறு காதுக்குப் புன்னகை பரவியது. துரிதமாய் அணுகினார் கவர்னர் பெருமானின் கோச்சு வண்டியை.

துபாசி விவரிக்க, துரைமார்கள் கேட்டார்கள். கவர்னர், தமது தங்கப் பூண் போட்ட மெல்லிய பிரம்பினால் காஞ்சி புரத்தானைத் தட்டிக் கொடுத்தார். சுமத்திரா இளவரசரோ, வைர மோதிரங்கள் பளபளக்கும் விரல்களினாலேயே காஞ்சிபுரத் தானின் முதுகைத் தட்டினார். அவனுடைய இளமைத் திமிர் நிறைந்த உடலைக் காலோடு தலை ஆராய்ந்தன அவர் கண்கள். ஏதோ சொன்னார், தமது மொழியில்.

துபாசி பெரியபெத்துவிடம் சொன்னார்: 'ஜாவாவுக்கும் சுமத்ராவுக்கும் தமிழ்நாட்டிலிருந்து வந்த அடிமைகள்தான் நெற்பயிர் சாகுபடியைக் கற்றுத் தந்தார்களாம். அதற்கு முன்பு அரிசியே தெரியாதாம் அவர்களுக்கு."

தலைவணங்கி, பணிவுடன், 'அப்படியா?' என்றார் பெரியபெத்து.

இளவரசர் மீண்டும் ஏதோ கூறினார். துபாசி மொழிபெயர்த்தார். 'பொதுவாகவே தமிழர்கள் புத்திசாலிகளாயும் உழைப்பாளிகளாயும் இருக்கிறார்களாம். அதுவும் இவனைப் போன்ற பலசாலியைப் பார்த்ததில் தனக்கு ரொம்ப சந்தோஷம் என்கிறார் இளவரசர். '

"என் பாக்கியம்", பணிவின் உருவானார் பெரியபெத்து. "இளவரசர் இவ்வளவு சந்தோஷப்படுவதால் நான் அவருக்கு ஒரு சிறு காணிக்கை தர ஆசைப்படுகிறேன். ஏற்றுக் கொள் வாரா, கேளுங்கள்."

துபாசி கேட்டுவிட்டுச் சொன்னார்:

'மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கிறாராம். என்ன காணிக்கை என்று கேட்கிறார். '

'இதோ இவன்தான்.'

காஞ்சிபுரத்தானைக் காட்டினார் பெரியபெத்து. உடனே கூட்டத்தின் பக்கம் திரும்பினார். "தலையாரி! இங்கே வா. இவனை இளவரசரின் கப்பலுக்குக் கொண்டு செல். உடனே படகில் ஏற்றி விடு. சீக்கிரம் ஆகட்டும்."

## (12)

முழங்கையை ஊன்றி மோவாயைத் தாங்கினாள். ஒயிலாகக் கால்களை நீட்டினாள். ஒய்யாரமாகத் திரும்பினாள்.

அழுத்தும் இடத்தில் பட்டு மெத்தையில் குழி விழுந்தது. பிறகு மெல்ல மெல்ல நிரம்பி மேடாயிற்று.

பார்க்கப் பார்க்கத் தாமரைக்குப் பரவசம். அதே சமயம் ஓர் வேதனை- அவருமல்லவா அருகில் இருக்க வேண்டும்? இல்லையே?

நிலைக் கண்ணாடியில் அவள் உருவம் தெரிந்தது. 'அழாதே தாமரை. நீ கனவிலும் எதிர்பார்க்காத பதவி இப்போது கிட்டவில்லையா? அதேபோல் அவரும் விரைவில் கிடைப்பார். நீ ராணியானதும் முதல் வேலையாகத் தண்டோரா போடு. எங்கிருந்தாலும் அந்தக் காதலனைப் பிடித்து வந்துவிட மாட்டார்களா? ஆகவே நீ அழக்கூடாது...'

ஹூம்...ஹூம்... துள்ளி எழுந்தாள் மஞ்சத்தில். என்ன அது?

உண்மையிலேயே எவரோ விம்முகிறார்கள்! மெய்யாகவே யாரோ அழுகிறார்கள்!

ஹும்... ஹும்... கட்டிலிலிருந்து இறங்கினாள். உற்றுக் கேட்டாள். அழுகைதான். வாய்விட்டு ஓவென்று அழவில்லை. வாயைப் பொத்திக்கொண்டு அடக்கப் பார்க்கிறார்கள். அப்படியும் முடியவில்லை. வெடித்து வெடித்து வருகிறது அழுகை.

சொர்க்க போகமான அரண்மனையில் யாருக்கு என்ன கஷ்டம்?

சாத்தியிருந்த கதவுகளைத் திறந்தாள்; வெளியே நீண்ட சலவைக் கல் தாழ்வாரம். அரையிருட்டில் ஓர் உருவம். பெண்ணா அது?

'வாம்மா இப்படி", தாமரை அழைத்தாள். அந்தப் பெண் வாரிச் சுருட்டிக் கொண்டு ஓடிவந்தாள். வரும்போதே கண்களைத் துடைத்துக் கொண்டாள் போலும். போலிப் புன்னகை பரந்திருந்தது. குனிந்து வணங்கினாள்.

'என்ன வேண்டும், தேவி_?" திருப்பிக் கேட்டாள் தாமரை: 'நீ அழுத காரணம் தெரியவேண்டும்.' என்ன தடுமாற்றம் அந்தப் பெண்ணுக்கு 'இல்லையே... நான் அழவில்லையே...'

'உண்மையைச் சொன்னால் உதவுவேன். பொய் சொன்னால் தண்டனை கிடைக்கும். எது வேண்டும் உனக்கு?"

கண்ணிர் வழிந்தது அவள் கன்னத்தில். குரல் தழுதழுத்தது. "என்... என் கணவர் இறந்து போய்விட்டார் அம்மா...' அதிர்ச்சி - அதற்கு ஏன் வாய்விட்டு அலறக்கூடாது? “எப்போது?’ என்று கேட்டாள்.

“சற்று முன்னால். '

“எதனால்?" "யாரால் என்று கேளுங்களம்மா' கண்களைத் துடைத்துக் கொண்டாள் பணிப்பெண். 'பரம விசுவாசமாக ஊழியம்

புரிந்தார் அவர். மன்னரின் முன்னணிச் சேவகரிலே ஒருவர். கிழவன் வேல்பண்டிதரும் அவருமாகத்தான் தங்களைச் சென்னைப் பட்டிணத்திலிருந்து அழைத்து வந்தார்களாம்...'

அட! அந்த வாலிபனா முகம் நினைவு வந்தது. 'அவரை... அவருக்கு என்ன நேர்ந்ததென்கிறாய்?"

"கொலை செய்துவிட்டார்களம்மா, படுகொலை செய்து விட்டார்கள்!'

"என்ன?" தாமரையின் முகம் சிவந்தது. "எதற்காக? யார்? எப்போது?"

‘'வேண்டாமம்மா. அதையெல்லாம் புலம்பிப் பயனில்லை. '

"இப்படி என்னைப் பார், பெண்ணே!"அவள் மோவாயை நிமிர்த்தினாள் தாமரை. "கேள்விமுறையில்லாத ராஜ்யமல்ல இது. பயப்படாமல் சொல்லு. நான் விசாரிக்கிறேன். இந்தத் தேசத்தின் ராணி நான். விடிந்தால் இந்தத் தலையில் மகுடம் ஏறப்போகிறது. தெரியுமா உனக்கு?"

பணிப்பெண்ணிடம் ஓர் ஏளனச் சிரிப்பு. 'விடிந்தால் தங்களுக்குத் தலை இருப்பதே சந்தேகம்!"

'என்ன, என்ன?’’

"நான் அதிகம் பேசிவிட்டேன். தப்பு. தப்பு போகிறேன்." நழுவ முயன்ற அவளை வளைத்துப் பிடித்தாள் தாமரை. அறைக்குள் இழுத்துக் கொண்டாள். 'சொல்லு எதையோ மறைக்கிறாய். '

பணிப்பெண், தாமரையையே உற்றுப் பார்த்தாள். சோகம், அச்சம், வெறி எல்லாம் வெடித்தன அவள் பேச்சில். "எனக்கு விவரம் தெரியாது. ஆனால் தங்களை இங்கே அழைத்து வந்தது நிச்சயமாய் நல்லதற்கல்ல. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் இங்கிருந்து தப்பி விடுங்கள்...'

குழப்பம் கூத்தாடியது தாமரையின் முகத்தில். 'என்ன சொல்கிறாய் நீ? என்னை ராணியாக்கப் போவதாக அல்லவா சொல்லியிருக்கிறார்கள்? எனக்கு என்ன ஆபத்து? ஏன்...'

பணிப்பெண் பரபரத்தாள். 'இத்தனை நேரம் நான் பேசிக் கொண்டிருந்ததே முட்டாள்தனம்... தாங்கள் தப்பிச் செல்ல ஒரு ரகசிய வழி இருக்கிறது. இங்கேயே இருங்கள். இதோ பார்த்து வருகிறேன்.'

கதவைத் திறந்தாள் பணிப்பெண். வீலென்று கூச்ச லிட்டாள் மறுகணம்.

அட்டகாசச் சிரிப்பு வெடித்தது ரகுநாதரிடமிருந்து. 'எச்சில் பொறுக்குகிற நாய்க்கு இத்தனை சதிவேலை தெரியுமா?" பணிப் பெண்ணின் கை, அவரது இரும்புக் கரத்தின் பிடியில் நொறுங்கியது.

“விடுங்கள் அவளை" குறுக்கே வந்து நின்றாள் தாமரை. “வணக்கம் ராணி இவளுடைய ராஜத் துரோகமான பேச்சுக்களைக் கேட்டும்...'

"ராஜத் துரோகத்தை விசாரிக்க ராணிக்கே தெரியும். விடுங்கள் அவளை.'

'கட்டளை அரசியாரே." பணிப்பெண்ணின் கையை விட்டார் ரகுநாதர். கணைக்குத் தப்பிய மான்தான்! அப்படி மருண்டு ஓடினாள் அவள். பேதைப் பெண். ரகுநாதரின் கண் ஜாடையைத் தெரிந்து கொண்ட வீரனொருவன், மறுமுனையிலே காத்திருப்பது அவளுக்குத் தெரியாது.

'அரசிக்கு இரக்க குணம் அதிகம்...' ரகுநாதர் கனிவுடன் நோக்கினார் தாமரையை.

அவளுடைய அங்கம் ஒவ்வொன்றிலும் ஆத்திரம் விம்மியது. "இரக்க குணமா? ஆம். இங்கே இல்லாத ஒன்றை நானாவது தருகிறேனே! "வெறுப்புடன் நகைத்தாள் தாமரை.

ரகுநாதரின் குரலில் அளவுக்கு மீறிய பணிவு. 'அரசியாருக்கு இரக்கத்தைத் தொடர்ந்து கோபம் வரும் போது, நீலவானத்தில் மின்னலடித்தாற்போல் இருக்கிறது.'

அரசகுல அலங்காரங்களுடன் அவள் ஜொலிப்பதை அவர் கண்கள் ஆராய்ந்தன. “களைந்துவிட்டுப் புறப்பட்டால் நீராடச் சரியாயிருக்கும் நேரம்'

சீறினாள் தாமரை. 'விளக்கம் கேட்க வேண்டியிருக்கிறது சில விஷயங்களுக்கு. '

'அதற்கென்ன? விடிய விடியப் பேசலாம். மகுடாபிஷேகம் காலையில் தானே? கேளுங்கள், சொல்கிறேன்' கம்பீரமாக அமர்ந்து கொண்டார் கிருஷ்ணப்பரின் மாமன்.

மாதுளங்கனியை விண்டு கொண்டிருந்தார் மன்னர் கிருஷ்ணப்பர். செம்பஞ்சுக் குழம்பு தீட்டிய சென்னம்மாவின் சீரடிகள் அவருடைய மடியிலே கிடந்தன. பாதம் அசையும் போது சதங்கை பதம் பாடியது.

கனியினுள் இருந்த மணிகள் உதிர்ந்தன. அவற்றை அவள் செவ்வாயிலிட்டுச் சொக்கினார் அரசர்.

நழுவியது ஒரு பழத் துண்டம். பொற்கிண்ணத்திலிருந்த பாலில் விழுந்தது. சொட்டச் சொட்ட அதை வெளியிலெடுத்தார் கிருஷ்ணப்பர். 'பழமொழி சொல்வார்கள், பலித்து விட்டது. பழம் நழுவிப் பாலில் விழுந்தது பார்.'

"ஆமாம், ஆமாம்! நழுவ விடுவதில் மன்னருக்கு இணை தமிழ்நாட்டில் கிடையாதே", கேலி விளையாடியது ராணியின் குரலில்.

'எதைக் குறிப்பிடுகிறாய்?"

"வேறெதை? முதலையையும் அகழியையும் எனக்குக் காட்டிவிட்டு அழைத்து வந்து விட்டீர்கள். அத்தோடு சரியாகிவிட்டதா? '

'பின்னே?

“நள்ளிரவு நேரம் நெருங்கிவிட்டது. நிச்சயமாய் அவளை நழுவ விட்டு விடுவீர்கள் என்று எனக்குள் ஏதோவொன்று சொல்லிக் கொண்டிருக்கிறது.'

'உண்மை, உண்மை. நானாயிருந்தால் நழுவ விட்டு விடுவேன். ஆனால் உன் தந்தை?"

'அப்பாவா? அவரா போயிருக்கிறார்?" 'அவரேதான், சாளரத்தின் வழியே சுட்டிக் காட்டினார் கிருஷ்ணப்பர். "அதோ பார்.'

பார்த்த பிறகே சென்னம்மாவின் முகம் மலர்ந்தது. "அப்பாடா! நமது குலதெய்வம் வேணுகோபால ஸ்வாமி தான் காப்பாற்றினார். அப்பாவே அவளை அழைத்துப் போவதால் இனிமேல் பயமில்லை. '

பிரியத்துடன் அவளை அணைத்துக் கொண்டது கிருஷ்ணப்பரின் கரம். "ராணி பாதுஷாக்கள் அடையும் இன்பத்தை நாமும் அடையலாம், வா."

சென்னம்மாவின் முத்துப் பற்கள் முறுவலித்தன. 'அதென்ன, இத்தனை நாளும் நான் கண்டிராத இன்பம்?"

'சொல்கிறேன், வா' மேல்மாடத்தை நோக்கிக் கிருஷ்ணப்பர் நடந்தார். 'நிலவொளியில் தாஜ்மகாலின் அழகைக் கண்டு

ரசிப்பார்களாம் பாதுஷாக்கள். நமக்கு நிலவொளி இருக்கிறது. தாஜ்மகால் இல்லாவிட்டாலும்...'

மேல்மாடத்து உப்பரிகையில் நின்றார் கிருஷ்ணப்பர். கையைக் காட்டினார். "அதோ பார் ராணி முதலைப் படித் துறை! உன் தந்தை ரகுநாதர் நிற்பது தெரிகிறதா? தாமரை திமிறுகிறாள், பார் அதோ அதோ!'

"ஆமாம்! என்ன அருமையான காட்சி! அதோ அவள்... அப்பப்பா எத்தனை முதலைகள்'

நடுநடுங்கிக் கிருஷ்ணப்பரைக் கட்டிக் கொண்டாள் சென்னம்மா.

'நீ பார்க்க வேண்டாம். விவரிக்கிறேன் கேள்! ஒரே சமயத்தில் நான்கு முதலைகள் பாய்ந்து வருகின்றன! அவளைச் சின்னாபின்னமாய்க் கிழிக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் எவ்வளவு பெரிய வாய்! எத்தனை பெரிய பற்கள்! துண்டு துண்டாகிவிட்டாள் நம் எதிரி உற்றுக் கேள்! அவள் அலறல் காதில் விழுந்ததா ஹாஹ்ஹா" வெற்றி எக்காளம்! பேய் வெறி ஓநாய்த் திமிர்!

ஆனந்தம் தாங்கவில்லை கிருஷ்ணப்பருக்கு.

'வெரிவெல் மிஸ்டர் பெர்யபெத் வெரிவெல்' கோச்சு வண்டியிலிருந்த கவர்னர் துரை பாராட்டினார். சுற்றியிருந்த பரிவாரத்தார் சளசளத்தனர்.

சுமத்திரா இளவரசர் துபாசி மூலம் புரிந்துகொண்டார். 'நல்ல பரிசு சிறந்த பரிசு மகிழ்ச்சி! மகிழ்ச்சி! 'சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்ள வார்த்தை கூடக் கிடைக்கவில்லை.

காஞ்சிபுரத்தான் நொடியில் ஊகித்தான் படுகுழியில் தள்ளப்பட்டதை.

சட்டெனக் குனிந்தான். மண்டியிட்டான். சுமத்திரா இளவரசரின் வாள் நுனியைத் தொட்டு முத்தமிட்டான்.

கண்ணில் நீர் வழிந்தது கரகரவென்று. "இந்த அடிமைக்கு எத்தனை பாக்கியம், தங்கள் கீழே ஊழியம் செய்ய! தங்களுக்காக இந்தத் தேசத்தில் என்னென்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் இந்த நாய் செய்யும்,' என்றான்.

துபாசி மூலம் பதிலளித்தார் இளவரசர். "இங்கேயா? வேண்டாம், வேண்டாம். உன்னைப் போன்ற பலசாலியை என்னுடனேயே வைத்துக் கொள்ளப் போகிறேன். கப்பலில் போய் இரு.'

கண்ணையும் இமைக்கவில்லை காஞ்சிபுரத்தான். பெரிய பெத்துவின் பக்கம் திரும்பினான். அவர் காலைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டான்: 'ஆசி கூறி விடை கொடுங்கள் ஐயா. தங்களிடம் தின்ற உப்பை இந்த ஏழை என்றும் மறக்க மாட்டான்...'

இவன் குள்ள நரியா, குற்றமற்றவனா? புரியவில்லை பெரியபெத்துவுக்கு. "போய் வா இளைஞனே. போகுமிடத்தில் பிறந்த மண்ணின் பெருமையைக் காப்பாற்று' என்றார்.

தலையாரி நடத்திச் செல்ல, கடற்கரையை அடைந்தான் காஞ்சிபுரத்தான். காத்திருந்தது மசூலாப் படகொன்று.

அதைக் கண்டதும் திகைப்பு' 'ஐந்தாறு அடிமைகள் ஏற்கெனவே வந்திருக்கிறார்களே!'

"ஆமாம். பெரியபெத்து ஒன்றும் புதிதாகச் செய்துவிடவில்லை." தலையாரி விளக்கினான். 'மேல் அந்தஸ்தில் உள்ளவர்களுக்குப் பொன்னும் மணியும் பழமும் பட்டாடையும் காணிக்கை கொடுக்கிற மாதிரி அடிமைகளையும் தருவது வழக்கம்தான்!'

'இவர்களை யார் கொடுத்தார்கள்?" 'பாளையக்காரர் பதவிக்காகக் கும்பினியாரிடம் மாறி மாறி விண்ணப்பம் போட்டுக் கொண்டிருக்கிறார்களே, திம்மப்ப நாயகரும், அங்கப்ப நாயகரும் அவர்கள் கும்பினி யாருக்குத் தந்தது, கும்பினியார் சுமத்திரா

இளவரசருக்குத் தந்த பரிசுகள் இந்த அடிமைகள். சரி. சரி, நீ படகில் ஏறு. '

படகில் ஏறும்போது காஞ்சிபுரத்தானுக்கு ஓர் எதிர்பாராத வரவேற்பு

'அடடா வரவேண்டும், வரவேண்டும்... கண்ணாயிரம், இவர் யார் தெரியுமா? துரைசானி அம்மாமார்களோட பெட்டி கடலிலே விழுந்துவிட்டால், உடனே போய் எடுத்துத் தருவார் பெரிய அறிஞர் கும்பினிப் பரங்கிகளுக்கு ஐயாதான் வலது கை!'

உதட்டைக் கடித்துக்கொண்டான் காஞ்சிபுரத்தான். கோட்டையில் நுழைந்த தினத்தன்று பகைமை தேடிக் கொண்ட படகுக்காரனும் அவன் தோழனுமல்லவா இவர்கள்!

'சுமத்திரா இளவரசரின் கப்பலில் இவனையும் சேர்த்து விடு", தலையாரி போய்விட்டான்.

'ஐயா அக்கரைச் சீமைக்குப் பயணமாகிறார்களா? என் படகு கொடுத்து வைத்தது.'

மற்றப் பிரயாணிகளை ஆராய்ந்தான் காஞ்சிபுரத்தான். வெகு தொலைவில் தெரிந்த கப்பலை நோக்கிப் படகு நகர்ந்தது.

'டேய் கண்ணாயிரம் இவ்வளவு பெரியவர் வந்திருக்கிற போது நீ வலிக்கலாமாடா? முட்டாள் ஐயாகிட்டே துடுப்பைக் கொடுத்துவிட்டு, கம்மென்றிருடா!' என்றான் படகுக்காரன். தன் துடுப்பையும் வேறோர் அடிமையிடம் கொடுத்தான்.

வாய் திறவாமல் வலித்தான் காஞ்சிபுரத்தான்.

கரை மறைந்தது; கப்பல் தெரிந்தது.

காஞ்சிபுரத்தானின் கண்கள் மற்ற அடிமைகளின் கண் களைச் சந்தித்தன. ஒரு விநாடிக்குள் நூறு விஷயங்களைப் பேசிக்கொண்டன.

படிர் படிர்!

படகுக்காரன், அவன் தோழன் - இருவர் கழுத்திலும் இரண்டு அடி துடுப்பினால்!

தலைகுப்புறத் தண்ணிரில் விழுந்தார்கள் இருவரும். உடனே சமாளித்துக் கொண்டு படகைப் பிடிக்க முயன்றார்கள்.

"வலியுங்கள் வலியுங்கள் வேகமாய்!" உரக்கக் கட்டளை யிட்டான் காஞ்சிபுரத்தான்.

இரண்டு அடிமைகள் துடுப்புப் போட்டார்கள் துடிப்புடன், மற்றவர்கள் கையினாலேயே விலக்கினார்கள் நீரை.

நீந்தித் துரத்தியவர்கள் களைத்து நின்றார்கள். வெகுவேகமாய்ப் படகு விலகிவிட்டது அவர்களிடமிருந்து.

சற்று வயதானவனாகத் தோன்றிய ஓர் அடிமை முணுமுணுத்தான்: 'எங்களுக்குச் சுதந்திரம் வாங்கித் தந்து என்ன பயன், தம்பி? கரையேறியதும் பிடித்துக் கொள்ளப் போகிறார்கள். '

'இங்கே கரையேறினால்தானே?" என்றான் காஞ்சி புரத்தான். 'தெற்காகச் செலுத்துங்கள் படகை. பசி தாகம் பார்க்கக்கூடாது. புயல் மழைக்குப் பயப்படக்கூடாது.'

மூன்றாம் நாள் மாலை ஒரு பரங்கிக் கப்பல் அவர்களைத் துரத்தத் தொடங்கியது. தப்புவதற்காக எத்தனை வேகமாகச் சென்றும் முடியவில்லை. மடக்கிவிட்டது கப்பல்.

ஆனால் கிட்ட நெருங்கியதும் அவர்கள் போய் விட்டார்கள், எதுவும் செய்யாமல்.

அடிமைகளில் ஒருவன் காஞ்சிபுரத்தானின் திகைப்பை நீக்கினான். "அவர்கள் கடல் கொள்ளைக்காரர்கள். ஒட்டாண்டி களாகிய நம்மிடம் என்ன இருக்கிறது! போய்விட்டார்கள். '

'கடல் கொள்ளைக்காரர்களா? எப்படிக் கண்டுபிடித் தாய்?"

'ஏற்கெனவே பிடிபட்டுத் தண்டிக்கப்பட்டவர்கள்தான் அவர்கள். நடு நெற்றியில் ஆங்கில எழுத்து 'பி' என்று சூடு போட்டிருக்கிறார்களே பைரேட் - கடல் கொள்ளைக்காரன்' என்று அர்த்தம்' என்றான் அடிமை.

மூன்று பகல்களும், மூன்று இரவுகளும் கடலிலேயே கழிந்தன.

காஞ்சிபுரத்தானுக்குக் கைகள் தளர்ந்தன. உப்புக் காற்றினால் உடம்பெல்லாம் எரிச்சல், கண்கள் செருகின. கால்களை நகர்த்தக்கூட முடியாமல் தொய்ந்தன. பாறையைக் கட்டி முதுகில் அடித்தார்களா என்ன? குனிந்தும் நிமிர்ந்தும் படகு வலித்ததில் அப்படியொரு நரக வேதனை!

குற்றுயிரும் குலையுயிருமாகச் சுருண்டு விட்டார்கள் மூன்று பேர். மிஞ்சியவர்களில் ஒருவன், 'உன் பேச்சைக் கேட்டு வந்தோம் பார்! அடிமைப் பிழைப்பில் சோறாவது கிடைத்திருக்கும்!" என்று முனகினான்.

நேற்று அடித்த காற்றில் திசை தப்பிவிட்டதா என்ன? காஞ்சிபுரத்தான் தொடுவானத்தை ஆராய்ந்தான்.

விர்ரென்று கழுகொன்று அவர்களை வட்டமிட்டு விட்டுத் திரும்பியது.

"அதோ கரை!'' சுருண்டு கிடந்த அடிமைகளில் ஒருவன் கைகாட்டிக் கூவினான்.

ஆம், கரை தெரிந்தது தொலைவில். ஔடதம் அருந்தினாற்போல் அனைவருக்கும் சுறுசுறுப்பு. ஆளுக்கு ஆள் மாற்றி மாற்றித் துடுப்புப் போட்டார்கள்.

கரைக்குச் சில கெஜம் இருக்கும்போதே கடலில் குதித் தான் காஞ்சிபுரத்தான். ஆர்வத்துடன் நீந்தினான் கரையை நோக்கி.

சந்தித்த முதல் மீனவனிடம் கேட்டான்: 'ஐயா, இது எந்த ஊர்?'

'கடலூர். ' முகம் மலர்ந்தது காஞ்சிபுரத்தானுக்கு. இதுதான் அவன் இலக்கு வைத்திருந்த ஊர். நில மார்க்கமாகச் சென்றால் எவரிடமாவது பிடிபட நேரிடும் என்று கடல் வழியைத் தேர்ந்தெடுத்திருந்தான்.

அடுத்து அவன் விசாரணை: 'சிங்காவரத்துக்கு எப்படிச் செல்வது?"

வழி தெரிந்தது. விரைந்தான். சிங்காவரம் குன்றுப் பாதையை அடைந்தான். அகழிக் கரையில் நின்றான்.

வாயைப் பிளந்துகொண்டு திரியும் முதலைகளைக்கூட அவன் பொருட்படுத்தவில்லை.

தண்ணீரில் மிதந்துகொண்டிருந்த சில துணிகள் அவனைத் திடுக்கிட வைத்தன.

தாமரையல்லவா கட்டியிருந்தாள் அவற்றை!

# (13)

பலமான அடி! மூச்சுப் பேச்சற்று விழும்படி செய்த மூர்க்கமான அடி! அயர்ந்துபோனான் காஞ்சிபுரத்தான். தண்ணீரில் கிடக்கும் துணி, தாமரையினுடையதுதானா!

அப்படித்தான் தோன்றியது. ஆனால் உள்ளத்துக்குள் இன்னொரு குரல். தாமரை ஒருநாளும் இறந்து போயிருக்க மாட்டாள். ஒருகாலும் மாட்டாள்.

யாரைக் கேட்பது? அகழியின் மறுபுறம் காவலாளின் கூடாரம் இருந்தது. கை தட்டினான். காதில் விழுந்ததாகத் தெரியவில்லை. "யாரய்யா அங்கே?' என்று கத்திப் பார்த்தான். அதுவும் எட்டக் காணோம். சுற்றுப்புறத்தை ஆராய்ந்தான். நின்றிருந்த இடத்தில் ஒரு பூவரச மரம். நீண்ட கிளையொன்றை ஒடித்தான். கூராக்கினான் ஒரு முனையை.

ஈட்டி பாய்ச்சுவதுபோல் விட்டெறிந்தான் எதிர்க்கரைக்கு. கூடாரத் துணியில் சரக்கெனப் பாய்ந்தது அது. சுருக் கென வெளிப்பட்டான் ஒரு வீரன். 'யாரடா அவன் திமிர் பிடித்தவன்?"

பணிவுடன் பதிலளித்தான் காஞ்சிபுரத்தான். 'இந்த அகழியில் பெண் யாரேனும் தவறி விழுந்தார்களா? கொஞ்சம் சொல்லுங்கள், ஐயா...'

இக்கரையில் கேட்கும்படி இரைந்தான் காவலாளி: "தவறி விழுவது கிடையாது. பிடித்துத் தள்ளுவதுதான் வழக்கம். வேலூரில் திருடர்களைத் தள்ளுவதில்லை? அந்த மாதிரி.'

"சமீபத்தில் யாரையாவது அப்படித் தள்ளினார்களா - ஒரு பெண்ணை?'

“எனக்குத் தெரியாது. ஆனால் ஒர் உதவி வேண்டுமானால் செய்கிறேன் - நீயே தெரிந்துகொள்ளலாம்.'

'என்ன ஐயா? என்ன?" காஞ்சிபுரத்தானின் துவண்ட உள்ளம் நிமிர்ந்தது.

காவலாள் நகைத்தான்: 'எங்கள் ராஜாவுக்கு மாமனார் இருக்கிறார், ரகுநாதர் என்று. எவரையும் இந்த அகழியில் பிடித்துத் தள்ள அவருக்குத்தான் அதிகாரம் உண்டு. அவரிடம் போ. கேள். உன்னையும் இங்கே தள்ளுவார். நீ தேடுகிற பெண்ணிடம் போய்விடலாம்.'

கைக்கெட்டுகிற தூரத்தில் இருந்தால் காவலாள் குரல் வளை முறிந்திருக்கும். இடையேயிருந்த அகழியும் எண்ணற்ற முதலைகளும் அவனைக் காப்பாற்றின.

யாரந்த ரகுநாதர்? காஞ்சிபுரத்தான் உள்ளங்கையில் குத்திக் கொண்டான். எப்படி நுழைவது அரண்மனைக்குள்?

ஊருக்குள் அலைந்து விசாரித்தான். மறுநாள் ஏதோ வசந்தத் திருவிழாவாம். அரண்மனைக்குள் புகப் பலவித சந்தர்ப்பம் ஏற்படுமாம். பேசிக் கொண்டார்கள்.

இருட்டியது. களைத்த கால்களுக்குக் காளியம்மன் கோயிலொன்று தஞ்சம் தந்தது. வாகனங்கள் வைக்கப்பட்டிருந்த இருண்ட மூலையில் முடங்கிப் படுத்துக்கொண்டான்.

பூஜை மணிகள் அடிக்கப்பட்டன. தூபதீபங்கள் நடை பெற்றன. பக்தர்கள் வந்தனர், போயினர்.

எதுவும் காஞ்சிபுரத்தானுக்குத் தெரியாது. உழைப்பின் கூலியான உறக்கத்தில் அப்படி ஆழ்ந்து கிடந்தான் அவன்.

எல்லா ஓசைகளும் அடங்கிய பிறகு ஒரு மூதாட்டியின் புலம்பல் அவனைத் திடுக்கிட்டுக் கண் விழிக்கச் செய்தது.

"தாயே! மகமாயி! என் மகனின் காய்ச்சலையும் பிடிவாதத்தையும் குணப்படுத்த எனக்கு எந்த வழியும் தோன்றவில்லை அம்மா! நீதான் நிவர்த்தி செய்ய வேண்டும் தாயே!"

சோர்ந்த உள்ளத்திலே ஒரு சுறுசுறுப்பு. காஞ்சிபுரத்தான் கண்ணைத் துடைத்துக் கொண்டான். பார்த்தான். ஒரு கிழவி, அணையவிருக்கும் தீபத்தில் எண்ணெய் ஊற்றிவிட்டு விழுந்து விழுந்து வணங்குவது தெரிந்தது.

அம்மனின் சன்னதியிலிருந்து வருவது போல் தன் குரலைத் திருப்பிக் கொண்டான். சொன்னான்: 'பாட்டி நீ வீட்டுக்குப் போ. உன்னைத் தேடிக்கொண்டு ஓர் இளைஞன் வருவான். அவனால் உன் துயர் தீரும்.'

கிழவி மிரள மிரள நோக்கினாள். பிறகு ஆனந்தப் பரவசத்துடன் மீண்டும் பலமுறை வணங்கினாள். ஓட்டமும் நடையுமாக வீடு திரும்பினாள்.

ஓசைப்படாமல் பின்தொடர்ந்தான் காஞ்சிபுரத்தான்.

அது ஒரு சிறிய ஓட்டு வீடு. உள்ளே நுழைந்த கிழவி, ஓரிரு வினாடியில் மன்றாடுவது கேட்டது:

"வேண்டாமடா, தம்பி உனக்கு உடம்புக்கு ஆகாது. வைத்துவிடு. சொல்வதைக் கேள்."

ஒரு முரட்டு ஆண் குரல்: "மாட்டேன், அம்மா. இத்தனை வருஷமாய் இருந்து வருகிற குடும்ப கௌரவத்தை நான் விட்டுக்கொடுக்க மாட்டேன்."

குறுகுறுப்பு அதிகரித்தது காஞ்சிபுரத்தானுக்கு. 'பாட்டி! பாட்டி!' என்று குரல் கொடுத்தான்.

கிழவி வாசலுக்கு வந்தாள். தடாலென்று அவள் காலில் விழுந்தான் காஞ்சிபுரத்தான். 'பாட்டி! என்ன அதிசயம் பார், பாட்டி

ஆற்றங்கரை மண்டபத்தில் தூங்கிக் கொண்டிருந்தேன். யாரோ எழுப்பிய மாதிரி இருந்தது. இந்த வீட்டு அடையாளத்தைச் சொல்லி, 'பாட்டி பாட்டி என்று கூப்பிடு' என்று கூறிய மாதிரி தோன்றியது.'

கிழவி அவனை நெற்றி வழித்துத் திருஷ்டி கழித்தாள். 'நீ வருவாயென்று எனக்குத் தெரியும். வா, வா. உள்ளே வா." நடையைத் தாண்டியதுமே காஞ்சிபுரத்தான் கண்டு கொண்டான். அது ஒரு நாதசுரக் கலைஞனின் இல்லம்.

பிய்ங் பிய்ங். சீவாளியை நாவினால் ஈரப்படுத்திக் கொண்டிருந்தார் பாயில் உட்கார்ந்திருந்த மனிதர். பலநாள் காய்ச்சல், குறுந்தாடியாக உருவெடுத்திருந்தது. பஞ்சடைந்த கண்களிலும் ஒரு பதற்றம். மெலிந்திருந்த கையில் ஒரு வேகம். "இவன்தான் தம்பி, என் மகன் ரத்தினவேலு. நாளைக்கு அரண்மனையில் நடக்கப்போகும் வசந்தத் திருவிழாவுக்குப் போகத்தான் போவேன் என்று பிடிவாதம் பிடிக்கிறான். ஒரு மாசமாய்க் காய்ச்சலாய்ப் படுத்திருக்கிறவனுக்கு இந்தப் பிடிவாதம் உதவுமா, தம்பி? நீயே சொல்லு, ' என்றாள் கிழவி.

'நோயும் நலிவும் கலைஞனுக்குக் கிடையாது பாட்டி. " நாதசுரக்காரரின் அருகில் உட்கார்ந்து கொண்டான் காஞ்சிபுரத்தான். 'இது கூடாது, அது ஆகாது என்று உண்மைக் கலைஞர்களைக் கட்டுப்படுத்த முடியுமா?"

'அருமையாய்ச் சொன்னீர்கள் ஐயா. நன்றியுடன் வெளிப்பட்டது ரத்தினவேலுவின் குரல். 'கலை மட்டுமல்ல, இதில் குடும்ப கௌரவமும் இருக்கிறது.'

'அதன் பிறகும் தடுப்பது பாவம்.'' கிழவியின் கண்ணில் எத்தனை சீற்றம் 'இந்தாப்பா, இது தான் நீ எனக்குச் செய்கிற உபகாரமா? எழுந்திரு, எழுந்திரு."

காஞ்சிபுரத்தான் சிரித்துக்கொண்டே ரத்தினவேலுவின் கையிலிருந்து நாதசுரத்தை வாங்கிக் கொண்டான். குழந்தையைத் தடவிக் கொடுக்கிற மாதிரி வருடினான்.

'பாட்டி, என்ன உங்கள் கஷ்டம்? சொல்லுங்கள்."

'இதேதான்' நாதசுரத்தைச் சுட்டிக் காட்டினாள் கிழவி. 'விடிந்தால் அரண்மனையில் வசந்தத் திருவிழா. அரசரை அந்தப்புரத்திலிருந்து கொலு மண்டபத்துக்கு அழைத்து வரும் போது எங்கள் குடும்பத்தில் ஒருவன்தான் மேளம் வாசிப்பது வழக்கம். இந்த வருஷம் இவன் காய்ச்சலில் படுத்துவிட்டான். இருந்தாலும் போவேன் என்று அடம் பிடிக்கிறான். '

ரத்தினவேலு சொன்னார்: "உடம்பு இன்றைக்கு இருக்கும், நாளைக்கு போகும். குடும்ப கௌரவம் அப்படியா தம்பி?’’

"ஆமாம், ஆமாம், 'காஞ்சிபுரத்தான் நாதசுரத்தை எடுத்தான் அரண்மனைக்குள், அந்தப்புரம் வரையில் நுழைய இதோ ஒரு வழி! 'பாட்டி! என்னை உங்கள் அக்கா மகனாகத் தத்து எடுத்துக் கொள்ளுகிறீர்களா?"

'என்ன தம்பி சொல்கிறாய்?"

'கேட்கிறவர்களுக்குச் சொல்லி வையுங்கள், அப்படி," காஞ்சிபுரத்தான் புன்னகை பூத்தான். 'நாளைக்கு நானே போகிறேன் அரண்மனைக்கு. வாசித்துவிட்டு வருகிறேன். கொஞ்சம் அபகரம் விழும்...'

ரத்தினவேலுவுக்கு ஒரே உற்சாகம். 'சும்மா வாத்தியத்தைக் கையிலே பிடித்திருந்தால் கூடப் போதும், தம்பி. பரம்பரையாய் வைத்திருக்கிற பதவி இன்னொருத்தன் கைக்குப் போகக்கூடாது, அவ்வளவுதான்.'

நடையில் ஆளரவம். கிழவி எட்டிப் பார்த்தாள். 'தவில் சுருளிமுத்துவா? வா, வா. ' "

தவில்காரர் தோளிலிருந்து மேளத்தைக் கழற்றினார். மூலையில் வைத்துவிட்டு உள்ளே வந்தார். 'தம்பிக்கு ஏதோ காய்ச்சலென்று சொன்னார்களே?' என்று விசாரித்தார். தாளம் போடுகிற பையனும் பின்னாலேயே வந்தான்.

'ரத்தினம் எப்படிப் போகமுடியும் என்று கவலைப் பட்டுக் கொண்டிருந்தேன். ஊரிலிருந்து என் அக்காள் மகன் நல்லவேளை வந்திருக்கிறான்' என்றாள் கிழவி.

தவில்காரர் ஒரு வினாடி சந்தேகத்துடன் பார்த்தார் காஞ்சிபுரத்தானை. அவனுடைய தன்னம்பிக்கை நிறைந்த முகம் தகர்த்துவிட்டது அவர் சந்தேகத்தை.

'அரண்மனைக்குப் புதுசாயிற்றே என்று பயப்படாதே தம்பி! நான் இருக்கிறேன்' என்றார்.

ஜால்ரா போடும் சிறுவன் ஆர்வத்துடன் பேசினான்: 'பாட்டி! இந்த வருசம் அரண்மனையிலே என்னென்னவெல்லாமோ அதிசயம் நடக்கப் போகிறதாம். எல்லாரும் பேசிக் கொள்கிறார்கள். '

'அதென்ன தம்பி, இவன் என்னென்னவோ சொல் கிறான்? '

'சொல்ல மறந்தே போனேன்' என்றார் தவில்காரர். 'நம்ம ராஜாவுக்கு இணை யார் உண்டு, பாட்டி? ஏதோ ஒரோர் சமயத்திலே பொல்லாதவர் மாதிரி, கொடுமைக்காரர் மாதிரி தோன்றுகிறாரே தவிர, மனசு தங்கம்தான். '

'சேதியைச் சொல்லு.'

"ராஜா கிருஷ்ணப்பருக்கு அண்ணன், அண்ணன் மகள் எல்லாரும் இருந்தார்கள் இல்லையா?’’

'அவர்கள்தான் மதம் பிடித்த யானையிடம் இறந்து போய்விட்டார்களாமே?''

'பெரிய அரசரும் ராணியும் மட்டும்தான் இறந்து போனார்களாம். அவர்கள் குழந்தை தாமரை என்கிற...'

''தாமரையா?' திடுக்கிட்டுக் கூவியது காஞ்சிபுரத்தான் தான். தாமரையின் பெயரைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

தவில்காரர் தொடர்ந்தார்: ''தாமரை என்கிற பெயரே உனக்குத் தூக்கிவாரிப் போடுகிறதே! மேலே கேள். அந்தப் பெண் சென்னைப் பட்டணத்திலே யாரிடமோ அடிமையாய் இருக்கிறதென்று மன்னருக்கு இப்போதுதான் தெரிந்ததாம். அதை உடனே வரவழைக்க ஏற்பாடு செய்திருக்கிறாராம்.'

'வரவழைத்து?'

'அவளுக்கே பட்டம் சூட்டப் போகிறாராம். பார்த்தாயா பாட்டி, மன்னருக்கு எத்தனை பெருந்தன்மை?''

"அதிலென்ன சந்தேகம்?" பாட்டி ஆமோதித்தாள். "வேறே யாராகவாவது இருந்தால், கையிலிருக்கிற ராஜ்யத்தை விடுவார்களா? அது சரி, இளவரசியை அழைத்து வந்து விட்டார்களா?"

"அதுதான் தெரியவில்லை. ஆனால் ஊரெங்கும் அதே பேச்சுதான். அரசகுமாரியைப் பார்க்க ஜனங்கள் துடித்துக் கொண்டிருக்கிறார்கள்.'

காஞ்சிபுரத்தானுக்குத் திகைப்புக்கு மேல் திகைப்பு. தாமரையை எவ்வளவு ரகசியமாய் அழைத்து வந்தார்கள் சென்னைப்

பட்டணத்திலிருந்து! அது எப்படி ஊரெங்கும் பரவியது? முதலை அகழியில் தாமரை இறந்திருப்பாளானால், ஜனங்களுக்கு எப்படிப் பதில் சொல்லப் போகிறார் இந்தச் சிங்காவரம் மன்னர்?

எல்லாம் அந்த ரகுநாதரைப் பிடித்தால்தான் தெரியும்...

சென்னைப்பட்டணத்திலிருந்து கடலூருக்குக் கடல் மார்க்கமாக வந்த மூன்று தினங்களுக்குள் என்னென்ன நடந்தன என்று காஞ்சிபுரத்தானுக்குத் தெரியாது.

கும்பினியார் கோட்டையில் ஊர்வலம் முடிந்து வீடு திரும்பியதும் பெரியபெத்து இட்ட கட்டளை:

"நாளைக்குப் பால் பாயசத்துடன் விருந்து வைக்கச் சொல்லு, சமையற்காரர்களிடம்! எல்லா அடிமைகளுக்கும் ஊற்றவேண்டும்.'

தெய்வநாயகி வியப்புற்றாள்: ‘‘என்னப்பா, ராஜ்யம் இப்போதே உங்கள் கைக்கு வந்துவிட்ட மாதிரி?"

'இடையூறாக இருந்த எதிரியை அக்கரைச் சீமைக்கு அனுப்பியாகிவிட்டது! இனி என்ன?' மீசையின் இரண்டு நுனிகளையும் இரண்டு சுண்டு விரல்கள் தட்டிக் கொடுத்தன.

"எமனுக்குத் தலைமகன் அவன்" தெய்வநாயகி சிரித்தாள். "எங்கேயாவது திடீரென்று தலைகாட்டுவான்."

"கனவு" மகளின் மணிக்கட்டைப் பரிசோதித்தார் பெரிய பெத்து. 'பலே! குறத்தி நன்றாக வேலை செய்திருக்கிறாள். பழசென்று தோன்றும்படி பச்சிலைகள் தேய்த்தாளா?"

'நிறைய.' திருப்தியுடன் வெளிநடந்தார் பெரியபெத்து. அடுத்து அவருடைய விஜயம்: அலி மாடசாமி காயங்களுடன் படுத் திருந்த மருத்துவமனை.

"எஜமான் இந்த நாயைத் தாங்கள்தான் காப்பாற்றினீர்கள், ' கையெடுத்துக் கும்பிட்டான் கங்காணி.

'உன் நன்றியைக் காட்டச் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது, பெரியபெத்துவின் விரலசைப்பில் அருகிலிருந்தோர் அகன்றனர்.

‘'எதுவும் செய்கிறேன், எஜமான். '

'சீரங்கத்தில் நாம் விலைக்கு வாங்கியது தாமரையை அல்ல, தெய்வநாயகியை. புரிகிறதா?’’

மூளையைக் கசக்கி விளங்கிக் கொண்டான். 'சிங்காவரம் ராஜகுமாரி இனி-'

'தெய்வநாயகிதான். சமயம் வரும்போது சொல்லத் தயாராயிருக்க வேண்டும். '

செய்தி அறிவதற்காகச் சிங்காவரத்திற்கு அனுப்பப் பட்டிருந்த ஒற்றன் மறுநாள் காலை வந்தான்.

அவன் சொன்னான்: "தாமரையை அழைத்துச் சென்றது அரசபீடத்தில் அமர்த்த அல்ல. ரகசியமாய் ஒழித்துக் கட்டத்தான்."

பெரியபெத்து முறுவலித்தார்: "அப்புறம்?"

'மன்னர் கிருஷ்ணப்பர், தன் மாமனார் ரகுநாதரிடம் தாமரையை ஒப்படைத்தாராம். அவர் அவளை முதலைகள் நிறைந்த அகழியில் தள்ளிவிட்டாரென்று தெரிய வருகிறது.'

"ஹூம். அந்தஸ்துக்கு மீறி ஆசைப்பட்டால் அப்படித் தான்." மீசையைச் சுண்டியபடி குறுக்கும் நெடுக்குமாய் உலவினார் பெரியபெத்து. "அசல் வாரிசை ஒழித்துவிட்டானா கிருஷ்ணப்பன்? இன்னும் நல்லதாயிற்று. நீ போய், நம் ஆட்களில் நம்பகமான பத்துப் பேரை அனுப்பி வை. கெட்டிக் காரர்களாயும் பிரசாரத்திலே புலிகளாயும் இருக்க வேண்டும்."

'அவர்கள் என்ன செய்யவேண்டும் எஜமான்?"

"அதை நானே அவர்களிடம் சொல்லிக் கொள்கிறேன். '

சிங்காவரத்திலே அங்காடி வீதி.

கடையில் வாங்கிக் கொண்டிருந்தவன் கேட்டான்: 'என்ன ஐயா, அரிசி இந்த விலை விற்கிறது?"

'விளைச்சல் இல்லையே, ஐயா. மழை இருந்தாலல்லவா விளைச்சல் , '

'இந்த வருஷம் கட்டாயம் மழை இருக்கும், பாருங்கள். ராஜா தர்மவானாயிருந்தால், பூமி பூரிக்காதா? கிருஷ்ணப்பர் நீதி நியாயம் தவறாத மன்னர். இல்லாவிட்டால், எங்கேயோ மறைந்து போன அண்ணன் மகளைத் தேடிப் பிடித்து வருவாரா?'

'அது என்ன புதிசாயிருக்கிறது? கடைக்காரர் ஆவல் கொண்டார்.

"காதிலே விழுந்ததைச் சொன்னேன், ஐயா. பெரிய இடத்துச் சமாச்சாரம். அதாவது...'

சிங்காவரத்திலே ஒரு கொல்லன் பட்டறை.

படை வீரனொருவன் தன் வேலை நீட்டினான்: 'முனையை நன்றாய் அடித்துக் கொடுங்கள், ஐயா...'

உலையில் பழுக்கக் காய்ச்சி, சம்மட்டியால் அடித்தபடி கொல்லர் விசாரித்தார்: 'செஞ்சி மன்னரின் படையிலே சேர்வதற்காகப் போகிறீரா?'

'அங்கே ஏன் போகவேண்டும்? நம் ராஜ்யத்துக்கே யுத்தம் வந்தாலும் வரலாம். ' போர் வீரன் குந்திக்கொண்டு மெல்லப் பேசினான். 'நம் ராஜா கிருஷ்ணப்பரைப் போன்ற நல்லவரை உலகம் விட்டு வைக்காது, ஐயா. வலுச்சண்டைக்கு வருவான் எவனாவது. அதுவும், புதிதாய் ஒரு ராணி பட்டத் துக்கு வருகிறார்களென்றால்...'

'என்ன என்ன! கொல்லரின் சம்மட்டி ஆச்சரியத்தால் அப்படியே நின்றது.

சிங்காவரத்தில் வண்ணத்தையும் வாசனையையும் வாரியிறைக்கும் ஒரு பூக்கடையில்:

"இந்தாம்மா. மாலையென்றால் மாலை அப்படியிருக்க வேண்டுமாக்கும் காசு பணத்தைப் பார்க்காதே. எவ்வளவு வேனுமானாலும் தருகிறேன். '

'உட்காருங்கள் சாமி, நொடியில் கட்டித் தருகிறேன். வசந்தத் திருவிழாவுக்கு எடுத்துப் போகிறீர்களா?'

"ஆமாம். ஆமாம்.'

"ராஜாவுக்குப் போடத்தானே? அருமையாய்க் கட்டித் தருகிறேன். '

வந்தவர் சுற்றுமுற்றும் பார்த்தார். குரலைத் தாழ்த்திக் கொண்டார். "ராஜாவுக்கு, இல்லையம்மா, ராணிக்கு! புதிதாய்ப் பட்டத்துக்கு வரப் போகிறார்களாமே, அந்த ராணிக்கு!'

'என்ன சாமி, புதிசு புதிசாய்ச் சொல்கிறீர்கள்?"

'ஊரெல்லாம் பேச்சாயிருக்கிறதே. உனக்குத் தெரியாதா?'' வந்தவர், விவரிக்க ஆரம்பித்தார்.

பெரியபெத்து தேர்ந்தெடுத்திருந்த பத்து ஆட்களும் சுறுசுறுப்பாகத்தான் வேலை செய்தார்கள்.

மன்னர் கிருஷ்ணப்பர் பவனி கிளம்பினார்.

கொலு மண்டபத்தை நோக்கி அரச பரிவாரம் நகர்ந்தது.

காஞ்சிபுரத்தான் நாதசுரத்தைச் சமாளித்துக் கொண்டிருந்தான்.

கிருஷ்ணப்பர் ராணியைக் கேட்டார்: 'எங்கே உன் தந்தையைக் காணோம், ராணி?'

'அவருடைய மாளிகையிலேயே தங்கியிருக்கிறார். ஏனோ தெரியவில்லை. இரண்டு மூன்று நாட்களாக அவரும் அதிகம் வெளிவருவதில்லை. பிறரையும் உள்ளே அனுமதிப்பதில்லை. '

'உடல் நலம் இல்லையோ என்னவோ, வசந்தத் திருவிழாவுக்கு வராமல் இருக்க மாட்டாரே?"

மன்னர் வாழ்க! நெறி தவறாத அரசர் நீடுழி வாழ்க!

வழங்கப்பட்டன வாழ்த்துக்கள் தூவப்பட்டன மலர்கள்! சூடப்பட்டன மாலைகள்!

மன்னர் கிருஷ்ணப்பரும் ராணி சென்னம்மாவும் கொலு மண்டபத்தின் ஆரவாரங்களை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டிருந்தார்கள்.

நாதசுரம் வாசித்து வந்த இளைஞன் அரண்மனைக்குள் நழுவுவதை எவரும் கவனிக்கவில்லை, கவலைப்படவுமில்லை.

ரகுநாதர் வாழ்க !

கிருஷ்ணப்பர் வாழ்க!

திடீரென்று ஒரு புதிய கோஷம்...

'இளையராணி தாமரை வாழ்க!'' 'வாழ்க ! வாழ்க!' சவுக்கடி பட்ட மாதிரி திடுக்கிட்டார் கிருஷ்ணப்பர். ராணி சென்னம்மாவின் முகம் வெளுத்தது.

அரசருக்கு ஆனந்த அதிர்ச்சி என்று எண்ணியது கூட்டம். 'வாழ்க புதிய ராணி! ஓங்குக அரசரின் நீதி!' அமைதி கலையாமல் கம்பீரமாகவே விசாரித்தார் மன்னர்: "என்ன இது?"

ஒரு முதியவர் முன்வந்தார்: ‘‘மன்னரவர்கள் மன்னிக்க வேண்டும். எவ்வளவுதான் மறைக்க முயன்ற போதிலும் அரசரவர்களின் பெருந்தன்மையும் நீதியுணர்வும் குடிமக்களாகிய எங்களுக்குத் தெரிந்து விட்டன. என்றோ மறைந்து போன அண்ணன் மகளை மீட்டு வந்து அரியாசனத்தில் அமர்த்த வேண்டும் என்று தாங்கள் மேற்கொண்டுள்ள பெருமுயற்சி களை நாங்கள் அறிவோம்...'

அவசரமாகக் குறுக்கிட்டார் கிருஷ்ணப்பர்: "மக்களுடைய ஆசிக்கும் பாராட்டுக்கும் மிக்க நன்றி. என் அருமை அண்ணன் மகளைத் தேடிக் கண்டுபிடித்தது உண்மை. அவளை இங்கே அழைத்துவர முயன்றதும் உண்மையே. ஆனால் அவள்... அவள்... உண்மையான வாரிசு...'

மன்னரின் குரல் தழுதழுத்தது. இன்னொரு குரல் ஓங்கி ஒலித்தது: 'அவள் இதோ இங்கே இருக்கிறாள்.' தெய்வநாயகியின் கரத்தைப் பிடித்து அழைத்துக் கொண்டு முன்னே வந்தார் பெரியபெத்து.

## (14)

எறும்பு அப்படி ஊர்ந்திராது. பாம்பு அப்படி நழுவியிராது. புகை அப்படிப் புகுந்திராது.

அடிமேலடி வைத்துக் காஞ்சிபுரத்தான் போய்க் கொண்டிருந்தான். அரண்மனைக்குள் நடமாட்டமே காணோம். வசந்தத் திருவிழா அனைவரையும் வெளியேற்றி விட்டது போலும். ஆனால் திடீர் திடீரென்று எவனாவது ஒரு காவல் வீரன் கண்ணில் படுவான். இண்டோ இடுக்கோ பொந்தோ சந்தோ சட்டென்று மறைவான் காஞ்சிபுரத்தான்.

பளிங்குச் சுவரில் அவன் முதுகு உராய்ந்தது. பூச்செடிகள் அவன் முகத்தில் கீறின. எதிர்பாராத தூண்கள் முட்டியைப் பெயர்த்தன. கவிந்து கொண்டிருந்த அந்தி வேளை சற்று முன்னால் வரை துணையாயிருந்தது. இப்போது அதுவே அவனுக்குப் பகை.

இருட்டத் தொடங்கியதால், வாண வேடிக்கைகள் சீறின. வண்ண விளக்குகள் பிரகாசித்தன. ஈ எறும்பு கூட இனி ஒளிய முடியாது.

வேகமாய் நடந்தான் காஞ்சிபுரத்தான். மாடங்கள், கூடங்கள், முடிவற்ற தாழ்வாரங்கள்.

அந்த ரகுநாதர் என்பவரின் அறை எது? யாரைக் கேட்பது?

'இந்தாப்பா. வா இப்படி. பிடி, பிடி!'

காதில் குரல் விழுமுன், கண்கள் பதுங்குமிடம் தேடின.

அவன் இருந்த இடம் அரண்மனைப் பூங்கா. வலது கைப் பக்கம் ஒரு செயற்கைத் தடாகம் தெரிந்தது. மத்தியில், நீர் பீச்சியடிக்கும் அழகிய ஊற்று. சுற்றிலும் அல்லி மலர்கள்.

படுத்தவாறே ஓர் உருளல்.

ஓசையின்றித் தண்ணிருக்குள் வழுக்கிக் கொண்டு விட்டான் காஞ்சிபுரத்தான். அப்போதும் கூட, "பிடி, பிடி' என்ற சொற்களே கடைசியாகக் காதில் விழுந்தன.

தடாகம் நல்ல ஆழம். தலைக்கு மேல் தண்ணிர் ஓடியது. மூச்சுப் பிடித்தான். ஒன்று, இரண்டு... பல வினாடிகள் ஓடின. ஒருமுறை தலையை வெளியே நீட்டலாம். சுவாசம் இழுத்துக் கொள்ளலாம். மறுபடி தலையை உள்ளுக்கு வாங்கிக் கொள்ளலாம். இவ்வாறு நினைத்து, தண்ணீர் மட்டத்துக்கு மேல் முகத்தை உயர்த்தினான்.

'ஹா ஹா ஹா!' - தடாகத்தின் கைப்பிடிச் சுவரில் கையை ஊன்றி, தண்ணிரையே குனிந்து பார்த்துக் கொண்டிருந்த ஓர் உருவம் இடைவிடாமல் நகைத்தது. கருத்த மேனி. ஓயாத தாம்பூலத்தால் சிவந்த உதடுகள். தடித்த அங்கங்கள். கரத்தில் தங்கத் தோடா.

“ஏண்டா தம்பி, சமையற்காரனுக்கு ஒரு சின்ன ஒத்தாசை செய்வதைக் காட்டிலும் சாவதே மேல் என்று தீர்மானம் பண்ணிவிட்டாயா?"

பூ சமையற்காரர்தானா இந்த ஆள்! பின்னே, "பிடி பிடி!' என்று கூவினாரே!

மேலேறி வந்தான் காஞ்சிபுரத்தான். 'குளிப்பதற்கு இப்போதுதான் நேரம் கிடைத்தது.'

"ரகுநாதர் பார்த்திருந்தால் உனக்குக் கடைசிக் குளியல் நடந்திருக்கும். அவருக்கு அத்தனைப் பிரியமான குளம் இது!"

'ரகுநாதரா ஐயா, அவரை...'

'அப்புறம் பேசலாம். இதைப் பிடி முதலில்." அப்போதுதான் கவனித்தான் காஞ்சிபுரத்தான். ஒரு பிரமாண்டமான அண்டாவில் குழம்பு கொதித்துக் கொண் டிருந்தது மணக்க மணக்க.

'யானைக்காரன் மண்டபம் தெரியுமா? அங்கே எடுத்துப் போகவேண்டும். ஊம், ஊம். பிடி ஒரு கை.'

காஞ்சிபுரத்தானுக்குச் சிரிப்பு வந்தது. இந்தப் 'பிடி'யைத் தான் இவர் சொன்னாரா!

அண்டாவின் ஒரு காதை அவன் பிடித்துக் கொள்ள, மற்றதைச் சமையற்காரர் பிடித்தார். தொலைவில் தெரிந்த மண்டபத்தை நோக்கி நடை விரைந்தது.

'விருந்தா ஐயா?"

"ஆமாம். ஏழைகளுக்குக் கஞ்சி ஊற்றுகிற நாள் இது. சாதம் கறி மோர் எல்லாம் போய்விட்டது. குழம்பு தான் நேரமாகிவிட்டது.'

கூட்டம் அலைமோதிற்று யானைக்காரன் மண்டபத்துக்கு வெளியே.

உள்ளே, சமையற்காரரின் இரண்டொரு உதவியாளர்கள் பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருந்தார்கள்.

"இப்படி, இப்படித் திரும்பு." சமையற்காரர் ஒரு திசையில் இழுத்தார். காஞ்சிபுரத்தான் எதிர்த் திசைக்கு இழுத்தான்.

"அந்தப் பக்கம், சாக்கடை தம்பி. அங்கே ஏன் கொண்டு போகிறாய்?" என்று கத்தினார் சமையற்காரர். அவர் சொல்லி வாய் மூடவில்லை. டமாலென்று அவ்வளவையும் கவிழ்த்தான். காஞ்சிபுரத்தான். பருப்பும் கறிகாய்களும் நிரம்பியிருந்த குழம்பு, சாக்கடையிலே சங்கமமாயிற்று.

'அடப் படுபாவி! வேண்டுமென்றே ஏனடா இப்படிச் செய்தாய்?"

பீரிட்ட சமையற்காரரின் வாய் அடைத்துப் போயிற்று. கொட்டிய குழம்பிலிருந்து எதையோ பொறுக்கி அவர் கண் முன்னால் நீட்டினான் காஞ்சிபுரத்தான்.

"ஆ. பாம்பு நல்ல பாம்பு!" தெறித்து விழுந்தன, அங்கிருந்தோரின் விழிகள்.

"ஆமாம்! நல்ல பாம்பேதான். கொதிக்கும் குழம்பில் தவறி விழுந்திருக்கிறது. தடாகக் கரையில் அண்டாவைப் பிடிக்கச் சொன்னீர்களே, அப்போதே கவனித்தேன்,' என்றான் காஞ்சிபுரத்தான்.

விழுந்தார் அவன் காலில் அந்த வயோதிக சமையற்காரர். கட்டிக் கொண்டு கண்ணிர் உகுத்தார். 'தம்பி என் தலையைக் காத்தது முக்கியமல்ல. எத்தனை ஏழைகளின் உயிரை நீ காப்பாற்றிவிட்டாய்! உனக்கு எப்படித் தம்பி கைம்மாறு செய்வேன்!"

தயங்காமல் பதில் வந்தது. "ரகுநாதரின் இருப்பிடத்தைக் காட்டுவதன் மூலம்.'

‘'வேண்டாம் தம்பி. அவனிடம் என்ன உனக்கு வேலை? அவன் ஓர் ஓநாய்."

'அதன் பற்களைப் பிடுங்கத்தான் நான் வந்திருக்கிறேன்."

'அவன் தந்திரக்காரன். சூழ்ச்சி நிறைந்தவன். பதுங்கிப் பதுங்கி ஏதாவது செய்து கொண்டேயிருப்பான். இப்போதும் கூட... "

'இப்போது கூட?"

'சில தினங்களாக அவன் தன் மாளிகையை விட்டு வெளிப்படுவதில்லை. சாப்பாடு எடுத்துச் செல்லும் ஆளை உள்ளே அனுமதிப்பதில்லை. வசந்தத் திருவிழாவுக்கு மன்னருடனும் மகளுடனும் முதலில் சென்றிருக்க வேண்டாம்? செல்லவில்லை. '

'வழியைச் சொல்லுங்கள்." "நேரே போய், வலது தாழ்வாரத்தில் திரும்பு. மூன்றாவது கதவினருகே சிவப்பு உடை அணிந்த காவலாள் இருப்பான். கதவில் சிவப்பு ரத்தினக் கல் பதித்திருக்கும். அறை வாசலில் சிவப்புக் கண்ணாடி போட்ட விளக்கு ஏற்றியிருக்கும். சிவப்புத்தான் அவனுக்குப் பிடித்த நிறம். '

‘'நல்லது. வேறு நிறத்தில் ஏதேனும் பொருள்கள் இருந்தால் அவன் ரத்தத்தாலேயே பூசிச் சிவப்பாக்கி விடுகிறேன்." காஞ்சிபுரத்தான் திரும்பி நடந்தான்.

குறிப்பிட்ட இடம் வந்தது. குறிப்பிட்ட சிவப்பு உடைக் காவலாளும் கண்ணில் பட்டான்.

டக் டக். விரலைச் சொடுக்கினான் காஞ்சிபுரத்தான். ஆனால் இருட்டிலிருந்து வெளிப்படவில்லை.

'யாரது?" கேட்டுக்கொண்டே வந்தான் காவலாள். அது போதாதா காஞ்சிபுரத்தானுக்கு? மறுவினாடி மூச்சுப் பேச்சில்லாமல் அந்த சிப்பாய் தரையில் உருண்டான்.

சிவப்புச் சீருடையை அணிந்து கொண்டு, ரகுநாதரின் அறை வாசலைக் காஞ்சிபுரத்தான் அடையவும் ரகுநாதர் வெளிப்படவும் சரியாயிருந்தது.

மடேலென்று கதவைச் சாத்தினார் அவர். தாமே பூட்டினார். திறவுகோலைத் தமது நீண்ட அங்கியில் செருகிக் கொண்டார். "வசந்தத் திருவிழாவுக்காகக் காத்திருப்பார்கள். இல்லாவிட்டால்...'

பல்லைக் கடித்துக்கொண்டே அகலும் அவரையே பார்த்தான் காஞ்சிபுரத்தான். 'இல்லாவிட்டால்?' என்ன பண்ணியிருப்பார்?

'யாரங்கே உள்ளே?' தாழ்ந்த குரலில் அழைத்துப் பார்த்தான். பலனில்லை. பிறகு இன்னும் கொஞ்சம் உரக்க. அதற்கும் பலனில்லை. விரலால் கதவைத் தட்டினான். ஊஹும். தாமரைக்கு ஏதோ ஆபத்து. உடனே தாங்க வேண்டும் அவளை. கற்பனைகள் விரிந்தன.

அறையின் வெளிப்புறம் வந்து ஆராய்ந்தான். பரந்த வெளி முற்றம் இருந்தது. உயரத்தில் ஒரு திறந்த மாடம் தெரிந்தது.

அதன் வழியே உள்ளே எதையாவது எறிந்தால்? கனமான பொருளாக இருக்கக் கூடாது. ஓசை படுத்துவதாக இருக்கக் கூடாது. அப்படி என்ன பொருள்?

அறைக்கு அறை பட்டுத் திரைகள், காற்றில் அசைந்து கொண்டிருந்தன.

சரசரவென்று மூன்று நான்கைப் பறித்தான். சுருட்டினான். பந்தாக்கினான்.

வீசியெறிந்தான் மாடத்தின் வழியே. அவன் எதிர்பார்த்தது வீணாயிற்று. உள்ளே விழாமல் மாடத்தின் இடுக்கிலேயே நின்று விட்டது அந்தத் துணிப் பந்து.

அதுமட்டுமல்ல. எதிர்பாராத விபத்தொன்றும் நிகழ்ந்தது.

வெகு நேரமாய் ஆகாய வெளியை ஒளிமயமாக்கிக் கொண்டிருந்த சீறும் வாணங்களிலொன்று

பறந்து வந்தது. மாடத்தில் விழுந்தது. துணிப்பந்தை முத்த மிட்டது. அக்கினியை அழைத்தது.

தீ தீ! புகை மண்டலம்!

எரிந்து கொண்டிருந்த துணிப் பந்து, எரிந்தபடியே உள்ளுக்குள் விழுந்தது.

"ஐயோ!' - ஒரு பெண்ணின் அலறல்.

அங்கே கொலு மண்டபத்தில் - கூச்சல். ஆரவாரம். எக்காளம். முன்னே வந்த தெய்வநாயகியின் வதனத்தில் மின்னியது ராஜ கம்பீரக் களை. அதைக் கண்டதுமே முடிவு செய்து விட்டது மக்கள் கூட்டம்.

வாழ்கி அரசகுமாரி வாழ்க இளவரசி! ஓங்குக மன்னரின் கீர்த்தி!

அத்தாணி மண்டபத்தின் வித்தாரக் கூரைகூட விழுந்து விடுமோ என அஞ்சச் செய்தன. அந்த ஆரவாரங்கள்.

'நிறுத்துங்கள் நிறுத்துங்கள்'' இடியென முழங்கினார் கிருஷ்ணப்பர். சீற்றத்தால் சிவந்தன அவர் கண்கள். 'யாரோ ஒருத்தியைப் போய் எவனோ ஒருவன் இளவரசி என்றால், வாழ்த்திவிடுவதா உடனே? இவன் வெறும் ஏமாற்று மோசடிக் காரன்!'

பெரியபெத்து நிதானமாகப் பேசினார்: "இவள் உண்மையான வாரிசு அல்ல - இளவரசி தாமரை அல்ல - என்றால், அசல் ராஜகுமாரி எங்கே என்று தாங்கள் சொல்ல முடியுமா, மன்னரவர்களே!"

ஒரு முதியவர் கிருஷ்ணப்பரை அணுகினார்: "அரசரவர்கள் கோபிக்கக் கூடாது. காணாமற் போயிருந்த இளவரசியைத் தாங்கள் அழைத்து வந்திருப்பதாகச் செய்தி பரவியதும், நாங்கள் எல்லோரும் மனமகிழ்ந்தோம்...'

"மூடு வாயை" சீறினார் கிருஷ்ணப்பர். பெரியபெத்துவின் புன்னகை விரிந்தது. 'மன்னரவர் களுக்குக் கோபம் தேவையில்லாமல்தான் வருகிறது."

"புரட்டர்களைக் காணும்போது அப்படித்தான்!'

'கண்ணாடியைப் பார்க்க நேரிடும்போது என்ன செய்வீர்களோ' ஏளனச் சிரிப்புடன் நெருங்கி வந்தார் பெரியபெத்து. "ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்தி விடுகிறேன். சீரங்கத்தில் இவள் அடிமையாக விற்கப்பட்டதற்கும், நான் விலை கொடுத்து வாங்கியதற்கும் சாட்சியங்கள் இருக்கின்றன. கையில் தாமரைச் சின்னத்தையும் காணலாம். அரச குலச்செல்வி இவள் என்பது எனக்கு அப்போதே தெரியும். அதனால்தான் சீரும் சிறப்புமாக வளர்த்தேன். எந்தச் சக்கரவர்த்தினிப் பதவி கிடைப்பதாயிருந்தாலும் என் கண்மணியை நான் இழக்கத் தயாராயிருக்கவில்லை. அதனால்தான் அரியாதனத்துக்கு உரிமை கோராமலும் இருந்து வந்தேன் இத்தனை காலமாக, ஆனால் மக்கள் இவளை விரும்புவதாகத் தெரியவந்தது. தாங்களும் விட்டுக் கொடுக்க இணங்கியிருப்பதாக அறிந்தேன். அதனால் தான் அழைத்து வந்தேன். அப்படியொன்றும் என் கண்மணி பெற்றிராத பாக்கியமல்ல இந்தச் சிங்காவரத்துச் சிம்மாதனம். கும்பினியாரின் உற்ற நண்பன் நான். விரும்பினால் எந்தச் சிம்மாதனத்தையும் எளிதில் அடையமுடியும். ஆகவே மக்கள் சொல்லட்டும், தாமரை வேண்டாமென்று. இப்போதே திரும்பி விடுகிறோம். '

கிருஷ்ணப்பர் பல்லைக் கடித்துப் பொறுமையைக் கடைபிடித்தார். 'என் அன்பார்ந்த குடிமக்களே! உண்மை உங்களுக்குத் தெரியாது.

எங்கள் குலவிளக்கான செல்வி தாமரையிடம், உங்களுக்கெல்லாம் இருக்கும் அன்பையும் மதிப்பையும் கண்டு பெருமைப்படுகிறேன். ஆனால், அந்த அசல் தாமரை இவள் அல்ல! அல்லவே அல்ல!'

'பின்னே அவள் எங்கே?'

'துரதிருஷ்டவசமாக, அகழியில் தவறி விழுந்து விட்டாள். முதலைக்கு இரையாகி விட்டாள்!"

'தப்பு: தாமரை இறக்கவில்லை! நமது அரண்மனையில் பத்திரமாய் இருக்கிறாள்'

அமைதியாக வந்தது பின்னேயிருந்து ஒரு குரல்.

அது ரகுநாதருடையது.

## (15)

பொறுக்குமா அதற்குமேல்? 'ஐயோ!' என்றது அவள் குரலல்லவா? தீயானாலும் பாயத் தூண்டும் தேன்குரல். எமனுடனும் மோதச் சொல்லும் இன்குரல்.

“தாமரை பயப்படாதே!' குரல் கொடுத்தான் காஞ்சிபுரத்தான். 'நான் வந்திருக்கிறேன். நான் தெரிகிறதா?”

அவள் உயிரோடுதான் இருக்கிறாள். தீயின் கொழுந்துகள் பேயாட்டம் ஆடின. நாக்கை நீட்டி நீட்டி இரை தேடும் நாகத்தைப் போல், சுழன்று சுழன்று நுழைந்தன நெருப்பின் பல்லாயிரம் கரங்கள்.

தொலைவில் ஆரவாரம் கேட்டது. புகை சூழ்ந்த நெருப்பும் பெண்ணிடம் சொன்ன ரகசியமும் ஒன்றுதானோ? பரவி விட்டது போலும். யார் யாரோ ஓடிவரப் போகிறார்கள்.

கதவை நோக்கி ஓடினான் காஞ்சிபுரத்தான். அந்தக் காவலாள் உடை ஓர் உபத்திரவம். வழியிலேயே களைந்தெறிந்தான். வெறும் தோளினால் மோதினான் கதவுகளை. கூர்மையான பித்தளைக் குமிழ்கள் கிழித்தன அவன் சதையை. கதவுகளில் பதிக்கப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான சிங்காரக் கிண்கிணிகள் சிரித்தன அவனுடைய வீண் முயற்சியைக் கண்டு. அவனது தீரத்தைக் காண ஆசைப்பட்ட மாதிரி அவனுடைய ரத்தம் வெளிவந்து வழிந்தது.

கதவு மடேலென்று திறந்து கொண்டதை அவன் உணர்ந்தான். பார்க்க முடியவில்லை. புகை புகை! நாற்புறமும் வியாபித்திருந்தது அது ஒன்றுதான்.

‘‘தாமரை எங்கே இருக்கிறாய் நீ! தாமரை!' பதிலில்லை. ‘‘தாமரை தாமரை தண்ணிரில் மூழ்கியவனைப் போலத் திணறியது காஞ்சிபுரத்தானுக்கு மூச்சு. துழாவித் துழாவி முன்னேறினான்.

காலில் தட்டுப்படுவது? ‘‘தாமரை" அள்ளி அணைத்தான். தோளில் சாத்திக் கொண்டான். திரும்பிப் பார்த்தான்.

வந்த வழி அடைபட்டுவிட்டது. அக்கினியின் செங்கோல் அங்கே. எதிர்ப்புறம், உப்பரிகைக்குச் செல்லும் படிக்கட்டு ஒன்று தென்பட்டது.

நெருப்பு நெருப்பு தண்ணிர் கொண்டுவா மணல்! மணல்! நகருங்கள்! மேலே விழும்!

-தேங்காய் மூட்டை சிதறிய மாதிரி வெளியே குரல்களின் குவியல்.

நிமிட நேரம் தயங்கினான் காஞ்சிபுரத்தான். ஒத்தாசை வருகிறதே...

ஒத்தாசையா? அல்ல. உயிருக்குயிரானவளைப் பறிக்கத் தான் அது!

பாய்ந்தான் உப்பரிகைக்கு. படிகள் வழியே தாவினான். நடுவழியில் ஒரு சாளரம். திறந்த கதவின் வழியே பார்த்தான். அடர்த்தியான புல்வெளி. குதித்தால் தாங்கிக் கொள்ளும். தாமரையைத் தோளில் அணைத்தவாறே குதித்தான். நெருப்புப் பிடித்திருந்த பகுதிக்கு மறுபுறம் இந்த இடம். அரவம்தான் கேட்டது. ஆட்கள் வரவில்லை.

மெல்லக் கிடத்தினான் மங்கையை. கவலையுடன் அவள் கேசத்தை விலக்கின அவன் விரல்கள். ''தாமரை... தாமரை...'

நல்லவேளை, தீக்காயம் எதுவும் தெரியவில்லை. வெறும் அச்சத்தினால் மயக்கமுற்றிருக்கிறாள்.

தூரத்தில் ஓர் அழகுக் குளம் தெரிந்தது. ஒரு கை தண்ணீர் தெளித்தால் போதும். எழுந்து விடுவாள். குளத்தை நோக்கிப் பாய்ந்தான்.

உள்ளங்கைகளில் தண்ணீர் எடுத்துக் கொண்டு அவன் நிமிர்ந்திருப்பான்.

'இதோ இங்கே இப்படி வாருங்கள்!" கிடத்தப்பட்டிருக்கும் தாமரையைக் கண்டுவிட்டான் எவனோ ஒருவன்.

திமுதிமுவெனக் கூட்டம்! ஆரவாரம். ஆர்ப்பாட்டம். 'வழி வழி மன்னரவர்களுக்கு வழி!' ஒகோ. அவர்தான் கிருஷ்ணப்பரா? அவள்? ராணி. அந்தக் கிழவன்தான் ரகுநாதன் என்ற அயோக்கியன் போலும்.

தாமரையின் மயக்கம் தெளிந்து விட்டது. துவள்கிறாள், பெயருக்கேற்ற கொடிபோல. தாங்கிக் கொள்கிறாள் சேடிப் பெண்ணொருத்தி.

அரச பரிவாரம் முன்னே நடந்தது. கூட்டம் பின் தொடர்ந்தது - தாமரை உள்பட.

எங்கே போகிறார்கள் இவர்கள்? எதற்காக! சற்றுப் போகவிட்டுப் பின்சென்றான். தீ விபத்தைத் தடுத்துவிட்டார்கள் அதற்குள். காலடியில் தண்ணீர்ச் சேறு, அணைந்த நெருப்பின் அமங்கல நாற்றம்.

கொலு மண்டபத்தின் கூட்டத்தோடு காஞ்சிபுரத்தான் கலந்த சமயம், ரகுநாதர் சொல்லிக் கொண்டிருந்தார்: "இதோ இவள் தான், அரசகுமாரி தாமரை! பார்த்துக் கொள்ளுங்கள்!"

'ஆதாரம்?" ஈட்டிபோல் குத்தியது அந்த எதிர்க்குரல். காஞ்சிபுரத்தான் கண்ணைத் துடைத்துக் கொண்டான். பெரியபெத்துவா! அவருக்கு அருகில் அவருடைய மகள் தெய்வநாயகியா!

பட்டணத்து எஜமானர் பேசுவதை அவன் செவிகள் உன்னிப்பாய்க் கேட்டன: "மீண்டும் சொல்கிறேன். இதோ என்னருகேயுள்ள தெய்வநாயகிதான், சிங்காவரத்தின் சிம்மாதனத்துக்காகப் பிறந்தவள். மாடசாமி, இப்படி வா. உனக்குத் தெரிந்ததைச் சொல்லு மக்களுக்கு."

அலி மாடசாமி முன் வந்தான்: 'சீரங்கத்துக்குச் சென்றிருந்தோம் அடிமைகள் வாங்குவதற்காக, ஒரு கிழவன் இவர்களை விற்றான். இந்த ஊர் அரசரையும் ராணியையும் குழந்தையையும் ஒரு மதம் பிடித்த யானை மலைச் சரிவில் உருட்டி விட்டதாகவும், குழந்தை மட்டும் தப்பியதை யாரும் கவனிக்கவில்லை என்றும் சொன்னான். அரசகுமாரி என்று அறிந்தது முதல் அருமை பெருமையுடன் வளர்த்து வருகிறார் எஜமானர்."

எண்ணங்கள் மின்னின காஞ்சிபுரத்தான் உள்ளத்தில். ஆதாரமில்லாமல் பெரியபெத்து போராடமாட்டார். இந்தச் சிங்காவரம் மன்னனும் கிழவனும் மோசடிக்காரர்கள். என்னென்னவோ தந்திரங்கள் செய்து, தாமரையைக் கடத்தி வந்தவர்கள். அவளை ஒழித்துக் கட்ட முயன்றவர்கள்.

பெரியபெத்துவின் உதவிக்கு விரைய முயன்றன அவன் கால்கள். தடுத்தது பெரியபெத்துவின் பேச்சொன்று:

'என் அடிமையொருவனுக்குத் தெரியும், இவள் மீது நான் எத்தனை அன்பு வைத்திருந்தேன் என்று. ஒருமுறை இவள் உடல் நலமில்லாதிருந்தாள். வைத்தியர்கள் கைவிட்டு விட்டார்கள். எனக்கு உயிரே வெறுத்துவிட்டது. விஷமருந்தித் தற்கொலை செய்து கொள்ளவிருந்தேன். துரதிருஷ்டவசமாக இப்போது அவன் சுமத்திராவுக்குச் சென்று விட்டான். இல்லா விட்டால் அதையெல்லாம் சொல்வான்..."

பின்னடைந்தான் காஞ்சிபுரத்தான். பெரிய பெத்து சொல்கிற மாதிரி எதுவும் நடைபெற்றதில்லையே? நியாயம் தங்கள் பக்கம் உள்ளவர் பொய்யைத் துணைக்கழைப்பானேன்?

கிழவர் ரகுநாதரின் முகத்தில் கேலிப் புன்னகை தவழ்ந்தது. அலி மாடசாமியை நோக்கி வீசினார் ஒரு கேள்வி: 'யாரோ விற்றிருக்கலாம். எவரோ வாங்கியிருக்கலாம். ஆனால் உங்கள் பெண்தான் சிங்காவரத்தின் அரசகுமாரி என்பதற்கு என்ன ஆதாரம்?"

'சரியான கேள்வி சரியான கேள்வி" கூட்டத்தின் ஆரவாரம் உற்சாகத்துடன் கிளம்பியது. ஆடம்பர அலங்காரத்துடன் இருந்த தெய்வநாயகியைக் காட்டிலும், எளிமையும் அமைதியும் திகழ்ந்த தாமரையிடமே அவர்கள் அனுதாபம்: திரும்பியது.

"நான் சொல்கிறேன் பதில்,' என்றார் பெரியபெத்து. ‘‘சிங்காவரம் அரசகுலத்தின் கொடியில் சித்திரித்திருப்பது என்ன? தாமரைப் பூ. சிங்காவரம் மன்னர்களின் முத்திரை மோதிரத்தில் செதுக்கியிருப்பது என்ன? தாமரைப் பூ. சிங்காவரத்தின் செங்கோலில் பொறித்திருப்பது என்ன? தாமரைப் பூ இதோ... அரச குமாரியின் கையைப் பாருங்கள் என்ன பச்சை குத்தியிருப்பது?"

'ஆ' என்று வியந்தது கூட்டம். “தாமரைப் பூ தாமரைப் பூ' ஒருவருக்கொருவர் கிசுகிசுத்துக் கொண்டார்கள்.

தன்னம்பிக்கையுடன் ரகுநாதர் சிரித்தார். "இந்தப் பட்டணத்துப் பெரியவர் சொல்லுவது முற்றிலும் உண்மை. இதோ மன்னரின் செங்கோல், ' கிருஷ்ணப்பரின் செங்கோலைக் கூட்டத்தினருக்குக் காட்டினார். "இதோ சிங்காவரத்தின் கொடி, ' வீரனொருவனின் கரத்திலிருந்து கொடியைப் பறித்துக் காட்டினார். "இதோ முத்திரை மோதிரம், ' ராணி சென்னம்மாவின் விரலிலிருந்து உருவிக் காட்டினார். 'இவைகளில் தாமரைப் பூவின் சின்னம் இருக்கின்றன. உண்மை. ஆனால்... ' வேண்டுமென்றே சிறிது இடைவெளி. பிறகு, 'வெறும் தாமரைப் பூ மட்டுமல்ல. தாமரைத் தண்டை ஒட்டினாற்போல இரண்டு தாமரை இலைகள் ஒரே ஓர் இலை அல்ல, இரண்டு இலைகள் தாமரையின் கையைப் பிடித்துத் தூக்கி உயர்த்திக் காட்டினார் கூட்டத்தின் முன்பு. 'அரசகுமாரி கையிலும் பச்சை குத்தியிருக்கிறது - ஒரு தாமரைப் பூவும் இரண்டு தாமரை இலையும். போட்டிக்கு வந்திருப்பவளின் கையிலும் அப்படித்தான் இருக்கிறதா? தயவு செய்து யாராவது பார்த்துச் சொல்லுங்கள். எனக்குக் கண் பார்வை போதாது...'

வெடித்தெழுந்தன நூறு குரல்கள் ஒரே வினாடியில். 'இல்லை, இல்லை! ஒரே ஓர் இலைதான் இருக்கிறது! மோசடி பித்தலாட்டம் சூழ்ச்சிக்காரன்!'

அமர்க்களம், குழப்பம், இரைச்சல்.

தளபதியொருவர் வாளை உருவிக்கொண்டு முன்னே பாய்ந்தார். "ராஜத் துரோகிக்குத் தண்டனை...'

தடுத்தார் ரகுநாதர். 'வேண்டாம், விட்டுவிடு. மதிப்புக்குரிய விருந்தாளி அவரும், அவருடைய குமாரியும். முடிசூட்டு விழா வரையில் நமது அரண்மனையில் தங்கியிருக்கட்டும். வசதிகள் செய்து கொடு."

பெரியபெத்துவின் பெரிய உடம்பு ஆடிக்கொண்டிருந்தது அவமானத்தாலும், சீற்றத்தாலும். தெய்வநாயகியோ கூனிக் குறுகிவிட்டாள்.

இயல்பான நிதானம் விடைபெற, ஆத்திரம் பேச்சைக் குழற வைக்க, பெரியபெத்து சொன்னார்: "முடிசூட்டு விழாவுக்குக் கட்டாயம் வருவேன். ஆனால் விருந்தாளியாக அல்ல. அடிமையைக் கைப்பற்றப் போகும் ஆண்டையாக. அந்தத் தாமரையின் முதுகிலே 'பெ பெ. என்று சூடு போட்டிருப்பதை மறந்துவிடாதீர், ரகுநாதரே! என்றைக்கிருந்தாலும் அவள் என் அடிமை நினைவிருக்கட்டும்!"

உடனே பெரும் ஆரவாரம்.

மூடு வாயை!

அறு அவன் நாக்கை!

இவன் முதுகில் சூடு போடுங்கள் முதலில்! பல குரல்களுக்கிடையே கிண்ணென்று ஓர் ஓசை! பவுன் நாணயமொன்று வந்து விழுந்தது பெரியபெத்துவின் காலடியில். யாரோ ஒரு குடிமகன் கர்ஜித்தான். 'பொறுக்கிக் கொள், நீ அன்று கொடுத்த காசை நாங்களே பிச்சையிடுகிறோம். எங்கள் இளவரசி மீது கை வைக்காதே!'

"ஆமாம், ஆமாம்! இந்தா இந்தா!" ணங்! ணங் கிணிங்!

எட்டுத் திசைகளிலிருந்தும் பறந்து வந்து விழுந்தன. காசுகள்! பெரியபெத்துவைப் பணத்தாலேயே அர்ச்சிக்கிற மாதிரி இருந்தது அந்தக் காட்சி!

'பொறுக்கிக் கொள் ஓடு!" - மக்களின் ஆவேசக் கட்டளைகள்.

தெய்வநாயகி மெய் நடுங்கினாள்: "அப்பா போய்விடு வோம், வாருங்கள்! வாருங்கள் அப்பா."

வேறு வழியில்லை. பெரியபெத்து திரும்பினார். ஆனால் கடைசிச் சூளுரை உரைத்துவிட்டுத்தான்.

'இன்று கூட்டத்தைக் காட்டி என்னைத் துரத்தி விடலாம். ஆனால் விரைவில் வருவேன் - கும்பினிக்காரனின் பீரங்கித் துணையுடன். சுத்த வீரர்களானால் அப்போது பதில் சொல்லுங்கள். '

மக்களின் கேலி நகை அவர்களுக்கு விடை கொடுத்தது. கையமர்த்தினார் ரகுநாதர். 'அன்பார்ந்த குடிமக்களே! இப்படி எதிர்பாராத ஆபத்துக்களும் சூழ்ச்சிகளும் வருமென்று முன்பே நாங்கள் கணக்கிட்டிருந்தோம். சதிகாரர்களை அம்பலப்படுத்துவதற்காகத்தான் உங்கள் அன்புக்குரிய இள வரசியார் முதலை அகழியில் இறந்து விட்டதாகக் கதை கட்டி விட்டிருந்தோம். இப்போது ஆபத்துக்கள் அகன்றுவிட்டன. அரண்மனைச் சோதிடர்கள் நல்ல நாளும் மங்கள நட்சத்திரமும் கணித்துக் கொண்டிருக்கிறார்கள். விரைவிலே முடிசூட்டு விழா நடைபெறும்!"

வாழ்க ரகுநாதர்! வாழ்க சிங்காவரம் அரச பரம்பரை! ஓங்குக இளவரசியாரின் கீர்த்தி!

உதட்டைக் கடித்துக் கொண்டு கூட்டத்தின் கோடியில் நின்றிருந்தான் காஞ்சிபுரத்தான்.

மல்லாந்து சயனித்திருந்தாள் தாமரை.

'பயப்படாமல் இரம்மா. வெளியே காவல் போட்டிருக்கிறேன், ' என்று கூறிவிட்டுப் போய்விட்டார் ரகுநாதர்.

முழங்கால்களைக் கைகளால் அணைத்துக் கொண்டு படுத்திருந்தாள் தாமரை.

என்னென்ன நிகழ்ச்சிகள்! அவள் உள்ளம் குறுகுறுத்தது. இந்த அனுபவம் புதுமை. ஆனந்தம் புதுமை. இடம் புதுமை. எண்ணம் புதுமை.

ஒரே ஓர் உறுத்தல். அவன் எங்கே? எந்த இன்னலிலும் கை கொடுக்கும் இனியவன் எங்கே? "பயப்படாதே தாமரை' என்று அபயக் குரல் கொடுத்தவன் எங்கே?

நூற்றெட்டுக் குழப்பங்கள். ஒவ்வொன்றும் நூற்றெட்டு நூற்றெட்டாய்க் கிளைக்கின்றன.

தீர வேண்டுமானால் அந்தத் தீரன் வரவேண்டும். பணிப் பெண்ணொருத்தி உள்ளே நுழைந்தாள். தட்டை வைத்தாள்.

தாமரை சிணுங்கினாள். 'என்னைத் தொந்தரவு செய்யாதே. எனக்குப் பாலும் வேண்டாம், பழமும் வேண்டாம்.'

'என் கையால் கொடுத்தால் கூடவா, இளவரசி!' "

"யார்? " உவகையினால் தாமரையின் கண்ணுக்குள் ஓர் அணை உடைத்தது.

பட்டுத் துணி முக்காட்டை விலக்கி விட்டுச் சிரித்தான் காஞ்சிபுரத்தான். 'அரச யோகம், பழைய நண்பர்களை விரட்டியடிக்குமோ என்று பயந்திருந்தேன்."

"சொல்லாதீர்கள் அப்படி." மாந்தளிர் விரல்கள் மெல்லப் பொத்தின அவன் வாயை. 'என்ன யோகம் வந்தாலும், என்ன இன்பும் துய்த்தாலும் அது உங்கள் அன்பினாலும் தியாகத்தினாலும் கிடைத்தது என்பதை மறக்க மாட்டேன்."

அவள் முன்னே மண்டியிட்டு வணங்கினான் காஞ்சி புரத்தான். "தாங்கள் இனி சிம்மாதனத்தில் செம்மாந்திருக்கப் போகும் அரசி. தாங்கள் பவனி செல்லும்போது, வீதியோரம் நின்று வாழ்த்தொலி எழுப்பும் வழிப்போக்கன் நான். '

பதறி எழுந்துகொண்டாள் தாமரை. கண் முனையில் நீர் கோத்தது. 'என்னென்னவோ சொல்கிறீர்களே? நான் அரசியாவதில் விருப்பமில்லையென்றால் சொல்லுங்கள். இந்த வினாடியே வந்துவிடுகிறேன் தங்களுடன். '

'இல்லை, இல்லை. தங்களுக்கு.....*

'உனக்கு என்று பேசவே மாட்டீர்களா?'

'இந்த ரகுநாதக் கிழவர் எப்படிப்பட்டவர்?"

“ரொம்ப நல்லவர். அரசரின் சூழ்ச்சியிலிருந்து என்னைக் காப்பாற்றினார். மகளையும் மருமகனையும் எதிர்த்துக் கொண்டு, அவர்களுக்கே தெரியாமல், தமது அறையில் மூன்று நான்கு தினங்கள் என்னை ஒளித்து வைத்திருந்தார். அவர்களைப் பொறுத்தவரையில் நீ இறந்ததாகவே இருக்கட்டும். காலம் வரும்போது நீ உயிருடன் இருப்பதைச் சொல்கிறேன்" என்று கூறியிருந்தார். அதற்குள் என்னென்னவோ நடந்து விட்டன...'

"நான் வருகிறேன். ' சட்டென அவளது பூங்கரம் அவன் இரும்புக் கரத்தைப் பற்றியது. "என்னை விட்டுவிட்டுப் போகாதீர்கள். அறிவிலும் வயதிலும் நான் சின்னவள். எளிதில் எதையும் நம்பிவிடுவேன். நீங்கள்தான் என்னைப் பாதுகாக்க வேண்டும். '

காஞ்சிபுரத்தான் கனிந்தான். மன்றாடும் அந்தக் கருவிழிகள் அவன் நெஞ்சென்னும் மன்றத்தில் நின்றாடினவோ?

'ஒப்புக் கொள்கிறோம், ஒப்புக் கொள்கிறோம்,' என்றார் கிருஷ்ணப்பர். மடியிலிருந்த வெல்வெட்டுத் தலையணையை நீவிவிட்டன அவர் விரல்கள். பட்டுக் குஞ்சலங் களைத் தட்டிக் கொடுத்தபடி, சென்னம்மாவைக் காட்டினார்.

"அவள் வேண்டுமானால் தந்தையைப் புரிந்து கொள்ளாத குமாரியாக இருக்கலாம். நான் மாமாவை உணர்ந்துகொண்ட

மருமகன். நீங்கள் எது செய்தாலும் எங்கள் நன்மைக்காகத் தான் இருக்கும் என்பதை முழுக்க நம்புகிறேன்.'

குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்த ரகுநாதர் நின்றார்: "கேட்டுக்கொள் சென்னம்மா, கேட்டுக்கொள்.'

முகத்தை நொடித்தாள் சென்னம்மா. அவள் கடுகடுப்பு இம்மியும் குறையவில்லை. 'அன்று முதல் நான் சொல்கிறேன், ஆபத்தைத்தான் வளர்க்கிறீர்கள் என்று. எந்தச் சமாதானமும் எனக்கு ஏற்காது. மாமனும் மருமகனும் எப்படி வேண்டு மானாலும் குலவுங்கள்.'

'அடுத்தபடி மாமா?" கிருஷ்ணப்பர் வினவினார். ரகுநாதர் உடனே சொன்னார்: "அதுதான் அறிவித்தோமே மக்கள் முன்னிலையில்? முடிசூட்டு விழாதான்.'

'என்ன!' என்று துள்ளி எழுந்தார் கிருஷ்ணப்பர். 'பார்த்தீர்களா? பார்த்தீர்களா?' என்று படபடத்தாள் சென்னம்மா.

ரகுநாதர் முறுவலித்தார்: "எதிரியை அடக்க இரண்டு வழிகள் உண்டு. ஒன்று, அவனை ஒழிப்பது. இரண்டாவது, நாம் அவன் கட்சியில் சேர்ந்துவிடுவது. முதல் வழி முடியவில்லை. இரண்டாவதுதான் இனி.'

சென்னம்மா இரைந்தாள்: "அதாவது செங்கோலை அந்தச் சிறுக்கியும் வெண்சாமரத்தை நாங்களும் ஏந்த வேண்டும்?"

'குழந்தை குழந்தை" மகளைத் தட்டிக் கொடுத்தார் ரகுநாதர். "பட்டத்து ராணியாக இருக்கட்டும் அவள். ஒன்றும் குடி முழுகாது. அவள் வெறும் பொம்மை அலங்கார பொம்மை!'

வெறுப்புடன் சிரித்தார் கிருஷ்ணப்பர். 'எனக்கு அப்படித் தோன்றவில்லை, மாமா! அந்தப் பொம்மைக்குச் சாவி வேறெங்கோ, வேறு எவனிடமோ இருக்கிறதென்று தோன்று கிறது... ' அவர் பேச்சு முறிந்தது. 'யாரது? யாரங்கே!'

சாளரத்தருகே ஓடினார் கிருஷ்ணப்பர். திரையை நீக்கினார். 'என்ன? என்ன? '

'யாரோ எட்டிப் பார்த்த மாதிரி இருந்தது, ' என்றார் கிருஷ்ணப்பர்.

## (16)

இது வேண்டாம். இது நன்றாயில்லை. இது பகட்டோடு சரி, மதிப்புக் கிடையாது. ஆ! இது அருமை. இது கட்டி யிருக்கிற விதம் அழகாயில்லை. பிரித்துக் கட்டச் சொல்...

ரத்தின வியாபாரி தன் பேழைகளைத் திறந்து திறந்து கவிழ்த்துவிட்டு எட்ட நின்றான். ரத்தினக் கம்பளத்தில் அமர்ந் திருந்த கிருஷ்ணப்பரின் மேனியிலும் சென்னம்மாவின் வதனத்திலும் அணிகளின் பளபளப்பு மாறி மாறி அடித்தது.

சற்றுத் தள்ளி, கட்டிலில் சாய்ந்திருந்தார் ரகுநாதர். பாரசீகத்துத் திராட்சை மிதக்கும் மதுக் கிண்ணம் அவர் கரத்தில் இருந்தது. நுனி விரலால் திராட்சையை நீக்கிவிட்டு திரவத்தைப் பார்த்தார். ஆசை வெறிபிடித்த முகம் அந்தச் சிவந்த மதுவில் பிரதிபலித்தது. நரம்புகளில் ஓர் உல்லாசம். மூச்சிலே ஓர் ஏக்கம். அறைச் சுவர்களில் மாட்டப்பட்டுள்ள அழகிய ஓவியங்கள், சிருங்கார காவியங்களாகக் கற்பனையில் வடிவெடுத்தன.

'அப்பா இது நன்றாயிருக்கிறதா!'

"அற்புதம்! அற்புதம்! மகள் காட்டிய ரத்தின ஆரத்தை ஆசையுடன் வாங்கிக் கொண்டார் ரகுநாதர். 'இது எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது. நானே வைத்துக் கொள்கிறேன்."

'என் பாக்கியம், பிரபு' என்றான் ரத்தின வியாபாரி. மதுப் கோப்பையை வைத்துவிட்டுச் சிறிது நேரம் மௌனமாயிருந்தார்

ரகுநாதர். "நீங்கள் பார்த்துக் கொண் டிருங்கள். இதோ வருகிறேன், ' விரைந்து வெளி நடந்தார்.

'நாங்களும் பார்த்து முடித்தாகி விட்டது. நீ போகலாம்,' ரத்தின வியாபாரிக்கு விடை கொடுத்தார் கிருஷ்ணப்பர்.

தந்தை செல்வதைப் பார்த்தபடி இருந்த சென்னம்மா புன்னகை பூத்தாள். 'அப்பா வரவரக் குழந்தையாகி வருகிறார். நகைமீது என்ன ஆசை, பாருங்களேன்!'

திருத்தினார் கிருஷ்ணப்பர். 'வாலிபனாகி வருகிறார் என்று சொல்."

'என்ன!'

'ஒன்றுமில்லை, ' கிருஷ்ணப்பர் சாளரத்தருகே சென்றார். இரு கைகளையும் அகல ஊன்றினார்.

நந்தவனத்து மந்தமாருதம் அவரது சுருள் முடியைச் சிலுப்பிற்று.

பட்டாடை வீசியது பக்கத்திலே. “ஏதேதோ பூடகமாகப் பேசுகிறீர்களே? விளக்கமாய்ச் சொல்லக் கூடாதா என்னிடம்?"

"எதையென்று சொல்லட்டும்?' கனத்தது அரசரின் குரல்: 'அந்தத் தாமரை விஷயத்தில்...'

'அவர் அப்படிச் சமாளித்ததால் அல்லவா நாம் தப்பினோம்!'

"அதையே திரும்பத் திரும்பச் சொல்கிறாயே? அவர் எதற்காகத் தாமரையைத் தன் மாளிகையில் வைத்திருக்க வேண்டும் என்று யோசித்தாயா?"

"அதுதான் அவரே சொன்னாரே, எதிர்பாராத எதிர்ப்பு எழுமென்று அப்படிச் செய்ததாக அதேபோல்தானே நடந்தது?"

"ராணி, பின்னால் நிகழ்ந்ததை வைத்து, முன்னால் செய்ததைச் சரிப்படுத்துகிறார். அப்படியே அவர் திட்டம் அது தான் என்றாலும்,

நம்மிடம் ஏன் சொல்லியிருக்கக் கூடாது? எவளோ ஒரு பணிப்பெண்ணைத் தாமரை போல் அழைத்துச் சென்று எதற்காக நம்மையே ஏமாற்ற வேண்டும்?"

விடை வராதபோது கோபம் வருவது இயற்கை. சென்னம்மாவின் குரல் உரத்தது. “தாமரை உயிரோடிருப்பது ரகசியமாக இருக்க வேண்டும் என்றுதான். நம் நன்மைக்குத் தானே எல்லாம்!'

"ஆமாம், ஆமாம். நானும் நீயும் முடியிழந்து, எங்கிருந்தோ வந்த ஓர் அடிமைப் பெண்ணுக்குக் கைகட்டிச் சேவகம் செய்யப் போகிறோமே, அதுகூட நம் நன்மைக்குத்தான்'

“உங்களுக்கு எப்போதும் அவநம்பிக்கைதான். சந்தேகம் தான். மகளுக்கும் மருமகனுக்கும் துரோகம் செய்ய எந்தத் தந்தைக்கும் மனம் வராது. இதிலே அப்பாவுக்கு என்ன லாபம்?"

'என்ன லாபமா!' கசப்புடன் நகைத்தவாறு சாளரத்திலிருந்து திரும்பி நடந்தார் கிருஷ்ணப்பர்.

"ஆரம்பத்திலேயே சொன்னேனே அவருக்குக் குழந்தைப் பருவம் திரும்பவில்லை, இளமைப் பருவம் திரும்புகிறது. இருபது வருடங்களுக்கு முன் உன் தாய் இறந்தபோதே நான் அவருக்குச் சொன்னேன், குலத்துக்கேற்ற வேறொருத்திக்கு அந்த இடத்தைக் கொடுங்கள் என்று. அப்போது கேட்காதவர் இப்போது தேர்ந்தெடுத்திருக்கிறார்...'

"இருக்காது, இருக்காது." சென்னம்மா விம்மினாள்.

"இந்தாப்பா, இப்படி வா."

சிங்காவரத்திலே கூலி வேலைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த காஞ்சி புரத்தான் நின்றான். தோளில் மண்வெட்டி. இடுப்பிலே முழங்காலுக்கு மேலேறிய கச்சம். கையிலே உழைப்பினால் காய்ப்பெடுத்த முரடு.

கூப்பிட்டவன் ஓர் அரசாங்கச் சேவகன். முண்டாசும் வெள்ளி வில்லையுமே தெரியப்படுத்தின. அவன் பின்னால் ஐந்தாறு ஆட்கள். "உனக்கு எழுதப் படிக்கத் தெரியுமா, தம்பி?"

'ஏதோ சுமாராக. '

'இதோ இதைக் கொஞ்சம் படி. படித்து இந்தப் பெரியவருக்குச் சொல்லு,' ஓர் ஒலையை நீட்டினான் சேவகன்.

அருகில் கண்ணிர் வழிய நின்று கொண்டிருந்த ஒரு கிழவரையும் காட்டினான்.

காஞ்சிபுரத்தான் ஒலையைப் படித்தான். பிறகு கிழவரிடம் சொன்னான்: "இது பஞ்சாயத்துத் தீர்ப்பு, தாத்தா. வாங்கிய கடனைத் தீர்க்காததால், உங்களிடமுள்ள சொத்து பத்துக்களைப் பறிமுதல் செய்து, கடன் கொடுத்தவரிடம் ஒப்படைக்கலாமென்று எழுதியிருக்கிறது.'

சேவகன் குறுக்கிட்டு விளக்கினான்: "பறிமுதல் பண்ணி, இதோ இந்த ஆளிடம் ஒப்படைத்தும் ஆகிவிட்டது. இவர் குய்யோ முறையோ என்று கூக்குரலிடுகிறார் என்னிடம். நான் என்ன செய்ய முடியும், நீயே சொல்லு."

கடன் கொடுத்த ஆள் நலலவனாகவேயிருந்தான். 'நானும் என்னதான் பண்ணட்டும், சொல்லப்பா? சீக்காளிப் பிள்ளைக்கு வைத்தியம் பண்ணப் போவதாகக் கடன் வாங்கினார். அந்தப் பிள்ளை பிழைக்காமலே போய்விட்டான். வருஷம் நாலாகி விட்டது. நானும் சம்சாரி. வேறு எப்படித்தான் வசூல் பண்ணுவேன்? '

'பெரியவரே, இவர்கள் சொல்லுவது நியாயம்தானே?" என்றான் காஞ்சிபுரத்தான்.

'நல்ல நியாயத்தைக் கண்டுவிட்டாய் போ!' கிழவர் எரிந்து விழுந்தார் அவன்மீது. "இந்த மண்டையைப் போடுகிற வயசில், என்

சொத்துபத்துப் பறிபோகிறதே என்றா நான் கவலைப்படுகிறேன்? அரண்மனைத் துணிமணிகள் என்னிடம் வந்திருந்தது - தையலுக்காக. அதையும் எடுத்துப் போய் விட்டார்கள் இவர்கள் முடிசூட்டு விழாவுக்காகக் கொடுத்திருந்ததை...'

சேவகன் சிடுசிடுத்தான்: 'உன்னிடம், உன் வீட்டில் இருப்பதைப் பறிமுதல் பண்ணும்படிதான் எனக்கு உத்தரவு. அரண்மனையைச் சேர வேண்டிய பண்டங்கள் அதில் இருந்தால் அரண்மனையில் போய்ப் பதில் சொல்லிக் கொள். அது உன் பொறுப்பு!''

'ஏன் பெரியவரே, அரண்மனைத் தையல்காரராக இருந்துமா இப்படி...'

காஞ்சிபுரத்தானின் பேச்சைத் தடுத்தான் கடன் கொடுத்த நல்லவன். 'பெரிய தையல்காரர் வேறொருத்தர் இருக்கிறார் ஐயா. அவர் கீழே வேலை செய்கிறவர்தான் இந்த ஆள்.'

'ஒகோ...' அவரைத் தட்டிக் கொடுத்தான் காஞ்சிபுரத் தான். 'உங்களைப் பார்த்தால் நல்லவராய்த் தோன்றுகிறது. நான் ஒரு யோசனை சொல்கிறேன், கேட்கிறீர்களா?"

கடன் கொடுத்தவனின் பார்வையில் மிரட்சி. "என்ன?''

'முடிசூட்டு விழா சம்பந்தப்பட்ட துணிகளை முடக்கி வைத்துக் கொண்டால், அரண்மனையின் கோபத்தைச் சம்பாதித்துக் கொண்டதாகிவிடும். அத்தோடு, முடிசூட்டு விழாவில் என்ன குறை தென்பட்டாலும் அது குடிமக்களுக்குப் பொதுவான அவமானம்தானே?"

"என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?"

"அந்தத் துணிகளை இவரிடமே கொடுத்துவிடுங்கள்.'

'கொடுத்துவிட்டு?"

"நான் தீர்க்கிறேன் உங்கள் கடனை. மகுடாபிஷேகத்துக்கு மறுநாள் என்னை இதே இடத்தில் நீங்கள் சந்திக்கலாம். வாக்குத் தவறமாட்டேன்."

'நீயா? அவன் சிரித்தான். 'உன்னை யாரென்று கூடத் தெரியாதே'

காஞ்சிபுரத்தானை முந்திக் கொண்டார்கள் மற்றவர்கள். "இவன் யோக்கியமான பிள்ளைதான் ஐயா, நம்பலாம். இந்தப் பக்கத்தில்தான் வசிக்கிறான். யாருக்காவது ஏதாவது உபகாரம் செய்து கொண்டேயிருப்பான். '

கடன் கொடுத்தவரின் கண்ணிலிருந்து முற்றும் அகலவில்லை சந்தேகம். இருந்தாலும், "சரி. வாருங்கள். இவன் மட்டும் வராதிருக்கட்டும், உங்கள் மொத்தப் பேரையும் தொலைத்து விடுகிறேன், பாருங்கள்,' என்றவாறு முன்னே நடந்தான்.

'வாருங்கள், தரத்தா' கிழவரைப் பிடித்து அழைத்துக் கொண்டு பின் தொடர்ந்தான் காஞ்சிபுரத்தான்.

இன்பக் கனவுகளில் ஆழ்ந்திருந்த தாமரையை மெல்ல எழுப்பினாள் பணிப்பெண்.

'முடிசூட்டு விழாவுக்குப் பிரத்தியேக உடைகள் தயாரிக்க வேண்டும், அரசி. அளவெடுக்க வந்திருக்கிறான் அரண்மனைத் தையல்காரன். '

ஒய்யாரமாக மஞ்சத்திலிருந்து எழுந்து கொண்டாள் தாமரை. மெத்தை தைத்த சிறிய முக்காலியில் பட்டுப் பாதங்கள் பதிந்தன. தொடையில் முழங்கை ஊன்றினாள். மோவாயை உள்ளங்கையில் தாங்கினாள். ஓரக்கண்ணால் பார்த்தாள் வந்தவனை.

பல்லும் பவிசும் நாமமும் குடுமியுமாக இருக்கும் இந்தக் கோணங்கியா தனக்கு உடை தைக்கப் போகிறான்?

தாமரைக்குச் சிரிப்பு வந்தது. ‘‘ஊசியைக் கையிலெடுத்துப் பழக்கமுண்டா உனக்கு?'

தட்டின்றி வந்தது பதில்: "பழக்கமில்லாத தொழிலில் புகுவதுதான் என் வழக்கம், அரசி. வைத்தியம்கூடப் பார்க்க வில்லையா?"

தாமரை அவனைப் பார்த்து மறுமொழி கூறவில்லை. பணிப் பெண்ணிடம் சொன்னாள்: "நீ வெளியே போய் இரு. யாரையும் அனுமதிக்காதே."

கதவு முழுதும் சாத்திக் கொள்ளும் வரையில் கூடக் காத்திருக்கவில்லை இருவரும்.

அன்பின் தளையிலிருந்து மெல்ல விடுவித்துக் கொண்டான் காஞ்சிபுரத்தான். சொன்னான்: 'இன்றைக்கு நாலாம் நாள் முடிசூட்டு விழா என்று கேள்விப்பட்டேன், அரசி. அதன் பிறகு...'

மோவாய் மொட்டு, காதல் சூரியனை நோக்கி உயர்ந்தது. 'அதன் பிறகு?'

'இந்தக் கைகள்... ' தன் இடுப்பிலிருந்து விடுவித்து எடுத்துக் காட்டினான். 'அணைப்பதைக் காட்டிலும் ஆணையிடுவது அதிகமாயிருக்கும்.'

பொற்காசு கொட்டினாற் போல் நகைத்தாள் சொர்ணக் கொடி. "பட்டமேற்றதும் முதல் ஆணை உங்களுக்குத்தான்."

‘‘என்னவென்று?" "இந்தக் காலடியிலேயே என்றென்றும் ஊழியம் செய்து கிடக்க வேண்டுமென்று. '

"அது ஆணையாகாது, அரசி. மகுடாபிஷேகத்தை ஒட்டி வழங்கப்படும் பதவிகளில் ஒன்று. ஆனால்... ' காஞ்சிபுரத்தானின் நெற்றி சுருங்கியது. "இடையூறின்றி முடிசூட்டு விழா நடந்தேறுமா என்பது இன்னும் எனக்குச் சந்தேகமாகவே இருக்கிறது.'

'நடந்தேறுவதும் நிச்சயம். அப்போது என்னருகில் தாங்கள் இருக்கப் போவதும் உறுதி.'

'பார்க்கலாம். '

'இருங்கள். எங்கே போகிறீர்கள்?"

'வெளியே குரல் கேட்கிறது."

ஆம். வாசற் கதவுக்கு வெளியே 'விலகி நில், நாயே!'' ரகுநாதரின் முகம் சினத்தினால் சிவந்து விட்டது.

பணிப்பெண் உறுதியுடன் வழிமறித்தாள். 'மன்னியுங்கள், பிரபு. யாரையும் அனுமதிக்க வேண்டாமென்று அரசி கட்டளையிட்டிருக்கிறார்கள். '

'இன்னும் அவள் அரசியாகவில்லை. வழி விடு.'

'அரசியோ இல்லையோ, எனக்கு எஜமானி.'

பல்லைக் கடித்தார் ரகுநாதர். 'உள்ளே யார் இருக் கிறார்கள் அரசியுடன்?'

"தையல்காரன்- முடிசூட்டு விழா உடைக்கு அளவெடுக்க வந்திருக்கிறான். '

ரகுநாதரின் உதடுகள் மடிந்தன. 'இளைஞனா, வயோதிகனா? '

"இளைஞன்தான்.'

அடுத்த வினாடி... அந்தப் பணிப்பெண்ணைத் தரதரவென்று வேறுபுறம் இழுத்துச் சென்றார் ரகுநாதர். கை தட்டியதும் ஒரு காவல் வீரன் ஓடி வந்தான்.

'உடைவாள் கூராயிருக்கிறதா?''

"ஆமாம். பிரபு.'

'என்னை விடுங்கள் விடுங்கள்!' என்று திமிறினாள் பணிப்பெண்.

ரகுநாதர் நிதானமாகச் சொன்னார் காவல் வீரனிடம்: 'உண்மையை ஒப்புக் கொள்ளும்வரை விடாதே. ஒவ்வொரு நகக் கண்ணுக்குள்ளும் உன் வாள் முனை புகுந்து புறப்பட வேண்டும், புரிகிறதா?’’

முதல் விரலில் சித்திரவதை ஏற்பட்டதுமே துடித்து அலறினாள் அந்தப் பணிப்பெண். 'சொல்கிறேன், சொல் கிறேன், என்னைக் கொல்லாதீர்கள்."

'போ. படைவீரன் விலகிச் சென்றான். ரகுநாதர் நெருங்கி வந்தார். 'சொல். அடிக்கடி வருகிறானா?"

"ஆமாம், பிரபு. வாலிபன் முன்பே பழக்கமானவன் போல் இருக்கிறது. ஏதாவதொரு வேடத்தில் அடிக்கடி வருகிறான்."

'இப்போது வந்திருப்பவனும் அவன்தானே?"

'அப்படித்தான் தோன்றுகிறது.' பின்கை கட்டிக்கொண்டு குறுக்கும் நெடுக்கும் உலவினார் ரகுநாதர். 'சரி, நீ போ உன் இடத்துக்கு. நகர்ந்தவளை நிறுத்தினார். 'நான் உன்னை விசாரித்த விஷயம் அரசிக்குத் தெரிய வேண்டாம். தெரிந்தால், வாள்முனை உன் நகத்துக்கு வராது. இங்கே வரும், அவள் நெஞ்சின் நடுவை அவர் சுட்டு விரல் குத்தியது.

'இல்லை, எஜமான். சொல்லமாட்டேன், ' நடுங்கித் தலைமறைந்தாள் அவள்.

இடுப்பின் மறைவிலிருந்து அந்த ரத்தின ஆரத்தை வெளியிலெடுத்தார் ரகுநாதர். வினாடி காலம் யோசித்தார். விழிகள் புருவத்தை நோக்கி மேலேறின. பிறகு ஏதோ தீர்மானம் செய்துகொண்டார்.

மீண்டும் தாமரையின் சயனக் கிருகத்தை அவர் அடைந்த போது

கதவுகள் அகலத் திறந்திருந்தன. 'வாருங்கள், வாருங்கள்,' எழுந்து வந்து வரவேற்றாள் தாமரை.

கண்கள் கத்திதான் ரகுநாதருக்கு. அறையின் மூலை முடுக்குகளைக் கூடச் சுரண்டியெடுத்தன.

'எல்லாம் வசதியாயிருக்கிறதா, குழந்தாய்?"

“தாங்கள் இருக்கும் போது எனக்கு என்ன குறை?”

'அப்படிச் சொல்லு, ரகுநாதரின் முகம் மலர்ந்தது. 'முடிசூட்டு விழா நெருங்க நெருங்க உனக்கு அமைதி அதிகம் தேவை. கொலு மண்டபத்தில் நிற்கும்போது உன் அழகிய வதனத்தில் கவலைக்குறிகளோ சோர்வோ தென்படக் கூடாது. தென்பட்டால், எதிரிகள் சுலபமாகக் கதை கட்டிவிடுவார்கள். ராஜ்யபாரத்தை ஏற்க உனக்கு விருப்ப மில்லை என்று '

'அப்படியெல்லாம் பேச இடம் தரமாட்டேன். தாங்கள் கவலை கொள்ள வேண்டாம்.'

'உனக்கு மிகவும் இரக்க மனம்", அவள் தலையை வருடிக் கொடுத்தார் ரகுநாதர். 'யார் வந்து உன்னைப் பார்க்க வேண்டுமென்றாலும் அனுமதி கொடுத்து விடுகிறாய் என்று கேள்விப்பட்டேன். இனி அப்படி இருக்காதே. எவரையும் உள்ளே விடாதே."

தாமரை சிரித்தாள்.

'இனிமேல்தானே நான் அப்படி இருக்க வேண்டும்! எந்தப் பிரஜையும் எளிதில் அணுகும்படி இருப்பதல்லவா ஆட்சியாளருக்கு அழகு?"

'நீ வாதத்திலும் கெட்டிக்காரி, பிடிவாதத்திலும் அப்படித் தான்' சினத்தைச் சிரிப்பிலே ஒளித்துக் கொண்டார் ரகுநாதர். ரத்தின

ஆரத்தை எடுத்தார். 'இதோ பார், உனக்காக நான் கொண்டு வந்துள்ள பரிசு.'

'அற்புதமாயிருக்கிறதே"! வியப்பினால் விரிந்தன தாமரையின் கண்கள். உடனே வருத்தத்தினால் கூம்பின. 'இந்த உயிரே நீங்கள் தந்த பரிசுதானே, பிரபு? தனியாகவும் ஒன்று தரவேண்டுமா?"

'அணிந்து கொள், குழந்தாய்!'' தானே அணிவிக்கத் துடித்த கரத்தை எப்படித்தான் கட்டுப்படுத்திக் கொண்டாரோ?

சங்குக் கழுத்தை ஒயிலுடன் திருப்பி, கண்ணாடியில் பார்த்துக் கொண்டாள் தாமரை.

'எவ்வளவு பொருத்தம் என்ன அழகு" ரகுநாதரின் ஆசை அவரை மீறி வெளிப்பட்டது.

திடுக்கிடவில்லை தாமரை. பணிவுடன் அவரை வணங்கி எழுந்தாள். 'இந்த மாதிரியான பாராட்டை, பெற்ற தந்தையிடமிருந்து கேட்கும் பாக்கியத்தைத் தரவில்லை இறைவன். ஆனால் தங்கள் மூலமாகவாவது என் மனக் குறையைத் தீர்த்தானே, அதற்காக நன்றி செலுத்த வேண்டும்.'

ரகுநாதரின் முகம் இருண்டதா? அகம் கறுத்ததா? வெளிப்படையாகத் தெரியவில்லை.

'வருகிறேன், மிக எச்சரிக்கையாக இரு. காவலாட்களிடமும் சொல்லி வைக்கிறேன், கண்டவர்களையெல்லாம் அனுமதிக்க வேண்டாமென்று. '

வெண்பட்டு மேல் வஸ்திரத்தைத் தோள்மீது வீசிக் கொண்டு மிடுக்காக வெளியேறினார் அவர்.

மறுகோடியில் மறைவிலிருந்து வெளிப்பட்டார்கள் கிருஷ்ணப்பரும் சென்னம்மாவும்.

'நன்றாய்ப் பார்த்துக் கொண்டாயா? இல்லை, இன்னும் கூடச் சந்தேகம்தானா?''

கிருஷ்ணப்பரின் கேள்விக்கு எப்படிப் பதிலளிப்பது? தெரியவில்லை சென்னம்மாவுக்கு. "என்னால் நம்பவே முடிய வில்லை... அப்பாவுக்கு... இந்த வயதில்... இந்த வயதில்...'

'இதுதான் சரியான வயது!" வெறுப்புடன் நகைத்தார் கிருஷ்ணப்பர். 'பெண்களுக்கு வயதாக ஆகக் குறையும்; ஆண்களுக்கு வயதாக ஆக அதிகரிக்கும்! அப்படித்தான் சாஸ்திரங்கள் சொல்கின்றன. வா, போகலாம்.'

மறைகளின் ஓங்கார சுருதி. வாத்தியங்களின் கம்பீர முழக்கம். மாந்தர்களின் ஆனந்த ஆரவாரம்.

அரசி தாமரை வாழ்க! வாழ்க! மங்காப் புகழ் பெற்ற சிங்காவரம் வாழ்க! கொலுமண்டபத்தில் முடிசூட்டு விழா கோலாகலமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

இரண்டு நாளைய ஒத்திகைகள் வீண்போகவில்லை. ரகுநாதரும் அமைச்சர்களும் மாறி மாறிப் பாடம் சொல்லித் தந்திருக்கிறார்கள். எப்போது நிற்கவேண்டும், எந்தத் திசையைப் பார்த்தாற்போல் அமர வேண்டும், யாருக்கு வணங்க வேண்டும், யார் வணக்கத்தை ஏற்க வேண்டும் - இவையெல்லாம் தாமரைக்கு அத்துப்படி.

இம்மி பிசகவில்லை எதிலும். ஆனால் ஏக்கம் குடி கொண்டிருந்தது அவள் கண்களில். கட்டுக்கடங்காத இந்த ஜன சமுத்திரத்திலே அவரும் ஒரு துளியாக எங்கோ இருக்கிறாரா? வைத்த விழி வாங்காமல் அன்புக்குரிய தாமரையையே அவர் பார்த்துக் கொண்டிருப்பாரா?

சுழன்று சுழன்று தேடின அவள் விழிகள். நகராக்கள் கர்ஜித்தன. வாழ்த்தொலிகள் விண்ணைப் பிளந்தன. முத்தும் ரத்தினமும் பதித்த மகுடத்தை அரண்மனைப் புரோகிதர் வெளியிலெடுத்தார். முன்னாள்

மன்னர் கிருஷ்ணப்பரும், பழைய அரசி சென்னம்மாவும் அதைத் தொட்டு ஆசி கூறினர். வாளையும் கேடயத்தையும் அதன் முன் வைத்து மண்டியிட்டு எழுந்தார்கள் படைத் தலைவர்கள்.

மகுடத்துக்குப் பாலாபிஷேகம் செய்து, மஞ்சள் நீராட்டிய பின்னர், குடும்பப் பெரியவரான ரகுநாதரிடம் கொடுத்தார் புரோகிதர்.

தாமரையின் பார்வை அவிழ்த்து விடப்பட்ட பசுங்கன்று தான். எங்கே அவர்? எந்த இடத்திலிருந்து தன்னைக் கவனித்துக் கொண்டிருப்பார்?

பேரிகைகளின் பேரொலி அந்தக் கொலு மண்டபத்தையே குலுங்கச் செய்தது. சிம்மானத்திலிருந்து எழுந்தாள் தாமரை. சிரம் குனிந்தாள். ஏற்றுக் கொண்டாள் செங்கோலையும், மகுடத்தையும். அவள் கண்கள் பனித்தன. சொப்பனத்திலும் நினைத்திராத இந்தப் பதவி, அவர் போட்ட பிச்சையல்லவா?

கும்பினிப் பிரதிநிதியாக வந்திருந்த பாதிரியார், ராணி மங்கம்மாள் அனுப்பியிருந்த புலவரிடம் வினவினார்: "அடுத்த நிகழ்ச்சி என்ன?"

'ஏழை எளியவர்களுக்குத் தானம். ' செஞ்சி முற்றுகையை நிறுத்திவிட்டு வந்திருந்தான் ஜுல்பிகார்கான். ஔரங்கசீப் சக்கரவர்த்தியின் தூதனுடன் அவன் உரையாடல் விரிந்தது.

ஓயாத கடலலைபோல் இருப்போர் கூட்டம். சளையாது வழங்கிக் கொண்டிருந்த புதிய பட்டத்து ராணி. துணிகள், பழங்கள், நாணயங்கள்.

அகல ஏந்திய எவ்வளவு உள்ளங்கைகள் மெலிந்தவை. காய்ந்தவை. சுருங்கியவை. உலர்ந்தவை. எலும்பெடுத்தவை. எல்லாம் வெற்றுக் கரங்கள்.

திடீரெனஆண்மைமிக்க, அழகிய, இளமை கொழிக்கும் சிவந்த உள்ளங்கை. அதிலே ஒரு செந்தாமரை இதழ். 'நீங்களா... நீங்களா...

' தாமரையின் பூவிதழ்கள் துடித்தன. உங்களுக்கு எதைக் கொடுப்பேன்! என்ன கொடுத்தால்தான் ஈடாகும் அவள் உள்ளம் விம்மியது நெகிழ்ச்சியுடன். கண்ணில் நீர் தளும்பியது உணர்ச்சி மிகுதியினால்.

புன்னகையுடன் அசையாது நின்றிருந்தான் காஞ்சிபுரத்தான். விரலிலிருந்து ரத்தினக் கணையாழியைக் கழற்றினாள் தாமரை. அந்த ஏந்திய கரத்திலே வைத்தாள்.

கப்பென்று அதைப் பறித்தது இன்னொரு வலுவான கை. திடுக்கிட்டுத் திரும்பி நோக்கினாள். ரகுநாதர்! முறுவல் பூத்த முகத்தோடு முன்வந்தார் அவர். 'கண்டு பிடித்து விட்டேன், அரசி. இதற்காகத்தான் ஒவ்வொருவரையும் கவனித்துக் கொண்டே நின்றிருந்தேன். '

தாமரை கேட்டாள்: ‘'என்ன கண்டுபிடித்து விட்டீர்கள்?" 'அன்று தீ விபத்திலிருந்து தங்களைக் காப்பாற்றியவர் யாரென்றுதான்." ரகுநாதரின் குரலில் சாந்தமும் கனிவும் நிறைந்திருந்தன. "தாங்களாகச் சொல்லவேயில்லை. நானாகக் கண்டுபிடித்து, தக்கபடி சம்மானிக்க வேண்டுமென்று எண்ணி யிருந்தேன். '

'மகிழ்ச்சி' என்றாள் அரசி. காஞ்சிபுரத்தானின் கையை அன்புடன் பற்றிக் கொண்டார் ரகுநாதர். 'என்னுடன் வாருங்கள் தயவுசெய்து. தங்களுக்காகத் தனியான ஏற்பாடுகள் செய்து வைத்திருக்கிறேன்.'

## (17)

அவை மொத்தமும் கூர்ந்து கவனிக்க, காஞ்சிபுரத்தான் சிரம் குனிந்தான். சொன்னான்: 'அரசியின் உயிரைக் காப்பாற்றுவது எந்தப் பிரஜைக்கும் கடமை. அதற்கெனப் பரிசு ஏற்பது, கௌரவமல்ல. அவமானம். இழிவு."

ரகுநாதர் விடவில்ல. 'தங்கள் அடக்கத்தைப் போற்றுகிறேன். ஆனால் ஒரு வீரனைப் பாராட்டும் கடமையிலிருந்து நாங்கள் மட்டும் நழுவலாமா? தயவு செய்து வாருங்கள் என்னுடன். '

காஞ்சிபுரத்தான் தாமரையைப் பார்த்தான். முறுவலித்தாள் அந்த மோகன குமாரி. "எங்கள் குலத்துக்கே பெரியவர் அவர். எங்களில் யாரும் அவர் பேச்சைத் தட்டுவது கிடையாது. பிறகு தங்கள் விருப்பம்."

'தங்கள் விருப்பம்தான் தங்கள் ஆணை, அரசி. இதோ செல்கிறேன். '

'இப்படி, இப்படி. " முன்னே வழிகாட்டிக் கொண்டு நடந்தார் ரகுநாதர்.

அலட்சியமாக நடை விரித்தான் காஞ்சிபுரத்தான். 'பழக்க மில்லாத உபசாரம்'

'இனிப் பழகிக்கொள்ள வேண்டியதுதான்."

'தங்களைச் சொன்னேன். '

ரகுநாதரின் முகம் கறுத்தது. ஆயினும் உடனே சமாளித் தார். "ஆம், ஆம். தங்களைப் போன்ற கடமை வீரர்களை எப்போதாவது ஒரு முறைதானே சந்திக்க முடிகிறது? அப்படிப் பட்டவர்களை உபசரிக்கும் வாய்ப்புக்கள் அதிகமில்லைதான். இப்படி வாருங்கள். இதுதான் எனது இருப்பிடம். '

கால் மேல் காலிட்டு அமர்ந்தான் காஞ்சிபுரத்தான். பார்வையை வீசினான் நாற்புறமும்.

மணக்கும் பாலும் இனிக்கும் பழங்களும் தானே கொணர்ந் தார் ரகுநாதர். 'தங்களை எதிர்பார்த்து முன்னதாகவே வேறோர் அறை ஏற்பாடு செய்திருக்கிறோம். எல்லாம் சித்தமா என்று கேட்கவேண்டும். பணியாள் எவனையும் காணோம். '

செங்கதலியின் தோலை உரித்தான் காஞ்சிபுரத்தான். 'ஏழைக்கு ஏன் தேவையற்ற போகங்கள்!'

'ஏழையா!' சிரித்தார் ரகுநாதர். 'நான் கவனித்து விட்டேன் - அரசியாரின் அன்புப் பார்வை தங்கள் மீது விழுந்து விட்டதை. இனிமேல் தப்ப முடியாது, நண்பரே! ஒரு நாளும் முடியாது. ''

'நிறையத்தான் தெரிந்து வைத்திருக்கிறீர்கள். பொரு ளுடன் பாராட்டினான் காஞ்சிபுரத்தான்.

'யாரடா அங்கே?' கூப்பிட்டார் ரகுநாதர். எவனையும் காணோம்.

'அரண்மனை ஊழியர்கள் மொத்தப் பேரும் இப்படித் தான் சே' அலுத்துக் கொண்டார் ரகுநாதர். 'ஒருநாள் விழா வென்றால் ஒன்பது நாள் ஓய்வெடுத்துக் கொள்வார்கள்!"

மஞ்சத்தின் ஓரத்திலிருந்து வெள்ளி மணியைத் தட்டினார் மீண்டும். அப்போதும் யாரும் வரவில்லை.

'நான் போய் அழைத்து வருகிறேன், ' எழுந்தான் காஞ்சி புரத்தான்.

‘'வேண்டாம், வேண்டாம், தடுத்தார் ரகுநாதர். 'அழைத்து வருவதாவது? இழுத்து வரவேண்டும். நானே செய்கிறேன் அந்தக் காரியத்தை கோபமாய் வெளியேறியவர் சில வினாடிகளில் திரும்பினார். அவர் கைப்பிடியில் ஒரு காவலன் சிக்கிக் கொண்டிருந்தான்.

'மன்னியுங்கள், பிரபு அசதியினால் கொஞ்சம் கண்ணயர்ந்து விட்டேன், ' பரிதாபமாய்க் கெஞ்சினான் அவன்.

காஞ்சிபுரத்தான் சிபாரிசு செய்தான். "என்னை உபசரிப்பதற்காக ஓர் எளியவனைத் துன்புறுத்த வேண்டாம். பாவம், விட்டுவிடுங்கள். '

'பிழைத்துப் போ!' விலக்கித் தள்ளினார் அவனை. 'இவரது பெருந்தன்மை உன் உயிரைக் காப்பாற்றியது. பதிலுக்கு உபசாரம் செய். இவர் படுக்கையறையில் எல்லா வசதிகளும் பண்ணிவிட்டு வந்து சொல்."

'இதோ பிரபு, 'ஓட்டம் பிடித்தான் அவன். பாலும் பழமும் மேலும் தந்தார் ரகுநாதர். 'சென்னைப் பட்டணம் பற்றி நிறையக் காதில் விழுகிறது. அங்கே சோம்பேறிகளே இருக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். அப்படியா?’’

தங்கக் கிண்ணத்தில் பேரீச்சைக் கொட்டையைத் துப்பி னான் காஞ்சிபுரத்தான்.

'சோம்பேறிகளைப் பற்றித் தெரியாது. ஆனால் அரக்கர்கள் கிடையாது. நிச்சயமாய்ச் சொல்வேன். வஞ்சகர்களின் எண்ணிக்கைக்கூட கொஞ்சம் குறைவுதான் அங்கே."

"அப்படியா?" ஏதோ சொல்ல வாய் எடுத்தார் ரகுநாதர். தடதடவென ஓடிவந்தான் சற்று முன் சென்ற பணியாள். 'பிரபு அரசிக்கு ஆபத்து! ஆபத்து!" அவன் வருமுன்பே குரல் கேட்டது.

"என்ன? யாருக்கு சென்னம்மாவுக்கா? பதறி எழுந்தார் ரகுநாதர்.

'இல்லை, இல்லை. புது அரசியாருக்கு!'

"என்ன? வெளியே தாவிய காஞ்சிபுரத்தான் நின்றான். “தாமரை எங்கே இருக்கிறார் இப்போது?"

மூச்சு இரைத்தது வந்தவனுக்கு. திணறித் திணறிப் பேசினான். 'தானம் வழங்கிக் கொண்டே இருந்தார்கள் இல்லையா அரசி... ஒரு கிழவன்... விசித்திரமாக ஒரு தானம் கேட்டான்...'

வெடித்தார் ரகுநாதர்: "என்ன தானம் கேட்டான், அயோக்கியன்? அதற்காகத்தான் இந்த மூட சம்பிரதாயங் களை அடியோடு ஒழிக்க வேண்டுமென்று நான் சொல்லி வருகிறேன். '

'அந்தக் கிழவனுடைய மகன்... ஏதோ கொள்ளைக் குற்றத்துக்காகப் பாதாளச் சிறையில் இருக்கிறானாம்... அவனை விடுவிக்க வேண்டுமென்று...'

"பாதாளச் சிறையிலா? மகாபாதகர்களையல்லவா அங்கே அடைத்து வைப்பது? அரசியார் இரக்கம் காட்டி விட்டாரா?'' படபடத்தார் ரகுநாதர்.

'இரக்கம் காட்டப்போய், தமக்கே தீங்கு ஏற்படுத்திக் கொண்டார், பிரபு இப்போதே விடுவிக்கிறேன் என்று கிழவருடன் புறப்பட்டார். பாதாளச் சிறையில் ஒரு மர்மமான அறை. தானே திறக்க முயன்றார் அதை. திறந்து கொண்ட கதவு, அரசியார் நுழைந்ததும், ஏதோ விசையினால்...'

'ஏதோ விசையினால்?" உலுக்கினான் அவனைக் காஞ்சி புரத்தான்.

"அரசியாரே சிக்கிக் கொண்டு விட்டார் அந்த அறைக்குள். பூட்டை உடைக்க என்னவெல்லாமோ செய்து பார்க்கிறார்கள்."

வேகமாய் அவனை ஒதுக்கினான் காஞ்சிபுரத்தான். பாய்ந்தான் வெளியே, உதட்டிலே கேள்வியுடன். 'எந்தப் பக்கம் அந்தச் சிறை?"

'அரண்மனையின் பின்புறம். பின் தொடர்ந்தார் ரகுநாதர். "நான் கவனிக்கிறேன். நீங்கள் இங்கேயே இருங்கள்."

காஞ்சிபுரத்தான் கேட்கவில்லை. செங்குத்தான படிகள். அடுக்கடுக்கான பாறைகள். தலை கால் புரியாமல் இறங்கியவனை

தோளினால் ஒரு மோதல். ரகுநாதரின் கடகட சிரிப்பைப் போலவே காஞ்சிபுரத்தான் உருண்டான் மறுவினாடி. மடாலென்று கீழே ஒரு கதவு திறக்கிறது: மின்னல் போல் ஒரு வெளிச்சம். சிறைக் கதவு மூடிக் கொள்கிறது.

மேலேறி வந்தார் ரகுநாதர். பணிவுடன் நின்றிருந்த பணியாளைக் கூப்பிட்டார். "இந்தா, " ஒரு பொற்காசைச் சுண்டியெறிந்தார். 'சொன்னபடி நடித்ததற்காக. '

சம்பிரதாயங்கள். சடங்குகள். மரியாதைகள். மரபுகள். பழக்கங்கள். வழக்கங்கள்.

'என்னை விடு, தாமரை. விடு தாமரை கெஞ்சியது ஒவ்வோர் அவயவமும். தாமரை தள்ளாடினாள். எழுந்தும் அமர்ந்தும், நின்றும் நடந்தும், நிமிர்ந்தும் குனிந்தும் - முடிசூட்டு விழா, அந்த மெல்லியலாளின் முதுகை ஒடித்து விட்டுத்தான் முடிவுக்கு வந்தது.

வலுக்கட்டாயமான ஒரு புன்னகை அதரத்தில் எப்போதும் தவழ வேண்டுமாம். பாழும் உதடுகள் அவரை'ப் பார்க்கும் போது மட்டும் எப்படி நாணமில்லாமல் தானாகவே முறு வலிக்கின்றன. அவர் இல்லாதபோது? புன்னகை செய்' என்று சொன்னால் எப்படிப் பிகு பண்ணிக் கொள்கின்றன. பொல்லாத அதரங்களே! இருங்கள், இருங்கள் அவரைக் கொண்டே தண்டனை வாங்கித் தருகிறேன்!

தாமரை முகம் சிவந்தாள். 'போகலாம்... ' அனுமதி தந்தார் ராஜகுரு. தோழிகள் புடைசூழ அந்தப்புரத்தை அடைந்தவள்இங்கேதானே காத்திருக்க வேண்டும் அவர்? எங்கே பின்னே?

'ரகுநாதரின் அறையில் அந்த... அந்த... ' எப்படிச் சொல்வது?

"புரிகிறது, அரசி' சிரித்துக் கொண்டே ஓடினாள் ஒரு குறும்புக்காரத் தோழி. போன சுருக்கிலேயே திரும்பினாள். 'அவர் அப்போதே போய்விட்டாராம், ராணி."

'போய்விட்டாரா?" கருவண்டு விழிகள் கலங்கின. 'போடி ரகுநாதரை நன்றாய்க் கேள் - எங்கே போனார், எப்போது வருவாரென்று?"

'பெரியவர் எரிந்து விழுகிறாரம்மா. தலைவலியாம். தொலைத்து விடுவேன் தொல்லை தந்தால் என்று என்னை விரட்டி விட்டார். '

'அப்படியா? நானே போய்க் கேட்கிறேன்.' ‘‘தேவையில்லை, ராணி" எதிர்ப்பட்டாள் இன்னொரு தோழி.

‘‘என்ன பரிமளம்? என்ன விஷயம்?"

மற்றத் தோழிகளை ஜாடை காட்டி வெளியே அனுப்பினாள் பரிமளம். உள்ளங்கையை விரித்துக் காட்டினாள் அரசிக்கு.

"பொற்காசா? ஏது? எதற்கு இதைக் காட்டுகிறாய்?"

குரலைத் தாழ்த்திக் கொண்டு தோழி சொல்லச் சொல்ல, தாமரையின் கண்கள் விரிந்து கொண்டே போயின. 'இருக்காது ஒரு காலும். நான் நம்ப மாட்டேன்... இதோ...'

வெளியே வந்தவள் ஒரு கணம் தயங்கினாள். பிறகு நடந்தாள்.

நித்திரையின் மடியிலே தலை சாய்ந்தது நகரம். மகுடாபிஷேகக் கேளிக்கைகள் மெல்ல மெல்ல மட்டுப்பட்டன. இங்கொரு வேட்டு, அங்கொரு வாணம். அவ்வளவுதான்.

மஞ்சத்தினின்று எழுந்து கொண்டார் ரகுநாதர். தென்றல் புகுந்தது சாளரத்தின் வழியே. துணைக்குப் பிரவேசித்தது தூமணி விளக்குகளின் ஒளி. இரவின் தனிமை. ஏக்கப் பெரு மூச்சு. திடீரென, உறுதியின் திமிர். தீர்மானத்தின் வேகம்.

அந்தப் பகைவன்! அவன் இருக்க இருக்க ஆபத்துதான்!

விரைந்தது அவர் நடை சிறைக்கோட்டம் நோக்கி, ஏந்திய தீவட்டியுடன் இரவுப் பாராக்காரன் வழி காட்டினான்.

அரண்மனையின் மறுபுறம். செங்குத்தான படிகளில் கீழிறங்கினால் பாதாளச் சிறை.

அதிர்ச்சியுற்றார் ரகுநாதர். என்ன இது? மலைத்து நின்றது கால். ஏன் இப்படி? குழம்பித் தவித்தது அறிவு. எவருடைய காரியம்? சினந்து சிலிர்த்தது உணர்வு.

நல்லோரின் நெஞ்சம் போல் திறந்து கிடந்தது சிறைக் கோட்டம். வள்ளலின் இல்லம் போல் காவலற்றுக் காட்சியளித்தன வாசல்கள்.

'யாரடா அங்கே?' சிறைச் சுவர்கள் அதிரச் சீறினார் ரகுநாதர். பன்முறை கூவிய பின்னரே ஒருவன் வந்தான்.

'என்னடா இது அக்கிரமம்?' மெய் கட்டி வாய் பொத்தினான் காவலாள். 'அக்கிரமம் எதுவுமில்லை, பிரபு. ஆணை"

'என்ன ஆணை?" 'பழைய அரசியாரும், அரசரும் புதிய ராணியுடன் வந்திருந்தார்கள். முடிசூட்டு விழாவை முன்னிட்டுப் புது அரசி செய்துள்ள பிரகடனத்தை வாசித்தார்கள். '

'பிரகடனமா?" 'ஆம் பிரபு. ராஜ்யத்திலுள்ள எல்லாக் கைதிகளுக்கும் மன்னிப்புக் கொடுத்து விடுதலை வழங்குவதற்காகப் பிரகடனம் செய்திருக்கிறார்களே?. ரகுநாதரின் சீற்றத்தை மேலும் தூண்டியது அடுத்த வாக்கியம்: "தங்களுக்குத் தெரிந்திருக்குமென்று எண்ணினேன். '

'எண்ணு, எண்ணு உன் வாழ்நாளை" திரும்பியது ரகுநாதர் அல்ல. அடிபட்ட புலி.

நேரே தமது இருப்பிடம் செல்லவில்லை. கிருஷ்ணப்பரின் அந்தப்புரத்துக்குள் புயலென நுழைந்தார்.

ஓசை கேட்டுத் திரும்பினார்கள் கிருஷ்ணப்பரும், சென்னம்மாவும். சொக்கட்டான் ஆட்டம் சில வினாடிகளுக்கு நின்றது.

'த்ஸொ, தஸொ, ரகுநாதரின் குரலில் பரிதாபம் நிறைந்திருந்தது. 'சொக்கட்டானா ஆடுகிறீர்கள்? பாவமாயிற்றே?"

சென்னம்மா பதில் கொடுத்தாள்: "இந்தக் காய்களை உருட்டுவதில் பாவம் குறைவு- மனிதத் தலைகளை உருட்டு வதைக் காட்டிலும்.'

'எனக்கும் கொஞ்சம் இடம் கொடுக்கிறாயா?" மஞ்சத்தின் ஓரத்தில் அமர முயன்றார் ரகுநாதர்.

'ஏற்கெனவே அதிகம் கொடுத்து விட்டோம், ! கிருஷ்ணப்பர் ஒதுங்கிக் கொண்டார் லேசாக.

ரகுநாதர் புன்னகை செய்தார். "இதோ போய்விடுகிறேன். உங்கள் தனிமையை அதிக நேரம் குலைக்க மாட்டேன், ' ஒருமுறை செருமிக் கொண்டார். பின்னர், 'தாமரையின் காதலன் இருக்கிறானே, அந்தக் காஞ்சிபுரத்தான் - அவனை விடுவிப்பதில் உங்கள் இருவருக்கும் ஏன் அத்தனை ஆர்வம்?"

திருப்பி வினவினாள் மகள்: 'அவனைச் சிறையில் அடைப்பதில் தங்களுக்கு ஏன் அத்தனை ஆர்வம் என்று தாங்கள் என்னிடம் சொல்லவில்லையே, அப்பா? அவரவர் நலன் அவரவருக்கு. '

'ஒகோ. உங்கள் திட்டம்?" 'சமயம் வரும்போது சொல்லுகிறோம், ' என்றார் கிருஷ்ணப்பர்.

'அந்த அடிமைச் சிறுக்கி அந்தப் பட்டணத்தானுடன் சேர்ந்து கொண்டு இந்த ராஜ்யத்தையே பொசுக்கென அழிக்கப் போகிறாளே, அப்போது தெரியும்!"

"கவலைப்படாதீர்கள், மாமா' எள்ளினார் கிருஷ்ணப்பர். 'தங்கள் ஆலோசனை எங்களுக்கு இத்தனை நாள் கிடைத்து வரவில்லையா? அதே போல், எங்கள் ஆலோசனை தாமரைக்குப் பயன்படும்!'

ரகுநாதர், உடனேயே பொலபொலவெனக் கண்ணிர் உகுத்தார். விம்மலுடன் வெளிப்பட்டது பேச்சு. 'திட்டி னாலும் வெறுத்தாலும் நீங்கள் என் குழந்தைகள். அந்தத் தாமரை உங்கள் பேச்சைக் கேட்பாளா அல்லது தன்னிச்சை யாகத் துள்ளுவாளா என்பது விரைவில் தெரியும்.'

கண்ணிரைத் துடைத்துக் கொண்டார். தள்ளாடி வெளி யேறினார்.

பாதுஷாவின் பாதுகை! ஷா இன் ஷா ஔரங்கசீப்பின் யானை வருகிறது! பராக் பராக் ஒதுங்குங்கள் வழி விடுங்கள் எழுந்து வணங்குங்கள் ஏற்றுங்கள், போற்றுங்கள்!

கொலு மண்டபமெங்கும் பரபரப்பு. அலங்கரித்த குன்றோ என்று அசைந்தாடி நுழைந்தது ஔரங்கசீப்பின் யானை. மெத்து மெத்தென்ற கம்பீர நடை. ஒத்தூதும் மணிகளின் ஒசை. இருமருங்கும் வெண்சாமரத்தின் வீச்சு. வாழ்க வாழ்க என எங்கெங்கும் பேச்சு.

அரியணையில் வீற்றிருந்தாள் அரசிளங்குமரி. முகத்திலே திகைப்பின் முத்திரை. என்ன இது? யார் இவர்கள்?

குறிப்பறிந்து ஓடிவந்தார் அமைச்சர். "டெல்லிப் பேரரசரிடமிருந்து வந்திருக்கிறது இந்தப் பரிவாரம். அம்பாரியிலே இருப்பது பாதுஷாவின் பாதுகை, நாம் அதற்கு மரியாதை செய்து அனுப்புவது வழக்கம்...'

தாமரையின் விழிகள் விரிந்தன. 'அதாவது...?"

'அரியணையிலிருந்து தாங்கள் எழுந்து கொண்டு, பாது ஷாவின் பாதுகையை அந்த இடத்திலே அமர்த்த வேண்டும். பரிவட்டம் சுற்றி, வெண்சாமரம் வீசி, வணக்கம் செலுத்தி விடை கொடுத்தனுப்ப வேண்டும். '

'அப்படியா?" தாமரை மறுபுறம் திரும்பினாள். 'தங்கள் கருத்தும் அதேதானா, தளபதி அவர்களே?'

சரக். உறைவாளை உருவிச் செருகி, ஒரடி முன்னே வந்தார் அந்த இளம் தளபதி. பயபக்தியுடன் எட்ட நின்றார். தெரிவித்தார் தன் எண்ணத்தை, அரசியின் காதோடு.

'சரி. அப்படியே செய்துவிடலாம்.' தளபதி யானையை அணுகினார். ‘‘பாதுகையை எடுங்கள்,' என்றார் காவலனிடம்.

இறக்கப்பட்டது ஒற்றைப் பாதுகை. "இப்படிப் போடு, 'தன் காலடியைக் காட்டினாள் தாமரை. நிசப்தம், திடீரெனப் பெருஞ் சத்தமாயிற்று. தள்ளி நின்றிருந்த மக்கள் நெருங்கி வந்தார்கள். ஒருவரையொருவர் முண்டி முன் வந்தார்கள்.

'அதை... பாதுகையை... சிம்மாதனத்தில் வைக்க வேண்டும், அரசி!' அச்சம் அமைச்சரின் குரலைக் கீச்சிட வைத்தது.

‘'வேண்டாம், வேண்டாம், ' எங்கிருந்தோ கூவினர் கிருஷ்ணப்பரும், சென்னம்மாவும்.

ஒற்றைப் பாதுகையில் தன் இடது பாதத்தை அதிலே மாட்டிக் கொண்டாள் தாமரை.

'ஐயையோ ஆபத்து ஆபத்து பாதுஷாவுக்கு அவமானம்! டெல்லிக்கு அவமதிப்பு!" இப்படிக் கூக்குரலிட்டவர் சிலரே.

பெரும்பாலான கோஷம்வாழ்க சிங்காவரம் ஓங்குக ராணியாரின் தீரம் வளர்க அரசியாரின் வீரம்!

'பார்த்தாயா, அவள் திமிரை!’’ ரகுநாதர் சீண்டினார் தன் மகளை.

கிருஷ்ணப்பர் தடுமாறினார்: 'அந்தத் தளபதியின் யோசனை.... அவன்தான் அவளைத் தூண்டியிருக்கிறான்...'

நகைத்தார் ரகுநாதர். "ஆமாம். தூண்டியவன் அந்தப் புதிய தளபதிதான். அவன் யாரென்று தெரியவில்லையா, மருமகரே!"

யார்? யார்? கிருஷ்ணப்பரின் விழிகள் தெறித்தன, அவனை அடை யாளம் கண்டதும்.

தளபதியாக நின்றிருந்தவன் காஞ்சிபுரத்தான்.

## (18)

மாயக்காரன் எவனோ வந்தானா? மந்திரக் கோலை ஆட்டினானா?

அசைவற்றுச் சிலையாகி விட்டனரே அத்தனை பேரும்! நகராத ஓவியம் போல் நின்று விட்டதே அரச அவை!

பேரரசர் ஔரங்கசீப்பின் பிரதிநிதியாக வந்த தளபதி அதிர்ச்சியுற்று நின்றான். பரந்த ஹிந்துஸ்தானம் முழுவதும் இந்தப் பட்டத்து யானை பவனி வந்தாயிற்று. எங்கெங்கும் கோலாகல வரவேற்பு. பாதுஷாவின் பாதுகைக்குப் பயபக்தியுடன் உபசரிப்பு. யாரேனும் இப்படி அதைக் காலில் அணிந்து கொண்டு கேலி செய்தது உண்டா?

சரக்கென்று வாளை உருவினான் முகலாய சாம்ராஜ்யத்தின் பிரதிநிதி. கண்கள் கொவ்வையெனச் சிவக்க, மீசை துடித்தது. வேகமாய் ஓரடி முன் வந்தவன் சட்டென்று கட்டுப் படுத்திக் கொண்டான். 'அரசியாரே! தாங்கள் செய்த அவமானத்துக்கு நானே தண்டனை தருவது, மாட்சிமை தங்கிய எங்கள் சக்கரவர்த்தியை நானே அவமதிப்பதாகும். ஆனால் பாதுஷாவின் வேறொரு பிரதிநிதி விரைவில் உங்களைச் சந்திப்பார் போர் முனையில். அது மட்டும் நிச்சயம். வருகிறேன்.'

பாதுஷாவின் பாதுகையைத் திரும்ப எடுத்து அம்பாரியில் வைத்தான் அந்தத் தூதன். பத்துப் பேர் கொண்ட பரிவாரம்

வெளியேறியது. எல்லோருக்கும் பின்னால் அசைந்தாடிச் சென்றது யானை.

மந்திரத் தளையிலிருந்து விடுபட்டது கொலு மண்டபம். எங்கும் சளசளப்பு. கிசுகிசுப்பு.

தடுக்கும் கிருஷ்ணப்பரைப் பின்தள்ளிவிட்டு, தாமரையை நெருங்கினார் ரகுநாதர். அவள் காதிலே ரகசியமாக ஏதோ சொன்னார்.

'அப்படியா!' கலவரம் தாமரையின் முகத்தில் குடி கொண்டது. மறுவினாடி அவள் அறிவித்தாள்:

'அந்தரங்க ஆலோசனைகள் அவசரமாக நடைபெற வேண்டியிருக்கிறது. அவை இனிக் கலையலாம். முக்கியமான முடிவுகள் எடுத்தால், நாளை தெரிவிக்கிறோம்.'

விடுவிடுவென தர்பார் கலைந்தது. 'சிற்றப்பா! இவர் சொல்வது உண்மைதானா? ' கிருஷ்ணப்பரை உதவிக்கு அழைத்தாள் தாமரை.

'என்ன சொல்கிறார்?"

'உண்மை நிலையைச் சொன்னேன்,' என்று கெக்கலித்தார் ரகுநாதர். "சிங்காவரத்தின் வரலாற்றிலேயே இத்தகைய வீரமிக்க வேளை வந்தது கிடையாதே! அதைச் சொன்னேன். பக்கத்திலேதான் செஞ்சி இருக்கிறது. ஔரங்கசீப்பின் தளபதியான ஜூல்பிகர்கான் அங்கேதான் முற்றுகை இட்டிருக்கிறான் இப்போது அவமானப்படுத்தப்பட்ட தூதர்கள் அவனிடம்தான் ஓடுவார்கள். அவன் தன் படை மொத்தத்தையும் இங்கே திருப்புவான். போதாதென்றால் டெல்லிக்குச் சேதியனுப்பி, புதிய படைகளும் தருவிப்பான். நாம் சும்மா இருப்போமா? சுண்டைக்காய் அளவுள்ள தேசமானாலும், கடைசி மனிதன், ஆடு மாடு, புல் பூண்டு உள்ளவரை போராடுவோம். போராடி வீர சுவர்க்கமடைவோம்.

சிங்காவரம் என்ற ஓர் அசல் மலையும், சிங்காவரத்தின் மக்களைக் கொண்ட ஒரு பிண மலையும் பக்கத்தில் பக்கத்தில்...'

‘'வேண்டாம், வேண்டாம்" தாமரை காதைப் பொத்திக் கொண்டாள்.'அப்படிப்பட்ட நிலைமை வரவே வேண்டாம். அதைத் தடுக்க வழி சொல்லுங்கள்."

"அப்படிக் கேள், புத்திசாலிப் பெண் மிக மிக வேகமான குதிரைகள் மூன்றை அமர்த்துவோம். பாதுஷாவின் பரிவாரத்தை ஓடிப் பிடிப்போம். தடுத்து நிறுத்துவோம். செய்த காரியத்துக்கு மன்னிப்பு...'

'பெரியவரே! நாக்குத் தறிகெட்டு ஓடினால் நச்சுப் பாம்பாகிவிடும் என்பார்கள்! கையைக் கட்டியவாறு கவனித்துக் கொண்டிருந்த காஞ்சிபுரத்தான் ரகுநாதரின் எதிரில் வந்தான். "கொஞ்சம் அடக்கியே பேசுங்கள். உப்புப் போட்டுச் சோறு தின்ற எந்தப் பிறவியும், தன்மானம் இருப்பதற்காக மன்னிப்புக் கேட்காது."

'ஓ' ரகுநாதர் விழிகளைச் சுழற்றினார் கிண்டலாக. 'சென்னைப் பட்டணத்திலே அடிமைகளின் சோற்றுக்கு உப்புக்கூடப் போடுகிறார்களா? '

'மாமா!" சீறினார் கிருஷ்ணப்பர். "நீங்கள் தளபதியை மட்டும் அவமதிக்கவில்லை. என் அண்ணன் பெண்ணையும் தான். '

'அண்ணன் பெண்ணல்ல இவள் நம்மைப் பூண்டோடு அழிக்க வந்த பூகம்பம்!"

'இருக்கட்டும். அன்னியனான பாதுஷாவிடம் சிறுமைப் பட்டுச் சாவதைக் காட்டிலும், என் அண்ணன் குழந்தை யினால் அழிவது மேல்தான். '

'மருமகரே இளமைத் திமிரினால் இவன் செய்வதை..." காஞ்சிபுரத்தான் சிரித்தான்: 'தலை நரைத்த கிழவர்களுக்கே இளமை திரும்புகிற காலம் இது எனக்கு இருக்கக் கூடாதா பெரியவரே!'

'தயவுசெய்து நடக்க வேண்டியதைப் பேசுங்கள், ' மன்றாடினாள் தாமரை.

'நடக்க வேண்டியது என்ன? முன்சென்று தாக்குவது தான் மிகச் சிறந்த தற்காப்பு. அதன்படி, ஜுல்பிகர்கான் வரும் வரையில் நாம் ஏன் காத்திருக்க வேண்டும்?"

மின்வெட்டும் நேரம். தாமரையின் காதல் கண்களை அவன் கண்கள் சந்தித்தன. மறுவினாடி அவன் வெளியேறினான்.

டொக், டொக். 'ஐயா, ஐயா. டொக் டொக். 'யாரப்பா அது?' தையல்காரக் கிழவர் ஊசியும் நூலையும் கீழே வைத்தார். லொக்கு லொக்கென்று இருமியவாறு எழுந்து வந்தார். தாளை நீக்கிக் கதவைத் திறந்தார். காலை வெய்யில் சுள்ளென்று வீசியது. நெற்றியில் சார்புக் கட்டி, வாசலில் நின்றவனைப் பார்த்தார்.

“வணக்கம், தாத்தா. நான்தான் காஞ்சிபுரத்தான். உங்கள் கடன் தீர்க்க வந்திருக்கிறேன். '

'வா, வா." அகம் குளிர முகம் மலர வரவேற்றார் கிழவர். 'அந்தக் கடன்காரப் பயல் தினம் வந்து என் உயிரை எடுக்கிறானப்பா. '

'அதெப்படி? இன்றைக்குத்தானே நான் வருவதாகக் கெடு? இந்தாருங்கள்." வேட்டி மடியைப் பிரித்தான். உருண்டன கலகலவென்று பொற்காசுகள். 'அடடே உனக்கு வேலை ஏதேனும் கிடைத்ததா தம்பி?'

"ஆமாம், தாத்தா. அரண்மனையில். '

'அரண்மனையிலா!' பின்னும் பளபளத்தன கிழவரின் குழி விழுந்த கண்கள். 'என்ன வேலை?"

'ஏதோ தளபதியென்று சொல்கிறார்கள். '

'ஆ தளபதியா' வியப்பை வெளியிட்டது கிழவர் அல்ல, கடன் வசூலிப்பதற்காக வந்தவன்தான். இன்றைக்கு எப்படியும் பணம் வாங்காமல் திரும்புவதில்லை என்று தீர்மானம் போலும். தன்னுடன் சிறிய கூட்டத்தையே அழைத்து வந்திருந்தான்.

வாசலில் ஒரே கசமுச. ஏகப்பட்ட கிசுகிசு. ஆமாம், இவர்தான் புதிய தளபதி... பாதுஷாவின் பரிவாரத்தைச் சும்மா வாயாலேயே ஊதிவிட்டார்... பட்டணத்துக்காரர். அரசிக்கு வேண்டியவர்...

"பணத்தை எடுத்துக் கொள்ளுங்கள்", தையல்காரரின் கடன்காரரிடம் அமைதியாகச் சொன்னான் காஞ்சிபுரத்தான். தெருவுக்கு வந்தான். கை தட்டினான்.

'வாருங்கள் தோழர்களே! தினவெடுத்த தோளுடையோர் யாராயிருந்தாலும் வாருங்கள் மானத்தைப் பெரிதாக மதிப்போரெல்லாம் வாருங்கள் இருப்பது ஓர் உயிர் அது எதிரியை ஒழிப்பதிலே போகட்டும். கொண்டிருப்பது ஒரு பெயர். கொன்றான் பகைவனை என்ற புகழ் வந்து சூழட்டும்! வாருங்கள்! வாருங்கள், உங்கள் உள்ளத்திலுள்ள பீதி எனக்குப் புரிகிறது; கலங்காதீர்கள். பேரரசர் ஔரங்கசீப்பல்ல, அவருக்கு முப்பாட்டனாரையும் நம்மால் முறியடிக்க முடியும். தேவையானது ஒன்றுதான் - மன உறுதி...'

முதலில் இங்கொருவர் அங்கொருவர், பிறகு ஐந்து பேர், பத்துப்பேர். அதன்பின் மளமளவென்று நெரிசல்.

யாரோ கேட்டார்கள்: 'அரசாங்கப் படை வீரர்கள் இல்லையோ? ஈட்டியும் கவசமும் வாளும் வில்லும் இல்லாமல் நாம் போய் என்ன செய்யப் போகிறோம்?"

கர்ஜித்தான் காஞ்சிபுரத்தான். 'கோழையின் கடைசிப் புகலிடம் ஆயுதம்! நமக்கு ஏன் அது? ரத்தத்திலே சுத்தமில்லாத மக்களுக்குத்தான் ரதகஜதுரக பதாதிகள்! நமக்கேன் அவை?

நமக்குக் கையே ஈட்டி, காலே புரவி, மார்பே கவசம், எண்ணமே வாள். அதற்கு மேல் என்ன தேவை? வாருங்கள் தோழர்களே!'

கூட்டம் சேருமோ சேராதோ என்று நிற்கவில்லை காஞ்சிபுரத்தான். நடந்தான் முன்னேறி. உணர்வே சொல்லிற்று, உடன் வருகிறார்கள் பலபேரென்று.

ஒவ்வொருவர் கையிலும் என்ன விந்தையான ஆயுதங்கள் கம்பு, கழி, கத்தி, ஈட்டி, அரிவாள்!

ஓர் இளைஞன் காஞ்சிபுரத்தானை ஒட்டிக் கொண்டாற் போல் நடந்தான். 'என் பெயர் துரைவேலன். அதை இன்று முதல் மாற்றிக் கொள்ளப் போகிறேன். '

'என்னவென்று?" "தமெகா என்று. ' 'அப்படியென்றால்?" 'தளபதியின் மெய்க் காப்பாளன்' வாய்விட்டு நகைத்தான் காஞ்சிபுரத்தான். 'பெயர் சூட்டு விழாவைப் பிற்பாடு வைத்துக் கொள்ளலாம். இப்போது ஜுல்பிகர்கானின் பாசறைகளைக் காட்டு பார்க்கலாம். கூடார மெல்லாம் செஞ்சியைச் சுற்றிச் சேர்ந்தாற்போல் இருக்கின்றனவா, விட்டுவிட்டா? '

'முன்பெல்லாம் சேர்ந்தாற்போலத்தான் இருந்தன, ' என்று விளக்கினான் துரைவேலன். 'ஆனால், முற்றுகை ஆரம்பித்து ரொம்பக் காலமாகிறது. செஞ்சி மன்னர் ராஜாராமின் சுண்டு விரலைக்கூட அசைக்க முடியவில்லை. அதிலே எல்லோருக்கும் சோர்வு,' காஞ்சிபுரத்தானின் காதோடு கிசுகிசுத்தான். 'இன்னொரு விஷயம். பாதுஷா ஔரங்கஜீப்பின் சொந்தப் புதல்வனையே இந்த ஜுல்பிகர்கான் நம்பாமல், ஒரு கூடாரத்திலே சிறை வைத்திருக்கிறானாம்! இப்படி அவர்களுக்குள் ஏகப்பட்ட பிளவுகள். ஒவ்வொருவன் ஒவ்வொரு மூலையில் கூடாரம் அடித்துக் கொண்டிருக்கிறான்."

'நம்முடைய நன்மைக்காகத்தான், ' காஞ்சிபுரத்தானின் முகத்தில் முறுவல் பூத்தது.

மலைச்சரிவில் இறங்கலானார்கள் காஞ்சிபுரத்தான் குழுவினர். மாலைச் சூரியனும் அதையே செய்தான்.

கரிய இருள் கிடுகிடுவெனக் கூப்பியது. தொலைவில் இரண்டொரு கூடாரங்களிலிருந்து தீப்பந்தங்கள் கண்சிமிட்டின. குதிரைக் குளம்படிகள் பட்டுப் பட்டு எத்தனை குழிகள்! சாலை காலை இடறிற்று.

'உஸ்!" உதட்டில் விரல் வைத்தான் காஞ்சிபுரத்தான். 'இனி நமக்குத் துணை இருளும் நிசப்தமும்தான். மெல்ல ஊர்ந்து முதல் கூடாரத்தை அமுக்குவோம். துளியோசையும் கேட்குமுன் அடுத்த கூடாரம் பிறகு அதற்கடுத்தது...'

சுமார் நூறு பேர் கொண்ட கூட்டம் அவனுடையது. ஆயினும், ஆழ்ந்த மௌனம். அடிமேலடி.

புது மனித நடமாட்டத்தைப் புரவிகள் கண்டு விட்டனவோ? இரண்டொன்று கனைத்தன. ஆனால், யாரும் கானு முன்பு, 'பாயுங்கள்!' கட்டளையிட்டுவிட்டுக் கூடவே பாய்ந் தான் காஞ்சிபுரத்தான்.

கள்ளில் பாதியும், கனவில் பாதியுமாக ஆழ்ந்து கிடந்தனர் சிப்பாய்கள். அவர்கள் விழித்தெழுந்து போராடுமுன் சுருட்டிவிட்டது காஞ்சிபுரத்தானின் குழு. ஆட்களை முடக்கிவிட்டு, ஆயுதங்களைப் பறித்தெடுத்துக் கொண்டார்கள். சற்றுத் தொலைவில் இன்னொரு கூடாரம். ஆனால் எப்படியோ ஒருவன் தப்பிவிட்டானே! முக்கிய தளபதிகளுக்கு அபாயச் சேதியை அறிவிக்க, குதிரையிலே பறக்கிறானே!

'எச்சரிக்கையாயிருங்கள் ஓரங்களில் மறையுங்கள்!' காஞ்சிபுரத்தான் முதலில் தன் தோழர்களைப் பாதுகாக்க முனைந்தான். அதற்குள்டுமீல் டுமீல்!

மின்னல் போல் நெருப்புத் தெறித்தது தூரத்தே இடியென முழங்கியது செவிடாக்கும் ஓசை

'அம்மா' அலறி விழுந்தான் ஒருவன். துரைவேலன் ஓடிவந்தான். 'அவர்களுக்குத் தகவல் எட்டிவிட்டது. பீரங்கியில் வெடி மருந்து கெட்டித்து, இரும்புக் குண்டுகளை...'

"ஐயோ செத்தேன்!" இன்னும் பல ஓலங்கள் கேட்டன. பளிர் பளீரென்று தீப்பொறி, ங்ஙொய்யென்று எகிறி வரும் இரும்புக் குண்டு!

'இரு, கடைசி வரை பார்த்து...' சொல்லி முடிக்கவில்லை. காஞ்சிபுரத்தானின் காலிலே பெரும் அடி! அப்பப்பா கண்கள் இருண்டன.

மயங்கிச் சாய்ந்தவனைத் தாங்கிப் பிடித்துக் கொண்டான் துரைவேலன்.

மீண்டும் கண் விழித்தபோது -

சிங்காவரம் மலைச் சரிவிலே இருப்பதைக் கண்டான் காஞ்சிபுரத்தான். வெய்யில் ஏறியிருந்தது.

உயிர்காத்த தோழனோடு ஒரு வார்த்தையும் பேசவில்லை. தள்ளாடித் தடுமாறி நடந்தான். ஒருமுறை திரும்பிப் பார்த்தான்.

துரைவேலன் அவன் எண்ணத்தை ஊகித்துக் கொண்டான். 'கவலைப்படாதீர்கள். நம்மவர்கள் தப்பியோடி விட்டார்கள். '

பெருமூச்சு விட்டபடி, "நிராயுதபாணிகளை அழைத்து வந்து காவு கொடுக்கப் பார்த்தேன் பார்!" என்றான் காஞ்சிபுரத்தான்.

தேற்றினான் துரைவேலன். 'நாட்டுக்காகப் போர் புரிய அவர்கள் பாக்கியம் செய்திருக்க வேண்டும்... என்னைப் பிடித்துக் கொள்ளுங்கள். '

துரைவேலனின் தோள், காஞ்சிபுரத்தானுக்குக் காலாயிற்று. தோழனின் தோளில் கையை அழுத்தி, தத்தித் தத்தி நடநதான.

சுனையொன்று தெரிந்தது. நடந்து களைத்தவர்களை வருந்தி அழைத்தது நாவல் மரத்தின் நிழல்.

துரைவேலன் மரத்தை உலுக்க, உதிர்ந்தன கனிந்த பழங்கள். மண்ணை ஊதிவிட்டு வாயில் போட்டுக் கொண் டான் காஞ்சிபுரத்தான்.

பொருமினான் துரைவேலன். 'வீரத்தில் முக்கால் பங்கு இருப்பது விவேகம். அதைக் கை விட்டுவிட்டோம். வெறும் உணர்ச்சியே போதுமென்று மோதினோம். மண்டை உடைந்தது தான் மிச்சம். வீராவேசத்தை வீணடிக்காமல்...'

துரைவேலனின் பேச்சு நின்றது, காஞ்சிபுரத்தான் அதைக் கவனியாத காரணத்தால். 'என்ன, நான் பாட்டுக்கு ரிஷி மாதிரி உபதேசம் பண்ணிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் கசன் மாதிரி எந்தத் தேவயானியையோ நினைத்துக் கொண்டு இருக்கிறீர் களே!

"அதோ பார், அந்தப் பையன் திண்டாடுவதை, பாவம் சிறுவன். வா. '

சுனையின் கிழக்குப்புறம் ஒரு மாமரம். அதன் கீழே, ஒரு மாட்டுக்காரச் சிறுவன் தன் கந்தல் துணியை விரித்துப் போட்டு உட்கார்ந்திருந்தான். கஞ்சிக் கலயமும் ஊறுகாய் இலையும் அவன் எதிரே இருந்தன. ஆனால், பாவம், ஒரு கவளம்கூட விழுங்க முடியாமல்...

எக்கி எக்கிப் பறந்து வந்து அவனை வட்டமிட்டன. சில மலைக் கழுகுகள்! எந்த வினாடியும் கஞ்சிக் கலயத்தைக் கொத்திச் சென்றுவிடும்!

ஆனால் சிறுவன் சாமர்த்தியசாலி. நீளமான கயிற்றில் ஒரு கல்லைக் கட்டி வைத்திருந்தான். ஒரு கையால் அதைத் தலைக்கு மேல் சுழற்றிக்கொண்டே, மறு கையால் உணவருந்தினான்.

'தம்பி, நீ அமைதியாய்ச் சாப்பிடு. நான் பார்த்துக் கொள்கிறேன். கயிற்றை இப்படிக் கொடு," என்றான் காஞ்சிபுரத்தான்.

காஞ்சிபுரத்தான் இரு தரத்துக்குமேல் கயிற்றைச் சுழற்றத் தேவையிருக்கவில்லை. பெரிய ஆள் வந்ததுமே பறந்துவிட்டன கழுகுகள்.

செக்கச் சிவந்த எலுமிச்சம்பழ ஊறுகாயை நாக்கில் தொட்டு நொட்டைவிடும் சிறுவனைக் கனிவுடன் நோக்கினான் காஞ்சிபுரத்தான். ஏதோ ஓர் எண்ணம் உதித்தது. கையிலுள்ள கயிற்றைப் பார்த்தான். தூரத்துக் கிளைகளில் பதுங்கிவிட்ட கழுகுகளைப் பார்த்தான். திருப்தியுடன் உண்டு முடித்து, சுனையில் கை கழுவிக்கொண்டு திரும்பும் சிறுவனைப் பார்த்தான்.

'ரொம்ப நன்றி ஐயா, சிறுவன் கூறி முடிக்கும் வரை பொறுமையில்லை. "இந்தா பிடி," என்று கல்கட்டிய கயிற்றைத் திருப்பிவிட்டு, 'நட, நட!' என்றான் காஞ்சிபுரத்தான் துரை வேலனிடம்.

வெகுநேரமாய் வாய் திறவாது கவனித்துக் கொண்டிருந்த துரைவேலனுக்குத் தாங்கவொண்ணாத அதிசயம். என்ன வந்தது இவருக்குத் திடீர் உற்சாகம் சிட்டுப் போல் பறக்கிறாரே!

'உங்கள் கால் ஜாக்கிரதை உங்கள் கால்!' என்று கூவினான்.

"ஓங்குக அரசியாரின் கீர்த்தி!' மிடுக்குடன் பிரவேசித் தார் ஒரு படைத்தலைவர்.

'வாரும் நெடுமாறரே!'' என்று வரவேற்றார் கிருஷ்ணப்பர். அரசிக்கு அறிமுகமும் செய்து வைத்தார்: "இவர்தான் நமது துணைத்தளபதி. "

"அப்படியா! மகிழ்ச்சி. இன்னேரம் எதிரியின் களத்தில் இருக்க வேண்டியவராயிற்றே தாங்கள்? என்னை ஏதும் ஆலோசனை கேட்பதற்காக வந்தீர்களா?'

துணைத் தளபதியின் முகத்தில் திகைப்பு. அனுபவத்தால் சுருக்கம் விழுந்த கன்னங்களில், சந்தேகத்தின் சாயை படர்ந்தது!

'எதிரியின் களமென்று அரசியார் எதைச் சொல்கிறார்கள்? எனக்கும் காதில் விழுந்தது, அரையும் குறையுமாக. விளங்கத் தெரிந்து கொள்ளத்தான் வந்தேன்."

கிருஷ்ணப்பர் ஆச்சரியப்பட்டார்: 'என்ன! புதிய தளபதி உங்களைக் கலந்தாலோசிக்கவில்லையா? உங்களுடன் புறப்படவில்லையா?"

'இல்லையே?" கடகடவென்று ஒரு நகைப்பொலி. யானை பின்னாலும் மணியோசை முன்னாலும் வருகிற மாதிரி, நகைத்தவாறே நுழைந்தார் ரகுநாதர்.

'அடடா சேதி தெரியாதா அருமை மருமகரே' குரலிலே கேலி, சிரிப்பிலே ஏளனம். உதட்டிலே மமதை. 'புதிர் போட இது நேரமில்லை மாமா!'

'உண்மை, உண்மை. புறமுதுகு காட்டவே நேரமில்லையே!'

"என்ன?" தாமரை, சென்னம்மா, கிருஷ்ணப்பர் மூவரும் சூழ்ந்து கொண்டார்கள் அவரை.

'ஏன் திடுக்கிடுகிறீர்கள்? எங்கிருந்தோ வந்தான் அந்தக் காஞ்சிபுரத்தான். அவனுக்கு என்ன தெரியுமென்று தளபதி பதவியில் அமர்த்தினர்கள்? சொல்லால் பந்தல் போடுகிற சோம்பேறி அவன்! இல்லாத சாமர்த்தியமெல்லாம் கற்பித்துக் கொண்டால், பாவம், அழகாய் இருப்பதைத் தவிர அவனென்ன செய்வான்?"

'போதும், நிறுத்துங்கள், தாமரை படபடத்தாள். "அவருக்கு என்ன தகுதி உண்டென்பது மக்கள் கவலைப்பட வேண்டிய விஷயம். உங்களுக்கு ஏன் வம்பு? வேறு எதையோ சொல்ல வந்தீர்களே, அதைச் சொல்லுங்கள்."

"வேறெதை? இந்தச் சிங்காவரத்தின் மானம் கப்பலேறிய விஷயத்தைத்தான்!'' ரகுநாதர் வெடித்தார். 'திட்டமிட்டு, உளவு வைத்து, நேரம் கணித்து, சூழ்நிலை பார்த்து நடத்த வேண்டிய மாபெருங் கலை, யுத்தம். கிராமத்து ஆட்கள் அடிதடிச் சண்டை செய்வார்களே, அது மாதிரியா செய்வது? சே, அவமானம் அவமானம் தலை நிமிரவே முடியாத அவமானம்!"

'மாமா...' பல்லைக் கடித்தார் கிருஷ்ணப்பர். 'பொறுங்கள் மருமகரே விஷயத்தைச் சொல்கிறேன். கடைவீதியில் அகப்பட்ட சில போக்கிரிகளைத் துணைக்கு அழைத்துக் கொண்டு போருக்குக் கிளம்பியிருக்கிறார் நமது புதிய தளபதி. சக்கையாய் உதைத்து விட்டானாம் ஜூல்பிகர் கான். மானமுள்ள பாதிப்பேர் அங்கேயே மடிந்து விட்டார்கள். மானமில்லாத சில பேர்...'

வேறொரு குரல் குறுக்கிட்டது. 'அந்தப்புரத்தில் பிரவேசித்து அக்கப்போர் பேசுகிறார்கள் அப்படித்தானே, பெரியவரே!''

தாமரை ஓடி முன்சென்றாள். 'நீங்கள்... நீங்கள்... உங்களுக்கு எதுவும்...'

‘'எதுவுமில்லை. பயப்படாதீர்கள் அரசி, ' புன்சிரிப்புடன் உறுதி கூறினான் காஞ்சிபுரத்தான். 'எனக்கும் எதுவும் நேரவில்லை. நாட்டின் மானமும் பத்திரமாய்த்தான் இருக்கிறது...'

'ஜூல்பிகர்கானை நீங்கள் ஏதோ தனிப்பட்ட முறையில் தாக்கியதாகவும், அதில்... ' கிருஷ்ணப்பரின் கேள்வியை இடைமறித்தான் காஞ்சிபுரத்தான். "ஆமாம். நான் முன் யோசனையின்றி ஏதோ செய்துவிட்டதற்காக..." தாமரையின் முன்னே தலை வணங்கினான். "...அரசியாரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். ஆனால், புதியதொரு திட்டத்துடன் இப்போது வந்திருக்கிறேன். அதற்குத் துணைத் தளபதி உள்பட எல்லோரும் ஒத்துழைப்புத் தரவேண்டும்...'

'ஆணைக்குக் காத்திருக்கிறேன், பிரபு' வாளைத் தாளடியில் வைத்து வணக்கம் செலுத்தினார் துணைத்தளபதி.

'நல்லது. நமது படையிலே யானைகள் இருக்கின்றனவா? வலுவான, பெரிய யானைகள்?"

'ஒரு பிரிவே இருக்கிறது.'

'அவ்வளவு வேண்டாம். மூன்றே மூன்று போதும். பிறகு, கோட்டைக் கதவுகளைப் பிணைக்கிறோமே, அது போன்ற நீண்ட கனமான சங்கிலிகள் மூன்று வேண்டும். '

கிருஷ்ணப்பர் குழம்ப, தாமரை கவலையுற, ரகுநாதர் கேலியாகச் சிரித்துக் கொண்டார் தமக்குள்.

அன்றிரவு, கேட்டவை கிடைத்தன. புறப்பட்டான் காஞ்சிபுரத்தான்.

## (19)

கண்ணாமூச்சி விளையாடும் குழந்தைகள்தான். அந்தி வானத்துக்குத் தாரகைகள் ஒவ்வொன்றாய்த் தலைகாட்டின.

'சொன்னதெல்லாம் நினைவிருக்குமல்லவா? காஞ்சிபுரத்தான் கடைசி முறையாகக் கேட்டான். இடம்: ஆயுதச் சாலைக்கு வெளியே. கூட இருந்தோர்: கரிய பெரிய யானைகள் மூன்று.

"ஆம், தளபதி அவர்களே, ' என்றார் துணைத்தளபதி. 'ஐந்நூறு பேர் கொண்ட ஒரு சிறிய படையுடன் நான் புறப்பட வேண்டும். ஜுல்பிகர்கானின் படைக்குச் சமீபமாக ஓசையில்லாமல் பாடியிறங்க வேண்டும். நாளை இரவு, விடிகாலை வேளையில், அவனைப் பின்புறமாகத் தாங்கள் தாக்குவீர்கள். அந்தக் குழப்ப நிலை பார்த்து, நான் முன் புறத்திலிருந்து பாய வேண்டும். '

'மெத்தச் சரி, ' காஞ்சிபுரத்தானின் முகத்தில் புன்னகை பூத்தது. "பின்பக்கத்தில் நான் தாக்கியது தெரிந்த பிறகே நீங்கள் கிளம்பவேண்டும். அதுவரையில் நீங்கள் ஒளிந்திருப்பது ஓர் ஈ காக்கைக்கும் தெரியக்கூடாது. எவரிடமும் மூச்சு விடாதீர்கள்."

'கட்டளை, பிரபு. ''

இழு, இழு, தூக்கடா. மெல்ல. மெதுவாய். ஒரு மூச்சுப் பிடி. ஆ!

-பத்துப் பதினைந்து படை வீரர்கள் தூக்கி வந்தார்கள், மூன்று நீண்ட இரும்புச் சங்கிலிகளை. குன்று சரிந்தாற்போல் குவித்தனர் கீழே.

"ஒவ்வொரு சங்கிலியையும் ஒவ்வொரு யானை மீது ஏற்றுங்கள். ' காஞ்சிபுரத்தானிடமிருந்து கட்டளை பிறந்தது.

நான்கு நான்கு பேராக அந்த வேலையில் ஈடுபட்ட சமயம்

'சிங்காவரம் குன்றின் குறுக்காக எனக்கு ரகசிய வழியைக் காட்ட ஆள் தயாராயிருக்கிறதா?' என்று வினவினான் காஞ்சி புரத்தான்.

"அதோ, அவன் வருகிறான்.'

துணைத் தளபதி கையை நீட்டினார். குடுகுடுவென்று ஓடிவந்தான் ஒரு சித்திரக் குள்ளன்.

'இந்தக் காட்டிலேயும் மலையிலேயும் பிறந்து வளர்ந்தவன் இவன், ' துணைத் தளபதி அறிமுகம் செய்து வைத்தார். 'தங்கள் விருப்பப்படி, எவருக்கும் தெரியாத ரகசியப் பாதையில் அழைத்துச் செல்வான். அந்தப் பாதை, செஞ்சி மலையையும், கோட்டையையும் சுற்றிக் கொண்டு செல்லும். ஜுல்பிகர்கானின் பாசறைக்கு வால்பக்கத்தை அடையும்.'

காஞ்சிபுரத்தான் பீடு நடையுடன் முன்னே நடந்தான். அவன் பின்னே மூன்று யானைகள்- மாவுத்தன் இல்லாமலே. எல்லோருக்கும் முன்னால் அந்தச் சித்திரக் குள்ளன்.

அடர்ந்த கானகத்தினுள் அந்தக் குழு புதைந்தது. பார்த்தவாறு நின்றிருந்தார் துணைத்தளபதி.

'வருந்துகிறேன் நண்பரே, வருந்துகிறேன்." திடுக்கிட்டுத் திரும்பினார் துணைத்தளபதி. நரைத்த மீசையை நெருடியபடி நின்றிருந்தார் ரகுநாதர்.

‘‘வணக்கம் பிரபு. யாருக்காக வருந்துகிறீர்கள்?"

"உங்களுக்காகத்தான்," வெறுப்பை உமிழ்ந்தது ரகுநாதரின் பேச்சு.

‘‘உமது ஆற்றல் என்ன, அனுபவம் என்ன நேற்று வந்த அன்னியன் கட்டளை பிறப்பிக்கும்படி நேரிட்டது, பாருங்கள்."

துணைத்தளபதி சிரித்தார். 'என்ன செய்வது, பிரபு! அரண்மனையில்கூடத்தான் அப்படி. ஏகசக்கராதிபத்தியம் செய்த

மகா பெரியவர்களெல்லாம் இருக்குமிடம் தெரியாமல் போய்விடவில்லையா? '

ரகுநாதரின் முகம் இருண்டது. "என்னைக் கேலி செய்யுங்கள் தாராளமாய். இன்றோ நாளையோ போய்விடும் வயது எனக்கு. இருந்த வரையில் அனுபவித்தாகி விட்டது.போதும். உங்களுக்கு அப்படியில்லையே! இன்னும் எவ்வளவோ முன்னுக்கு வரவேண்டியவர் அல்லவா?’’

'வராமலா போவேன்!"

'கானல் நீர் என்ன என்பதை இன்றுதான் கண்டேன்!' எள்ளி நகையாடினார் ரகுநாதர். 'அந்தக் கிழட்டுப் பிரதம தளபதி ஒய்வெடுத்துக் கொண்டபோது அரசி உம்மையல்லவா அந்தப் பதவிக்கு உயர்த்தியிருக்க வேண்டும்? எப்போது அதைத் தூக்கி அன்னியன் கையில் கொடுத்தார்களோ, அன்றைக்கே உமது எதிர்காலத்தின் கடைசி அத்தியாயத்தை எழுதியாகி விட்டது!"

'தயவுசெய்து ராஜத் துரோகமான பேச்சுக்களை என் காதில் போடாதீர்கள், 'துணைத்தளபதி திரும்ப முற்பட்டார்.

'நீங்கள் உயிரோடு இருப்பதே தனக்கு ஆபத்து என்று தீர்மானித்துவிட்டான் அந்தக் காஞ்சிபுரத்தான்! வேடன் விரிக்கும் வலையில் மான்குட்டி விழுகிற மாதிரி அப்பாவி நீங்கள் சிக்குகிறீர்களே. அதை நினைத்தேன். பரிதாபமா யிருந்தது.'

துணைத்தளபதி நின்றார். "ஆதாரம்?"

'ஆதாரம், நாளை இரவு உங்களை அந்த ஜுல்பிகர்கான் முந்தும் போது கிடைக்கும். காஞ்சிபுரத்தான் என்னவோ செய்யப் போகிறான் என்று நீர் காத்திருக்க, ஔரங்கசீப்பின் படைகள் உமது சின்னஞ்சிறு படையின்மீது புயலாய்ப் பாய்ந்து சின்னாபின்னப்படுத்தப் போகிறதே, அப்போது கிடைக்கும் ஏராளமான ஆதாரம் நீங்கள் தப்பியோடி வந்தால் தீராத அவமானம்! துணைத் தலைவர்

பதவியிலிருந்து துரத்தியடிக்க, சுலபமான சாக்கு போர்க்களத்தில் மடிந்தீர்களோ, இன்னும் நல்லது.'

துணைத்தளபதி குழம்பி நின்றார். தக்க தருணம். ரகுநாதர் மேலும் முடுக்கிவிட்டார்.

'அவனுடைய சூழச்சியை முறியடிக்க ஒரே ஒரு வழி தான் உண்டு. '

'என்ன அது?'

'படையுடன் அங்கே போகாதிருப்பதுதான் பிறகு உமது விருப்பம். '

“என் கண்ணில்லையா? எடுத்துக்கொள். ஊம். சாப்பிடு. பார்க்கலாம். '

கீய் கீய் கீய். சிறகடித்துப் பறந்தது பச்சைக் கிளி. வெள்ளிக் கூண்டின் மறுபுறம் தொற்றிக் கொண்டு முகத்தைத் திருப்பிக் கொண்டது.

சுற்றிச் சென்றாள் சென்னம்மா. உள்ளங்கையை அகலப் பிரித்தாள். கொய்யாப்பழத்தைக் காட்டி மீண்டும் மன்றாடினாள். 'என் செல்லக் கிளி இல்லையா? எடுத்துக் கொள் என் கையிலிருந்து. கொத்து கொத்து!"

கீய் கீய். "மாட்டேன்! மாட்டேன்' என்று சொல்கிறதோ? கலகல வென்று சிரித்தாள் கட்டிலில் படுத்திருந்த தாமரை. படித்துக் கொண்டிருந்த கம்பராமாயணச் சுவடியை மூடினாள். பட்டு நூல் போட்டுப் பத்திரமாகக் கட்டினாள். எழுந்து வந்தாள். -

"பார் தாமரை, இது ரொம்பப் பொல்லாததாகி விட்டது. நான் பழம் கொடுத்தால் பிகு பண்ணிக் கொள்கிறது, ' புகார் செய்தாள் சென்னம்மா.

கிளியிடம் கேட்டாள் தாமரை: 'முத்து! அடியே பிடிவாதக்காரி! இப்படியெல்லாம் செய்யலாமா நீ?" சென்னம்மாவிடமிருந்து கொய்யாப்பழத்தை வாங்கிக் கொண்டாள். விண்டு, உள்ளங்கையில் வைத்துக் கொண்டாள். இரண்டிலே எது அதிகச் சிவப்பு? தாமரைக் கையா, கொய்யாத் துண்டமா? சொல்வது கடினம். 'இந்தா, எடுத்துக் கொள்.'

சடக் சடக்கென்று கொத்தியது பச்சைக் கிளி. 'ஸ் ஸ்! வலிக்கிறதடி, முத்து மெல்லக் கொத்து!" சிரித்தாள் தாமரை. 'இருந்தாலும் நீ பொல்லாதவளடி! நன்றி கெட்டவள் பாலும் பழமும் கொடுத்து அம்மா எத்தனை பாசத்துடன் வளர்த்தார்கள் அவரை மறந்து விட்டாய். நேற்று வந்த என்னிடமா நேசம் காட்டுவது?"

தாமரையின் கேசத்தைக் கோதினாள் சென்னம்மா. 'நான் தான் நேற்று வந்தவள், தாமரை. நீ எனக்கு முன்பே இந்தக் குடும்பத்துக்கு வந்தவளல்லவா? உன் நல்ல குணத்துக்கு நாடே அடிமைப்பட்டிருக்கிறது. இந்தக் கிளி என்ன, இன்னும் கொஞ்ச நாளில் பார். பூங்காவனத்துச் செடியும் கொடியும்கூட உனக்குக் கட்டுப்படும். உன் விருப்பப்படி பூக்கும், காய்க்கும்!" 'ஐயையோ, ஆண்டவன் பதவியல்லவா தருகிறீர்கள், அம்மா வேண்டாம், வேண்டாம்! தாமரையின் புருவங்கள் வளைந்தன. ஏறியிறங்கின. சாளரத்தின் வழியே வெளியே பார்த்தாள். மெல்லிய பெருமூச்சு வெளிப்பட்டது.

'வெற்றி வீரராகத் திரும்பி வருவார். பெருமூச்சு விடாதே" சென்னம்மா சொன்னதும் தாமரையின் முகத்தை நாணம் கப்பிக் கொண்டது.

"போங்கள் அம்மா. உங்களுக்கு எப்போதும் கேலிதான்."

'உண்மையை ஒப்புக்கொள். அந்தத் தளபதியிடம் உனக்கு... ?''

தாமரையின் தலை மேலும் குனிந்தது. காஞ்சிப் பட்டுச் சேலையின் நுனிகள் முறுகின மேலும் மேலும்.

'உன் காதல் நிறைவேற வாழ்த்துகிறேன், தாமரை' சென்னம்மாவின் குரல் சோகமாக ஒலித்தது.

திடுக்கிட்டுத் தலைநிமிர்ந்தாள் தாமரை. ‘‘என்னம்மா என்னவோ போல் சொல்கிறீர்கள்?"

'ஒன்றுமில்லை, தாமரை." சிறிதுநேரம் ஆழ்ந்த மௌனம். பிறகு தாமரை கேட்டாள்: 'ஏன் அம்மா, அரண்மனை கண்காணிப்புத் தூபியிலிருந்து பார்த்தால் போர்க்களம் தெரியாது?"

'அவ்வளவு கிட்டத்தில் இல்லை போர்க்களம். சாலையை வேண்டுமானால் பார்க்கலாம், வா. '

கைகோத்து நடந்தனர் பெண்கள் இருவரும். அரண்மனை வெளி முற்றத்தைத் தாண்டிச் சிறிது தொலைவு சென்றனர். ஸ்துபியினருகே நின்றிருந்த காவல் வீரன் வணங்கி வழி விட்டான்.

'பார்த்து வா, பழைய படிகள்' சென்னம்மா, தாமரையின் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

மேல்மாடத்தின் வெளியே தலைநீட்ட முடியவில்லை. அப்படியொரு பலமான காற்று.

சிலுப்பிக் கொண்டது கூந்தல். இரு கையாலும் அழுத்திக் கொண்டாள் தாமரை. கவனித்தாள் சாலையை. பச்சைப் பசேலென்று மரமும் தோப்புமே தெரிந்தன. அருகருகே சிறு சிறு குன்றுகள். அடர்ந்த காடுகள்.

"அதோ பார், சென்னைப் பட்டணத்திலிருந்து வரும் சாலை, சுட்டிக் காட்டினாள் சென்னம்மா. 'கரியினால் கோடு கிழித்த மாதிரி தெரியவில்லை? அது தான்...'

'நான் வந்த வழி இல்லையா அம்மா?" தாமரையின் பேச்சுத் தழுதழுத்தது. பிறகு திடீரெனச் சுறுசுறுத்தது. ‘‘அதோ, அது என்ன பாருங்கள்? நாலைந்து பேர் எதையோ இழுத்து வருகிறார்கள், சாலையில். '

உற்றுப் பார்த்தாள் சென்னம்மா, மசமசவென்றுதான் புலப்பட்டது.

'சென்னைப் பட்டணத்திலிருந்து வருகிறார்கள்... நான் கண்டிராத வாகனமாயிருக்கிறதே?'

மாடத்துக்கு நாலைந்து சாளரங்கள். ஒவ்வொன்றின் வழியேயும் தலை நீட்டிக் கவனித்தாள் தாமரை.

'அம்மா ஒன்று செய்யலாமா? தாமரையின் குரலில் ஒரு குறுகுறுப்பு. புது உற்சாகம். 'சாலைக்கே போய்ப் பார்த்தாலென்ன?"

"சரிதான். நீ பட்டணத்துப் பெண்ணாகவே இன்னும் இருக்கிறாய். பட்டத்து ராணி என்பதை மறக்காதே."

'விளையாட்டில்லை, அம்மா. நிஜமாகவே சொல்கிறேன். அறுபது நாழிகையும் அரண்மனையிலேயே அடைந்து கிடக்கிறேன், அலுப்பாயிருக்கிறது.'

‘‘தாமரை நம்மை ஜனங்கள் பார்த்தால் என்ன நினைப் பார்கள்? இரு, எனக்கு ஒரு யோசனை' சென்னம்மா கீழுதட்டைக் கடித்தாள். 'சரி, என்னோடு வா."

சென்னம்மா தன் திட்டத்தைச் சொல்லவில்லை. ஆனால் தாமரையின் குறும்புத்தனம் இப்போது அவளைத் தொற்றிக் கொண்டது. விளையாட்டுச் சிறுமிபோல் தாமரையைத் தன் அந்தப்புரத்துக்கு இழுத்துச் சென்றாள். கதவைத் தாளிட்டாள் உட்புறம்.

'இந்தா, அணிந்துகொள். நானும் அணிந்து கொள் கிறேன். '

சிப்பாயின் உடைகள்! விக்கித்து நின்றாள் தாமரை. 'அரசர் மாறுவேடத்துக்காக வைத்திருப்பவை. நமக்குப் பயன்படுகின்றன. சீக்கிரம் ஆகட்டும், தாமரை.'

சிரித்துக் கொண்டே தாமரை தன் சின்னம்மாவின் கட்டளைகளை நிறைவேற்றினாள்.

கண்ணாடியில் பார்த்துக் கொண்டபோது இருவருக்கும் நகைப்பு வந்தது.

'உங்களுக்கு மீசை பொருத்தமாகவே ஒட்டவில்லை அம்மா, ' சரிசெய்து கொடுத்தாள் தாமரை.

'உனக்குக் கூடத்தான் நெற்றிப் பொட்டு முற்றும் அழியவில்லை, தலைப்பாகைத் துணியினால் துடைத்தாள் சென்னம்மா.

சேடியொருத்தி மூலம் அந்தரங்கமாய்ச் சேதி அனுப்பப் பட்டது. அரண்மனைப் பின் வாசலில் புரவிகள் இரண்டு தயாராய் நின்றன.

சில வினாடிகள்தான். அடிவாரத்தை நோக்கிச் செல்லும் பாதையில் அவர்கள் இறங்கிக் கொண்டிருந்தார்கள்.

'தள்ளப்பா நன்றாய்த் தள்ளு.' 'பாதை இங்கே ரொம்ப மேடாயிருக்கிறதப்பா. நான் எவ்வளவு தள்ளியும் பயனில்லை."

'கும்பினித் துரை கூடவே வருகிறாரே கையை வீசிக் கொண்டு? அவரையும் கூப்பிட்டுக் கொள்ளேன் உதவிக்கு!"

"ஐயோ! அவர் பொல்லாதவரப்பா.' குதிரைமீது வந்துகொண்டிருந்த பரங்கி அதிகாரிக்கு ஓரளவு புரிந்தது. "என்னே-என்னா-சொல்றே? தள்ளணும்?"

"ஆமாம், துரை. நாங்க ஆறு பேர் இருந்தும் இந்தப் பீரங்கி வண்டியைத் தள்ள முடியவில்லை. பாதை ரொம்ப ஏற்றம். ' 'சரி சரி. அதோ-ரெண்டு - ஆள் வர்றான். கூட்டுக்கோ. ' இரண்டு

சிப்பாய்களும் குதிரையை நிறுத்தினார்கள். கீச்சுக் குரலில் ஒருவன் வினவினான்: ''என்ன இது வண்டி? எங்கே போகிறது?"

'சரிதான். சரியான நாட்டுப்புறம்' நகைத்தான் வந்தவர் களில் ஒருவன். 'ஏனய்யா, மன்மதன் மாதிரி சிப்பாய் உடை மாட்டிக் கொண்டு இருக்கிறீர்களே? பீரங்கி வண்டி பார்த்ததில்லை? வெடி மருந்து போட்டுக் குண்டு அடிக்குமே, அந்தப் பீரங்கி

"கேள்விப்பட்டிருக்கிறோம், பார்த்ததில்லை, ' இருவரும் அதைச் சுற்றிச் சுற்றி வந்தார்கள். ஆவென்று பிளந்திருக்கும் அதன் நீண்ட வாயைத் தொட்டுப் பார்த்தார்கள்.

பரங்கித் துரை குதிரையிலிருந்து இறங்கி வந்தார். 'சும்மா வேடிக்கை என்னா? தள்ளு, தள்ளு. '

ஏற்றமான பாதையை அடையும்வரை அவரும் தள்ளினார். சிப்பாய்களும் சேர்ந்து கொண்டார்கள். - கீச்சுக் குரல்காரன் கேட்டான், ஆட்களில் ஒருவனை. 'எங்கே போகிறது இந்தப் பீரங்கி?"

"தேவனாம்பட்டணத்தில், கும்பினியார் கோட்டைக்கு."

'யுத்தம் யாரோடு?"

நகைத்தான் மற்றவன். "யுத்தமில்லை. கோட்டையைச் சுற்றியுள்ள நிலத்தை வாங்குகிறார்கள். அதற்கு...'

'அதற்கு?'

''தேவனாம்பட்டணம் கோட்டைச் சுவர்மீது இதை வைத்து, குண்டு எறிவார்கள். குண்டு எவ்வளவு தூரத்தில் போய் விழுகிறதோ, அவ்வளவு வரையில் உள்ள பூமி கும்பினியாருக்குச் சொந்தம். செஞ்சி மன்னர் அந்த மாதிரி நிபந்தனைப்படி விற்றிருக்கிறார். '

''தேவலையே? அதற்காகவா இந்தப் பீரங்கி வண்டி?"

"ஆமாம். நிறையப் பூமி வேண்டுமென்றால் குண்டு அதிக தூரம் போக வேண்டுமே? அதற்காக, சென்னைப் பட்டணத்தி லிருந்து விசேடமாக இந்தப் பீரங்கியை அனுப்பியிருக்கிறார்கள்."

'ஊம்... ஊம். பேச்... நோ. தள்ளு. தள்ளு, ' பழக்கமில்லாத வேலை. பாவம். பரங்கிக்கு வியர்த்துக் கொட்டியது.

ஒரு வழியாய் ஏற்றத்தைக் கடந்தார்கள். பீரங்கி வண்டி எளிதாக உருளலாயிற்று.

'வந்தனம்... வந்தனம், ' வியர்வையைத் துடைத்தபடி சிரித்தார் துரை. "நீங்கோ... எந்த ஊர்?"

'சிங்காவரம். '

'சிங்காவரம்? ஓ... ' பரங்கித் துரை ஏனோ இடுப்பைத் தொட்டுக் கொண்டார். "ராஜா? இல்லே, ராணி?'

'முன்னே ராஜா. இப்போ ராணி. சிப்பாய்கள் விடை பெற்றுக் கொண்டார்கள். 'வருகிறோம். '

பீரங்கி வண்டி பார்வையிலிருந்து மறைந்தது. 'ஹாம்! அசல் சிங்காவரத்து ராணியே தன் பீரங்கி வண்டியைத் தள்ளினாள் என்று தெரிந்தால்... ' தாமரை மகிழ்ச்சியுடன் சிரித்தாள். 'பாவம், அந்தத் துரைக்கு மயக்கமே போட்டிருக்கும். '

சென்னம்மா அவள் சிரிப்பில் கலந்து கொள்ளவில்லை. ஏதோ யோசனை.

'என்ன அம்மா? '

'அரண்மனைக்கு நேரமாகிறது. உன் சிற்றப்பா தேட ஆரம்பித்துவிடுவார். வா, வா."

தயங்கி நின்றன தாமரையின் பூப் பாதங்கள். 'இது... இதுதான் நமது படைகள் செல்லும் வழியா, அம்மா?"

'இல்லை. அது வேறு பாதை. வா, வா."

வாயிலில் நுழைகையில் குறுக்கே வழி மறித்தது பாராக்காரனின் நீண்ட வேல்.

'யார் வந்தாலும் தடுத்து நிறுத்தும்படி உத்தரவு?"

'யார் உத்தரவு?'

"பெரியவருடையது - ரகுநாதருடையது."

"நாங்கள் சாதாரணச் சிப்பாயல்ல.'

"ஆமாம், ஆமாம். சிங்காவரத்து ராஜ குடும்பத்திலே பிறந்த அசாதாரணச் சிப்பாய்தான்" கேலிக் குரல் முழங்கியது.

ரகுநாதர் - அவர் பின்னே கிருஷ்ணப்பர். 'அப்பா விளையாட இது சமயமில்லை! அடேய் காவல் காரா வழியை விடப் போகிறாயா? அல்லது..." சென்னம்மா தன் தலைப்பாகையைத் தானே பறித்து வீசி எறிந்தாள்.

“மன்னிக்கனும், அம்மா மன்னிக்கணும்' காவல்காரன் செத்தேன் பிழைத்தேனென்று ஓட்டம் பிடித்தான்.

'நீ செய்தது கொஞ்சமும் நன்றாயில்லை, சென்னம்மா, ' கிருஷ்ணப்பர் கடுகடுத்தார்.

'அரசி நகர பரிசோதனைக்குச் செல்வதில்லையா? அந்த மாதிரி!'

'துணிச்சல் துணிச்சல்!'' ரகுநாதர் பல்லைக் கடித்தார். 'அரசியின் உயிருக்கு ஆபத்தல்லவா ஏற்பட்டிருக்கும்! நீ மட்டும் என் மகளாயில்லா விட்டால், காராகிருகத்தில் தள்ளியிருப்பேன்!'

சென்னம்மாவும் சீறினாள். 'நீங்கள் என் அப்பாவாக இல்லாதிருந்தால், தலையையே சீவியிருப்பேன்."

'ஏன், அரசியின் உயிருக்கு ஆபத்து வரவழைத்தேனா நான்? '

'அதைவிடக் கொடியது, அரசியின் ராஜ்யத்துக்குத் துரோகமிழைப்பது!"

தாமரை திகைப்புடன் அவளைப் பார்த்தாள். கிருஷ்ணப்பர் அருகில் வந்து, 'கோபத்தால் வசமிழக்காதே சென்னம்மா!' என்றார்.

'குற்றம் சாட்டுமுன் ஆதாரம் இருக்கவேண்டும், மகளே!' சவால் விட்டார் ரகுநாதர்.

"தாராளமாய் இருக்கிறது, ஆதாரம், ' இடுப்பிலிருந்து எதையோ எடுத்தாள் சென்னம்மா.

புயலெனப் பாய்ந்தார் ரகுநாதர். பறித்தார் அதை. கண் மூடிக் கண் திறக்கும் நேரம். மலைச் சரிவில், கிடுகிடு பாதாளத்தில் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்தது அது.

'மாமா என்ன அது? ஓலை போலல்லவா இருந்தது? என்ன எழுதியிருந்தீர்கள் அதில்? யாருக்கு?" தீப்பொறி பறந்தது கிருஷ்ணப்பரின் கண்களில்.

'ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை... அவள் பேச்சை நம்பாதீர்கள்... ' குழறிக் கொண்டே வெளியேறினார் ரகுநாதர்.

தாமரைக்குத் தாளமுடியாத பிரமிப்பு. 'நானும்தானே கூட வந்தேன்? எப்போது, எங்கே எடுத்தீர்கள் அந்த ஓலையை? என்ன இருந்தது அதில்?''

தந்தை சென்ற வழியை நோக்கி உறுமினாள் சென்னம்மா. 'சென்னைப் பட்டணத்திலிருந்து வந்த பரங்கித் துரையின் இடுப்பில் இருந்தது. யார் மூலமாகவோ இவர் அனுப்பியிருக்கிறார். நமது ராஜாங்க முத்திரை தென்பட்டதால் சட்டென உருவி விட்டேன். பட்டணத்துக் கும்பினியாருக்கு எழுதியிருக்கிறார்!'

'எப்போது அம்மா அதைப் படித்தீர்கள்? என்ன எழுதி யிருந்தார் அப்படி?"

'உடையைச் சரிப்படுத்திக் கொள்வதாகச் சொல்லி, ஒரு மாமரத்தின் பின்னால் நான் போகவில்லையா? அப்போது படித்தேன்,' விளக்கினாள் சென்னம்மா. 'செஞ்சி மன்னனைப் போல இவரும் சிங்காவரம் ராஜ்யத்துக்குச் சொந்தமான பூமியை விற்கத் தயாராயிருக்கிறாராம். இப்போதுள்ள ராணியை ஒழித்துவிட்டு, தானே பட்டத்துக்கு வர, கும்பினிக்காரன் சகாயம் செய்ய வேண்டுமாம்!"

''வேண்டாம் சிற்றப்பா,' பாயப்போன கிருஷ்ணப்பரைத் தடுத்தாள் தாமரை. 'பாவம் வயதானவர். ஏதோ ஆத்திரத்தினால் மதியிழந்து...'

சென்னம்மா இடைமறித்தாள். 'என் தந்தை என்பதற்காக இரக்கம் காட்டுகிறாயா, தாமரை தேவையில்லை. தேசத்தைப் பெரிதாக நினை. துரோகத்தை ஒரு போதும் மன்னிக்காதே."

மீண்டும் பாய்ந்தாள் தாமரை. "தீங்கற்றவர், அம்மா. ஆபத்து எதுவும் அவரால் நேராது."

'சரி. உன் சிபாரிசுக்காக இந்த முறை அவரை விடுகிறேன், ' என்றார் கிருஷ்ணப்பர். 'ஆனால், அவரை இனி கண்காணித்துக் கொண்டேயிருப்போம். இன்னொரு முறை அவர் இந்த மாதிரி சதி வேலைகளில் ஈடுபட்டாரானால், அதுதான் கடைசி முறையாக இருக்கும்.'

சென்னம்மாவும் ஆமோதித்தாள்: 'எனக்கும் அப்படித் தான் தோன்றுகிறது. பாம்புக்குப் பால் வார்ப்பதன் மறு பெயர்தான் அப்பாவை நம்மோடு வைத்துக் கொள்வது.'

அவர்கள் பேச்சு அத்துடன் நின்றது. வெளியே மறைந்திருந்த ரகுநாதர் மெல்ல நடந்தார், தம் இருப்பிடம் நோக்கி. குரோதத்தால்

மனம் கொதித்தது. ஏமாற்றத்தினால் எண்ணம் கசந்தது. அச்சத்தினால் அறிவு குழம்பியது.

'இவ்வளவு முற்றிவிட்டதா இனி நீங்களா நானா என்று பார்க்கவேண்டியதுதான் இரண்டு இடத்தில் அந்தக் காஞ்சிபுரத்தானுக்கு வேட்டு வைத்திருக்கிறேன். அதிலே ஒன்று வெடித்தாலும் போதுமே!'

கருநாகத்தின் கண்ணைப் போல மின்னின அவர் கொடுவிழிகள்.

ஒரு பகலும் ஓர் இரவும் கழிந்தன. மூன்று யானைகளுடன் இரண்டு பேர்கள் சளைக்காமல் நடந்தனர். உலர்ந்த சருகுகள் சரசரவென நொறுங்கின. எதிர்பாராத பள்ளங்களிலே விழுந்து எழுந்தான் காஞ்சிபுரத்தான்.

'இந்த ஓர் இரவுதான். இல்லையா சித்திரக்குள்ளா? இன்னும் கொஞ்சநேரத்தில் ஜூல்பிகர்கானின் பாசறையை அடைந்துவிடுவோம் இல்லையா?"

உற்சாகமாய்க் கேட்டான் காஞ்சிபுரத்தான். பதிலெதையும் காணோம்.

'காட்டிலே ஏதடா கொழுக்கட்டை? வாயைத் திறக்கா மலே இருக்கிறாயே?"

திரும்பிப் பார்த்தான். சித்திரக் குள்ளனாவது யானையாவது எந்தச் சுவடையும் காணோம்!

'சித்திரக்குள்ளா அடேய் சித்திரக்குள்ளா" தொண்டை வலு முழுவதையும் கூட்டிக் கூவினான் காஞ்சிபுரத்தான்.

எங்கிருந்தோ கேட்டது ஒரு கேலிச் சிரிப்பு. எங்கிருந்து? எங்கிருந்து?

## (20)

'சித்திரக்குள்ளா! அடே சித்திரக்குள்ளா! எங்கேயடா போனாய்?"

வாயினருகே கை குவித்துக் கூவினான் காஞ்சிபுரத்தான். 'இதோ இருக்கிறேன்!'' என்று பதில் குரல் கொடுத்தது குள்ளனல்ல, ஆகாயம்தான். மோசம் செய்து விட்டானே, வஞ்சகன்! திக்குத் திசை தெரியாத வனாந்தரத்திலே தவிக்க விடவா துணைக்கு வந்தான்?

சற்று முன்னால் தலைகாட்டிய இரண்டொரு தாரகைகள் யாரைக் கண்டு எங்கே ஒளிந்தன? நீலத்திரை விலக்கும் வெள்ளி மோகினிகளா அந்த மின்னல்கள்! ஆயிரம் சிங்கங்களா உறுமுகின்றன மேகத்தின் பின்னாலிருந்து!

சடசடவென்று மழை பிடித்துக் கொண்டது. அடர்த்தியான மரங்கள் கொஞ்ச நேரத்துக்குக் காஞ்சிபுரத்தானையும் அவனது மூன்று யானைகளையும் காத்தன. உச்சந்தலையில் ஒன்று. வலது தோளில் ஒன்று என்றபடிதான் மழைத்துளிகள் மேனியில் பட்டன. கொஞ்ச நேரம்தான். பிறகு சொரசொர வென்று வர்ஷிக்கத் தொடங்கியது மழை. குளிரினால் உடம்பு நடுங்கலாயிற்று.

யானைகள் மூன்றும் வெறியுடன் கூவின. கானகத்தையே குலுக்கியது அந்தப் பிளிறல்.

காஞ்சிபுரத்தான் நிதானித்தான். சற்றுத் தள்ளி ஒரு மலைப் பாறை இருப்பது தெரிந்தது. ஒதுங்கினான்.

யானைகள் அவனுடன் ஒண்டவில்லை. மழையில் நனையும் மகிழ்ச்சியுடன் தள்ளி நின்றன.

காஞ்சிபுரத்தான் யானையிடம் உரக்கப் பேசினான்: ''நாமெல்லாம் எப்படியாவது தப்பிவிடுவோம். பாவம் அந்தச் சித்திரக்குள்ளனை நினைத்தால்தான் பரிதாபமாக இருக்கிறது." 'ஏன்?' என்று கேட்பதுபோல் யானைகளின் செவிகள் அசைந்தாடின.

ஒரக் கண்ணால் அக்கம்பக்கம் பார்த்தான் காஞ்சிபுரத் தான். தொடர்ந்தான்:

"அந்தச் சித்திரக் குள்ளனின் மனைவியும் குழந்தைகளும் சரியானபடி சிக்கியிருக்கிறார்கள்- நான் நாளை சூரியோதயத்தின் போது ஜூல் பிகர்கானின் படையைக்குலைப் பதற்குப் போய்ச் சேர்வதாகத் திட்டம். அப்படி வராவிட்டால், வழியில் யாரோ சூழ்ச்சிக்காரனுக்கு இரையாகி விட்டேன் என்று பொருள். எனக்கு வழிகாட்டிய சித்திரக் குள்ளனின் மனைவி மக்கள் தலையைச் சீவிவிட வேண்டுமென்று ரகசியக் கட்டளை...'

'ஐயா என்னை மன்னியுங்கள். தெரியாத்தனமாய்ச் செய்துவிட்டேன்' ஓடிவந்து காஞ்சிபுரத்தானின் காலில் விழுந்தான் சித்திரக் குள்ளன். நின்றிருந்த மழை அவன் கண்ணுக்குள் புகுந்து கொண்டதோ? அப்படியொரு கண்ணிர் வெள்ளம்!

"எழுந்திரு, எழுந்திரு, ' அவனை அன்போடு எழுப்பினான் காஞ்சிபுரத்தான். 'நாளை சூரியோதயத்துக்குள் எப்பாடு பட்டாவது ஜூல்பிகர்கானின் படையை நாம் அடைந்து விடுவோம். அடைந்துவிட்டால், உன் குடும்பத்துக்கு ஓர் ஆபத்தும் நேராது.'

'சீக்கிரம், சீக்கிரம் ஏறிக் கொள்ளுங்கள் யானை மீது! அந்தக் கிழவர் ரகுநாதரின் பேச்சைக் கேட்டு, உங்களுக்குக் கெடுதல் செய்ய நினைத்தேன்...'

காஞ்சிபுரத்தான் தனக்குள் ஏனோ சிரித்துக் கொண்டான். யானையொன்றில் ஏறி அமர்ந்தான்.

தலைகளை இடிக்கும்படி தாழ்ந்திருந்தன மரக்கிளைகள். முன்னால் சென்ற சித்திரக்குள்ளன், கையிலிருந்த அரிவாளினால் அவைகளை வெட்டிக் கொண்டே போனான்.

'இதுதான் வேட்டவலம் காடு... செஞ்சிக் கோட்டைக்குள் செல்லும் 'சைத்தான் வாசல் இங்கே இருக்கிறது...'

"கொஞ்சம் இறங்கு' என்றான் காஞ்சிபுரத்தான். தானும் இறங்கினான்.

'இரும்புச் சங்கிலிகளைக் கீழே தள்ளு. ஒவ்வொரு யானையும் ஒவ்வொன்றைத் துதிக்கையில் எடுத்துக் கொள்ளட்டும். '

'எடுத்துக் கொண்டு?"

'சொன்னதைச் செய்!'' உறுமினான் காஞ்சிபுரத்தான். அவனுடைய விளையாட்டுச் சுபாவம் விடைபெற்றுக் கொண்டு விட்டது. உறுதி! கடுமை! கருமை! அவையே அவன் முகத்தில் முத்திரை அடித்தன.

கொட்டி முழக்கியது வானம்; வெட்டிப் பறித்தது மின்னல். மழை மழை மழை கோட்டை கொத்தளம், காடு மேடு, மலை பள்ளம்-எல்லாம் ஒன்றாக இணைந்தன நீர்த் திரைக்குள்.

செஞ்சிக் கோட்டைக்குள்ளே துவண்டு கொண்டிருந்தது ஆட்சி, துருப்பிடித்த இரும்பாக. சோர்வு, அதன் மூச்சு; அச்சம், அதன் ரத்தம்; குழப்பம், அதன் அறிவு.

அரச குடும்பத்தில் தூங்குவாரே கிடையாது; தூங்கினால் தெரிவது ஒரே உருவம்தான்; கோட்டையை முற்றுகையிட்டுள்ள ஜுல்பிகர்கான்.

ராஜகிரியில், அந்தப்புரத்துக்கு அருகிலிருந்த கல்யாண மகால்; உயர்ந்த மாடத்தின் வழியே ஐந்து ஜோடிக் கண்கள் கவலையுடன் நோக்கியவாறிருந்தன. தொலைவிலே மழையிருட்டில் மூழ்கியிருந்தது வேட்டவலம் காடு. பளிரென்று மின்னும்போது, அங்கே பேயென வெளித் தெரிந்தன பச்சை மரங்கள்.

பெண்ணின் உள்ளம்போல் ஆழம் காண முடியாத காட்டின் முனை. அதில், சைத்தான் வாசல் என்ற ரகசிய வாசல். மழையையும் மீறி நடுநடுவே மினுமினுக்கும் இரண்டொரு தீப்பந்தங்கள்.

"ஏதாவது தெரிகிறதா? யாரும் வருகிறார்களா?' சத்ரபதி ராஜாராமின் குரல் ஒடுங்கியும் கண் இடுங்கியும் இருந்தன. கருங்கல் தரையில் சொரேரென்று கொட்டும் மழையின் இரைச்சலில் மன்னன் பேச்சு மங்கியது.

அஷ்டப் பிரதானிகள் எட்டுப் பேரில், நாலு பேர் அங்கே இருந்தார்கள். உடனே பதில் கூறத்தான் யாருமில்லை.

பெருமழையின் தாண்டவத்தில் புதைந்திருந்தது அவர்கள் பார்வை.

பெருமூச்சு விட்டார் பேஷ்வா நீலமொரேஷ்வர். 'உங்கள் சகோதரி கணவர், அன்று விதைத்தார். அறுவடை இன்று நடக்கிறது. இதற்கு யாரென்ன செய்ய முடியும்? அவருடைய தளபதிகள் அன்று காஞ்சிபுரத்தைச் சூறையாடினார்கள். கோபால் பண்டிதரும் விட்டல் பிள்ளையும் விளையாடிய திருவிளையாடல்கள் எத்தனை? காஞ்சி நகரிலிருந்து சென்னைப் பட்டணத்துக்கு ஓட்டம் பிடித்த கிழவர்களுக்கும் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் கணக்கு உண்டா, வழக்கு உண்டா? அந்தப் பாவம்...'

நிதியமைச்சருக்கு வேறு கவலை. 'கும்பினியாரிடம் நூறு பீப்பாய் வெடி மருந்தும், இரண்டாயிரத்தைந்து பீரங்கிக் குண்டுகளும் கேட்டிருந்தோமே, ஏன் பதில் வரவில்லை?"

'எப்படி வரும்?' கசப்புடன் சிரித்தார் அயல்நாட்டு அமைச்சரான மாதாஜி சுதாதர். 'கும்பினியாருக்குக் குனிமேடு விற்ற விஷயத்தில் நாம் நியாயமாக நடந்து கொண்டோமா? கொதித்துக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள். மஞ்சக்குப்பம் கிராமத்தை அவர்களுக்கும் விற்று, டச்சுக்காரர்களுக்கும் விற்றிருக்கிறோமாம்! மோசடி என்கிறார்கள். திரும்பிய திசையெல்லாம் எதிரிகள்தான் நமக்கு!'

ஆத்திரமாகக் கூச்சலிட்டான் மன்னன் ராஜாராம். ‘‘எனக்கா நண்பரில்லை? திருவண்ணாமலை வாசலுக்கு ஆளனுப்பி விசாரியுங்கள்; தஞ்சை அரசரிடமிருந்து எந்த வினாடியும் நமக்கு உதவி வரும்'

'திருவண்ணாமலை வாசலில் பாதுகாப்புப் போதாது. சைத்தான் வாசல் ஒன்றுதான் நமக்கு வெளியுலகத்துடன் உள்ள ஒரே தொடர்பு. அதுகூட எந்த நிமிடமும் எதிரியின் கையில் விழுந்து விடலாம்...'

'ஒற்றனொருவனை அனுப்பியிருக்கிறேன், எதிரியின் நிலைமையைத் தெரிந்து வர. இதோ அவன்!" என்று நிதி யமைச்சர் சொல்கையில்

வேகமாக உள்ளே புகுந்தான் ஒரு படைவீரன். மண்டி யிட்டுத் தெரிவித்தான்: - 'ஔரங்கசீப்பின் மகன் காம்பக் ஷையும் அவன் குடும்பத்தாரையும் கூடாரத்தை விட்டு வெளியே வர முடியாத படி காவல் வைத்திருக்கிறானாம் ஜுல்பிகர்கான்! பாதுஷாவுக்கு விஷயம் தெரிந்தால் என்ன கதி ஆகுமோ என்று ஜுல்பிகர்கானின் தகப்பன் அசத்கான் குலைநடுங்கிக் கொண் டிருக்கிறான்!' -

'சபாஷ் சபாஷ்! குழந்தைபோல் குதூகலித்தான் ராஜாராம் - எல்லா ஆபத்துக்களும் அந்தக் கணமே நீங்கிவிட்ட மாதிரி.

ஒற்றன் தொடர்ந்தான்: ‘‘ஒற்றுமைதான் போதாதே தவிர, படை விஷயத்தில் பலசாலியாயிருக்கிறான் எதிரி. மேற்கொண்டு பல படைகள் வரப்போவதாகப் பேசிக் கொள்கிறார்கள். '

'சரி, நீ போ", கையை வீசினார் பேஷ்வா. பிரதம நீதிபதியின் பேச்சில் சோகம் தொனித்தது: "அந்தப்புரத்துப் பெண்களைத் தீக்குளிப்பதற்குத் தயார்ப் படுத்துங்கள் முதலில். இன்று கடைசித் தடவையாக ஒரு தாக்குதல் நடத்துவோம். '

"தீக்குளிப்பா? வெற்றி வீரர்களாகத் திரும்பி, பத்தினிகளின் நெற்றியில் முத்தமிடுவோம்! சந்தேகமில்லை. '

அயல்நாட்டு அமைச்சர் சொன்னார்: 'ஏன், வேட்டவலம் காட்டு வழியாகத் தஞ்சாவூருக்கு நம் மாதர்களையெல்லாம் அனுப்பிவிட்டால்? தஞ்சை மன்னர் ஏகோஜி பார்த்துக் கொள்ள மாட்டாரா?''

'பார்த்துக் கொள்வார் - இவர்கள் உயிருடன் அங்கே சென்றால் என்றான் ஓர் துணைத்தளபதி. "முக்கியமான எல்லா வெளியூர்ப் பாதைகளிலும் அவர்கள் திரிந்து கொண்டிருக்கிறார்கள். துருக்கர் கையில் நமது ஸ்திரீகள் பிடிபட்டு, மானமழிய வேண்டுமென்று விருப்பமானால் தாராளமாய் வெளியே அனுப்புங்கள்!"

மஞ்சத்திலிருந்த திண்டுகளை ஓங்கிக் குத்தினான் மன்னன்: "ஆகா! என்னென்ன எதிர்பார்த்தோம்! எப்படியெப்படி மாறிவிட்டது. இப்போது மட்டும் யாருடைய உதவியாவது நமக்குக் கிடைத்தால்... நிமாஜி! அங்கே பாருங்கள்! அங்கே பாருங்கள் சைத்தான் வாசலில் வேட்டவலம் காட்டு வழியாக யாரோ வருவது தெரியவில்லை? மின்னல் அடிக்கும் போது கவனியுங்கள்! அதோ...'

முண்டி மோதிக்கொண்டு ஒரே மாடத்தில் தலை நீட்டினார்கள் நாலு பிரதிநிதிகளும்.

"என்ன அது? குதிரையா? இல்லை! யானை போலல்லவா இருக்கிறது?''

மன்னன் ராஜாராமுக்கு ஆனந்த வெறி. 'நமக்குத்தான் உதவி நமக்காகத்தான் வருகிறார்கள்!'

'இல்லை இல்லை. சைத்தான் வாசல் வழியாகக் கோட்டைக்குள் வரவில்லை!" என்றார் பேஷ்வா. "இருங்கள்! இன்னொரு மின்னல் வெட்டினால் பார்த்துச் சொல்கிறேன்... ஆமாம்! வாசலைத் தாண்டிக் கொண்டல்லவா போகிறது யானை அடடா கோட்டைச் சுவரோரமாகப் போனால் ஜூல்பிகர்கானிடமல்லவா சிக்குவான்? ஒருவனா, இருவரா, பல பேரா? இந்த மழையில்...'

'வந்தவர் நிச்சயம் நம் நண்பர்தான்! அந்த யானை மெதுவே செல்லவில்லை! பாய்கிறது வெறிபிடித்த மாதிரி!'

'போயே பார்த்து விடுவோம்! மன்னர் ராஜாராமுக்குத் திடீரெனச் சுறுசுறுப்புப் பிறந்தது. நரம்புகளில் புது ரத்தம்.

அந்த உற்சாகம் அனைவரையும் தொற்றியது.

மழைக்கு ஏது பட்சபாதம்?

ஜுல்பிகர்கானின் பாசறையிலும் இயன்ற சேதத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. மாதக்கணக்காகப் போடப் பட்டிருந்த கூடாரங்களில் கணக்கற்ற பொத்தல்கள். அவற்றின் வழியே பிரவேசித்த மழை, வீரர்களையும் நனைத்தது; அரும்பாடுபட்டுச் சேர்த்து வைத்திருந்த பண்டங்களையும் கரைத்தது. கூடாரங்களை அடித்திருந்த முளைகள், சொதசொதத்த மண்ணில் ஆட்டம் கண்டன.

முகம்மதியத் தரப்பின் முக்கியத் தளபதிகள், மூன்று நான்கு மைல்களுக்கு ஒரு பிரிவு என்று விட்டுவிட்டுப் பாசறை அமைத்துக் கொண்டிருந்தனர். ஒவ்வொன்றையும் சுற்றித் தனித்தனி மதில் சுவர்கள். சுவர்களின் பாதுகாப்பில் சுகம் காணும் கூடாரங்கள்.

அரைப் போதையில் ஆழ்ந்திருந்தான் ஜுல்பிகர்கான். குரூர விழிகளில் ரத்தத்தின் சிவப்பு செம்பட்டைக் குறுந் தாடியில், முரட்டுத்தனத்தின் சிலிர்ப்பு! விம்மிப் புடைத்த தோளிலும், புஜங்களிலும் வீரத்தையே விளையாட்டாகக் கொண்டுவிட்ட பெருமை!

'ஹுசூர் பாழ்! பாழ்! எல்லாம் பாழ்!'' துணைத்தலைவர்களில் ஒருவனான பதுல்லாகான் துரானி ஓட்டமாய் ஓடி வந்தான். சலாமிட்டு நிமிர்ந்தபோது மழைத்துளிகள் தெறித்தன கவசங்களிலிருந்து. 'பரங்கிக்காரர்களும் மராத்திக்காரர்களும் சேர்ந்து, நமக்கு உணவுப் பண்டங்கள் வரும் பாதையை வெட்டி விட்டிருந்த

போதிலும் நான் மனம் தளராமல், சுற்று வட்டாரங்களில் வசூலித்து எவ்வளவு பண்டங்கள் சேகரித்திருந்தேன் மழையிலே எல்லாம் மிதக்கின்றன, ஹுசூர்! அவ்வளவும் பாழ்!'

'முட்டாள்..." பல்லைக் கடித்துக் கொண்டு எழுந்தான் ஜுல்பிகர்கான். என்ன நெடிய ஆகிருதி! கூடாரத்தின் உச்சி வரை சென்றது அவன் தலை. ''உணவு! உணவு! வயிற்றைத் தவிர வேறெந்த உறுப்புக்கும் வேலை கொடுப்பதில்லையே நீங்கள் கொடுத்திருந்தால் இந்தச் சுண்டைக்காய் செஞ்சி, இப்படியா அலைக்கழிக்கும் நம்மை தூ தூ! போ வெளியே'.

தளபதி தன் வசத்தில் இல்லை. டெக்கானிக்குப் புரிந்தது. அவன் என்ன சொல்ல வாயெடுத்தானோ? மீண்டும் ஜுல் பிகர்கானின் ஆணை குறுக்கிட்டது: "நிற்காதே என் முன்னால். வெட்டியாக நமக்குப் பெய்கிற மழை செஞ்சிக்கும்தான் பெய்யும் அவனும்தான் திண்டாடிக் கொண்டிருப்பான்! எங்கே நம்முடைய பீரங்கி ஆட்கள்? கூப்பிட்டு, கோட்டையை நோக்கிக் குண்டு எறியச் சொல்லுங்கள்!"

திடீரென்று வாசல்புறம் புதிய குரல்: "வெடி மருந்துக்கு நெருப்பு வைக்க ஆளுக்கு எங்கே போவது?"

'வஸிர்' என்று பயபக்தியுடன் முணுமுணுத்தது டெக்கானியின் உதடு. ஆம். வந்தவர், ஜுல்பிகர்கானின் தந்தையும், பாதுஷா ஒளரங்கசீப்பின் பிரதம மந்திரியுமான அஸத்கான்தான்.

தந்தையைக் கண்டதும் மகனின் போதை சற்றுத் தெளிந்தது. அவர் சொன்ன தகவல் அவன் அச்சத்தைத் தூண்டியது. 'ஏன்? நமது பீரங்கி ஆட்களுக்கு என்ன நேர்ந்தது, தந்தையே?''

'பீரங்கி ஆட்கள் அதோ போகிறார்கள் நீயே உன் கண்ணால் பாரேன்!''

ஜுல்பிகர்கான், கூடாரத்திற்கு வெளியே வந்தான்; பார்த்தான்.

கொட்டும் மழையைப் பொருட்படுத்தாமல், கூட்டமொன்று போய்க் கொண்டிருந்தது. ஒவ்வொருவரின் கையிலும் மூட்டைகள், படுக்கைகள், தட்டுமுட்டுப் பொருள்கள்!

'நில்லுங்கள்! நில்லுங்கள்!' கத்தினான் பாதுஷாவின் தளபதி. "எங்கே போகிறீர்கள் எல்லோரும்!"

எவனும் நிற்கவில்லை. போய்க்கொண்டே பதில் கொடுத்தான் ஒருவன். 'ஹுசூர் பட்டினி கிடக்க எங்களால் முடியாது! வந்தவாசிக்குப் போனால் நல்ல சோறும், வேறு வேலையும் கிடைக்குமாம். அங்கே போகிறோம்!'

''வேண்டாம்; போகாதீர்கள் இரண்டொரு நாள் பொறுங்கள்!' மழையின் குறுக்கே ஓடி, மன்றாடினான் ஜுல்பிகர்கான். "கடப்பை நகரத்தின் வழியாக வந்து கொண் டிருக்கிறார் சையது லஸ்கர்கான் சக்கரவர்த்தியிடமிருந்து ஏராளமான பணமும் பண்டமும் படைக் கருவிகளும் வந்து கொண்டிருக்கின்றன! பொறுங்கள்...'

'உங்கள் பேச்சை நாங்கள் நம்பத் தயாராயில்லை!" பீரங்கி வீரர்கள் நிற்காமல் சென்ற வண்ணமாயிருந்தார்கள்.

ஜுல்பிகர்கானின் மீசை துடித்தது. "அடேய் பிச்சைக்காரர்களே" கத்தினான் அவன். 'இந்தச் செஞ்சிக்காரனின் முதுகை ஒடித்த பின்னர், சிங்காவரத்துக்குச் செல்ல நினைத்திருந்தேனே! புதிதாக வந்திருக்கிறாளாம் ஒரு பட்டத்து ராணி பேரரசனின் பாதுகைக்கு வரவேற்புத் தராமல் அவமதித்து அனுப்பியிருக்கிறாளே, அவள் கொட்டத்தை அடக்க வேண்டாமா?"

ஜுல்பிகர்கானின் தந்தை நிராசையுடன் இடைமறித்தார். 'இவர்களிடம் பேசிப் பயனில்லை!"

ஆவேசம் ஏற்பட்டது ஜுல்பிகர்கானுக்கு. "கேட்டீர்களா தோழர்களே, ஒன்றுக்கும் உதவாத சோற்றுப் பிண்டமென்று உங்களைச் சொல்லிவிட்டார் வஸிர் இல்லையென்று நிரூபிப்போம்.

பரந்த ஹிந்துஸ்தானம் முழுமையையும் பாதுஷாவின் குடைக்கீழ் கொண்டு வரவே நாம் புறப்பட்டோம்! அந்த லட்சியம் நிறைவேறாமல், ஓரடியும் பின் வாங்குவதில்லை என்று சூளுரைப்போம்!'

கிளம்பிய வீரர்களில் சிலரின் கால்கள் தயங்கின. இதுவே தருணம்!

'இதுவரை நாம் கடந்து வந்த பிரதேசங்களை எண்ணிப் பாருங்கள் ரெய்ச்சூர், கர்னூல், நந்தியால், கடப்பை, கரம்கொண்டா - ஓரிடத்திலாவது மாற்றானை மண்டியிட வைக்காமலா கர்நாடகத்தில் கால் வைத்தோம்! இந்தச் சின்னஞ்சிறு செஞ்சி நமது வீரத்துக்கு ஒரு சவால்! நில்லுங்கள் திரும்புங்கள்!" 'வாழ்க! வாழ்க!' படைவீரர்களின் போக்கில் திடீர் மாற்றம் 'வாழ்க தளபதி ஜுல்பிகர்கான்'

வஸிர் அசத்கானின் முகத்திலே புன்னகை பரந்தது. 'மகனே! நீயல்லவா தலைவன்! நீயல்லவா...?"

பேச்சு, பாதியில் நின்றது. "என்ன அங்கே? ஏன் அவர்கள் ஓடிவருகிறார்கள்?"

திடுக்கிட்டான் ஜுல்பிகர்கான். இளவரசன் காம்பக்ஷின் கூடாரத்துக்குக் காவல் போட்டிருந்த தளபதி ராவும் அவன் படையினருமல்லவா தலை தெறிக்க ஓடி வருகிறார்கள். அவர்களுக்குப் பின்னால்? கோட்டையின் வடக்கு, வடமேற்கு வாசல்களில் நிறுத்தப் பட்டிருந்த காகர்கான் சாப்ரஸ்கான், டெக்கானி, மான்சிங், ராதார்!

'ஓடுங்கள் தளபதி அவர்களே உயிரைக் காத்துக் கொள்ளும் விருப்பமிருந்தால் பிடியுங்கள் ஓட்டம்."

'என்ன? என்ன நேரிட்டது?" 'சைத்தான்! யானை உருவத்தில் மூன்று சைத்தான்கள்! அவர்களின் மீது ஏறிவரும் இரண்டு மனித

சைத்தான்கள்! வேட்டவலம் காட்டுக்குள்ளிருந்து திடீரென்று வந்து தாக்குகிறார்கள்!"

"சீ சீ வெறும் யானைகளிடமா இப்படி அஞ்சுகிறீர்கள்?" 'வெறும் யானையல்ல, ஹு-சூர் ஒவ்வொன்றின் துதிக்கையிலும் நீண்ட, கனமான சங்கிலிகள் சிலம்பம் ஆடுவது போல் அதைச் சுழற்றிச் சுழற்றி வீசுகிறது! கிட்ட நெருங்க முடியவில்லை!"

ஆம்! ஆம்! மூன்று யானைகளும் மூன்று கூற்றுவர் விர் விர் விர்! புயலெனச் சுழல்கின்றன. அவற்றின் துதிக்கைகள்! சங்கிலிகள் மூன்றும் ஒன்றோடொன்று மோதிக் கலகலக்கின்றன!

ஜூல்பிகர்கான் கத்தினான்: 'மூளையில்லாத முட்டாள்களே! இதற்கா அஞ்சினர்கள்? கோட்டையின் நாற்புறமும் நாம் இருக்கிறோம்! இந்த 'யானைகளைப் பின்பக்கமாக வந்து தாக்கச் சொல்லுங்கள்! சீக்கிரம்!"

## (21)

மாடுகள் மிதித்த மண் புற்று! வானரங்கள் புகுந்த பூந்தோட்டம்! வெள்ளத்தில் அகப்பட்ட மான் கூட்டம்!

சிதறு, நொறுக்கு, தூளாக்கு... பின்னங்கால் பிடரியில் பட, பிடி ஓட்டம்!

புயலைப்போல், பூகம்பத்தைப்போல், பொங்கும் பிரளயத்தைப்போல் மதர்த்துத் திமிறிப் பாயும் யானையின் மீது வீற்றிருந்த காஞ்சிபுரத்தான் நெஞ்செல்லாம் ஆனந்தம். பெருமிதத்தினால் விம்மியது மார்பு. கலகலா! சடசடா சுழல்கிறது. சுழல்கிறது. சுழல்கிறது - அவன் அழைத்து வந்த யானைகளின் சங்கிலிகள் காலிலே, மார்பிலே, முதுகிலே, தலையிலே அடி வாங்கி

அடி வாங்கி நொடித்து விழும் எதிரியின் படையினரைக் காணக் காணக் கும்மாளம் குமிழ்க்கிறது!

'சித்திரக் குள்ளா! பார்த்தாயா?" என்று கூவினான் பின்னால் திரும்பி.

'பிரமாதம் பிரமாதம்" சித்திரக் குள்ளன் யானையின் மத்தகத்தின்மீது நின்றான். கத்திரிக்காய்க் கைகளை ஆட்டினான் குதூகலத்துடன். 'உங்கள் தந்திரம் யாருக்கும் வராது!"

'குனி குனி!' கத்தினான் காஞ்சிபுரத்தான். விஸ் விஸ்! வேல்களும் கணைகளும் ஈட்டிகளும் பறந்து வந்தன. சதையைக் கிழித்திருக்கும், மயிரிழை நகர்ந்திருந் தாலும்.

ஜூல்பிகர்கானின் படைகள் பின்வாங்கப் பின்வாங்க, காஞ்சிபுரத்தானின் மூன்று யானைகளும் முன்னேறின.

மத்தகஜத்தின் மத்தகத்தோடு குப்புறக் கவிழ்ந்து கொண்டான் காஞ்சிபுரத்தான். சிரித்துக்கொண்டே உரக்கத் தெரிவித்தான் சித்திரக் குள்ளனிடம்: 'இந்தத் தந்திரத்தை எங்கே கற்றுக்கொண்டேன் என்று நினைக்கிறாய்? ஒரு சிறுவனிடம்தான்!'

"என்ன? மெய்யா - அம்மாடியோவ்!" செவியை உரசிக் கொண்டு சென்ற வேல் ஒன்றிடமிருந்து தப்பினான் சித்திரக் குள்ளன். "மெய்யாகவா? எப்போது?"

'வீசு! சுழற்று!" தன் யானையைத் தட்டிக் கொடுத்தவாறே பதிலளித்தான் காஞ்சிபுரத்தான். சூழ்நிலையின் ஓசைகளுக்கு மேலாகக் கூவிக் கூவி, தொண்டை கட்டிவிட்டது அவனுக்கு. "ரொம்பச் சின்னப் பையன் அவன். ஆனால் அபார மூளை. கழுகுகள் கிட்டே வராமலிருக்க, கல்லைக் கட்டி இதேபோல் சுழற்றினான். அதிலிருந்துதான் நான்...'

கைதட்டினான் உற்சாகமாக, சித்திரக்குள்ளன். 'அவனுக்கும் வெற்றி நமக்கும்...' அவன் குரல் திடீரென மாறியது. பீதி தொனித்தது எதிர்பாராத விதமாக, 'அங்கே பாருங்கள்! பின்னால்! பின்னால்!'

இருள் பிரிந்து கொண்டிருந்த நேரம். அந்த வெளிச்சத்தில் தொலைவில் தெரிந்தது ஈசல்போல் ஒரு சிறு கூட்டம். வினாடிக்கு வினாடி பெரிதாயிற்று. தூள் பறக்க, புழுதியெழ, துடித்துவரும் கூட்டத்தைக் கண்டதும்

'ஜூல்பிகர்கான்' வியந்து ஒலித்தது காஞ்சிபுரத்தானின் குரல். 'கோட்டையைச் சுற்றிக்கொண்டு நம் பின்னால் வந்துவிட்டானே!"

'முன்னால் முன்னால், பாருங்கள்!' என்று கத்தினான் சித்திரக் குள்ளன் அச்சத்துடன். 'ஓடியவர்களும் திரும்பி வருகிறார்கள் இரண்டு படைக்கும் நடுவே நாம் சிக்கியிருக் கிறோம். '

'பயப்படாதே!" வாயால் சொல்லி விட்டான் காஞ்சி புரத்தான். ஒவ்வோர் கண் இமைப்புக்கும் தாவித் தாவி முன்னேறி வந்தன ஜூல்பிகர்கானின் இரண்டு பிரிவுகளும்.

'பயப்படாதே!' என்றான் மீண்டும் காஞ்சிபுரத்தான். 'நாம் ஒன்றியாயிருக்கவில்லை. என் துணைத்தளபதி வந்து விடுவார்'

வெகுதொலைவில் தெரிந்த சிங்காவரம் குன்றுகளை ஆராய்ந்தன அவன் கண்கள். தேடின, துழாவின, களைத்தன. குன்றின் உச்சியிலிருந்த ஸ்தூபியின் சிவப்பு விளக்கு ஏற்றப்பட்டிருக்க வேண்டுமே? துணைத்தளபதி புறப்பட்டு விட்டார். வந்து கொண்டிருக்கிறார் என்பதற்கு அதுவல்லவா அடையாளம்! ஏன் எந்த அறிவிப்பும் தெரிவிக்கவில்லை? துரோகம் செய்துவிட்டானா, அந்தத் துணைத்தளபதி? வஞ்சித்து விட்டானா, காஞ்சிபுரத்தானை? ஏன்? ஏன்?

நினைக்கவும் நேரமில்லை இனி. சித்திரக் குள்ளனின் யானையை ஒரு பக்கமும் தன் யானையை இன்னொரு பக்கமுமாகத்

திருப்பினான். மூன்றாவது யானையைத் தேவைப்படும் இடத்துக்குச் செல்லத் தயாராக நிறுத்தினான். இரண்டு யானைகளும் சங்கிலிகளை இன்னும் வேகமாகச் சுழற்றச் செய்தான்.

மழைக்காக இதுவரை ஒய்ந்திருந்தன ஜூல்பிகர்கானின் பீரங்கிகள். இப்போது அவையும் ஒவ்வொன்றாய்த் தீ கக்கத் தொடங்கின. எந்த வினாடியும் ஒரு குண்டு அவர்கள் இருவரையும் சாய்க்கவிருந்த சமயம்...

"அண்ணே நம்மைக் கடவுள் காப்பாற்றிவிட்டார். அங்கே பாருங்கள்! இன்னொரு படை' குதூகலித்தான் சித்திரக்குள்ளன். 'நமது படைதான்! என் துணைத் தளபதிதான்!" உற்சாகமாகச் சொன்ன காஞ்சிபுரத்தான், நிதானித்தான். 'இது நமது படையா? இல்லை, இல்லை. கொடி தெரிகிறதே. செஞ்சி மன்னரின் படைகள். காஞ்சிபுரத்தானுக்குப் புரிந்துவிட்டது. தான் தாக்குவதை அறிந்து கொண்டதும், கோட்டைக்குள்ளிருந்த செஞ்சி மன்னருக்குத் தைரியம் பிறந்துவிட்டது. துணிந்து விட்டார், தானும் தாக்குவதென்று கோட்டைக்குள்ளேயே படைகளைக் குவித்து வைத்திருந்தவர், வாசலைத் திறந்து கொண்டு வெளியே வந்துவிட்டார்!

தோற்றுப்போன ஆவேசம் எதிர்பாராத தாக்குதல்களினால் மூளைக் கலக்கம்! இல்லாவிட்டால், ஒடிக் கொண் டிருந்த ஜூல் பிகர்கானின் வீரர்கள் அப்படிப் பாழ்படுத்தியிருக்க மாட்டார்கள் பீரங்கிக் குண்டுகளையும் வெடிமருந்துகளையும். இலக்கு இல்லாமல் ஆலங்கட்டி மழைபோல எங்கெங்கோ சிதறின குண்டுகள். கையிருப்புத் தீர்ந்ததுதான் கை கண்ட பலன்!

காஞ்சிபுரத்தானின் யானைப் படையும், ராஜாராமின் சேனையும் சந்தித்தபோது எதிரில் இருக்கவில்லை எந்த எதிரியும்! 'ஓடுங்களடா?' என்று சிரித்தான் காஞ்சிபுரத்தான். சித்திரக் குள்ளன் கூவினான்: 'போவதுதான் போகிறீர்கள்! சென்னைப்பட்டணத்துக்குப்

போங்கள். ஓடிவரும் பிச்சைக்காரர்களுக்காகக் கும்பினிக்காரன் கஞ்சித்தொட்டி திறந்து வைத்திருக்கிறானாம்! அங்கே போங்கள்!"

காஞ்சிபுரத்தான் யானையினின்றும் இறங்கி வந்தான். சாவுக்கிடங்கான சூழ்நிலையைக் கண்டான். எங்கெங்கும் வேதனைக் கூச்சல்! வட்டமிடும் வல்லூறுகள். தலைக்கு மேலே செக்கச் சிவக்க ஒளிப் பிழம்பாகக் கதிரவன் எழுகிறான். சேதத்தின் முழுக் கோரமும் தெரிகிறது. கண் கலங்கியது காஞ்சிபுரத்தானுக்கு. 'போரில் இதெல்லாம் இயற்கைதான், நண்பரே...'

"தங்களது உதவி ஒரு கணம் தாமதித்திருந்தாலும், இதே கதி எங்களுக்கு ஏற்பட்டிருக்கும்.'

'ஆனால் நண்பரைப்போல அப்போது அனுதாபப் படத் தான் யாரும் இருக்கமாட்டார்கள்!'

கலங்கிய கண்ணைச் சரிசெய்து கொண்டான் காஞ்சிபுரத்தான். நிமிர்ந்து பார்த்தான்.

மூன்று மராத்திய தளபதிகள்- செஞ்சியின் காவலர்கள்அவனைச் சுற்றி நின்றிருந்தார்கள். மார்புறத் தழுவிக் கொண்டார்கள் மாவீரனாகிவிட்ட காஞ்சிபுரத்தானை.

'நான் செய்தது சின்னஞ்சிறு உதவி, ' என்றான் அவன். "ஆனால் ஞாலத்தின் மாணப் பெரிதென்று திருவள்ளுவர் குறிப்பிட்டது இதைத்தான், ' என்றார் நிமாஜி சிந்தியா.

'கொடுக்க வேண்டிய தருணத்தில் கை கொடுத்தீர்கள். அதோ என்ன தெரிகிறது பாருங்கள்."

சுட்டிக் காட்டிய திசையில், அடி வானத்தில் புழுதி எழும்பிக் கொண்டிருந்தது.

'வட தேசத்தில் எங்கள் மன்னரின் பிரதிநிதியாக இருக்கும் ராமச்சந்திரர், பெரும்படை திரட்டி அனுப்பியிருக்கிறார். தனசிங்

ஜாதவும், சாந்தஜி கோர்பாடேயும் முப்பதாயிரம் குதிரை வீரர்களுடன் வந்து கொண்டிருக்கிறார்கள். இனி செஞ்சிக்கு ஆபத்து கிடையாது."

கோட்டைக்குள்ளிருந்து குதிரை வீரனொருவன் பறந்து வந்தான்.

'யானைகளுடன் வந்து, செஞ்சியைக் காத்த சிங்காவரம் தளபதியவர்களை மன்னர் காண விரும்புகிறார். நேரில் நன்றி தெரிவிக்க வேண்டுமென்பது அரசரின் விருப்பம். '

காஞ்சிபுரத்தான் அவசரமாக மறுத்தான். 'இல்லையில்லை. நான் அவசரமாக ஊர் திரும்ப வேண்டும். மன்னரவர்கள் என்னை நேரில் பாராட்டும் அளவுக்கு நான் உதவி யேதும் செய்ததாக நினைக்கவில்லை..."

வயதில் பெரியவர் நாகோஜிமானே. அவர் சொன்னார்: 'மன்னரின் அழைப்பை மறுப்பது மரியாதையுமல்ல, பண்பாடுமல்ல. சீக்கிரமே அனுப்பிவிடுகிறோம், வாருங்கள். '

காஞ்சிபுரத்தான் அவர்களுடன் புறப்பட்டான். அவன் கண்கள் சிங்காவரக் குன்றின் மீதே திரும்பச் சென்றுகொண் டிருந்தன.

ஏன் அங்கே அடையாளம் காட்டப்படவில்லை? ஏன் துணைத் தளபதி கடைசி வரை வராமலே இருந்துவிட்டார்?

'முடவனுக்குக் கிடைத்த கொம்புத்தேன். அந்தகன் பெற்ற ஐசுவரியம்! எதிர்பாராமல் கிட்டிய அதிர்ஷ்டம்1இவையெல்லாம் பழைய சொற்கள், நண்பரே! அர்த்தமற்றவை. தாங்கள் இன்று செஞ்சியின் தோன்றாத் துணைவனாக வந்து, அதன் துயர் துடைத்தீர்களே, இதற்கு உவமை கூறவோ, ஒப்பிட்டுக் கூறவோ வார்த்தையே கிடையாது!' செஞ்சி மன்னன் பேசி முடித்தான்.

கல்யாண மகால் முற்றும் எள் விழவும் இடமில்லாத நெருக்கடி. சத்ரபதி ராஜாராமின் அஷ்டப்பிரதானிகளும் வீற்றிருந்தனர். வெற்றி

பெற்ற தளபதிகளின் குதூகல உரையாடல்கள்; காயங்களுக்கு முதற் சிகிச்சை மட்டுமே செய்து கொண்டு குழுமிவிட்ட படைவீரர்களின் வெற்றி முழக்கம்.

காஞ்சிபுரத்தான் கண்டிராத சூழ்நிலை அது. அவனுடைய சங்கடம் வெளிப்படையாக முகத்தில் தெரிந்தது. எங்கே இடுக்குக் கிடைக்கும், ஓடிவிடலாம், என்று தேடுவது போல் அவன் கண்கள் இங்குமங்கும் அலைந்தன.

பேஷ்வா முன்வந்து வீர வாளொன்றைத் தந்தார் மன்னரிடம். வாழ்த்தொலியும் கரவொலியும் விண்ணை மோத, "எங்கள் நன்றிக்கு அடையாளத்தை, ஏற்றுக் கொள்ளுங்கள், ' என்று காஞ்சிபுரத்தானின் கைகளில் வழங்கினான் செஞ்சியின் அதிபதி.

காஞ்சிபுரத்தான் புன்னகையுடன் பெற்றுக் கொண்டான் வீர விருதை. "எனக்கும் சில பழைய உவமைகள் தெரியும். காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது என்பார்களே - அது போலத்தான், என் வருகையும் செஞ்சி ராஜ்யத்தின் வெற்றியும் ஒரே சமயத்தில் நேர்ந்தன. சிங்காவரத்தின் எதிரியை முறியடிக்க நான் சிறுபிள்ளைத்தனமாக முயற்சி செய்தேன். உண்மையில் வெற்றியை உறுதி செய்தது செஞ்சியின் வீரப் போராட்டம்தான். எதுவாயினும், செஞ்சியும் சிங்காவரமும் இணைபிரியாத் தோழர்களாக விளங்க இது ஒரு சந்தர்ப்பம்!”

'நன்று சொன்னிர்கள், நண்பரே! நன்று சொன்னிர்கள்!' பாராட்டினான் மன்னன் ராஜாராம். 'சிங்காவரத்தின் புதிய அரசியைப் பற்றிப் பல தகவல்கள் கேள்விப்படுகிறேன். அழகுக்கும் அறிவுக்கும் பெயர்பெற்றுத் திகழ்கிறாராம் அரசி தாமரை. வீரத்திலும் கல்வியிலும் சிறந்த இளவரசன் - என் மகன் - இங்கே இருக்கிறான்...."

காஞ்சிபுரத்தான் சிந்தை குழம்பினான். எதைக் குறித்து இந்தப் பீடிகையெல்லாம்?

ஆனால் அவையோர் புரிந்துகொண்டார்கள் போலும். ஜெய கோஷங்கள் குபுகுபுவெனக் கிளம்பின.

ராஜாராம் தொடர்ந்தார்: "...சிங்காவரத்தின் அரச குலம் தொன்மையானது. கீர்த்தி வாய்ந்தது. தங்கள் வம்சத்துக்கும் வரலாற்றுக்கும் பொருத்தமான ராஜ குடும்பங்களில்தான் அவர்கள் சம்பந்தம் கொண்டிருக்கிறார்கள். இந்த மகிழ்ச்சிகரமான விஷயத்தைப் பேசி முடிக்க, என் சகோதரி அம்பிகா பாய் விரைவில் அங்கே வருவார், என்று அரசியாரிடம் தெரிவியுங்கள். அந்தப் பொன்னாவைத் தொடங்கி வைக்கும் நன்னாளான இன்று உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன்.'

காஞ்சிபுரத்தானுக்கு எதிலும் கவனம் செல்லவில்லை. மரியாதைக்காகச் சிறிது நேரம் இருந்துவிட்டு, விடை பெற்றுக் கொண்டான்.

பல்லக்கு காத்திருந்தது. சிங்காவரத்தின் அடிவாரத்தில். யானையை நடத்தி வந்துகொண்டிருந்த காஞ்சிபுரத்தான் நின்றான். கவனித்தான்.

செஞ்சி மன்னரின் பேச்சினால் ஏற்பட்ட சஞ்சலம் மறைந்தது. துணைத் தளபதி எங்கே என்ற பழைய கேள்வி எழுந்தது.

'ஏன்? துணைத் தளபதிக்குத் தன் முகத்தைக் காட்ட வெட்கமாயிருக்கிறதா? எங்கே ஒளிந்திருக்கிறார்?"

ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். பிறகு காஞ்சிபுரத்தானைக் குழப்பத்துடன் நோக்கினார்கள்.

ஒருவர் சொன்னார்: 'அரசியார் அனுப்பியிருக்கிறார்கள் பல்லக்கை. சிங்காவரத்தின் மானத்தைக் காத்த தங்களுக்கு சகல மரியாதைகளும் தந்து அழைத்து வரும்படி கட்டளை."

'நன்றி. என் வினாவுக்குப் பதில்ளித்தால் அதையே பெரிய மரியாதையாகக் கருதுவேன்.'

‘‘மன்னிக்க வேண்டும். எங்களுக்குத் தெரியாது." இன்னொருவர் கூறினார்: "கொலு மண்டபத்தில் தங்களுக்குப் பாராட்டு அளிக்க முகூர்த்தம் கணித்திருக்கிறார்கள். உடனே புறப்பட்டால்தான் சரியாயிருக்கும்.'

'அப்படியா?" யோசித்தான் காஞ்சிபுரத்தான். திரும்பிப் பார்த்தான். மற்ற இரண்டு யானைகளையும் அழைத்து வந்து கொண்டிருந்தான் சித்திரக்குள்ளன்.

'இங்கே வா, சித்திரக்குள்ளா," அருகில் அழைத்தான். 'ஏறிக்கொள்.'

அயர்ந்து போனார்கள் படைத்தலைவர்கள். 'என்ன? இவனைப் போய்...'

'செஞ்சிப் போரின் வெற்றியில் எனக்கு நிகரான பங்கு இவனுக்கும் உண்டு. சொல்லுங்கள் அரசியிடம்", வேறு பாதையிலே நடந்தான் காஞ்சிபுரத்தான்.

பாசறையை அடைந்த பின்னரே அவன் கால்கள் நின்றன. துணைத் தளபதி எங்கே? துணைத் தளபதி எங்கே?இதுவே அவன் கேள்வி.

எனக்குத் தெரியாது. எனக்குத் தெரியாது - இதுவே அவனுக்குக் கிடைத்த பதில்.

வேல்கள் தயாரிக்கப்படும் உலைக்கூடத்தில் மட்டும் வேறுவிதமான பதில் கிடைத்தது. 'திடீரென்று ஒரு படை யெடுப்புக்குப் புறப்பட வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தார். பிறகு கண்ணில் படவேயில்லை. ஏதாவது ரகசிய வேலையாகப் போயிருக்கிறாரோ என்னவோ!'

'அவருடைய இல்லம் எது?’’

'வாருங்கள், காட்டுகிறேன், உலைக்கூடத்துத் தொழிலாளி வழி காட்டினான்.

"நேரம் தவறுகிறதே, அரண்மனைப் புரோகிதர் கையைப் பிசைந்தார்.

கிருஷ்ணப்பர் முணுமுணுத்தார். 'கெட்டிக்காரன்தான். வீரன்தான். ஆனால் சம்பிரதாயங்களை மதிக்கத் தெரியாதவன். '

அரியாசனத்தில் வீற்றிருந்த தாமரை, கவலையுடன் பின்புறம் திரும்பினாள். சின்னம்மாவான சென்னம்மாவை ஈரக் கண்களால் பார்த்தாள். 'வழியில் அவருக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்திருக்குமோ?"

'கடவுள் எப்போதும் அவர் பங்கிலிருக்கிறார் என்றுதான் கண்டிருக்கிறோமே? கலங்காதே தாமரை. ஆபத்துக்கும் அவருக்கும் வெகு தூரம், ' தேற்றினாள் சென்னம்மா.

"அதோ பல்லக்கு!" அவையிலே ஆரவாரம். 'என்ன! யாரோ ஒரு சித்திரக்குள்ளன் மட்டும் வரு கிறானே? தளபதி எங்கே?' கிருஷ்ணப்பர் வினவினார்.

'அவசர வேலையாம். போயிருக்கிறார். அப்புறம் வருவாராம். '

'என்ன!' சபை மொத்தமும் சலசலப்பு. 'அரசியின் கட்டளையைக் காட்டிலும் அவசரமான வேலை உண்டா?"

சென்னம்மா கிசுகிசுத்தாள்: "அளவுக்கு அதிகமாகத்தான் அவருக்கு நீ இடம் கொடுத்துவிட்டாய்."

'நேரம் தவறிவிட்டது. இனி நாளைக்குத்தான் விழாவை வைத்துக்கொள்ள வேண்டும்." புரோகிதர் தெரிவித்தார்.

ஒவ்வொருவராய்க் கலையத் தொடங்கினார்கள். வாழைப் பந்தல்கள் வாடின. தென்னங்குருத்துத் தோரணங்கள் தொய்ந்தன. பூரண கும்பம் ஏந்திய வேதியர்கள், ஆரத்தியுடன் நின்றிருந்த ஆரணங்குகள், மேளம் கொட்டிக் கொண்டிருந்த வாத்தியர்கள் அனைவரும் சிறுகச் சிறுகக் கரையத் தொடங்கிய

வேளையில்'ஒங்குக சிங்காவரத்தின் கீர்த்தி!' வாழ்த்தொலியுடன் வந்த காஞ்சிபுரத்தான் அரசியின் முன்னே மண்டியிட்டு எழுந்தான்.

என்ன மலர்ச்சி, தாமரையின் முகத்தில் மின்வெட்டு நேரத்துக்குள் அவன் மேனியெங்கும் ஒடி நிற்கிறது அவள் பார்வை. வீரத்தழும்புகள் இங்கொன்று அங்கொன்றாகத் தென் படுகின்றன. ஆனால் நல்ல வேளை, கவலை கொள்ளும்படி யான காயமெதையும் காணோம்.

கிருஷ்ணப்பர் அன்புடன் கடிந்தார்: "பாராட்டுத் தருவதற்காக அரசி காத்திருந்தார். தாங்கள் தாமதித்தது சரியல்ல, நண்பரே!'

"மன்னிக்க வேண்டும் காஞ்சிபுரத்தான் தலை குனிந்தான். 'பாராட்டுப் பெறத்தானே நேரம், காலம் பார்க்க வேண்டும்? அரசியிடம் பிரஜை ஒரு குறையை முறையிட அது கிடையாதே?'

'தளபதிக்கு என்ன குறை?"

'இதோ, இதற்கு நீதி வழங்க வேண்டும்' காஞ்சிபுரத்தான் தன் உள்ளங்கையை விரித்துக் காட்டினான்.

'தாலி, மாங்கல்யம்' வியப்பு சென்னம்மாவின் குரலை ஓங்கச் செய்தது.

## (22)

காஞ்சிபுரத்தானின் விரிந்த உள்ளங்கையில் ஒரு தாலி!

என்ன பொருள் அதற்கு?

கிருஷ்ணப்பர் எடுத்துப் பார்த்தார். 'புலிப் பற்கள் கோத்த மஞ்சள் கயிறு யாரோ ஒரு வீரன்...'

'யாரோ ஒரு வீரனல்ல, பிரபு. என் துணைத் தளபதி, தன் மனைவிக்குக் கட்டியது. இதையும் பூவையும் குங்குமத்தையும் இழந்து நிற்கும் அந்த அபலைப் பெண்ணுக்காக நியாயம் கேட்கத்தான் வந்தேன். '

மூன்று குரல்களும் சேர்ந்து ஒலித்தன. 'துணைத் தளபதி... அப்படியானால் அவர் இறந்துவிட்டாரா...'

'இல்லை, இல்லை. கொல்லப்பட்டார், ' காஞ்சிபுரத்தானின் முகத்தில் கடுமை பளபளத்தது. 'அதுவும், நேருக்கு நேர் போர்முனையில் அல்ல, வஞ்சகமாக. முதுகில் குத்திக் கொலை செய்யப்பட்டார்.'

'ஏன்? யாரால்?"

"ஏன் என்பதை முதலில் சொல்கிறேன். என் ஆணைப்படி ஒரு சிறு படையுடன் செஞ்சிக்குப் புறப்படவிருந்தார் அவர். போக வேண்டாமென்று யோசனை கூறப்பட்டது. கூறியவரோ பெரியவர். அரசியின் குடும்பத்தில், அரண்மனை வாசிகளில், உயர்ந்த அந்தஸ்தை அனுபவிப்பவர். என் ஆணையா, பெரியவரின் தடையா? எதை ஏற்பதென்று துணைத் தளபதி குழம்பினார். வீட்டுக்குச் சென்றார். இடித்துரைத்தாள் இல்லாள். எடுத்துரைத்தாள் அவர் கடமையை. புத்துணர்ச்சியுடன் புறப்பட்ட துணைத் தளபதிக்கு, முதுகிலே கிடைத்தது இந்தப் பரிசு!"

'யார்? யார் சொல்லுங்கள். '

காஞ்சிபுரத்தான் சுற்று முற்றும் பார்த்தான். இரண்டொரு காவல் வீரர்களே மிஞ்சியிருந்தார்கள். 'நீங்கள் போகலாம்.' அவன் தலை அசைந்ததும் மறைந்தனர் அவர்கள். சென்னம்மாவிடம் சொன்னான்: "தங்கள் தந்தை தேவி. '

'அப்பாவா!'

"கண்ணால் கண்டும், வாளாவிருந்து விட்டாள் அந்த வீரனின் மனைவி. தேசத்தின் தலைவாசலில் எதிரி நிற்கும் போது, கோட்டைக்குள்ளேயே குத்து வெட்டு இருப்பதை வெளிக்காட்ட மறுத்துவிட்டாள் அந்த வீராங்கனை. விசுவாசத்துக்காகக் கிடைத்த தண்டனையை எவரிடமும் சொல்லாமலே தீக்குளித்து விட்டாள். அக்கம் பக்கத்தில் துருவித் துருவிக் கண்டறிந்தேன் இவ்வளவையும்'

"எங்கே ரகுநாதர்?' கிருஷ்ணப்பரின் கண்கள் சிவந்தன.

'பொறுங்கள்... தீர விசாரித்து... ' தாமரை சொல்லி முடிக்கவில்லை. ஆத்திரத்துடன் குறுக்கிட்டாள் சென்னம்மா. "கூடாது, கூடாது! இம்முறை என் தந்தைக்கு மன்னிப்பே கூடாது. ஒரு காலத்தில் நாமும் அவருக்கு உடந்தையாக இருந்தது உண்மையே. அந்த நிலைமை மாறி விட்டது என்பதை அவர் அறியவேண்டும். தாமரையைத் தீண்ட என் தந்தை எண்ணினார் - சபலம் என்று மன்னித்தோம். ஒரு குற்றமும் செய்யாத பணிப்பெண்ணை முதலை அகழியில் பலியிட்டார். வயதானவர் என்று விட்டுவிட்டோம். தளபதியைப் பாதாளச் சிறையில் அடைத்து வைத்தார். பாராதது போல் இருந்துவிட்டோம். ராஜ்யத்தின் ஒரு பகுதியைக் கும்பினிக்காரனுக்குக் கொடுக்க ரகசிய பேரம் செய்தார். ராஜத் துரோகமானாலும் பாதகமில்லை என்று அசட்டை செய்தோம். இனிமேல் விடக்கூடாது" கனல் பொறிகளாகக் கிளம்பின சென்னம்மாவின் சொற்கள் அவற்றின் குறுக்கே செல்ல எவருக்குத் துணிவுண்டு?

'யாரங்கே? இழுத்து வாருங்கள் அவரை!' தேடச் சென்ற வீரன் திரும்பினான் அரை நொடியில். 'ரகுநாதரை அவருடைய ஜாகையில் காணவில்லை. குதிரை மீதேறி சில வினாடிகளுக்கு முன் பறந்தாராம் எங்கோ...'

'என்ன? ' வீரனொருவன் நீட்டினான் நிருபமொன்றை. 'ரகுநாதரின் மஞ்சத்தில் இது இருந்தது, அரசி.'

தாமரை பிரித்தாள். 'உயிருக்கு அஞ்சி ஓடிவிட்டதாகக் கனவு காணாதீர்கள். விரைவில் திரும்பி வருவேன் கும்பினிக்காரன் துணையுடன், ரகுநாதன்.'

அழகுக் கோலம் பூண்டிருந்தாள் அன்னை பூமி. கீதமிசைத்தது தென்றல். காற்றிலாடின கொடிகள். தவயோகியின் உள்ளம் போல் தெளிந்திருந்த வானத்தில், குழந்தையின் செப்புக் கூடைபோல் கொட்டி இறைத்திருக்கும் தாரகைக் கூட்டம்.

மாமரத்தின் அருகில் நிற்கும் தாமரையின் வதனத்தில் மட்டும் வாட்டம். பயணத்துக்குச் சித்தமாகப் பக்கத்தில் நிற்கும் காஞ்சிபுரத்தானை நோக்கி ஏக்கத்துடன் கண்களை உயர்த்தினாள்.

'போகத்தான் வேண்டுமா? பொறுத்துக் கொள்ளக் கூடாதா கொஞ்ச நாள்?"

காஞ்சிபுரத்தான் முறுவலித்தான்: 'அரசியார் மன்னிக்க வேண்டும். நேற்றே நான் புறப்பட்டிருக்க வேண்டும். ஓடுகிற வரையில் ஓடட்டும் என்று நச்சுப் பாம்பை விட்டுவிடக் கூடாது. புற்று வரையில் போய்ப் போராடியாக வேண்டும். சென்னைப் பட்டணத்தை நோக்கி ஓடியிருக்கிறார் ரகுநாதர். சும்மா அல்ல - சூளுரைத்துவிட்டு. அங்கேயே சென்று நான் கண்காணிக்க வேண்டும். விடை கொடுங்கள் அரசி.'

அதே வினாடி விர்ரென்று ஓர் ஓசை. 'ஆ' அலறிப் பின்னடைந்தாள் தாமரை.

அவள் அருகிலிருந்த மாமரத்தில், அவள் நெஞ்சுக்கு மிக அருகே கூரிய கணையொன்று குத்திட்டு நின்றது!

'யாரது?' புலிபோல் பாய்ந்தான் காஞ்சிபுரத்தான். அம்பு வந்த திசையில் எவரையும் காணோம். செடிகளை விலக்கினான். கொடிகளை அகற்றினான். இண்டு விடாமல், இடுக்கு விடாமல் புகுந்து புறப்பட்டான். |

வெளிறிய முகத்துடன் படபடத்து நிற்கும் தாமரை யிடம் திரும்பினான். "அரசி, வாருங்கள், அரண்மனைக்குள் போய் விடலாம். தங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்த எவனோ முயல்கிறான். கவசமாக நான் இருப்பது தெரியாத முட்டாள்"

அந்தப்புரத்தில் விடைபெறும் போது மீண்டும் உறுதி கூறினான்: 'இரண்டொரு நாள் கழித்துப் பட்டணம் புறப்படுகிறேன். அந்த அம்பு தற்செயலாக வந்ததா, திட்டமிட்டுப் புறப்பட்டதா என்பதைக் கண்டுபிடிக்காமல் விடப் போவதில்லை. '

தாமரையின் முகத்தில் கலக்கம். 'என் பொருட்டுத் தாங்கள் ஆபத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள். '

அடுத்த மூன்று தினங்களுக்கு எதுவும் நேரவில்லை.

காஞ்சிபுரத்தான் நிறுத்திய பயணத்தைத் தொடங்கக் தீர்மானித்தான்.

வழி வழி வழி! வீதியெங்கும் ஆரவாரம். எங்கே செல்கிறார் தளபதி? சென்னைப் பட்டணத்துக்கு. ஏதோ சொந்த விஷயமாம். டக் டக் டக் டக்... குதிரைக் குளம்பு தாளமிடுகிறது. ஈரப் புழுதி எழும்பித் தாழ்கிறது.

'தம்பி! தம்பி!' என்று கூட்டத்தின் பின்னாலிருந்து ஒரு குரல்.

'ஏ, பாட்டி போ அப்பாலே' படை வீரனொருவன் மிரட்டிக் கொண்டிருந்தான்.

'எங்க வீட்டுத் தம்பியப்பா அவன் என்னைப் பார்த்தானானால் விடவே மாட்டான். கொஞ்சம் சொல்லு! ...தம்பி!'

பழக்கமான குரல் உடனே புரிந்துவிட்டது. 'யாரப்பா அங்கே அழைத்து வா அந்த மூதாட்டியை!' என்று உத்தரவு பிறப்பித்தான்.

கும்பல் வழிவிட்டது. கிழவி ஒடோடியும் வந்தாள். 'பாட்டி, சௌக்கியமா? காஞ்சிபுரத்தானின் உள்ளமெல்லாம் மலர்ச்சி. முகமெல்லாம் சிரிப்பு. தாமரையைச் சந்திக்க அரண்மனைக்குள் நுழைய முதன் முதல் வழி செய்தவள் இந்தக் கிழவியல்லவா? இவளுடைய மகனுக்குப் பதிலாகத்தானே அவன் நாதசுரம் வாசிக்கச் சென்றான்?

'உன் தயவிலே எல்லாரும் நல்லபடியாய் இருக்கிறோம், தம்பி. என் மகனுக்குக்கூட நல்லா குணம் ஆகிவிட்டது, ' என்றாள் கிழவி.

'மகிழ்ச்சி, பாட்டி. உங்களுக்கு வேறு என்ன தேவையானாலும் அரண்மனைக்கு வந்து சொல்லுங்கள்."

கிழவி பதில் சொல்லவில்லை. அவள் முகம் இருண்டது. கண்களில் அவநம்பிக்கை. தலை தாழ்த்திக் கொண்டாள்.

'ஏன் பாட்டி, ஏதாவது சொல்ல வேண்டுமா?"

சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டாள் ஒருமுறை. 'பாட்டி, சும்மா தயங்காமல் சொல்லுங்கள், ஊக்கினான் காஞ்சிபுரத்தான்.

'ராசாங்கத்திலேயெல்லாம் நீ நினைக்கிற மாதிரி சுளுவாய் வேலை நடந்து விடாது தம்பி, ' சுற்றியுள்ளோரை மீண்டும் பார்த்துக் கொண்டாள் கிழவி. புடவைத் தலைப்பினால் கண்ணின் ஈரத்தைத் துடைத்துக் கொண்டாள். 'எங்களுக்கு வரவேண்டிய மானியம் இரண்டு வருஷமாய் அரண்மனையிலிருந்து வந்தபாடில்லை. கணக்கப்பிள்ளையிடம், காரியஸ்தரிடம் எத்தனை வாட்டி மனுப்போட்டு விட்டோம் தெரியுமா?"

காஞ்சிபுரத்தானின் சீற்றம் குரலிலும் வெளிப்பட்டது. 'ஏன் பாட்டி, நேரில் வந்து முறையிடக் கூடாது?"

கசப்புடன் நகைத்தாள் கிழவி. 'வராமலா இருப்பேன்? கத்தி கபடாவோடு எத்தனை ஆட்கள் நிற்கிறார்கள் அரண்மனை வாசலில் விடுவார்களா என்னை? கெஞ்சிப் பார்த்தேன். மன்றாடினேன். போ, போ என்று பிடித்துத் தள்ளிவிட்டார்கள் தம்பி. "

பல்லைக் கடித்துக் கொண்ட காஞ்சிபுரத்தான் வினாடி நேரம் மௌமாயிருந்தான். பிறகு கூறினான்: 'பாட்டி, நீங்கள் வீட்டுக்குப் போங்கள். அரண்மனைக்குப் போய் நான் கவனிக்கிறேன். '

சுண்டிவிடப்பட்டது கடிவாளம். புரவி, பட்டணத்தை நோக்கிப் பாயவில்லை. அரண்மனைக்குத் திரும்பியது.

வழியனுப்பி வைத்த விழிகளில் சோகம். வீசி விடை கொடுத்த கரங்களில் தளர்ச்சி. வியர்வை முத்திட்டிருந்த வதனம்.

என்ன அது? குதிரையின் குளம்படி சத்தம் வெளி முற்றத்தில்? யார் அத்தனை வேகமாக வருகிறார்கள்?

அவரே அவரே!

உள்ளம் துள்ளியது, காஞ்சிபுரத்தானின் வருகையை அறிந்ததும். அதே சமயம் கலக்கம்- பட்டணம் புறப்பட்டவர் ஏன் இவ்வளவு பதற்றமாகத் திரும்பி வருகிறார்?

'என்ன? என்ன நேரிட்டது?’ எதிர்கொண்டு சென்று விசாரித்தாள்.

‘‘தாமரை' வேகமாய் முன்னே வந்த காஞ்சிபுரத்தான் சட்டெனக் கட்டுப்படுத்திக் கொண்டான். 'அரசி மன்னிக்க வேண்டும். '

‘‘தாங்கள் இம்மாதிரி அடிக்கடி குற்றம் செய்வதுதான் அரசிக்குச் செய்யும் பெரும்பணி, ' வெகுநாட்களுக்குப் பிறகு பெயர் சொல்லித் தன்னை அவன் கூப்பிட்டதில் எத்தனை பரவசம்!

காஞ்சிபுரத்தானோ அவள் பேச்சில் ஒன்றவில்லை. 'அரசியார் மறந்துவிட்ட கடமையொன்றை நினைவூட்டவே திரும்ப வந்தேன். கடைத்தெருவில் காதில் விழுந்தது.'

'என்னவென்று?"

'சேற்றுடன் உறவு இருக்கும் வரையில்தான் தாமரைக்கு உயிர். மக்களைத் தொட்டுக் கொண்டிருக்கும் வரையில்தான் செங்கோலுக்குச் சிறப்பு. அணுகுவதற்கு எளியவன் என்ப தால்தான் ஆண்டவனுக்குக்கூட மகிமை என்று பெரியவர்கள் சொல்லுகிறார்கள். '

'மக்களோடு நான் பழகாமலா இருக்கிறேன்?"

"ஆம். கிழவியொருத்தி புகார் செய்தாள் சற்று முன்பு. நேரில் முறையிட வந்தவளைக் காவலர்கள் விரட்டி விட்டார்களாம். '

'அப்படியா யோசனையுடன் சிரம் தாழ்ந்தாள் தாமரை. 'குடிமக்களின் தொடர்பு இல்லாமல் கோலோச்ச நானும் விரும்பவில்லை. எந்தச் சாதாரண பிரஜையும் என்னிடம் நேரில் வந்து முறையிடுவதற்கு ஒரு வழி... ஒரு வசதி...'

'இருக்கிறது, கண்ணே. ' திகைப்புடன் திரும்பிப் பார்த்தாள் தாமரை. ‘‘சிற்றப்பா வாருங்கள். சரியான நேரம்தான். '

சென்னம்மாவுடன் கிருஷ்ணப்பர் உள்ளே பிரவேசித்தார். 'உன் தந்தை - என் அருமைத் தமையனார் - ஒரு ஏற்பாடு செய்திருந்தார். இப்படி வா. சாளரத்தின் வழியே, அதோ பார்." 'அரண்மனைக்கு வெளியே, அந்த வேப்பமரத்துக்குப் பக்கத்தில் என்ன தெரிகிறது தாமரை?' சென்னம்மா வினவினாள் அரசியின் தோளைப் பற்றி.

'ஓர் உயரமான மண்டபம்... பாழடைந்து பூட்டப்பட்டுக் கிடக்கிறது...'

'ஆராய்ச்சி மணி. அரசியிடம் நேரிலே நீதி கேட்க விரும்பும் எந்தக் குடிமகனும் அங்கே வந்து அந்த மணியை அடிக்கலாம். எந்த வேலையானாலும் உடனே ஓடி வருவார் என் தமையனார். விசாரித்து, உடனே நீதி வழங்குவார். மதுரையிலிருந்து விசேடமாகத் தயாரித்துத் தருவித்த பெரிய வெண்கல மணி, அந்த மண்டபத்தின் உச்சியில் இருக்கிறது."

'திருப்திதானே?' தாமரை புன்சிரிப்புடன் கேட்டாள் காஞ்சிபுரத்தானை.

கிருஷ்ணப்பர் கை தட்டினார்: "அதோ தளபதியின் இணை பிரியாத் தோழன் சித்திரக் குள்ளன் எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டு நிற்கிறானே! இப்போதே ஏற்பாடு செய்து விடலாம்... வா இப்படி..'

அடுத்த நாள்.

ஆராய்ச்சி மணி அமைந்த மண்டபம் திறக்கப்பட்டிருந்தது. திரளாகக் குழுமியிருந்தனர் பொதுமக்கள்.

மண்டபத்தினுள்ளே எட்டாள் உயரத்துக்கும் மேலே, அசைவற்று நின்றது வெண்கல மணி - நீதியின் உறுதியைப் போல; தருமத்தின் வலுவைப் போல; சத்தியத்தின் ஆழத்தைப் போல.

மணியின் நேர் கீழே நின்றிருந்த தாமரை மெல்லப் பேசினாள்: 'அன்புள்ள குடிமக்களே! எனக்கும் உங்களுக்குமுள்ள இடைவெளியை மேலும் குறைக்க இன்று முதல்...'

அண்ணாந்து மணியையே நோக்கிக் கொண்டிருந்த சித்திரக்குள்ளன் திடீரெனக் கூவினான்: 'அரசி! நகருங்கள்! நகருங்கள் அபாயம்!'

கண்வெட்டு நேரத்துக்குள் உஷாரானான் காஞ்சிபுரத்தான். சரேலெனத் தாமரையை இழுத்துக் கொண்டான்.

மறுகணம் மடமடவென்று எதுவோ முறிந்தது. ஐயோ! அந்த மணி! அதைத் தாங்கிக் கொண்டிருக்கும் மர உத்தரம் முறிகிறது! கயிறு அறுகிறது! சடசடவென்று மோதி இடித்து உருண்டு விழுகிறது மணி - மலை மேலிருந்து உருளும் யானையைப் போல. காதைச் செவிடுபடுத்தும் ஓசை நாலாக விரியும் வெண்கல மணியின் நாதம்!

மூச்சுப் பேச்சற்றுப் பிரமித்தது கூட்டம்! எத்தகைய பேராபத்து! துளி தவறியிருந்தாலும் அரசியின் தலை நொறுங்கியிருக்குமே!

முதலில் நிதானித்தவன் காஞ்சிபுரத்தான்தான். 'நேரம் இப்போது சரியில்லை. அன்புகூர்ந்து கலைந்து செல்லுங்கள் அனைவரும். இரண்டொரு தினங்களில் வேறு ஓர் ஆராய்ச்சி மணி நிறுவ ஏற்பாடு செய்கிறோம்.'

கூட்டம் சிறிது சிறிதாய்க் கரைந்தது. அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், அந்தரங்கப் பிரதானிகள் இரண்டொருவரும் மட்டுமே எஞ்சியிருந்தனர். தாமரையின் தளிர்மேனி இன்னும் மெல்ல நடுங்கியவாறிருந்தது.

'சித்திரக் குள்ளா!' உறுமினான் காஞ்சிபுரத்தான். 'நீ தானே ஏற்பாடுகள் செய்தவன்? மணியின் கட்டையும் கயிறும் இவ்வளவு நலிந்த நிலையில் இருந்தபோதும் ஏன் பேசாதிருந்தாய்?"

'இல்லை பிரபு. கயிறும் கட்டையும் நன்றாய்த்தான் இருந்தன. நேற்று. யாரோ சதிகாரர்கள் இரவோடிரவாக இப்படிச் செய்திருக்க வேண்டும்," சித்திரக்குள்ளனுக்கு அச்சத்தால் நாக் குழறிற்று.

'பாவம், அவன்தானே சரியான சமயத்தில் தாமரையின் உயிரைக் காத்தவன்? அவனைக் கோபிக்காதீர்கள், ! கிருஷ்ணப்பர் பரிந்தார். 'நீ போப்பா. '

கவலையுடன் பேசினான் காஞ்சிபுரத்தான்: 'ஒடிய ரகுநாதர் ஒற்றர் வைத்துவிட்டுத்தான் ஒடியிருக் கிறார். அவனைக் கையும் களவுமாகப் பிடித்து விட்டுத்தான் மறுவேலை. '

இரண்டாம் நாள் நள்ளிரவு. தாமரையின் சயன கிருகத் துக்கு வெளியே

குழிமுயலெனப் பதுங்கிக் கிடந்தான் காஞ்சிபுரத்தான். காற்றின் ஒவ்வோர் அசைவையும் அவன் செவிகள் கணக் கிட்டன. நகரும் ஒவ்வொன்றையும் நோட்டமிட்டன நித்திரையிழந்த விழிகள்.

திடீரென்றுஆமாம், ஆமாம்! எவனோ நடந்துவரும் காலடியோசை தான் அது!

இம்மி இம்மியாக நகர்ந்தான் சிங்காவரத்தின் தளபதி. இம்முறை தப்பவிடுவதில்லை எதிரியை உறுதி உறுதி!

குபிரென்று பாய்ந்து பிடித்தான் உருவத்தை. இரும்புப் பிடி உடும்புப் பிடி!

தரதரவென்று இழுத்துச் சென்றான் வெளிமுற்றத்தின் வெளிச்சத்துக்கு.

அடுத்த கணம், "நீயா!' என்று அதிர்ச்சியுடன் கூவினான்.

## (23)

'யார்? நீயா? நீயா அடப்பாவி இடுப்பிலிருந்து குத்துக் கத்தியைச் சரக்கென்று உருவினான் காஞ்சிபுரத்தான். ஓங்கினான் அந்த உருவத்தின் நெஞ்சுக்கு நேரே.

"என்னை மன்னித்துவிடுங்கள் அண்ணே தெரியாத்தனமாய்ச் செய்துவிட்டேன்! காஞ்சிபுரத்தானின் காலடியில் விழுந்து பாதங்களிரண்டையும் பற்றிக் கொண்டான் சித்திரக் குள்ளன்.

'எழுந்திரு' வெறுப்புடன் எழுப்பினான் அவனைக் காஞ்சிபுரத்தான். 'சரணடைந்ததன் மூலம் இதற்கு வேலை இல்லாமல் செய்துவிட்டாயே!" குத்துக் கத்தியைத் திரும்பச் செருகிக்

கொண்டான். 'உன்னை எவ்வளவு நம்பகமானவன், உயிர்த் தோழன் என்றெல்லாம் நினைத்தேன், அட வஞ்சகா அடத் துரோகி!'

'இல்லை அண்ணே. நான் துரோகம் எதுவும் பண்ண வில்லை. ஆண்டவனுக்குப் பொதுவாய்ச் சொல்கிறேன், நம்புங்கள்.' விம்மினான் சித்திரக்குள்ளன். "ராணி மேலே இருக்கிற பிரியத்தினால்தான்... உங்கள் மேலே இருக்கிற அன்பினால்தான் இப்படியெல்லாம் செய்தேன்...'

"என்ன, என்ன கேழ்வரகிலே நெய் ஒழுகுகிறதென்றா சொல்கிறாய்?"

"மெய்யாய் அண்ணே. ராணியும் நீங்களும் பழகுகிறதை நான் கவனித்துக் கொண்டுதானே இருக்கிறேன்? அவர்கள் உங்கள் மேலே உயிரையே வைத்திருக்கிறார்கள். நீங்கள் என்னடாவென்றால் அவர்களை விட்டுவிட்டுப் போகிறேன், போகிறேன் என்று சொல்லிக் கொண்டேயிருக்கிறீர்கள். நீங்கள் ராணியை விட்டுப் பிரியாமல், அவர்கள் கூடவே இருந்தால்தான் ராணிக்கும் சந்தோஷம்; எனக்கும் சந்தோஷம். அதற்காகத்தான் இப்படியெல்லாம் ஆபத்து வருகிற மாதிரி நானாகவே செய்தேன்..."

'பாவி, கெடுத்தாயே! வியப்புடன் கூவினான் காஞ்சிபுரத்தான். சித்திரக்குள்ளனின் குழந்தைத்தனமான முகத்தை அலசி ஆராய்ந்தான். கபடமற்றவன் என்றே தெரிந்தது.

சித்திரக்குள்ளன் சொன்னான்: 'இல்லாவிட்டால் வருகிற ஆபத்து ஒவ்வொன்றும் அப்படி மயிரிழையில் விலகி விடுமா? நானேதான் கடைசி வினாடியில் சடக்கென்று காப்பாற்றுகிற மாதிரி காப்பாற்றினேன். '

'ஒழிந்து போடா எங்காவது, முட்டாள் பையா!' அவனை நெக்கித் தள்ளினான் காஞ்சிபுரத்தான். 'உன்னுடைய அனாவசியக்

குறுக்கீட்டால் எவ்வளவு கால விரயம் போடா அப்பால், என் முகத்தில் விழிக்காமல்!"

அவசர அவசரமாக அந்தப்புரத்துக்குச் சென்றான். தாமரையிடம் சுருக்கமாக விளக்கிவிட்டு விடைபெற்றான். தளபதி உடையிலல்ல, சாதாரணக் காஞ்சிபுரத்தானாக.

வெய்யிலும் மழையும் மாறி மாறி விளையாடிக் கொண்டிருந்த விசித்திரமான பருவம் அது. வந்தவாசி, திருக்கழுக் குன்றம், மகாபலிபுரம் பாதை வழியாகச் சென்னைப் பட்டணத்தை அடையத் தீர்மானித்தான் காஞ்சிபுரத்தான்.

திருக்கழுக்குன்றத்தில் விழாவொன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. வெய்யிலும் சூடேறிவிட்டது.

புளியமரத்தடியில் இளநீர் விற்றுக் கொண்டிருந்தவனிடம் சென்றான். ஆட்டி ஆட்டிப் பார்த்து, நிறைய நீருள்ள காயாகத் தேர்ந்தெடுத்தான்.

'வழுக்கையை வெட்டிக் கொடு, ' என்று தேங்காயைத் திரும்பக் கொடுத்த வேளையில்

மைதானத்தின் மற்றொரு கோடியில் கூக்குரல் எழுந்தது. 'அநியாயம் அக்கிரமம்' வயதான கிழவரொருவரின் கூக்குரல்.

'திருட்டுக் கிழவா! பொய் வேறா சொல்கிறாய்?" இரண் டொரு முரட்டு அதட்டல்கள்.

சுற்றிலும் கூட்டம். பரபரப்பு. "இந்தாங்க', இளநீரை இரண்டாக வெட்டி நீட்டினான் இளநீர் வியாபாரி.

வாங்கிக் கொள்ளக் காஞ்சிபுரத்தான் அங்கே இருக்கவில்லை. கூக்குரலும் கும்பலும் குழுமியிருந்த இடத்துக்கு விரைந்துவிட்டான். -

"என்ன? என்ன நடந்தது?" பரபரவென்று கூட்டத்தை விலக்கினான். ஊடுருவி உள்ளே புகுந்தான்.

சிப்பாய்கள் மூன்று பேர் ஒரு குதிரையைத் தங்கள் பக்கம் இழுத்துக் கொண்டிருந்தார்கள். மூன்று பேரும் கும்பினிக்காரனின் சிப்பாய்கள். பளபளப்பான சிவப்பு உடையிலிருந்தே கண்டு கொண்டான் காஞ்சிபுரத்தான்.

குதிரையை விடமாட்டேன் என்று பிடித்துக் கொண் டிருந்தவர் ஒரு கிழவர். ஆறாகப் பெருகிக் கொண்டிருந்தது, கண்ணிர். 'ஐயா, நான் ஏழை ஐயா. ஏதோ கஷ்டம் தாங்காமல் இதை விற்கிறேன். என் மகன் மாதிரி எத்தனை பிரியமாக வளர்த்து வருகிறேன்...'

சிப்பாய்களில் ஒருவன், கிழவரின் வேட்டி மடியை முரட்டுத்தனமாகப் பிடித்தான்: 'உன் குதிரை என்றால் அத்தாட்சி காட்டு பார்க்கலாம். '

கிழவர் புலம்பினார்: 'எவ்வளவோ வருடங்களுக்கு முன்னால் மதுரைச் சந்தையிலே வாங்கினேன். நான் எங்கே ஐயா அத்தாட்சிக்குப் போவேன்?'

'விடு அவரை!'

பட்டென்று அரிவாள் வெட்டுப்போல விழுந்தது சிப்பாயின் கையில். துள்ளி விலகினவன், தீத் துண்டங்களைக் கண்டான் காஞ்சிபுரத்தானின் கண்களில்.

'ஏனப்பா சூராதி சூர சிப்பாய், உங்கள் ஊரிலே குதிரை திருடுகிறவன் இப்படித்தான் பட்டப் பகலில் திருவிழாவுக்குக் கொண்டு வந்து விற்பானோ? உறுமினான் காஞ்சிபுரத்தான்.

மூன்று சிப்பாய்களும் கூட்டுச் சேர்ந்தார்கள் உடனே. 'இது கும்பினிக் குதிரை, திருடிக் கொண்டு வந்திருக்கிறான் என்கிறோம்.

இந்த மாதிரி அடிக்கடி திருட்டுப் போகிறது பட்டணத்துக் கோட்டையில். '

'உங்களைப் போன்ற சோம்பேறிகள் காவல் இருந்தால் கவர்னரே கூட ஒருநாள் திருட்டுப் போய்விடுவார்' ' கூட்டம் கொல்லென்று நகைத்தது. சிப்பாய்களின் முகம் ஜிவ்வென்று சிவந்தது.

'இவ்வளவு உயரம், தேகத்திலே பளபளப்பு, நீளமான கழுத்து - இதெல்லாம் எங்கள் சீமைக் குதிரைக்குத்தான் இருக்கும்', ரோஷமாக வாதாடினான் ஒரு சிப்பாய்.

'ஒகோ', குதிரையைத் தடவிக் கொடுத்தவாறு கிழவரைக் கேட்டான் காஞ்சிபுரத்தான். 'ஏன் பெரியவரே, இதை மதுரையில் வாங்கும்போது எந்த ஊர்க் குதிரையென்று சொன்னார்கள்? கத்தியவார் என்றுதானே?"

"ஆமாம் தம்பி, ஆமாம் தம்பி, ' கிழவர் அவனைக் கட்டிக் கொண்டார். "அப்போது பிடித்து நினைத்து நினைத்துப் பார்க்கிறேன், ஞாபகம் வரவில்லை. ரொம்பக் கச்சிதமாய்ச் சொல்லிவிட்டாயே தம்பி?'

"அடேய் மடையர்களா' மூன்று சிப்பாய்களின் தலையையும் இழுத்தான் காஞ்சிபுரத்தான். குதிரையின் முகத்தருகே குனியச் செய்தான். 'இந்த அசுவத்தின் இரண்டு காதுகளையும் கவனியுங்கள். காது நுனியைப் பாருங்கள். மாங்காய் மூக்குப் போல இருக்கிறதா இல்லையா?’’

'அதனால்?" என்றான் சிப்பாயொருவன் அலட்சியமாக. 'கத்தியவார் குதிரைகளுக்கு மட்டும்தான் காது நுனி இப்படி மாங்காய் மூக்குப் போல இருக்கும். இதேபோல உங்கள் சீமைக் குதிரையொன்றைக் கொண்டு வந்து காட்டு. நான் என்ன வேண்டுமானாலும் தருகிறேன். '

சரியான பேச்சு போட்டானே ஒரு போடு கெட்டிக்காரன்! நியாயமாய்த்தானே சொல்கிறான்! - கும்பலில் ஆளுக்கு ஆள் பேசத் தொடங்கினார்கள்.

கும்பினிச் சிப்பாய்கள் மூன்று பேரும் நழுவிவிட்டார்கள். பூசல் மறைந்துவிட்டதால் கூட்டத்தின் சுவாரஸ்யம் கரைந்து விட்டது.

'கடவுள் மாதிரி வந்து காப்பாற்றினாய் தம்பி, ' கிழவரின் தொண்டை கரகரத்தது.

"அதெல்லாம் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்,' என்றான் காஞ்சிபுரத்தான். 'குதிரையை விற்க வழி பாருங்கள் முதலில்." போய்விட்ட கூட்டத்தைப் பரிதாபமாகப் பார்த்தார் கிழவர். 'ஐயா குதிரை வாங்கலீங்களா? உயர்ந்த சாதிக் குதிரை சாமி!' என்று கூவினார்.

'பெரியவரே வியாபாரத்துக்கும் உமக்கும் பல காத தூரம்' சிரித்துக் கொண்டே குதிரைமீது தாவியேறினான் காஞ்சிபுரத்தான். பட்டுப் போன்ற கழுத்தில் தட்டிக் கொடுத்தான். கையைக் கொட்டினான் படபடவென்று.

"வாருங்கள்! வாருங்கள் காணக்கிடைக்காத குதிரை! பார்க்க முடியாத புரவி அம்பினும் கடுகிச் சென்று எதிரிப் படையை இரு கூறாக்கியது என்று சீவக சிந்தாமணி வர்ணிக்கிறதே, அது இந்த வகைக் குதிரையைப் பற்றித்தான்! கடல் நீரைத் தோணி பிளப்பது போல் பகைவனின் வரிசையைப் பிளந்து தகர்த்ததென்று புறநானூற்றுப் பாடல் வியக்கிறதே, அதுவும் இதைப் பற்றித்தான் மல்ல கதியா, மயூர கதியா, வானர கதியா, வல்லிய கதியா, சரகதியா எது வேண்டும்? சொல்லுங்கள் இந்த அசுவத்தினிடம் ஒடிக் காட்டும்! வாருங்கள்!'

கிடுகிடுவென்று கூட்டம் சேர்ந்தது மீண்டும். காஞ்சி புரத்தானின் வாக்கு வன்மையைக் கண்டு அயர்ந்து நின்றது.

நூறு ரூபாய்! நூற்றிருபது! நூற்றைம்பது! நூற்றெழுபத் தைந்து!

போட்டி மேல் போட்டி கிராக்கி மேல் கிராக்கி!

இருநூறு ரூபாயில் வியாபாரம் முடிந்தது. வாங்கியவனிடம் குதிரையை ஒப்படைத்தான். வெள்ளிக் காசுகளைக் கிழவரிடம் சேர்ப்பித்தான். 'வணக்கம் பெரியவரே விடை கொடுங்கள்,' என்றான்.

'இவ்வளவு செய்தது பெரிதில்லை, தம்பி. என்னோடு வீட்டுக்கு வா, ' என்று அழைத்தார் கிழவர்.

'இல்லை, தாத்தா. ரொம்ப முக்கியமான வேலை இருக் கிறது எனக்கு. '

கிழவர் இணங்கவில்லை. கெஞ்சிக் கூத்தாடி அழைத்துச் சென்றார் காஞ்சிபுரத்தானை.

குன்றின் அடிவாரத்தில் இருந்தது அவருடைய குடிசை விழுஞாயிறு வேளை. இருட்டு எட்டிப் பார்த்தது.

குடிசை வாசலில் முழந்தாளிட்டு அமர்ந்திருந்தான் இளைஞனொருவன். பொறுமை இழந்திருந்தான் என்பதை அவன் எழுந்த விதமே எடுத்துக் காட்டியது.

"அப்பா! உங்கள் திசைக்கு ஒரு பெருங் கும்பிடு! நன்றாய் என்னை இருக்கச் சொல்லிவிட்டுப் போனீர்கள்!' என்று கிழவரிடம் சீறினான்.

'கோபிக்காதே தம்பி, மகனின் மோவாயைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினார் வயோதிகத் தந்தை. 'இவர்தான் குதிரையை நல்ல விலைக்கு விற்றுக் கொடுத்தார். இதோ பார், பணம்- காசு" முடிச்சைத் தட்டிக் காட்டினார்.

"சரி, சரி. ஜாக்கிரதையாகச் செலவழியுங்கள். சௌக்கிய மாக இருங்கள். நான் போக வேண்டும்.'

குறுக்கே நின்று மறித்தார் கிழவர். "அடேய் அடேய்! தம்பி! இது உனக்காகத்தான் நான் வாங்கி வந்த பணமப்பா! உண்க்காகக்தான் என் அருமைக் குதிரையைக் கூட விற்றேன். பணம் மொத்தமும் உனக்கேதான். உனக்கு என்ன இஷ்டமோ அந்த மாதிரி வியாபாரம் செய். கடை கண்ணி வை. தொழில் நடத்து. எது வேனுமானாலும் செய். ஆனால் என்னை விட்டு விட்டுப் போகாதே. இந்தத் தள்ளாத வயதில் ஒரே ஒரு மகனையும் பிரிந்து வாழ என்னால் முடியாது.'

'ஒகோகோ' எகிறிக் குதித்தான் புதல்வன். "இதற்காகத் தான் என்னை இருக்கச் சொல்லிவிட்டுக் குதிரையோடு போனிர்களா? சரிதான், சரிதான் என்னை இங்கே கட்டிப் போட முடியாது. சே, சே! இதற்குத்தான் நான் இங்கே வரவே கூடாது என்று பார்த்தேன். என் தோழர்களெல்லாம் சத்திரத்திலே காத்துக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் திருச்சியி லிருந்து வருகிறோம். மைசூர் வரை போய் ஆகணும். ஐயோ பாவம், கிழவர் எப்படி இருக்கிறீர்களோ என்று இரக்கப்பட்டு வந்தால்...! விடுங்கள், விடுங்கள்!'

காஞ்சிபுரத்தானுக்கு ஒரளவு புரிந்தது. பெருமளவு புரிய வில்லை. 'நண்பா, கொஞ்சம் பொறு, ' என்று தோளில் மெல்ல அழுத்தி இளைஞனை உட்கார்த்தி வைத்தான். 'உன்னைப் போல் உற்சாகமும் சுறுசுறுப்பும் உள்ளவர்களைப் பார்ப்பதே அரிதாயிருக்கிறது இந்த நாளில். உன் தந்தைக்கும் உனக்கும் என்ன மனத்தாங்கல்? எனக்குக் கொஞ்சம் சொல்லி விட்டுத்தான் புறப்படேன். '

'அடடா! நீ என்னப்பா, அவனைத் தூண்டி விடுகிறாய் நல்ல புத்தி சொல்வதை விட்டுவிட்டு?' என்று புலம்பினார் கிழவர்.

“என் பெயர் செந்தில், ' என்றான் அந்த இளைஞன். "இந்த ஊரிலேயே காலைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கச் சொல்கிறார் அப்பா. என்னால் முடியாது என்று புறப்பட்டு விட்டேன். '

காஞ்சிபுரத்தானின் முகத்தில் முறுவல் பூக்காதிருக்குமா? அவனுடைய கதையைத்தானே இந்த இளைஞனும் சொல்கிறான்? 'சரி, எங்கேயோ மைசூர் போவதாகச் சொன்னாயே, அது என்ன? '

'ஆ! அது ரொம்ப முக்கியம், ' என்றான் இளைஞன். அக்கம் பக்கம் பார்த்துவிட்டுச் சொன்னான் மேலும்: 'மைசூர் மன்னன் சிக்கதேவராயன் இருக்கிறானே, பெரிய அக்கிரமக்காரன். மைசூரிலே காவேரியாற்றுக்கு அணை கட்டிவிட்டான். அப்புறம் தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளிப் பிரதேசத்துக்கெல்லாம் தண்ணீர் எப்படி வரும்? பயிர் பச்சையெல்லாம் வாடுகிறது. கடுமையான பஞ்சம் வரும்போல் இருக்கிறது.'

'அதற்கு நீ என்ன செய்யப் போகிறாய்?' கிழவன் முணுமுணுத்தான்.

'உப்புப் போட்டுக் கொண்டு சாப்பிடுகிறவன்தான் தமிழன் என்று நிரூபிக்கப் போகிறோம்! திருச்சி ராணி மங்கம்மாளும் தஞ்சாவூர் ராஜாவும் கூடிக் கூடிப் பேசுகிறார்கள். மைசூர் அரசனைச் சும்மா வாயினால் மிரட்டுகிறார்கள். வேறொன்றையும் காணோம். நாங்கள் சில பேர் புறப்பட்டிருக்கிறோம்... ரகசியமாக மைசூருக்குப் போய் அந்த அணையை உடைத்து விடுவதென்று. இப்போது சொல், நான் போக வேண்டியது முக்கியமா இல்லையா?''

காஞ்சிபுரத்தானால் உடனே பதில் தர முடியவில்லை. செந்தில் எடுத்துக் கொண்டுள்ள வீரப் பிரதிக்னையை எப்படி இழித்துரைப்பது?

தயங்கினான். கிழவர் முகத்தை நோக்கினான். அதிலே கவிந்துள்ள பரிதாபத்தைக் கண்டான். இளைஞனிடம் கூறினான்: 'போற்ற வேண்டிய காரியம்தான் தம்பி. ஆனால், வயோதிகத் தந்தைக்கு ஆற்ற வேண்டிய கடமையை நீ புறக்கணிக்கலாமா?"

'பொல்லாத கடமை ஏன், உன்னைப்போல் வாட்ட சாட்டமாயிருக்கிற எத்தனையோ இளைஞர்கள் இதே பணியை - இதே மைசூர் பயணத்தை - மேற்கொண்டிருக்க வேண்டியதும் கடமைதானே யாராவது செய்தார்களா? உன்னையே எடுத்துக் கொள்ளேன். ஏதோ ஊர் சுற்றுகிறாயே தவிர...'

'சரி. உனக்குப் பதிலாய் நான் போகிறேன் மைசூருக்கு. அப்புறம்?' சட்டென்று கேட்டான் காஞ்சிபுரத்தான்.

'என்ன... வந்து...'

"எங்கே தங்கியிருக்கிறார்கள் உன் தோழர்கள்?"

'கோவிலுக்குப் பக்கத்தில் உள்ள சத்திரத்தில்... ஆனால்..."

கிழவரும் கூப்பிட்டார்: 'தம்பி, நீ எனக்காக...'

"பரவாயில்லை, பெரியவரே. செந்தில் மைசூரிலிருந்து நான் திரும்பி வருகிற வரையிலாவது தந்தையுடன் இரு. வருகிறேன். நாட்டுப் பணி செய்ய நல்லதொரு வாய்ப்புக் கொடுத்தாய். நன்றி, நண்பா.'

சத்திரத்தை அடைந்தபோது நன்கு இருட்டிவிட்டது. வாலிபர் பட்டாளமொன்று வாசல் திண்ணையில் படுத்திருப்பதைக் கண்டான் காஞ்சிபுரத்தான். தானும் ஒரு மூலையில் முடங்கினான்.

'யாரது? அதட்டினான் அருகிலே ஒருவன்.

'நான்தான் செந்தில், ' என்று பதில் கொடுத்தான் காஞ்சி புரத்தான்.

"அண்ணே எழுந்திரு ஸ். உன்னைத்தான்..." இருளில் புரண்டு கொண்டிருந்த ஒவ்வொருவனையும் அந்த ஆள் எழுப்பலானான். அதட்டலாக அல்ல. மெதுவான குரலில். ரகசியமான முறையில்.

காஞ்சிபுரத்தான் உறங்கவில்லை. உறங்குவது போல் முனகினான். புரள்வது போல் பாசாங்கு செய்தான். பிறகு விழித்துக் கொண்டான்.

இருளிலேயே ஒவ்வொரு உருவங்களாக எழுந்து கொண்டன. ஒன்றோடொன்று உரசிக் கொண்டன.

அவர்களை எழுப்பியவனே, "பக்கத்து அறை... இப்படிப் போங்கள், ' என்று கையைப் பிடித்து அனுப்பி வைத்தான்.

தாளமுடியாத கிளுகிளுப்பு, காஞ்சிபுரத்தானுக்கு - செய்கிற சதியை வேடிக்கையாகத்தான் செய்கிறார்கள் என்று. கூடவே ஓர் அச்சம். இப்போது வேண்டுமானால் இருட்டு. தங்களில் ஓர் ஆள் என்று அவனை நினைத்துக் கொண்டார்கள். எழுப்பி விட்டார்கள். சேர்த்துக் கொண்டார்கள். இன்னும் கொஞ்ச நேரத்தில் விடிந்து விடுமே? வெளிச்சம் போட்டு விடுமே? அப்போது? அன்னியன் என்று அரை நொடியில் கண்டுபிடித்து விடமாட்டார்களா? அதன் பிறகு.?

‘‘சீக்கிரம் சீக்கிரம்' எழுப்பிய ஆள் துரிதப்படுத்தினான். கும்பலோடு ஒருவனாகத் துழாவி நடந்தான் காஞ்சிபுரத்தான்.

அடுத்த அறையிலும் காரியங்கள் அந்தகாரத்தில்தான் நடந்து கொண்டிருந்தன.

'ஆகட்டும். ஆகட்டும்... மாட்டிக் கொள்ளுங்கள்... ஆயிற்றா?... ஏன், உனக்கு மாட்டிக் கொள்ளத் தெரியவில்லையா?... இப்படி, இப்படித்தான்... எல்லாரும் வாங்கிக் கொண்டாகிவிட்டதா?...'

காஞ்சிபுரத்தானுக்குத் திகைப்பு ஒரு பக்கம். தமாஷ் மறுபக்கம். என்ன கொடுக்கிறார்கள் அப்படி? "நான் வாங்கிக் கொள்ளவில்லை இன்னும்,' என்றான்.

'இந்தா, பி.டி.' குரல் கேட்ட திசையில் கை நீட்டினான். நீட்டிய கையில் தரப்பட்டவை - இருட்டில் தெரியாவிட்டாலும், ஸ்பரிசத்தினால் உணர முடிந்தது

பொய்த் தாடி மீசை, பொய் முடி, மண் செம்பு, நீண்ட அங்கி, பாதக்குறடு...

மாறுவேடம் பைராகியைப் போல்! துள்ளியது காஞ்சிபுரத்தானின் உள்ளம். அருகிலிருந்தவர்களைப் போலவே அவனும் அணிந்து கொண்டான். மீசையும் தாடியும் கச்சிதமாய்ப் பொருந்தின. இனி ஆபத்தில்லை. இருட்டிலேயே வேடத்தை மாற்றிக் கொண்டாகி விட்டது!

'உஸ்! கவனமாய்க் கேளுங்கள், ' அது தலைவனின் குரல் போலும். கசமுசவென்ற பேச்சுக்கள் கப்பென்று அடங்கின. நிசப்தம் நிலவியது. தலைவன் தொடர்ந்தான்: 'இந்தக் கணம் முதல் நாம் போர் வீரர்களல்ல. பைராகிகள். சென்னைப் பட்டணம் சென்ற பிறகுதான் நமது அடுத்த வேலை என்னவென்று தெரியவரும். அது வரையில் இந்த வேடத்தைக் களையக் கூடாது. ஒருவரோடொருவர் எதைப் பற்றியும் பேசக் கூடாது. விவாதிக்கக் கூடாது. கோவிந்த ஹரி ஹரி, ஹரி ஹரி கோவிந்த - இப்படி ஆண்டவனின் திருநாமம் ஒன்றுதான் நம் வாயிலிருந்து வரக்கூடிய ஒரே ஓசை. புரிகிறதா? புறப்படுங்கள்.'

கும்பலாக அவர்கள் வீதிக்கு வந்தார்கள். கிழக்குத் திசையில் செக்கச் சிவந்த ஒளிப் பிழம்பும் புறப்பட்டுக் கொண்டிருந்தது.

ஹரே ராம் ஜெயராம்! உற்சாகமான கோஷத்துடன் புறப்பட்டார்கள். காஞ்சிபுரத்தான் எண்ணிப் பார்த்தான். ஏறத்தாழ ஐம்பது பேர் இருப்பார்கள். அனேகமாய் அவன் வயதையொத்த காளைகள் தான். ஆனால் எவனும் காஞ்சிபுரத்தானுடன் பேச்சுக் கொடுக்க முன்வரவில்லை. அதுவரையில் பிழைத்தோம் என்று எண்ணிக் கொண்டான்.

பகலெல்லாம் நசநசவென்று தூறல். பாதையெல்லாம் சொதசொதவென்று ஈரம். ஆயினும் நிற்காமலே அவர்கள் பயணம்

நடைபெற்றது. பூந்தமல்லி வரையில்தான். இரவு வந்தபோது மழையும் பலத்தது.

இறைவன் நாமாவளி தவிர எதுவும் கூறாதிருந்த தலைவன் இப்போது வாய் திறந்தான். "அதோ ஒரு கோவில் தெரிகிறது. ராத்திரிப் பொழுதை அங்கேயே கழிப்போம்.'

மின்னல் வெட்ட, மழை சொட்ட, இடி முட்ட, காஞ்சிபுரத்தானின் குழு கோவிலுக்குள் நுழைந்தபோது...

சுடச் சுடப் பொங்கல் வடித்துப் போட்டுக் கொண்டிருந்தார்கள் யாத்ரீகர்களுக்காக. பிராகாரத்தையொட்டிய மண்டபத்தில் அமர்ந்து, ஊதி ஊதி உண்ணலானான் காஞ்சிபுரத்தான். அருகிலிருப்போரை ஆராய்ந்தன அவன் கண்கள். பல பகுதியினர். பல நிறத்தவர். பல மொழியினர். ஆனால் அவர்களெல்லாம் உண்மையான பைராகிகள்.

விர்விர்ரென்று ஒலமிட்டது சுழற்காற்று. மழைத்தாரைகள் கூட, நாணலைப்போல் வளைந்து வளைந்து ஆடின. தடா லென்று ஒரு தென்னை மரம் வேரோடு சாய்ந்தது.

புறங்கையை நக்கிக் கொண்டிருந்த ஒருவன், 'ஊம்... பிரளயம்; பிரளயம்தான்!" என்று முனகினான்.

அவனுக்கு அருகிலிருந்த பைராகி சூள் கொட்டினான். "இந்த மழையெல்லாம் ஒரு மழையா? மைசூருக்கு வந்து பார்க்கணும் நீ.'

'அங்கேயிருந்தா வருகிறீர்கள் நீங்கள்?" காஞ்சிபுரத்தான் காதைத் தீட்டிக் கொண்டிருந்தான். முதல்வன் சொன்னான்: 'முந்தாநாள்வரை அங்கேதான் இருந்தேன்... அப்பப்பா என்ன மழை! என்ன உடைப்பு! என்ன வெள்ளம் மகாராஜா சிக்கதேவராயர் கட்டின அணை கூட உடைத்துக் கொண்டு விட்டது! வெள்ளம் அடித்துக் கொண்டு போய்விட்டது. காவேரியில் அதைப் பழையபடி கட்டவே முடியாதென்று சொல்கிறார்கள். ' -

காஞ்சிபுரத்தான் சட்டென நிமிர்ந்தான். தன் சகாக்களை நோக்கினான். மைசூர் மன்னர் காவேரியில் கட்டியிருந்த அணை உடைந்துவிட்டதாமே? இவர்கள் காதில் விழவில்லையா? அல்லது விழுந்தும் விழாதது மாதிரி நடிக்கிறார்களோ?

"சாமி! கொஞ்சம் ஊறுகாய் போடுங்கள்", சாக்கு ஏற்படுத்திக்கொண்டு இடத்தை விட்டு எழுந்தான் காஞ்சி புரத்தான். தன் குழுத் தலைவனின் அருகாகப் போய் அமர்ந்து கொண்டான். தாழ்ந்த குரலில் பேசினான்: 'மைசூரில் அணை உடைந்து விட்டதாம். கேட்டீர்களா?'

'ஊம், ஊம், ' எவ்வித ஆவலும் படபடப்பும் காட்ட வில்லை தலைவன். பொங்கலை உருட்டி உருட்டி விழுங்கிய படி இருந்தான்.

காஞ்சிபுரத்தானுக்கு ஏதோ ஒருவித சந்தேகம் முளைத்து விட்டது. 'இல்லை... அந்த அணையினால்தான் தஞ்சாவூர், திருச்சிக்கெல்லாம் தண்ணிர் வராமல், விளைச்சல் இல்லாமல், பஞ்சம் ஏற்பட்டதாம். அதை உடைக்க வேண்டுமென்று...'

'யாரடா இவன் பைத்தியக்காரன்?' எள்ளி நகையாடினான் அந்தப் பைராகி கோஷ்டியினரின் தலைவன். 'கட்டின அணையைப் போய் எவனாவது உடைப்பானா? பஞ்சத்திலே நாலுபேர் செத்தால் என்ன குடி முழுகிவிடும்? சரி சரி. உனக்கும் எனக்கும் ஏன் அந்தக் கவலை? நம் வேலையில் நாம் கண்ணாக இருந்தால் போதும். கம்மென்றிரு.'

மூச்சே நின்றுவிட்டது காஞ்சிபுரத்தானுக்கு. திடீரென்று உண்மையும் புலப்பட்டது. இவர்களுக்கும் மைசூர் அணைக்கும் எத்தகைய சம்பந்தமும் கிடையாது. ஏதோ ஒரு தவறுதலினால் தப்பான குழுவில் அவன் நுழைந்திருக்கிறான்!

என்ன தப்பு? எப்படி நேர்ந்தது அது? மண்டையை உடைத்துக் கொண்டான் காஞ்சிபுரத்தான். தெளிவு ஏற்பட வில்லை.

மெல்ல எழுந்தான். வேறொரு தோழனின் பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டான். மழை நின்றிருந்தது. மண்டபத்தின் கூடுவாய் முனைகளில் கடைசிச் சொட்டுகள் வடிந்து கொண்டிருந்தன.

“என்ன ஊர் இது, அண்ணே?' தோழனை விசாரித்தான். 'பூந்தமல்லி. " 'பூந்தமல்லி, பூந்தமல்லி' என்று நாலைந்து முறை சொல்லிக் கொண்டான் காஞ்சிபுரத்தான். 'என் பெண்சாதி குழந்தைகளெல்லாம் ரொம்ப மோசம், அண்ணே. சுத்தத் தொல்லை."

'ஏன், என்ன செய்கிறார்கள்?' மற்றவன் கேட்டான். 'அதை ஏன் கேட்கிறாய், போ ஊருக்குத் திரும்பியதும் துளைத்து விடுவார்கள், துளைத்து. எந்தெந்த ஊருக்குப் போனிர்கள், எங்கெங்கே தங்கினர்கள் என்று கேள்வி மேல் கேள்வியாய்ப் போடுவார்கள். அவர்களுக்காகவே நான் ஒவ்வொன்றையும் கேட்டுக் கேட்டுத் தெரிந்து கொண்டு, நெட்டுருப் போட்டுக் கொள்வது வழக்கம். '

'சுத்தப் பெண்டாட்டி தாசனாயிருக்கிறாயே!'' மற்றவன் சிரித்தான்.

"என்ன செய்வது அண்ணே! என் தலையெழுத்து வந்து... நேற்று இரவு திருக்கழுக்குன்றத்திலே நாம் தங்கியிருந்தோமே, அது என்ன சத்திரம்?"

'சின்னச் சத்திரம். ' 'சின்னச் சத்திரமா? அப்படியானால் பெரிய சத்திரமென்று ஒன்று இருக்கிறதா?''

"ஆமாம். கோவிலுக்கு இடப்புறம் இருப்பது சின்னச் சத்திரம். வலப்புறம் பெரிய சத்திரம். '

காஞ்சிபுரத்தான் நாக்கைக் கடித்துக் கொண்டான். புரிந்து விட்டது. மைசூர் அணையை உடைக்கப் புறப்பட்ட குழுவினர் பெரிய சத்திரத்தில் தங்கியிருந்தார்கள் போலும். சின்னச் சத்திரத்தில் இருந்த இன்னொரு குழுவில் காஞ்சிபுரத்தான் சேர்ந்துவிட்டான்.

மேலும் ஏதோ கேட்க வாயெடுத்தான். ஆனால் 'அண்ணே... ' என்று ஆரம்பித்ததுதான் தாமதம்

'யாரப்பா அங்கே தொணதொணவென்று? மற்றவர்களெல்லாம் தூங்குவதா வேண்டாமா?' என்று எவனோ அதட்டினான், மண்டபத்தின் மறுகோடியிலிருந்து.

அனைவரும் உறங்கத் தொடங்கிவிட்டதை அப்போதுதான் கவனித்தான் காஞ்சிபுரத்தான். தானும் பேசாமல் படுத்தான்.

இப்போதும் மோசமில்லை. எவருக்கும் தெரியாமல் நழுவி விடலாம். முதலில் மேற்கொண்ட பணியையே தொடரலாம் மீண்டும். ஆனால், ஆனால்...

காஞ்சிபுரத்தானின் உள்ளம் குறுகுறுத்தது. இந்தக் குழு மைசூருக்குப் போகவில்லையென்றால் வேறெங்கே போகிறது? ஏன் இத்தனை ரகசியம்? எதற்காக இந்த வேடம்? ஒளிவு மறைவு?

இதையும் பார்த்துவிடலாம் என்று உறுதி கொண்டான்.

அடுத்த நாள் விடியற்காலை அவர்கள் பயணமானார்கள். வெய்யில் ஏறுமுன் அவர்கள் அடைந்தது, வேப்பேரியை.

கிராமமெங்கும் கோலாகலமாயிருந்தது அன்றைய தினம். தோரணம் கட்டடப்பட்டிருந்தது ஆங்காங்கே. வாழை மரமும் நாட்டப்பட்டிருந்தது பல இடங்களில். முகலாயப் படை வீரர்கள் சிலரும், கும்பினிச் சிப்பாய்கள் சிலரும் குதிரையில் ஆரோகணித்துச் சஞ்சரித்துக் கொண்டிருந்தார்கள்.

காஞ்சிபுரத்தான் எவரையும் விசாரிக்கவில்லை. அவனுடைய சகாக்களின் பேச்சே விளக்கிவிட்டது.

'பாவம், இந்த வேப்பேரி பெரிய தலைவலியாயிருந்தது, கும்பினியானுக்கு. லிங்கப்பாவின் ஆட்களும் ஜனக்மார்களும் இங்கேதான் முகாம் போட்டிருப்பார்கள் எப்போதும்.

கும்பினிக்காரர்களுக்காகக் கோட்டைக்கு எந்தச் சரக்குப் போவதானாலும் இந்த வழிதானே? அந்த வண்டிகளை வழி மறிப்பார்கள். ஒன்று, கொள்ளையடிப்பார்கள். அல்லது எக்கச் சக்கமாய்ச் சுங்கப் பணம் வசூல் பண்ணுவார்கள், அம்மாடி! அந்தத் தொல்லையெல்லாம் நீங்கிவிட்டது கும்பினியானுக்கு. அந்தச் சந்தோஷத்தைத்தான் இப்படிக் கொண்டாடுகிறார்கள்!"

காஞ்சிபுரத்தானால் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. 'இப்போது மட்டும் எப்படி அந்தத் தொல்லை நீங்கியது?"

"இவன் ஒரு மண்டு," என்று திட்டினான் தோழன். 'உலக நடப்பு எதுவும் தெரியாத மக்கு ஏனடா, ஜூல்பிகர்கான், ஜூல் பிகர்கான் என்றாவது கேள்விப்பட்டிருக்கிறாயோ இல்லையோ? டெல்லி பாதுஷா இருக்கிறாரே. அவருடைய தளபதி மகா சூரன். கண்ணால் பார்த்தாலே மூர்ச்சை போட்டு விழுந்துவிடுவாய் நீ!'

காஞ்சிபுரத்தான் சிரமப்பட்டுத் தன் புன்னகையை மறைத்துக் கொண்டான். "கேள்விப்பட்டிருக்கிறேன். அவருக்கு என்ன? '

'பாவம், கொஞ்சம் போதாத காலம். செஞ்சியில் தோற்றுப் போய், அவருடைய படைவீரர்கள் பல பேர் சென்னைப் பட்டணத்துக்கு ஓடிவந்தார்கள். கும்பினியான் அவர்களுக் கெல்லாம் இடம் தந்தான். வேலை கொடுத்தான். சோறு போட்டான். காப்பாற்றினான். அந்த நன்றி மறக்கவில்லை ஜூல்பிகர்கான். இந்த வேப்பேரி, எழும்பூர், புரசைவாக்கம், தொண்டையார்பேட்டை கிராமங்களைக் கும்பினியானுக்குப் பட்டா எழுதித் தந்திருக்கிறார். கும்பினியானே இனி ஆண்டு அனுபவிக்கலாம். அந்தச் சந்தோஷத்தைத்தான் கொண்டாடுகிறார்கள் கோலாகலமாய். புரிந்ததா? மர மண்டையில் ஏறிற்றா?'

'ஏறிற்று அண்ணே, ஏறிற்று". அசல் அசடு போலவே இளித்தான் காஞ்சிபுரத்தான். அதே சமயம்

டகடகவென்று குதிரைகளின் காலடியோசை தொலைவில் கேட்டது. புழுதி மண்டலம் வானை நோக்கி எழுந்தது.

பைராகிகளின் தலைவன் கட்டளையிட்டான்: 'உஸ்! கும்பினி துரைதான் வருகிறார். ஒழுங்காக நில்லுங்கள். இங்கேதான் சந்திப்பதாக ஏற்பாடு."

காஞ்சிபுரத்தானின் புருவங்கள் நெரிந்தன. ஒகோ! கும்பினியானுடன் சேர்ந்து செய்கிற சதியா? எதிர்பார்த்ததைக் காட்டிலும் பெரிய விவகாரம்தான்.

இரண்டு குதிரைகள் நெருங்கி வந்தன. ஒன்றில், பரங்கித் துரை, மற்றதில், அவருடைய துபாசி.

தெருவோரத்தில் அணிவகுத்து நிற்கும் ஐம்பது பேரையும் குதிரையிலிருந்தவாறே கண்காணித்தார் துரை. துபாசியிடம் ஏதோ கேட்டார்.

துபாசி சொன்னார்: "நீங்கள்தானே சிங்காவரம் செல்லப் போகிறவர்கள் என்று துரை கேட்கிறார்.'

"ஆமாம்.' துரை மீண்டும் ஏதோ சொல்ல, துபாசி மறுபடியும் மொழி பெயர்த்தார்: "ரகசியமான வேலை. எல்லோரும் நம்பிக்கைக்குரியவர்கள்தானா?"

'ஆமாம்.' படபடத்தது காஞ்சிபுரத்தானின் உள்ளம்- சிங்காவரம் என்று கேட்டதும்.

ரகுநாதரும் பெரியபெத்துவும் கைகோத்து வேலை செய்து, பெரிய திட்டத்தில் இறங்கிவிட்டார்கள். அதில் கும்பினியானும் ஒரு பங்காளி சந்தேகமில்லாமல் புரிந்தது காஞ்சிபுரத்தானுக்கு.

## (24)

சென்னை மீண்டும் சென்னை! வாலிபத்தை வரவேற்கும் சென்னை புதுமைக்குப் போற்றி பாடும் சென்னை! சாமர்த்தியத்துக்குச் சவால் தொடுக்கும் சென்னை! இளமைக்கு ஆரத்தி எடுத்து, சாகசத்துக்குச் சந்தனம் பூசி, துணிச்சலுக்குப் பன்னீர் தூவி, தீரத்துக்குத் தாம்பூலம் தந்து, ஆண்மைக்கு ஆலவட்டம் வீசும் அழகுப் பெட்டகமான சென்னைப் பட்டணத்தினுள் நுழைந்து கொண்டிருந்தான் காஞ்சிபுரத்தான்.

பழகிய இடங்கள். அனுபவித்த சூழ்நிலை. காஞ்சிபுரத்தானின் இதயத்தில் தென்றல். ஏதேனும் மாய ஔடதம் அருந்தினானா, என்ன? தேகத்திலே அப்படி யென்ன புத்துணர்ச்சி!

பழைய நினைவுகள் - இனிய நினைவுகள்- தாமரையுடன் கழித்த தண்மையான சந்தர்ப்பங்களின் மயக்கு நினைவுகள்

அவன் நெஞ்சில் குமிழ்த்துக் குமிழ்த்துப் பூத்தவாறிருந்தன.

பைராகிகள் குழு சென்னைப் பட்டணத்தினுள் நுழைந்து கொண்டிருந்தது. ‘‘சில நாட்கள் கோட்டையில் தங்கியிருக்க வேண்டும். பிரத்தியேகமான தளவாடங்கள் கல்கத்தாவிலிருந்து வரவழைக்க வேண்டியிருக்கிறது,' என்று கூறினான் வேப்பேரியில் அவர்களைச் சந்தித்த கும்பினித்துரை.

நகரத்தினுள் நுழைந்த வழி, காஞ்சிபுரத்தானின் நினைவுகளைக் கிளறும் வழி.

இதோ கசையடி விடுதி. சாட்டையைச் சுழற்றிக் கொண்டு உலவும் இந்த முரடர்களுக்கு மட்டும்

இதோ பைராகி வேடத்தில் போகிறான், அன்றொரு நாள் தங்களை மண்ணிலே போட்டுப் புரட்டுப் புரட்டென்று புரட்டியவன் என்பது தெரிந்தால் தன்னுள் சிரித்துக் கொண்டான் காஞ்சிபுரத்தான்.

தாமரையின் துவளும் கைகளைப் பற்றியபடி வெளியே ஒடிய தெரு இதோ வருகிறது. அதோ, அந்தக் கடையில் சுவரில் சாய்ந்து நின்றாள் அவள். சீரடிகள், சாட்டையடியால் புண்ணாகிச் சிவந்து தெரிந்தது இங்கேதான். 'வா, வா. இன்னும் கொஞ்சதூரம், ' என்று அவள் தோளை அணைத்து மெல்ல இழுத்தது - இப்போது கூடக் கையில் என்ன குளிர்ச்சி!

தாமரை, தாமரை, அரண்மனை வாழ்வும் அரச போகமும் வேண்டாம். வேண்டவே வேண்டாம். உனக்கு மகுடமும் எனக்கு வாளும் தேவையில்லை. பழையபடி அடிமையும் நாடோடியுமாக இருந்து விடலாம்.

'இப்படி வரிசையாக நில்லுங்கள்.' விழித்துக் கொண்டான் காஞ்சிபுரத்தான். புரிந்தது கும்பினியானின் கோட்டைக்குள் நுழைந்தாயிற்று என்று. கவர்னர் அலுவலகத்தின் முன்னுள்ள மைதானம். பைராகி களை வரிசையாக நிறுத்தி வைத்தான் குழுத்தலைவன்.

கும்பினிப் படைத்தலைவர்கள் நாலு பேர் வந்தார்கள். ஏற இறங்கப் பரிசீலனை செய்தார்கள். காஞ்சிபுரத்தானின் தாடியைப் பிடித்து இழுத்தார் ஒருவர். ‘‘சரியாய் ஒட்டிக் கொள், ' என்று சொல்லிவிட்டு நகர்ந்தார்.

காஞ்சிபுரத்தானின் தாடிக்குப் பின்னே நகைப்பு வெடித்தது. இதே அதிகாரிதான் முன்னொரு நாள் அவனைக் கூப்பிட்டவர். கப்பலில் வந்திறங்கிய மனைவிக்கு மொட்டையடிக்கும்படி காஞ்சிபுரத்தானை ஏவியவர். அவருக்கே அவனை அடையாளம் தெரியவில்லை.

ஒரு புது உத்தரவு பிறந்தது திடீரென:

'நீங்கள் மறுபடி புறப்பட மூன்று தினங்களுக்கு மேலாகும். அதுவரை ஏன் இந்தப் பண்டார வேடம்? களைந்து வையுங்கள். வேறு சாதாரண உடை தரச் சொல்கிறேன்!"

அப்பாடா! தொல்லை விட்டது! சந்தோஷமாகத் தாடி மீசைகளைப் பறித்து எறியத் தொடங்கியது குழு.

திக்கென்றது காஞ்சிபுரத்தானுக்கு. இதோ, இதோ அவன் முறை.

திருக்கழுக்குன்றத்திலிருந்து தொடர்ந்து வந்து கொண் டிருக்கும் தோழன் செந்தில் அல்ல இவன் என்று மற்றவர்கள் அறியும்போது...!

இங்குமங்கும் பார்த்தான். "இருங்கள், இருங்கள்!' இன்னோர் அதிகாரி எங்கிருந்தோ வந்து கைகொடுத்தார். 'யார் சொன்னது உங்கள் வேடத்தைக் கலைக்கும்படி? இதுதான் பாதுகாப்பானது. யாருக்கும் சந்தேகம் ஏற்படுத்தாதது. டவுனில் எங்கு வேண்டுமானாலும் போகலாம், வரலாம். இப்படியே இருங்கள், ' என்றார்.

முணுமுணுத்தவர்கள் பலர். மகிழ்ந்தவன் காஞ்சிபுரத்தான் ஒருவன்தான்.

கோட்டையில், குதிரை லாயத்தையடுத்த ஒரு பழைய மண்டபத்தில் அவர்களைத் தங்க வைத்தார்கள். சாப்பாடு பரிமாறியவன் அந்தப் பழைய குசினிக்காரன்தான். ஆனால் அவனும் இனம் காணவில்லை.

நடைக் களைப்புத் தீர மூலைக்கொருவராக முடங்கிய போது

காஞ்சிபுரத்தானுக்கா உறக்கம் வரும்? மெல்ல வாசலை நோக்கி உருண்டான். சுவர்களின் ஓரமாகப் பதுங்கிப் பதுங்கி நடந்தான்.

சிவசிதம்பரத்தை இப்போது எங்கே அடைத்திருப்பார்கள்? அவர் என்ன செய்து கொண்டிருப்பார்?

கும்மென்ற நிசப்தம் வெளியுலகை ஆக்கிரமித்திருந்தது. சுவர்க்கோழி இரண்டொன்று அவனைப் போலவே தூக்கம் பிடிக்காமல் முனகிக் கொண்டிருந்தன.

டம டம டம டம

குபிரென ஒளிந்தான் காஞ்சிபுரத்தான். வழியில் இருந்த கிணற்றைப் பார்த்தவன், குறுக்கே கிடந்த வாளியைப் பார்க்கவில்லை. அதில் இடறப்போய்...

சிறு சந்தடிகள் கேட்டன. காஞ்சிபுரத்தானின் இதயம் படபடத்தது. ஒற்று வேலைக்காகக் கோட்டைக்கு வரவழைக்கப்பட்ட பண்டாரம் கோட்டையிலேயே உளவு பார்ப்பதைக் கண்டால்...!

அவன் பயத்துக்கேற்றபடியே.... சில்லென்று அவன் முதுகை எதுவோ தொட்டது. யாருடைய கரம்? திரும்பிப் பார்த்தான். யாரும் அருகில் இல்லை. அப்படியானால்...

முதுகில் ஒட்டிய பச்சோந்தியைக் கீழே தள்ளவும், எதிரில் அந்தப் பாதிரியார் காட்சியளிக்கவும் சரியாயிருந்தது.

'என்ன தம்பி, சௌக்கியமா? இன்னுமா பட்டணம் பார்த்து முடிக்கவில்லை?"

காஞ்சிபுரத்தான் சமாளிக்க முயன்றான். 'வந்து... நீங்கள் என்னைத் தப்பாக... '

'இருக்கலாம், இருக்கலாம்", அவசரமாய் ஒப்புக் கொண்டார் பாதிரியார். திரும்பிய செல்லப் பச்சோந்தியைத் தடவிக் கொடுத்தார் பிரியமாக, "நான வயதானவன். பார்வை போதாது. ஞாபக சக்தி குறைவு. அதனால் தப்பாய் நினைத்திருப்பேன்...'

காஞ்சிபுரத்தான் நிம்மதியுடன் நழுவ நினைத்தான். 'நில், ' என்றார் பாதிரியார். 'ஆனால் என் மோசஸுக்கு வயதாகவில்லை. பார்வையில் தீட்சண்யம் அதிகம். ஞாபக சக்தி அபாரம். ஜாதி நாய்கூட நிற்கமுடியாது, இதன் மோப்ப சக்திக்கு முன்னால். ஆகவே, நீ என் பழைய நண்பனான காஞ்சிபுரத்தான்தான் என்பதில்...'

ஊமையாகி நின்றான் காஞ்சிபுரத்தான். அமைதியாகத் தொடர்ந்தார் பாதிரியார்: 'முந்தின தடவை நீ வந்தபோது கோட்டையை நன்றாய்ப் பார்க்க முடியவில்லையாக்கும்? சரி, சரி, சுற்றிப் பார்" கண்ணில் ஒரு ஜாடை மின்னியது. 'ஆனால், இப்படி நேரே வடக்கே சென்றால், உனக்குப் பிடித்தமான காட்சி கிடைக்கும்.'

பச்சோந்தி பின்தொடரப் பாதிரியார் போய்விட்டார். சில வினாடிகளுக்குப் பின்னரே அவர் சொன்னதன் பொருள் புரிந்தது. சுட்டிக் காட்டிய திசையில் நடந்தபோது

தனித்திருக்கும் கொட்டடி; மினுக்கிடும் விளக்கொளி; புழுதியில் தோய்ந்த அமைதி; குறுக்கும் நெடுக்குமாய் உலவும் அந்தப் புலி யார்?

'ஐயா, ' என்றழைத்தான் காஞ்சிபுரத்தான் பயபக்தியோடு. நீர் மறைத்தது அவன் பார்வைக்கு. சுதந்திரக் கனல் வீசும் சிவசிதம்பரமா இவர்? முன்னே தோல் சுருங்கியிருந்தது. இப்போது எலும்பும் நீட்டிக் கொண்டிருந்தது.

'வாழ்க விடுதலை! வா தம்பி!' கம்பியினருகே வந்து நின்றவர் அவனை யாரெனக் கண்டுகொண்டார்.

'யாரும் வருகிறார்களா பார், ' என்றார் சிவசிதம்பரம். காஞ்சிபுரத்தான் பார்த்தான். 'இல்லை ஐயா" சிவசிதம்பரம் குனிந்தார். சிப்பாயைப் போல் அவர் முழங்காலில் சிவப்பு நாடா சுற்றப்பட்டிருந்தது. அதைப் பரபரவென்று பிரிக்கலானார்.

மெழுகுவர்த்தியின் வெளிச்சத்தில் தெரிந்தது வெளிப்பக்கம் சிவப்பு நாடா; உள்புறம் ஒரு வரைபடம். 'பிடி, ' நாடாவைச் சுருட்டினார் சிவசிதம்பரம். காஞ்சிபுரத்தானின் கையில் கொடுத்தார். 'இந்தக் கோட்டையின் அமைப்பைக் காட்டுகிற படம் அது. '

எப்படி அதை மறைப்பது? காலில் சுற்றிக்கொள்ள முடி யாதே பைராகி வேடத்தில்?

'வயிற்றைச் சுற்றி, வேட்டிக்கு உட்புறம். சிவசிதம்பரம் சொல்லித் தந்தார்.

செய்து முடித்த காஞ்சிபுரத்தானின் அடுத்த கேள்வி: "எங்கே சேர்ப்பிக்க வேண்டும்?"

'பரங்கிப்பேட்டை பக்கம். டச்சுக்காரர்கள் முகாம்.' காஞ்சிபுரத்தான் தயங்கினான். சிவசிதம்பரம் புன்னகை பூத்தார்: 'இன்றைக்கே புறப்பட்டால் சந்தேகம் வரும். நாளைக்குப் போ. டச்சுக்காரர்களிடம் கொடு. சிங்காவரத்துக்கு வரக்கூடிய ஆபத்தையும் அவர்கள் சேர்த்துச் சமாளிப்பார்கள். போ. காதலியைப் பற்றிக் கவலைப்படாதே."

பிரமித்தான் காஞ்சிபுரத்தான். 'ஐயா... நான்... உங்களுக்கு அதெல்லாம் எப்படித் தெரிந்தது? நான் சொல்லவில்லையே?"

'எனக்குத் தகவல் கொண்டுவருகிறவன் நீ ஒருவன் தானா? போ. யாரோ வரும் ஓசை கேட்கிறது.'

அடுத்த நாள் பிற்பகல். கோட்டையில் நாலு தரம் மணி அடித்தது. ஆர்மீனியனொருவனுடன் சொக்கட்டான் ஆடிக்கொண்டிருந்த காஞ்சிபுரத்தான் சோம்பல் முறித்துக்கொண்டு எழுந்தான். 'கடலில் நீச்சலடிக்கப் போகிறேன். '

சந்தேகத்துக்கிடமில்லாமல்தான் நழுவினான். அப்படியும் "செந்தில்!' என்ற அழைப்பு நிறுத்தியது.

பைராகிக் குழுவின் தலைவன் பரங்கித்துரையிடம் சொன்னான்: "இதோ வரும் செந்தில் எனக்கு நம்பிக்கையான ஆள். கெட்டிக்காரன். அழைத்துப் போங்கள். '

'தயாராயிரு. ' தமிழ் பேசிய துரை இன்னொருவரையும் கூட்டி வர உள்ளே விரைந்தார்.

காஞ்சிபுரத்தானுக்குப் பிடிக்கவேயில்லை. "நான் போகுமிடம் எனக்கே தெரியக் கூடாதா?''

'பயப்படாதே. உன்னைப்போல் நாணயமானவர்கள் மட்டுமே போகக்கூடிய இடம் - கும்பினியின் நாணயச் சாலை."

‘‘என்ன அங்கே?'

'சீமையிலிருந்து வருகிற தங்க வில்லைகளைப் பொற் கொல்லர்களிடம் கொடுப்பார்கள். அவைகளில் முத்திரை அடித்து எடுத்து வரவேண்டும். கண்ணில் விளக்கெண்ணெய் போட்டுக்கொண்டுதான் கவனிக்கிறார்களாம். அப்படியும், சரியான முத்திரை இல்லாத, எடைக் குறைவான நாணயங்கள் கலந்துவிடுகிறதாம். உன்னைப்போல் உள்ளூர் ஆள் ஒருவன் இருந்தால், கள்ள நாணயம் எப்படிக் கலக்கிறது என்று கண்டு பிடிக்கலாம் என்கிறார்கள்...'

காஞ்சிபுரத்தான் குறுக்கிட்டான்: ''எனக்கு வேறு வேலை இருக்கிறது...'

தலைவனின் குரலில் சீற்றம் தொனித்தது. 'செந்தில் வர வர நீ ரொம்ப மாறிவிட்டாய்."

அதற்குமேல் காஞ்சிபுரத்தான் எதிர்க்கவில்லை.

''என்ன அது, உள்ளே ஏதோ சத்தம்? பரங்கிகளில் ஒருவன் அதட்டினான்.

இடம்: அடிமைகள் வசிக்கும் பேட்டை.

இரண்டு பொற் கொல்லர்களும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். 'அது ஒன்றுமில்லை, ஐயா. வேறே சொந்த விஷயம், ' மூடி மறைத்தார் ஒருவர்.

'ஊம், ஊம், வேலை ஆகட்டும் சீக்கிரமாய். ' இரண்டா வது துரையின் குரலில் எரிச்சல். காரணம் இருந்தது அதற்கு. அவன் ஊருக்குப் புதிது, பழக்கங்களுக்குப் புதிது. தன் சகாவைப் போல, சப்பணமிட்டு உட்காரத் தெரியவில்லை. நின்று கொண்டிருந்தான் நெடுநேரமாக. திண்ணையின் மீது வலது காலைத் தூக்கி வைத்திருந்தான். முழங்காலில் வலது கை ஊன்றியிருந்தது. முகமெல்லாம் கடுகடுப்பு.

ப்பூ ப்பூ ப்பூ, உஸ்... உஸ்... ஊதாங்குழல் கீதமிசைத்தது. புடம் போட்ட உமி, நெருப்பை உமிழ்ந்தது. பளபளவென்ற பொற்காசுகள் வெண்ணெய் போல் துவண்டன. இளகிய வில்லைகளில் கும்பினியின் இலச்சினையைப் பதித்து ஓங்கி அடித்தான் மற்றவன். இருபுறமும் தேவிமார் சூழ்ந்த வெங்கடேசப் பெருமாளின் திருவுருவம் பளிரென்று விழுந்தது. துருத்தி அடித்துக் கொண்டிருந்த சிறுவன், நாணயங்களை ஒவ்வொன்றாய் எடுத்து, தண்ணிர்ச் சட்டிக்குள் போட்டான். சொய், சொய், சொய் என்று ஒரே ராகம்.

பரங்கி, ஒரு சிறிய வெள்ளித் தராசு கொண்டு வந்திருந்தான். ஒவ்வொரு காசையும் தனித்தனியே நிறுத்தினான். இரும்புப் பெட்டியில் வைத்து மூடிக்கொண்டான்.

கவனித்துக் கொண்டுதான் இருந்தான், எட்டத்தில் மார் மீது கை கட்டி நின்றிருந்த காஞ்சிபுரத்தான். உதட்டிலே துயரச் சிரிப்பு. உள்ளத்திலே பொங்கும் ஆத்திரம். பொற் கொல்லர்களின் வற்றிய உடல்களை ஆராய்ந்தான். ரத்தம் வந்தது கண்ணில். சிறப்புமிக்க தொழிலாளிகள் எப்படிச் சீரழிந்த அடிமைகளாகி விட்டார்கள் மாதரார் மேனிகளை அழகு செய்த கைகள், கும்பினியான் காசுக்கு முத்திரை அடிக்கின்றன!

சுளிர் !

'அம்மா' என்று அலறினான் பொற்கொல்லச் சிறுவன். அவன் முதுகைப் பதம் பார்த்த பரங்கியின் சாட்டை, வெறி யுடன் சிரித்தாடிக் கொண்டிருந்தது.

பொற்கொல்லர்களில் ஒருவன் - சிறுவனின் தகப்பன் போலும் - பரிதாபமாகப் பையனைப் பார்த்தான். இரக்கம், அனுதாபம், கையறு நிலை - தகப்பனின் கண்களில் நீர் திரண்டு நின்றது.

'காசை எடுக்கிறபோது கை சுட்டது அப்பா. வாய்கிட்டே வைத்து ஊதினேன். திருடுகிறேனென்று துரை நினைத்து விட்டார்." பையன் விம்மினான்.

சவுக்கு நக்கிய இடத்தைத் தந்தை தடவிக்கூடத் தரவில்லை. ஆண்டைகளான பரங்கியரிடம் அத்தனை அச்சம். யந்திரம்போல், சாமணத்தால் காசுகளைப் புரட்டிக் கொண் டிருந்தான்.

சுளிரென்று முதல் சவுக்கடி விழுந்ததுமே, 'ஹூம்' என்ற உறுமலுடன் குறுக்கே வந்து நின்றான் காஞ்சிபுரத்தான்.

அவன் கண்களில் தெறித்த சீற்றம், உடம்பில் தெரிந்த துடிப்பு - பரங்கியின் கையைத் தடுத்து நிறுத்தின.

வீட்டுக்குள்ளேயிருந்து மீண்டுமொருமுறை ஏதோ சந்தடி கேட்டது. பொற்கொல்லர்களில் ஒருவன் எழுந்தான். 'போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன், ' என்றான் மற்றவனிடம்.

'ஊஹூம், ' வழியை மறித்தான் பரங்கி. 'நான் எதுவும் கடத்திக் கொண்டு போகவில்லை ஐயா. பரிசோதித்துக் கொள்ளுங்கள் நன்றாய், வேட்டியை உதறிக் காட்டினான்.

“எதற்காகப் போகிறாய்?"

'வந்து... என் பெண்சாதி... பிரசவ சமயம்...'

'அந்தக் கதையெல்லாம் நடக்காது. நானும் வந்து பார்க்கிறேன், வா. '

கையைப் பிசைந்தான் முதல்வன்: 'ஐயா, ஐயா, பெரிய மனது பண்ணுங்கள். ஆண்களே போகக்கூடாத இடம் அது. நீங்கள் அன்னியர்கள்...'

'உன்னை நம்ப முடியாது", வாசலைக் கடந்தது பரங்கி யின் கால்.

சில அடிகள்தான். பின்னுக்கிழுத்தது காஞ்சிபுரத்தானின் கரம்.

தீ கக்கின அவன் சொற்கள்: 'உள்ளே போனாயோ, கொலை கொலைதான். மானம் பெரிது தமிழர்களுக்கு."

அயர்ந்து போனார்கள் இரண்டு துரைமார்களும். துணைக்கு அழைத்து வந்த பரதேசி என்ன துடுக்காய்ப் பேசுகிறான் 'ஏய்! இவர்கள் திருட்டுக்கு நீயும் உடந்தையா!' என்று சீறினான் ஒருவன்.

பதிலடி கிடைத்தது உடனேயே. 'இவர்களிடம் திருட்டுத்தனம் இல்லை. உன்னிடம்தான் குருட்டுத்தனம். பார்த்த மாத்திரத்திலேயே எவன் குற்றவாளி, எவன் நிரபராதி என்று கண்டறிய என்னால் முடியும்.'

உள்ளேயிருந்து ஒரு கிழவி வந்தாள். 'உடனே வாங்க. உள்ளே வைத்தியர் கூப்பிடுகிறார், ' என்று அந்தப் பொற் கொல்லரை அழைத்தாள்.

'ஐயா, எனக்குத் தயவு பண்ணி அனுமதி கொடுங்கள்,' கெஞ்சினான் அவன்.

'நீ போ", பரங்கியைத் தடுத்து நிறுத்திக்கொண்டு, பொற்கொல்லருக்கு வழிவிட்டான் காஞ்சிபுரத்தான்.

'அயோக்கியன், திருடன்" பரங்கியின் முகம் சிவந்தது.

"பொறுமையாயிரு, ' காஞ்சிபுரத்தான் சிரித்தான். 'கள்ளக் காசு உற்பத்தியாகும் இடம் இதுவல்ல. நிச்சயமாய்த் தெரிகிறது எனக்கு. '

'பின்னே? "

"வேறு எந்த இடம் என்று விரைவில் தெரிந்து கொள் வேன். உனக்கும் சொல்கிறேன். '

"குவா, குவா, குவா. பூமியைத் தொடும் சிசுவின் முதல் குரல். 'பார்த்தாயா? கேட்டாயா? நம்பமாட்டேன் என்றாயே?" காஞ்சிபுரத்தான் மடக்கினான் துரைமார்களை.

'சரி, சரி. அதைத்தான் விட்டுவிட்டோமே. நீ கண்டுபிடிப்பதாகச் சவால் விட்டிருக்கிறாய். அதைக் காப்பாற்று. '

'இந்தா. நாக்கை நீட்டு, ' கிழவி கொணர்ந்த சர்க்கரையில் இரண்டு சிட்டிகை எடுத்துப் பரங்கிகளின் வாயில் போட்டான் காஞ்சிபுரத்தான்.

ஐந்து பெட்டிக் காசுகள் தயாராகிவிட்டன. குதிரை வண்டியில் தானே கொண்டுபோய் வைத்தான் பரங்கி.

அடர்ந்த தோப்பின் வழியே ஓடிக் கொண்டிருந்தது வண்டி. கிளைகளும் இலைகளும் வண்டியின் கூரையில் மோதிச் சளசளத்தன. கொஞ்சம் நின்று பேசிவிட்டுத் தான் போயேன்!' என்பதுபோல் மலர்களும் கனிகளும் தலைகளை அசைத்தன.

சக்கரங்கள் உருண்டன, மனித வாழ்வில் விதி விளை விக்கும் மாறுதல்களைப் போல. மையிருட்டு நேரம். யௌவனப் பிராயத்தில் இருந்தது இரவு.

வண்டியோட்டியின் பக்கத்தில் உட்கார்ந்திருந்த காஞ்சிபுரத்தான் தூங்கித் தூங்கி விழுந்தான். இறுதியில், சாய்ந்தாற் போல் அமர்ந்தவன் சுகமான நித்திரையில் மூழ்கி விட்டானோ? சின்னக் குறட்டையொலி சன்னமாய்க் கேட்கத் தொடங்கியது.

தூங்கிவிட்டானா என்று பார்ப்பது போல் வண்டிக்காரன் அவன் முகத்தருகே குனிந்தான். 'இந்தாய்யா, விழுந்துவிடப் போகிறாய்' என்று சொல்லிப் பார்த்தான் மெதுவாக. ஆனால் தொட்டு எழுப்பவில்லை.

பரங்கிகள் இருவரும் குதிரையில் ஆரோகணித்து முன்னே போய்க் கொண்டிருந்தார்கள்.

வண்டியோட்டியிடம் லேசான பரபரப்பு ஏற்பட்டது. மேலே பார்ப்பதும் பக்கங்களில் பார்ப்பதுமாயிருந்தான். ஏதோ ஓர் அடையாளத்தை அவன் தேடுகிறான். நன்றாய்த் தெரிந்தது. நடுநடுவே காஞ்சிபுரத்தானின் முகத்தையும் ஆராய்ந்தவாறிருந்தான்.

புன்னகையைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டிருந்தான் காஞ்சிபுரத்தான். மயிரிழை இடைவெளிக்குக் கண்ணிமைகளைப் பிரித்து அவ்வப்போது பார்த்தவாறிருந்தான் அவன். வண்டியோட்டியின் பரபரப்பு விந்தையாயிருந்தது அவனுக்கு.

என்ன திட்டமிட்டிருக்கிறான் இவன்? என்ன செய்யப் போகிறான்?

மின்வெட்டு நேரம்தான் - நடந்துவிட்டது காரியம், ‘எப்படி? எப்படி?’ என்று நிதானிக்கக்கூட முடியவில்லை, காஞ் சிபுரத்தானால். ஆனால் கண்டு விட் டான் அந்த நிகழ்ச்சியை.

இரண்டு புளிய மரங்கள் அடுத்தடுத்துச் செழித்திருந்தன

பாதையில். தாழ்ந்திருந்த ஒரு மரத்தின் கிளையில் ஓர் ஆள் உட்கார்ந்திருந்தான். வண்டியோட்டி, நாணயப் பெட்டிகளில் ஒன்றைச் சரேலெனத் தன் பக்கம் இழுத்து, மேலே தூக்கினான். நீண்ட கரம் உடனே வாங்கிக் கொண்டது. அடுத்த மரத்தின் கிளையில் இன்னோர் ஆள். அவன் கரமும் தாழ்கிறது - ஒரு பெட்டியுடன். கும்பினிக்காரர்களின் பெட்டியைப் போலவே, அப்படியே அச்சாக இருக்கிறது அது. வண்டியோட்டி அதை வாங்கிக் கொள்கிறான். மற்றப் பெட்டிகளோடு வைக்கிறான்.

கனவு மாதிரி இருந்தது அத்தனையும். ஆனால் காஞ்சிபுரத்தான் புரிந்து கொண்டான். கும்பினியின் அசல் தங்க நாணயங்கள் களவாடப்படுகின்றன. அதன் இடத்தில் கள்ள நாணயம் புகுந்து கொள்கிறது.

'நிறுத்து வண்டியை!' காஞ்சிபுரத்தானின் கட்டளை தொண்டைவரை வந்துவிட்டது. அடக்கிக் கொண்டான்.

வளைந்து திரும்பியது வண்டி. "ஐயோ! தாங்க முடியவில்லையே!' என்று திடீரெனக் காஞ்சிபுரத்தான் அலறினான்.

திடுக்கிட்டுத் திரும்பினார்கள் பரங்கித் துரைகள். வண்டியோட்டி அதிர்ச்சியுடன் நிறுத்தினான்.

'என்ன? என்ன? ' என்று வினவினார்கள் மூவரும் காஞ்சிபுரத்தானைச் சூழ்ந்து கொண்டு.

'வயிற்று வலி தாங்க முடியவில்லை. கொஞ்சம் இருங்கள். இறங்கி உட்கார்ந்து கொள்கிறேன்... ' வண்டியி லிருந்து குதித்தான் காஞ்சிபுரத்தான்.

பரங்கித் துரைக்குக் கோபமான கோபம். 'டேய் விளை யாடுகிறாயா மறுபடியும், மறுபடியும்? சீ ஏறடா வண்டியில்."

ஆனால் அதிகம் பேசாத அந்த இரண்டாவது துரை கொஞ்சம் அறிவுள்ளவன். காஞ்சிபுரத்தானின் கண் ஜாடையைப் புரிந்துகொண்டான். வண்டிக்காரனுக்குத் தெரியாமல் இறங்கிக் கொள்ளவே அவன் திட்டமிட்டிருக்கிறான் என்று தெரிந்து கொண்டான்.

"சரி, சரி. உன் வயிற்று வலிக்கும் தலைவலிக்கும் கும்பினி நஷ்டப்படாது. நீ இங்கேயே நின்றுகொள். மெது வாக வா' என்று வண்டியோட்டிக்குக் கட்டளை பிறப்பித்தான். 'நீ ஒட்டு. '

குதிரைகள் பறந்தன. வண்டியின் உருவம் இருளோடு இருளாகக் கரைந்து போயிற்று.

அரை வினாடியும் வீணாக்கக் காஞ்சிபுரத்தான் விரும்பவில்லை. பெட்டிகள் மாற்றப்பட்ட இடத்தை நோக்கித் திரும்ப விரைந்தான் வேகமாக, ஆனால் ஓசைப்படுத்தாமல். சருகுகளை மிதித்துச் சரசரப்பு ஏற்படுத்தும் போதெல்லாம் பதுங்கிக் கொண்டான். மரக்கிளைகளில் தூங்கிக் கொண் டிருந்த புள்ளினங்கள் படபடவென்று இறக்கைகளை அடித்தன.

அந்த இடம் வந்துவிட்டது. அடிமேலடி வைத்து நடந்தான். கண்கள் இடுங்கிச் சுருங்கின, எதிரேயிருப்பதைக் கவனிப்பதில். செவிகள் நோவுற்றன, சின்னஞ்சிறு சப்தத்தையும் வாங்கிக் கொள்வதில்.

அதோ! ஒற்றைபடிப் பாதைபோல் தோன்றும் குறுகிய வழியில் அந்த இரண்டு நபர்களும் நடக்கிறார்கள்.

பின்தொடர்ந்தான் காஞ்சிபுரத்தான். வெகு தொலைவில் ஒரு கட்டடம் தெரிந்தது. ஆனால், மூட்டமிருந்த வானம் தெளிவான வெளிச்சம் தரவில்லை. ஓசையையே அடையாள மாக வைத்து நடந்தான்.

தூரத்தில் தெரிந்த மாளிகைக்கு ரகசிய வழி உண்டு போலும். ஓங்கிய சுவர்கள் முன்னே புலப்பட்டன. நெருங்கின. பிறகு பின்னடைந்தன. தோட்டப்பாதையும் ஒரு தாழ்வாரமும் வந்தன.

திடீரென அந்த இருவரும் மறைந்துவிட்டார்கள். காஞ்சிபுரத்தான் நிதானித்துக் கவனித்தான். ஆம். ஓசை எதுவும் கேட்கவில்லை. பக்கத்து வழியொன்றில் புகுந்து விட்டார்கள்.

தலையில் எதுவோ இடித்தது. திறந்த சாளரத்தின் கதவு. திரைச் சீலை காற்றில் ஆடியது.

விளிம்பில் கையை ஊன்றினான். ஒரே தாவல் - உள்ளே குதித்தான்.

குதித்தவன் திகைத்தான்.

மனமோகனமான ஒயிலுடன் மஞ்சத்தில் சயனித்திருந்தாள் பெரியபெத்துவின் மகள் தெய்வநாயகி.

## (25)

இது பெரியபெத்துவின் மாளிகைதான். இருட்டில் தெரியவில்லை. வலது கையை மடித்துத் தலையின் கீழே வைத்து உறங்கிக் கொண்டிருந்தாள் தெய்வநாயகி. பொன் வளையல்களில் பாதி, கூந்தலுக்குள் புதைந்திருந்தன. மல்லாந்து படுத்திருந்ததால் கழுத்திலிருந்த முத்து வடம் சரிந்திருந்தது முதுகை நோக்கி. தோளின் செழுமையும் செம்மையும் மெழுகுவர்த்தியின் வெளிச்சத்தில் மேலும் அழகுபட்டன. அறையின் மெல்லிய நறுமணம், ஊதுவத்தியில் உற்பத்தியானதல்ல; அவள் மேனியினின்றே வந்தது.

கட்டிலை அணுகினான் காஞ்சிபுரத்தான். குனிந்து ஆராய்ந்தான். ஐயமில்லை. ஆழ்ந்த உறக்கம்தான். பாலைவனத்து நிலவு போல் பாழாகிறதே இந்தப் பேரழகு. பெருமூச்சு வெளிப்பட்டது.

வெளியே காலடியோசை.

ஜன்னல் வழியே வெளியே தாவி விடலாமா? கட்டிலின் மறுபுறம் அவன் வந்திருந்தான். அவ்வளவு தூரம் திரும்பி நடக்க நேரமிருக்காது. வாசல் வழியே வெளியேறினால்? வருகிறவர் மீதே மோதிக்கொள்ள நேரிடலாம். கட்டிலின் கீழே பார்த்தான். சாம்பிராணி தூவிய தூபக் கால் புகைந்து கொண்டிருந்தது. கால் இடறி ஓசைப்படுத்தக்கூடும்.

சாளரத்தருகே தொங்கிய நீண்ட திரைச் சீலைதான் ஒரே புகல். கனமாயும் இருந்தது. இரண்டு ஆள் மறைந்தாலும் காட்டிக் கொடுக்காது.

முடிவு செய்த மறுவினாடி மறைந்தான். அறைக்குள் பிரவேசித்தன இரண்டு வேங்கைகள். இரண்டும் அவனுக்குத் தெரிந்தவையே. பெயர்கூட அறிவான். ஒன்று, முன்னொரு நாள் அவனைக் கடற்கரையில் விலைக்கு வாங்கிய பெரிய பெத்து. அவனையுமறியாமல் காஞ்சிபுரத்தான் தன் முதுகைத் தடவிக் கொண்டான், முசுக்கட்டைப் பூச்சி சுருண்டு ஒட்டிக் கொண்ட மாதிரி அந்த நெருப்புத் தழும்பு விரலில் நெருடியது.

மற்றவர், சிங்காவரத்திலிருந்து ஓட ஓட விரட்டப்பட்ட சூரப்புலி. அடிபட்ட காயங்களை நக்கிக் கொண்டு இந்தக் குகையில்தான் தஞ்சமடைந்ததோ!

கண்கொட்டாது கவனித்தான் காஞ்சிபுரத்தான். 'எடுங்கள், ' என்றார் பெரியபெத்து. ரகுநாதர் உடனே எடுக்கவில்லை. 'அதுதான் ஒரே வழி என்கிறீர்களா? '

'வலுவான, நம்பகமான வழியும் அதுதான். பரவாயில்லை, எடுங்கள். இல்லை, வெறுமே என்னிடம் ஒரு பேச்சுக்குச் சொன்னிர்களா?"

'இல்லையில்லை, மடியிலிருந்து ஒரு சிமிழை வெளியெடுத்தார் ரகுநாதர். 'உண்மையாகவே இதோ இருக்கிறது. மூன்றுநாள் உத்தரவாதம். பிரேதம் மாதிரி கிடப்பாள். இதைக் கடைசிப் பட்சமாக வைத்துக் கொள்ளலாமே...'

மகளை நோக்கிக் குனிந்தார் பெரியபெத்து. 'நன்றாய்த் துங்குகிறாள். விழித்துக் கொண்டதும் கேட்டுப் பார்ப்போம். தவறினால், இது இருக்கவே இருக்கிறது. முக்காலி மீதிருந்த வெள்ளிக் கூஜாவிலிருந்து சிறிது பாலை ஊற்றினார். சிமிழைத்

திறந்து, வெண்மையான பொடியொன்றை அதிலே தூவினார். கலக்கிக் கொண்டே சொன்னார்: "இவளுடைய பிடிவாதம் எனக்குத் தெரியும். அதனால்தான் இந்த வழி. ஹும் என் னுடைய அருமைக் குமாரியை சிங்காவரத்தின் அரசகுமாரி யாக்குவதென்றால் எத்தனை பாடுபட வேண்டியிருக்கிறது!"

ரகுநாதர் சிரித்தார். 'உங்களுக்காக மூன்று நாளாய்க் காத்திருக்கிறேன். உங்கள் மகள் அன்புடன் வசதி செய்து தந்தாள் எனக்கு. என் யோசனைக்கு இவ்வளவு சீக்கிரமாய் நீங்கள் ஒப்புக் கொள்வீர்களென்றுதான் நான் எதிர்பார்க்க வில்லை. '

'கரும்பு தின்னக் கூலியா? ' சாளரத்தை நெருங்கி வந்து நின்றார்கள் இருவரும். சிலுசிலுவென்ற தென்றல் சிந்து பாடியது. ரகுநாதர் கொஞ்சம் கையை வீசினால், காஞ்சிபுரத்தானின் கட்டுடல் தட்டுப்பட்டிருக்கும். அத்தனை கிட்டத்தில் இருந்தார்கள்.

'நீங்கள் வருவீர்களென்று எனக்குத் தெரியுமா?" என்றார் பெரியபெத்து. மீசை நுனியைச் சுண்டு விரல் கொஞ்சியது. 'வடக்கே மராத்தி ராஜ்யத்தின் மேற்குக் கோடியில் ஒரு தீவு. பம்பாய் என்று பெயர். அங்கேயும் ஒரு கும்பினிக்காரன் வியாபாரம் பண்ணுகிறான். சீமையிலிருக்கிற முதலாளிகளை எதிர்த்துக் கொண்டு சுதந்திரமாக இருக்கிறான் என்று காதில் விழுந்தது. ஏதாவது ஒப்பந்தம் செய்து கொள்ளலாமென்று போனேன். '

'உங்களுக்கென்ன தொட்டதெல்லாம் தங்கம். '

'இந்தத் தடவை பித்தளையாகி விட்டது.'

'அடடா ஏன்?'

'சீமைக்காரன் கெடுபிடி பண்ணினானாம். பம்பாய்க்காரன் சரணாகதி ஆகிவிட்டான். நானும் இந்தத் தொடை நடுங்கியுடன் என்ன பேச்சு என்று திரும்பிவிட்டேன். '

'திரும்பி வந்தவர் இந்தத் தொடை நடுங்கியைச் சந்தித்தீர்களாக்கும்? 'தன்னையே சுட்டிக் காட்டிக் கொண்டார் ரகுநாதர்.

'நீங்களா தொடை நடுங்கி! அடேயப்பா!' பெரியபெத்துவின் உதடுகளின் விஷமத்தனமான புன்னகை தவழ்ந்தது. 'அன்று சிங்காவரம் கொலு மண்டபத்தில், ஆயிரக்கணக்கான மக்களின் முன்னிலையில், எத்தனை தன்னம்பிக்கையுடன் முழங்கினர்கள்! என் மகளை அரசி என்று நான் அறிமுகப் படுத்தியதும், டாண்டாணென்று என்னமாய் மறுத்துப் பேசி என்னையும் இந்தப் பெண்ணையும் ஒட விரட்டி அடித்தீர்கள்! ரகுநாதரே! என்னைச் சிதையில் வைக்கும்போதுகூட, அந்தக் கொலு மண்டபக் காட்சிதான் என் கண்முன்னே நிற்கும்!"

மௌனமாய்த் தலைகுனிந்தார் ரகுநாதர். வார்த்தைகளை ஒவ்வொன்றாய் எண்ணி எண்ணிப் பேசினார்: 'பழைய கசப்பைத் தாங்கள் மறக்கவில்லை என்று தெரிகிறது.'

'அப்படியில்லை, அப்படியில்லை', அவசரமாய் மறுத்தார் பெரியபெத்து.

ரகுநாதர், குரல் தழுதழுக்கத் தொடர்ந்தார்: ‘‘பதவியையும் - பெருமையையும் துறந்து, நாடு விட்டு நாடு வந்திருக்கும் அனாதை நான். தான் பெற்ற பெண்ணாலும், ஆளாக்கிய மருமகனாலும் வெறுக்கப்பட்டு, வஞ்சிக்கப்பட்டு, விரட்டியடிக்கப்பட்டவன் நான். எல்லா மனித் இதயங்களும் டக்டக்கென்று துடிக்கும். இது...' பெரியபெத்துவின் கையை எடுத்துத் தன் மார்பு மீது வைத்துக் கொண்டார். 'உற்றுக் கேளுங்கள். பழி! பழி! பழிக்குப் பழி!' என்று துடிப்பது உங்கள் காதுக்குக் கேட்கவில்லையா!'

'நீங்கள் சொல்வதே எனக்குப் போதும்.' மெதுவாகக் கையை எடுத்துக் கொண்டார் பெரியபெத்து. ‘‘சரி, இந்த மூன்று நாட்களில்

என்னென்ன ஏற்பாடுகள் செய்திருக்கிறீர்கள்? சொல்லக் கூடியதாயிருந்தால்...'

'கூட்டாளிகளுக்குள்ளே ஒளிவு மறைவு என்ன?' சிரித்தார் ரகுநாதர். 'கும்பினியானிடம் முதலில் சென்றேன். கவர்னர் யேல் துரையையே நேரில் கண்டேன். ஆட்கள் திரட்டித் தர ஒப்புக்கொண்டார். சில புதிய வெடிகுண்டுகளும் கருவிகளும் தருவதாகவும் வாக்களித்திருக்கிறார்.'

'அரசி தாமரையை ஒழித்துவிட்டு என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டிருப்பாரே கவர்னர்?"

'கேட்காமலிருப்பானா? அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்கு வந்து, இங்கிலாந்திலிருந்து இங்கே அனுப்பப் பட்ட கெட்டிக்காரனாயிற்றே?"

தெய்வநாயகி படுக்கையில் புரளும் ஓசை கேட்டது.

'உஸ்! மெதுவாய்', உதட்டில் விரல் வைத்து எச்சரித்தார் பெரியபெத்து.

ரகுநாதரின் குரல் தாழ்ந்தது. "கேட்டதும் நான் சொல்லி விட்டேன், வெட்டொன்று துண்டு இரண்டாக. பெரிய பெத்துவின் மகள் தெய்வநாயகி ஏற்கெனவே சிம்மாதனத்துக்கு உரிமை கோரியிருக்கிறாள். ஆட்சி அவள் கைக்கு வந்ததும் அந்தப் பிரதேசம் முழுவதிலும் ஆங்கிலேயன் கொடி தான் பறக்குமே தவிர, டச்சுக்காரனும் பிரெஞ்சுக்காரனும் மூலைக்கொருவனாக ஓட்டம் பிடிக்க வேண்டியவர்கள்தான்' என்று வாக்களித்தேன். '

"எங்கள் சார்பாக?' பெரியபெத்து மீசையைச் சுண்டி விட்டுக் கொண்டார், அகங்காரத்துடன்.

'ம்... உங்கள்? ஆமாம், ஆமாம். உங்கள் சார்பாகத்தான். பின்னே?' முதலில் தடுமாறிப் பின்னர் சமாளித்தார் ரகுநாதர்.

'சிங்காவரத்திலே புரட்சியைக் கிளப்புவதற்காகவே படை புறப்படுகிறது. இரண்டொரு நாட்களில் அவர்கள் கூடவோ அல்லது தனியாகவோ நாமும் புறப்பட வேண்டும். உங்கள் மகளுடன் எப்போது பேசிச் சம்மதிக்க வைப்பீர்கள் என்று தான்...'

பெரியபெத்து மெல்லச் சிரித்தார்: "அவளுக்கு இதெல்லாம் பிடிக்காது. இணங்கமாட்டாள். அதற்காகத்தானே மருந்து கேட்டேன் உங்களை? பாலை அருந்தட்டும். வலுக்கட்டாயமாகக் கொண்டுபோய்விடுவோம் சிங்காவரத்துக்கு. கண் விழிக்கும்போது அரியணையில் இருப்பதைக் காண்பாள்! பிறகு விவாதம் ஏது, வீண் பேச்சு ஏன்?"

"எதற்கும் ஒரு முறை வாய் வார்த்தையாகவும் சொல்லிப் பாருங்கள். '

'பார்ப்போம், பார்ப்போம், செல்ல மகளை வாஞ்சையுடன் நோக்கினார் பெரியபெத்து. 'இவள் பிறந்த ஒரு மாதத்துக்கெல்லாம் திருச்செந்தூர் போயிருந்தோம், குடும்பத்தோடு. நரிக் குறத்தியொருத்தி, கை பார்க்கிறேன் என்று வந்து சேர்ந்தாள். இவள் அம்மாவுக்கு அதிலெல்லாம் பித்து உண்டு. ஒரு மாதச் சிசுவின் கையை யாரேனும் காட்டுவார்களா? காட்டினாள. '

ரகுநாதர் முறுவலித்தார். 'பிறகு?"

"பணம் கறக்கத் தெரிந்த தந்திரக்காரி அந்தக் குறத்தி. 'உங்கள் மகள் கையில் ராஜ ரேகையல்லவா ஓடுகிறது? ஒரு நாள் இவள் இந்தத் தேசத்துக்கே ராணியாக வருவாள், என்று சோதிடம் சொல்லி, கை நிறையக் காசு வாங்கிக் கொண்டு போனாள். இவள் அம்மா ஓர் அப்பாவி. 'என் பெண் ராணி யாவாள், என் பெண் ராணியாவாள்' என்று ஊர் பூரா சொல்லிக் கொண்டிருந்தாள். கடைசியில் அந்தப் பாக்கியத்தைப் பார்க் காமலே...'

'அடடா, ' ரகுநாதர் அனுதாபப்பட்டார். பிரியத்துடன் புதல்வியை நோக்கியவாறே மஞ்சத்தை அணுகினார் பெரியபெத்து. "உன் அம்மாவின் ஆசை பலிக்கப் போகிறது, தெய்வநாயகி. அந்த அடிமைக் கழுதையும், கிருஷ்ணப்பரும், சென்னம்மாவும் ஒழிந்து விட்டால்...'

'காஞ்சிபுரத்தான் என்றும் சேர்த்துக் கொள்ளுங்கள், ' இடை மறித்தார் ரகுநாதர்.

'யார்?' பெரியபெத்துவின் விழியில் வியப்பு. சீற்றமும்

"காஞ்சிபுரத்தான் என்று ஒர் ஊர்சுற்றிப் பையன். எங்கிருந்தோ வந்துவிட்டான், அந்த அடிமையின் காதலன் என்று. ஜூல்பிகர்கானை முறியடித்துத் துரத்தியவன் செஞ்சி மன்னன் ராஜாராம். இவன் அங்கே தலையைத்தான் காட்டினான். இவனால்தான் எல்லாம் என்று எங்கள் ஊர் பைத்தியக்காரர்கள் நம்பி, ஏகப்பட்ட வீண் பெருமை அவனுக்கு. தாமரையின் வலது கை, அந்தப் போக்கிரிதான். அவனை ஒழித்துவிட்டால்..."

'காஞ்சிபுரத்தான்.... காஞ்சிபுரத்தான்...' பெரியபெத்துவும் முணுமுணுத்தார் ஆச்சரியத்துடன், அந்தப் பெயரை. "சுமத்திரா மன்னருக்குப் பரிசளிப்பாகக் கப்பலேற்றி அனுப்பப்பட்டவன் அங்கே எப்படி வந்தான்?'

“என்ன! இங்கேயிருந்து...' இருவருடைய உரையாடலும் உரத்து விட்டது போலும். மெல்லச் சோம்பல் முறித்துக்கொண்டே மஞ்சத்தில் எழுந்து அமர்ந்தாள் தெய்வநாயகி.

சரவிளக்கின் திரியைத் தூண்டிவிட்டார் பெரியபெத்து. 'உன் நித்திரையைக் கெடுத்துவிட்டேனா தெய்வநாயகி?"

கண்களைக் கசக்கிக் கொண்டாள் தெய்வநாயகி. 'பாதகமில்லை, அப்பா. முக்கியமான விஷயம் இருந்தாலொழிய, இந்த வேளையில்

வருவீர்களா? அவள் பார்வை தந்தையைத் தாண்டிச் சென்றது. 'அதுவும் நமது மதிப்புக்குரிய சிங்காவரத்து விருந்தினருடன்?"

புன்னகைத்தார் ரகுநாதர். 'இப்போதுதான் சொல்லிக் கொண்டிருந்தேன், உங்கள் தந்தையிடம்."

'என்னவென்று?" 'நீங்கள் ஊரில் இல்லாதபோது, உங்கள் மகள் அதியற்புதமாக எனக்கு வசதிகள் செய்து கொடுத்துத் தங்கச் செய்தார் என்று. '

வெண்பட்டாடையைத் தோள்மீது வீசிக்கொண்டாள் தெய்வநாயகி. ஒயிலாக எழுந்து நடந்தாள். விளக்கின் திரியைத் தூண்டிற் குச்சி கொண்டு மெல்ல அசைத்தாள். பளிங்குச் சுவர்களில் அவளது நிழல் வேடிக்கையாக ஆடியது.

'அவ்வளவுதான் சொன்னீர்களா அப்பாவிடம்?"

'வேறு? '

'நீங்கள் சென்னைப்பட்டணம் வந்த காரியத்தை என்னிடம்தான் சொல்லவில்லை. அப்பாவிடமாவது சொல்லி யிருப்பீர்களென்று நினைத்தேன். '

'சொல்லிவிட்டார், சொல்லிவிட்டார்,' குறுக்கிட்டார் பெரியபெத்து. 'ஏன் தெய்வநாயகி, உன்னாலேயே ஊகிக்க முடியவில்லையா?"

'எதை அப்பா?'

'உனக்கு வந்திருக்கிற பேரதிருஷ்டத்தை கனவிலும் காணமுடியாத சௌபாக்கியத்தை ரகுநாதர் உனக்காகவே வந்திருக்கிறார், தெய்வநாயகி. அந்த அடிமைப் பெண்ணைத் துரத்தியடித்துவிட்டு, அவளுக்குத் துணை நிற்பவர்களை மண்ணோடு மண்ணாக்கிவிட்டு, அரியணையில் உன்னை அமர்த்தவே அவர் வந்திருக்கிறாரம்மா!'

உதட்டைப் பிதுக்கினாள் தெய்வநாயகி. வெறுப்பு, கசப்பு என்ற வெறும் உணர்ச்சிகளை, உருவ வடிவாகப் பார்க்க வேண்டுமென்றால், அந்தக் கணத்தில் அவை தெய்வநாயகியின் முகமாக ஆகின. 'கனவுகள் காண்பதை நான் நிறுத்திக் கொண்டு வெகு நாளாகிறது, அப்பா."

பெரியபெத்துவின் பார்வை ரகுநாதரை நோக்கி உயர்ந்தது. அதன் பொருள்: 'என்ன சொன்னேன் நான்!'

நெருங்கி வந்தார் ரகுநாதர்: 'உங்கள் வாழ்க்கையில் இனிக் கனவே இருக்காது, எல்லாம் நனவு, நனவு, நனவு தான். '

'நன்றி ஐயா, நன்றி, ' போலிப் பணிவுடன் கூறினாள் தெய்வநாயகி. "எந்த நனவானாலும், என்ன ஆனந்தமானாலும் அது இந்தச் சென்னைப் பட்டணத்துக்குள் இருக்கட்டும். என் தந்தையின் திரு மாளிகைக்குள் அமையட்டும்.'

பெரியபெத்து சொன்னார்: "என் மகள் இத்தனை அசடாயிருப்பாள் என்று நான் எண்ணவில்லை.'

'அசடு என்றால் விவேகி என்றும் அர்த்தமுண்டா, அப்பா?"

'தெய்வநாயகி சென்ற தடவை தகுந்த முன்னேற்பாடில்லாமல் அவசரப்பட்டு விட்டோம். தக்க துணை அப்போது கிடையாது. இம்முறை அப்படியல்ல. காலம், தேசம், சூழ்நிலை எல்லாம் நமக்குச் சாதகமாயிருக்கின்றன. அரச குடும்பத்துப் பெரியவரான ரகுநாதரும் நம் பக்கம். நாளைக்கே நாம் புறப்படலாம், வா. முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார் என்று தமிழிலே பழமொழி இருப்பது உனக்குத் தெரியாதா, மகளே?"

'சூடு கண்ட பூனையைப் பற்றிக்கூட ஏதோவொரு பழமொழி தமிழிலே இருப்பதாக ஞாபகம், அப்பா' தெய்வநாயகியின் குரல் மெல்ல மெல்ல உயர்ந்தது. "அப்பா நீங்களும் ரகுநாதரும் ஆண்பிள்ளைகள். வாழ்க்கைக் களத்திலே தோல்வி பல

தழுவியவர்கள், அவமானம் பல அனுப வித்தவர்கள். உலகக் காளை தன் சோதனைக் கொம்புகளால் உங்களை முட்டி வீழ்த்தும். அங்கமெல்லாம் புண்பட்டு, ரத்தம் சொட்ட விழுவீர்கள். மண்ணிலே புரள்வீர்கள். துடிப்பீர்கள். அதே காளை அடுத்த முறை தன் குளம்பைத் தூக்கி உங்களை மிதிக்க வரும், பாய்ந்தெழுவீர்கள். போராடுவீர்கள். வென்றாலும் வெல்வீர்கள். நீங்கள் ஆண்கள். எதுவும் முடியும். நான் பெண் அப்பா, பெண்'

'அதனால்?"

'பெண்ணுக்கு, வீழ்ச்சி என்றால் படுவீழ்ச்சிதான். அடி என்றால் மரண அடிதான். அவமானம் என்றால் தொலையாத, தீராத, மறையாத, மங்காத அவமானம்தான். அன்று சிங்காவரம் மண்டபத்தில் ஈட்டிபோல் எத்தனை கேலிப் பேச்சு! கிண்ணென்று நம்மீது காசுகளை விட்டெறிந்தார்களே, அந்தக் காட்சியை நீங்கள் மறந்துவிடலாம், அப்பா. என்னால் முடியாது. அன்று நான் எப்படித் தற்கொலை செய்து கொள்ளாதிருந்தேன்! எனக்கே தெரியவில்லை. ஆனால், இன்னொரு முறை அந்த மாதிரி அவமானப்படுவதில்லை என்று அன்றைக்கே நான் சபதம் செய்துகொண்டு விட்டேன். என்னை மன்னியுங்கள், அப்பா. '

"அழகாகப் பேசுகிறாய், தெய்வநாயகி' ஏளனமாகப் பாராட்டினார் பெரியபெத்து. 'இம்முறை நிச்சயம் நமக்கு வெற்றி. "

'வெற்றி ஒரு வானவில் அப்பா. எட்டத்தில் இருப்ப தால்தான் அதற்குக் கவர்ச்சியும் அழகும். '

'அரச பதவி கிடைக்கும் போது ஏற்றுக் கொள்வது உன் குடும்பத்துக்கு நீ ஆற்றுகிற கடமை."

'அந்த முயற்சியிலே தோல்வியுற்றால், என் வமிசத் துக்கே ஏற்படுத்துகிற இழுக்கு என்பதையும் மறவாதீர்கள், அப்பா.'

'பதவியிலே பெருமையுண்டு. எண்ணிப் பார் மகளே.'

'பதவி என்ற இடுகாட்டிலே புதைந்தவர்களையும் எண்ணிப் பார்க்கிறேன். அந்த எண்ணிக்கை பயமேற்படுத்துகிறது, தந்தையே!''

"சிம்மாதனத்திலே உனக்கு ஆசையில்லையா?"

'உட்கார ஆசைப்பட்டால், எரிமலையின் வாயைக் காட்டிலும் அழகான இடங்கள் இருக்கின்றனவே.'

'அதிகாரம்?"

'மதுவை என்றைக்குமே நான் விரும்பியது கிடையாது அப்பா. ''

'மந்திரிப் பிரதானிகள்?"

'இச்சகம் பேசி, முகஸ்துதி பாட இங்கே ஆட்கள் கிடைப்பார்கள். '

'கற்பனை செய்து பார் குடிமக்களின் தலைகள் உன் காலடியில் குனியும்.'

"இன்னொரு கற்பனை: அவை நிமிரும் பட்சத்தில் இந்த ஒரு தலை இருக்காதே!'

"பட்டாடைகள்?"

'பார்க்காதவையா? '

'முத்தாரம்?'

'சலித்துவிட்டேன். '

'பவனி? '

'அபாயத்துக்கு அழைப்பு.'

பெரியபெத்து பெருமூச்சு விட்டார். 'வெகு நேரமாகி விட்டது. படுத்துக்கொள், மகளே. காலையில் பேசிக் கொள்ளலாம்.'

ரகுநாதருடன் வாசலை அடைந்தவர் நின்றார். 'பால் ஆறிவிட்டது. குடித்துவிட்டுப் படுத்துக்கொள்.'

'ஆகட்டும், அப்பா.' காலடியோசைகள் தேய்ந்தன. தெய்வநாயகி படுக்கவில்லை. சற்றுநேரம் நின்றாள். பிறகு வாசற்புறம் பார்த்துவிட்டுத் திரும்பினாள்.

மஞ்சத்துக்கருகில், முக்காலியில் இருந்த பால் கோப் பையைக் கையிலே எடுத்தாள். சாளரத்தருகே சென்றாள்.

வீசினாள் பாலை வெளியே. காலிக் கோப்பையைத் திரும்பக் கொணர்ந்து வைத்த பின், சாளரத்தினிடம் திரும்பினாள்.

திரைச் சீலையை ஒரு கையால் விலக்கி, "வா வெளியே!'' என்றாள்.

## (26)

தெய்வநாயகியின் அழைப்பு, அழைப்பிலிருந்த அமைதி:

தூக்கிவாரிப் போட்டது காஞ்சிபுரத்தானுக்கு.

திரைச் சீலைக்குப் பின்னே அவன் மறைந்ததைக் கவனித்திருக்கிறாள் பெரியபெத்துவின் புதல்வி. அப்படியானால் ஆரம்ப முதலே...

யோசிக்க அவகாசமிருக்கவில்லை. மீண்டும் அழைத்தாள் தெய்வநாயகி. 'வாருங்கள், காஞ்சிபுரத்தாரே! முதுகில் சூடு போட யாருமில்லை. சவுக்கெடுத்து அடிப்பார் கிடையாது இங்கே அடிமை வேலைக்கு இழுத்துப் போகமாட்டார்கள். தைரியமாய் வெளியே வாருங்கள்."

இரண்டாம் முறையாகத் திகைப்பு ஏற்பட்டது. அவன் ஒளிந்து கொள்வதைப் பார்த்ததோடு மட்டுமல்ல; அவன் இன்னான் என்றும் தெரிந்து கொண்டிருக்கிறாளே!

வெளியே வந்தவன், வீண் முயற்சி செய்து பார்த்தான். ‘‘தாங்கள் ஏதோ தவறாக...'

'சற்று முன் என்னைக் குனிந்து பார்த்து விட்டுத் திரும்பினாயே, அப்போது உன் முதுகில் இரண்டு எழுத்து தெரிந்தது - பெ.பெ. என்று', தெய்வநாயகி குழந்தை போல் கண்களை அகல விழித்தாள். 'அதுவும் கூட எழுத்துப் பிழை தானோ ஒருவேளை?"

காஞ்சிபுரத்தான் சிரித்துவிட்டான்: "தந்தைக்கேற்ற மகள் தான், புத்தியில். '

"ஒரு பாடத்தில் மட்டும் மக்கு."

'என்ன பாடம்?"

'உலகவியல். '

'ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?"

'சுமத்திரா என்கிற தீவு எங்கேயோ இருப்பதாக நினைத்திருந்தேன் இத்தனை நாளாய். அது என் சொந்தப் படுக்கை அறைக்குள், சாளரத்தருகில், திரைச்சீலையின் பின்னால் இருக்கிறதென்று இப்போதுதான் தெரிந்தது. காஞ்சிபுர வாலிபனே, என் தந்தையையும் என்னையும் காட்டிலும் கெட்டிக்காரன் ஒருத்தன் உண்டென்றால், நீதான்."

'நன்றி, நன்றி. நானும் ஒரு பாடத்தில் மண்டுகம்தான்."

‘‘எதிலேயோ?"

'உடல் இயல் சாஸ்திரத்தில். '

'அப்படியா? '

"ஆமாம்,' அழுத்தமாகப் பதிலிறுத்தான் காஞ்சிநகர் செல்வன். 'என் மடமைக்கு உதாரணம் சொல்லட்டுமா? கண்ணை மூடி, அசையாத நிலையில் கிடப்பதுதான் தூக்கம் என்று நினைத்திருந்தேன் இதுநாள் வரையில். அப்படிக் கிடந்தாலும் கூடச் சுற்றிலும் நிகழ்வதைப் புலன்களால் காணலாம் என்பது தங்களைக் கண்டபிறகுதான் தெரிந்தது.'

சென்னை மாநகர் செல்வி மெல்ல நகைத்தாள்: ''என்ன குறும்புத்தனம்!'

'அவ்விடத்திலிருந்து வந்ததுதானே?"

''எதிர்வார்த்தையாடுகிறாய் அழகாக. '

"அதே சமயம், நம் இருவருக்கும் நோக்கம் ஒன்றுதான் என்பதையும் மறக்கவில்லை."

அந்த முன்னாள் அடிமையைக் கூர்ந்து கவனித்தாள் தெய்வநாயகி. சாளரத்தின் வழியே புகுந்த சந்திரன் உதவி செய்தான் அவளுக்கு. காஞ்சிபுரத்தானும் சுவைத்தான், பால் நிலவு குளிப்பாட்டிய அந்தப் பேரெழிலை. மஞ்சத்திலிருந்து எழுந்து வந்த அவள் ஆடைக் குலைவு, அவன் சித்தத்தைத் திசை திருப்ப முயன்றது. ஆனால் தோல்வி கண்டது.

சாளரத்திலே கையூன்றினாள் தெய்வநாயகி. புற்றுக்குள்ளிருந்து சீறும் பாம்பு போல, பெருமூச்சு வெளிப்பட்டது அவிளிடமிருந்து. "உனக்கும் எனக்கும் ஒரே நோக்கமென்றா சொன்னாய்?"

'இல்லையா பின்னே? என்ன வந்தாலும் சிங்காவரத்தினுள் நுழைவதில்லை என்று உங்களுக்குத் தீவிரம். என்ன நேரிட்டாலும் உங்களை அங்கே நுழைய விடுவதில்லை என்று எனக்குத் தீவிரம். '

'சிங்காவரம்' வெறுப்பு அவள் அழகிய அதரத்தைச் சுழித்துச் சென்றது. "என் காதுபட அதைச் சொல்லாதே, திடீரென அவள் பார்வையில் தணல் பேச்சில் கனல் 'அங்கே எனக்கு நேரிட்ட அவமானங்களுக்கு நீயும்தான் உடந்தை'

'உடந்தையல்ல. கடமை. ஆசையுடன் செய்த பணி.'

'ஏன், காதலுக்குச் செலுத்திய காணிக்கை என்று சொல்லேன்?"

'ஆட்சேபமில்லை. வைத்துக்கொள்ளுங்கள் அப்படியே."

வினாடி காலத்துக்குத் தெய்வநாயகியின் முகத்தில் கடுமை பரவிற்று. 'சிங்காவரத்தையும் உன்னையும் சேர்த்து நினைக்கும் போது எரிச்சல்தான் வருகிறது எனக்கு. பார்க்கப் போனால், தந்தையைக் கூப்பிட்டு உன்னைப் பிடித்துத் தர வேண்டும். ஏன் வாளாவிருக்கிறேனோ, எனக்கே புரியவில்லை."

காஞ்சிபுரத்தானின் பதில்: "முற்றிலும் உண்மை. தமிழ் நாட்டிலேயே பெரிய அடிமை வியாபாரியின் மகள் என்று எண்ணிப் பார்க்கையில், உங்களைக் கொன்று போட இந்தக் கை துடிக்கிறது. எப்படித்தான் அடக்கிக் கொண்டிருக்கி றேனோ, எனக்கும் தெரியவில்லை."

நிலைமையை மறந்து நகைத்துவிட்டாள் தெய்வநாயகி. 'விடியும்வரை - இல்லை, ஆயுள் முடியும் வரை - நம் விவாதம் தொடர வேண்டியதுதான். ஒருவரால் மற்றவருக்குக் காரியம் ஆக வேண்டும். அதை மறப்பானேன்?"

“என்னால் உங்களுக்கு என்ன ஆக வேண்டுமோ தெரியாது, ' என்றான் காஞ்சிபுரத்தான். 'ஆனால் எனக்கு எது ஆக வேண்டுமானாலும் உதவி செய்ய ஒருவன் இருக்கிறான், ' வானத்தை நோக்கி உயர்ந்தது அவன் விரல்.

‘‘வணக்கம், கடவுளின் பிரதிநிதி அவர்களே, என்றாள் தெய்வநாயகி. "என் தேவையைச் சொல்லிவிடுகிறேன். சிங்காவரத்திலிருந்து வந்திருக்கிறாரே ஒரு மகா பெரிய மனிதர், அவர் சிறுமைப்படவேண்டும்.' -

"காயம் ஆறினாலும் தழும்பு மறையவில்லை என்று தெரிகிறது."

"இருக்கலாம். என் அவமானத்துக்கெல்லாம் காரணமாயிருந்த ரகுநாதரைத் தந்தை மன்னித்து விட்டார். ஆனால் தெய்வநாயகி மன்னிக்கத் தயாராயில்லை. இருவரும் சேர்ந்து செய்யும் திட்டங்களுக்கு இடம் கொடுக்கப் போவதுமில்லை."

"தூக்கத்தைத் துறந்து, விழிப்பை வரித்திருப்பதும் அதனால் தானோ?’’

"ஆம். நீ செய்ய..." தெய்வநாயகியின் பேச்சு, பாதியில் நின்றது. அவள் செவிகள் கூர்மையாகின. கண்கள் ஒளி பெற்றன. "யாரோ வருகிறார்கள். காஞ்சிபுரத்தானைப் பழைய இடத்துக்குத் தள்ளினாள். கையில் பால் கோப்பையுடன், கண்கள் செருக, கட்டிலில் சாய்ந்தாள்.

பிரவேசித்தவர், பெரியபெத்து. வாசலில் நின்றவர் ரகுநாதர்.

'தெய்வநாயகி' மகளை ஆதுரத்துடன் தாங்கிக் கொண்டார் தந்தை. கட்டிலில் கிடத்தினார் அலுங்காமல் நலுங்காமல். "தெய்வநாயகி, என்னம்மா செய்கிறது?"

தெய்வநாயகியின் நாக் குழறிற்று. வாய் பேசாததைக் கையால் விளக்க முயன்றாள், ஆனால் கையும் அவள் இச்சைப்படி இயங்கவில்லை. "மயக்க... மயக்கமாய் இருக் கிறது, அப்பா, பல தினங்களுக்கு... இப்படியே படுத்திருக்க வேண்டும் போல் இருக்கிறது... பாலைக் குடித்ததும்... வேலையாட்கள் எனக்கு... ஏதாவது.... மயக்க மருந்... கொடுத்திருப்பார்களோ, அப்பா?"

'சே, சே! அப்படிப்பட்ட துரோகியும் என் இல்லத்தில் இருக்கமுடியுமா மகளே?' போர்வையை எடுத்துப் பரிவுடன் போர்த்தினார் பெரியபெத்து. "வெறும் களைப்புத்தான் உனக்கு, படுத்திரு.'

குமாரியின் மூடிய விழிகளைப் பார்த்தவாறு சிறிது நேரம் நின்றார் பெரியபெத்து. மீசை நுனியைச் சுண்டியது விரல். வாசலுக்கு நடந்தார்.

ரகுநாதரின் குரலில் பெருமிதம்: "பார்த்தீர்களா? இன்னும் மூன்று நாள் கழித்துத்தான் உங்கள் மகள் துயில் கலைவாள்.'

'அதுவும், சிங்காவரத்தின் அரசியாக!' பெருமையுடன் சிரித்துக் கொண்டார் பெரியபெத்து. இருவரின் நடையும் தேய்ந்து மறைந்தது.

'சிங்காவரத்தின் அரசியாக!' கசப்பை உமிழ்ந்தவாறு போர்வையை விலக்கிக் கொண்டு எழுந்தாள் தெய்வநாயகி.

வெளிப்பட்டான் காஞ்சிபுரத்தானும். தன்னை மறைத்திருந்த திரைச் சீலையை நோக்கித் தலையைத் தாழ்த்தி, 'நன்றி, ' என்று சொன்னான்.

தெய்வநாயகி திகைத்தாள். 'யார் அங்கே இருப்பது?" 'எவருமில்லை. சுவரும் திரைச்சீலையும்தான். புத்த பகவானுக்குப் போதிமரம் ஞானோதயம் அளிக்கவில்லையா? இந்த இடம் எனக்கு யோசனை கூறிவிட்டது. உங்களுடைய அடுத்த நடவடிக்கை என்னவாக இருக்கவேண்டுமென்று எனக்குப் புலப்பட்டுவிட்டது."

'என்ன? '

'இப்படியே மயக்கமாய்க் கிடக்க வேண்டியதுதான் நீங்கள். அதாவது, பாசாங்கைத் தொடர வேண்டியது."

'தொடர்ந்து ?"

"ரகுநாதரின் திட்டத்தை நான் வெளியிலிருந்து உடைக்கிறேன். நீங்கள் உள்ளிருந்து சிதையுங்கள்."

“ஒரு நிபந்தனையின் பேரில். '

'அதாவது?'

'எனக்குப் பகைவர் அந்த ரகுநாதர் மட்டும்தான். நீயோ என் தந்தையையும் சேர்த்திருக்கிறாய் எதிரிகள் பட்டியலில்."

'அதனால்?"

"கூடு கலைந்தாலும் குஞ்சு நசுங்கக்கூடாது என்பார்கள். அதேதான். ரகுநாதரின் திட்டம் தகரட்டும். ஆனால் என் தந்தைக்குத் தீங்கு நேரக்கூடாது.'

“வாக்களித்தேன்,' என்றான் காஞ்சிபுரத்தான் புன்னகையுடன். 'அப்புறம்?'

'எனக்குத் துணை, நடிப்பு. உனக்குத் துணை? மறுபடியும் கையை உயர்த்திக் காட்டாதே. ஆண்டவனைத் தவிர வேறு துணையுண்டா என்று கேட்கிறேன்.'

காஞ்சிபுரத்தான் உதட்டைப் பிதுக்கினான். "பாதாளம் மட்டும் பாயுமே, அந்த ஆயுதம் கிடையாதா உன்னிடம்?"

காஞ்சிபுரத்தான் சிரித்தான். 'நான் நவீன குசேலன்.'

'புராண குசேலர் போரிலும் இறங்கவில்லை, திட்டமும் தீட்டவில்லை. அரசாங்க சூழ்ச்சிகளை அறியாதவர் அவர். ஆகவே பணமும் தேவைப்படாதவர். நீ அப்படியில்லை. அரைக்காசு உதவுவதுபோல் அண்ணன் தம்பி உதவ மாட்டான். '

- 'இருந்தால் கசக்கிறதா? கொடுங்கள் கஜானாவைத் திறந்து, ' இரு கையையும் ஏந்தினான் காஞ்சிபுரத்தான்.

- 'இரு, எச்சரிக்கையுடன், பட்டுச் சேலையின் தலைப்பைத் தூக்கிப் பிடித்தபடி வெளியேறினாள் அவள். வெள்ளிக் கொலுசு அணிந்த சிவந்த பாதங்கள் அந்த இருட் டிலும் மின்னின.

சற்றைக்கெல்லாம் தெய்வநாயகி திரும்பினாள். கை நிறையப் பொற்காசுகள். 'பிடி!' என்று காஞ்சிபுரத்தானின் கரத்திலே தந்தாள்.

மேல் துணியில் முடிந்து கொள்ளவில்லை அவன். மெழுகுவர்த்தியின் ஒளியில் ஒவ்வொன்றாய்ப் பரிசீலனை செய்தான். பல்லில் வைத்துக் கடித்துப் பார்த்தான். தரையில் தட்டினான். கடைசியில் திருப்தியுடன் சொன்னான்: 'நல்ல நாணயம்தான். '

"வேறுகூட இருக்குமா இங்கே?' என்றாள் தெய்வநாயகி.

'பெட்டி பெட்டியாக."

'பொய்!"

"ஆம். பொய் நாணயத்தைத்தான் சொல்கிறேன் நானும். அதன் உற்பத்தி ஸ்தானம் இந்த மாளிகைதான்.'

அடிபட்ட வேங்கையானாள் தெய்வநாயகி. "காஞ்சிபுரத்தானே! என் தந்தையைப் பற்றி எது வேண்டுமானாலும் சொல்லு. இரக்கமற்றவர், கொடுமைக்காரர், அடிமை வியாபாரி என்கிறாயா? ஒப்புக்கொள்கிறேன். கள்ள நாணயத் தயாரிப்பா? ஒரு நாளுமில்லை. ஒரு நாளுமில்லை."

காஞ்சிபுரத்தான் புன்னகைத்தான். "பாதி நல்லவர் பாதி கெட்டவர் என்பது உலகத்திலேயே கிடையாது, அம்மணி. ஒன்றைச் செய்பவர் இன்னொன்றும் செய்யக்கூடும். பாதைகளிலேயே மிகச் சுலபமானது ஒரு தீச்செயலிலிருந்து இன்னொன்றுக்குப் போவதுதானே!"

"இருக்கலாம். ஆனால் இந்தப் பகுதிகளில் செலாவணியாவது கும்பினியாரின் நாணயங்கள்தான். அவர்களுக்கே எதிராகக் கள்ள

நாணயம் தயாரிக்க என் தந்தை ஒருநாளும் துணியமாட்டார். சத்தியம் செய்து சொல்வேன்.'

'என் கண்ணால் பார்த்தது.. ' காஞ்சிபுரத்தான் குழம்பினான். தெளிந்தான் கொஞ்சம் கொஞ்சமாக. தெய்வநாயகியின் பேச்சிலே தென்பட்ட சூடு; பார்வையில் தெரிந்த ரோஷம்இரண்டும் அவன் எண்ணத்தை மாற்றின. 'என் ஊகம் தவறாக இருக்கலாம். ஓர் உதவி செய்வீர்களா?"

'சொல்லு."

'ரகுநாதரின் இருப்பிடத்தைக் காட்டுங்கள். '

'வா, தெய்வநாயகி வாசலில் நின்றாள். இருபுறமும் பார்த்துக் கொண்டாள். ஓசையின்றி நடந்தாள். சத்தப்படுத்தாமல் கதவுகளைத் திறந்தாள். தோட்டத்தைக் கடந்தாள். நிலவின் நிழல்வழியே அழைத்துச் சென்றாள்.

"அதோ' என்று சுட்டிக் காட்டினாள். 'விளக்கெரிகிறதே, அந்த மாளிகைதான். '

காஞ்சிபுரத்தானின் உதடுகள் இறுகின, அடக்கப்பட்ட சினத்தினால். காலடியில் தட்டுப்பட்ட சுள்ளியொன்றை எடுத்தான். மளுக்கென்று முறித்தான் ஆத்திரத்துடன்.

'சிங்காவரத்தில் சந்திப்போம், ' விடைபெற்றான் தெய்வநாயகியிடம்.

'பத்திரப்படுத்தி விட்டீர்களா?"

'ஆயிற்று, எஜமான்.'

“யாருக்கும் தெரியாதே?"

'ஈ காக்கை அறியாது, ஐயா. '

"அவருக்கு?' பெரியபெத்துவின் மாளிகைப் பக்கம் கை உயர்ந்தது.

"அவருக்கா?' சிரிப்பு. 'மூச்சு விடுவோமா நாங்கள்?" அறைக்கு வெளியே சாளரத்தையொட்டி ஒரு வாதமரம். கிளையில் தொற்றிக் கொண்டிருந்தான் காஞ்சிபுரத்தான். அறையினுள் உரையாடும் மனிதர்களையும் உரையாடல் களையும் தெளிவாகக் கண்டு கொண்டான்.

கேள்வி கேட்பவர்: திண்டில் சாய்ந்திருக்கும் ரகுநாதர். கைகட்டி வாய்பொத்தி பதிலளிப்பவர்கள். கள்ள நாணயப் பெட்டியை வைத்து, அசல் நாணயப் பெட்டியுடன் நழுவிய இரண்டு ஆட்கள்.

'இந்தாருங்கள், " பட்டுக் கிழியொன்றைப் பிரித்தார் ரகுநாதர். இரண்டு ஆட்களுக்கும் கூலி கொடுத்தார். 'போய் வாருங்கள்' என்று அனுப்பினார்.

காஞ்சிபுரத்தானுக்கு ஒரு விஷயம் விளங்கியது: புதிய நண்பரான பெரியபெத்துவுக்குக்கூடத் தெரியாமல், கும்பினியாரின் நாணயங்களைத் திரட்டி வருகிறார் இந்த ரகுநாதர். ஏனெனில் பரங்கியரின் நாணயம் எங்கேயும் செல்லுமே? ஒருவேளை கும்பினியானும் பெரியபெத்துவும் உதவ மறுத்து விட்டால் சொந்தத்திலே ஆட்களும் தளவாடமும் வாங்கலாமென்று உத்தேசம் போலும். நேர் வழியில் நாணயங்களைத் திரட்ட வக்கில்லாததால், கள்ள நாணயத்தைத் தள்ளிவிட்டு அசல் நாணயத்தைச் சேகரிக்கிறார்.

காஞ்சிபுரத்தானுக்கு விளங்காதது: சேகரிக்கும் நாணயங்களை எங்கே மறைத்து வைத்திருக்கிறார்?

ரகுநாதர் மஞ்சத்தில் சயனித்துக் கொண்டார். திருப்தி அவர் முகத்தில் புன்னகையாய்ப் படர்ந்தது.

காஞ்சிபுரத்தான் மரத்திலிருந்து இறங்கி வந்தான். காவல் இல்லாத தனி மாளிகை ரகுநாதருடையது. கூடமெங்கும் அறைகள். ஆனால்

ஒவ்வோர் அறை வாயிலிலும் காஞ்சிபுரத்தானை வரவேற்றவை, ஏமாற்றமும் பூட்டும்தான்.

வீட்டைச் சுற்றிச் சுற்றி வந்தான். மாட்டுக் கொட்டகை வாசலில் படுத்திருந்த ஓர் உருவம் காலை இடறிற்று.

"நான்தான் கிழவி படுத்திருக்கிறேன். நீ வயசுப் பிள்ளையா இருக்கிறாயேப்பா...'

குரலையும் நபரையும் பார்த்தான் காஞ்சிபுரத்தான். மகிழ்ச்சி ஏற்பட்டது. யோசனையும் உதித்தது.

'பாட்டி, என்னைத் தெரியவில்லையா? முன்பு இங்கே அடிமையாக இருந்தேனே? என்னிடம் இருந்த பணத்தைக் கூட உனக்குக் கொடுத்தேனே, நினைவில்லை?"

"ஆமாம்டா தம்பி' அவன் நெற்றியில் வழித்துக் கொடுக்கிறாள் கிழவி. 'ஏன் தம்பி, இதென்ன பரதேசிக் கோலம்? ராஜாவாட்டமிருக்கிற பிள்ளை, உனக்கேன்...'

'அதெல்லாம் அப்புறம், ' கிழவியைத் தனியே அழைத்துச் சென்றான் காஞ்சிபுரத்தான். அவள் காதோடு கிசுகிசுத்தான். பழையபடி வாதாமரத்தில் ஏறி மறைந்து கொண்டான்.

சில வினாடிகள் கழிந்தன. கொட்டகையிலிருந்து கிழவியின் கூக்குரல் இருளைக் கிழித்துக் கொண்டு புறப்பட்டது.

"தீ தீ! ஐயையோ நெருப்பு!"

# (27)

"தீ தீ'

கிழவியின் கூக்குரல் நள்ளிரவின் நிசப்தத்தைக் குலைத்தது. மரம் செடி கொடிகள் கூடத் திடுக்கிட்டனவோ? இலைகளும் கிளைகளும் சலசலத்தன பரபரப்புடன். காலடியோசைகள்

கிடுகிடுவென விரைந்தன.

"எங்கே? எங்கே? எங்கே நெருப்பு?"

பெரியபெத்துவின் மாளிகையிலிருந்து; தோட்டத்திலிருந்து; ரகுநாதரின் இருப்பிடத்திலிருந்து; சாலையிலிருந்து; பக்கத்துச் சத்திரத்திலிருந்து - இப்படிப் பலபேர் ஓடி வந்தார்கள். ஒவ்வொருவர் கையிலும் தீவட்டிகள் கொழுந்து விட்டெரிந்தன. வெளிச்சம் வெள்ளமாயிற்று.

மரத்தின் மீதிருந்த காஞ்சிபுரத்தான் சிரிப்பை அடக்கிக் கொண்டான். வரும் வழியில் பொறுக்கி எடுத்து வந்திருந்த காய்ந்த சுள்ளி அவன் கையிலேயே இருந்தது. அதைக் கொண்டு முதுகைச் சொறிந்து கொண்டான். கீழே நடக்கும் சுவையான அமளியைக் கவனித்தன அவன் கண்கள்; குறும்புத்தனமாய் நகைத்தன.

ஓடிவந்தவர்கள், கூக்குரலின் உற்பத்தி ஸ்தானத்தை அடைந்தார்கள். நின்றார்கள். கண்ணைக் கசக்கிக் கொண்டார்கள். சுற்றும் முற்றும் பார்த்தார்கள். ஒருவரையொருவர் நோக்கினார்கள்.

"யாரம்மா இங்கே கத்தியது நெருப்பு நெருப்பு என்று?" ஓர் ஆள் அதட்டினான்.

இன்னொருவன், “அதோ லாயத்திலே படுத்துக் கொண்டிருக்கிறதே, அந்தப் பாட்டி போலிருக்கிறது!"என்று தெரி வித்தான்.

பதைப்புடன் ரகுநாதர் எழுந்தோடி வந்தார். 'என்ன இதெல்லாம்?' மீசை நுனிகளைச் சுண்டியபடி பெரியபெத்துவும் வந்தார். கண்ணிலே நித்திரையின் கலக்கம் புலப்பட்டது.

திக்கென்றது காஞ்சிபுரத்தானுக்கு. ஒரு வேளை தெய்வ நாயகியும் எழுந்து வந்து விடுவாளோ? மயங்கிக் கிடப்பதாகப் பாசாங்கு செய்திருப்பதை மறந்துவிடுவாளோ இந்தப் பரபரப்பில்?

இல்லை. தெய்வநாயகியின் பகுத்தறிவை அவன் குறைத்து மதிப்பிட்டுவிட்டான். அத்தனை கூச்சலுக்குப் பின்னும் அவள் எழுந்து வரவில்லை.

"இதோ இந்தப் பாட்டிதான் சத்தம் போட்டது" - பெரிய பெத்துவின் முன்னே இழுத்து வந்து நிறுத்தினார்கள் கிழவியை. தடாலென்று பெரியபெத்துவின் காலிலே விழுந்தாள் மூதாட்டி. 'சாமி, என்னை மன்னிச்சுடுங்க. இந்தக் கிழத்தாலே உங்கள் நித்திரையெல்லாம் கெட்டுதுங்களே. கோபிக்காதீங்க. ' கடும் சினம் ரகுநாதரின் குரலில்: 'விளையாடுவதற்கு இந்த நேரம் தான் பார்த்ததா இந்தக் கிழச் சனியன்? கட்டி வைத்து உரியுங்கள் தோலை!'

'ஏ பாட்டி உளறாமல் சரியாய்ப் பேசு எஜமானிடம்!' கிழவியை முரட்டுத்தனமாய் எழுப்பி நிறுத்தினான் காவல் காரனொருவன்.

கிழவியின் தலை ஆடிற்று. நாக்குழறிற்று. கண்ணி லிருந்து அருவிபோல் நீர் கொட்டியது. "ஒன்றுமில்லீங்க... கனாக் கண்டேனுங்க... சொப்பனம். நான் இருக்கிற வீடு தீப்பிடிச்சுக்கிட்டு எரிகிற மாதிரி... ஒரே பயமாய் போச்சுது... அதனாலேதான் கத்திட்டேன் என்னை மறந்து...'

குப்பென்று சிரிப்பு வந்தது கூடியிருந்த பணியாட்களுக்கு. ஒருவருக்கிருவராகப் பெரியவர்கள் நின்றிருப்பதைக் கண்டு அடக்கிக் கொண்டார்கள்.

பெரியபெத்து சீறினார்: "சீ வெறும் கனவுக்காகவா இப்படி ஊரைக் கூட்டினாய்? சனியனே! இந்தச் சென்னைப் பட்டணத்தில் உன் கட்டையை நீட்ட இடமா கிடைக்கவில்லை? போய்த் தொலை வேறெங்காவது?"

'வயசானாலே இந்தக் கோளாறுதான்', ரகுநாதர் சமா தானப்படுத்தினார் அவரை.

'எனக்குப் பரவாயில்லை. தங்களைச் சொல்லுங்கள். கௌரவமான விருந்தினர் வந்திருக்கிறீர்கள். தங்கள் உறக்கத்தையுமல்லவா கெடுத்துவிட்டாள் மூதேவி!' என்றார் பெரியபெத்து.

'அப்படியானால் நானே மன்னிக்கிறேன், ' என்றார் ரகுநாதர். பெருந்தன்மைக்கு அடையாளமாக ஒரு புன்னகையும் வெளிப்பட்டது. "நீங்கள் போய்ப் படுங்கள் பாட்டி.."

ஒவ்வொருவராய்த் திரும்பினார்கள் ஆட்கள். மூதாட்டியும்தான். லாயத்தில் பாயை உதறிக் கொள்ளும் சத்தம் கேட்டது. -

பெரியபெத்துவுக்கு விடை கொடுத்தனுப்பினார் ரகுநாதர். தன் மாளிகைக்குள் நுழைந்தார்.

தீவட்டிகள் அகன்று விட்டன. ஒளி காலி செய்த ஜாகையில் இருள் குடியேறிற்று. எண்ணெய்த் தீவட்டிகளின் புகை நாற்றம் மட்டும் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது.

காஞ்சிபுரத்தான் மரத்தை விட்டு இறங்கவில்லை. ஏன்? எதை எதிர்பார்த்துக் காத்திருக்கிறான்?

திடீரென அவன் முகத்தில் மலர்ச்சி - எதிர்பார்த்தது நிகழ்வதால்!

அடிமேலடி வைத்து ரகுநாதர் மீண்டும் வெளியே வந்தார். இருளில் மறைந்து நின்றவாறு தோட்டத்தைக் கவனித்தார். பெரியபெத்துவின் மாளிகையைக் கண்ணோட்டம் விட்டார். இருண்ட

இடங்களில் பார்வையைச் செலுத்தினார். யாருமில்லை என்று நிச்சயப்படுத்திக் கொண்டார்.

வெளியே வந்தவர் ஓசைப்படாமல் நடந்தார். இருட்டுத்தான். எனினும் காஞ்சிபுரத்தானின் கண்கள் அவர் அடிச்சுவட்டைப் பின் தொடர்ந்தன.

மேற்குத் திசையின் கோடி. மூங்கில் வேலியின் பக்கம். பாழடைந்த கிணற்றின் பக்கத்தில் நின்றார் ரகுநாதர். எச்சரிக்கையாக நாற்புறமும் பார்த்துக்கொண்டார்.

காஞ்சிபுரத்தான் கவனித்துக்கொண்டேயிருந்தான். துணி துவைக்கும் பாறாங்கல்லொன்று இடுப்பு உயரத்துக்கு அங்கே இருந்தது. அது சரியாயிருக்கிறதா என்று பரிசோதிப்பதுபோல் நகர்த்தியும் தடவியும் பார்த்தார் ரகுநாதர். சரியாயிருப்பதாக எண்ணினார் போலும். திரும்பிவிட்டார்.

மிக அருகில் வந்தபோது காஞ்சிபுரத்தான் கவனித்தான்! ரகுநாதரின் முகத்தில் நிம்மதி படர்ந்திருந்தது.

சிங்காவரத்துச் சதிகாரன் மாளிகைக்குள் நுழைந்ததும், காஞ்சிபுரத்தான் மரத்திலிருந்து இறங்கி வந்தான்.

ரகுநாதரைக் காட்டிலும் எச்சரிக்கையாயிருந்தது அவனுடைய நடை. லாயத்தை அடைந்தவன், 'பாட்டி' என்று அழைத்தான் மெல்ல.

பொல்லாத கிழவி சிரித்துக்கொண்டே வெளிவந்தாள். 'ரொம்ப நன்றி, பாட்டி. என்னால் பாவம், உங்களுக்கு ஏகப்பட்ட திட்டு' என்றான் காஞ்சிபுரத்தான்.

"அதெல்லாம் இல்லை, தம்பி. நீ அப்போ கொடுத்த பணம் என் பேத்தியோட கல்யாணத்துக்கு எவ்வளவு கை கொடுத்தது

தெரியுமா?' பாட்டியின் பேச்சிலே நெகிழ்ச்சி. 'அதுக்காக நான் என்ன வேணுமானாலும் செய்யலாமே?''

'நீங்கள் அப்படிச் சொல்கிறீர்களா? சிரித்தான் காஞ்சிபுரத்தான். 'எனக்கு என்ன தோன்றியது சொல்லட்டுமா! 'காஞ்சிபுரத்தை முதுகில் மண்காட்டி விட்டதே இந்தச் சென்னை என்று நினைத்தேன்."

'எனக்குப் புரியலியே தம்பி' என்றாள் மூதாட்டி. 'அதாவது, என் சொந்த ஊர் காஞ்சிபுரம். நடிப்பிலும் நாட்டியத்திலும் கைதேர்ந்த கலைச் செல்விகள் எங்கள் ஊரிலேதான் உண்டு என்று இறுமாந்திருந்தேன். பொய்யாக்கி விட்டது இந்தச் சென்னைப் பட்டணம். இங்கே ஒரே இரவுக்குள், ஒரே மாளிகைக்குள், இரண்டு கைதேர்ந்த நடிகைகளைச் சந்தித்துவிட்டேன், பாருங்கள்!'

கிழவி ஒரு கொட்டாவி விட்டாள். 'என்னென்னவோ சொல்கிறாய், தம்பி புரியலை. எதுக்காக இப்படி என்னைக் கத்தச் சொன்னாயோ, எதுக்காகக் கும் பல் கூட்டச் சொன்னாயோ...'

'அது மட்டும் புரியப் போகிறதா பாட்டி? ' குறுக்கிட்டான் காஞ்சிபுரத்தான். 'ஒரு சின்ன மனத் தத்துவப் பரீட்சை பண்ணினேன். என்ன தெரியுமா? ஆபத்து, ஆபத்து என்று அலறிப் புடைத்துக் கொண்டு பலபேர் கூடுகிற போது கவனியுங்கள், தெரியும். ஒவ்வொருவரும் எது தங்களுக்கு ரொம்பப் பிரியமானதோ அது பத்திரமாயிருக்கிறதா என்றுதான் பார்ப் பார்கள். இங்கே ஒரு பெரிய மனிதர், ரகசியமாய்க் கொஞ்சம் பொக்கிஷம் ஒளித்து வைத்திருக்கிறார். அந்த இடத்தைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் உங்களைக் கத்தச் சொன்னேன். ரொம்ப நன்றி, பாட்டி. போய்ப் படுத்துக் கொள்ளுங்கள்."

காஞ்சிபுரத்தானுக்கு அவசரம்தான். ஆனால் கிழவியை இருளில் தனியே அனுப்ப மனமில்லை. கையைப் பிடித்து அழைத்துச் சென்றான் லாயத்துக்குள். முரட்டுக் கோணியை உதறிப் போட்டான். படுக்கச் சொன்னான் பாட்டியை. கிழிசல் போர்வையைப்

போர்த்திவிட்டு, 'தூங்குங்கள் பாட்டி," என்றான். 'நல்ல பிள்ளையாயிருக்கிறே. சாக்கிரதையா இரு, தம்பி. உனக்கு யாராவது ஏதாவது கெடுதல் பண்ணிக் கொண்டேயிருக்கிறார்களே!' என்று வருந்தினாள் கிழவி.

காஞ்சிபுரத்தான், கையிலிருந்த சுள்ளியை உயர்த்திப் பிடித்தான். 'பார்த்தீர்களா, பாட்டி? கையிலே எப்படிப்பட்ட ஆயுதம் வைத்திருக்கிறேன்! ஒரு பயல் என்னிடம் வம்பு பண்ண முடியாது!'

பொக்கை வாயைத் திறந்து பாட்டி சிரித்துக் கொண்டிருக்கையில், பாழும் கிணற்றை நோக்கிக் காஞ்சிபுரத்தானின் நடை விரிந்தது.

பார்ப்பதற்கு எவ்விதச் சந்தேகத்தையும் ஏற்படுத்தவில்லை அந்தப் பாறாங்கல். ஆட்டிப் பார்த்தான். சற்று அசைந்தது. தட்டிப் பார்த்தான். துவாரமுள்ள இடம் போல் ஓசை தந்தது.

மூச்சுப் பிடித்துப் புரட்டினான் கல்லை. ஓர் ஆள் நுழையக் கூடிய அளவுக்கு வழி ஏற்பட்டது. இறங்கிச் செல்லும் படிக்கட்டுகள் புலப்பட்டன.

கிட்டத்தட்ட விடியும் வேளை. வெளிச்சம் சற்றுப் பரவியது. ஒவ்வொரு படியாக இறங்கினான்.

கால் வெட்டப்பட்டதா என்ன! சரேலென நின்று விட்டான் காஞ்சிபுரத்தான். அந்தச் சரசரப்போசை ஒரே ஓர் இடத்திலிருந்துதான் வரமுடியும்.

விஷ ஜந்துக்களின் நடமாட்டம்!

நின்றான். நிதானித்தான். ஆராய்ந்தான், அரைகுறை வெளிச்சத்தின் உதவியால்.

நாலைந்து இரும்புப் பெட்டிகள் இருந்தன சுவரோர மாக. ஆனால்

ஒவ்வொரு பெட்டியையும் சுற்றி நண்டுகள், ஜல மண்டலிகள்.

ரகுநாதரின் மாயாஜாலங்களை அறிந்தவன்தான் காஞ்சிபுரத்தான். ஆனால் நச்சுப் பிராணிகளைக்கூட வசியப்படுத்தும் அளவுக்கு அவர் கைதேர்ந்தவரா! அவனால் நம்ப முடியவில்லை.

இரண்டடி முன்னே வைத்தான். புருபுருவென்று அவையும் முன்னே வந்தன. பெட்டிக்குள் இருப்பது, ரகுநாதர் திரட்டி வைத்திருக்கும் கும்பினி நாணயம்தான். ஆனால் ஐயத்தைத் தீர்த்துக் கொள்வது எப்படி? பெட்டியைத் திறந்து பார்க்க வேண்டுமே? நெருங்கினால்...

பெட்டியின் மூடி திறக்குமோ என்னவோ, பரலோகத்தின் வாசல் திறந்து விடுவது நிச்சயம்.

கையிலேயே வைத்திருந்த சுள்ளியை ஓங்கினான். அந்த விஷ ஜந்துக்கள் நகர்ந்தோடி, சுவரின் மூலையில் பதுங்கிக் கொண்டன. அட பயங்கொள்ளிகளா!' என்று சிரித்தான் காஞ்சிபுரத்தான். சுள்ளியை எறிந்துவிட்டுப் பெட்டிகளை நோக்கி முன்னேறினான்.

ஓடியவை உடனே வந்து பெட்டியைச் சூழ்ந்து கொண்டன.

'உஸ்! போ!' கையை வீசி ஆட்டினான். அவை நகரக் காணோம். சுள்ளியைக் கையிலெடுத்தான். ஓங்கினான். பழையபடி ஓடி ஒளிந்து கொண்டன அவை. சுள்ளியை எறிந்தான். திரும்பி வந்தன. கையிலெடுத்தான். ஓடின.

ஒரு வினாடியில் உண்மை புலப்பட்டது காஞ்சிபுரத் தானுக்கு.

கையிலிருந்த சுள்ளியை அளவுகடந்த ஆச்சரியத்துடன் பார்த்தான் அவன். பிரமிப்பு அவன் மனத்தையே மரக்க வைத்தது.

அவன் எங்கிருந்தோ பொறுக்கிக் கையில் வைத்திருந்தது வெறும் சுள்ளி அல்ல, விஷமுறிச் சக்தி அடங்கிய மூலிகைக் குச்சி! காற்றுப் பட்டாலே நச்சுப் பிராணிகள் நடுங்கியோடும் வலிமை கொண்டது!

உயர்த்திப் பிடித்த மூலிகைக் குச்சியுடன் முன்னேறினான். மூலையில் சுருண்டு முடங்கின நச்சுப் பிராணிகள். இரும்புப் பெட்டியைத் தூக்கிப் பார்த்தான். என்ன கனம், என்ன கனம்! திறந்து, கையை விட்டான். அள்ளி எடுத்தான். கைநிறையப் பவுன் நாணயங்கள் வந்தன.

சந்தேகமில்லாமல் ரகுநாதரின் கள்ளப் பிழைப்பு ருசுவாகி விட்டது.

முட்டாள் கும்பினிக்காரன் கத்தி பாய்ச்சவிருக்கும் கரத்துக்குச் சந்தனம் பூசுகிறானே அப்பாவி!

ஒரே ஒரு நாணயத்தை இடுப்பில் முடிந்துகொண்டான். பெட்டிகளைப் பழையபடி வைத்து விட்டுத் திரும்பி நடந்தான். ஒளிந்த ஜந்துக்கள் சரசரவென முன்வந்து பெட்டிகளைச் சூழ்ந்து கொண்டன.

தெய்வாதீனமாய்க் கிடைத்த மூங்கில் குச்சியை ஒடித்து இடுப்பில் செருகிக் கொண்டான் காஞ்சிபுரத்தான். கோழை எஜமானுக்கேற்ற கோழைக் காவலர்கள்!' என்று நகைத்தவாறே வெளியேறினான்.

பொலபொலவென்று விடிந்து கொண்டிருந்தது. கண் விழித்த குஞ்சுகளைத் தாய்ப் பறவைகள் சீராட்டின. கண்ணாடியில் முகம் பார்க்கும் அழகு மங்கையென, வானம் நோக்கி உயர்ந்தன மலர்ந்த பூக்களின் வதனங்கள்.

பொத்தென்று காஞ்சிபுரத்தான்மீது எதுவோ விழுந்தது.

ஒரு நாவற்பழம்.

நிமிர்ந்து பார்த்தான். சாளரத்தருகே மறைவாக நின்றிருந் தாள் தெய்வநாயகி.

'சொல்லாமல் செல்வதுதான் நல்லவனுக்கு அடையாளமா!' என்றாள் அவள். 'ஆதாரம் கிடைத்ததா?’’ * 'மடியில் இருக்கிறது, முடிச்சைக்

காட்டினான் காஞ்சி புரத்தான். 'குற்றவாளி உங்கள் தந்தையல்ல. ரகுநாதர்தான். '

தெய்வநாயகி அதிசயித்தாள்: 'ஓ! விருந்தாளியின் பொழுதுபோக்கா அது சரி, என்ன செய்யப் போகிறாய்?"

'கும்பினி கவர்னரிடம் சொல்லப் போகிறேன். ருசுவைக் காட்டப் போகிறேன். அப்புறம் நமக்கு வேலையில்லை. கோட்டையில் இருப்பவர்கள், ரகுநாதரின் ஆசைக் கோட்டையைத் தரை மட்டமாக்கி விட மாட்டார்களா!'

'அவ்வளவு எளிதாய்க் கணக்குப் போட்டு விடாதே, ' எச்சரித்துவிட்டுக் கேட்டாள் தெய்வநாயகி, "உன் அடுத்த வேலை?"

'சொன்னால் எரிச்சலடைவீர்கள்.'

'ஏன்? '

'பிடிக்காதவரின் பெயர் வரும்?"

'யாரது?"

'சிவசிதம்பரம்.' காஞ்சிபுரத்தான் புன்னகை செய்தான். ‘‘காலையும் கையையும் வாங்கிவிடும்படி முன்னொரு நாள் எனக்குக் கட்டளையிட்டீர்களே, அதே சிவசிதம்பரம்தான். அவருடைய புரட்சித் திட்டத்துக்கு உதவி செய்யப்போகிறேன். எனக்கு ஒரு வேலை பணித்திருக்கிறார்.'

'புரட்சித் திட்டமா அந்தக் கோழை சிவசிதம்பரமா!' எள்ளி நகையாடினாள் தெய்வநாயகி.

'யாரை வேண்டுமானாலும் இகழுங்கள். வீரர் சிவ சிதம்பரத்தை இகழுவதை நான் பொறுக்க மாட்டேன்,'

சாளரத்தின் வழியே தாவி அறையினுள் குதித்தான் காஞ்சி புரத்தான்.

'இதைப் பாருங்கள். வயிற்றைச் சுற்றிக் கட்டியிருந்த துணிப்பட்டையைப் பிரித்தெடுத்தான்.

'என்ன இது?"

'ருசு. சிவசிதம்பரம் கோழையல்ல என்று நிரூபிக்கும் தடயம், ' கோட்டையின் படத்தைக் காட்டினான் காஞ்சி புரத்தான்.

வியப்பினால் தெய்வநாயகியின் கண்கள் விரிந்தன.

அவர். சிவசிதம்பரம்... இப்படிப்பட்ட தைரியசாலியா...!" என்றாள். அவளது பவழ அதரங்கள் மெல்ல நடுங்கின.

## (28)

"ஏன் அதிசயப்படுகிறீர்கள்? சிவசிதம்பரம் அன்றைக்கும் புரட்சிக்காரர்தான். இன்றைக்கும் புரட்சிக்காரர்தான். பரங்கிகளின் பிடியிலிருந்து பாரதத்தை விடுவிக்கப் போராடிய வீரர்களின் பட்டியல் என்றைக்குத் தயாரிக்கப்பட்டாலும் சரி, அதிலே ஓர் இடம் சிவசிதம்பரத்துக்கு உண்டு. சந்தேகம் ஏன் உங்களுக்கு?'

தெய்வநாயகியின் செப்பு இதழ்கள் மூடியே இருந்தன. கருவண்டு போன்ற கண்கள் இமைக்காமல் நின்றன. மிடறு விழுங்கிய போது மெல்லப் புடைத்துத் தாழ்ந்தது அவளுடைய சிவந்த கண்டம்.

காஞ்சிபுரத்தான் எடுத்துக் காட்டிய துணிப்பட்டையையே பார்த்தவாறிருந்தாள் அவள். பிறகு கேட்டாள்: "இதை வைத்து என்ன செய்யப் போகிறாராம் அவர்?"

விளக்கினான் காஞ்சிபுரத்தான்.

'டச்சுக்காரனிடம் தரச் சொல்லியிருக்கிறார். கோட்டை யின் வழிகள் என்ன, பலவீனங்கள் என்ன என்பதை இந்தப் படம் அவர்களுக்குக் காட்டும்.'

'ஒருநாளும் நினைக்கவில்லை. அவர் இத்தனை தைரியசாலி என்று ஒரு நாளும் நினைக்கவில்லை', பின் கை கட்டியவாறு அறையின் குறுக்கும் நெடுக்குமாய் உலவிக் கொண்டிருந்த தெய்வநாயகி முணுமுணுத்தாள்.

'புத்திசாலிகள், உருவத்தை வைத்து எடை போட மாட்டார்கள், ' என்றான் காஞ்சிபுரத்தான்.

'அவர் உள்ளத்தையும் சேர்த்தே சொல்கிறேன். சின்ன வயதில் அவரை நான் வெறுத்ததற்குக் காரணமே அவருடைய கோழைத்தனம்தான்', தெய்வநாயகி சட்டென்று நின்றாள், காஞ்சிபுரத்தானை அசையாத விழிகளால் நோக்கினாள்: 'முன்பொரு நாள் என் அப்பா கேட்டதையே நானும் கேட்கலாமா?"

'சிவசிதம்பரத்தைக் கோட்டையிலிருந்து மீட்டு வரும் படி?''

'ஆம். '

'கட்டளையா, வேண்டுகோளா?" 'இரண்டுமில்லை. உடன்படிக்கை. நீ என் விருப்பத்தை நிறைவேற்றினால், சிங்காவரத்துச் சதிகளை உடைப்பதில் என் உதவி உனக்குக் கிட்டும். '

வெளியேறுவதற்காகச் சாளரத்தில் கால் வைத்திருந்த காஞ்சிபுரத்தான் கூறினான்: 'உங்கள் திடீர்க் காதல் எப்படிப் போனாலும் எனக்கு அக்கறையில்லை. ஆனால் என் தாமரைக்காகச் செய்கிறேன். '

இருண்ட வானம் மூட்டம் போட்டிருந்தது. தூறல் துளிகள் கூழாங்கற்களாக விழுந்தன.

"கவர்னர் துரையைப் பார்க்கவேண்டும்.'

'பைத்தியமா உனக்கு? போப்பா அப்பாலே. '

'ரொம்ப முக்கியமான விஷயம், ஐயா...'

'என்ன தலைபோகிற சமாசாரமானாலும் சரி. கவர்ன ரோடு பேச முடியாது. உன்னைப் போலப் பண்டாரங்களோடு பேசுவதுதான் அவர் வேலையா?"

'தயவுபண்ணுங்கள், ஐயா. கவர்னர் துரையோடு நான் பேசிய பிறகு பாருங்களேன். ஏன்டா இவனை என்னிடம் அனுமதித்தாய் என்று அவர் கேட்டாரானால், உனக்கு என்ன தண்டனை கிடைத்தாலும் நான் வாங்கிக் கொள்கிறேன்."

'சரிதான்! நல்ல பேரமாயிருக்கிறதே! நகரப்பா நீ நல்ல வேளையில். கவர்னர் துரை பவனி கிளம்புகிற நேரம். கோச்சுக்குப் பக்கத்திலே யார் நின்றாலும் அவருக்குப் பிடிக்காது.'

'இதுதான் அவர் பவனி போகிற கோச்சு வண்டியா?"

"ஆமாம், ஆமாம். அதோ துரை வருகிறார், போ, போ!' கோச்சு வண்டிக்காரன் காஞ்சிபுரத்தானை நெட்டித் தள்ளினான்.

கும்பினி பிரஸிடெண்டும், சென்னைப் பட்டணத்தின் கவர்னரும், இங்கிலாந்து மன்னரின் இந்தியப் பிரதிநிதியுமான மாட்சிமை தங்கிய யேல் துரையவர்கள் கண் கவரும் வெள்ளை உடையணிந்து, உடையெங்கும் தங்க வெள்ளிப் பதக்கங்கள் டாலடிக்க, மெல்லிய பவுன் பிரம்பைச் சுழற்றிய படி வெளிவந்தார். கோச்சு வண்டியில் ஏறினார். முன்னும் பின்னுமாகப் பல பரிவாரங்கள் குதிரைகள் மீதேறினார்கள். கோச்சு வண்டி புறப்பட்டது.

'நில்லுங்கள்! வண்டியை நிறுத்துங்கள்!' கூவினான் காஞ்சிபுரத்தான். - ஓட்ட நடையில் புறப்பட்டிருந்த கோச்சு வண்டி நின்றது. இழுத்துப் பிடித்ததால் புரவிகள் முன்னங்காலை உயர்த்திவிட்டு ஆத்திரமாய் நின்றன.

'யாரவன்?' கேட்கும் பாவனையில் யேல் துரை பிரம்பைச் சுட்டிக் காட்டினார்.

"எவனோ பைத்தியக்காரப் பண்டாரம், ' என்றான் கோச்சு ஒட்டி.

காஞ்சிபுரத்தான் ஓடிவந்தான் அருகில். 'வண்டியின் கடையாணி விழுந்திருந்தது கீழே. கவனிக்கவில்லை வண்டிக் காரன்', கையை நீட்டிக் காட்டினான்.

'பலே!' பிரம்பினால் தட்டிக் கொடுத்தார் யேல் துரை. 'பொய்' என்று கத்த வாயெடுத்த வண்டிக்காரன் அடக்கிக் கொண்டான். இந்த அயோக்கியன், தானே கழற்றி வைத்திருக்கிறான் கடையாணியை! என்று அவன் எத்தனை சொன்னாலும் இனி நம்பமாட்டார்கள். அழகோடு இளமையும், இளமையோடு அறிவும். அறிவோடு ஆணவமும் கொண்ட அந்த வாலிபனைப் பார்த்து வண்டியோட்டியின் கிழட்டு உள்ளம் குமுறியது.

'துரையவர்களிடம் ஒரு விண்ணப்பம். தனியே சொல்ல வேண்டியிருக்கிறது.'

துபாசி மூலம் அறிந்தார் யேல் துரை, காஞ்சிபுரத்தானின் கோரிக்கையை "மிஸ்டர் ராபர்ட்" என்று இன்னொரு துரையை அழைத்தார். "இவன் சொல்வதைக் கேட்டுக் கொள்ளுங்கள்."

கோச்சு வண்டியும் பரிவாரமும் போய்விட்டன. ராபர்ட் துரை வேறு யாருமல்ல. நாணயச் சாலைக்கு அவனை அழைத்துப் போனவர்தான். ‘‘என்ன?' என்றார் அவர். முடிச்சை அவிழ்த்தான் காஞ்சிபுரத்தான். காட்டினான். ராபர்ட் துரை வாங்கிப் பார்த்தார். "இது எங்கள் நாணயம். அசல் நாணயம். '

'இது பெட்டி பெட்டியாக ஓரிடத்தில் இருக்கிறது. இதற்குப் பதில் பெட்டி பெட்டியாகக் கள்ள நாணயத்தைப் புகுத்திக் கொண்டிருக்கிறார்கள்."

'யார்? எங்கே?'

"ரகுநாதர். பெரியபெத்துவின் மாளிகையில்."

'பெரியபெத்துவும் ரகுநாதருமா? சிலையாகி நின்றார் ராபர்ட் துரை.

'பெரியபெத்துவுக்குப் பங்கு இல்லை. அவருக்குத் தெரியவும் தெரியாது. ரகுநாதர் மட்டும்தான்."

'ஹாஹ்ஹா' திடீரெனச் சிரித்தார் ராபர்ட் துரை. 'ரகுநாதர் எங்களுக்கு மிகவும் வேண்டியவர். அவருக்கு நாங்கள் பலவித ஒத்தாசைகள் செய்வதாக இருக்கிறோம். அதைக் கெடுப்பதற்காக வேண்டுமென்றே யாரோ...'

'இல்லை, இல்லை, இடைமறித்தான் காஞ்சிபுரத்தான். 'இந்த ரகுநாதரேதான் இப்படி...'

'ஷட் அப்' ராபர்ட் துரை வெட்டினார். 'யார் யோக்கியன், யார் மோசடிக்காரனென்று கும்பினிக்குத் தெரியும். நீ சொல்லத் தேவையில்லை. பண்டார வேடம் எதற்காகப் போட்டிருக்கிறாயோ அதைக் கவனி போ!'

'துரை...'

'போ!' ராபர்ட் உறுமினார். சீறினார். துபாசி மெதுவாகக் காஞ்சிபுரத்தானிடம், 'போ என்றால் போய்விடு. துரை ரொம்பக் கோபமாயிருக்கிறார், ' என்றான்.

"நானும் போகிறேன். இவனும் அழிந்து போகட்டும். நல்லதைச் சொன்னால் எடுத்துக் கொள்ளத் தெரியாத முட்டாள்' காஞ்சிபுரத்தான் திரும்பிவிட்டான்.

தெய்வநாயகி சொன்னது சரிதான். ரகுநாதரின் மோசடியைப் பற்றித் தெரிவித்ததும் கும்பினியான் மாறி விடுவானென்று எளிதாகக் கணக்குப் போடாதே என்று எச்சரித்தாளே!

இனி நேரே தாமரையிடம் போய், ஆபத்திலிருந்து அவளைக் காக்க வேண்டியதுதான். அதற்கு முன் ஒரு வேலை... சிவசிதம்பரத்தைப் பார்த்து, தெய்வநாயகியின் செய்தியைச் சொல்ல வேண்டும்.

இருட்டட்டும் என்று காத்திருந்தான் காஞ்சிபுரத்தான்.

ஊய் ஊய் என்று காற்று சீழ்க்கையடித்தது. தாளிடப் படாத கதவுகள் தடால் தடாலென்று சாத்திக் கொண்டன.

'தெய்வநாயகி அவ்வளவு மாறிவிட்டாளா? மிக்க மகிழ்ச்சி, தம்பி' உணர்ச்சி எதுவும் வெளிப்படவில்லை சிவசிதம்பரத்தின் குரலில்.

'தங்கள் மகிழ்ச்சி தெய்வநாயகிக்கும் கிட்டவேண்டும் ஐயா, ' என்றான் காஞ்சிபுரத்தான்.

'அதற்கு?'

"தாங்கள் இங்கிருந்து விடுதலையாகி வெளிவர வேண்டும். தெய்வநாயகியைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும். இல்லத்தில் இருந்தவாறே புரட்சி நடவடிக்கைகளில் ஈடு படலாம். '

"சரிதான், சரிதான்!" நகைத்தார் பெரிதாகச் சிவசிதம்பரம். ஒட்டியிருந்த தாடையின் மேலே பளிரெனப் பிரகாசித்தன வெண்மை குன்றாத பற்கள். 'தம்பி, நான் பட்டுப்போன மரம். அவள் பருவத்துடன் பூரித்து நிற்கும் புறா. எந்தக் கிளையிலே அவள் ஆடி மகிழ முடியும்? நான் வறண்ட வானம். அவள் கானமயில். அவள் தோகை விரிப்பதற்குத் தூண்டக் கூடிய சக்தி ஏது என்னிடம்? காதல் லிகிதம் கொண்டு வந்திருக்கும் அருமை நண்பனே! உன் நிருபத்திலே உள்ளடக்கம் நன்று. முகவரிதான் தப்பு. இதெல்லாம்

போனாலும், நான் எந்த வினாடியிலும் தூக்கு மேடை ஏற வேண்டியிருக்கும். அப்புறம் தெய்வநாயகியின் வாழ்வு?"

'ஐயா, தாங்கள் சீரும் சிறப்புமாய்த்தான் வாழப் போகிறீர்கள் எதிர்காலத்தில். தங்களைக் கைப்பிடிக்கும் பாக்கியவதிக்கு ஒரு குறைவும் நேராது."

'இருதாரம் கொள்வது பாவம் என்று நான் நினைக் கிறேன், தம்பி. '

'இருதாரமா?"

"புரட்சி வாழ்வை ஏற்கெனவே மணந்து கொண்டவனாயிற்றே நான் தெய்வநாயகிக்கும் இப்போது தாலி கட்டினேனானால் சக்களத்திகள் சண்டைதான் மிஞ்சும். எனக்கு மன நிம்மதி பூஜ்யம்தான்."

"அப்படி எண்ணுவானேன், ஐயா? வள்ளுவப் பெருமான் சொல்லவில்லையா, இல்வாழ்க்கைதான் அறன் எனப் பட்டது என்று? அதற்குள் எல்லாம் அடங்கியிருக்கிறது என்பதால் தானே அப்படிச் சொன்னார்? வேறெந்த வாழ்க்கைக்கும் இல்லறம் முரணாயிருக்காது. துணையாயும் வலுவாயும்தான் இருக்கும்.'

'நேரத்தை வீணடிக்காதே, தம்பி' என்றார் சிவசிதம்பரம் குரலில் உறுதியுடன். "நான் கொடுத்த படத்தை டச்சுக்காரர்களிடம் சேர்ப்பிக்க உனக்குத் தயக்கமாயிருந்தால் திருப்பிக் கொடுத்துவிடு. வேறு நிறையப் பேர்கள் இருக் கிறார்கள் அந்தக் காரியத்தை மகிழ்ச்சியுடன் செய்ய."

"என்னைக் கோழையென்று நினைத்து விட்டீர்களா? அந்த வேலையைச் செய்ய அஞ்சித்தான் தங்கள் கொள்கையைத் திசை திருப்ப முயலுகிறேன் என்று நினைக்கிறீர்கள்? அப்படித் தானே?"

'இதுவரை அப்படி நினைக்கவில்லை. ஆனால் நீ மேலும் வாதாடிக் கொண்டு நின்றால் அப்படித்தான் முடிவு செய்வேன்."

'சத்தியமாய்ச் சொல்கிறேன். தெய்வநாயகியிடம் தங்களைச் சேர்ப்பித்த பிறகு நேரே டச்சுக்காரனிடம் சென்று விட்டுத்தான் அடுத்த வேலை. என்னை நம்புங்கள்,' என்றான் காஞ்சிபுரத்தான்.

'அதாவது, நான் வெளியே வர மறுத்தால் நான் இட்ட வேலையைச் செய்யமாட்டேன் என்கிறாய்?"

“தாங்கள் மறுக்க மாட்டீர்கள். '

'மறுக்கிறேன். '

'என்னை மன்னியுங்கள். ' கண் இமைக்கும் நேரம்தான். அறையின் மூலையில் சாத்தியிருந்த மரத்தடி காஞ்சிபுரத் தானின் கைக்கு மாறிற்று. சிவசிதம்பரத்தின் கழுத்துப் பின் புறத்தில் வேகமாக இறங்கிற்று.

'அம்மா!' முனகி, அந்த முனகல் முடியுமுன்பே சிவ சிதம்பரம் சுருண்டு விழுந்தார்.

“மன்னியுங்கள். எனக்கு வேறு வழி இருக்கவில்லை, ' அடிபட்ட இடத்தைக் கவனித்தான் காஞ்சிபுரத்தான். அவன் எதிர்பார்த்த மாதிரியே லேசானதாக இருந்தது.

வெளியே கடத்திச் செல்லும் வரையில் இவர் இப்படியே இருக்கவேண்டும். நடுவே நினைவு வந்துவிடக் கூடாது. நினைவு வந்தாலும் கத்திவிடக் கூடாது.

காஞ்சிபுரத்தான் தன் மேல் துணியை இரண்டாய்க் கிழித்தான். சிவசிதம்பரத்தின் வாயைக் கட்டினான். கைகளை முதுகின் பக்கமாக வளைத்துக் கட்டுப் போட்டான்.

விஸ் விஸ் காற்று மழையின் ஆங்காரம் தணியவில்லை.

வெளியே வந்தான். கீழே சாய்த்து விடுமளவுக்குப் பேய்க் காற்று அவனை மோதிற்று. எந்தப் பாதை வழியாக அவரைக் கடத்திச்

செல்லலாம் என்று ஆராய்ந்தான். இருட்டோடு இருட்டாகப் பதுங்கி நடந்தபோது, சுவர்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். இல்லாவிடில் அவனையே தூக்கியடித்துவிடும் போலிருந்தது காற்று.

திடீரென ஓர் ஆரவாரம். கூக்குரல். ஏராளமான பேர்கள் விழுந்தடித்துக்கொண்டு ஓடினார்கள்.

வழக்கமாகத் தூரத்தில் கேட்கும் கடலின் இரைச்சல் மிகக் கிட்டத்தில் கேட்டது.

'வாருங்கள் எல்லோரும். சிப்பாய்களை எழுப்புங்கள்! அந்தப் பண்டாரங்கள் வந்திருக்கிறார்களே, அவர்களையும் இழுத்து வாருங்கள்!' எவனோ ஒரு பரங்கி கத்தினான்.

சத்தம் வந்த திசைக்கு ஓடினான் காஞ்சிபுரத்தான். என்ன? அவனால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. எப்போது கடல் இவ்வளவு அருகில் வந்தது? கோட்டை வாசலுக்கு வெகு தூரத்தில் பொங்கிக் கொண்டிருந்த அலைகள் எப்படி இதோ வாசலிலேயே மோதுகின்றன!

'போ நீயும் என்ன வேடிக்கை பார்க்கிறாய்!'' எவனோ ஒரு சிப்பாய் காஞ்சிபுரத்தானின் முதுகில் கை வைத்துத் தள்ளிவிட்டான்.

அருகில் போன பின்னரே, பயங்கரம் முழுதும் புலப் பட்டது.

கன்னங் கரேலென்ற இருளின் நடுவே, வெள்ளை வெளேரென்ற அலைகளின் சீற்றம் பால்நிறப் புரவிகள் தான் பாய்ந்து வருகின்றனவோ! பார்ப்பவரைப் பயந்து பின்னடையப் பண்ணும் எக்காளம்!

திருவண்ணாமலையிலிருந்து வந்த காஞ்சிபுரத்தானின் கூட்டாளிகள், தலையிலும், முதுகிலும் மண் மூட்டைகளைச் சுமந்துகொண்டு ஓடினார்கள். பொதேர் பொதேர் என்று போட்டார்கள் மூட்டைகளை. கோட்டைச் சுவரின் பலவீனமான

பகுதிகள் பொத்பொத்தென்று இடிந்து விழும் ஓசையும் அவற்றுடன் கலந்தது.

டமர டமர டம். டமர டமர டம். தமுக்கு அடித்துக் கொண்டு சிலர் டவுன் பக்கம் ஓடினார்கள்.

பரங்கித் துரையொருவன் துபாசியிடம் கத்தினான்: "தெருத் தெருவாய் தண்டோரா போட்டுக் கூவும்படி சொல்லு. நெசவாளிகள், தச்சர்கள், சலவைக்காரர்கள், பியூன்கள் எல்லோரும் வரவேண்டும். திடகாத்திரமான ஆள் ஒருவனைக் கூட விட்டுவைக்காமல் கூட்டிவரச் சொல்லு.'

காஞ்சிபுரத்தானும் விரைந்தான், கோட்டையின் உட்புறத்தில் மண்ணை வெட்டி வெட்டி, மூட்டையாகக் கட்டிக் கொண்டிருந்த இடத்துக்கு. தலையில் ஒன்றும் முதுகில் ஒன்றுமாகச் சுமந்து கொண்டான். தண்ணீர்க் கரைக்குத் திரும்பினான்.

துரையொருவன் அவன் முதுகில் தட்டினான் வெள்ளிப் பூண் போட்ட பிரம்பினால். "அதோ அங்கே உடைத்துக் கொண்டு வருகிறது பார். அங்கே போய்ப் போடு!"

இடுப்பளவு தண்ணீரில் இறங்கினான் காஞ்சிபுரத்தான். இரண்டு மூன்று நடை அவ்வாறு நனைந்த பிறகு தான் நினைவுக்கு வந்தது - இடுப்புக்குமேல் சுற்றிக் கட்டிக்கொண் டிருக்கும் கோட்டைப் படம்.

நான்காம் முறை, மூட்டையைத் தூக்கச் சென்றவன் மெல்ல மறுபுறம் நழுவினான்.

காவலில்லாத சிறிய பீரங்கியொன்று இருந்தது. இரும்புத் தொப்.பி மூடியிருந்த வாயை யாரும் காணாதபடி திறந்தான். பரபரவென்று இடுப்பிலிருந்து துணிப்பட்டையை அவிழ்த் தான். செருகி, மூடிவிட்டுத் திரும்பினான்.

'தூக்கடா சீ தூக்கு' மேலாளொருவன் ஒரு சிறுவனை அடித்துக் கொண்டிருந்தான் சவுக்கினால்.

பையனுக்கு இரண்டே கை, பாவம். மூட்டையைத் தூக்கவும் அடி விழும் இடத்தைத் தடவிக் கொள்ளவும் மூன்று கைகளல்லவா தேவைப்பட்டன.

காஞ்சிபுரத்தான் மேலாளைப் பிடித்து மறுபுறம் தள்ளினான். 'விடு அந்தச் சிறுவனை. அவன் பங்கையும் நானே சேர்த்துத் தூக்குகிறேன். தலையில் இரண்டு மூட்டைகளும், இரண்டு அக்குளுக்கு இரண்டுமாக நான்கு ஆரோகணித்தன காஞ்சிபுரத்தானின் உடலில்.

'துரை! இவனைப் பார், சுத்த வம்புக்காரனாயிருக்கிறான்' மேலாள் புகார் செய்தான் ஒரு பரங்கியிடம்.

காஞ்சிபுரத்தானைப் பார்த்து அந்தத் துரை புன்னகை தான் செய்தார். நாணயசாலை விஷயமாகப் பழக்கமாகி விட்ட ராபர்ட் துரைதான் அவர். "இவன் பெரிய ஆள் அப்பா. எதுவும் செய்வான். புகார் பண்ணாதே', என்றார்.

காட்ட முடியாத கோபத்துடன் மேலாள் திரும்பி விட்டான். சிறுவன் காஞ்சிபுரத்தானுடனேயே சென்றான் கடற்கரை வரையில். கொஞ்சம் கொஞ்சமாகச் சீற்றம் ஓய்ந்து கொண் டிருந்தது.

"அடேய் பொடியா, எனக்காக ஒரு உதவி செய்கிறாயா?" காஞ்சிபுரத்தான் கேட்டான்.

'ஒன்றென்ன அண்ணே? உயிரையே கொடுக்கமாட் டேன்?' என்று மார் தட்டினான் பையன்.

காஞ்சிபுரத்தான் சிரித்தான். 'இப்போதுதானேடா அதைக் காப்பாற்றினேன்? அதற்குள் நானே பறிப்பேனா? வேறோர் உதவி..." அவன் குரல் தாழ்ந்தது. "இப்படியே நேராய்ப் போ. ஒரு சின்னக்

கொட்டகை இருக்கிறது. அதற்குள் ஒரு ஆள் - மெலிந்து, நோயாளிபோல் இருப்பார். ஆனால் கம்பீரமாய்ப் பேசுவார் - அவர் பத்திரமாய் இருக்கிறாரா என்று பார்த்து வாயேன். யாருக்கும் தெரியக் கூடாது. என்ன?"

'இதோ', சிட்டாய்ப் பறந்தான் சிறுவன். ஒன்பதாவது நடையாகக் காஞ்சிபுரத்தான் மூட்டையைத் தூக்கிக் கொண்டிருந்த சமயம் பையன் திரும்பினான்.

'இந்தாடா பையா தலையிலேயிருந்து இது சரிந்து விடும் போல் இருக்கிறது, சரியாய் வை', பையனை அருகில் அழைத்துக் கொண்ட காஞ்சிபுரத்தான் குந்தினாற்போல் உட் கார்ந்தான். 'என்ன, பார்த்தாயா?"

சிறுவன், மூட்டையை அவன் தலையில் அடுக்குகிற மாதிரி பாசாங்கு செய்தபடி பதில் தந்தான்: 'ஒருத்தரையுமே காணோம் அங்கே, அண்ணே வெள்ளம் வேறே புகுந்திருக்கிறது.'

'என்னது! நன்றாய்ப் பார்த்தாயா?"

'நீங்களே போய்ப் பாருங்களேன் சந்தேகமானால். கதவு திறந்து கிடக்கிறது. வெளியே எங்கேயோ போய் விட்டார் போலிருக்கிறது.'

அவசர அவசரமாய் மூட்டைகளைக் கரையில் எறிந்தான் காஞ்சிபுரத்தான். சிவசிதம்பரம் இருந்த கொட்டகையை நோக்கி விரைந்தான்.

ஆம். காலியாகத்தான் இருந்தது. சாகப் போகும் புலி, நாக்கை நீட்டிக் காயத்தை நக்கிக் கொள்வதுபோல், கடலின் கடைசி அலைகள் கரையில் ஊர்ந்து ஊர்ந்து மடிந்தன. கதவுகள் வாய் பிளந்து கிடந்தன. கட்டுப்போடும் போது கிழித்தெறிந்த சிறிய துணித் துண்டுகள் அலைநீரில் மிதந்தவாறிருந்தன.

'ஐயாவைத் தேடுகிறீர்களா?" திடுக்கிட்டுத் திரும்பினான். குசினிக்காரனின் உதவியாள் ஒருவன் கையில் பலகாரத் தட்டு. பிறர் கவனித்தால் தெரி யாதபடி, வேறெங்கோ பார்த்த மாதிரி கேட்டான்.

ஆ! காஞ்சிபுரத்தான் ஆறுதலடைந்தான். சிவசிதம்பரத்துக்கு வேண்டியவன் அவன் ஒருவன்தானா? பலபேர் இருப்பதாக அவரே சொன்னாரே?

"ஆமாம். இங்கேதான் கொஞ்சம் முந்தி விட்டுவிட்டுப் போனேன்...'

'பெரிய பெத்துவின் வீட்டுக்கு அனுப்பி விட்டேன். இந்த இடத்தில் கடல் உள்ளே வந்துவிடும் போலிருந்தது. வந்து பார்த்தேன். மயங்கிக் கிடந்தார். வாசல்புறத்திலிருந்த அமளியில் யாரும் கவனிக்கவில்லை எங்களை. பின்புறம் வழியாக வேறு துணையுடன் அனுப்பிவிட்டேன்.'

'ரொம்ப நன்றி!' காஞ்சிபுரத்தானும் வேறு திசையில் பார்த்தவாறே பதில் தந்துவிட்டுத் திரும்பினான்.

இனிமேல் சென்னைப் பட்டணத்தில் தாமதிக்கும் ஒவ்வொரு வினாடியும் தாமரைக்கு ஆபத்துதான். இதோ வருகிறேன் தாமரை, இதோ வந்துகொண்டேயிருக்கிறேன்.

கடல் கொந்தளிப்பை அடக்குவதற்கு உதவி செய்த தொழிலாளிகள், துரைகளிடம் கூலிப் பணத்தைப் பெற்றுக் கொண்டு கூட்டம் கூட்டமாய்த் திரும்பிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு நடுவில் புகுந்து வெளிப்பட்டான் காஞ்சிபுரத்தான். பீரங்கியிடம் சென்று கோட்டைப் படத்தை எடுத்துக் கொண்டான்.

திருவல்லிக்கேணியை நோக்கி அவன் நடை திரும்பியது. 'சென்னைக்கு வந்த காரியம் முடிந்துவிட்டதாக்கும்?" பச்சோந்தியைக் கொஞ்சியவாறே எதிர்ப்பட்டார் பாதிரியார்.

"ஆமாம், சாமி. அப்படித்தான் நம்பிக் கொண்டிருக் கிறேன், ' என்றான் காஞ்சிபுரத்தான்.

'நம்பு, நம்பு, பாதிரியார் பேசிக்கொண்டே போனார். 'நம்பிக்கையும் ஏமாற்றமும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போல. நீ ஒரு பக்கத்தைத்தான் பார்த்திருக்கிறாய் இதுவரை."

அவர் சொல்வதன் பொருள் என்ன? காஞ்சிபுரத்தானின் முகம் கறுத்தது, ஒரு வினாடி. மறுகணம் அந்த எண்ணத்தை உதறியெறிந்தான்.

மாமரத்தடியில ஒரு முரண்டுக் குதிரைக்கு லாடம் அடித்துக் கொண்டிருந்தார் ஒரு முஸ்லிம் கிழவர். கால்களைச் சரியாகக் கட்டாததால் உதைத்துக் கொண்டேயிருந்தது குதிரை. "நான் வேணுமானால் பிடித்துக் கொள்ளட்டுமா பெரியவரே?" என்று அவரை அணுகினான் காஞ்சிபுரத்தான்.

'நல்ல சமயத்துக்கு வந்தாய், வா, ' என்று அவனை வரவேற்றார் பெரியவர்.

கிட்டத்தட்ட அதே சமயம். கோட்டையில் ராபர்ட் துரை சிப்பாயொருவனை விசாரித்துக் கொண்டிருந்தார்.

'என்ன பண்ணினான் அப்புறம்?"

'சிவசிதம்பரத்தைத்தான் தேடினான் அந்த ஆள். தாங்கள் சொல்லித் தந்த மாதிரியே சொல்லி அனுப்பி விட்டேன், எஜமான். '

'பீரங்கியிலே கொண்டுபோய் வைத்தானே, அந்தப் படம்?"

'இதோ இருக்கிறது ஐயா, ' கால்சராய்க்குள்ளிருந்து எடுத்துத் தந்தான் சிப்பாய். 'இதே போலவே கிறுக்கின வேறொரு துணியை அங்கே வைத்துவிட்டேன். அதை எடுத்துக்கொண்டு போயிருக்கிறான்.

'சரி, நீ போ. '

சிப்பாய் அகன்றான். பக்கத்திலிருந்த இன்னொரு துரையைப் பார்த்தார் ராபர்ட்துரை. பெருமிதத்துடன் புன்னகை விரிந்தது. 'அவன் பெரியபெத்துவின் அடிமை என்பதைக் காலையிலேயே கண்டுபிடித்து விட்டேன். முதுகில் சூடு இருக்கிறதே! உடனேயே அவனைக் கண்காணிக்க ஏற்பாடு செய்திருக்கிறேன். எப்படி?’’

'கள்ள நாணய சமாசாரம்?' என்று கேட்டார் மற்றவர்.

"அது தனி, ' என்றார் ராபர்ட் துரை.

## (29)

‘‘பொறுங்கள் மிஸ்டர் பெரியபெத்து. பொறுங்கள் மிஸ்டர் ரகுநாதர்' ' தந்தக் குச்சியால் பல்லைக் குத்திக் கொண்டே பேசினார் யேல் துரை.

கோட்டையில் கவர்னர் பெருமானின் அறை. பெரிய சாளரத்தின் வழியே காலை வெய்யில் சுள்ளென்று உறைத்தது. பங்காவை இடைவிடாமல் இழுத்தான் வெளியே இருந்த பியூன். கவர்னர் துரை அப்போதுதான் உண்டு முடித்திருந்த காலைப் பலகாரங்கள் மேஜைமீது சிதறிக் கிடந்தன. குசினிச் சிப்பந்தி ஓசைப்படாமல் அடுக்கினான் பூவேலை செய்த பீங்கான் தட்டுக்களை.

எட்ட நின்றிருந்தார்கள் கவர்னரின் சகாக்களான மூன்று துரைகள்.

'என் மகளை வலுக்கட்டாயமாகச் சிங்காவரம் அரண்மனைக்குக் கொண்டு சென்று விடுவது என்று தீர்மானித்து, மயக்க மருந்து கொடுத்து வைத்திருக்கிறோம்...' என்றார் பெரியபெத்து.

விட்ட இடத்தில் தொடர்ந்தார் ரகுநாதர்: "மயக்கம் தெளிவதற்குள் போய்விட வேண்டும். மூன்று நாள்தான் மயக்கம் பலிக்கும். '

'இதுதானே முதல்நாள்?' குத்தியெடுத்ததை நாசுக்காகத் துப்பினார் யேல் துரை. “இன்று பிற்பகல் கல்கத்தாவிலிருந்து புதுப் புதுக் கருவிகள் வந்துவிடும். கப்பலைப் பார்த்ததாகச் சில கட்டுமரக்காரர்கள் கூடச் சொன்னார்கள். எப்படியும் ஐம்பது பண்டாரங்கள் தயார்...'

'அது போதுமா...' என்று குறுக்கிட்டார் ரகுநாதர். 'அதற்குமேல் போனால் ஆபத்து; சிங்காவரம் படை களுடன் நேரிடையாய் வெளிப்படையாய் மோதுவதென்றால் மூவாயிரம் நாலாயிரம் பேர் தயார் செய்யவேண்டும். செஞ்சி, தஞ்சை ராஜாக்களின் பகைமை ஏற்படும். ஜனங்களின் விரோதத்தைச் சமாளிக்க வேண்டும். என் ஏற்பாடுதான் சிறந்தது. ராஜ்யத்தில் எதெது முக்கியமான இடங்கள் என்பதை ரகுநாதர். எனக்குத் தெரிவிக்கட்டும். அங்கங்கே ராத்திரியோடு ராத்திரியாகப் பிடித்து விடுவார்கள். பொழுது விடியும்போது, சூரியோதயம் எவ்வளவு சாதாரணமோ அவ்வளவு சாதாரணமாய் பெரியபெத்துவின் மகள்... யாரங்கே...?"

தயங்கி வெளியே நின்றிருந்த சேவகனொருவன் குனிந்து பணிந்து நீட்டினான் ஓர் ஓலையை. இடது கையால் வாங்கிப் பார்த்தார் யேல் துரை. 'அடடா, காசி வீரண்ணா காலமாகி விட்டாராம் இன்று விடிகாலை. '

ரகுநாதரைத் தவிர மற்ற அனைவருக்கும் அந்தப் பெயர் அறிமுகமானது. பெரியபெத்துவுக்கு வர்த்தகத் துறையில் அவர் நண்பர், போட்டியாளர்.

'நமது நெடுநாளைய வாடிக்கைக்காரரல்லவா இவர்?" யேல் துரை தன் சகாக்களிடம் விசாரித்தார். 'ஆகவே வழக்கமான கம்பெனி மரியாதைகளை அனுப்பி வையுங்கள்."

அதிகாரிகளில் ஒருவர் வெளியேறினார். உட்னே திரும்பி வந்தார். "காசி வீரண்ணாவின் மரணத்தினால் வேறொரு சிக்கலாம். புகார் சொல்ல வந்திருக்கிறார்கள்,' என்று தெரிவித்தார்.

'என்னவாம்? ' "அவர் இந்து என்பதால் தகனம் செய்ய வேண்டுமென் கறார்கள் அவருடைய குடும்பத்தினர். அவர் ஒரு முஸ்லிம் என்றும், அடக்கம் செய்ய வேண்டுமாதலால் தங்களிடம் பிரேதத்தை ஒப்படைக்க வேண்டும் என்றும் சில முஸ்லிம்கள் கேட்கிறார்கள். ' ". .'

"விசித்திரமாயிருக்கிறதே? என்றார் யேல் துரை. 'இது உண்மையா மிஸ்டர் பெரியபெத்து?"

"காசி விரண்ணா ஒரு மர்மமான மனிதர். பல கதைகள் உண்டு அவரைப்பற்றி, எதையோ நினைவுபடுத்திக் கொள்ள முயன்றார் பெரியபெத்து. "ஆம்; அவரிடமிருந்து சில அடிமைக் கிழவர்களை நான் வாங்கினேன். ஏழெட்டு வருடங்களுக்கு முன்பு. அவர்களைக் கேட்டால் தெரியும்.'

"கொஞ்சம் விசாரியுங்கள். கும்பினி சார்பில் உங்களுக்கு அதிகாரம் தருகிறேன். உங்கள் தீர்ப்புக்கு இரண்டு தரப்பிலும் கட்டுப்பட வேண்டும் என்று சொல்லியனுப்பி விடுகிறேன்." "அப்படியானால்...' எழுந்து கொண்டார் ரகுநாதரும். 'பிற்பகல் வாருங்கள்' என்று விடைகொடுத்தார் யேல் துரை. 'ஆனால் ஒன்று. சிங்காவரத்தில் முக்கியமான இடங்களைப் பற்றிய பட்டியலை நீர் தரவேண்டும். எப்படியெப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்கு நான் திட்டம் தருகிறேன். '

கவர்னர் பெருமானின் தந்தக் குச்சிக்கு வேலை ஆரம்பமாயிற்று மீண்டும்.

“என்னய்யா விழிக்கிறீர்? உமக்குத் தெரியாது? பெரிய பெத்துவின் மீசை, இரண்டு கோடியிலும் துடித்தது. "காசி வீரண்ணாவின் இருநூறு ரூபாய் பாக்கிக்காகப் பத்து அடிமை களை நாம் வாங்கிக் கொள்ளவில்லை? ஏழெட்டு வருஷம் முன்பு இருக்கும். இதற்கெல்லாம்கூடக் கணக்கு வைத்துக் கொள்ளவில்லை என்றால் என்ன கணக்கப்பிள்ளை நீர்? பாதுஷாவின் பட்டாளத்துக்கு

ஆள்வேனுமாம். போய்ச் சேர்ந்து கொள்ளும். தடிமாடாட்டம் சரீரம். அதற்குத்தான் லாயக்கு."

'எஜமான் கோபித்துக் கொள்ளக்கூடாது, ' கையது கொண்டு மெய்யது பொத்தி நின்றார் அந்தக் கணக்கப்பிள்ளை. 'பத்து அடிமைகள் வாங்கியதற்குக் கணக்கு இருக்கிறது. ஆனால் அவர்கள் யார் யார், பெயரென்ன என்பதுதான் குறித்துக் கொள்ளவில்லை. சின்ன எஜமானிக்குத் தெரியும்.'

'தெய்வநாயகிக்குத் தெரியுமா? பின்னே இதை முதலிலேயே சொல்லுவதற்கென்ன? ' பெரியபெத்து எழுந்து கொண்டார். கண்ணை மூடி யோசனையில் ஆழ்ந்திருக்கும் ரகுநாதரைக் கண்டார். 'உங்களுக்குக் களைப்பாயிருந்தால் இங்கேயே இருங்கள். நான் போய்க் கேட்டு விட்டு வருகிறேன். '

'இல்லை, இல்லை. நானும் வருகிறேன். வேடிக்கை பார்க்க ஆசையாயிருக்கிறது, ' என்று புறப்பட்டார் ரகுநாதர்.

"வேடிக்கையா!'

"ஆமாம். மயக்கத்தில் ஆழ்ந்திருக்கும் மகளோடு ஒரு தந்தை எப்படியெல்லாம் பேசுகிறார் என்பது வேடிக்கை யல்லவா பின்னே!"

'த்ஸூ... மறந்தே போனேன், தேக்குமரக் கதவின் சிற்ப வேலைப்பாடுகளை நெருடியபடி நின்றார் பெரியபெத்து. “ராத்திரி பார்த்ததுதான் தெய்வநாயகியை. அவளைத் தொந்தரவு செய்யக் கூடாதென்று வேலைக்காரர்களையும் தடுத்திருக்கிறேன். போய்ப் பார்க்கலாம் எப்படி இருக்கிறாளென்று. '

இருவரும் தெய்வநாயகியின் அறையை அடைந்த போது எவ்வித மாறுதலும் தென்படவில்லை. அவள் கண்கள் மூடியிருந்தன. மூச்சு சீராக வந்து கொண்டிருந்தது. உதடுகள் மட்டும் ஏனோ துடித்தன.

'உங்கள் மகள் எதையோ நினைத்து முனகுகிறாள்' என்றார் ரகுநாதர்.

பெரியபெத்து அவள் உதட்டருகே குனிந்தார். காது கொடுத்துக் கேட்டார்.

'சிவசிதம்பரம்... சிவசிதம்பரம்... உங்களை... நான்..." சிவசிதம்பரமா தன் செவியையே நம்ப மறுத்தவர் போல் திகைப்புடன் பின்னடைந்தார் பெரியபெத்து.

'யாரது?' குழம்பினார் ரகுநாதர். 'என் உறவுப் பையன். இவளுக்கு முறைப் பையன். ஆனால்... இருங்கள், இருங்கள்', தெய்வநாயகியின் உதடுகள் மீண்டும் அசையவே, அவளை நோக்கிக் குனிந்தார்.

'அப்பா... எப்படியும் உங்களை மீட்டு விடுவார்... அவரிடம் சொல்லத்தான் வெட்கமாயிருக்கிறது... விரைவில் நாம் சேர்ந்து விடுவோம்... சிவசிதம்பரம்...' இரண்டொரு முறை தெய்வநாயகி விசித்தாள். பிறகு புரண்டாள். ஒருக்களித்துப் படுத்துவிட்டாள்.

யோசனையுடன் நின்றார் பெரியபெத்து. கப்பலிலும், படகிலும், பல்லக்கிலும், குதிரையிலும் தன்னுடன் பலமுறை பயணம் செய்துள்ள ஒரு சின்னஞ்சிறு பாலகனின் பால் மணம் மாறாத முகம் அவர் மனக்கண்ணில் எழுந்தது. மரணப் படுக்கையில் கிடக்கும் தமக்கை, 'இவனை வளர்த்து ஆளாக்கு, தம்பி' என்று ஒப்படைத்த காட்சி தோன்றியது. சிவசிதம்பரமும் தெய்வநாயகியும் ஒருவரையொருவர் அடித்துக் கொண்டும் கிள்ளிக்கொண்டும் விளையாடிய நிகழ்ச்சிகள் முளைத்தன.

'உங்களுடன் இருந்து, இந்த அடிமை வர்த்தகத்தைக் கவனித்துக் கொள்வதா வேறு ஆள் பாருங்கள்!' என்று நெருப்பாகக் கூறிவிட்டு வெளியேறும் ஓர் இளைஞனின் மெலிந்த உருவம் நினைவில் உறுத்திற்று.

'இப்போது எங்கே இருக்கிறான் அவன்?' ரகுநாதர் விசாரித்தார்.

'கோட்டையில் கைதியாக,' குறுக்கும் நெடுக்கும் உலவினார் பெரியபெத்து. 'அவனொரு அசட்டுப் பிள்ளை. கோல்கொண்டா நவாபின் பிரதிநிதி என்று நினைத்துக் கொண்டான். சுதந்திரம், புரட்சி என்று கோஷமிட்டான். ஆனானப்பட்ட லிங்கப்பாவே இருக்குமிடம் தெரியாமல் போன பிறகு இவன் எந்த மூலை? பிடித்து அடைத்து விட்டார்கள் கோட்டையில்...'

'உங்கள் மகள் அவனையே நினைத்து உருகுகிற மாதிரியல்லவா இருக்கிறது?"

'அதுதான் ஆச்சரியம். அவனைக் கண்டாலே பிடிக்காது இவளுக்கு. அத்தனை வெறுப்பு. என்ன திடீர்க் காதல் என்று தான் புரியவில்லை. இதெல்லாம் எனக்கு முன்பே தெரிந்திருந்தால்... ' பெருமூச்சு வெளிப்பட்டது பெரியபெத்து விடமிருந்து.

'இப்போதும் ஒன்றும் முழுகிவிடவில்லை. கோட்டையிலிருந்து அவனை விடுவிக்க வழி பாருங்கள்.'

'அந்தப் புரட்சிக்காரனையா? கும்பினியாருக்குத் தெரிந்தாலே ஆபத்தென்று என் உறவைக்கூட அவர்களிடம் சொல்ல வில்லை இதுவரை. அவர்களை எப்படிக் கேட்பது?"

'கேட்பானேன்? ரகசியமாகவே மீட்போம். எல்லாம் கூடி வருகிறது, பாருங்கள். புரட்சி, சுதந்திரம் எல்லாக் கோஷமும் பொறுப்பில்லாத வரையில்தான். சிங்காவரத்து இளவரசியின் கணவனாக அவன் ஆகட்டும். பிறகு பாருங்கள்."

பெரியபெத்துவின் முகம் மலர்ந்தது. 'ரகுநாதரே, அப்படி யெல்லாம் கூட நடக்குமா?"

'வாருங்கள், நடக்கும்படி செய்யலாம்.' பெரியபெத்து மகளைத் திரும்ப நோக்கினார்: "தெய்வ நாயகி, உன் ஆசை விரைவிலேயே நிறைவேறும் அம்மா. '

இருவரும் வெளியேறிய சிறிது நேரம் கழித்து மஞ்சத்தில் எழுந்து உட்கார்ந்தாள் தெய்வநாயகி. படபடவென்று சிறகடித்துக் கொண்டு உள்ளே வந்தது அவள் வளர்த்து வரும் ஒரு மாடப்புறா. சிமிழிலிருந்து கொஞ்சம் தானியம் எடுத்து உள்ளங்கையில் கொட்டிக் கொண்டாள்.

கொத்தித் தின்னும் புறாவின் மெத்தென்ற சிறகைக் கோதிக் கொடுத்தாள் கோதை. 'சேதி தெரியுமா உனக்கு? மெல்ல அப்பா காதிலே போட்டுவிட்டேன். பாரேன், கொஞ்ச நாளில், அவர்... அவரைத் தெரியாது? அவர்? போ! போ!'

மாடப்புறா தன் அழகிய கண்களைச் சுழற்றிச் சுழற்றித் தெய்வநாயகியை ஆச்சரியத்துடன் பார்த்தது.

பெரியபெத்து உள்ளே நுழைந்ததுமே சந்தடிகள் கப்சிப் பென்று அடங்கின.

நடுக்கூடத்தில் கிடத்தப்பட்டிருந்தது காசி வீரண்ணாவின் பிரேதம். சென்னைப் பட்டணத்தின் பல சாகசக் கதைகளுக்கு நாயகனாக விளங்கிய அந்தக் கிழவர், சகலமும் அடங்கி வெறும் சவமாக ஒடுங்கிக் கிடந்தார். கும்பினி கவர்னர் யேல் துரையிடமிருந்து வந்திருந்த மலர் மாலை அவர் மீது போர்த்தப்பட்டிருந்தது. மரியாதைச் சால்வை அவர் காலடியில் மடித்து வைக்கப்பட்டிருந்தது. மனைவிமார்களும் அவர்களுடைய குழந்தைகளும் பக்கத்து அறைகளுக்குள்ளிருந்து எழுப்பிய ஒப்பாரி தெருவையே கிடுகிடுக்கச் செய்து கொண் டிருந்தது.

வாசலில் சில முஸ்லிம் பெரியவர்கள் பெரியபெத்துவை வரவேற்றார்கள்.

'கும்பினியிலிருந்து தகவல் வந்ததா? விரல்கள் மீசையைச் சுண்ட வினவினார் பெரியபெத்து.

'வந்தது ஐயா, தங்கள் முடிவுக்குக் கட்டுப்படுகிறோம்" என்றார் ஒரு முஸ்லிம் பெரியவர். 'என்ன ஆதாரத்தை வைத்து உங்கள் கோரிக்கையை வெளியிட்டிருக்கிறீர்கள்?"

ஒரு முதியவர் விளக்கினார்: 'சின்ன வயசில் பட்டணத்தை விட்டு ஓடிப் போனவர் இவர். இளமையில் நாற்பது நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன்பு மறுபடி வந்தார். திருவல்லிக்கேணியில் பிரபலமான வர்த்தகராக வசித்து வந்தார். ஹஸன்கான் என்று பெயர். ராயபுரம் கிராமத்துப் பக்கத்தில் ஒரு மசூதிகூடக் கட்டினார். பிறகு வியாபாரம் நொடித்துவிட்டது. ஓடிவிட்டார் பழைய படி. பதினைந்து வருடம் கழித்துத் திரும்பி வந்து இங்கே குடியேறினார். என்னைப் போல் சில கிழவர்கள்தான் அவரை அடையாளம் கண்டு கொண்டார்கள். மற்றவர்களுக்குத் தெரியவில்லை. '

'நீங்கள் அவரிடமே நேரில் கேட்டீர்களா?"

'கேட்காமல் இருப்பேனா? என்னிடம் ரகசியமாக ஒத்துக் கொண்டார் தான்தான் ஹஸன்கான் என்று. வியாபார சௌகரியங்களுக்காக இந்துவாக வேஷம் போடுவதாகச் சொன்னார். '

பெரியபெத்து மீசையைத் திருகியவாறு மௌனமாயிருந்தார். காசி வீரண்ணா பெரிய சாமர்த்தியக்காரர். முஸ்லிம் என்று சொல்லிக் கொள்வதில் ஆதாயம் உண்டெனத் தெரிந்து அதற்காகவும் சிற்சில சமயம் அப்படிச் சொல்லியிருப்பார்.

"இங்கேயே இருங்கள்' என்று சொல்லிவிட்டு ரகுநாதருடன் உள்ளே நுழைந்தார்.

காசி வீரண்ணாவின் காது நுனிகளைத்தான் முதலில் கவனித்தார். மிகச் சின்ன வயதில் கடுக்கனுக்காகக் குத்தப் பட்ட வடு தெரிந்தது.

மடலை மடித்துப் பார்த்தார். கழுத்தும் காதும் ஒட்டும் இடத்தில், சங்குச்சக்கரம் பச்சை குத்தப் பட்டிருந்தது.

காசி வீரண்ணா இந்துதான். சில முஸ்லிம்களை ஏமாற்று வதற்காக நடுநடுவே தானும் முஸ்லிம் என்று சொல்லிக் கொண்டிருந்தார் போலும்.

தீர்ப்பை வெளியிட எழுந்தார் பெரியபெத்து. வெங்கடாத்ரி என்ற வர்த்தகர் மெல்ல நெருங்கினார் அவரை. "தயவுபண்ணி எங்கள் பக்கமாகவே தீர்ப்புச்சொல்ல வேண்டும். இந்து என்று. தங்களுக்காக எதுவும் செய்கிறேன்...' பெரிய பெத்துவின் காதோடு பேசினார்.

பெரியபெத்துவின் உதட்டில் புன்சிரிப்புத் தவழ்ந்தது. நேர்மையான முடிவைத் தெரிவிக்கப் போகும் சமயத்தில் லஞ்சமா!

எதையும் எப்போதும் பயன்படுத்திக் கொள்ள தவறாதவர் அவர். 'உங்களை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கிறதே?"

"ஆமாம். காலையில் கோட்டையில் பார்த்திருப்பீர்கள். கடல் பொங்கியதால் ஏற்பட்ட சேதங்களைப் பழுது பார்க்க நான்தான் குத்தகை எடுத்திருக்கிறேன். '

'ஒ' பெரியபெத்துவின் புருவங்கள் முடிச்சிட்டன. 'கோட்டையிலா! உங்கள் ஆட்கள் பலபேர் அங்கே இருப் பார்கள், இல்லையா?"

"ஆமாம், ஏன்?"

ரகுநாதரைத் தவிர மற்றவர்களை விலகிப் போகச் சொன்னார் பெரியபெத்து. வெங்கடாத்ரியிடம் மெல்ல வெளியிட்டார் தன் எண்ணத்தை.

'சிறிது சிரமம்தான். ஆனால் செய்து முடிக்கிறேன், ' வாக்களித்தார் வெங்கடாத்ரி.

மேலும் சில கிசுகிசுப்புகள்.

வெளியே வந்தார் பெரியபெத்து.

'வருந்துகிறேன், நண்பர்களே. காசி வீரண்ணா பிறப்பால் இந்துதான். நீங்கள் நினைத்திருக்கும் ஹஸன்கான் அவரல்ல. இந்து முறைப்படி அவரைத் தகனம் செய்வதுதான் சரி.'

ஏமாற்றத்தினால் அந்த முஸ்லிம் பெரியவர்களின் முகம் கூம்பின. எனினும் பெருந்தன்மையுடன் தீர்ப்பை ஒப்புக் கொண்டார்கள். ஒவ்வொருவராக வெளியேறினார்கள்.

அத்தனை கூலியாட்களில், மூன்று ஆட்கள் மட்டும், தலையில் நீல முண்டாசு கட்டிக் கொண்டிருந்தார்கள். அது தான் அடையாளம், பெரியபெத்து தொடர்பு கொள்வதற்கு.

உடைத்த கற்களை எடுத்துச் சென்று கொண்டிருந்தான் ஒருவன். எச்சரிக்கையுடன் பார்த்துக் கொண்ட பின்னர் அருகில் அழைத்தார் அவனை.

'என்ன, சிதம்பரம் எங்கே இருக்கிறார் என்று தெரிந்து விட்டதா?’’

'அதைத்தான் தேடிக் கொண்டிருக்கிறோம், ' ரகசியக் குரலில் பதில் கிடைத்தது. 'நீங்கள் அடிக்கடி எங்களுடன் பேச வேண்டாம். '

'ஏன்? 'கும்பினி வக்கீல் இல்லை, ஐஸா கூலி என்பவர்? நம் உடன்படிக்கை அவர் காதுக்கு எட்டியிருக்கிறதாம். துரைகளிடம் வத்தி வைத்திருப்பதாகக் கேள்வி. '

மீசை நுனிகளைச் சுண்டினார் பெரியபெத்து. 'காசி வீரண்ணா தகனம் ஆகிவிட்டதல்லவா?"

'ஆகிவிட்டது.'

'அப்புறம் என்ன? ஒரு கேலிச் சிரிப்பு. 'சாம்பலை வேண்டுமானால் ஒரு பெட்டியில் போட்டுப் புதைத்து அடக்கம் பண்ணட்டும்! என் தீர்ப்புத் தீர்ப்புத்தான். பயப்படாமல் வேலையைக் கவனி.'

"எங்களைப் பற்றிப் பயம் இல்லை. தாங்கள்...' 'என்னையா!' மேலும் பெரிதாக நகைத்தார் பெரிய பெத்து. 'கும்பினியானுக்கு அத்தனை...'

'ஐயா பெரியபெத்து!" ரகுநாதரின் உற்சாகமான அழைப்பு. 'உங்களை எங்கெல்லாம் தேடுவது? வாருங்கள், வாருங்கள்!"

'இதோ வந்தேன், ' இரண்டெட்டில் நண்பரை அடைந்தார் பெரியபெத்து. "ஏது, சிங்காவரம் கோட்டையையே பிடித்து விட்ட சந்தோஷத்தில் இருக்கிறீர்களே?'

'பின்னே! இடிக்கவும் மின்னவும் ஆரம்பித்த பிறகு, மழை வருமோ வராதோ என்றா கவலைப்படுவார்கள்?" பெரியபெத்துவின் கரங்களைப் பிடித்துக் குலுக்கினார் ரகுநாதர். 'கல்கத்தாவிலிருந்து கப்பல் வந்துவிட்டது. பெட்டி பெட்டியாகத் தளவாடங்கள் எவ்வளவு வகை வெடி மருந்துகள்! துரைமார்கள் உங்களையும் என்னையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் பாட்டுக்கு... ' தொனி தாழ்ந்தது. 'மருமானைக் கண்டுபிடித்து விட்டீர்களா?"

'முயற்சி நடக்கிறது', பெரியபெத்துவையும் தொற்றிக் கொண்டது பரபரப்பு. 'ஆயுதங்கள் வந்தாயிற்றென்றால் இன்று இரவே நாம் புறப்பட வேண்டியிருக்குமே?’’

கவர்னரின் அலுவலக வாசலில் எத்தனை நெருக்கடி! என்னென்ன சந்தடி! கூலியாட்களின் தலையிலிருந்து சுமைகள் இறங்கியவாறு இருந்தன. 'இப்படி வை இந்தப் பக்கம். நகரு. தொடாதே. ஏன், இது நனைந்திருக்கிறது? தண்ணிர் படாமல் கொண்டுவரத் தெரியவில்லை? இதிலே ஒன்று குறைகிறதே?'... இப்படிப் பல கட்டளைகள். கவர்னர் யேல் துரையை அங்கே காணவில்லை. பிரதம பீரங்கி தளபதியான கெஷ்ஷாம் துரை, இரும்புப் பந்து போன்ற பொருளைக் கையில் வைத்து ஆராய்ந்து கொண்டிருந்தார். பேமாஸ்டரான வில்லியம் ஃப்ரேஸர் ஒரு துப்பாக்கிக்காக இலக்குத் தேடிக் கொண்டிருந்தார். பண்டகசாலை மேற்பார்வையாளரான ஜான்

செய்னி, பெட்டியொன்றை உடைத்துக் கொண்டிருந்தார். சூழ்ந்தாற் போல நின்றிருந்தார்கள் சில துபாசிகளும் சிப்பாய்களும்.

'பார்த்தீர்களா!' என்றார் கெஷ்ஷாம் பெருமையுடன். 'பகலுக்கு மேல் வந்துவிடும் என்று சொன்னால் நம்ப மாட்டேன் என்கிறீர்களே! இவ்வளவும் புத்தம் புதிய நவீனமான தளவாடங்களாக்கும்!"

பெரியபெத்துவின் கண்கள் இமைக்க மறந்தன. பிரமித்து நின்றன. இந்தக் கருவிகளை அவர் பார்த்ததுமில்லை, கேள்விப்பட்டதுமில்லை. 'இன்றைக்கே புறப்பட்டு விடலாம் போலிருக்கிறதே சிங்காவரத்துக்கு?" என்றார்.

'தடையேயில்லை', ஃபிரேஸர் துரை முறுவல் பூத்தார். 'இவைகளைக் கையாளுவதற்கு அதிகப் பயிற்சி கூடத் தேவை இல்லை. இல்லையா மிஸ்டர் கெஷ்ஷாம்?"

"ஆம், ஆம், ' கையிலிருந்த உருண்டையைக் காட்டினார் அந்தப் பீரங்கித் தளபதி. 'இது என்னவென்று தெரியுமா, பெரியபெத்து ?"

'பரிகாசம் செய்கிறீர்களா?' என்றார் பெரியபெத்து.

'உங்களுக்கு, ரகுநாதர்?"

'பார்த்ததுகூட இல்லை."

'வெடிமருந்துப் பொடி அடைத்த குண்டு. பீரங்கியோ துப்பாக்கியோ வேண்டியதில்லை. கையால் வீசி எறிய வேண்டியதுதான். விழுந்த இடத்தில் வெடிக்கும். தீப்பிடிக்கும்."

‘‘எங்கள் புராணங்களில்தான் இந்த மாதிரி கணைகளைப் பற்றிப் படித்திருக்கிறோம்,' என்றார் பெரியபெத்து.

"ஓ! இந்தாருங்கள் பெரியபெத்து. எறிந்து பாருங்கள், ' கெஷ்ஷாம் ஓர் உருண்டையை நீட்டினார்.

‘'வேண்டாம், வேண்டாம். ஏன் வீணாக்குகிறீர்கள்?"

"பரவாயில்லை. பண்டத்தின் தரத்தையும் பரிசோதித்துப் பார்க்க வேண்டாமா? எறியுங்கள். '

பெரியபெத்து அதைக் கையில் வாங்கிக் கொண்டார். கனமாயிருந்தது. ஓரளவு அச்சத்தையும் ஏற்படுத்தியது. எதிரே தெரிந்த வெற்று மைதானத்தில் பார்வையைச் செலுத்தினார். "எங்கே எறியட்டும்?' என்று கேட்டார்.

'ஓ! இலக்குக் கேட்கிற அளவுக்குத் தேர்ச்சி பெற்று விட்டீர்களா' சிரித்தார் கெஷ்ஷாம் துரை. அவர் விழிகளும் ஆராய்ச்சி செய்தன. பிறகு சொன்னார்: "அதோ, புளிய மரத்தின் பக்கத்திலே ஒரு பாழடைந்த குடிசை, அதை எப்படியும் தகர்க்கத்தான் போகிறோம். இல்லையா, செய்னி?"

மூன்று பரங்கிகளின் பார்வையும் ஒன்றோடொன்று கலந்தன. 'அந்தக் குடிசைதானே! ஆமாம், ஆமாம்,' என்றார்கள் செய்னியும் ஃபிரேஸரும்.

பெரியபெத்து கைகளை அகல விரித்தார். வீசினார் ஓங்கி. படீரென்று வெடித்தது குண்டு. குபிரென்று பற்றியெரிந்தது குடிசை சடசடவென மடிந்தன மூங்கிலும் மரமும்.

“எப்படி?" என்றார் கெஷ்ஷாம். 'குறி பிரமாதம்' பாராட்டினார் ரகுநாதர். திமுதிமுவென்று ஓடிவந்தனர் இரண்டு சிப்பாய்கள். மூச்சு இரைக்க இரைக்கச் சலாம் வைத்தனர். 'அது... அந்தக் கொட்டகையில்... ' எரியும் இடத்தைக் கைகள் காட்டின. 'அங்கே... '

'என்ன அங்கே?'

'ஒரு கைதியை அடைத்து வைத்திருந்தோம் தற்காலிகமாக..."

'என்ன? சீறினார் கெஷ்ஷாம்.

'கடல் பொங்கியபோது பந்தோபஸ்துக்காக... பாதுகாப்புக்காக... '

'முன்னே எங்களுக்குச் சொல்ல வேண்டாமா அதை?' மூன்று பரங்கியரும் மீண்டும் பார்த்துக் கொண்டனர் ஒருவரை யொருவர். 'வாருங்கள் பார்க்கலாம். கைதியா இருந்தான்? எந்தக் கைதி? பரிதாபம், பரிதாபம்...'

ஆணி அடித்துவிட்டார்களா பெரியபெத்துவின் காலில்? நகராமல் நின்றார் அவர். ரத்தம் கட்டி வெளிறிப்போன முகத்தைப் பார்க்கவே பயமாயிருந்தது ரகுநாதருக்கு. மௌனமாக அவர் கைகளைப் பற்றிக் கொண்டார்.

பின்தொடர்ந்தார் துரைமார்களை. அதற்குள், சிப்பாய்கள் சிலர் எரிகின்ற குடிசைக்குள் நுழைந்துவிட்டார்கள். சிதைந்து கருகி, உருக்குலைந்திருந்த ஒரு மெலிந்த உடலை வெளியே இழுத்துப் போட்டார்கள்.

நடுங்கும் கண்களை உயர்த்தி நோக்கினார் பெரியபெத்து. அவர் தொண்டையில் எதுவோ சிக்கியது. அடிவயிற்றைப் பிசைந்தெடுத்தது.

ஒரு சிப்பாய் தெரிவித்தான். 'இவன் பெயர் சிவசிதம்பரம். '

'ஆ' தன்னை மீறி அலறிவிட்டார் பெரியபெத்து. 'என்ன மிஸ்டர் பெரிய பெத்து? ஏன் கூவினர்கள்? உங்களுக்குத் தெரிந்தவனா இவன்?' அசையாத விழிகளால் நோக்கியபடி அடுக்கினார் கேள்விகளை, கெஷ்ஷாம் துரை.

செய்னி துரை அவரையே பார்த்துக் கொண்டிருந்தார். ஃபிரேஸர் துரை அவரையே கவனித்துக் கொண்டிருந் தார்.

பெரியபெத்து, வெளியேறத் துடித்த வார்த்தைகளைத் தொண்டைக்குள் திருப்பியனுப்பினார். பொங்கி வழியவிருந்த கண்ணிரைப் பின்னுக்குத் தள்ளினார்.

'இவனையா சே, சே! தெரியாதே' என்றார்.

பரங்கிகள் மூவரும் ஒருவரையொருவர் பார்வையினா லேயே பாராட்டிக் கொண்டார்கள்.

## (30)

எம்பிப் பறிக்க முயன்றாள் கனியை. பாதத்தின் பெருவிரல்கள் ஈரமண்ணில் குழி ஏற்படுத்தின. குதிகால் உயர்ந்த தால், சலசலத்துக் கீழிறங்கியது காற்சதங்கை. அண்ணாந்த மோவாயின் கீழே, சிவந்த கழுத்தின் பச்சை நரம்பு கோடிட்டது. இடை இன்னும் சிறுத்தது; தோள் மேலும் பூரித்தது.

அப்படியும் எட்டவில்லை கனி.

'பாட்டி சுட்ட பழம் வேண்டுமா, சுடாத பழம் வேண்டுமா?"

மரத்திலிருந்து குதித்தான் காஞ்சிபுரத்தான். 'அம்மாடி!" என்று பயந்து பின்னடைந்தாள் தாமரை. கண்டசரமும், இடுப்பு ஒட்டியாணமும், கைவளையல்களும், பாதச்சலங்கை களும் ஒரே சமயத்தில் இசைகூட்டி, தங்கள் திகைப்பையும் வெளியிட்டன.

'போங்கள்!' கண்ணிர் வந்தது ஆனந்தத்தால்.

'பயந்து விட்டீர்களா அரசி?' காஞ்சிபுரத்தான் குறும்புச் சிரிப்பை வெளியிட்டான். 'சுட்ட கனியும் வேண்டாம், சுடாத கனியும் வேண்டாம். இந்தக் காதல் கனி கூட இருந்தால் போதும் என்கிறீர்களா? '

நெருங்க வந்தவனை, 'எட்டி நில்லுங்கள்!' என்று எச்சரித்தாள் தாமரை.

"ஐயோ! அத்தனை கோபமா?"

'இல்லை, காப்புக் கட்டியிருக்கிறேனே, பார்க்கவில்லை?"

அவளது மணிக்கட்டில் மஞ்சள் கயிறு இருந்தது. திகைப்பு, கேள்வியாயிற்று. "எதற்கு இது?"

'அரண்மனையில் நாளை முதல் மூன்று நாட்களுக்கு விநாயகர் பூஜை. வருடா வருடம் சிவன் கோவிலில் பண்டாரங்களுக்குச் சாப்பாடு போடுவது வழக்கம். பூஜை முடிகிற வரையில்...'

‘‘பண்டாரம்... பண்டாரங்களுக்குச் சாப்பாடு...'

தாமரையின் முகம் கோபத்தால் சிவந்தது. 'இவ்வளவு நாள் பிரிந்திருந்தது பற்றி ஒரு வார்த்தை இல்லை... பண்டாரங்களைக் குறித்துச் சிந்தனை செய்ய இப்போதுதான் சமயம் பார்த்தீர்களாக்கும்?"

"மன்னிக்க வேண்டும் அரசி... பண்டாரம் என்றதும் வேறு நினைவு... ' அரண்மனைக்குள்ளிருந்து கிருஷ்ணப்பரும் சென்னம்மாவும் வருவதைக் கண்டான் அவன். "வணக்கம், வணக்கம். '

'அட விநாயகர் பூஜைக்குத் தவறாமல் வந்து விட்டாரே தளபதி!' என்று அதிசயித்தார் கிருஷ்ணப்பர். 'போன காரியம் காயா பழமா?"

'மிகப் பக்குவமாய்க் கனிந்திருக்கிறது!' வெற்றிச் சிரிப்பு வெளிப்பட்டது காஞ்சிபுரத்தானுக்கு. "ஆனால் ஒரு வேண்டுகோள். '

'சொல்லுங்கள்.'

'விநாயகர் பூஜையின்போது பண்டாரங்களுக்குச் சாப்பாடு போடுவதற்குச் சிவன் கோவில் வேண்டாம். அரண்மனையிலேயே வைத்துக் கொள்வோம். '

மூவரும் பார்த்துக் கொண்டார்கள் ஒருவரையொருவர். 'தளபதி எதையும் திட்டத்தோடுதான் சொல்வார். அப்படியே செய்வோம்,' என்று ஆமோதித்தார் கிருஷ்ணப்பர்.

காஞ்சிபுரத்தானின் புத்தி சுறுசுறுவென்றது. கை துருதுரு வென்றது. தாமரை, கண்ணால் தந்த அதட்டல்தான் அவனை விலக்கி நிறுத்தியிருந்தது.

அரண்மனையின் இடதுசாரியிலிருந்த விருந்து மண்டபத்துக்கு ஒவ்வொருவராய்ப் பண்டாரங்கள் நுழைந்து கொண்டிருந்தார்கள்.

சேவகனொருவன் காஞ்சிபுரத்தானை அணுகினான். 'வெளியூரிலிருந்து வருகிற ஒரு பண்டாரத்தைக்கூட விடவில்லை. நேரே அழைத்து வந்துவிட்டோம். மகா ஆனந்தம் அவர்களுக்கு.'

'இருக்காதா பின்னே திருட்டுத்தனமாக நுழையவிருந்தவர்களுக்கு வெற்றிலை பாக்கு வைத்தல்லவா வரவேற்புக் கிடைக்கிறது!' மனத்துக்குள் சிரித்துக் கொண்டான் காஞ்சிபுரத்தான். 'சரி, போ. இரவு நான் சொன்னபடி... ' கண் சிமிட்டினான் - 'பலமான சாப்பாடு போட்டுவிடு. '

'உத்தரவு, தளபதியவர்களே!' குறும்புக்காரக் குழந்தையின் குதூகலத்துடன் அரண்மனை வாசலுக்கு வந்தான் காஞ்சிபுரத்தான். காலை இளஞ் சூரியனின் கதிர்கள் அவன் மேனியைத் தழுவின.

என்ன இது ஆரவாரம்! தானியமும் பருப்பும் அரிசியும் கறிகாயும் சுமந்து பல கிராமத்தவர்கள் நின்றிருந்தார்கள். வாயிற்காப்போர் அவர் களை உள்ளே அனுமதிக்க மறுத்துக் கொண்டிருந்தார்கள்.

'எஜமான்' கை கூப்பிக் கூவினான் அவர்களின் தலைவனாகத் தோன்றிய ஒரு கிழவன். 'விநாயகர் பூஜைக்குக் காணிக்கைகள் கொண்டு வந்திருக்கிறோம். பண்டாரங்களுக்கெல்லாம் சாப்பாடு நடைபெறுகிறதாமே அரண்மனையில்! சமையலுக்கும் உதவியாக இருப்போம். எங்களை உள்ளே விட மறுக்கிறார்களே!'

வாசல்காப்போனின் வேல்களைப் பறித்தான் காஞ்சி புரத்தான். தூர எறிந்தான். ‘‘முட்டாள்களே! இந்த உழைப்பாளிகளின் வியர்வையில் எழுந்ததுதான் இந்த அரண்மனை அரச குலத்தின் போக வாழ்வுக்கு

முட்டுக் கொடுப்பவை இந்த ஏழைகளின் தசைகள்தான்! இவர்களுக்கா தடை விதித்தாய்!" கிராமத்தார்களைப் பார்த்துக் கூவினான்: 'வாருங்கள் நண்பர் களே உள்ளே வாருங்கள்!'

மடை திறந்தாற்போல் அந்தக் கூட்டம் அரண்மனை யெங்கும் பாய்ந்தது.

சுளிர் சுளிர் படிர் படிர்!

ஐயையோ என்னை விட்டுவிடுங்கள் விட்டுவிடுங்கள்

மொத்து, மொத்து! குத்து! அம்மா அம்மா! தாங்கவில்லையே! திடுக்கிட்டாள், தாயக் காய்களை உருட்டிக் கொண் டிருந்த தாமரை. “என்ன அது? விருந்து மண்டபத்திலிருந்து என்னென்னவோ ஓசைகள் கேட்கின்றனவே?"

முறுவலித்தான் காஞ்சிபுரத்தான். 'விருந்து நடைபெறு கிறது, அரசி.' -

தாமரையின் தலை லேசாகத் திரும்பியது. கண்ணின் கருமணிகள், ஓரங்களுக்கு நகர்ந்தன. மாதுளை வாய் சற்றே திறந்து கொண்டது. வினாடிக்கு வினாடி ஒப்பற்ற பாவங்களைக் காட்டும் அந்த மதிவதனம், எதையோ கூர்ந்து கவனிப்பதற்காக அசைவற்று நின்றது.

'ஐயையோ அம்மா! எங்களை விட்டுவிடுங்கள், சாமி! ஓடிவிடுகிறோம், விட்டுவிடுங்கள்!'

அலறிப் புடைத்துக் கொண்டு ஓடிவந்தார் கிருஷ்ணப்பர். 'தளபதி! தாமரை! இதென்ன அநியாயம்! இதென்ன அக்கிரமம்!'

“என்ன சிற்றப்பா? என்ன நேர்ந்தது?" பதறியெழுந்தாள் தாமரை.

கையைப் பிசைந்துகொண்டு விரைந்து வந்தாள் முன்னாள் ராணி சென்னம்மாவும். ‘‘தாமரை சிங்காவரத்தை ஆளுவது நமது வம்சம்தானா? அல்லது யாரேனும் அரக்கர்களா?'

'என்ன நடந்தது?" தாமரையின் தவிப்புக்கு, விருந்து மண்டபத்திலேயிருந்து விடை வந்தது, "ஐயோ! அடிக்காதீர்கள் எங்களை தாங்க முடியவில்லை!" என்று.

'கேட்டாயா தாமரை காதில் விழுந்ததா? சாப்பாட்டுக்கு வந்த பண்டாரங்களுக்குச் சவுக்கடி விருந்து நடைபெறுகிறது!"

'ஐயோ! ஏன்? ஏன்?' பதறினாள் தாமரை. சென்னம்மா சொன்னாள்: ‘‘உணவு கிடையாதென்றால், ஓடிப்போகிறார்கள் ஒட்டாண்டிகள். அடைத்து வைத்தா அடிப்பது? நமது பரம்பரைக்கே இழுக்கு! ஏன்தான் இந்த அக்கிரமங்களுக்கு இடம் கொடுத்தாரோ? தளபதிதான் விளக்க வேண்டும். '

'அம்மா! அப்பா!' 'முதலில் அதை நிறுத்துவோம், வாருங்கள். ' மார்பின்மீது புஜங்களைக் கட்டி, கால்களை அகலப் பரப்பி, கொட்டாத இமைகளுடனும் விளங்காத முறுவலுடனும் நிற்கும் காஞ்சிபுரத்தான்மீது தாமரையின் பார்வை சென்றது. "இப்படி நீங்கள் இரக்கமற்றுப் போவீர்களென்று நான் எதிர்பார்க்கவேயில்லை."

'சொல்லி முடித்து விட்டீர்களா எல்லோரும்?' நகைத்தான் காஞ்சிபுரத்தான். 'அந்தப் பண்டாரங்கள் எதைக் கொடுக்க வந்தார்களோ அதைத்தான் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சாப்பாடு போட்டிராவிட்டால் நம்மைச் சாப்பிட்டிருப்பார்கள்...'

'என்ன சொல்கிறீர்கள், தளபதி? '

'வாருங்கள், காட்டுகிறேன். ' மூவரும் நடந்தார்கள். விருந்து மண்டபத்தை நெருங்க நெருங்க, குழப்பம், கூச்சல், அமளி, அழுகை அத்தனையும் அதிகப்பட்டன.

'நிறுத்து நிறுத்து!" கையை இருமுறை தட்டி ஆணையிட்டாள் அரசி.

ஒரே வினாடி. அலை நின்றதோ? புயல் ஒய்ந்ததோ? சாபத்தால் கற்சிலையானாற் போல, அத்தனை பேரும் அசைவற்று நின்றார்கள். ஓங்கிய சாட்டைகள் ஓங்கியபடி நின்றன. உருவிய வாள்கள், தூக்கிய கால்கள், கெஞ்சும் முகங்கள், உருண்டுவரும் கண்ணிர்கள் - எல்லாம் அப்படி அப்படியே நின்றன. அரிசி, கறிகாய் எடுத்து வந்திருந்த கிராமத்தார்களும் ஆங்காங்கே குழப்பத்துடன் நின்றார்கள்.

மந்திரவாதியொருவன், மாயக்கோலை ஆட்டினானோ? உயிர் பெற்ற சிலைகள் போல் ஓடி வந்தார்கள் பண்டாரங்கள்.

'அரசி! எங்களைக் காப்பாற்றுங்கள்!' தாமரையின் காலடியில் விழுந்தார்கள் மொத்தப் பேரும். 'சாப்பாடு போடுகிறேன் என்று வரவழைத்து, சவுக்கடி தருகிறார்களே பாவிகள்! ராணி, தங்கள் ஆட்சியில் இப்படியொரு அக்கிரமமா?'

'நிறுத்துங்கள் உங்கள் நாடகத்தை கர்ஜித்தான் காஞ்சிபுரத்தான். 'என்ன நோக்கத்துடன், யாருக்காக நீங்கள் வந்தீர்கள் என்பது இவர்களுக்குத் தெரியாது. எனக்குத் தெரியும்!" அரண்மனை வீரனொருவனை அருகில் அழைத்தான். ஒரு பண்டாரத்தை இழுத்து அவன் முன்னே தள்ளினான். 'இவனுடைய உடைகளையும், தோளில் மாட்டியிருக்கிற காவிப் பையையும் சோதனை போடு."

குழப்பத்துடன் நின்றது கூட்டம். அந்தப் பண்டாரத்தின் பையிலிருந்து ஒவ்வொன்றாய் எடுத்து வைத்தான் காவல் வீரன்.

திருவோடு, திருநீற்றுச் சம்புடம், பாசுரங்கள் எழுதப்பட்ட ஒலைச்சுவடிகள், ஜபமாலைகள், அவ்வளவுதான், பையைக் கவிழ்த்து உதறினான் படை வீரன்.

'அவ்வளவுதானா!' காஞ்சிபுரத்தானின் கண்கள் ஆச்சரியத்தால் தெறித்தன. நம்ப இயலாமல், ஒவ்வொரு பொருளையும் தானே

கையிலெடுத்துப் பரிசோதித்தான். சந்தேகத்தைக் கிளப்பக் கூடிய எதையும் காணோம்.

"அதோ, அவனைப் பிடித்துச் சோதனை போடு, ' இன்னொரு பண்டாரத்தைக் காட்டினான்.

‘‘என்ன இதெல்லாம்...' என்று பொறுமையிழந்தாள் தாமரை.

'பொறுங்கள், அரசி. பிளந்து காட்டுகிறேன் இந்தப் புரட்டர்களின் பொல்லாத்தனத்தை!'

ஆனால் இரண்டாவது பண்டாரமும் நிரபராதியே. அவனுடைய பையில் இருந்தவையும் ஓர் ஆண்டியின் உடைமைகளே.

அதோ அவன் இவன்! அங்கே நிற்கிறானே! இதோ போகிறானே!- இப்படிச் சுட்டிக் கொண்டேயிருந்தன காஞ்சிபுரத்தானின் விரல்கள். சோதனைக்கு மேல் சோதனை நடை பெற்று முடிந்தன.

ஒருவனும் பாக்கியில்லை. காஞ்சிபுரத்தான், கைகளால் அழுத்திக் கொண்டான் தலையை.

கிருஷ்ணப்பர் முன்வந்தார். ‘‘தளபதிக்கு...'

'சித்தப் பிரமை பிடித்திருக்கிறதோ என்று தாங்கள் சந்தேகிக்க வேண்டாம். எனக்கே ஐயம் ஏற்பட்டு விட்டது, ' காஞ்சிபுரத்தானின் குரல் கம்மியது. பண்டாரங்களை நெருங்கி, ஒவ்வொருவர் முகமாக உற்றுக் கவனித்தான். ஊஹூம். ஒன்றுகூட, திருக்கழுக்குன்றத்திலோ சென்னையிலோ சந்தித்த முகமல்ல! தலைக்கு மேல் கையுயர்த்திக் கும்பிட்டான் காஞ்சிபுரத்தான். 'ஐயா, பெரியவர்களே மன்னியுங்கள் இந்தப் பாவியை தப்பான கணக்குப் போட்ட எனக்கு என்ன தண்டனை வழங்கினாலும் ஏற்றுக் கொள்கிறேன். '

'பாதகமில்லை, பாதகமில்லை. அரண்மனையில் எத்தனையோ உதவிகள் பெற்றிருக்கிறோம் இதுவரை... இந்தத் தடவைதான்

இப்படி நடந்துவிட்டது... வருகிறோம்,' ஒவ்வொருவராய் வெளியேறினார்கள் பண்டாரங்கள்.

தலைகுனிந்து நின்றான் காஞ்சிபுரத்தான். 'அப்படித் தானே திட்டம். இன்றுதானே வந்திருக்க வேண்டும்... என்ன நேர்ந்தது?... ' அவன் உதடுகள் முணுமுணுத்தன.

மெய்யாகவே திட்டம் தவறிப்போய் வருந்துகிறானென்று தெரிந்தபின், சினம் கொண்டு என்ன பயன்? 'தளபதி, என்ன தான் நிகழ்ந்தது? சொல்லுங்களேன்," என்றார் கிருஷ்ணப்பர். "ஆச்சரியத்தால் பிரமிக்க வைக்க நினைத்தேன், உங்கள் மூவரையும். நானே பிரமித்து நிற்க நேரிட்டு விட்டது. என் அகங்காரத்துக்குச் சரியான அடிதான். '

ரகுநாதரின் ரகசியப் படையெடுப்புத் திட்டத்தை அவன் விளக்கியபோது, மூவரின் புருவங்களிலும் முடிச்சு!

'அப்பாவைத் தப்பவிட்டதுதான் நம் தப்பு', நெடுமூச்சு வெளிப்பட்டது சென்னம்மாவிடமிருந்து.

இருட்டில் சில தலைகள் எட்டிப் பார்த்தன. பணிவுடன் உத்தரவு நோக்கி, கைகட்டி நின்றன.

'அரிசி கறிகாயுடன் வந்த கிராமத்து ஆட்கள், ' என்றார் கிருஷ்ணப்பர்.

'போகச் சொல்லிவிடலாமா?' தாமரை வினவினாள். "வேண்டாம், வேண்டாம், 'தடுத்தான் காஞ்சிபுரத்தான். 'இன்றில்லாவிட்டாலும் நாளைக்கு ரகுநாதர் தன் திட்டத்தை நிறைவேற்றத்தான் முயலுவார். மீண்டும் தவறு ஏற்படாமல், எச்சரிக்கையாக, மோசடிப் பண்டாரங்களை மட்டுமே பிடிக்கிறேன், பாருங்கள். '

'இந்த ஆட்களை... ' சென்னம்மா கேட்டாள், எட்டி நின்றவர்களைச் சுட்டிக்காட்டி.

உரக்க உத்தரவிட்டான் காஞ்சிபுரத்தான்: 'அரண்மனையிலேயே இருங்கள். தயாரித்த விருந்துச் சாப்பாட்டை நீங்களே உண்ணலாம். அரண்மனை அதிகாரியிடம் நான் சொன்னதாகச் சொல்லுங்கள். படுக்க வசதி செய்து தருவார். '

'மிக்க நன்றி ஐயா...' பணியாட்களின் குழு, பல்வேறு திசைகளாகப் பிரிந்தது; இருளில் கலந்து மறைந்தது.

குறிப்பறிந்து விலகினார்கள் கிருஷ்ணப்பரும் சென்னம்மாவும்.

சாளரத்தில் கையூன்றி நின்றான் காஞ்சிபுரத்தான். உறக்கத்தில் ஆழ்ந்து கொண்டிருந்த ஊர், மினுக் மினுக்கென்ற ஆறுதலை அவனுக்காகத்தான் கூறுகிறதோ?

அவன் தோளைத் தழுவுவது போல் நின்றாள் துடியிடையாள். 'களைத்து விட்டீர்கள்? இல்லையா?"

'கையாலாகாதவனின் வேதம் அது', சிரித்துக் கொண்டே அவள் முகத்தை நோக்கினான் காஞ்சிபுரத்தான். 'நாளைய கண்காணிப்பையாவது வெற்றிகரமாக முடிக்க வேண்டுமே? அந்த யோசனையில் இருக்கிறேன். '

"யோசனை எவ்வளவு வேண்டுமானாலும் செய்யுங்கள்!', கொஞ்சினாள் பைங்கிளி. "செயலில் இறங்கும் போதுதான் திக்திக்கென்றிருக்கிறது. '

'பயப்படாதீர்கள். என் நாடகங்களின் இறுதிக் காட்சிகளில் நகைச்சுவைதான் கொப்புளிக்கும். பார்த்தீர்களே?"

"சோர்வில்லை என்கிறீர்கள். ஆனால் கசப்புத் தெரிகிறது நிறைய." அவன்மீது பட்டுவிடாமல் ஆனால் நெருங்கி நின்றாள் தாமரை. "இந்த மனநிலையுடன் எங்கேயும் போகாதீர்கள். நீங்கள் என் அருகில் இருப்பது ஆயிரம் யானைப் படைக்குச் சமம். '

'இல்லை அரசி. இப்போது விடை கொடுங்கள்,' மெல்ல விலகினான் காஞ்சிபுரத்தான். 'தெய்வநாயகியிடமிருந்து எனக்குத் தகவல் வரவேண்டும். எப்போது, எப்படி வருமோ தெரியாது. ஊரின் நுழைவு வாயிலில் நான் அவளுக்காகக் காத்திருப்பது நல்லது."

பிரியாவிடை தந்தாள் பாவை. அவள் உள்ளத்தின் ஆழத்தில் ஏனோவொரு சஞ்சலம் அலையடித்தவாறிருந்தது.

ஓடையின் குறுக்கே ஒரு மதகடி. காஞ்சிபுரத்தானின் கால் நனைந்து கொண்டிருந்தது தண்ணிரில். ஆனால் பார்வை பதிந்திருந்ததோ சாலையில்.

க்ளக் க்ளக் க்ளக். நாலைந்து வாத்துக்கள் அவன் கால்களைக் குறுகுறுக்கச் செய்தன. 'போ, போ, ' காலை உதறிவிட்டுச் சாலையை நோக்கினான். வெகு தொலைவில் ஓர் இரட்டை மாட்டு வண்டி வருவது தெரிந்தது. அதன் கூண்டிலிருந்த தீப்பந்தம் ஆடி அசைவதைக் கண்டான். நிச்சயம் அதில்தான் தகவல் வருகிறது. அல்லது தெய்வநாயகியே வருகிறாளோ?

எழுந்திருக்க முயன்றான். கடைசியாக வந்த ஒரு வாத்து காலைப் பிடித்து இழுத்தது.

'விடு விடு. நான் போகவேண்டும்', செல்லமாய் அதைத் தட்டிக் கொடுக்கக் குனிந்தான். என்ன அது?

காஞ்சிபுரத்தானின் கை, அந்த ஒற்றை வாத்தின் கழுத்தைத் தடவியது.

பட்டு நூலில் கோத்த ஓலைக் கிறுக்கு! முடிச்சை அவிழ்த்தான். நூலை எடுத்தான். ஓலையைப் பிரித்தான். மாட்டு வண்டி அருகில் வந்தது. சற்று நிறுத்தச் சொல்லி, வெளிச்சத்தில் படித்தான்:

'ஓடைக்கரையோடு மேற்கே வந்தால் நீல மாளிகை தெரியும். பின்புறத்துக் கதவை மூன்று முறை தட்டவும்.-தெ." தெய்வநாயகி முன்பே வந்துவிட்டாளா? எது ஓடைக் கரை? எது மேற்குத் திசை? எது நீல மாளிகை?

பரபரப்பு அவன் எண்ணத்தைக் குழப்பியது. கால்களைப் புயல் வேகத்தில் இயக்கியது. ஒடினான் இருளைக் கிழித்த வண்ணம். /

மரளிகை தெரிந்தது. பின்வாசல் வந்தது. தட்டினான் மூன்று முறை. /

கதவு திறந்தது. குளிருக்குப் பேர்த்துக் கொண்டிருந்த கிழவியொருத்தியின் உருவம் வெளிப்பட்டது. அவள் கூறினாள்:

'திட்டம் மாறிவிட்டது.' * குரலைக் கேட்ட காஞ்சிபுரத்தான் திகைத்தான்: "நீங்களா!' "ஆமாம், ' என்றாள் தெய்வநாயகி. 'அப்பாவும் ரகுநாதரும் சற்றைக்கெல்லாம் வந்துவிடுவார்கள். பிறகு மூவரும் கிளம்பிவிடுவோம்."

'பண்டாரங்கள்? '

"அந்தத் தந்திரத்தை மைசூர் நாயகர்கள் முன்பே ஒரு முறை கையாண்டு விட்டார்களாம். இப்போது பண்டாரம் என்றாலே எல்லோரும் எச்சரிக்கையடைந்து விடுகிறார்களாம். வேறுவிதமாக ஆட்களை அனுப்பத் திட்டமாகியிருக்கிறது.

“என்ன விதமாக?' இருக்கை கொள்ளவில்லை காஞ்சி புரத்தானுக்கு.

'அரண்மனையில் இம்மாதம் ஏதோ விநாயகர் பூஜை நடப்பது வழக்கமாமே? அதற்காகப் பல பேருக்கு விருந்து போடுவார்களாமே?”

'ஆமாம், ஆமாம்.'

'விருந்துக்குக் காய்கறி, அரிசி, பருப்பு, வெல்லம் முதலியன கொண்டு போகும் ஆட்களாகவும் சமையலுக்குத் துணை செய்யும் ஆட்களாகவும் உளவாளிகளை அனுப்புவதென்று முடிவு செய்திருக்கிறார்கள். அப்படி வருகிறவர்களைத் தடுத்து விடுங்கள்... ஏன்? ஏன் அப்படிப் பார்க்கிறீர்கள்?"

"காலம் கடந்துவிட்டது. காலம் கடந்து விட்டது!' பதறினான் காஞ்சிபுரத்தான். 'மிகவும் தாமதித்துச் சொல்கிறீர்கள் தகவலை. ஏற்கெனவே அவர்களை அனுமதித்து விட்டேனே... '

பளபளக்கும் தீபங்களுடன் தொலைவில் ஜொலித்தது அரண்மனை.

எதைக் காக்க நினைத்தானோ அது, எவளைக் காக்க முயன்றானோ அவள் - எதிரியின் பிடியில்!

காக்க வேண்டிய காஞ்சிபுரத்தான், காலுக்கு விலங்கிட்டாற் போல் நின்றான் - அரண்மனைக்கு வெளியே!

## (31)

மோனத் தவமிருந்தாள் இளவரசி. ஓடை நீர் ஒன்றுதான் மெல்லச் சலசலத்துக் கொண்டிருந்தது. வரலாறு தொடங்கிய காலந்தொட்டு, அது பார்த்த மனிதர்கள் எவ்வளவோ கண்ட நிகழ்ச்சிகள் எத்தனையோ? வாய் ஓயாமல் பேசுவதற்கு விஷயம் இருந்தது அதனிடம். பேசிக்கொண்டிருந்தது. மற்ற எங்கெங்கும் நிசப்தம்.

நீல மாளிகைக்கு வெளியே ஒரு பல்லக்கு வந்து நின்றது. இருட்டில் செதுக்கிய சிலைகள் போல இரண்டு உருவங்கள் முகம் தெரியாவிட்டாலும், உடல் அமைப்பிலிருந்து ஊகிக்க முடிந்தது அவர்களை. பெரியபெத்துவும் ரகுநாதரும்தான்.

ஆட்களிடம் உத்தரவிட்டார் ரகுநாதர்: "கட்டிலில் கிடப்பவளைப் பத்திரமாக எடுத்து வா. மயக்கம் கலைந்து விடக்கூடாது."

ஆட்கள் மாளிகைக்குள் சென்றார்கள். தூக்கி வந்தார்கள் சுருண்டு மயங்கிய உருவத்தை. "மெல்ல, மெல்ல, ' என்றார் பெரியபெத்து கவலையுடன்.

சிவிகை புறப்பட்டது. பெரியவர்கள் இருவரும் முன்னே நடந்தனர். ஓடையோடு ஒட்டிய வண்ணம் மேற்குத் திசையில் கூப்பிடு தூரம் சென்றதும் ஒரு பிள்ளையார் கோயில் தென் பட்டது.

இரும்புக் கிராதியைத் தள்ளினார் ரகுநாதர். இடுப்பிலிருந்த திறவுகோல், பூட்டைத் திறந்தது. அரை ஆள் உயரமிருந்தது பிள்ளையார் சிலை. "சற்றுக் கை கொடுங்கள், ' என்று அழைத்தார் ரகுநாதர்.

விவரம் புரியாத குழப்பம், பெரியபெத்துவின் முகத்தில். ஏதோ கேட்க நினைத்தார். ரகுநாதர் முகத்தில் காணப் பட்ட தீவிரம் அவர் வாயை அடைத்தது.

பிள்ளையார் சிலையை நகர்த்தியதும், பெரும் பள்ளமொன்று தென்பட்டது. காலால் தடவிப் பார்த்தார் ரகுநாதர். படிக்கட்டுக்கள் தட்டுப்பட்டன.

'அரண்மனைக்குள் இருக்கும் யானை மண்டபத்துக்குச் செல்கிறது இந்த வழி, ' விளக்கிய ரகுநாதர் சிவிகை தூக்கிய ஆட்களைக் கை தட்டிக் கூப்பிட்டார்.

மணி தீபங்கள் அரண்மனைக்குள் ஒவ்வொன்றாய் அமர்த்தப்பட்டன.

எப்படிப்பட்ட எரிமலையின்மீது உட்கார்ந்திருக்கிறோம் என்று அந்த மூவருக்கும் தெரியாது.

“கொஞ்சநேரம் பேசிக் கொண்டிருக்கலாம் சும்மா, ' என்றாள் தாமரை. "தூக்கம் பிடிக்கவில்லை."

'எனக்கும்தான்', நெட்டுயிர்த்தாள் சென்னம்மா. "அப்பாவின் அடுத்த ரகசியத் திட்டம் என்னவென்று தளபதி அறிந்து வந்து சொல்கிற வரையில் எனக்கு நித்திரை கொள்ளாது."

கிருஷ்ணப்பர் முறுவலித்தார். சென்னம்மாள் சினந்தாள். 'ஏன் சிரிக்கிறீர்கள்? என் தந்தையைப் பற்றி நானே தலை குனிந்து கொண்டுதான் இருக்கிறேன். தாங்களொன்றும் கேலி செய்ய வேண்டாம்.'

'அடடா! உன்னை நினைத்துச் சிரிக்கவில்லை. தாமரையை நினைத்தேன். சிரிப்பு வந்தது.'

திடுக்கிட்டாள் தாமரை. 'ஏன்? எனக்கென்ன வந்தது?" கிருஷ்ணப்பர் சிரித்தார்: நெருப்புக்கும் காற்றுக்கும் நீருக்கும் தேவர்கள் இருக்கிற மாதிரி, தூக்கத்தை விரட்டுவதற்கும் ஒருவன் இருக்கிறானே, நினைவில்லையா? இனிப்பான வில்லையுடைய அந்தப் பொல்லாதவன், ரொம்பத்தான் கொடுமைப்படுத்துகிறான் உன்னை இல்லையா தாமரை?'

தாமரை முகம் சிவந்தாள். சென்னம்மா புரிந்து கொண்டாள். "அவன் எப்பேர்ப்பட்ட வில்லாளியாகத்தான் இருக்கட்டுமே! நமது தளபதியின் முன்னே நிற்க முடியுமா, என்ன அவரைக் கண்டவுடனே எடுத்துவிட மாட்டானா ஓட்டம்!'

'ஆனால் அப்புறம் மட்டும் தாமரைக்குத் தூக்கம் வந்து விடப் போகிறதா என்ன!' என்றார் கிருஷ்ணப்பர்.

'போதும், போதும்!" தாமரை முகத்தைப் பொத்திக் கொண்டாள். 'நீங்கள் என்னென்னவோ பேசுகிறீர்கள். எனக்கேனோ திக்திக்கென்று இருக்கிறது."

'அசடு, தாமரையின் கூந்தலை வருடிக் கொடுத்தாள் சென்னம்மா. "இனிமேல் என்ன அபாயம்? வரவிருந்த அபாயம் கூட விலகிவிட்டதே! பண்டாரங்களாக வந்திருக்கக் கூடியவர்கள்

வரவில்லை. வேறு எந்த மாதிரி வரப்போகிறார்கள் என்று அறிந்துவரத் தளபதி போயிருக்கிறார். நிச்சயம் அந்த அபாயத்தையும் தடுத்துவிடப் போகிறார். அப்புறம் என்ன?'' வெளியே நிழலாடுவதைக் கண்டார் கிருஷ்ணப்பர். 'ஏனப்பா, நீங்களெல்லாம் படுக்கப் போகவில்லையா?"

'இதோ போகிறோம் எஜமான், ' என்றான் மறைவாகப் போய்க் கொண்டிருந்த கிராமத்தான்.

"என்ன அது கையிலே?" கிருஷ்ணப்பர் எழுந்து சென்றார்.

'இது... இது...' கையிலிருப்பதைக் காட்டினான் அந்த ஆள். 'இது வெறும் இரும்புக் குண்டு, எஜமான்."

''எதற்கு இது?'

'எஜமான் கோபிக்கக் கூடாது, ' தலையைத் தாழ்த்தினான் அவன். "அரசரைக் கேட்காமல் செய்யக்கூடாது என்றேன். பையன் கேட்கவில்லை. '

'விஷயத்தைச் சொல்லு.'

'அரண்மனைத் தோட்டத்து வாதாமரத்தில் ஏறி வாதாங் கொட்டைகளைப் பறித்துவிட்டான் புத்தியில்லாத பையன். இப்போது உடைத்துத் தா என்று பிடிவாதம் பிடிக்கிறான். மூலையில் கிடந்த இதை எடுத்துப் போகிறேன். '

கிருஷ்ணப்பர் அந்த இரும்புக் குண்டை வாங்கிப் பார்த்து விட்டுத் திருப்பித் தந்தார். 'வாதாங்கொட்டை உடைப்பதற்கு வேடிக்கையான கருவிதான். அரண்மனையில் இந்த மாதிரி நான் பார்த்ததே கிடையாது.'

அவன் போய்விட்டான்.

சற்றுத் தள்ளி இன்னும் இரண்டு மூன்று பேர்களின் கிசு கிசுப்பு. 'ஊஹூம்... நான் மாட்டேன்... நீயே கேள்...'

“என்ன அது?’ என்று கேட்டார் கிருஷ்ணப்பர். கிராமத்துப் பெண்ணொருத்தியை முன்னே இழுத்து வந்தார்கள் இரண்டு மூன்று பேர். பொற்கொடியான தேகம். கிராமத்து அலங்காரம். வாலிப விருந்து படைக்கும் வளமான உடற்கட்டு.

'எங்கள் பக்கத்தில் இவளுக்கு நல்லபேர் எஜமான், பெரிய நாட்டியக்காரி என்று. தெருக்கூத்திலே இவள் போடாத வேடமில்லை...'

சென்னம்மாவும், தாமரையும் எழுந்து வந்தார்கள். அந்த யுவதியை வியப்புடன் பார்த்தார்கள்.

'இங்கே கொஞ்சம் ஆடச் சொல்லலாமா?' தாமரை ஆவலுடன் கேட்டாள் சென்னம்மாவிடம்.

கிராமத்துப் பெண் தடாலென்று காலடியில் விழுந்து வணங்கி எழுந்தாள். 'அரசி! அதையேதான் நானும் கேட்டுக் கொண்டிருக்கிறேன், இவர்களிடம். அரசியின் முன்னிலையில் இந்த ஏழை ஆடிக் காட்ட வேண்டுமென்று கொள்ளை ஆசை எனக்கு. ஒருவராவது தங்களிடம் சிபாரிசு செய்ய மாட்டேனென்று சொல்லிவிட்டார்கள். '

'ஆடு, பார்க்கலாம், ' தாமரையும் மற்றவர்களும் இருக்கைக்குச் சென்று அமர்ந்தார்கள்.

அந்தப் பெண் ஒரு பால் குவளையைக் கையிலெடுத்துக் கொண்டாள். அறிவும் உள்ளமும் கிறுகிறுக்க, ஆடலானாள் சுழன்று சுழன்று.

ஆடிய வண்ணமே ஒவ்வொருவர் கையிலும் குவளையைத் தந்தாள். பாலை ஊற்றினாள்.

அவளைப் பார்த்தபடியே, அவள் ஆட்டத்தை ரசித்த படியே பாலை அருந்திய மூவரும் மெல்ல மெல்ல மயங்கினார்கள். ஆசனத்திலேயே சாய்ந்தார்கள்.

ஆடிக்கொண்டிருந்தவள் நிறுத்தினாள்.

'கிராமத்து ஆட்கள் பரபரப்புடன் உள்ளே வந்தார்கள். தலைவனாக இருந்த ஒருவன் கட்டளையிட்டான். 'ஊம், ஊம். ஒவ்வொருவரையும் அவரவர் அறையில் கொண்டு போய்ச் சேர்த்து விடுங்கள்... ரகுநாதர் வந்த பிறகு மற்றதைக் கவனித்துக் கொள்வார். '

"தெய்வநாயகி தெய்வநாயகி யானை மண்டபத்தின் பின்புறத்தில் பல்லக்கு மறைவாக நிறுத்தப்பட்டிருந்தது. அதை நோக்கிக் குனிந்தார் பெரியபெத்து. திரையை நீக்கி, உள்ளே கிடக்கும் உருவத்திடம் பேசினார். பல்லக்கின் பட்டுத் திரைக்குக் கூடக் கேட்டிராது. அத்தனை தாழ்ந்த ரகசியமான குரல்.

பல்லக்குக்குள் அசைவேயில்லை.

ரகுநாதர் வானத்தைப் பார்த்தார். நட்சத்திரங்கள் என்னென்ன நிலையில் இருக்கின்றன என்பதை அவர் கண்கள் ஆராய்ந்தன. நேரம் என்னவாயிருக்கும் என்பதைப் புத்தி கணித்தது.

உள்ளங்கையில் குத்திக்கொண்டு, அடைபட்ட புலி போல் உலாவினார் ரகுநாதர். "பெரியபெத்து, இன்றோடு நான் பட்ட அவமானமெல்லாம் முற்றுப் பெறும்; என் பதவியைப் பறித்தவர்களின் பல்லைப் பறிக்கப் போகிறேன்! என்னை நாட்டை விட்டுத் துரத்தினார்களே! அவர்களுடைய நாடி விழுந்து கொண்டிருக்கிறது பெரியபெத்து, நாடி விழுந்து கொண்டிருக்கிறது!'

தோளைத் தட்டிச் சாந்தப்படுத்தினார் பெரியபெத்து. 'தாழி பத்திரமாயிருக்க வேண்டும், ரகுநாதரே! வெண்ணெய்க்கு அவசரப்படாதீர்கள். விடிவதற்கு இரண்டு நாழிகை முன்புதான்,

அரண்மனை மொத்தமும் அயர்ந்திருக்கும். ஆங்காங்கே ஆட்களை அமுக்குவது அதன் பிறகுதான். வாருங்கள், அல்லிக் குளம் வரை சென்று வரலாம்...'

'பல்லக்கைத் தனியே விட்டுவிட்டா?' என்றார் ரகுநாதர்.

"ஏன்? அரண்மனை மொத்தமும் நமது ஆட்கள்தானே நிரம்பியிருக்கிறார்கள் அவர்களை நம்புவதற்கென்ன?"

'அப்படியில்லை. இவர்கள் அனைவரும் கும்பினியான் திரட்டிக் கொடுத்த ஆட்களல்லவா? தங்கள் உறவினனான சிவசிதம்பரத்தை அவன் வஞ்சகமாகக் கொலை செய்தவனாயிற்றே; அதைப் பற்றித் தாங்கள் சொன்னது முதல்..."

'உஸ்' பேச்சைத் தடுத்து நிறுத்தினார் பெரியபெத்து. 'அந்தச் சோகக் கதை மனசுக்குள் புதைந்தே கிடக்கட்டும். தெய்வநாயகிக்குத் துளியும் தெரியவேண்டாம்.'

‟எத்தனை நாட்களுக்கு!' சிரித்தார் ரகுநாதர். "சிம்மாதனத்தில் அமரட்டும். செங்கோலும் அதிகாரமும் அவள் கரங்களுக்கு வரட்டும். அரசி என்ற ஆனந்தத்தில் அவள் திளைத்திருக்கிற சமயத்தில் பக்குவமாக அவள் காதில் போடுவோம். சிறிது நேர அதிர்ச்சிக்குப் பிறகு சரியாகிவிடும்.'

அல்லிக் குளத்தின் கரையில் அமர்ந்தார் ரகுநாதர். 'பெரியபெத்து, வர்த்தக விவகாரங்களில் தாங்கள் சமர்த்தர் தான். வாழ்க்கை விவகாரத்தில் அப்படியல்ல."

'ஏன்?'

'காதலைப்பற்றி இப்படி அலட்சியமாகச் சொல்லியிருக்க மாட்டீர்கள். அந்த விஷயத்தில் தங்களுக்கு அனுபவம் குறைவு என்று நினைக்கிறேன். '

'அதாவது, அவ்விடத்தில் அதிகம் என்று பொருளா?' ரகுநாதர் மௌனமானார். குளத்து நீரைப் பார்த்து, நெடு மூச்செறிந்தார். அல்லிப் பூவின் பக்கத்திலே ஒரு தாமரை முகம் தோன்றி அவர் நெஞ்சை வேதனையில் ஆழ்த்தியிருக்குமோ?

யானை மண்டபம். பல்லக்கினுள் கிடந்த உருவம் ஓசையின்றி எழுந்தது. வெளியே எட்டிப் பார்த்தது. கூர்ந்து கவனித்தது. வெளியே வந்தது.

காலோடு தலை புடவை மூடப்பட்டிருந்தது. இருளடர்ந்த பகுதி வழியாகவே சஞ்சரித்தது. இரவின் பின் பகுதி நேரம்.

ஆகவே அதைக் கண்டுகொள்ளவோ தடுக்கவோ எவரும் எதிர்ப்படவில்லை. அரண்மனைச் சுவர்களோடு ஒட்டி நடந்தது அந்த உருவம். மூச்சுவிடும் சத்தம்கூடக் கேட்காதபடி தன்னைத் தானே கட்டுப்படுத்திக் கொண்டது.

முதலில் ஓர் அறையை அடைந்தது. உள்ளே நுழைந்தது. கவனித்தது. தேடிய அறை அதுவல்லவென்று தெளிந்ததும் வெளியேறியது. இன்னோர் அறை. அங்கேயும் அதற்கு ஏமாற்றம். மூன்றாவது அறை.

அதன் முகம் மலர்ந்தது, மஞ்சத்தைக் கவனித்ததும். அடிமேலடி வைத்து நெருங்கியது. 'அரசி! அரசி!' என்று மஞ்சத்தில் கிடந்தவளின் காதோடு கூவிற்று.

பலனில்லை. தாமரையின் நாசியருகில் விரல் வைத்துப் பார்த்தது. சுவாசம் இழைபோல வந்துகொண்டிருந்தது.

உருவம், தன் இடுப்பிலிருந்து சிறிய மூலிகையொன்றை வெளியெடுத்தது. தாமரையின் நாசித் துவாரத்தில் வைத்து விட்டுக் காத்திருந்தது.

ஒரு திணறல். கமறல். திமிறல். தாமரை புரண்டாள். பொன்னான மேனி பலவிதமாய் முறுக்கிக் கொண்டது. உருவம் அவள் தலை திரும்பாதபடி ஒரு கையால் கெட்டியாகப் பிடித்துக் கொண்டது. மறு கையால் மூலிகையையும் நாசியிலிருந்து அகற்றாமல் அழுத்திக் கொண்டது.

மூர்ச்சை தெளிந்தது தாமரைக்கு - கொஞ்சம் கொஞ்சமாய். நினைவுக்கும் மயக்கத்துக்கும் நடைபெறும் போராட்டத்தின் கடைசி முயற்சியாக, "ஆ...' என்று பயங்கரக் கூச்சலெழுப்பிய சமயம்...

சட்டென்று அவள் வாயைப் பொத்தி, கூச்சல் வெளிப் படாதவாறு அடைத்தது உருவம்.

தாமரை பரக்கப் பரக்க விழித்தாள். கண்ணைக் கசக்கிக் கொண்டாள். 'நான்... நான்... ' அவள் பேச்சுக் குழறியது.

'பத்திரமாய் இருக்கிறீர்கள் அரசி. அந்த நாட்டியக்காரி பாலில் கலந்து கொடுத்த மருந்தின் சக்தி தீர்ந்து விட்டது...'

'நீ...நீ யார்?' புடவையால் முழுதும் போர்த்துக் கொண்டிருந்த உருவத்தைக் கண்டு திகைத்தாள் தாமரை.

'நானா யாரைப் பார்த்துக் கேட்கிற கேள்வி இது அரசி!' சிரித்தது உருவம். 'மேகத்தைப் பார்த்துத் தோகை மயில் கேட்குமா? மலரிடம் வண்டு கேட்குமா? தமிழைப் பார்த்து இனிமை கேட்குமா? ஒவ்வொரு கேள்வியாகக் கேட்டுக் கொண்டே, போர்த்தியிருந்த பட்டுச் சேலையைக் களைந்தது அந்த உருவம்.

'நீங்களா...' திகைப்பும் குழப்பமும் தாமரையை ஆட்டிப் படைத்தன. "என்ன இதெல்லாம்... என்ன நேர்ந்தது?...'

'உஸ்!' அவள் உதட்டில் விரல் பொருத்தி எச்சரித்தான் காஞ்சிபுரத்தான். 'தாங்கள் இப்போது அமர்ந்திருப்பது ம்ஞ்சத்தின் மீதல்ல, அரசி. "

'பின்னே

'எரிமலையின் மீது. '

'என்ன? '

"ஆம், அரசி. முட்டாள்தனமாக நான் கோட்டைவிட்டு விட்டேன். இந்த அரண்மனை முற்றும் எதிரிகளின் கையில் சிக்கியிருக்கிறது.' திரும்பப் புடவையைச் சுற்றிக்கொண்டான் காஞ்சிபுரத்தான். 'விடிவதற்கு இரு நாழிகை இருக்கும்போது தாங்களும் கிருஷ்ணப்பரும் சென்னம்மாவும் கைதாவீர்கள். கிராமத்து ஆட்களின் வேடத்தில், எதிரிகள் எல்லா முக்கியமான இடங்களிலும் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். பொழுது விடியும்போது, சிங்காவரத்தின் சரித்திரம் மாறியிருக்கும். ரத்தமற்ற புரட்சியில் நாட்டின் ஆட்சி புரண்டிருக்கும். அப்படித்தான் அவர்கள் திட்டம். ரகுநாதரும் பெரியபெத்துவும் இந்த அரண்மனையின் சுவர்களுக்குள்ளேயே அடைக்கலம் புகுந்துவிட்டார்கள். புரட்சிக்குத் தலைமை தாங்கி நடத்தப் போவது அவர்கள்தான். '

தாமரையின் மதிவதனத்தில் திகில் பரவிற்று. 'சாவதானமாய் விவரிக்கிறீர்களே?

"சாவதானமாய் மட்டுமல்ல, சிரித்துக் கொண்டும்தான்' என்றான் காஞ்சிபுரத்தான். "கதாநாயகி இல்லாமல் நாடகம் நடத்துகிறார்களே இவர்கள் என்றுதான் சிங்காதனத்தில் அமர்த்தப்பட வேண்டியவளை விட்டுவிட்டுச் சதி செய்கிறார் களே என்று நினைத்துச் சிரிக்கிறேன் அரசி. '

'ஏன்? தெய்வநாயகி..."

'நம் பக்கம், அரசி. அவள் மனம் மாறிய கதையைப் பிற்பாடு சொல்கிறேன். அவள் ஊருக்கு வெளியே ஒரு நீல மாளிகையில் பத்திரமாய்த் தங்கியிருக்கிறாள். அவள் இடத்தைத் தான் நான் எடுத்துக் கொண்டேன். அவள் கட்டிக் கொள்ள வேண்டிய

சேலையை அணிந்து கொண்டு, அவள் ஏறவேண்டிய பல்லக்கில் ஏறிக்கொண்டேன். ரகுநாதருக்கு மட்டுமே தெரிந்த ரகசிய வழிகள் வழியாக என்னை அழைத்து வந்தார். யானை மண்டபத்தருகே பல்லக்கில் மயக்கமாய் அவளைக் கிடத்தியிருப்பதாய் நினைத்துக் கொண்டு ரகுநாதரும் பெரிய பெத்துவும் போயிருக்கிறார்கள். '

'இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்?" கையிலிருந்த மூலிகைத் துண்டைக் காட்டினான் காஞ்சி புரத்தான். 'சென்னைப் பட்டணத்திலிருந்து வரும் வழியில் வைத்தியரொருவர் கொடுத்தார் இந்த ஒப்பற்ற மூலிகையை. கிருஷ்ணப்பரையும், சென்னம்மாவையும் எழுப்பப் போகிறேன் முதலில். பிறகு, அமைச்சர்கள், தளபதிகள் பாசறைக் காப்பாளர் முதலிய முப்பது பேர்களை மயக்கத்திலிருந்து விடுவிக்க வேண்டும்.'

'அவகாசம் இல்லையே?’’

"ஆமாம், என் முதல் போராட்டம் நேரத்துடன்தான். நீங்கள் படுங்கள்.'

தாமரை மஞ்சத்தில் சயனித்தாள். காஞ்சிபுரத்தான் மெல்லக் கதவை நெருங்கினான். துளியும் சத்தப்படுத்தாமல் திறந்தான்.

கப்பென்று ஒரு கரம் அவனைப் பிடித்துக் கொண்டது.

'அகப்பட்டுக் கொண்டாயா? சாயந்திரம் முதற்கொண்டு உன்னை எங்கெல்லாம் தேடுகிறேன் தெரியுமா?"

காஞ்சிபுரத்தான் திகைத்தான்.

## (32)

உதற முயன்றான் காஞ்சிபுரத்தான். உடும்பாக இருந்தது அந்த உலுத்தனின் பிடி. அவன் மூச்சிலே சாராயத்தின் நெடி. கண்ணிலே போதையின் சிவப்பு. உடம்பிலே காமத்தின் வெறி. பிடியிலே மிருகத்தின் ஆவேசம். 'அடி கட்டழகி என்னை விட்டு எங்கே போகிறாய்!' என்றான் அவன்.

சிரிப்பதா? அழுவதா? காஞ்சிபுரத்தானைப் பார்த்துப் புன்னகை செய்தாள் தாமரை. சிரிப்பை அடக்கப் பாடு பட்டாள்.

அந்தக் குடிகாரன் குழறினான். "அடியே கொஞ்சமுன்னால் சுழன்று சுழன்று ஆடினாயே, அப்போதே தீர்மானித்து விட்டேன், உன்னை எனக்குச் சொந்தமாக்கிக் கொள்ள!'

ஓ! மயக்க மருந்து கொடுப்பதற்காக ஆடினாளே ஒரு நாட்டியக்காரி, அவளென்று எண்ணி விட்டானா!

'ஆசை மணாளா! அன்புக் குணாளா! உன்னைவிட்டு நான் எங்கே செல்வேன்? வா இன்பபுரிக்கு,' காஞ்சிபுரத்தான், அவன் கழுத்தில் கை போட்டு, கட்டியணைத்துக் கொண்டு இருளான பகுதியை நோக்கிச் சென்றான்.

திகைத்து நின்ற தாமரையிடம் சில வினாடிகளில் திரும்பினான். 'இன்பபுரிக்கு அனுப்பிவிட்டேன் அவனை' சிரித்தவன், 'வாருங்கள் அரசி!' என்று அவளை இழுத்துக் கொண்டு யானை மண்டபத்தை நோக்கி விரைந்தான்.

முள்காட்டில் நடை. கூரிய கத்திகளின் முனையிலே நாட்டியம். எதிரிகளின் நட்ட நடு மத்தியிலே நழுவினார்கள் இருவரும் பதுங்கிப் பதுங்கி.

அல்லிக் குளத்தினருகே பல்லக்கு இருந்தது தன்னந் தனியே.

'என்ன இது?' என்றாள் தாமரை.

'நல்லவேளை, தெய்வநாயகிக்கும் தங்களுக்கும் உயரத்திலோ வடிவிலோ அதிக வேற்றுமை இல்லை... ' கிசுகிசுத்தான் காஞ்சிபுரத்தான். 'தெய்வநாயகியாகவே நடித்துக் கொண்டிருங்கள், இன்னும் ஒரு பகல் ஓர் இரவுக்கு.'

'அதன் பிறகு?'

"நாளை மறுநாள் கொலு மண்டபத்தில் தர்பார் கூட்டி, ஜனங்களின் முன்னே தெய்வநாயகியை அரசியெனப் பிரகடனம் செய்யப் போகிறார். அதுவரை உங்கள் முகத்தைச் சரியானபடி காட்டாதீர்கள். அதிகமாய்ப் பேசாதீர்கள். கொலு மண்டபத்தில் கலையட்டும் ரகுநாதரின் திட்டம்! பொது மக்களின் முன்னிலையில் இடியட்டும் பெரியபெத்துவின் கோட்டை!'

“தாங்கள்...'

'சேதியறியக் காத்திருக்கிறாள் தெய்வநாயகி. அவளைச் சந்திக்க வேண்டும். பிறகு சிவசிதம்பரம் இட்ட பணியொன்று பாக்கி இருக்கிறது, ' இடுப்பிலிருந்த துணிப் பட்டையைத் தடவிப் பார்த்துக் கொண்டான் காஞ்சிபுரத்தான். "இரண்டு வேலையையும் முடித்துக் கொண்டு, நாளை மறுநாள், கொலு மண்டபத்தில் ஒரு குடிமகனாக வந்து நிற்பேன். கவலைப் படாதீர்கள். '

தாமரையின் மீன் விழிகள் கண்ணிரிலே நீந்தின.

'இருங்கள்...'

காலடியோசை கேட்டது. ரகுநாதரும் பெரியபெத்துவும் திரும்புகிறார்கள்.

'சீக்கிரம், சீக்கிரம்' பல்லக்குக்குள் தாமரையைக் கிடத்தினான் காஞ்சிபுரத்தான். மயக்கமுற்றுக் கிடப்பது போல பாசாங்கு செய்யச் சொல்லிக் கொடுத்தான். போர்வையால் மூடிவிட்டுத் திரும்பினான்.

அரசியின் அறையை ஒட்டி ஒரு குளியலறை. அங்கே கை கால் கட்டப்பட்டுக் கிடந்தான் அந்தக் குடிகாரன். போதை தலைக்கேறியதோடு, காஞ்சிபுரத்தான் கொடுத்திருந்த அடியும் பலம். நினைவற்றுக் கிடந்தவனைக் காலால் புரட்டினான். கட்டுக்களை அவிழ்த்துவிட்டு, அவனது உடைகளைக் களைந்து, தானே மாட்டிக் கொண்டான். அப்போதுதான் தெரிந்தது அதிர்ஷ்டவசமாக - ரகுநாதரின் முத்திரை மோதிரம் அவன் கையிலிருக்கும் உண்மை. ஏளன முறுவல் பூத்தது காஞ்சிபுரத்தானின் இதழில். மிக நம்பகமானவனிடம்தான் கொடுத்திருக் கிறார் ரகுநாதர்!

இதுவும் நல்லதற்குத்தான். முத்திரை மோதிரத்தை உருவி, விரலில் அணிந்து கொண்டான். தனது உடைகளை அவனுக்கு அணிவித்து, காலையும் கையையும் வாயையும் முன்போலவே கட்டினான். கதவு வெளிப்புறம் பலமாகப் பூட்டப்பட்டது.

கஜானாவை நோக்கி விரைந்தது காஞ்சிபுரத்தானின் நடை. வாசலில் தூங்குவதுபோல் கிடந்த ரகுநாதரின் உளவாளி, மோதிரத்தைக் கண்டதும் வணங்கி வழிவிட்டான்.

"எப்படி இருக்கிறாரென்று பார்த்து வருகிறேன். எட்ட நில்.' தடையின்றி அறைக்குள் நுழைந்தான் காஞ்சிபுரத்தான். நித்திரையிலிருந்தார் கஜானா அதிகாரி. உலுக்கி எழுப்பினான் காஞ்சிபுரத்தான்.

'தளபதி தாங்களா!'

"ஸ் கேளுங்கள். ' கிசுகிசுப்பு. பரபரப்பு. அவரால் நம்பவும் முடியவில்லை. மறுக்கவும் துணிவில்லை.

"இந்த உடம்பில் கடைசிச் சொட்டு ரத்தம் உள்ளளவும் அரசிக்கு ஓர் ஆபத்தும் ஏற்படாது! உயிரைக் கொடுத்துப் போராடுவேன்!" என்று உறுதி கூறினார் கஜானாத் தலைவர்.

'தங்களிடம் இப்போது எதிர்பார்ப்பது வீரமல்ல. விவேகம். '

'அதாவது...'

'பாயுமுன் புலி என்ன செய்கிறது? அதைத்தான் உங்களிடம் எதிர்பார்க்கிறேன். தற்காலிகமாகத் தோல்வியுற்றாற் போல் நடியுங்கள். விடிவதற்கு இரண்டு நாழிகை இருக்கும் போது, முக்கிய அதிகாரிகள், அரசி உள்பட அனைவரையும், அரண்மனையை விட்டுக் கடத்தப் போகிறார்கள். நீங்களும் மற்றவர்களும் அதற்கு உட்பட வேண்டும்...' -

குறுக்கிட்டார் அந்தப் பொக்கிஷக் காவலர்: "கோழையின் செயலல்லவா அது?"

'இல்லை. விவேகியின் வேலை என்று அதைத்தான் முன்பே சொன்னேன். ரகுநாதரின் சதி முற்றிலும் நிறைவேறியது மாதிரி நடிப்போம். ஆனால் அரசி மட்டும் அவர் கையில் சிக்கியிருக்கப் போவதில்லை. எந்த விநாடியில் அவர் வெற்றிப் பிரகடனம் செய்யப்போகிறாரோ அதுவே அவர் வீழ்ச்சிக்குச் சாவு மணியாக இருக்கப் போகிறது!"

'தளபதி... மன்னிக்க வேண்டும்... தங்கள் திட்டம் தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவதாக இருக்கிறது...'

'சில சமயங்களில் அதுவே தலைக்கும் பாதுகாப்பாய், மூக்குக்கும் வசதியாக இருப்பதுண்டு, ' என்று விடையிறுத்தான் காஞ்சிபுரத்தான். 'இன்னும் பலபேரை மயக்கத்திலிருந்தும் தூக்கத்திலிருந்தும் விடுவிக்க வேண்டியிருக்கிறது. அரசியிடம் தங்களுக்குள்ள விசுவாசத்தின் பேரால் கேட்டுக் கொள்கிறேன், தயவு செய்து என் திட்டத்துக்குக் கட்டுப்படுங்கள்."

'நல்லது தளபதியவர்களே! அப்படியே, ' என்று ஒப்புக் கொண்டார் கஜானா அதிபதி.

அதன்பிறகு சுமார் இருபது இடங்களுக்கு விஜயம் செய்தான் காஞ்சிபுரத்தான். ஒவ்வோர் இடத்திலும் ரகுநாதரின் முத்திரை மோதிரம் வழிவகுத்துக் கொடுத்தது.

கீழ்த்திசையில் ஆதவன் எழும்பிக் கொண்டிருந்தான். அவனது செக்கச் சிவந்த வதனம் உலகத்தைச் சோதி மயமாக்கிக் கொண்டிருந்த வேளை.

காஞ்சிபுரத்தானின் நடை தளர்ந்திருந்தது. ஆனால் நெஞ்சம் நிமிர்ந்திருந்தது. கண்கள் சோர்ந்திருந்தன. ஆனால் கடமையை முடித்த பெருமிதம் அவன் மூச்சிலே வெளிப்பட்டது.

நீல மாளிகையில் நுழைந்தபோது அவன் குரலில் உற்சாகம் கொப்பளித்தது.

'தெய்வநாயகி, நாளை இதே நேரம் நாடகத்தின் இறுதிக் காட்சி!' என்றான் உவகையுடன்.

தெய்வநாயகிக்கோ பதைப்புத்தான் ஏற்பட்டது, செய்துள்ள ஏற்பாடுகளை அவன் சொல்லச் சொல்ல.

'எனக்குக் கொடுத்துள்ள வாக்கை மறந்துவிட மாட்டாயே?' என்று கேட்டாள் கவலையுடன்.

'உங்கள் தந்தைக்கு எதுவும் நேரக்கூடாது என்பது தானே? விடுங்கள் பயத்தை. '

பெருமூச்சுப் பிறந்தது அந்தப் பட்டணத்து அழகியினிடம். 'ஹும்... அப்பா மட்டும் குறுக்கு வழிகளில் செல்வம் சேர்க்க ஆசைப்படாமலிருந்திருந்தாரானால் -'

'செல்வம் சேர்ப்பதில் நேர்வழி என்றுகூட ஒன்று உண்டா?' சிரித்தான் காஞ்சிபுரத்தான். 'நல்லது... இங்கிருந்து புறப்படுங்கள். நகரத்துக்குள் எனக்கு நம்பிக்கையான ஓர் இல்லத்தில் தங்களைச் சேர்த்துவிட்டு...'

"எங்கே போகப் போகிறீர்கள்?" 'ஊம்! பெண்களின் உள்ளமே அவ்வளவுதான். சிவ சிதம்பரத்தை மறந்து விட்டீர்களே அம்மணி!"

தெய்வநாயகியின் கன்னங்கள் ரோஜாவாகின. 'ஆம்... ஆம்... அவர் சொன்ன வேலையைச் செய்து முடி... நான் சென்னை திரும்பும்போது சுதந்திர வீரராக அவர் என் இல்லத்தில் காத்திருக்கட்டும்...'

நீலமாளிகை காலியாயிற்று, சற்றைக்கெல்லாம். 'பாட்டி பாட்டி!' ஒரு சிறிய வீட்டின் கதவைத் தட்டினான் காஞ்சிபுரத்தான்.

'யார்?' கிழவியொருத்தி கதவைத் திறந்தாள்.

"நான்தான் பாட்டி, வணக்கம்' கைகுவித்தான் காஞ்சிபுரத்தான். 'உங்கள் பிள்ளையிடம் நாதசுரம் பயில ஒரு மாணவி அழைத்து வந்திருக்கிறேன். ஆனால் ஒரே ஒரு நாள்தான் சிட்சை. '

“என்னமோ அப்பா, நீ ரொம்பப் புதிரான பிள்ளை. நீ வாம்மா உள்ளே.'

தெய்வநாயகியை உள்ளே அழைத்துக் கதவைச் சாத்திக் கொண்டாள் அந்தக் கிழவி.

அன்று பிற்பகல். இடம்: டச்சுக் கோட்டையின் கொடிக் கம்பம். அதன் கீழே நின்று உறுமிக் கொண்டிருந்தவர் ஒரு டச்சுத் துரை. எதிரே தலையைக் குனிந்து கொண்டும் கையைப் பிசைந்து கொண்டும் இருந்தவர்கள், சுமார் முப்பது சிப்பாய்கள்.

டச்சுத் துரை, கொடிக்கம்பத்தின் உச்சியை மீண்டும் பார்த்தார். அடங்கியிருந்த கோபம் மீண்டும் குமுறி வந்தது. 'கேவலம் எழுபதடி

உயரம் இருக்காது. இதன் மீது ஏறவா தெரியவில்லை? சீ சீ எங்கள் நாட்டின் மானமே கப்பலேறுகிறது அங்கே!' கொடிக் கம்பத்தைச் சுட்டிக் காட்டினார் அவர். 'கொடியைப் பாருங்கள் கன்னா பின்னாவென்று சிக்கிக் கொண்டிருக்கிறது எத்தனை அவமானம் கம்பத்தில் ஏறி அதைச் சரியாய்ப் பிரித்து விடக்கூடவா தைரியமில்லை உங்களுக்கு?" 'நேற்றுப் பெய்த மழையினால் கம்பம் நனைந்து... வழுக்கலாக...' ஆளுக்கொரு சாக்குச் சொன்னார்கள் சிப்பாய்கள்.

'நான் உதவலாமா? ஒரு புதுக்குரல் கேட்டது. பட்டிக்காட்டான் போலிருந்த வாலிபனை நோக்கிச் சீறினார் துரை. "யார் நீ? எந்த ஊர்?'

"பல கொடிகளைப் பார்த்த ஊர் என்னுடையது. சிறு பிராயம் முதல் கொடியின் கீழேயே குடி இருந்திருக்கிறேன். சறுக்கு மரம் எனது ஆசைவிளையாட்டு. உத்தரவு கொடுத்தால்..."

'செய். ' மறுவினாடி அவன் கிடுகிடுவென்று ஏறினான். வானரம் கூட அத்தனை வேகம் காட்டியிராது. கண்ணிமைக்கும் நேரம் ஒரு கையால் கம்பத்தைப் பற்றிக்கொண்டு மறு கையால் கொடியின் சிக்கலைப் பிரித்துவிட்டான். டச்சு நாட்டுக் கொடி பட்டொளி வீசிப் படபடத்தது காற்றில்.

இறங்கி வந்தவனிடம், 'பலே! உன் பெயர் என்ன தம்பி?' என்றார் துரை.

'காஞ்சிபுரத்தான் என்று அழைப்பார்கள். '

'உள்ளே வா', முன்னே நடந்தார் துரை.

'அதற்காகத்தானே வந்தேன்?" பின் தொடர்ந்தான் காஞ்சிபுரத்தான். போகும்போதே தன் வருகையின் காரணத்தையும் விளக்கினான்.

டச்சுக் கிழக்கிந்தியக் கும்பினியின் பெரிய அதிகாரியிடம் அவன் அழைத்துச் செல்லப்பட்டான் சில வினாடிகளில்.

கண்களால் அவனை அளவெடுத்தார் பெரிய துரை. உதவியாளர் சொல்வதையும் காதில் வாங்கிக் கொண்டார்.

வியப்பினால் விரிந்தன அவரது விழிகள். 'சிவசிதம்பரத்திடமிருந்தா வருகிறாய்?"

"ஆமாம், ' காஞ்சிபுரத்தான் இடுப்பிலிருந்து பிரித்து எடுத்தான் அந்த...

"என்ன' அதிர்ச்சியில் அவன் நா அடைத்துக் கொண்டது. ‘‘என்ன இது வெறும் கந்தல் துணி சிவசிதம்பரம் கொடுத்த செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் வரைபடம் எங்கே?'

பெரிய துரை சிரித்தார். 'ஏனப்பா? அதிர்ச்சியடைந்து விட்டாயா? இங்கிலீஷ்காரனின் மூளைத் திறமை உங்களுக் கெல்லாம் விளங்காதுதான்...'

'உங்களுக்கு மட்டும் விளங்குமா? காஞ்சிபுரத்தான் ரோஷம் காட்டினான்.

"அதிலென்ன சந்தேகம்? நாங்கள் அவன் இனமல்லவா?" டச்சுத்துரை ஆசனத்திலிருந்து எழுந்து கொண்டார். காஞ்சிபுரத்தானின் தோளைத் தட்டினார்: 'சிவசிதம்பரத்தின் முடிவைப் பற்றி உனக்குத் தெரியாது. இல்லையா?"

'முடிவா!' காஞ்சிபுரத்தானின் நாக்கு வறண்டது.

"ஆம். பெரியபெத்துவின் கையினாலேயே அவரைச் சாக அடித்தானே பிரிட்டிஷ்காரன், அந்தக் கதை உனக்குத் தெரியாது?'துரை விளக்கலானார்.

கிட்டத்தட்ட அதே நேரம். சிங்காவரத்தில்

டமடம டமடம். டமடம டம். தண்டோராக்காரனின் தம்பட்டம் ஆங்காங்கே மக்களை நிறுத்தியது. பண்டம் வாங்குவோரும் பாடசாலைக்குச் செல்வோரும் நின்றனர். ஆடல் மகளிரின் மாலை அலங்காரம் நின்றது. சாளரத்தின் வழியே அவர்களது கலைந்த தலைகள் எட்டிப் பார்த்தன. சிறுவர்களின் கூச்சல், தமுக்கின் இரைச்சலையும் அமுக்கியது.

டமடம டம். டமடம டம்.

ஓலையைப் படித்தான் தண்டோராக்காரன். எத்தனை பேர் தன்னை உற்று நோக்குகிறார்கள் அவன் மார்பு விரிந்தது மட்டற்ற பெருமையால். சரிகை முண்டாசு டாலடித்தது அவன் தலையை உயர்த்தியபோது.

'அரண்மனையிலிருந்து முக்கிய சேதி. அனைவரும் கேளுங்கள்!' ஆரம்ப வாக்கியம், எட்ட நின்றோரைக் கிட்டத்தில் கூட்டியது. அவன் தொடர்ந்தான்: 'ஆட்சி நிர்வாகத்தில் சில முக்கிய மாற்றங்கள் நேர்ந்திருக்கின்றன. நாளைக் காலை கொலு மண்டபத்தில் தர்பார் கூடும். பொது மக்கள் திரளாக வருமாறு மேன்மை தங்கிய அரசியார் கட்டளையிடுகிறார்...'

டமடம டமர டம். அவன் போய்க்கொண்டே இருந்தான்.

சில வினாடிகளில் ஜனங்களின் மௌனம் கலைந்தது. காலை நேரத்துப் புள்ளினங்கள் போல் கலகலத்தது பேச்சு.

'ஆட்சியில் மாற்றமா... தாமரை விலகிவிட்டாரா என்ன? '

'அரசியார் கட்டளையிடுவதாகச் சொன்னானே'

"வேறு அரசியாக இருக்குமோ? ஏன், அந்தப் பட்டணத்துப் பெண்தான் தகுந்த ருசுவோடு திரும்பி விட்டாளோ...'

'இருக்கலாம், இருக்கலாம்...' "நாளைக்குக் கொலு மண்டபத்தில் தெரிந்துவிடுகிறது." பலவாறு பேசியபடி மக்கள் கூட்டம் பிரிந்தது. தத்தம் வேலைக்குத் திரும்பியது.

தேரடியில் நின்றிருந்த இரண்டு வர்த்தகர்கள் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள். ஒருவருடைய சுண்டு விரல் மீசை நுனியைத் தட்டிக் கொடுத்தது.

'கவனித்தீர்களா பெரியபெத்து!" என்றார் ரகுநாதர். 'மக்கள் உங்கள் மகளை ஏற்பார்களோ மாட்டார்களோ என்று பயந்தீர்களே, புரிந்துவிட்டதா?''

"ஆமாம் ஆமாம்', பெரியபெத்துவின் முகத்தில் எவ்வளவு மலர்ச்சி!

வானவீதியில் இடியொன்று ஓடியது கடமுடவென்று. கூழாங்கற்கள் கொட்டப்பட்டாற் போன்று சடசடவென மழைத்துளிகள் விழுந்தன.

'அடடா! வாரும் வாரும்! அதோ அங்கே ஒதுங்கலாம்,' என்றார் ரகுநாதர்.

அருகில் தெரிந்த வீட்டின் திண்ணையில் ஒண்டினர் இருவரும். 'சீக்கிரம் அரண்மனைக்குத் திரும்பிவிட வேண்டும்,' என்ற பெரியபெத்து, திடீரென ரகுநாதரின் முகம் மாறுவதைக் கவனித்தார்.

'பெரியபெத்து உம்முடைய மகள் இப்போது எங்கே இருக்கிறாள்?' ரகுநாதரின் குரல் கரகரத்தது.

'ஏன்... அரண்மனையில்தான்...'

'நாம் இருப்பது அரண்மனையானால் நீர் சொல்வது உண்மைதான். '

'என்ன... ஏனிப்படி வித்தியாசமாகப் பேசுகிறீர்கள் ரகுநாதரே...?'

"சாளரத்தின் வழியே அதோ பாருங்கள்' சுட்டிக் காட்டினார் ரகுநாதர்.

பெரியபெத்துவின் மூச்சு நின்றது. தலை சுழன்றது. கண் இருண்டது. "தெய்வ... தெய்வநாயகி..."

"ஆம். உமது மகளேதான். தந்தையும் மகளும் சேர்ந்து, இந்த ரகுநாதரை மட்டம் தட்ட எத்தனை நாளாகத் திட்டம் போட்டிருந்தீர்கள்?"

"ரகுநாதரே!' நண்பரின் கையைப் பிடித்துக் கொண்டார் பெரியபெத்து. 'என்னையும் சேர்த்தே என் மகள் ஏமாற்றியிருக்கிறாள். தயவுசெய்து நம்புங்கள்...'

பல்லைக் கடித்தார் ரகுநாதர். 'மீண்டும் மீண்டும் என் திட்டத்தை யாராவது நாசம் செய்து கொண்டேயிருக்கிறார்கள். ஆனால் இந்தத் தடவைதான் கடைசி. நான் விடப்போவதில்லை பெரியபெத்து. ஒருநாளும் விடப்போவதில்லை!"

'நானும்தான்,' என்றார் பெரியபெத்து. "நீங்கள் முதலில் அரண்மனைக்குத் திரும்புங்கள். தெய்வநாயகி என்று நினைத்து அங்கே நாம் விட்டு வைத்திருப்பது தாமரையை. அவளைச் சமாளியுங்கள் தாங்கள். இவளை இங்கிருந்து கொண்டு வருவது என் பொறுப்பு.'

ரகுநாதர் கூர்ந்து ஆராய்ந்தார் தோழரை. "தங்கள் பாதை சென்னைப் பட்டணத்தை நோக்கித் திரும்பி விடாதே?"

"தூ! அவ்வளவு கோழையென்றா நினைத்தீர்கள் என்னை?" வெறுப்புடன் நகைத்தார் பெரியபெத்து. 'இன்று நள்ளிரவுக்கு முன் தெய்வநாயகியை எப்பாடுபட்டேனும் அழைத்து வருகிறேனா இல்லையா, பாருங்கள்!'

அடுத்த நாள் காலை.

ஜனசமுத்திரம் என்று வர்ணிக்கிறார்களே, எப்படி இருக்கும்? சிங்காவரத்து அரண்மனையின் கொலு மண்டபத்தைப் பார்த்தால் புரியும். அலை அலையாக மக்கள் மோதினர்.

மேடையிலே மூன்று ஆசனங்கள். பெரியபெத்துவையும் ரகுநாதரையும் அங்கே கண்ணுற்ற மக்களுக்கு, புரியாத புதிர். தெளிவாகாத திகைப்பு.

மூன்றாவது ஆசனத்தில், அடக்கத்துடன், போர்த்தப்பட்ட சேலையுடன் தலைகுனிந்து அமர்ந்திருக்கும் பெண் யார்? அரசி தாமரையா?

பலவாறான உரையாடல்கள்.

"அந்தப் பட்டணத்துப் பேர்வழியைத் துரத்தியவரே ரகுநாதர்தானே? இன்று அவருடனேயே சேர்ந்து அமர்ந்திருக்கிறாரே?"

"பாதுஷாவின் தடைகளை முறியடித்த நமது தளபதி ரகுநாதரையும் விரட்டி விட்டதாகப் பேசிக் கொண்டார்களே!'

'ஏனப்பா நெருக்குகிறாய்? முன்னால் போக இடமிருந்தால் நாங்களே போயிருக்க மாட்டோமா?"

"நான் வெளியூர், ஐயா. என்னென்னவோ வேடிக்கையெல்லாம் இன்று நிகழப்போவதாகக் காதில் விழுந்தது. வேடிக்கை பார்க்கத்தான் ஓடிவந்தேன். கொஞ்சம் வழி விடுங்கள், ஐயா" வடஇந்தியப் பக்கிரி வேடத்திலிருந்த காஞ்சிபுரத்தான் தனக்குள் சிரித்துக்கொண்டே சொன்னான்.

'உஸ்! உஸ். ரகுநாதர் எழுந்து கொள்கிறார். இரையாதே'

டிமக்களை நோக்கிக் கையமர்த்தினார் ரகுநாதர். 'அன்புக்குரிய பிரஜைகளே! சில மாதங்கள் முன்பு எதை மறுத்தேனோ அதையே நிலைநாட்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது இன்று. இதோ

நமது மதிப்புக்குரிய தோழரும், சென்னைப் பட்டணத்தில் பெரும் வர்த்தகரும், கும்பினியாரின் கூட்டாளியுமான பெரியபெத்து அவர்கள், அன்று தமது வளர்ப்பு மகள்தான் இந்த ராஜ்யத்தின் பட்டத்துக்குரியவள் என்று கூறியபோது நாம் நம்பவில்லை. இருந்தாலும், இதுவரை நம்மை ஆண்டு வந்து கொண்டிருந்த தாமரை என்பவளின்...'

குடி படையினரிடையே சலசலப்பு ஏற்பட்டது - இப்படி அவர் குறிப்பிட்டதைக் கேட்டதும்.

ரகுநாதர் அயராது தொடர்ந்தார்: "தாமரை என்பவளின் நடவடிக்கையில் எனக்குச் சிறிது சந்தேகம் ஏற்பட்டது. ஆகவே நானே தனிப்பட்ட முறையில் சென்னைப் பட்டணத்துக்கும், திருவரங்கத்துக்கும் சென்றேன். தீர விசாரித்தேன். அன்புக்குரிய மக்களே, என் ஆராய்ச்சியின் பயனாக, தாமரை தான் ஏமாற்றுக்காரி என்று தெரிய வந்தது. அவளையும் - அவளுக்கு ஆதரவாக இருந்த என் சொந்த மகளையும் மருமகனையும் கூட சிறைப்படுத்தி விட்டேன். இதோ அருகில் உள்ள தெய்வநாயகி அவர்கள், அடுத்த நல்ல முகூர்த்தத்தில் முடிசூடுவார்கள். மந்திரிப் பிரதானிகளில் யாரும் என் ஏற்பாட்டை ஆட்சேபிக்கவில்லை. நீங்களும் மனமார வரவேற்பீர்கள் என்று நம்புகிறேன்...'

'இல்லை ஆட்சேபிக்கிறோம்!' கூட்டத்தின் நடுவேயிருந்து குரலொன்று பிரிட்டுக் கொண்டு கிளம்பியது.

சிம்மாதனம் போடப்பட்டிருந்த மேடையை அவன் நெருங்கினான். 'பெரியபெத்து அவர்களே! தங்கள் தீர்மானத்துக்கு மிக்க மகிழ்ச்சி. என்றாலும், தங்கள் மகளையும் ஒரு வார்த்தை கேட்டுவிட வேண்டாமா?"

'ஓ' காஞ்சிபுரத்தானா?"

'தங்களைப் பொறுத்தவரையில் நஞ்சுபுரத்தான் என்றான் காஞ்சிபுரத்தான். 'அடக்கவொடுக்கமாய்த் திரும்பி அமர்ந்திருக்கிறாரே, தங்கள் குமாரி அவரையும் ஒரு வார்த்தை கேட்டுவிடலாமல்லவா, இந்த ராஜ்யபாரத்தை ஏற்பதற்கு இஷ்டம்தானா என்று!"

"ஓ! தாராளமாய்!’’

'தயவு செய்து முன்னால் வரச்சொல்லுங்கள். முகத் திரையை நீக்கி, வாய் முத்து உதிர்க்கட்டும்!"

'அப்படியே, தம்பி. இப்படி வா அம்மா' ரகுநாதர் அவளை அருகில் அழைத்து, முகத்திரையையும் விலக்கினார். 'தெய்வநாயகி!' கண் விழி தெறித்தது காஞ்சிபுரத்தானுக்கு. இரண்டாவது முறையுமா அவனுக்குத் தோல்வி!

## (33)

பாக்கு வெட்டும் நேரம்தான். துவண்ட உள்ளம் நிமிர்ந்தது. நம்பிக்கை சோர்வை விரட்ட, சோர்வு அச்சத்தைத் துரத்த, அச்சம் ஐயத்தைப் போக்க, ஐயம் அதிர்ச்சியை நீக்க, சிரித்துக் கொண்டான் காஞ்சிபுரத்தான். தெய்வநாயகியைப் பிடித்து வைத்த திமிரில் பேசுகிறாரா ரகுநாதர்! அட ரகுநாதரே! உம்மைப்போல் அப்பாவிக் கிழவர் ஈரேழு பதினாலு உலகத்திலும் இல்லை. காதைத் துடைத்துக் கொண்டு தெய்வநாயகி பேசப் போவதைக் கேளும்! கண்ணையும் வேண்டுமானால் துடைத்துக் கொள்ளும். தெய்வநாயகி உமது காலின் கீழே குழிபறித்துத் தள்ளப் போகிறாளே! அப்போது அதிக அடிபடாமலாவது தப்பலாம்!

தெய்வநாயகியின் செப்பு உதடுகள் சற்றே திறந்தன. அவள் பேசினாள்:

'என் அன்பார்ந்த குடிமக்களே!' சுரீர் காஞ்சிபுரத்தானின் காதில் சாட்டையடியாக விழுந்தது அந்த முதல் வாக்கியம்!

'உங்கள் அனைவருக்கும் பணியாற்றும் பெரும் பேறு..."

சுரீர் சுரீர் என்ன சொல்கிறாள் தெய்வநாயகி!

''...எனக்குக் கிடைத்தது குறித்து ஆண்டவனுக்கு நன்றி செலுத்துகிறேன். உங்கள் அரசியாக, அல்ல, உங்கள் பிரதிநிதியாக இந்த அரியணையில் அமருகிறேன். வணக்கம்."

மேலும் மேலும் மேலும் சாட்டையடிகள். காஞ்சிபுரத் தானுக்கு வரண்டது நா. துடித்தது அரும்பு மீசை. சொல், சொல்! என்றது ரோஷமடைந்த ஆண்மை. நில்! நில்!! என்றது விவேகமுள்ள அறிவு.

மக்கள் கூட்டத்தில் ஒரே கசமுச. அறிவிப்பைக் கேட்க வந்தவர்களுக்கு எத்தனை அதிர்ச்சிகள்!

'முன்பே ஒருமுறை விரட்டப்பட்டவள் அல்லவா இவள்!'

"ஆமாம், ஆமாம். சென்னைப் பட்டணத்துச் சிங்காரி.'

'யார் துணையிலே வந்தாள்?"

'அந்த ரகுநாதரின் சூழ்ச்சிதான்!'

'உஸ்! இருங்கள் ரகுநாதர் ஏதோ பேசப்போகிறார்!"

பீதாம்பர சால்வையை வீசி மார்பில் போர்த்துச் கொண் டார் ரகுநாதர். தகத்தகாயமான சரிகை, மண்டபமெங்கும் மின்னலை இறைத்தது. ஆகா கண்ணில் என்ன கருணை! உதட்டில் என்ன தயாளம்! 'மங்காப் புகழும் மாளாப் பெருந்தன்மையும் கொண்ட சிங்காவரம் பெருமக்களே!' தொடங்கினார் அவர். மக்களின் மனத்திலே மகிழ்ச்சியும் மணிமண்டபத்தில் நிசப்தமும் குடிகொண்டன. 'நம்து முன்னாள் தளபதியவர்கள் குழப்பம் விளைவிக்க முற்படுகிறார். அவரது வாயிலிருந்து எதிர்ப்புக்கள்

புறப்படுமுன் உடம்பிலிருந்து குருதி கிளம்பியிருக்கும் - நீங்கள் மனம் வைத்திருந்தால். தொலையட்டும் வெளியூரான் என்று விட்டு வைத்திருக்கிறீர்கள். அதற்காக அவர் சொல்லாவிட்டாலும் நான் சொல்கிறேன். நன்றி. '

வாய்விட்டு நகைத்தான் காஞ்சிபுரத்தான். 'ஹும்! இவர்கள் அத்தனைபேரும் என் தோழர்கள்! இடம் மாறி வந்தவர்களையும் இனம் பிரித்துப் பேசுபவர்களையும் இவர்கள் கவனித்துக் கொள்வார்கள்... இல்லையா நண்பர்களே!" பெருமிதத்தால் தோள்கள் புடைக்க, திரும்பி நோக்கினான் சூழ்ந்திருந்தவர்களை.

"ஆம்! ஆம்!' என்று ஏன் இவர்கள் உற்சாகம் பெருக்கெடுக்கக் கூவவில்லை? ஏன் இரண்டொருவர் மட்டுமே தலையசைக்கிறார்கள்- அதுவும் அரை மனதுடன்?

எக்காளச் சிரிப்பு ரகுநாதரிடமிருந்து. 'காஞ்சிபுரத்தான் என்ற பெயரில் திரிகின்ற பட்டணத்து அடிமையே! சிங்காவரத்து மக்கள், புதிய அரசி கிடைத்த மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருக்கிறார்கள். நாடோடிகளை அடித்துத் துரத்த அவர்களுக்கு நேரமே கிடையாது அரண்மனையின் வடக்கு வாசலில் என்ன நடக்கிறது தெரியுமா?"

'என்ன நடக்கிறது?"

'போய்ப் பார் நீயே வேண்டாம் - வேண்டாம்! நீ இரு. மக்களில் ஒருவர் - வைத்தியரே, நீங்கள் போய்ப் பார்த்து இந்தப் பட்டணத்தானுக்குச் சொல்லுங்கள். மற்றவர்களும் தெரிந்து கொள்ளட்டும்.'

கூட்டத்தின் நடுவிலிருந்த வயோதிக வைத்தியர் பரபரப்புடன் வெளியேறினார். கூடவே வேறு சிலரும் ஓடினார்கள். சில வினாடி சலசலப்பு. அவர்கள் திரும்பி வருமுன், அவர்களது குரல்கள் ஒலித்தன.

'வாருங்கள், வாருங்கள் வடக்கு வாசலில் ஆண்களுக்கு அரைப் பணமும் வேட்டியும், பெண்களுக்குப் புடவையும் குங்குமச் சிமிழும் தருகிறார்கள். புதிய ராணி தெய்வநாயகி வாழ்க!'

வாழ்க! வாழ்க! வாழ்க!

ஜனசமுத்திரம் அலைமோதிற்று. கரையிலே ஒதுக்கப்படும் கட்டையாக, காஞ்சிபுரத்தானை ஓரத்துக்கு நெட்டித் தள்ளியது நெரிசல். எனக்கு எனக்கு இப்படி வா! பிரிந்து போய்விடாதே! கையைப் பிடித்துக்கொள் ஐயா, ஐயா! நெருக்காதீர்கள் ராணி நன்றாயிருக்கணும்! அவர்கள் குலம் தழைக்கணும்!

காவலர்கள் கட்டுப்படுத்த முயன்றார்கள். "மெல்லப் போங்கள் ஏராளமாய் இருக்கிறது எல்லாம்!"

அவமானத்தால் சிவந்தது காஞ்சிபுரத்தானின் முகம். 'நில்லுங்கள்!' தடுக்க முயன்றான் மக்கள் கூட்டத்தை. கொதித்தது ரத்தம் எரிமலைக் குழம்பாக.

பாய்ந்து வரும நீருக்குக் கீரைத் தண்டா அணை? அவனை விலக்கிக் கொண்டு, ஒதுக்கிக்கொண்டு, தள்ளிக் கொண்டு, தாண்டிக்கொண்டு, நழுவிக் கொண்டு, சுற்றிக் கொண்டு...

போய்க்கொண்டே யிருந்தது மக்கள் கூட்டம். 'அண்ணே! நீங்கள் போகாதீர்கள்! இது வெறும் லஞ்சம்! அற்ப சுகத்துக்காக அக்கிரமத்துக்கு அடி பணியலாமா! நில்லுங்கள் அண்ணே தம்பி, நீயாவது நில்லேன்! பாட்டி! அம்மா இருங்கள் அக்கா! நான் சொல்வதைக் கேளுங்கள்."

சில வினாடிகளுக்குத்தான். மக்கள் மீது மோதிக் கொண்டிருந்த அவன் சொற்கள் வெற்று மண்டபத்தைச் சுற்றி வந்தன.

நிமிர்ந்து நோக்கினான் அரியணையை. சீற்றத்தை உமிழ்ந்தது அவன் பார்வை.

தெய்வநாயகியின் கண்கள் பரிதாபமாயிருந்தன. நான் என்ன செய்வேன்? என்று கெஞ்சிக் கொண்டிருந்தன அந்தச் சித்திர நயனங்கள்.

திரும்பினான். மண்டபத்தில் கடைசியாக ஒருவர் போய்க் கொண்டிருந்தார். "பெரியவரே!' அவரை அணுகினான். அவன் முகம் மலர்ந்தது. 'என்னைத் தெரிகிறதா அன்றொரு நாள் உங்கள் வீட்டை மீட்டுக் கொடுத்தேனே!"

"ஆமாம் தம்பி... உன்னை மறக்குமா?"

'இந்த மானங்கெட்ட தானத்துக்கு நீங்களாவது போகா திருங்கள். இந்தச் சிங்காவரம் நாட்டில் சுத்த ரத்தம் ஒடுகிறவன் ஒருவனேனும் உண்டென்று காட்டுங்கள், பெரியவரே!"

'கட்டாயம், தம்பி. சீ, சீ இந்தப் பிச்சையை நானா வாங்குவேன்! ஒருநாளும் மாட்டேன் தம்பி!'

ஆனந்தப் பெருமூச்சடன் வெளியே வந்த காஞ்சிபுரத் தான், 'பாட்டி!' என்று கூவினான்.

அந்த நாயனக்காரப் பாட்டிதான். 'பாட்டி! உங்களிடம் ஒப்படைத்த பெண்ணை இப்படித் தான் நழுவ விடுவதா? உங்களை நம்பிச் சென்றதற்கு இது தான் பலனா, பாட்டி?'

கிழவி கண்ணைத் துடைத்துக் கொண்டாள். மிஞ்சிய கண்ணிர், சுருங்கிய கன்னத்தின் இடுக்குகளில் மினுமினுத்தது. 'தம்பி, ஆள் படைகளுடன் வந்து அவர்கள் மிரட்டியதும் என் பிள்ளையும் மற்றவர்களும் பயந்துவிட்டார்கள், தம்பி அரண்மனையை அண்டிப் பிழைப்பு நடத்துகிறவர்கள் நாங்கள். அவர்களுடைய பொல்லாப்பு உதவுமா? அந்தப் பெரிய பெத்துவோ, சின்னபெத்துவோ இருக்கிறாரே, அவர் என்னென்னவோ சொன்னார். தெய்வநாயகி ஒவென்று அழுது கொண்டு அவர் பின்னால் போய்விட்டது. ஏன் தம்பி, நீதானாகட்டும், இந்தத் தேசத்து ராணியைப் போய்...'

"சட்! நீங்களும் நம்புகிறீர்களா இந்தப் புரட்டையெல்லாம்?' என்று வெகுண்டவன், அரண்மனை வடக்கு வாசலைக் கண்டான்.

காஞ்சிபுரத்தானுக்குத் தொண்டையில் எதுவோ அடைத்துக் கொண்டது.

நீண்ட பாம்பென நின்றிருக்கும் வரிசையைக் கண்டா! அல்ல. அதன் நுனியில், சற்று முன் வாக்களித்தாரே போக மாட்டேனென்று, அந்தக் கிழவரும் நின்றிருந்ததால்தான்.

வெறுப்பின் மத்தியில் சிந்தையும் சுழன்றது. தாமரை என்ன ஆகியிருப்பாள் இன்னேரம்? எங்கே இருப்பாள்? கொன்றிருப்பார்களோ இந்தக் குடிகேடிகள்?

கொலு மண்டபம் காலியாகி விட்டது. அரியணையைச் சுற்றி இரண்டு சேவகர்கள் மட்டுமே நின்றிருந்தனர், வாளும் கையுமாக.

ஆடாமல் அசையாமல் பதுமை போலிருந்தார் பெரிய பெத்து. மீசையைச் சுண்டுவதுகூட நின்றிருந்தது. அவரைப் பரிதாபமாகப் பார்த்தபடி இருந்தாள் தெய்வநாயகி.

'மிகப் பிரமாதம் மிகப் பிரமாதம்!" தன்னைத் தானே பாராட்டிக் கொண்டு ரகுநாதர் திரும்பினார். 'முதல் சோதனையில் ராணி தேறிவிட்டார். இனியும் இதுபோலவே...'

'நிறுத்துங்கள், சீறினாள் தெய்வநாயகி. 'உங்கள் சொற்படி நடந்தாகி விட்டதல்லவா? இன்னும் இது ஏன்?"

பெரியபெத்துவின் முதுகைத் தொட்டுக் கொண்டிருந்த வாள் நுனியைச் சுட்டிக் காட்டியது அவள் கை. 'எடுக்கச் சொல்லுங்கள் அந்த வாளை!'

'நீ போ, ' கட்டளை பிறந்தது ரகுநாதரிடமிருந்து. வாளை மடக்கி உறையில் போட்டுக் கொண்டான், அந்தச் சேவகன். விலகி நின்றான்.

பெரியபெத்துவின் தேகத்தில் அசைவு கண்டது. விறைத்திருந்த கைகால்கள், ரத்த ஒட்டம் ஏற்பட்ட மாதிரி தளர்ந்தன. அசட்டுத்தனமாகச் சிரித்தார்.

'அரசி! நகர்ந்திருப்பது என் வாள்தான். கண்காணிப்பல்ல. நினைவிருக்கட்டும், ' குறுக்கும் நெடுக்கும் உலவியபடி பேசினார் ரகுநாதர். "மெய் வருத்தம் பாராமல், கண் துஞ்சாமல், தீட்டினேன் திட்டம் தங்களை இங்கே கொண்டு வர. நொடிப் பொழுதில் தகர்த்துவிட்டு மறைகிறீர்கள் நீங்கள். தந்தையைக் கேட்டால் செல்லமாய் வளர்த்த சீமாட்டி அவளைக் கட்டாயப் படுத்தாதீர்கள்!' என்கிறார். அத்தனை எளிதில் விட்டுவிடும் ஏமாளியல்ல இந்த ரகுநாதர் தெரிகிறதா? மகள் துரோகமிழைத்தால், தந்தை கூலி அனுபவிப்பார் ஜாக்கிரதை தங்கள் அறைக்குச் சென்று ஒய்வெடுத்துக் கொள்ளலாம் இனி! வருகிறேன். '

தெய்வநாயகியைப் பின்தொடர்ந்தார் பெரியபெத்து. 'ஹூம்' ஓர் உறுமலுடன் அவரைத் தடுத்து நிறுத்தினார் ரகுநாதர். 'தங்களுக்குத் தனி அறை இருக்கிறது, நண்பரே! சதிகாரர்கள் சகாப்தம் முடிந்துவிட்டது இந்த அரண்மனையில்! தெரியாதோ ஒரு வேளை?"

தீனமாகத் தந்தையை நோக்கினாள் தெய்வநாயகி. அவள் விழிமுனைகளில் நீர் கோத்து நின்றது. "நீங்கள் போங்கள், அப்பா. எனக்குத் தீங்கு வராமல் பார்த்துக் கொள்வேன். போங்கள்,' என்று கூறிவிட்டு அந்தப்புரத்துக்குத் திரும்பினாள். - காலடியோசை மறைகிற வரையில் நின்றார்கள் பெரிய பெத்துவும், ரகுநாதரும். மறுவினாடி'ரகுநாதரே! உங்கள் அறிவே அறிவு' என்று பாய்ந்து கட்டிக்கொண்டார் பெரியபெத்து.

'உஸ்! தற்செயலாய் உங்கள் மகள் திரும்பிவிடப் போகிறாள் நடித்ததெல்லாம் வீணாகிவிடும்!" எச்சரித்தார் தோழர்.

"ரகுநாதரே! இனி நாம் இழுத்த இழுப்புக்கு வருவாள் அல்லவா தெய்வநாயகி?"

'பின்னே! தந்தையிடம் பாசமில்லாத மகளுண்டா? தந்தைக்காகத் தியாகம் செய்யத் தயங்குகிற பெண்ணுண்டா?"

வெற்றி எக்காளத்தில், உருண்டன மதுக்கிண்ணங்கள்.

யாரோ தோளில் தட்டினார்கள்.

தானம் வாங்கும் கூட்டத்தைக் கண்டு குமுறிக் கொண் டிருந்த காஞ்சிபுரத்தான் திரும்பினான்.

யார் இவன், நெட்டை உடம்பும் நீள்மீசையுமாக?

'என்ன?' என்று வினவினான். பதில் வாய்மொழியாய்க் கிடைக்கவில்லை.

உள்ளங்கையில் சுட்டு விரலால் எழுதிக் காட்டினான் நெட்டையன். அடப்பாவமே, ஊமையா?

விரலின் ஓட்டத்தைக் கவனித்தான் காஞ்சிபுரத்தான். 'என்னுடன் வாருங்கள்."

"எங்கே?' என்று கேட்டான். வடக்கே தெரிந்த மலையுச்சியை அவன் காட்டினான்.

'யார் இருக்கிறார்கள் அங்கே?' நெட்டையனின் கண்கள் சுழன்றன. அச்சத்துடன் சுற்று முற்றும் பார்த்தன. பின்னர், தலைமீது கை குவித்துச் சாடை காட்டினான்.

காஞ்சிபுரத்தானுக்கு ஆச்சரியம்: 'அரசி?'

பல்லை இளித்துத் தலையை ஆட்டினான் மற்றவன். காஞ்சிபுரத்தானின் மேல் வேட்டியைப் பிடித்து இழுத்தான் ஆர்வத்துடன்.

'அங்கேயா இருக்கிறார்கள் அரசி?' தனக்கே கேட்காத குரலில் கிசுகிசுத்தான் காஞ்சிபுரத்தான்.

நெட்டையன் நடந்தான் முன்னே. உள்கோட்டை, வெளிக் கோட்டைகளைக் கடந்தார்கள். சிங்காவரம் குன்றின் மீது பாதை வளர்ந்தது. முள்ளும் கல்லும் காலை முத்தமிட்டன.

தனியே துருத்தி நின்ற பாறைமீது ஏறினான் அவன். அருகில் அழைத்தான் காஞ்சிபுரத்தானை. கீழே பார்க்கும்படி சுட்டிக் காட்டினான்.

''என்ன அங்கே?' குனிந்து நோக்கினான் காஞ்சிபுரத்தான். தலைசுற்ற வைக்கும் கிடுகிடு பாதாளம். மற்றபடி....

எது அவனை எச்சரித்தது? எந்த உள்ளுணர்வு கூவிற்று ஜாக்கிரதை என்று?

அவனுக்குத் தெரியாது. ஆனால் மின்னலென ஒதுங்கிக் கொண்டான் காஞ்சிபுரத்தான்.

அடுத்த கணம் "ஐயோ!' இரண்டு கூக்குரல்கள் எழுந்தன ஒரே சமயம். ஒன்று, மோதித் தள்ள வந்த வேகத்தில், தலைக்குப்புறப் பாதாளத்தில் விழுந்து கொண்டிருந்த நெட்டையனின் மரணக் கூச்சல்.

மற்றது, தெய்வாதீனமாகத் தப்பிய காஞ்சிபுரத்தானின் அதிர்ச்சிக் கூச்சல்.

மூன்றாவது குரலொன்றும் வந்தது, பக்கத்துப் புதரி லிருந்து: "ஆண்டவனே! துரோகி உயிர் தப்ப, விசுவாசி இறந்து விட்டானே! இதுவா உன் நீதி!'

'யார் கஜானாப் பொருளாளரா!' வெளிப்பட்டவரைக் கண்டு வியப்புற்றான் காஞ்சிபுரத்தான்.

"ஏன் தளபதியவர்களே! இரவோடு இரவாக வஞ்சகமாய் மடக்கப்பட்ட இவன் எப்படி வந்தான் என்று ஆச்சரியப்படுகிறீர்களா!' கஜானா அதிபதியின் நகைப்பில் குரோதம் கொப்பளித்தது.

'அயலூர்க்காரனான உங்களுடைய துரோகப் புத்தி, அரண்மனை உப்பில் உடம்பு வளர்த்த ஒரு சிலருக்காவது இருக்காதல்லவா?'

"துரோக புத்தியா எனக்கா!' "வேறு யாருக்கு? எங்கே தப்பித் தவறி விழித்திருந்து, ரகுநாதரின் ஆட்களை எதிர்த்து விடப் போகிறோமோ என்று தானே, முக்கிய அதிகாரிகளையெல்லாம் வாய் பேசாது பணிந்து விடும்படி கூறிச் சென்றீர்கள் என்னதான் நடக்கிறது என்று பார்ப்பதற்காக நான் முன்னதாகத் தப்பினேனோ, உமது துரோகம் புரிந்ததோ...'

'தவறு நண்பரே, தவறு தாங்கள் நினைப்பது. என் திட்டத்தில் எதிர்பாரா மாற்றங்கள் ஏற்பட்டதால்...'

"எப்போதும் அப்படிச் சொல்லுவது தங்கள் வழக்கம் தான்!'

'இவ்வளவு ரகசியமாக என்னைக் கொலை செய்யத் திட்டம் தீட்டிய தாங்கள், அரண்மனையில் என்ன நடந்ததென்பதைத் தெரிந்து கொண்டிருக்கலாமே! ரகுநாதருடைய ஆட்சிக்கு நான் ஒருவன்தான் எதிரி என்பதைக் கண்டிருக்கலாமே!'

'கண்டாயிற்று தளபதி அவர்களே அதையும். ஆனால் தங்களுடைய கற்பனைப் பின்னல் நிறைந்த அழகிய நாடகத்தில் அது எத்தனையாவது அங்கமென்று எனக்குத் தெரியாது!"

பல்லைக் கடித்தான் காஞ்சிபுரத்தான். 'நல்லது நண்பரே! எனது ராஜ விசுவாசத்தை இன்னும் எட்டே நாளில் நிரூபிக்கிறேன். அதற்குள் அரசி தாமரையை மீண்டும் அரியணையில் ஏற்றிக் காட்டுகிறேன். முடியாவிட்டால், இதே இடத்தில் இதேபோல் நிராயுதபாணியாக வந்து நிற்பேன். என் அன்னை மீது ஆணை.

சற்றுமுன் அந்த ஊமையன் செய்யத் தவறிய அதே காரியத்தை நீங்கள் நிறைவேற்றலாம். அதோ அந்தப் பாதாள பயங்கரத்தில் என் எலும்பு பொடிப் பொடியாகட்டும்.'

சூளுரைத்த காஞ்சிபுரத்தான் திரும்பிப் பாராமல் மலைப் பாதையில் இறங்கி நடந்தான்.

தானம் பெறுவோரின் வரிசை ஓயாதிருந்தது.

தலையில் முக்காடிட்ட காஞ்சிபுரத்தான் தானும் ஒருவனாக நின்றிருந்தான் அந்த வடக்கு வாசலில். அரண்மனைக்குள்தான் எங்கோ சிறை வைக்கப்பட்டிருக்கிறாள் அவன் ஆருயிர்க் காதலி...

எங்கே? எங்கே?

'நகரேன் ஐயா! வேட்டி வாங்க வந்தாயா? ஆகாயக் கோட்டை கட்ட வந்தாயா?" பின்னே இருந்தவன் நெம்பித் தள்ளினான் அவனை.

முன்னே நகர்ந்தான். யந்திரம்போல் வேட்டியும் பணமும் பெற்றுக் கொண்டான். இதேபோல் முன்னொரு நாள் தாமரையிடம் தானம் பெற்ற நிகழ்ச்சி நினைவில் எழுந்தது.

'வேட்டி சரியாய் இருக்கிறதா, பார் ஐயா" தானங்கள் வழங்கும் சேவகன் கூறினான்.

காஞ்சிபுரத்தான் மௌனமாய் நகர்ந்தான். 'உன்னைத்தான், ஐயா. அப்பாலே காஞ்சிபுரம் வரை போய்விட்டு, கிழிந்திருக்கிறது என்று திரும்பிக் கொண்டு வராதே. இங்கேயே சரிபார்த்து விடு.'

திடுக்கிட்டான் காஞ்சிபுரத்தான். அந்த விநோதமான வாக்கியம். காஞ்சிபுரம் என்று அவனுடைய ஊரின் பெயரை உச்சரித்த குரல்

ஒரு வினாடியில் இரு ஜோடிக் கண்கள் சந்தித்தன. சித்திரக் குள்ளன்! செஞ்சிப் போரில் துணை வந்த தோழன்!

குறிப்புப் பேச்சாக என்ன உணர்த்துகிறான்? யோசித்தவாறே அகன்றான் காஞ்சிபுரத்தான். "வேட்டியைப் பார்த்து விடு"- சித்திரக் குள்ளனின் பேச்சு நினைவு வந்தது.

ஒலைக் கிறுக்கொன்று அகப்பட்டது. 'அரண்மனைப் பாதாளச் சிறையில் அடைபட்டிருக்கிறார்கள் தாமரையும், சென்னம்மாவும், கிருஷ்ணப்பரும். காவல் அதிகம்' *

## (34)

பாதாளச் சிறையிலா தாமரை இருக்கிறாள்! விதிர்த்து நின்றான் காஞ்சிபுரத்தான். எமகிங்கரர்களின் இருப்பிடமாயிற்றே அந்தக் காராக் கிருகம்! முன்பொருநாள் அதன் கொடுமையை அவனும் ருசித்தவன்தானே? மலர்க்குவியலைக் கொண்டு போய் வெய்யிலில் எறிந்தாற்போல், சொர்ணக் கட்டியைச் சகதியில் வீசினாற்போல், மென்மையே பெண்மையான தாமரையை அந்தக் கொடு நரகத்திலா அடைத்திருக்கிறார்கள்? கையும் காலும் பதறின காஞ்சிபுரத்தானுக்கு. சித்திரக்குள்ளனுக்கு எப்படித் தெரிந்தது? இன்னும் என்னென்ன தெரியும்?

மீண்டும் அவனைச் சந்திக்க விரும்பினான் காஞ்சிபுரத் தான். வேட்டி தானம் வாங்குவோரின் வரிசை முன்போலவே நீண்டிருந்தது. நுனியிலே போய் நின்று கொண்டான். முறை வந்தது. நிமிர்ந்து நோக்கினான்.

சித்திரக்குள்ளனை அங்கே காணோம். வேறொருவன் அந்த இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தான். வேட்டிகளை எடுத்துத் தந்து கொண்டிருந்த உதவியாள் மட்டும் பழையவனே. கேலிச்சிரிப்பு வெளிப்பட்டது அவனிடமிருந்து. 'அட பாவமே! நமது முன்னாள் தளபதி இவ்வளவு ஏழையாகி விட்டாரா? இரண்டாம் தடவை தானம் வாங்க வந்து நிற்கிறாரே!'' என்றான் அவன்.

அமைதியாகப் பதிலிறுத்தான் காஞ்சிபுரத்தான். "புதிய ஆட்சியிலே அதற்குள்ளாகவா கஜானா வரண்டு விட்டது? ஒரே ஓர் ஆளுக்கு இன்னோர் வேட்டியும் இன்னோர் அரைப் பணமும் கொடுக்க முடியாமற் போய்விட்டதே! சற்று முன் பெற்றுக்கொண்டிருந்த வேட்டியையும் பணத்தையும் அவர்கள் முன் வைத்தான். "உயர்திரு ரகுநாதர் அவர்களுக்கு என் அன்பான வணக்கத்துடன் இவைகளைக் கொடுத்து விடு.'

'டேய்! நில்!'' என்று அந்த அதிகாரிகள் கூவக் கூவக் காதில் வாங்கிக் கொள்ளாமலேயே வெளியேறினான் காஞ்சிபுரத்தான்.

'தளபதி தளபதி!' யாரோ அவனைக் கூப்பிட்ட வண்ணம் ஓடிவந்தார்கள். 'தளபதி! இந்த அக்கிரமத்தைக் கேட்க உங்களைத் தவிர யாருமில்லை, தளபதி!'

யாரது? ஒரு பெண்ணின் குரல் அல்லவா? மங்கிக் கொண்டிருந்தது மாலை வெய்யில். ஓடி வந்த பெண்ணின் உருவத்தைக் கிட்டத்தில் கண்டான் காஞ்சிபுரத்தான். 'யாரம்மா நீங்கள்? என்ன வேண்டும்?"

'உங்கள் கீழே துணைத் தளபதியாக இருந்தானே, அவனுடைய தாயார் நான். வஞ்சகமாக ரகுநாதரால் கொலை செய்யப்பட்டவனைப் பெற்றெடுத்த அம்மா நான்....'

'வணங்குகிறேன், தாயே! அப்போதே அரசியாரிடம் சொல்லித் தங்கள் குடும்பத்துக்கு உதவி கிடைக்க ஏற்பாடு செய்தேனே!"

'என்னோடு வா' என்று முன்னே நடந்தாள் அந்த மூதாட்டி.

ஊருக்கு வெளியே பரந்த நிலம். செழித்துக் கொழித்துக் கொண்டிருந்தது நெல்வயல். ஆனால் கீற்று நிலவின் வெளிச் சத்தில்

என்ன அது? ஐந்தாறு ஆட்கள் இருக்கும். கிறுகிறுவென்று அறுவடை செய்து கொண்டிருக்கிறார்களே கட்டை வண்டியொன்று

நின்றிருந்தது சாலையோரமாய். மாடுகள் அவிழ்த்து விடப்பட்டுப் புல் மேய்ந்து கொண்டிருந்தன.

மாமரத்தின் பின்னால் பதுங்கியிருந்த காஞ்சிபுரத்தான் துணைத் தளபதியின் தாயைக் கேட்டான்: 'இதுதான் உங்கள் நிலமா? யார் இவர்கள்? உங்களைக் கேட்காமலே அறுவடை செய்கிறார்களே, '

அந்தப் பெண்மணியின் குரல் அடிவயிற்றிலிருந்து வந்த ஆத்திர நெருப்பாக இருந்தது. 'அந்த வயிற்றெரிச்சலை ஏன் தம்பி கேட்கிறாய்? எந்த ராஜா எந்தச் சீமைமீது படை யெடுத்துப் போனாலும், நடுவழியில் இருக்கிற ஏழை பாழைகளின் நிலம்தான் சூறையாகிறது. போன வருஷம் டெல்லி பாதுஷாவின் பெயரைச் சொல்லிக் கொண்டு பத்துப் பேர் கொள்ளை அடித்துச் சென்றார்கள். இப்போது இவர்கள்!'

'யாரம்மா இவர்கள்?" 'மைசூர்க்காரர்கள்... சேலம், கோயம்புத்துர்மீது படை யெடுத்து ஒரு பட்டாளம் போயிற்று இரண்டு நாள் முன்பு. அவர்களுக்கு உணவு வழங்குகிறவர்களாம் இவர்கள். இருக்கட்டுமே? யார் வீட்டு நெல்லைப் பறித்து யாருக்கு வழங்குவது? கேள்விமுறை இல்லாத ராஜ்யமாகிவிட்டது அப்பா!'

அவன் கண்கள் சூழ்நிலையை ஆராய்ந்தன. வயலுக்கு மேற்புறத்தில் ஒரு பழைய கட்டடம் தெரிந்தது. “அது என்ன கட்டடம், அம்மா?"

'ஹூம்! நாடெல்லாம் நல்லாயிருந்த காலத்திலே உபயோகப்பட்டது!"

'அதாவது?"

'களஞ்சியம், தம்பி, நெற்களஞ்சியம். அதிலே பூட்டி வைக்கிற அளவுக்கு இப்போது யாரிடம் இருக்கிறது? சும்மாவே போட்டிருக்கிறார்கள் போலிருக்கிறது.'

கீழுதட்டைக் கடித்துக் கொண்டான் காஞ்சிபுரத்தான். மூளை கிறுகிறுவென வேலை செய்ததால் விழிகள் நிலம் நோக்கித் தாழ்ந்து நிலைத்திருந்தன. பிறகு நிமிர்ந்தான். 'அம்மா, நீங்கள் போங்கள். நான் பார்த்துக் கொள்கிறேன். '

"தம்பி, இந்த அரிசியைத்தான் வருஷம் பூரா சாப்பாட்டுக்கு நம்பியிருக்கிறேன்.எப்படியாவது...'

'காப்பாற்றிக் கொடுக்க நானாயிற்று. நீங்கள் போங்கள். ' தயங்கித் தயங்கி அகன்றாள் அந்தப் பெண்மணி. மரத்தின் மறைவிலிருந்து வெளிப்பட்டான் காஞ்சிபுரத் ன். போர்த்தியிருந்த மேல் துணியைப் பிரித்தான். தலையில் முண்டாசு கட்டிக்கொண்டான். கச்சத்தை இன்னும் மேல் துக்கி இறுக்கிக் கொண்டான்.

தெம்மாங்குப் பாட்டொன்று உல்லாசமாய்ப் புறப்பட்டது அவனிடமிருந்து.

சாலையோடு செல்லும் வழிப்போக்கனைப் போல், மைசூர் ஆட்களை நெருங்கினான். வியப்புடன் பார்த்தவாறு நின்றான். பின்னர் ஒரு குத்துக்கல்லின் மீது உட்கார்ந்து கொண்டு, 'பலே! பலே! ராமய்யாவுக்கு இதுவும் வேணும்! இன்னமும் வேணும்! நல்லா நடத்துங்க அறுவடையை சீக்கிரமா வேலை ஆகட்டும் ஆள் அம்பு அழைச்சிக்கிட்டு வந்தாலும் வந்திடுவான் பொல்லாத பயல்!" என்றான்.

அரிவாளும் கையுமாக இருந்த ஆட்கள் அவனை ஏறிட்டு நோக்கினார்கள். 'நீ போடா உன் வேலையைப் பார்த்துக் கொண்டு!" என்று சீறினான் ஒருவன்.

இன்னொருவன் குறுக்கிட்டு வினவினான்: 'யாரய்யா அது, ராமய்யா?"

"தெரியாதா உங்களுக்கு? எங்கள் ஊர் தலையாரி, பெரிய அக்கிரமக்காரன். இந்த மாதிரி ராவோடு ராவாய் மைசூர்க் காரர்கள்

வந்து அறுவடை செய்துகொண்டு போய்விட்டார்கள் என்று தெரிந்தால், ஊர் ஜனங்களெல்லாம் உங்களுக்கு வடை பாயாசத்தோடு விருந்து வைப்பார்களாக்கும்!"

கடகடவென்று சிரித்தார்கள் அந்தக் கன்னடியர்கள். 'ஆனால், எனக்கு ஒரே ஒரு வருத்தம்' என்றான் காஞ்சிபுரத்தான்.

“என்னது?" "அதோ தெரியலை ஒரு பழைய கட்டடம்?" சுட்டிக் காட்டினான் அவன். 'அங்கே போய்ப் பார்த்தீர்களோ?"

'இல்லையே?"

'அதனால்தான் இந்த வெட்டி வேலை செய்து கொண் டிருக்கிறீர்கள்! அதுதான் ராமய்யாவின் நெற்களஞ்சியம்! மூட்டை மூட்டையாய் அடுக்கி வைத்திருக்கிறானே அங்கே!"

'மெய்யாகவா!'

'போய்ப் பாருங்களேன், தெரியும். வண்டி வேறே தயாராய் இருக்கிறது. எடுத்து வரவேண்டியது. அடுக்க வேண்டியது. வண்டியை ஒட்டிக்கொண்டு போய்ச் சேரவேண்டியது. அதை விட்டுவிட்டு, இது ஏன் அனாவசிய வேலை என்றுதான் வருத்தப்பட்டேன்."

'அப்படியா? எங்களுக்குத் தெரியாமல் போச்சே! வாருங்களடா போகலாம்!'

'வாருங்கள், நான் வழி காட்டுகிறேன், ' என்று காஞ்சி புரத்தான் அழைத்துச் சென்றான்.

எதிர்பார்த்தபடி இருக்குமா? கொஞ்சம் சந்தேகம் இருந்தது அவனுக்கு. பாழடைந்த கட்டடத்தின் இருட்டும் அடைசலும் நம்பிக்கையூட்டின.

'மெள்ள, மெள்ள ஒவ்வொருவராய் நேரே போங்கள். என்ன சாமர்த்தியமாய் ராமய்யா பதுக்கி வைத்திருக்கிறான் பார்த்தீர்களா!'

அவர்கள் நுழைந்தார்கள், துழாவினார்கள். சென்றார்கள். முன்புற மண்டபத்தைக் கடந்து, பக்கவாட்டிலிருந்த பெரிய அறைக்குள் புகுந்தார்கள்.

'என்னய்யா, இங்கே எதையும் காணோமே?''

'நல்லா தடவிப் பாருங்க!'

'பார்த்தாயிற்று, ஐயா...' 'பார்த்துக் கொண்டேயிருங்கள். '

கதவு படாரென்று சாத்திக்கொண்டது. பெரிய இரும்புக் கொக்கி இறுக்கமாக மாட்டப்பட்டது.

"ஐயா! ஐயா!' மைசூர்க்காரர்கள் கதவில் மோதினார்கள். இடித்தார்கள். உடைத்தார்கள்.

'கட்டடம்தான் பழசு. ஆனால் கதவு நல்ல இரும்பு!" வாய்விட்டு நகைத்தான் காஞ்சிபுரத்தான். 'கொள்ளைக்காரத் தோழர்களே! ஆயுள் முடியுமட்டும் தேடிக்கொண்டிருங்கள் அரிசி மூட்டையை! இவ்வுலகில் இல்லாவிட்டாலும் மறு உலகிலாவது கிடைக்கும்!'

சிரித்த வண்ணம் வெளிவந்த காஞ்சிபுரத்தான் சட்டென நின்றான். வாசலை ஒட்டினாற்போல் இன்னொரு சின்னக் கதவு தெரிந்ததே காரணம். கையால் தள்ளினான். புகுந்தான். உள்ளே படிக்கட்டுக்கள் தட்டுப்பட்டன.

எங்கே போகிறது இந்தப் பாதை? விளக்கு வைக்கும் மாடமொன்று துழாவிய கைக்கு அகப் பட்டது. பக்கத்திலேயே இரண்டு கற்கள் வைக்கப்பட்டிருந்தன. ஓ! சிக்கிமுக்கிக் கற்களா தயாராய்த்தான் வைத்திக்கிறார்கள் காய்ந்த சருகொன்றைக் கையிலெடுத்தான். கல்லைத் தட்டி, தீப்பொறி கிளப்பி, சருகிலே பற்ற வைத்துத் தூக்கிப் பிடித்தான்.

மங்கித் தெரிந்தது ஒரு கல்வெட்டு. புறங்கையால் பரபரவென்று துடைத்தான். மீண்டும் பார்த்தான்.

எழுத்துக்கள் தெரிந்தன. அரண்மனைப் பாதாளச் சிறைக்குச் செல்லும் ரகசியப் பாதை. தீயைக் கவனமாய் அணைத்தான் காஞ்சிபுரத்தான். கால்களில் புதுத் தெம்பு ஊற்றெடுத்தது. சுவரைத் தடவியபடியே வழியை அறிந்துகொண்டு முன்னேறினான்.

திடுதிப்பென்று அவன் நெற்றி முட்டிக் கொண்டது ஒரு சுவரில். திடுக்கிட்டு, கைகளால் துழாவிப் பார்த்தான்.

என்ன துரதிருஷ்டம் பெரும் பாறையொன்று அடைத்துக் கொண்டிருந்தது வழியை. அதன் மறுபுறம்தான், பாதாளச் சிறைக்குச் செல்லும் வெளிவாசல் இருந்திருக்க வேண்டும். கச்சிதமாக அடைத்திருந்தது வழியை.

மடியோடு எடுத்து வந்திருந்த சிக்கிமுக்கிக் கல்லைத் தீட்டினான். நெருப்புப் பொறி, மற்றுமொரு வாசகத்தைக் காட்டிற்று.

ரகுநாதர் அறியாத ரகசிய வழி இல்லை. ஹூம்! கிருஷ்ணப்பரின் ஆட்சிக் காலத்திலேயே - ரகுநாதரின் கை ஓங்கியிருந்த அந்த நாளிலேயே - இப்படிப்பட்ட ரகசியப் பாதைகளை அடைத்துவிட்டார் போலும்.

நடந்த கால்கள் நொந்தன. இழுத்துப் பிடித்திருந்த மூச்சு இரைத்தது. ஏமாற்றத்துடன் உதட்டைப் பிதுக்கிக் கொண்டு உட்கார்ந்தான் களைப்பாற.

உட்கார்ந்தவன் திடுக்கிட்டான். சில்லென்று வேகமாய் அடிக்கிறதே காற்று! எங்கிருந்து வருகிறது?

காற்று வீசுவதையே திசைக்காட்டியாய்க் கொண்டு நகர்ந்தான்.

அடைத்திருந்த பாறைக்கும் ஓர் இடுக்கு இருந்தது. ஆனால் கைகொடுத்து நெம்பக்கூடிய அளவுக்குப் பெரிதல்ல. காற்று

வரக்கூடிய ஏன்? ஒசை வரக்கூடிய அளவுக்குப் பெரிது போலும். இதோ, மறுபுறத்திலிருந்து ஏதோ பேச்சுக் குரல் கேட்கிறதே!

"...... வாணிகத்திலே நீங்கள் சமர்த்தராயிருக்கலாம், பெரியபெத்து. ஆனால் ராஜதந்திரத்தைப் பொறுத்தமட்டில்வருந்துகிறேன் நண்பரே! - நீங்களொரு குழந்தை'

காஞ்சிபுரத்தான் பல்லைக் கடித்தான். ரகுநாதரின் குரலல்லவா அது!

பாதாளச் சிறையை ஒட்டிய தோட்டமோ அந்த இடம்? உலாவிய வண்ணம் பேசிக் கொண்டிருக்கிறானே சதிகாரன்!

பெரியபெத்துவின் பதில் தொடர்ந்து கேட்டது: ‘‘உண்மை தான் தாங்கள் சொல்வது. இருந்தாலும், அவன் என் கீழேயே வேலை பார்த்தவன். என்னால் பல வேலைகளுக்கு அமர்த்தப் பட்டவன். ஆகையால் என்னென்ன தந்திரங்கள் செய்யக் கூடியவன், எப்படிப்பட்ட அபாயங்கள் விளைவிக்கக் கூடியவன் என்று எனக்கு அதிகமாகத் தெரியும்...'

காஞ்சிபுரத்தான் புன்னகை செய்து கொண்டான். இருவரும் ஆராய்வது அவனைப் பற்றித்தானா அதிகரித்த ஆவலுடன் உற்றுக் கேட்டான்.

"சரி, அவனைப்பற்றி உங்களுக்கு அதிகம் தெரியுமென்றே ஒப்புக்கொள்கிறேன். அதற்காக?"

'அவனை வெளியில் விட்டு வைப்பது ஆபத்து என்கிறேன். மூன்றாம் மனிதருக்குத் தெரியாமல் அவனை மடக்கி விட்டால்...'

'வேறு வினையே வேண்டாம். மறு நிமிடமே அவன் தியாகியாகிவிடுவான். அவன் பின்னால் பத்துப் பைத்தியக்காரர்கள் சேர்ந்து விடுவார்கள். நம்மை எதிர்ப்பவனுக்கு நாமே வாள் தரலாம் என்பதா தங்கள் யோசனை?"

'அப்படியில்லை....ஆனால்...'

'தயவு செய்து இந்த விஷயத்தை என்னிடமே விட்டு விடுங்கள். எந்த நேரத்தில், எந்த இடத்தில், எந்த ஆளை அடிக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேனோ, அந்த நேரத்தில், அந்த இடத்தில், அந்த ஆளை அடிக்க எனக்குத் திறமையுண்டு...'

அட தற்பெருமையே! தனக்குள் சிரித்தவாறே திரும்பி நடந்தான் காஞ்சிபுரத்தான்.

ஊரை அடைந்தவன் துணைத் தளபதியின் தாயைத் தூக்கத்திலிருந்து எழுப்பி நடந்த விஷயத்தை விவரித்தான்.

'இப்போதைக்கு அவர்களால் தப்பிப் போக முடியாது. நம்பகமான ஆட்களை அமர்த்தி, நாளைக்கே அறுவடையை முடித்து நெல்லை எடுத்து வந்துவிடுங்கள்,' என்று யோசனையும் கூறினான்.

இரவுக் காய்ச்சலில் ஊரின் நாடி ஒடுங்கிவிட்டது.

தர்மசத்திரத்தின் கட்டாந் தரையில் படுத்திருந்தான் காஞ்சிபுரத்தான். கையே தலையணை. முதுகே மெத்தை. களைப்பினால் உடல் சாய்ந்தபோதிலும் ஏமாற்றத்தினால் சுறுசுறுத்தது அறிவு.

கடகடவென்று ஓர் ஓசை - இரும்புச் சங்கிலி நகர்வது போல்.

கவனித்தான்.

கையிலும் காலிலும் இரும்புச் சங்கிலியால் பிணைக்கப் பட்ட கைதியொருவன் முடங்கிக் கிடந்தான் மறு ஓரத்தில். அரசாங்கக் காவலர்கள் இருவர் அவனுக்கருகே அரைத் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தார்கள்.

பிணைத்திருந்த சங்கிலிகள் வலியெடுத்தன போலும். முனகிக் கொண்டு நகர்ந்தான் கைதி. சாகப் போகும் எண்ணெய் விளக்கின்

ஒளியில் அவனுடைய தாடியும் மீசையும் பயங்கரமாய் மினுமினுத்தன. இரும்புச் சங்கிலி கடகடவென்று ஒலி எழுப்பியது.

"சீ. சத்தம் போடாமல் சும்மா இருக்க மாட்டாய், கொஞ்ச நேரம்?" அதட்டினான் காவலாளிகளில் ஒருவன். "பொழுது விடிந்ததும் ரகுநாதர் முன்னாலே கொண்டு போய்த் தள்ளப் போகிறோம். ஏற்கெனவே இரண்டு தரம் சிறைக்குப் போன கழுதை நீ. இந்தத் தடவை பாதாளச் சிறை கிடைக்குமோ அல்லது தலையே போகப் போகிறதோ அது வரையில் சற்றுக் கம்மென்றுதான் இரேன்'

'மன்னியுங்க சாமி, ' என்ற கைதி மேலும் சுருட்டிப் படுத்துக் கொண்டான்.

காஞ்சிபுரத்தானின் கண்கள் அகல விரிந்தன. வெகுநேரம் ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருந்தான் அவன். மெல்ல மெல்ல எல்லாச் சத்தங்களும் அடங்கின. காவலர்களின் குறட்டையொலி காஞ்சிபுரத்தானின் காதைக் கிழித்தது.

காஞ்சிபுரத்தான் நகரத் தொடங்கினான். நத்தை போல, எறும்பு போல, இம்மி இம்மியாக நகர்ந்தான். சுவரோடு சுவராகப் பதுங்கி, கைதியை அடைந்தான்.

தூங்கிக் கொண்டிருந்த கைதி, காஞ்சிபுரத்தானின் கை பட்டதுமே திடுக்கிட்டுக் கண் விழித்தான். காஞ்சிபுரத்தானின் கரம் சட்டென அவன் வாயைப் பொத்தியிரா விட்டால் கூச்சலிட்டிருப்பான்.

'என்னுடன் வா, ' என்று சாடை காட்டினான் காஞ்சிபுரத்தான். பெரும் பாரமாயிருந்த சங்கிலிகளைக் காட்டினான் கைதி. அவைகளைக் கைகளில் ஏந்திக்கொண்டான் காஞ்சிபுரத்தான். இருவருமாய் நகர்ந்த போது, ஓசை துளிவும் கேட்கவில்லை.

இருளில் அமுங்கி, நிசப்தத்தில் புகுந்து, சத்திரத்தின் கொல்லைப்புறத்தை அடைந்தனர் இருவரும்.

கைதியை, கையோடு தூக்கிக் கொண்டான் காஞ்சிபுரத் தான். முதுகில் சுமந்தவாறு காத தூரத்துக்கு அப்பாலிருந்த ஆற்றங்கரையை அடைந்தான். கீழே இறக்கினான் சுமையை.

“எதற்காக உன்னைக் கைது செய்திருக்கிறார்கள்?' என்று வினவினான்.

கிழவன் ரோஷத்துடன் இரைந்தான்: 'ரகுநாதருடைய ஆட்சியை முன்பே எதிர்த்தவன் நான். ஒருவழியாய்த் தொலைந்தாரென்று மகிழ்ந்திருந்தேன். மறுபடியும் வந்து விட்டாராமே! நான் கிஸ்தி கட்டப்போவதில்லை என்று சொல்லிக் கொண்டிருந்ததை இந்த அரசாங்க சேவகர்கள் கேட்டு விட்டார்கள். கொண்டு போகிறார்கள் அரண்மனைக்கு.

'சட்டத்தை மீறுகிறேனோ என்று நினைத்தேன்' ஒரு பாறாங்கல்லை எடுத்துக் கைதியின் விலங்கை உடைத்தவாறே சொன்னான் காஞ்சிபுரத்தான். 'நல்ல வேளை, அக்கிரமத்தை எதிர்க்கும் அணியில் என் தோழன்தான் நீ.'

'ஐயா, நல்லவராயிருக்கிறீர்கள் நீங்கள். உங்களுக்கேன் கஷ்டம்? என்னை விடுவித்த பிறகு என்ன செய்யப்போகிறீர்கள்?"

டொக் டொக்.

தெறித்து விழுந்து கொண்டிருந்தன இரும்புச்சங்கிலிகள்.

'உன் இடத்திலே நான் இருக்கப் போகிறேன்."

'ஐயா, ஐயா வேண்டாம். அந்த ரகுநாதன் மிக துஷ்டன்...'

'அதையும் பார்த்து விடுகிறேனே...'

டொக் டொக் டொக்.

இரும்புச் சங்கிலிகளின் கடைசிப் பிடிப்புகளும் அற்று விழுந்தன.

அரண்மனைக்குள் இழுத்துச் சென்று கொண்டிருந்தார்கள் கிழவனை.

'ஐயா, விட்டுவிடுங்கள் ஐயா. என்னால் தாள முடியவில்லை ஐயா... ' கிழவன் கெஞ்சினான்.

'நடடா வேகமாய். ராத்திரி பூராதான் சத்திரத்திலே கும்பகர்ணன் போல் தூங்கினாயே! நட நன்றாய்!" விலங்கிட்ட சங்கிலியைச் சுண்டி இழுத்தார்கள் இரண்டு காவலர்களும்.

ரகுநாதரின் காலடியில் தள்ளப்பட்டான் கிழவன். குற்றப் பத்திரிகையைப் படித்து முடித்தான் சேவகன்.

அழுக்குத் தாடி புதர்போல் மண்டியிருந்த மோவாயின் கீழே காலின் பெருவிரலைக் கொடுத்துத் தூக்கினார் ரகுநாதர். கிழவனின் முகம் பரிதாபத்துடன் உயர்ந்தது.

ரகுநாதரின் கண்கள் கூர்வாள் போல் பளபளத்தன. "ஓ! இவனா இந்தக் கிழவன் நல்லவனாயிற்றே!'

"பிரபு இவன்...." குறுக்கிட்டான் காவலர்களிலொருவன். 'எனக்குத் தெரியும் சென்னைப் பட்டணத்திலிருந்து வந்திருக்கிறாரே பெரியபெத்து. அவரைக் கேட்டால் நிறையச் சொல்வார் இவனைப்பற்றி சந்தேகமிருந்தால் இவன் முதுகைப் பாருங்கள் 'பெ. பெ.' என்று நற்சான்று வழங்கியிருக்கிறார்களே!'

காவலர்கள் விழித்தார்கள். காஞ்சிபுரத்தான் நாக்கைக் கடித்துக் கொண்டான்-அந்த ஒரு விஷயத்தில் அஜாக்கிரதையா யிருந்து விட்டோமே என்று.

ரகுநாதர் தொடர்ந்தார்: "இவன் மிக மிக நல்லவன்; இவனை இங்கே வைத்திருக்கும் தகுதிகூட நமது நாட்டுக்குக் கிடையாது. சகல மரியாதைகளும் செய்து ஊர் எல்லைக்கு வெளியே விட்டு விட்டு வாருங்கள்!'

திடுமென வெளியே ஓர் ஆரவாரம். பெரியபெத்து ஒடோடி வந்தார் பரபரப்புடன். அவர் முகமெல்லாம் பல்லாயிருந்தது. அத்தனை ஆனந்தம்!

"ரகுநாதரே! ஓர் நற்செய்தி வாருங்கள் இப்படி!' என்று அழைத்தார் அவசரமாக.

'என்ன விஷயம்?" 'வாருங்களேன் கொலு மண்டபத்துக்கு பாருங்களேன் அந்தக் காட்சியை வரிசை வரிசையான சீர்களுடன் செஞ்சி மன்னர் ஒரு தூதனை அனுப்பியிருக்கிறார்!"

ரகுநாதரின் கண்கள் இடுங்கின. 'செஞ்சி மன்னரின் தூதனா? எதற்காக?'

'நம்மோடு சம்பந்தம் பேசத்தான்! தெய்வநாயகி அரியணை ஏறிய வேளை...'

'அப்படியா? ' ரகுநாதர் வேகமாக வெளியேறினார். காவலர்களும் பெரியபெத்துவும் அவரைப் பின்தொடர்ந்த வேளையில்...

காஞ்சிபுரத்தான் மறுபுறம் வழியே நழுவினான்.

## (35)

'அம்மா! அம்மா!'... அரற்றினாள் தாமரை. அறிவு தெரியுமுன்னே மகளை அனாதையாக்கி மறைந்து விட்ட அம்மா! அவளா இனி வரப்போகிறாள் மெத்தென்ற வயிற்றிலே பாதுகாத்தோமே பத்து மாதம் என்பதை எண்ணிப் பார்த்தாளா அந்த அன்னை? பாம்பும் தேளும் மனித உருவெடுத்துத் திரிகின்ற இடத்தில், தத்தளிக்க விடுகிறோமே தங்கக் கட்டியை என்றுதான் தயங்கினாளா? போய்விட்டாள் அவள் என்றைக்கோ புலம்புகிறாள் பேதை இவள்!

'அழாதே தாமரை கண்ணிர் சிந்தாதே, என் கண்மணியே!'' இருந்த இடத்திலிருந்தே ஆறுதல் சொன்னாள் சென்னம்மா.

'இல்லை. தடுக்காதே அவளை" இன்னோர் கோடியிலிருந்து கிருஷ்ணப்பர் கூறினார். 'உன் தகப்பனார் வள்ளுவப் பெருமானின் பெருமையை உணர்ந்தவரல்ல சென்னம்மா! அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணிரன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை' என்று குறள் கூறுவது தெரியாது அவருக்கு! அழ விடு தாமரையை கெட்டுத் திருந்தியவர்கள் நீயும் நானும்; நம் சாபம், நம் குமுறல், நம் வேதனை அவை போதாது இந்த அநீதி ஆட்சியை வேரறுக்க துய உள்ளம் படைத்தவள் தாமரை. கண்ணகியின் சக்தி அவள் ஒருத்தியின் சினத்துக்குத் தான் உண்டு. சிந்தட்டும் கண்ணிர் தடுக்காதே!'

மூவரும் மூன்று வேறு இடங்களில் நிறுத்தப்பட்டிருந்தார்கள். கைகளுக்கும் கால்களுக்கும் தளைகள். முரட்டுப் பாறைச் சுவர்கள். கூரிய முனைகள் குத்திட்டு நிற்கும் கதவுகள். ஈரம் சொத சொதக்கும் நாற்றத் தரை. சாரி சாரியாக அணி வகுத்துச் செல்லும் கட்டெறும்புப் பட்டாளம். எமனின் ஏவலரோ என எண்ண வைக்கும் காவலர்கள்.

'தண்ணிர்! கொஞ்சம் தண்ணிர் கொடப்பா" கெஞ்சினாள் தாமரை. அவளுடைய தாழைமடல் கைகள் அதிகம் நீள முடியவில்லை. இரும்புத் தளைகள் தடுத்தன.

எட்ட நின்றிருந்த காவலன், தண்ணிர்க் குடுவையுடன் அருகில் வந்தான். ஆனால் கொடுக்கவில்லை.

கிருஷ்ணப்பர் பரிந்துரைத்தார்: "நாடாண்ட ராணியடா அவள். நா வறண்டு தவிக்கிறாள். கொடு நாளைக்கே காலம் மாறும் போது உன் சேவைக்குப் பரிசு கிடைக்காமற் போகாது.'' தயங்கித் தயங்கி அருகில் வந்தான் அவன். ஒவ்வோரடி அவன் எடுத்து

வைக்கும்போதும் தாமரையின் வாடிய மோவாய் அவனை நோக்கித் தாவியது. ஆவலும் தவிப்புமாய் அவள் பவழ இதழ்கள் துடித்தன.

திடீரென ஒரு முரட்டுக் கரம் தட்டிப் பறித்தது, முன்னவனுடைய தண்ணீர்க் கலத்தை. சொட்டுத் தண்ணிருக்கு ஏங்கிய தாமரையைச் சுற்றி, சிதறிப் பரவியது நீர்த்தாரை. காய்ந்த நா காத்திருந்தது. ஆனால் கட்டாந்தரையில் வீணாயிற்று அத்தனை தண்ணிரும்.

தட்டிவிட்ட இரண்டாம் காவலன் குரூரமாக நகைத்தான். தண்ணிர் கொடுக்க முன் சென்றவனைக் கழுத்தைப் பிடித்துச் சிறைக்கு வெளியே நெட்டித் தள்ளினான். 'ஏனடா மட்டிப் பயலே! நாளைக்கு இவர்கள் விடுதலையாகி வந்தால் உன் கழுத்துக்கு நவரத்தின ஹாரம் போடுவார்கள் என்ற பேராசை தானே உனக்குப் பெரிதாயிருக்கிறது! அதற்கு முன்பு ரகுநாதருக்கு உன் துரோகம் தெரிந்து போனால், கழுத்தே இருக்காதே! அதை நினைத்துப் பார்த்தாயா?"

வெளியே தள்ளப்பட்டவன், திரும்பி வந்து இரண்டாமவனின் காலில் விழுந்தான். 'தெரியாமல் செய்திட்டேன் அண்ணே. புத்தி வந்தது. இனிமேல் செய்ய மாட்டேன். என்னைக் காட்டிக் கொடுத்து விடாதீங்க அண்ணே கன்னத்தில் படபடவென்று போட்டுக் கொண்டன அவன் கைகள்.

'உன் துரோக புத்தி எனக்குக் கிடையாதடா, நாயே! போ என் கண்களில் படாமல்!" இரண்டாமவன் உறுமவே, முதல்வன் மின்னலாய் மறைந்தான்.

இரண்டாவது காவலனின் பெயர் கார்த்திகேயன். அடிமேலடி வைத்து வாசலுக்கு நடந்தான். அவன் எச்சரிக்கையுடன் எட்டிப் பார்த்தான் சிறைக்கூடத்துக்கு வெளியே.

அவன் முகத்தில் ஒரு புன்னகை. கண்ணிலே ஒரு குறும்பு.

நேரே கிருஷ்ணப்பரிடம் திரும்பினான். 'அரசே என்னை மன்னியுங்கள்!' என்று அவர் காலடியில் விழுந்தான். பொல பொலவென்று கண்ணிர் உகுத்தான். 'பரம்பரை பரம்பரையாய் அரண்மனை உப்பைத் தின்று வளர்ந்த இந்த நாய், தங்களையெல்லாம் மரியாதைக் குறைவாகப் பேசுவது போல் நடிக்க நேரிட்டது...'

அதிர்ச்சியுடன் கிருஷ்ணப்பர் நெகிழ்ச்சியுற்றார். குனிந்து அவனைத் தூக்கி நிறுத்தினார்: "நல்லவனே! இந்த நச்சுக் கூடாரத்தில் நீயும் ஒருவன் என்று கணக்கிட்டுவிட்டேன். என்னை மன்னித்துவிடு. எங்களுக்காகக் கண்ணிர் சிந்தவும் இந்தக் காராக்கிருகத்தில் ஒருவன் இருக்கிறாயே, அதுவே போதும்'

தள்ளாடித் தள்ளாடித் தாமரையை அடைந்தான் கார்த்தி கேயன். 'அரசி... தங்களை" சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டான் அச்சத்துடன். 'தாங்கள் இங்கிருந்து தப்பிச் செல்வதானால்... இந்த ஏழையால் உதவ முடியும்...'

பதுமை உயிர் பெற்றதா? தாமரையைத் திடீர்ப் பரபரப்பு ஆட்கொண்டது.

கார்த்திகேயன், இடுப்பில் செருகியிருந்த திறவுகோல் கொத்தை வெளியிலெடுத்து, மூவரின் தளைகளையும் விடுவித்தான்.

அடுத்து அவன் செய்த வேலை விந்தையானது. வெற்றிலை பாக்கு வைத்துக் கொள்ளும் சுருக்குப் பையை எடுத்தான். சுண்ணாம்புச் சம்புடத்தைத் திறந்தான். சுட்டுவிரல் நிறையச் சுண்ணாம்பை வழித்தெடுத்துக் கொண்டான்.

வடக்குத் திசையிலிருந்த சுவரில், ஒவ்வொரு பாறைக் கல்லின் மீதும் ஒரொரு பொட்டுத் தடவிப் பார்த்தான். பிணைப்புச் சங்கிலிகளிலிருந்து விடுபட்ட கிருஷ்ணப்பர் அவன் பின்னால் நின்று கவனித்துக் கொண்டேயிருந்தார்.

ஒரு குறிப்பிட்ட பாறையில் அவன் வெள்ளைப் பொட்டு வைத்தான். கண்ணிமைக்கும் நேரத்தில் அது ரத்தச் சிவப்பாக மாறியது.

'இந்தக் கல்தான்! இந்தக் கல்தான்" இரு கைகளாலும் அந்த இடத்தை ஆட்டினான். அசைந்தது. இழுத்தான். வந்தது. அதையொட்டிய பல கற்கள் அகன்றன அடுத்தடுத்து. உட்புறம் இறங்கிச் செல்லும் படிக்கட்டொன்று தெரிந்தது.

கிருஷ்ணப்பர் பிரமித்தார். "எத்தனை ஆண்டுகள் ஆட்சி செய்தேன் இந்த நாட்டை இப்படிப்பட்ட ரகசிய வழிகள் எனக்கே தெரியாதே'

'ஓசைப்படுத்தாமல் வாருங்கள், ' என்று முதலில் இறங்கினான் அந்தக் காவல்காரன். பின்னே சென்றார்கள் அரச குடும்பத்தார்.

குபிரென்று வெளிச்சம் தெரிந்தது. இது திறந்த வெளியா, இன்னோர் அறையா? எங்கே வந்திருக்கிறோம்...

அவர்கள் நிதானிக்குமுன் 'பலே கார்த்திகேயா! பலே, பலே! அருமையாக முடித்து விட்டாயே?' என்று ஒரு பாராட்டுக் குரல்!

திமுதிமுவென்று ஒரு காவலர் பட்டாளம் ஓடி வந்தது. தாமரையையும் சென்னம்மாவையும் கிருஷ்ணப்பரையும் உடும்புப் பிடியாகப் பிடித்துக்கொண்டது.

'ஆ என்ன ஈனத்தனமானதுரோகம்' இளித்துக் கொண்டு நிற்கும் கார்த்திகேயனைக் கண்டு குமுறினார் கிருஷ்ணப்பர்.

"துரோகமா எப்படிக் கிருஷ்ணப்பரே, உங்கள் நாக்கு அசைகிறது அதைச் சொல்ல!' காவலர் தலைவனாகத் தோன்றிய ஒரு கொடுவாள் மீசைக்காரன் அவரருகில் வந்து அட்டகாசமாகச் சிரித்தான். 'இது ஒரு புது வகைப் பரீட்சை... உனக்குப் புரிகிறதா கார்த்திகேயா?"

"புரியவில்லையே எஜமான்' என்றான் அந்தப் பச்சைத் துரோகி. 'இன்ன மாதிரி தப்பலாமென்று சொல்லு, அவர்கள் இஷ்டப்பட்டால் அழைத்து வா என்றீர்கள். அதன்படியே செய்தேன். '

'ஆ! சுண்ணாம்பிலே இருக்கிறது சூட்சுமம்' தொடையைத் தட்டிக் கொண்டு நகைத்தான் அந்தக் கொடியவன். 'உயிர் மேல் ஆசை வைத்திருப்பவர்களிடம்தானே நம் சித்திரவதைக் கலையைக் காட்டவேண்டும்? உயிரை வெறுத்திருப்பவனைத் துன்புறுத்துவதில் என்ன சந்தோஷம்? ஆகவே தப்பிச் செல்ல ஆசையா என்று அவர்களிடம் கேட்கச் சொன்னேன். ஆசைப்பட்டு வந்தவர்களுக்கு, என்ன தண்டனை வழங்கினாலும் அது இரட்டிப்பு வேதனை அல்லவா? ஹாஹ்ஹாஹா!'

'நிறுத்தடா கயவனே!' என்று திமிறிப் பாய்ந்த கிருஷ்ணப்பரின் வெற்று முதுகிலே பாய்ந்தது பலமானதோர் அறை. 'சிற்றப்பா!' என்று அலறினாள் தாமரை.

'நினைத்ததை நடத்தட்டும், இந்த நீசர்கள். எதிர்க்கா தீர்கள். எத்தனையோ துன்பங்களைப் பார்த்து விட்டோம். இனி என்ன பெரிதாய் வரப்போகிறது!" என்றாள் சென்னம்மா.

'பரிதாபம் முன்னாள் மகாராணியே, பரிதாபம்! தாமரையின் முன்னே, குனிந்து, ஏளனப் பணிவுடன் கூறினான் காவல் தலைவன். 'சாதாரணச் சிறையிலிருந்து தப்ப முயல்வோரைப் பாதாளச் சிறையில் அடைப்பது வழக்கம். பாதாளச் சிறையிலிருந்தே தப்ப முயன்றால் அன்பளிப்புப் பன்மடங்கு!" ஈட்டி பிடித்த கையை நீட்டிக் காட்டினான். "அதோ தெரிவது, என்ன? '

பார்த்தார்கள்.

உலைக் கூடம் கணகணவென்று தணல் ஜொலிக்கும் கோட்டையடுப்பு.

'அதிலே செக்கச் சிவக்கக் காய்ந்து கொண்டிருப்பது என்னவென்று தெரிகிறதா, பெரியவர்களே உற்றுப் பாருங்கள்! நன்றாகப் பாருங்கள் கண் இருக்கும்போதே பார்த்துவிடுங்கள்!" 'ஆ'- அவனுடைய கடைசி வாக்கியம் அவர்களது ரத்தத்தை உறைய வைத்தது.

காவல் தலைவன் சிரித்தான். 'புரிந்து கொண்டு விட்டீர்களே! புத்திசாலிகள்தான் பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கோல், உங்கள் விழிகளை முத்தமிடும். சூட்டுக் கோலும் பச்சைத் தோலும் தழுவும்போது, ஆகா! அப்போது கிளம்பும் மணமே தனிதான்'

சென்னம்மாவும் தாமரையும் பீதியுடன் அணைத்துக் கொண்டார்கள்.

கொடுவாள் மீசை தொடர்ந்தான்: 'ஆனால் இத்தனை ராஜத்துரோகங்கள் புரிந்த பிற்பாடும், உங்களிடம் கருணை காட்டியிருக்கிறாரே, எங்கள் மாண்புமிக்க மன்னர் ரகுநாதர், அவருடைய...'

“சீ.. அவர் பெயரைச் சொல்லாதே' என்று கத்தினாள் சென்னம்மா.

மறுநிமிடம் அவள் கன்னத்தில் பளீரென்று அறை விழுந்தது. 'நான் பேசும்போது குறுக்கிட்டதற்குப் பரிசு அது!" என்று தெரிவித்துவிட்டு மேலே தொடர்ந்தான் காவல் தலைவன்.

'பெருந்தன்மையுடன் ரகுநாத மன்னர் உங்களுக்கு ஒரு சலுகை காட்டலாமென்று முன்பே எங்களுக்குச் சொல்லியிருக்கிறார். அதன்படி, குற்றவாளிகளான நீங்கள் மூவரும் கண்களை இழக்க வேண்டிய அவசியமில்லை. ஒரே ஒருவர் மட்டும் கண்களைப் பறி கொடுத்து, பாதாளச் சிறையில் அடைபட்டுக் கிடந்தால் போதுமானது. மற்ற இருவர் வெளியே செல்லலாம் சுதந்திரமாக எந்த ஒருவர் இருக்கவும், எந்த இருவர் வெளியேறவும் சம்மதிக்கிறீர்கள் என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளலாம்.'

மறுவினாடி, அந்த உலைக்களத்திலேயே, மூன்று தாமரைகள் மலர்ந்தன. ஒரே சமயத்தில் மூன்று குரல்கள் கூவின உற்சாகத்துடன்: 'என் கண்ணைப் பறித்துக் கொள்!"

மூவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள், திகைப்புடன்.

கிருஷ்ணப்பர் சொன்னார்: "இவ்வளவு துன்பத்துக்கும் மூலகாரணமானவன் நான். அன்று நான் அண்ணனுக்குச் செய்த துரோகம்தான் இன்று விஷ விருட்சமாக வளர்ந்து என்னை விழுங்க வருகிறது. என்னோடு எதற்காக மற்றவர்களும் துன்பப்படவேண்டும்? நியாயமாகத் தண்டனையை அனுபவிக்க வேண்டியவன் நான்தான். நீங்கள் இருவரும் பத்திரமாக வெளியேறுங்கள்."

சென்னம்மா சொன்னாள்: 'பத்தினிக்குக் கண், அவள் கணவனல்லவா? அவனே கண்ணிழந்து தவிக்கும்படி விட்டு விட்டுத் தான் மட்டும் சுகப்படுவதா நியாயம்? ஒரு நாளுமில்லை. தகப்பன் என்ற உறவின் உரிமையால், அரண்மனைக்குள் ஒரு நச்சுப் பாம்பு உலவ இடம் கொடுத்தவள் யார்? நான்தானே? தண்டனைக்குரியவளும் நான்தான். தாமரையை அழைத்துக் கொண்டு நீங்கள் வெளியேறுங்கள். அவள் காதலன் காஞ்சிபுரத்தானைக் கண்டுபிடித்து ஒப்படையுங்கள். '

இடைமறித்தாள் தாமரை: 'எங்கிருந்தோ வந்த இந்த அனாதைக்காகத் தாங்கள் இருவரும் தியாகம் புரிய முன் வருவதைக் காணும் போது, இந்த அன்புக்கு ஈடாக எதைக் கொடுத்தால்தான் தகும் என்று திகைக்கிறேன்! சிற்றப்பா! கடலுக்குக் கொந்தளிப்பு, உரலுக்கு இடி, புழுவுக்குத் துடிப்பு: இந்தத் தாமரைக்குத் துயரம் - இவையெல்லாம் சகஜம். அடிமையிலும் அடிமையாக உழல வேண்டிய நான் அரச போகத்துக்கு ஆசைப்பட்டது தவறு. ஆமை புகுந்த வீடாகத் தங்கள்

அரண்மனையைப் பாழ்படுத்திய பாவம் என்னைத் தான் சேரும். அதற்கான தண்டனையையும் நான் ஒருத்திதான் அனுபவிக்கவேண்டும்!"

'உம், போதும்!" என்று உறுமினான் சிறைக்காவலன். 'உங்கள் உபன்னியாசங்களையும் உபதேசங்களையும் சாயந்தரம் பெருமாள் கோவிலில் வைத்துக்கொள்ளுங்கள். வேலையற்ற வெட்டிப் பேர்வழிகள் வேண்டிய மட்டும் வருவார்கள், கேட்பதற்கு! இங்கே அதற்கு நேரமில்லை. யாரடா அங்கே!'

பட்பட்டென்று அவன் கை தட்டியதும், உலை கூடத்திலிருந்து ஓடிவந்தான் ஒரு பரட்டைத் தலையன்.

இரண்டு கையிலும் பிடித்திருந்த சூட்டுக் கோல்களை அவன் காட்டினான். 'போதுமா பாருங்கள்' என்றான்.

செம்பவளம்போல் பளபளத்து, ரத்தம் போல் ஒளியைக் கொப்பளித்தன அந்தப் பழுக்கக் காய்ச்சிய கோல்கள்!

சிறைக் காவலன் அவைகளைச் சட்டென வாங்கிக் கொண்டான். அரக்கன் போல் அவன் வாய்விட்டு வெளியிட்ட பெருநகை, சிறைக்கூடத்தின் உச்சிகளில் மோதி எதிரொலித்தது.

கர்ஜித்தான் அவன்: 'நன்றாய்ப் போதும், தோழனே, மிக நன்றாய்ப் போதும்! இந்த மூன்று பேருக்கு மட்டுமல்ல. அவர்களை எப்பாடு பட்டாவது கடத்திவிட வேண்டுமென்று மிகச் சாமர்த்தியமாய் இங்கே வந்து சிக்கியிருக்கிற உனக்கும் இந்தச் சூட்டுக் கோலே போதும்!"

'என்ன, என்ன? ' தாமரையும் கிருஷ்ணப்பரும் சென்னம்மாவும் கூவிக் கொண்டிருந்தபோதே பாய்ந்து வந்த அந்தப் பரட்டைத் தலையனைப் பிடித்துக் கொண்டார்கள் சிறைக் காவலர்கள் பலர். மூச்சு அடைக்கக் கூவினாள் தாமரை, "நீங்களா!' காவல் வீரர்களின் மத்தியில் திமிறிக் கொண்டிருந்தான் காஞ்சிபுரத்தான்.

## (36)

ஒரு தாம்பாளம் நிறைய நவரத்தினக் கற்கள் கையில் அள்ளியெடுத்து, விரல் இடுக்கு வழியே வழிய விட்டார்.

இன்னொரு தட்டிலே எண்ணற்ற பூக்குவியல் முகர்ந்து பார்த்து ஆகாகா என்றார்.

மூன்றாவது கலத்திலே உயர்சாதிப் பழங்கள். அருகி லிருந்தவர்களுக்கு எடுத்து வழங்கினார்.

மற்றுமொரு தாம்பாளத்தில் கண்ணைப் பறிக்கும் பட்டாடைகள். மார்போடு சேர்த்து, மேனி நிறத்துக்குப் பொருத்தம்தானா என்று பார்த்து மகிழ்ந்தார்.

என்ன ஆனந்தம்! என்ன ஆனந்தம் பெரியபெத்துவின் ஆறடித் தேகம் நூறடிப் பரிமாணமாய் வளர்ந்தது. மீசை முனைகளும் விரல் நுனிகளும் ஆசையுடன் உறவாடின, ஆனந்த மிகுதியினால்.

அணிஅணியாக நின்றிருந்த செஞ்சி வீரர்களின் உதட்டில் அரும்பியது கேலிப் புன்னகை. கூடவே நின்றிருந்த ரகுநாதரின் கழுகுப் பார்வைக்கு அது புலப்பட்டது போலும். ‘‘பதறாதீர்கள், பெரியபெத்து, காணாததைக் கண்டோமென்று அவர்கள் எண்ணிவிடுவார்கள், ' என எச்சரித்தார் நண்பரின் காதோடு.

வரிசையின் தலைமையில் இருந்த செஞ்சியின் தூதன் முன்னே வந்தான்: "ஜெய் பவானி! வாழ்க வீர மராட்டிய சாம்ராஜ்யம்! வளர்க சிங்காவரத்து அரசகுலம். சத்ரபதி சிவாஜியின் வழித்தோன்றலும் செஞ்சியின் மன்னருமான சத்ரபதி ராஜாராம் அவர்கள், சிங்காவரம் அரசியாருக்குத் தமது நட்புமிக்க வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார். அரசியாரின் பெற்றோருக்கும் மூத்தோருக்கும் தமது வணக்கங் களைக் கூறுகிறார்...'

பெரிய பெத்துவின் அகல முகம் பின்னும் விரிந்தது. அவரது யானைக் கண்களில் மகிழ்ச்சியின் மினுமினுப்பு. மார்பை முன்னுக்குத் தள்ளினார். மீசையைச் சுண்டி விட்டார்.

ரகுநாதரின் குரலிலோ, சுடுகாட்டு அமைதி. 'அன்புடன் நீங்கள் வந்திருக்கும் நோக்கம்...'

பெரியபெத்து குறுக்கிட்டார், அவசரமாய்: "நான்தான் சொன்னேனே, இவர்கள் நம்...'

ரகுநாதருக்கு நெற்றிக்கண் இல்லாததால் திறக்கவில்லை. "அதை அவர்கள் வாயாலேயே சொல்லட்டுமே...'

கொண்டு வந்திருந்த சீர்களை ரகுநாதரின் காலடியிலேயே வைத்தார்கள், செஞ்சி வீரர்கள். குழுவின் தலைவனாயிருந்த இளைஞன் உடைவாளைக் கழற்றி வானை நோக்கி உயர்த்திய பின்னர் கூறினான்: 'பிரபு, மாபெரும் அண்டை நாடுகளான சிங்காவரமும் செஞ்சியும் நிலத்தால் இணைந்திருப்பது போல, இதயத்தாலும் நெருங்கி வரவேண்டுமென்பது எங்கள் மன்னரின் விருப்பம். வீரத்தோடு கருணையும் சேர்ந்தாற் போல், பொன்மலருக்கு நறுமணம் கூடினாற் போல், அந்த இணைப்பு நமது இரு ராஜ்ஜியங்களுக்கும் சிறப்பு ஏற்படுத்து மென்பது சத்ரபதி ராஜாராம் அவர்களின் கருத்து...'

'உண்மை, உண்மை' ரகுநாதரின் சிரம் பெருந்தன்மையுடன் அசைந்தது. 'அதற்காக என்ன செய்யவேண்டுமென்று தங்கள் மன்னர் கூறுகிறார்? எங்கள் அரசியார் அரியணையைத் துறந்து தங்கள் மன்னரிடம் தந்து விட வேண்டுமென்பது அவரது நோக்கமா?"

'இல்லை, இல்லை' இடைமறித்தது, தூதனல்ல. பெரிய பெத்துதான். மகா கெட்டிக்காரரான ரகுநாதர் ஏன் இப்படிப் புத்தி மந்தமாய்

இருக்கிறார் இன்று? ஏன் சட்டென்று புரிந்து கொள்ளத் தெரியவில்லை?

'அதாவது, அவர்கள்..' என்று ஆரம்பித்த பெரியபெத்து, ரகுநாதரின் விஷக் கணை போன்ற பார்வையிலே நடுங்கிப் போய், நிறுத்திக்கொண்டார்.

'சொல்லுங்கள் தூதரே!" தூண்டினார் ரகுநாதர். செஞ்சிக்காரனின் உற்சாகம் இந்த இடையூறுகளால் மட்டுப்படவில்லை. அவன் சொன்னான்: 'திருமணத்தைக் காட்டிலும் வலுவான, இனிமையான இணைப்பு இருக்க முடியுமா, பிரபு? இரண்டு உள்ளங்களை மட்டுமல்ல, இரண்டு மக்களை, இரண்டு நாடுகளை, இரண்டு லட்சியங்களை இணைய வைப்போம் என்பது எங்கள் அரசரின் கருத்து. சுருங்கச் சொன்னால், செஞ்சி இளவரசருக்கும் சிங்காவரம் அரசிக்கும் திருமணம் நடத்தவேண்டும் என்பதே அவரது ஆசை. அதைத் தெரிவிக்கவே நான் வந்தேன்."

“எப்படி!'ஆனந்தப் பரவசத்துடன் ரகுநாதரின் முகத்தைப் பார்த்தார் பெரியபெத்து.

'ஒகோ", ஒரே வார்த்தை. உயிரில்லாத, உற்சாகம் கொப்புளிக்காத, வெறும் முனகல்! அவ்வளவுதான் வெளிப் பட்டது ரகுநாதரிடமிருந்து.

செஞ்சித் தூதன் சற்றுப் புரிந்துகொண்டான் அவர் மனப் போக்கை. 'பெண் கேட்டு வலியச் செல்வது எங்களுக்கு வழக்கமில்லை யென்றாலும்...'

குறுக்கே வெட்டினார் ரகுநாதர்: "கேட்டவர்களுக்கெல் லாம் பெண் கொடுத்துவிடுவது எங்கள் வழக்கமும் அல்ல, ' மெல்ல உலவினார் ரகுநாதர். 'மிகுந்த ராஜ தந்திரத்துடன், எதிர்காலத்தைக் குறித்துச் சிறப்பாகத் திட்டமிட்டு, தங்கள் மன்னர் இந்த யோசனையை

வெளியிட்டிருக்கிறார். அவருக்கு எங்கள் உளமார்ந்த நன்றி, ஆனால்...'

'இதிலே ஆனால் என்ன, ரகுநாதரே?' குறுக்கிட்டார் பெரியபெத்து.

அந்தக் குரல் காதிலேயே விழாதது போல் தொடர்ந்தார் ரகுநாதர்: 'என்னதான் பாரத தேசம் ஒன்றென்றாலும், எங்களைப் பொறுத்தமட்டில் நீங்கள் வடமாநிலத்தவர்தான். பழக்கத்தாலும், வழக்கத்தாலும், பேச்சாலும், மொழியாலும் வேறுபட்டவர்கள் நாம். எங்கள் தமிழ் ரத்தம் உங்கள் மராத்தி ரத்தத்துடன் கலப்பது இன்றைக்கு அரசியல் ரீதியில் அனுகூலமானதாயிருந்தாலும், எதிர்காலத்தில் எப்படிப்பட்ட விளைவுகளை ஏற்படுத்துமோ, யார் கண்டது?"

செஞ்சிக்காரனின் முகம் சிவந்தது. 'முடிவாகத் தாங்கள் கூறுவது?’’

'முடிவாக நான் எதுவும் கூறவில்லையே!' ரகுநாதரின் உதட்டில் போலிப் புன்னகை படர்ந்தது. 'தங்கள் மன்னரைச் சிறிது காலம் பொறுத்திருக்கச் சொல்லுங்கள். இந்தச் சம்பந்தத்தின் விளைவுகளைப் பற்றி நாங்கள் தீர ஆராய்கிறோம். தீமைகளைக் காட்டிலும் நன்மையே அதிகம் ஏற்படுமென்று தெரியுமானால், நண்பரே, நானே உங்கள் அரசரிடம் வந்து ஒப்புக் கொள்கிறேன். '

'வாருங்கள் போகலாம்", செஞ்சி தூதன் ரோஷத்துடன் உடைவாளை இழுத்துச் செருகிக் கொண்டான்.

ரகுநாதர் அயரவில்லை. 'நண்பர் பெரியபெத்து அவர்களே, நமது கௌரவமிக்க விருந்தினருக்குச் சகல மரியாதை களையும் செய்து வழியனுப்பிக் கொடுங்கள்,' அரண் மனைக்குள் திரும்பிவிட்டார் அவர்.

'மரியாதையா!' சினத்துடன் நகைத்தான் செஞ்சித் தூதன். 'உங்கள் மரியாதைகள் எப்படி இருக்கும் என்பதற்குத் தான் ஒரு சோறு பதம்

காட்டிவிட்டீர்களே!' ரகுநாதர் மறைந்த திசையை நோக்கி உறுமினான்.

பெரியபெத்துவுக்கும் கோபம் குமுறிக் கொண்டிருந்தது உள்ளுக்குள். ஆனால் அதைக் காட்டிக்கொள்ளவில்லை. செஞ்சித் தூதனின் தோளில் அன்புடன் தட்டினார். 'கிழவரின் பேச்சைப் பொருட்படுத்தாதீர்கள். '

'எந்தக் கிழவரின் பேச்சை, சீறினான் செஞ்சிக்காரன். சிரித்து மழுப்பினார் பெரிய பெத்து. 'என் நரை, இளமைக்கு அடையாளம். புதியதையும் பெரியதையும் அடையாளம் கண்டு வரவேற்கும் இளமை உள்ளம் என்னுடையது. ரகுநாதரைப் போல நான் உதறப் போவதில்லை உங்கள் உறவை."

'நீங்கள் என்ன செய்ய முடியும்?' சந்தேகம் மின்னியது அவன் கேள்வியிலும் பார்வையிலும். 'அவர் வைத்ததுதானே இங்கே சட்டமாம்?"

"சட்டம்தான்! ஆனால் வெறும் சிலந்திவலைச் சட்டம்!" அட்டகாசமாகச் சிரித்தார் பெரியபெத்து. 'போனால் போகிறா ரென்று அவரை விட்டு வைத்திருக்கிறேன்' பட்டென்று கையைத் தட்டினார். 'யாரடா அங்கே?'

அரண்மனைச் சேவகர் இருவர் ஓடி வந்தார்கள். "வசந்த மண்டபத்தையடுத்த அறைகளைத் தயார் செய், ' சேவகர்களின் தலை மறைந்ததும் சொன்னார்: 'இன்று இங்கேயே தங்கியிருங்கள். நாளைக் காலை ஊருக்குச் செல்லலாம்... நல்ல சேதியுடன். '

செஞ்சித் தூதன் அவநம்பிக்கையுடன் பெரியபெத்துவைப் பார்த்தான்.

'என்னை நம்புங்கள்' என்றார் பெரியபெத்து. 'தாங்கள் எந்த அரசியின் கரத்தைக் கோரி வந்திருக்கிறீர்களோ, அவருடைய தந்தை நான். திருமண விஷயத்தில் நான் செய்வது தான்

முடிவானது. ரகுநாதருக்கு எவ்விதச் சம்பந்தமும் இல்லை. அதிகாரமும் கிடையாது. வாருங்கள். '

செஞ்சித் தூதனையும், அவனைச் சேர்ந்தவர்களையும் வசந்த மண்டபத்துக்கு அழைத்துச் சென்றார், அந்தச் சென்னை பட்டணத்து வர்த்தகர். வசதிகள் செய்து தந்தார். விடை பெற்றார்.

"அப்பா!' குரலொன்று அழைத்தது பூங்காவனத்தினருகே. மல்லிகைப் பந்தலின் கீழ் நின்றிருந்தவள் தெய்வநாயகி தான்.

பெருமூச்சு வெளிப்பட்டது பெரியபெத்துவிடமிருந்து. மகளின் வதனத்தில் மாறாமலிருக்கும் பொலிவு எங்கே ஒளிந்தது? தன்னம்பிக்கையும் துணிச்சலும் நிறைந்த அவள் தோற்றம், தளர்ச்சியில் தோய்ந்து தோல்வியிலே ஊறிக் கொண்டிருக்கிறதே!

மகளின் தலையை வருடிக் கொடுத்தார் பெரியபெத்து. 'தெய்வநாயகி, இப்படி நீ உற்சாகமற்று இருக்கலாமா? இந்த நாட்டின் அரசியல்லவா நீ வைர முடி வைத்த வீர சிம்மாதனத்தில் நீ வீற்றிருக்கிறாய் மகளே மறவாதே!'

கசப்புடன் புன்னகைத்தாள் தெய்வநாயகி. 'முள் படுக்கையிலே அமர்ந்திருந்தால் இதைவிட மகிழ்ச்சியாயிருப்பேன் அப்பா. ஏன்தான் இந்தத் துன்பத்துக்கெல்லாம் அடி கோலினீர்களோ! உங்கள் உயிருக்கே உலை வைத்துவிடுவதாக அந்த ரகுநாதர் அச்சுறுத்தினார். அதனால்தான் உடன்பட்டேன். '

"என் உயிருக்கா? உலையா!' ஒரு வினாடி தன் நாடகத்தை மறந்து விட்டார் பெரியபெத்து.

"ஆமாமப்பா. நான் அரியணையை உதறிச் சென்றால் ஆபத்து உங்களுக்குத்தானே! அதற்காகத்தான் பொறுத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் நாளுக்கு நாள் இந்த நரகத்திலே வேதனைகள் அதிகரித்து வருகின்றன...'

"இன்னும் கொஞ்ச நாள்தான். பொறு" என்றார் பெரிய பெத்து. மீசையைச் சுண்டிவிட்டன அவர் விரல்கள்.

"நான் சொல்லும் யோசனையை கேட்கிறீர்களா?' தெய்வநாயகி ஆவலுடன், கவலையுடன் சொன்னாள்: "அந்தக் காஞ்சிபுரத்தானைத் தேடிப் பிடியுங்கள். ரகுநாதரின் கொட்டத்தை அடக்க அவன் ஒருவனுக்குத்தான் தெரியும்.'

"என்னைக் கையாலாகாதவனென்று தள்ளிவிட்டாய்?"

"அப்படியல்ல. அஞ்சா நெஞ்சம் படைத்த வீரனானாலும் கவசம் அணிவது தவறாகாதே? அதேபோல்தான், துணைக்கு ஒருவனை அழைத்துக் கொள்ளலாமே என்கிறேன். அல்லது..." தெய்வநாயகியின் புருவங்கள் அழகுற வளைந்தன. 'ஒன்று செய்யலாமா?"

‘'என்ன? ' சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டாள் சென்னையின் செல்வி. அவள் கண்களில் ஒரு கனிவு. இதழ்களில் ஒரு நெகிழ்ச்சி. குரலில் ஒரு நாணம். 'அப்பா ரகசியமாக ஓர் ஆளைச் சென்னைப் பட்டணத்துக்கு அனுப்புங்கள். '

'அனுப்பி?'

'கும்பினி கவர்னருக்குச் செய்தி தெரிவியுங்கள். வேண்டிக் கொள்ளுங்கள் நமக்குத் துணையாக இருக்க அவரை... அவரை... "

'எவரையம்மா?"

'சிவசிதம்பரத்தைத்தான்...'

'சிவசிதம்பரம்' பேயறைந்த முகம் போல் பெரிய பெத்துவின் முகம் வெளிறியது.

"ஏனப்பா, அவர் வரமாட்டாரென்றா எண்ணுகிறீர்கள்? முன்பு நாம் அவரை அலட்சியம் செய்ததை மன்னிக்கும்படி கேளுங்கள். பெருந்தன்மையுடன் மன்னிப்பார்...'

'அதற்கில்லை... அவன்... அவன்... ' திணறினார் பெரியபெத்து.

'நீங்கள் நினைக்கிறபடி அவர் கோழையல்ல, அப்பா. நான்கூட அப்படித்தான் நினைத்திருந்தேன். அதெல்லாம் தவறு. பெரும் பெரும் தீரச் செயல்களைத் திட்டமிட்டுச் செய்யும் துணிச்சல்காரரர் அவர். நாம் அழைத்தால் கட்டாயம் வருவார்...'

'வருவானம்மா, வருவான், ' பெரியபெத்துவின் பாறை நெஞ்சில் கூடத் துளி ஈரம் மினுமினுத்தது. எப்படிச் சொல்வார் அந்தச் சோகக் கதையை? எப்படித் தகர்ப்பார் மகளின் நம்பிக்கைகளை, அந்த இடிபோன்ற செய்தியினால்? சிவசிதம்பரத்தின் தீரமும் துணிச்சலும் அவன் வாழ்வையே பயங்கரமாய்ப் பறித்துவிட்டது என்று எப்படிச் சொல்லுவார்? அந்த முடிவுக்குத் தானும் ஒரு கைக்கூலியாகப் பரங்கியினால் பயன்படுத்தப்பட்ட அவமானத் தகவலை எப்படி வெளியிடுவார்? தடுமாற்றத்திலிருந்து அவரைக் காக்கவே வந்தது போல்,

'மன்னிக்க வேண்டும். தந்தையும் மகளும் தனிமையில் இருக்கும் போது குறுக்கிட்டுவிட்டேன்,'

ரகுநாதரின் வஞ்சகப் புன்னகை, விஷப் பூவைப் போல் மலர்ந்தது. 'தாராளமாகப் பேசுங்கள். உங்களுக்குள் எவ்வளவோ இருக்கும்.'

கனலுமிழ்ந்தாள் தெய்வநாயகி. "சதி செய்யும் பழக்கம் எங்கள் பரம்பரைக்குக் கிடையாது.'

'ஓ, அரசியார் கோபமாயிருக்கிறார் போலிருக்கிறது. '

'அரை நொடியில் வீசியெறிந்து விடுவேன், உங்கள் அரசிப் பட்டத்தை. சந்தர்ப்பத்துக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன்", புயல்போல் போய்விட்டாள் பாவை.

ரகுநாதர் சிரித்தார். "தந்தைக்கு மகள் சளைத்தவளல்ல. '

'மன்னிக்க வேண்டும். யாருடனும் உரையாடுகிற மன நிலையில் நான் இல்லை, முணுமுணுத்தார் பெரியபெத்து.

'பெரிய பெத்து அவர்களே! சென்னை வர்த்தகரின் கரத்தைப் பரிவுடன் பற்றினார் ரகுநாதர். "தாங்கள் அரசாங்க விஷயங்களில் அதிக அனுபவம் பெறாதவர், செஞ்சிக்காரனின் தொடர்பினால் கிட்டும் சுகங்களை மட்டுமே நீங்கள் காணுகிறீர்கள். எனக்கோ அதிலுள்ள அபாயங்களும் தெரிகின்றன.'

'உதாரணமாக?'

'செஞ்சி மன்னன், ஏதோ தற்செயலாக, தற்காலிகமாக ஜுல்பிகர்கானை விரட்டியடித்திருக்கிறான். அந்த வெற்றி நிரந்தரமானதல்ல. இன்றைக்குக் காஷ்மீர் முதல் கன்யாகுமரி வரையில் எந்தக் கொடி பறக்கிறது தெரியுமா? பாதுஷா ஔரங்கசீப்பின் கொடிதான்! அதன் பகைமையைத் தேடிக் கொண்டவன் பிழைத்து வாழ்வதாகக் கடந்த அரை நூற்றாண்டுச் சரித்திரம் கூறவில்லை. செஞ்சிப் பைத்தியக்காரன் ஆபத்தில் சரிந்து கொண்டிருக்கிறானென்றால், நாமுமா சேருவது அவனுடன்?"

'ஒகோகோ அப்படிச் செல்கிறதா தங்கள் சீரிய சிந்தனை!" கேலியான மரியாதையை வெளிப்படுத்தியது பெரியபெத்துவின் குரல். 'நான் வேறுவிதமாகப் பொருள் கொண்டேன். '

'எப்படி? '

'செஞ்சியும் சிங்காவரமும் சேர்ந்துவிட்டால் தங்களுடைய கை கொஞ்சம் வலுவிழக்கலாமல்லவா? அதனால் தடுக்கிறீர்கள் என்று நினைத்தேன். ' -

பலவீனமான இடத்தில் குத்திவிட்டோம் என்ற திருப்தி உடனே கிட்டியது பெரியபெத்துவுக்கு. ரகுநாதரின் உடல் முழுவதுமே ஜொலித்தது கோபத்தால். 'நண்பரே, நாடகம் சில சமயம் நிஜமாகவும் நடந்து விடுவதும் உண்டு."

'அதாவது ?"

'அதாவது, உயிருக்கு ஆபத்தான நிலையில் - என் மிரட்டலின் கீழ் வாழ்வதாக - உங்கள் மகளுக்கெதிரில் நடித்துக் கொண்டிருக்கிறீர்கள் அல்லவா? அது மெய்யானதாகிவிடக் கூடும். தந்தை, மகள் இருவரையும் அரண்மனையிலேயே சிறை வைப்பேன். வருடம் ஆயிரமானாலும் வெளியே ஓர் ஈ எறும்புக்குச் சேதி போகாது. வேண்டாம் அத்தனை கண்டிப்பு என்று பார்க்கிறேன்.'

அந்த மிரட்டலுக்குப் பெரியபெத்து தலை தாழ்த்தவில்லை. 'நாளைக் காலை வரையில் உங்கள் ஆசை தீர ஆர்ப்பாட்டம் செய்யுங்கள்!' என்று சிரித்தார்.

'நாளைக் காலைக்குப் பிறகு?'

'செஞ்சித் தூதனிடம் என் சம்மதத்தைச் சொல்லியனுப்பி விடப் போகிறேன். '

'வந்திருந்தானே, அவனிடமா?"

'அவனிடமேதான். நீங்கள் சொன்னபடி அவர்களை வெளியேற்றவில்லை. நான் வசந்த மண்டபத்தில் தங்க வைத்திருக்கிறேன். '

'அப்படியா வாருங்களேன், போய்ப் பார்க்கலாம்,' வசந்த மண்டபத்தை நோக்கி நடந்தார் ரகுநாதர்.

அவர் குரலில் தென்பட்ட கேலி பெரியபெத்துவைப் பின்தொடர வைத்தது.

வசந்த மண்டபத்தின் கதவுகள் விசாலமாகத் திறந்து கிடந்தன. காக்கை குருவி கூடக் காணோம் உள்ளே?

## (37)

வசந்த மண்டபம் வெறிச்சோடியிருந்ததைக் கண்டதும்'என்ன... செஞ்சியிலிருந்து வந்தவர்கள் என்ன ஆனார்கள்?' பெரியபெத்துவின் சிறிய கண்கள் தெறித்தன.

'மானமுள்ளவர்கள். ஆகவே ஊருக்குத் திரும்பி விட்டார்கள்,' என்றார் ரகுநாதர் அமைதியாக.

'அவர்களிடம் என்ன சொன்னீர்கள்?' பெரியபெத்து ஆத்திரத்துடன் கொதித்தார்.

'நானா? என்ன சொன்னேன்? ஒன்றுமில்லையே. அவர்களைத் தாங்கள் தங்க வைத்திருப்பது தெரிய வந்தது. உடனே இங்கே வந்தேன். சமையல்காரர்களை வரவழைத்தேன். விருந் தினர்களின் எதிரிலேயே, என்னென்ன அறுசுவை உண்டிகள் தயாரிக்கவேண்டும் என்று கட்டளை பிறப்பித்தேன். பிறகு ஒரே ஒரு கேள்வி கேட்டேன் அந்தத் தூதனிடம்.'

'என்ன கேள்வி?"

'சின்னக் கேள்விதான். எங்கள் ஊரில் சமையலிலும் சாப்பாட்டிலும் உப்புச் சேர்த்துக் கொள்வதுண்டு. செஞ்சியில் எப்படியோ

தெரியவில்லை. சேர்க்கச் சொல்லட்டுமா? வேண்டாமா என்றுதான் கேட்டேன். மூட்டையைக் கட்டிக் கொண்டு போய்விட்டார்கள்!'

'ரகுநாதரே!" அவர் தோளைப் பிடித்து உலுக்கினார் பெரியபெத்து. 'நீர் செய்திருப்பது எப்படிப்பட்ட முட்டாள்தனம் தெரியுமா? ராஜ தூதன், ராஜனுக்கே சமானம். நாகரிகமுள்ள எந்த அரசாங்கமும் அவனுக்கு உரிய மதிப்பைத் தந்தாக வேண்டும். இல்லாவிட்டால், அது பேய்கள் ஆட்சி செய்யும் நாடாக்கும்!"

அலட்சியமாகச் சிரித்தார் ரகுநாதர். வெறுப்புடன் தரையைக் காலால் உதைத்தார் பெரிய பெத்து.

இடம்: செஞ்சி அரண்மனை. ராஜகிரியின் உச்சியிலிருந்த மண்டபம்.

அஷ்டப் பிரதானிகளில் எழுவர் அங்கே கூடியிருந்தனர். சத்ரபதி ராஜாராம் அரியணையில் வீற்றிருந்தான்.

பேஷ்வா நீல மொரேஷ்வர் பின்புறம் கைகட்டிய வண்ணம் பேசினார்: 'எனக்கென்னவோ இந்தச் சம்பந்தத்தில் விருப்பமில்லை. யாரையும் கேளாமல், யாருக்கும் தெரியாமல் தூதரை அனுப்பியிருக்க வேண்டாம் மன்னர். நம் அந்தஸ்தென்ன, பரம்பரையென்ன, ஒரு குட்டி ராஜ்யத்திடம் போய்ப் பெண் கேட்பதா?"

அயல் நாட்டு அமைச்சரான மாதாஜி சுதாதர் குறுக்கிட்டார்: 'நமது அரசு வேர் ஊன்றியிருப்பதெல்லாம் மராட்டிய பூமியில். இளவரசருக்குப் பெண் எடுப்பதென்றால் அங்கேயே கிடைக்குமே!'

'எல்லோரும் பேசியாயிற்றா!' கையமர்த்தினான் ராஜாராம். 'துரதிருஷ்டவசமாக நமது பிரதம நீதிபதி இங்கே இல்லை. அவர்தான் எனக்கு அடிக்கடி சொல்வார், சிங்காவரம் அரசி தாமரையின் குணநலன்கள் பற்றி...'

‘‘தாமரையா!' பேஷ்வா கடகடவென்று நகைத்தார். 'சத்ரபதி அறிந்தது அவ்வளவுதானா தாமரையின் ஆட்சியைக் கவிழ்த்துவிட்டார் ரகுநாதர். வேறொரு சென்னைப் பட்டணத்துச் சாதாரணப் பெண்ணைப் பொம்மையாக்கி வைத்திருக்கிறார்களாம்! ஒற்றர்கள் வந்து சொன்னார்கள். அவ்விடத்தில் முன்பே தெரிந்திருக்குமென்று நினைத்தேன்."

'தெரியாதே எனக்கு" கையைப் பிசைந்து கொண்டு எழுந்தான் ராஜாராம். "தெரிந்திருந்தால் இளவரசனை அனுப்பியிருக்க மாட்டேனே!"

'இளவரசனா!' ஏழு ஆலோசகர்களும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள். 'தங்கள் குமாரரையா அனுப்பினர்கள் தூதனாக?'

'ஆமாம்... அந்த அரசிளங்குமரியை நேரில் பார்க்க ஆசைப்பட்டான். 'என் மகனென்று சொல்லிக் கொள்ள வேண்டாம். வெறும் தூதன் என்று கூறிக்கொண்டு போய்ப் பார், என்று அனுப்பினேன்...'

'தவறு மன்னரே, பெரும் தவறு!' பேஷ்வாவின் பேச்சைக் குதிரைகளின் குளம்படியோசை வெட்டியது.

ஆவேசத்துடன் உள்ளே நுழைந்தான் ராஜாராமின் மைந்தன்.

'அவமானம்! அவமானம்' துணைவர்கள் புடைசூழ, கூவிக்கொண்டே வந்தான் அவன். ஆத்திரம் நிறைந்த கண்கள். சிலுப்பி நிற்கும் கை. புழுதியில் தோய்ந்த கால்கள். பிசைந்து கொள்ளும் கைகள். விம்மும் தோள்கள். குரலிலே வெப்பம். "தந்தையே! அவுடப்பிரதானி அமைச்சர்களே! ஒரு சுண்டைக் காய் சிங்காவரத்துக்கு என்ன திமிர் பாருங்கள்! அன்னை பவானி காத்து, வீர சிவாஜி வளர்த்த தீர மராட்டிய ராஜ்யத்தை ஏளனப்படுத்தத்

துணிந்துவிட்டது! பொறுப்பதா தந்தையே? அனுமதிக்கலாமா, பெரியோர்களே?"

பேசிக்கொண்டே இருந்தவனுக்குத் திகைப்பு, நிறுத்திக் கொண்டான். ஏன் இவர்களிடத்திலும் பதற்றம்? அஷ்டப் பிரதானிகள் அமைதிக்குப் பெயர் பெற்றவர்களாயிற்றே? சேதியைச் சொல்லு முன்பே அவர்கள் முகம் சிவந்து விளங்குவது ஏன்? - அவன் ஐயத்தைப் போக்கியவர் பேஷ்வா நீல மொரேஷ்வர் தான். 'உங்களை அனுப்பியிருக்கக் கூடாது என்றுதான் நாங்களும் பேசிக் கொண்டிருந்தோம், இளவரசரே உட்கார்ந்து விவரியுங்கள் என்ன நடந்ததென்று. '

'உட்காரவும் விளக்கவும் உகந்த வேளை இதுவல்ல, பெரியவரே வயதுக்கேற்ற படபடப்பைக் காட்டியது அந்த வாலிபச் சிங்கம். 'உப்பைக் கண்டதுண்டா என்று என்னைப் பார்த்துக் கேட்டுவிட்டான் ஒரு கிழவன். அவனைக் கூட்டத் தோடு கொன்று, தலைகளை வெட்டி உப்புக் கண்டமாகப் போட்டுக் காட்டினால்தான் என் மனம் ஆறும். நம் மானம் தங்கும். ' *

'அப்படியா சொன்னான்?" அஷ்டப் பிரதானிகள் ஒவ்வொருவரின் கரமும் விரைந்தது உடைவாளிடம். அதிகம் கொதித்தவர் மாதாஜி சுதாதர்தான். 'சின்னவன் அந்தச் சிங்காவரத்தான். என்ன விதத்திலும் நமக்கு இணை நிற்கத் தகுதி பெறாதவன் என்று இப்போதுதான் உங்கள் தந்தையிடம் சொல்லிக் கொண்டிருந்தோம். நம்ப மறுத்தவருக்கு நிரூபித்துக் காட்டிவிட்டான் நீசன்'

கோபத்துடன் நகைத்தார் பேஷ்வா. "ஜூல்பிகர்கானைப் புரட்டியெடுத்த மண் வீண் போகிறதல்லவா? புரளும் முறை இப்போது சிங்காவரத்தானுக்கு, போலும்!"

'என்ன யோசனை கூறுகிறீர்கள் எல்லோரும்?' தயக்கத்துடன் கேட்டான் சத்ரபதி.

'யோசனை அல்ல, அரசே! திட்டம்' என்று பேஷ்வா முழங்க, "திட்டமல்ல, செயல்' என்று அயல்நாட்டு அமைச்சர் திருத்தம் கொடுக்க, இளவரசனோ, 'இப்போதே இன்றே!' என்று சூளுரைத்தான்.

'தினவெடுத்த தோள்களுக்குத் தீனி கிடைத்தது!" என்று அங்கீகாரம் அளித்தான் ராஜாராம். 'சிங்காவரத்தைப் பணிய வைக்க, சின்னஞ் சிறு படை போதும். புறப்படட்டும் இன்றைக்கே! ஆனால்...'

'ஆனால்?' எட்டுக்குரல்கள் எதிரொலித்தன. 'அரிய உதவி ஆற்றினானே நண்பன் காஞ்சிபுரத்தான். அவன் தலைமையில் சிங்காவரத்தின் படைகள் வருமானால் நமக்கு...'

'கவலை வேண்டாம், அரசே!' என்றார் பேஷ்வா. 'முன்னாள் அரசி தாமரையின் வலது கையாகத் திகழ்ந்தவன் அந்தக் காஞ்சிபுரத்தான். ரகுநாதரா அவனை விட்டுவைப்பார்!"

"என்ன! நமது ஆருயிர்த் தோழனையா கொலை செய்து விட்டார்!"

'இல்லை. ஆனால் இறந்திருந்தாலே நன்றாயிருந்திருக்கும் அந்த அளவுக்குச் செல்லாக் காசாக்கிவிட்டார் அவனை. காஞ்சிபுரத்தான் இருக்குமிடமே தெரியவில்லை தற்சமயம். '

'அப்படியானால் விடக்கூடாது. நம்மை அவமதித்ததைக் கூட மன்னிக்கலாம். நம் நண்பனை அவமதித்ததற்கு மன்னிப்பே கிடையாது. கோட்டையைத் தகர்த்துக் கொண்டு அரண்மனையை நோக்கி முன்னேறட்டும் நமது படை. பீரங்கி வைத்துப் பிளக்கட்டும். அக்கிரமக்காரனொருவன் வாழ்ந்த அரண்மனை இங்கேதான் இருந்தது என்று புல் பூண்டைக் காட்ட வேண்டும், நமது பிற்காலத்துச் சந்ததிகள் தீர்த்து விடுவோம் கூண்டோடு அந்தத் தீயவனை'

வயோதிக உருவமொன்று தயங்கி எழுந்தது. நிதியமைச்சரின் குரல் பலவீனமாகக் கேட்டது. "எதிரியை முறியடிக்க வேண்டியதுதான். ஆனால் அரண்மனையைச் சேர்ந்த நிரபராதிகள் என்ன பாவம் செய்தார்கள்? மேலும், சிங்காவரம் அரண்மனையை ஒட்டி ஒரு பெரிய பாதாளச் சிறை இருப்பதாகக் கேள்வி. அங்கெல்லாம் எவ்வளவோ நல்லவர்கள்...'

'அமைச்சருக்கு மிகுந்த கருணையுள்ளம்தான்!'' கேலியுடன் சிரித்தான் சத்ரபதி ராஜாராம். 'இந்தப் போரினால் நமது நிதி நிலைமை எத்தனை பாதிக்கப்படும் என்று தாங்கள் காரணம் காட்டினால் ஒப்புக் கொள்ளும்படி இருக்கும். ஆனால் பாவ - புண்ணியம், நல்லவர் - தீயவர் முதலிய வற்றைப் பேசுவது...'

"அவருடன் ஏன் விவாதம்?' என்று குறுக்கிட்டார் நீல மொரேஷ்வர். 'தளபதி அடுத்ததைக் கவனிக்கச் சொல்லலாமல்லவா? '

"ஆமாம், இப்போதே புறப்படுங்கள்!' என்ற கட்டளை பிறந்தது ராஜாராமிடமிருந்து.

ஒடித்த கொவ்வைப் பழமா? உதிர்ந்த ரத்தத் துளியா? செக்கர் வானத்திலிருந்து சிதறி விழுந்த துண்டா?

இம்மி இம்மியாக, இழை இழையாக, நால்வரையும் நோக்கி நகர்ந்து வந்து கொண்டிருந்தன தீயில் குளித்து வந்த இரும்புக் கோல்கள். மந்திரத்துக்குக் கட்டுண்ட நாகம் போல் அவர்கள் நகராமல் நின்றனர். தாமரையின் நடுங்கும் கரங்களைக் காஞ்சிபுரத்தான் பிடித்துக் கொண்டான், 'அசையாதே, தாமரை. இதுபோல் ஆயிரம் பார்த்துவிட்டோம்!' என்றான்.

சிறைக் காவலன் சிரித்தான். 'இது ஆயிரத்தொன்று. ஆனால் கடைசி. ஆயிரத்திரண்டு இருக்காது, பார்!"

நெருப்பின் முனைகள் முதலில் காஞ்சிபுரத்தானின் கண்களைத்தான் நெருங்கின. "ஐயோ! வேண்டாம்! வேண்டாம்!" கத்தினாள் தாமரை. சென்னம்மாவும் கிருஷ்ணப்பரும் தலையைத் திருப்பிக்கொண்டார்கள், தாள முடியாது அக் காட்சியை என்பதால்.

'மச்சான்! ஓ மச்சான்' கிட்டத்தட்ட இமைகளைத் தொட்டுவிட்ட வேளையில் மீண்டும் கேட்டது.

'ஓ மச்சான் சாப்பாடு எடுத்து வந்திருக்கிறேன்! வாரியா இல்லையா?"

நீண்ட கரங்கள் தாழ்ந்தன. சிறைக் காவலனின் முகத்தில் கடும் சினம். 'மச்சானுமாயிற்று, மண்ணுமாயிற்று! இப்ப எனக்கு ஒன்றும் வேண்டாம், எடுத்துப் போ, என் வேலையைக் கெடுக்காமல்!"

'அட என் ராசாத்தி மகனே! அப்படியென்ன வேலை உனக்கு? கால் கொலுசு கலகலவென்று சப்தித்தது. படிகளில் இறங்கி வந்தாள், சூட்டுக் கோல் பிடித்தவனின் பத்தினி.

உள்ளேயிருந்த நிலைமையையும் மனிதர்களையும் கண்டாளோ இல்லையோ...

'மச்சான் என்ன வேலை பண்ணவிருந்தீர்கள்?' என்று பாய்ந்தாள். பறித்தாள் சூட்டுக் கோல்கள் இரண்டையும், எறிந்தாள் வீசி. நெருப்பிலிருந்து வந்த கோல்கள் நெருப்பிலேயே மறைந்தன. 'மன்னிச்சிடுங்க, தாயே! மன்னிச்சிடுங்க மகாராசா!' என்று தாமரையின் முன்னாலும், கிருஷ்ணப்பரின் முன்னாலும் விழுந்து வணங்கி எழுந்தாள்.

சிறைக் காவலன் இழுத்துத் தள்ளினான் அவளை. 'ஏய்! என்ன, கொஞ்ச இடம் கொடுத்தால் என் தலையே பறிபோக வழி பண்ணுகிறாய்? ராஜாங்க வேலைக்குக்கூட உன்னிடம் அனுமதி வாங்க வேண்டுமென்கிறாயா?"

'இதுவா ராஜாங்க வேலை? இதுதான் ராஜத்துரோகம், மச்சான் ஐயோ! இந்தத் தேசத்தின் ராணியைப் போய் விலங்கு மாட்டிக் கொடுமைப்படுத்துகிறாயே! உன்னைக் கேட்பார் இல்லையா?"

'சீ, வாயை மூடு! இவங்கெல்லாம் பதவி போய் நிற்கிற பராரிங்க நம்ம அரசி தெய்வநாயகிதான். அவங்க உத்தரவிட்டதாகப் பெரிய மகாராஜா ரகுநாதர் எனக்குச் சொன்னார்."

'என்ன உத்தரவு?'

'இவர்கள் கண்ணைப் பறிக்கும்படிதான்!'

'பொய்! பொய்' வந்தவள் கூறினாள் தொண்டை கிழிய. 'அந்த ரகுநாதர் என்னென்னவோ சூழ்ச்சி பண்ணியிருக்கிறார். ராணியேதான் இவர்களையெல்லாம் காணோம் என்று சொல்லி அழுதார்களாம் ஒரு சேடியிடம். அந்தப் பெண் என்னண்டை சொல்லிற்று!"

'இப்படிக் கதைகள் கட்டி விடறதிலே நீ எனக்கு மேல் கெட்டிக்காரிதான். அதே போல நம்பாமல் இருக்கிற நான் என்னைக்குமே புத்திசாலிதான்!'' சிரித்தவாறு தீக்கோல்களை எடுத்து வரத் திரும்பினான் சிறைக் காவலன்.

குறுக்கே சென்று கைவிரித்து மறித்தாள் அவன் மனைவி. 'மச்சான்! நான் சொன்னதெல்லாம் சத்தியம். இதோ, இதன் மேல் ஆணை' தாலியைத் தொட்டுச் சத்தியம் செய்தாள் அவள். 'உனக்குச் சந்தேகமானால் புது ராணியையே நேரில் கேள்!'

"அப்படிச் சொல்லு! வா, போகலாம்.'

'ஓ' உற்சாகமாக அவன் கையைப் பற்றவிருந்தவள், 'ஒரு நாள் பொறு, ' என்றாள்.

"ஏன்?"

'இன்றைக்குக் கௌரி விரதமாம். யாருடனும் ராணி பேசவோ, பார்க்கவோ மாட்டார்களாம். யாரும் அந்தப்புரத்துக்கு வரவேண்டாமென்று சொல்லியிருக்கிறாங்க!'

'இது இரண்டாவது கதையா?"

'ஒரே ஒரு நாள் பொறுத்துத்தான் பாரேன். தெரிகிறது தன்னாலே!' விடாமல் மன்றாடினாள் அந்த நல்லவள்.

'எப்படியோ தொலை, வெறுப்புடன் முண்டாசை அவிழ்த்து உதறிவிட்டு அவன் சோறுண்ணச் சென்றான்.

அவன் பெண்சாதியும் விடை பெற்றாள். 'மெய் தானம்மா நான் சொன்னது. உங்களையெல்லாம் பார்க்கணுமென்றுதான் தெய்வநாயகி அம்மா துடிக்கிறாங்க. நாளைக்கு உங்கள் கஷ்டம் விடிந்துவிடும் பாருங்க.."

கீழ் வானம் வெள்ளென்றது. பறித்தெறிந்த தாமரைக் கொடிபோல் நின்ற நிலையிலேயே துவண்டு கொண்டிருந்தாள் தாமரை.

வெளியே காலடியோசை. காவலிருந்த வீரர்கள் நிமிர்ந்து நின்றனர்.

தடதடவென்று உள்ளே நுழைந்தான் சிறைக் காவலன். கையைப் பிசைந்துகொண்டு பின்னாலேயே வந்தாள் அவன் மனைவி.

'போதுமா? புத்தி வந்ததா? இனியாச்சும் என் வேலையிலே குறுக்கிடமாட்டாயே?' வெடித்துக் கொண்டே உலைக் கூடத்துக்குத் திரும்பினான். தீ மூட்டத் தொடங்கினான்.

என்ன மறுபடியும் அந்த இரும்புக் கோல்களையே எடுக்கிறானே!

கண்ணிரும் கம்பலையுமாக அவர்களிடம் வந்தாள் அந்த நல்லவள். 'அந்தப் பாவி ரகுநாதர் வழியை மறித்து விட்டார். தெய்வநாயகியம்மாவை...'

"சீ நாக்கிலே சூடு போடுவேன் ராணி என்று சொல்லு' தீயை மூட்டிக் கொண்டிருந்தவன் தீயை உமிழ்ந்தான்.

அவள் தொடர்ந்தாள்: "அவங்களைப் பார்க்கவே விட மாட்டேனென்று சொல்லிவிட்டான் பாவி! இன்னுமா என் கட்டளையை நிறைவேற்றவில்லை? போய், சூட்டுக்கோல் தயார் செய்! நானே வருகிறேன்!" என்று உறுமினார் பாருங்க. ஓடியே வந்திட்டோம்... ' அவள் நடுநடுங்கும் கையைக் குவித்துக் கொண்டே காஞ்சிபுரத்தானை அணுகினாள்.

"பரவாயில்லை, சகோதரி. உன்னால் முடிந்ததைச் செய்து விட்டாய்", தேறுதல் சொன்னான் காஞ்சிபுரத்தான்.

'ஏய் விலகி நில்! பெரிய மகாராஜா வருகிற சமயம்!" என்று கூச்சலிட்டான் சிறைக் காவலன்.

'ஹூம் என்னைப் பெற்றெடுத்த தந்தையே வருகிறாரா வரட்டும், வரட்டும்!'' அடிபட்ட வேங்கையாகத் திமிறினாள் சென்னம்மா.

திடீரென்று, சிறை வாசலிலிருந்து ஒரு குரல் 'ஆபத்து! ஆபத்து! நாட்டுக்கே ஆபத்து வாருங்கள் எல்லோரும் வீரர்கள், காவலர்கள் எல்லோரும் வாருங்கள்!" சிறைக் காவலன் உள்பட அனைவரும் பதறியோடினார்கள் வெளியே.

‘‘தாமரை சீக்கிரம் இதுதான் சந்தர்ப்பம்! இப்படிக் குனி! வாயைக் காட்டு!"

திகைத்துப் பார்த்தவர்கள். காஞ்சிபுரத்தானின் பிரித்த உள்ளங்கையைக் கண்டு பிரமித்தார்கள்.

ஒரு திறவுகோல்.

'அந்த நல்லவள், சாமர்த்தியமாக என் கையில் கொடுத்து விட்டுப் போனாள். தாமரை இதை உன் பல்லினால் பற்றி முதலில் என் கை விலங்கின் பூட்டைத் திற சீக்கிரம்'

அரை நினைவில் இருந்த தாமரைக்கு முழுச் சுறுசுறுப்பு ஏற்பட்டது. பல்லில் திறவுகோலைக் கடித்துப் பிடித்தாள்.

'சீக்கிரம் சீக்கிரம் அவர்கள் திரும்பி வந்துவிடுவார்கள்!" கையை அவளிடம் திருப்ப அரும்பாடு பட்டான் காஞ்சிபுரத் தான்.

வினாடியா அல்ல, அல்ல. பல யுகங்கள். கிளிக் திறந்துகொண்டது பூட்டு. விடுபட்டது காளையின் கரம். விடுவித்தான் காதல் கன்னியை.

பின்னர் சொன்னான், கிருஷ்ணப்பரின் தளைகளைத் திறந்த படி, 'அந்தப் பெண் என்னவோ ரகசியமாகக் கொடுத்து விட்டுப் போய்விட்டாள். இவர்களையோ சில வினாடிகளாவது வெளியேற்ற வேண்டும். அதற்காகத்தான் இந்தத் தந்திரம் செய்தேன்'

சென்னம்மாவின் நெற்றியில் முடிச்சு. 'தந்திரமா! நாட்டுக்கே ஆபத்து!" என்று வெளியிலிருந்தல்லவா கூச்சல் கேட்டது?"

'அந்தக் கூச்சல் இங்கிருந்து கிளம்பியதுதான்!' என்று தன் குரல்வளையையே தொட்டுக் காட்டினான் காஞ்சிபுரத்தான். 'நம் குரலையே இன்னோரிடத்திலிருந்து வருவதுபோல் தொனிக்கச் செய்வது ஒரு தனிக்கலை. என் தோழனொருவனிடமிருந்து எப்போதோ கற்றது. இப்போது கை கொடுத்தது. வாருங்கள் போகலாம்! சீக்கிரம்'

வெளியே வந்தார்கள் நால்வரும். சிறைக் காவலர்களும், வீரர்களும் வெவ்வேறு திசைகளில் ஒடிக்கொண்டிருந்தார்கள். சிறையில் மட்டுமல்ல, அரண்மனையில், அரண்மனையில் மட்டுமல்ல, வீதிகளில்.

'என் ஒருவன் குரலினாலா இவ்வளவு அமளிகள், இருக்காதே! வியந்த காஞ்சிபுரத்தான், வீரனொருவனை நிறுத்தி விசாரித்தான்.

'யாரய்யா நீ தெரியாதா உனக்கு செஞ்சி மன்னன் ராஜாராம் கோட்டையை முற்றுகையிட்டிருக்கிறான்! யாராலும் தாக்குப் பிடிக்க முடியவில்லை!"

## (38)

"சொன்னேனே, கேட்டீர்களா?" என்றார் பெரியபெத்து. எத்தனை பதற்றம் அவர் தோற்றத்தில்! மீசை நுனிகளைச் சுண்டக்கூட மறந்துவிட்டன விரல்கள்!

'என்ன நீங்கள் சொன்னிர்கள், என்ன நான் கேட்காமல் போய்விட்டேன்!" எதிரிகளை விரட்ட வேண்டிய ரகுநாதர் நிதானத்தை விரட்டிக் கொண்டிருந்தார்.

"ராஜ தூதனை அவமதிக்க வேண்டாமென்று நான் எச்சரிக்கவில்லையா?’’

'சண்டைக்கு அலைகிறவன் அந்தச் செஞ்சிக்காரன். தூதனுக்கு ஆயிரம் உபசாரங்கள் செய்திருந்தோமானாலும் இதையேதான் செய்திருப்பான்,' என்றார் ரகுநாதர் எரிச்சலுடன். 'நீங்கள் எனக்குச் செய்யக்கூடிய உதவி ஒன்றே ஒன்றுதான் உண்டு. ’’

'என்ன? '

"ராஜாங்கத்தை நடத்திச் செல்லும் விஷயத்தில் தாங்கள் தலையிடாமல் ஒதுங்கியிருப்பதுதான்", ரகுநாதரின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்துக் கொண்டிருந்தன. "நாட்டுக்கு நெருக்கடி ஏற்படும்போது மிகப் பெரிய மூளைகள் ஒன்று சேர்ந்து செயலாற்றும். ஒதுங்கியிருக்கலாம் தாங்கள் கவலைப் படாமல். '

ரத்தக் காடாய் சிவந்துவிட்டது பெரியபெத்துவின் முகம். 'அரசியின் தந்தை என்ற முறையில் எனக்கும் சில உரிமைகள்

உண்டென்று நினைத்தேன்,' என்றதோடு நிறுத்திக் கொண்டு வெளியேறினார்.

ரகுநாதர் பல்லைக் கடித்தார்.

வெகுதொலைவில் பீரங்கி முழங்கும் ஓசை செவியில் மோதியது. எங்கோ ஒரு வீடு தீப்பற்றி எரிந்தது. அதன் புகை வளையங்கள் வானத்தில் வட்டமிடுவதைக் கண்டார். அரண்மனைக்கு வெளியே ஓடும் குதிரைகளின் புழுதியும் ஓலமிடும் மக்களின் கூக்குரலும் கலந்தன.

'யாரடா அங்கே?' கை தட்டினார். ஒரு சேவகன் எட்டிப் பார்த்தான்.

'குதிரைப் படைத் தலைவர் எங்கே? யானைப் படைத் தலைவர் எங்கே போனார்?' உறுமினார் ரகுநாதர்.

சேவகன் விவரமாகவே பதிலளித்தான்: "ஒருவர் மதுவின் போதையிலும் மற்றவர் தாசியின் மடியிலும் கிடக்கிறார் பிரபு. கஜானா அதிகாரி இன்று காலை அவசரமாக எங்கோ போய்க் கொண்டிருந்தார். பிறகு கண்ணில் படவேயில்லை. காலாட் படைத் தலைவரை வெகுநாட்களாகவே காணோம்!"

'சீ, சீ. நில்லாதே என் முன்னே' உள்ளங்கையில் குத்திக் கொண்டு வெடித்தார் ரகுநாதர். "துரோகிகள் துரோகிகள்! அரண்மனை உப்பைத் தின்றும் நன்றி கெட்ட நாய்கள்!'

“மன்னிக்க வேண்டும் பிரபு, ' குறுக்கிட்டான் சேவகன். 'இவர்களெல்லாம் அரண்மனை உப்பைத் தின்றவர்களல்ல. சமீபத்தில் தங்களால் நியமிக்கப்பட்ட சென்னைப் பட்டணத்தார்கள். பழைய தளபதிகள் சிறையில் இருக்கிறார்கள். தாங்கள் உத்தரவிட்டால்..'

"ஓ! அவர்களை விடுவிக்கச் சொல்லி எனக்கு நீ யோசனை சொல்கிறாயா ஓடடா நாயே!' கையை ஓங்கினார் ரகுநாதர். கடுகி மறைந்தான் சேவகன்.

சாளரத்தின் வழியே வெளியே பார்த்தார் சென்னம்மாவின் தந்தை.

தீக் கங்குகள் இங்குமங்கும் பறப்பதைக் காண முடிந்தது. அவர் உதடுகள் மடிந்தன. பிரிந்தன. புருவங்கள் நெரிந்தன. விரிந்தன. விழிகள் மேலேறின. இறங்கின. கள்ளத் தனமாக ஒருமுறை பார்த்துக் கொண்டார் சுற்றுமுற்றும். பின்னர்

குதிரை லாயத்தை நோக்கி நடந்தார் வேகமாக. பீரங்கி களின் ஒசையாலும் மனிதர்களின் சத்தத்தாலும் அமைதியற்றுத் திமிறிக் கொண்டிருந்தன அசுவங்கள். அவருடைய சொந்தக் குதிரையான நித்யகல்யாணி ஆர்வத்துடன் முகத்தைத் தூக்கிற்று. கனைத்து வரவேற்றது எஜமானரை.

அதைத் தட்டிக் கொடுத்தார் ரகுநாதர். மீண்டும் லாயத்துக்கு வெளியே பார்த்துக் கொண்டார். இகழ்ச்சி நகை அரும்பியது அவர் இதழில். லாயத்தின் காவல்காரன்கூட அல்லவா எங்கோ ஒடி ஒளிந்து விட்டான்!

நித்யகல்யாணிக்குச் சேணமிட்டார். கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டார். கொள் மூட்டைகளும் புல் கட்டுகளும் அடுக்கியிருந்த சரிவைத் தரதரவென்று தள்ளிவிட்டார். பூட்டி யிருந்த ஒரு கதவு தெரிந்தது. இடுப்பிலிருந்த சாவிக் கொத்தை எடுத்துப் பரபரப்புடன் திறந்தார். குதிரையும் ஆளும் நுழையக்கூடிய அளவுக்கு வழி புலப்பட்டது.

நுழையுமுன் ரகுநாதர் திரும்பி நோக்கினார் ஒரு முறை. பீரங்கி முழக்கம் கேட்டது. 'விசுவாசமுள்ள தளபதிகளும் இரண்டொரு பேர் இருக்கிறார்கள். தாக்குப் பிடிப்பார்கள், நான் திரும்பும் வரையில்' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டார்.

விஷத்தை இழந்துவிட்ட பாம்பு எப்படிக் காட்சி தரும்? பல் பிடுங்கப்பட்ட முதலை, நகம் பறிக்கப்பட்ட வேங்கைஇவை எப்படித் தோற்றம் அளிக்கும்?

தோல்வியைத் தழுவியிருந்த ஜுல்பிகர்கானைப் பார்த்திருந்தால் தெரியும்.

வேப்பேரி கிராமத்தினருகே கூடாரமிட்டிருந்தான் ஔரங்கசீப் சக்கரவர்த்தியின் தளபதி. குறுந்தாடி இருந்தது, கம்பீரத்தைக் காணோம். செவ்விழிகள் இருந்தன, செருக்கைக் காணோம். உடைவாள் இருந்தது, வெளியுலகத்தைப் பார்த்துத் தான் வெகு நாட்களாகியிருந்தன.

செஞ்சியிலே வாங்கிய அடி, அந்த வீரனின் சிந்தையில் குடைந்து கொண்டிருந்தது வண்டாக. பாதுஷாவிடமிருந்து வந்த கேள்விகளுக்கு அவன் ஒரே பதில்தான் வைத்திருந்தான்.

'உங்கள் குமாரர் - இளவரசர் காம்பக்ஷ் செய்த துரோகம்தான் எல்லாவற்றுக்கும் காரணம். எதிரியோடு அவர் சேர்ந்து கொண்டு விட்டார். நமது படைகளைக் காட்டிக் கொடுத்து விட்டார். '

ஔரங்கசீப்புக்கும் தயவு தாட்சண்ணியத்துக்கும் பல காத தூரம். தாக்கீது பிறந்தது உடனே. 'மகனென்று பார்க்க வேண்டாம். காம்பகைஷக் கைது செய்யவும். இங்கே அனுப்பவும்.'

அப்படியே செய்தாகி விட்டது. 'இனித் தடையில்லையே? கொண்டு வா தக்காணத்தையும் கர்னாடகத்தையும் என் காலடியில்" என்று அடுத்த கட்டளைகள் வந்து கொண்டிருந்தன.

குமுறிக் கொதித்துக் கொண்டிருந்தான் ஜுல்பிகர்கான். 'கும்பினியான் போடும் பிச்சையில் நான் வாழ்ந்து வருவது பாதுஷாவுக்கென்ன தெரியும்? வீரத்திற் சிறந்த என் படையினர், வழிப்பறிக் கொள்ளைக்காரர்களாக மாறி, தக்காணத்தில் நெடுஞ்சாலைகளில் திரிந்து கொண்டிருப்பதை அவர் அறிவாரா?’’

கூடாரத்தில் அவன் போட்ட குறுக்கும் நெடுக்குமான நடையை நிறுத்தியது வீரனொருவனின் பிரவேசம்.

"சலாம் ஹுசூர் சிங்காவரத்திலிருந்து ரகுநாதர் வந்திருக்கிறார். '

தளபதியின் கண்கள் இடுங்கின. 'செஞ்சிக்காரனுக்கு அண்டை வீட்டானல்லவா அவன்?' 'அழைத்து வா' என்று கட்டளையிட்டான்.

'நல்ல சேதியுடன் வந்திருக்கிறேன், நண்பரே, ஔரங்கசீப்பின் படைத்தலைவனை மார்புறத் தழுவிக் கொண்டார் ரகுநாதர். ஜுல்பிகர்கானின் தோற்றத்தையும், ஆள்படை ஆரவாரங்களில்லாத சூழ்நிலையையும் கவனித்ததுமே அவருக்கு ஏமாற்றம்தான். ஆனால் முகத்தில் அது பிரதிபலிக்குமுன் மாற்றிக் கொண்டார் நொடியில்.

'நல்ல சேதியா வெறுப்புடன் நகைத்தான் ஜுல்பிகர் கான். 'அப்படியொன்று வந்தால் அதை அடையாளம் கண்டு கொள்வதே எனக்குச் சிரமமாயிருக்கும் பரவாயில்லை, சொல்லுங்கள். '

'நற்சேதி என்றால் உங்களுக்கு ஒன்றே ஒன்றுதான் இருக்க முடியும் தளபதி? உற்சாகமாகப் பேசினார் ரகுநாதர். 'அந்தச் செஞ்சிக்காரனின் முதுகெலும்பை ஒடிக்க உற்ற தருணம் வந்துவிட்டது நண்பரே! ஏன் தெரியுமா? சிங்காவரத்தின் கோட்டையிலே மோதிக் கொண்டிருக்கின்றன அவன் படைகள் இப்போது பார்த்து நீங்கள் அவன் பின்னாலிருந்தும் அவனைத் தாக்கலாம். அல்லது காவலற்றுக் கிடக்கும் செஞ்சியைக் காலின் கீழே மிதிப்பதானாலும் எளிது! புறப்படட்டும் உங்கள் படை, நண்பரே! உங்கள் குதிரைகளின் குளம்போசை செஞ்சியானின் செவிகளில் நாராசமாகப் பாயட்டும்!'

அந்தோ! ரகுநாதரின் உற்சாகம் அந்த முகலாய வீரனைத் தொற்ற மறுத்தது. 'குதிரைகளா படைகளா!' ஆத்திரத்துடன் சிரித்தான் அவன். 'ரகுநாதரே! செஞ்சிக்காரனின் செவியில் நாராசமாகப்

பாய்வது எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும். இப்போதைக்கு என் காதுக்கு அமிர்தம் எது தெரியுமா?"

"எது?''

'பவுன் நாணயங்களின் கலகலப்போசை மோகராக்கள்! தங்க மோகராக்கள்! எங்கெங்கோ சிதறியிருக்கின்றனர் என் வீரர்கள். அவர்கள் உடம்பையும் ஆன்மாவையும் குதிரையையும் வாளையும் என் முன்னே கைகட்டி நிற்குமாறு செய்யக்கூடிய பளபளக்கும் பவுன் நாணயங்களுக்குத்தான் உண்டு! இருக் கிறதா அவை உம்மிடம்?"

'ப்பூ வானை நோக்கிக் கைகளை அகல விரித்தார் ரகுநாதர். "ஒப்பற்ற பாதுஷா ஔரங்கசீப்பின் இணையற்ற தளபதியே கேட்கும்போது, கொடுக்கவா மறுக்கும் இந்த ரகுநாதனின் கைகள் இப்படியொரு தேவை ஏற்படும் என்று எப்போதோ அறிந்திருந்தேனே! நண்பரே, உங்கள் வீரர்களுக்குச் சேதியனுப்புங்கள். குதிரைகளுக்குச் சேணம் மாட்டித் தயாராக நிறுத்துங்கள். சென்னைப்பட்டணம் சென்று திரும்பும் அவகாசம்தான் எனக்கு வேண்டும். அதற்கு மேல் இல்லை."

'அப்படியா! மெத்த மகிழ்ச்சி ரகுநாதரே, மெத்த மகிழ்ச்சி", சொற்களில் இருந்த நம்பிக்கை, ஜுல்பிகர்கானின் சிவந்த முகத்தில் எதிரொலிக்கவில்லை.

ரகுநாதரின் குதிரை கிளப்பிய செம்புழுதி அந்தத் தளபதியின் முகத்தில் படிந்தது. கரடு முரடான கையினால் அதை வழித்துத் துடைத்தான். தூவென்று காறித் துப்பினான், ஆத்திரம் மொத்தத்தையும் அடித்துத் துரத்துகிற மாதிரி. இவன் மட்டும் வார்த்தையைக் காப்பாற்றினால்... காப்பாற்றினால்...'

பெரியபெத்துவின் மாளிகைக் காவலர்கள் வணங்கி வழிவிட்டனர். அவர்களுக்குத் தெரியாதா ரகுநாதரை- தோட்ட மாளிகையில் நெடுங்காலம் தங்கியிருந்த விருந்தாளியை?

குற்றேவலுக்காகத் தொடர்ந்து வந்த வேலையாட்களைத் தடுத்து நிறுத்தினார் ரகுநாதர். முன்பு தங்கியிருந்த மாளிகையை அடைந்தார். மீண்டுமொரு முறை பார்த்துக்கொண்டார்... பாழ்கிணற்றை நோக்கி நடந்தவர் அடையாளமிட்ட பாறைகளைக் கண்டார். கையால் தள்ள முயன்ற போது

பின்னால் நிழலாடியது. திரும்பினார் திடுக்கிட்டு. சீற்றம் சொற்களாக வெடித்தது. 'நீங்களா!'

'ஏன்? என் மாளிகையில், என்னையன்றி வேறு யாரை எதிர்பார்க்கிறீர்கள்|' மீசையில் விரலும் பேச்சில் கேலியுமாகச் சிரித்தார் பெரியபெத்து.

'அரசியைத் தனியாக விட்டுவிட்டா வந்தீர்கள்?' ரகு நாதரின் குரலில் திகில்.

'அரசி? நல்ல வேடிக்கை, நண்பரே! அமைதிக் காலத்தில் ஒரு சாதாரணச் சென்னை வியாபாரியின் மகளாயிருந்தவளை, ஆபத்துக் காலத்தில் அரசியாக்கிவிட்டீர்களே!'

'விளையாடாதீர்கள் தயவு செய்து. சிங்காவரம் மக்களை இந்தச் சமயத்தில் நாம் கைவிட்டோமானால் எந்தச் சமயத்திலும் ஏற்கமாட்டார்கள்!'

'தங்களிடம் ஒரு சிறப்பு: நெருக்கடி வேளையில் எப்போதுமே நன்றாகப் பேசுகிறீர்கள்!' ஏளனமாய்ப் பாராட்டினார் பெரியபெத்து. 'தங்களுக்கு அந்தக் கவலை வேண்டாம், தோழரே. என் மகள் நம் இருவரையும் காட்டிலும் புத்திசாலி, தைரியசாலி என்று கூடச் சொல்வேன். தானே கலந்து ஆலோசனை செய்தாள் சில படைத் தலைவர்களை. எதிரிகளை முறியடிப்பதற்கான ஏற்பாடுகளைத்

தானே ஏற்றுக் கொண்டிருக்கிறாள். அரண்மனையில் பத்திரமான இடத்தில் அவளை இருத்தி விட்டு வந்திருக்கிறேன்.'

'ஆகவே தாங்கள் என்னைப் பின்தொடர்ந்து வந்தீர்களாக்கும்?'

'நிழல்கூட அப்படி வந்திருக்காது."

"காரணம்? '

'வெறும் குறுகுறுப்புதான்' என்றார் பெரியபெத்து. 'மிகப் பெரிய மூளைகள் ஒன்று சேர்ந்து யோசிக்கப் போவதாகச் சொன்னீர்களே, அந்தக் காட்சியைப் பார்க்க ஆசைப் பட்டேன். முதலில் அரண்மனைக்குள்ளே தேடினீர்கள், அந்த மிகப் பெரிய மூளைகளை. பிறகு குதிரை லாயத்தில் ஆராய்ந்தீர்கள். அடுத்து ஜூல்பிகர்கானின் கூடாரத்தில் எட்டிப் பார்த்தீர்கள். கடைசியாக இங்கேயாவது தங்களுக்கு வெற்றி கிடைக்கிறதா என்பதைக் காண ஆவலுடன் காத்திருக்கிறேன்.'

பெரியபெத்துவை விழியசைக்காமல் வினாடி நேரம் பார்த்தார்.ரகுநாதர். பிறகு நகைத்தார் கடகடவென்று. ‘‘வர்த்தகரா யிருந்தும் உங்களுக்கு ஒரு பொருளின் அருமை தெரிய வில்லையே! எவ்வளவு பெரிய மூளையையும் அடிமை கொள்ளக்கூடிய அந்தச் சின்னஞ்சிறு பண்டத்தை மறந்து விட்டீர்கள். மஞ்சள் நிறத்தில் பளபளக்கும். உலகத்திலேயே இனிமையான நாதம் எழுப்பும். வட்ட வடிவம். புரிய வில்லையா இன்னும்? இதோ பாருங்கள்!'

பாறைகளை அகற்றினார் ரகுநாதர். பெரிய பெரிய மரக் குடங்கள் இருந்தன அங்கே. அவற்றின் வாயைக் கட்டியிருந்த துணியை அகற்றினார்.

'அள்ளி எடுத்துக் காட்டுகிறேன். பிறகாவது தெரிகிறதா பாருங்கள்.
'

கையைக் குடத்தினுள் நுழைத்தவர் திடுக்கிட்டார். வெறும் காற்றினுள் அல்லவா கரம் புகுகிறது! கெட்டியாச, குவியலாக, சலசலவென்று எதுவும் தட்டுப்படவில்லையே?

கவிழ்த்தார் குடங்களை! தூசிதான் வெளிப்பட்டு நாசியை அடைத்தது. முகம் ஏன் அப்படி வெளிறிப் போயிற்று? எதையும் நம்ப இயலாதவராக கனவில் நடப்பவர் போலத் திரும்பி நோக்கினார் ரகுநாதர். அப்போதுதான் கவனித்தார்.

காவலுக்காக அவர் வைத்திருந்த நாகங்கள் அடிபட்டுச் செத்துக் கிடந்தன, மூலைக்கொன்றாக.

'மிகப் பெரிய மூளைகள் இங்கேயாவது... ' கேலியை ஆரம்பித்த பெரியபெத்து, கூட்டாளியின் முகத்தைக் கண்டு பதறிப் போனார்.

'பவுன் நாணயங்கள் ஆயிரக்கணக்கான மோகராக்கள்! கும்பினியானின் முத்திரை அடித்த அசல் பவுன்கள்! இந்தப் பக்கத்திலே அவைதான் செலாவணியாகும் என்று எத்தனை பாடுபட்டுச் சேர்த்து வைத்திருந்தேன்!"

'போனால் போகட்டும். பவுன் காசை வீசினால் பெறலாமென்று தாங்கள் எண்ணியிருந்த ஆட்களையும் தளவாடங்களையும், வெறும் கையை வீசியே பெற முடியுமா? அதைப் பாருங்கள், தோழரே!'

செத்துக் கிடந்த பாம்புகளைக் காலால் ஒதுக்கித் தள்ளி விட்டு எழுந்தார் ரகுநாதர்.

'உதவி பெறும் வழி இனி ஒன்றே ஒன்றுதான் இருக் கிறது' என்றார் பெரியபெத்து.

அவர் பார்வை செல்லும் திசையை ரகுநாதர் கண்டார். கடற்கரையோரத்தில், நீலவானம் பின்னணி அமைக்க, நெடி தோங்கி நிற்கும் கோட்டைச் சுவர்கள் தெரிந்தன.

'கும்பினியானிடமா?" பெருமூச்செறிந்தார் ரகுநாதர்.

'ஏன்? நம் இருவர் மடியிலும் கனம் கிடையாதே! அவனிடம் உதவி கோரத் தடையென்ன?''

'ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை' என்று புறப்பட்டார் ரகுநாதர்.

ஆனால், செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலே அவர்களுக் காகக் காத்திருந்தது

ஏமாற்றம்! ஏமாற்றம் மட்டுமல்ல, அதிர்ச்சி அதிர்ச்சி மாத்திரமல்ல, அச்சம்.

கவர்னர் யேல் துரையைப் பேட்டி காணுவதே முதலில் சுலபமாயிருக்கவில்லை அவர்களுக்கு. 'சீமையிலிருந்து கும்பினி டைரக்டர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களுடன் நடன விருந்து நடைபெறுகிறது" என்று கூறி, பல மணி நேரம் காக்கப் போட்டார்கள்.

வேட்டை உடையணிந்து தற்செயலாக வெளிவந்தார் கவர்னர் "ஓ! பெரியபெத்துவும், ரகுநாதருமா!' என்று அவர் கேட்ட தோரணையிலேயே ஏன் அத்தனை ஏளனம்? - சுருங்கச் சொன்னார் பெரியபெத்து. தலையசைத்துக் கொண்டிருந்தார் மற்றவர்.

கவர்னர் பெருமான் கேட்டார் கடைசியில்:

'ஏன் ரகுநாதரே பெரியபெத்துவின் மாளிகையில் பதுக்கி வைத்திருந்த பவுனெல்லாம் என்ன ஆயிற்று? கள்ள நாணயங்களைக் கும்பினி தலையில் கட்டி, அசல் நாணயங்களைச் சேகரித்து வைத்திருந்தீர்களே? கரையான் அரித்ததா? வெள்ளம் அடித்துப் போயிற்றா?"

ரகுநாதர் சிரம் தாழ்ந்தார். பெரியபெத்துவின் கண்களிலோ கனல். கும்பினி விசுவாசியான அவரது இல்லத்துக்குள் ஓர் அடுத்துக் கெடுப்பவனா!

யேல் துரை தொடர்ந்தார்: 'அந்தக் காஞ்சிபுரம் இளைஞன் சொன்னபோது நான் நம்பவில்லை. போனோம். தேடிப் பிடித்தோம். எடுத்து வந்தோம். உரைத்துப் பார்த்தோம். நூற்றுக்கு நூறு சுத்தமான நாணயங்கள்! நீங்கள் இரண்டு பேரும் ஊரில் இல்லாததால் தெரிவிக்க முடியவில்லை. தேடினீர்களோ பாவம்'

'பழைய கதைகளைத் துரையவர்கள் தயவு செய்து மறக்க வேண்டும்", பெரியபெத்துவுக்கு வேறு வழியில்லை மன்றாடுவதைத் தவிர. 'செஞ்சிக்காரனுக்கு எதிராகக் கும்பினி உதவி மட்டும் கிடைத்தால்?"

'கிடைத்தால்?" எதிர்க் கேள்வியுடன் நிறுத்தினார் யேல் துரை. "வருந்துகிறேன், பெரியபெத்து. கும்பினியின் கொள்கை தெரியாதவர்கள்தான் இப்படிக் கேட்பார்கள். முகலாய சக்கரவர்த்தி, மராட்டிய மன்னர் ஆகியோரை வெளிப்படை யாய் நாங்கள் பகைத்துக் கொள்ள மாட்டோம்.'

'வெளிப்படையாக வேண்டாம். ரகசியமாக?"

"அது- புன்னகை பூத்தது யேல் துரையின் முகத்தில். 'ஈடாக என்ன கிடைக்கிறது என்பதைப் பொறுத்திருக்கிறது. இப்படி வாருங்கள். '

அறைக்குள் அழைத்துச் சென்றார் கும்பினி கவர்னர். பிரம்மாண்டமான மரச் சட்டமிடப்பட்டு மாட்டியிருந்த வரை படமொன்றைக் காட்டினார்.

'செஞ்சிக்காரனுக்கு முன்பொரு முறை உதவி செய்தது கும்பினி. இது அவர்கள் கொடுத்த பிரதேசத்தில் நாங்கள் கட்டிய கோட்டை - குனிமேடு கோட்டை."

ரகுநாதரும் பெரிய பெத்துவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். ஒரே சமயத்தில் அவர்களிடமிருந்து விடை வந்தது. 'நாங்களும் தருகிறோம்.' அவர்கள் பேசி முடித்த அதே

கணம்கோட்டைக்கு வெளியே தூளெழுப்பிப் பறந்தது ஒரு குதிரை. சிவசிதம்பரம் போய்விட்டால் என்ன? அவர் தேசபக்தர்கள் தயாரித்த எத்தனை பேர் இல்லை அந்த செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் அவர்களிலே ஒருவன்தான் காற்றென விரைந்தான் - சிங்காவரத்தை நோக்கி, ரகுநாதரின் துரோகச் செய்தியைத் தெரிவிக்க.

## (39)

சுதந்திரக் காற்று! ஆனால் எத்தனை சூடாக இருக்கிறது! தளைகள் நொறுங்கி விட்டன! ஆனால் எவ்வளவு தடுமாற்றங்கள்!

பாதாளச் சிறையிலிருந்து நால்வர் உருவமும் பாய்ந்து வெளிப்பட்டன. தெருவெல்லாம் அமளி. வீதியெல்லாம் ஓலம். செவியைப் பாழாக்கும் வெடிமருந்து முழக்கங்கள்.

அரண்மனையினுள் அவர்கள் பிரவேசித்ததும் "ராணி எங்களைக் காப்பாற்றுங்கள்! மகாராஜா! எங்கள் வயிற்றில் பால் வாருங்கள்!' அரண்மனை ஊழியர்கள் தாமரையின் காலிலும் கிருஷ்ணப்பரின் காலிலும் விழுந்தார்கள். பணிப் பெண்ணொருத்தி ஒப்பாரி வைத்தாள் நீளமாக. 'பாவிகள் நரகத்துக்குத்தான் போவார்கள் நீசர்கள் கோட்டையை எதிரி முற்றுகையிட்டிருக்கும் போது, ஓடிவிட்டார்களே கோழைகள்!'

சென்னம்மா வியப்புக் காட்டினாள். 'என்ன! அப்பா ஓடிவிட்டாரா?'

"ஆமாம்! அந்தப் பட்டணத்தாரையும் துணை சேர்த்துக் கொண்டு!’’

கிருஷ்ணப்பரின் கையைப் பற்றிக் கொண்டாள் சென்னம்மா. ‘‘இன்னும் என்ன யோசனை? செல்லுங்கள் களத்துக்கு. பழைய தளபதிகள் எவருமில்லை இப்போது. நாம்தான் எதிரியை முறியடிக்க

வேண்டும். தாங்களும்-' திரும்பினாள். திகைத்தாள். ‘‘தாமரை, அவர் எங்கே? காஞ்சி புரத்தார்?'

அப்போதுதான் தாமரையும் கண்டாள் அருகிலே அவன் இல்லாததை. எழிலார்ந்த வதனத்தில் பெருமிதம் குடி கொண்டது. நெஞ்சிலே எக்காளம், குரலிலே செருக்கு. 'அம்மா, நாவைக் காட்டிலும் வாளை நம்புகிறவர் அவர்! நாம் பேசிக் கொண்டிருந்த நேரத்தில் அவர் போய்விட்டார் களத்துக்கு!'

"நானும் சளைத்தவனல்ல குழந்தாய்!" கிருஷ்ணப்பர் புறப்பட்டார் ரோஷத்துடன். "பகைவனின் ரத்தமென்றால், என் வாளுக்குக்கூட ரொம்பப் பிடிக்கும். காட்டுகிறேன், பார்!"

புயலெனப் புகுந்த மூன்று நான்கு புரவிகள், அரண் மனையின் முற்றத்தில் நின்றன. மூச்சிறைக்க ஓடிவந்தனர் வீரர்கள். "அரசி! ஆபத்து! இனி அதிக நேரம் தாக்குப் பிடிக்க முடியாது. வடக்கு வாசல் எந்த வினாடியும் விழுந்து விடும் போலிருக்கிறது. மற்ற வாசல்களின் கதியும் அதேதான்!’’

'இதோ நான் வருகிறேன், அஞ்சாதீர்கள்!' ஆறுதல் சொன்னார் கிருஷ்ணப்பர். 'காஞ்சிபுரத்தார் எந்த வாசலில் தலைமை தாங்குகிறார்?"

"காஞ்சிபுரத்தாரா அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். 'ஒ, முன்னாள் தளபதியைக் கூறுகிறீர்களா? நாங்கள் அவரைப் பார்க்கவில்லையே?’’

"அவர் எந்த உருவத்தில், எந்த இடத்தில், யாரோடு மோதிக் கொண்டிருப்பார் என்று ஆண்டவனால் கூடச் சொல்ல முடியாது! நீங்கள் போங்கள்!' என்றாள் சென்னம்மா. கிருஷ்ணப்பரும் வீரர்களும் குதிரையேறிப் பறந்தார்கள். தூரத்தில் ஒரு வெடி முழக்கம். மேகம் போல் வானில் எழுந்தது புகை மண்டலம்.

தாமரையின் நடுங்கும் தளிர் மேனியை அணைத்துக் கொண்டாள் சென்னம்மா.

கோட்டைச்சுவரின் மாடத்துக்கு ஏறிய கிருஷ்ணப்பருக்கு, உடல் சிலிர்த்தது அந்தக் காட்சியைக் கண்டு.

செஞ்சியிலிருந்து அபாயம் முளைக்குமென்று சிங்காவரம் எதிர்பார்த்ததே கிடையாது. எனவே, செஞ்சியின் பக்கமிருந்த வடக்கு வாசலில் பாதுகாப்புப் போதாது. அகழியில் ஆழமும் அதிகமில்லை, அகலமும் பற்றாது. அந்தப் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொள்ள முனைந்திருந்தான் செஞ்சிக்காரன். பிரம்மாண்டமான கட்டைகளையும் மரங்களையும் வெட்டித் தள்ளி, அகழியைத் தூர்த்தவாறிருந்தார்கள். பொத்பொத்தென்று தண்ணிரில் மிதப்புக்கள் விழும் போதெல்லாம் ஆவென்று வாயைப் பிளந்துகொண்டு ஓடி வந்தன முதலைகள். நடுநடுவே எவனாவது ஒருவன் அடிபட்டோ அஜாக்கிரதையினாலோ அகழியில் விழுவான். அப்போது, 'அம்மா ஐயோ!' என்று அவன் அலறும் கூச்சல் ரத்தத்தை உறைய வைத்தது.

சிங்காவரத்தின் தரப்பிலிருந்து, கோட்டைச் சுவரின் இடுக்குகளிலிருந்து, கணைகள் பறந்தன எதிரிமீது. எதிரியோ, வலுவான பீரங்கியொன்றின் துணையோடு வெடிமருந்தை வீசிக் கொண்டிருந்தான்.

ஒரே நொடியில் கிருஷ்ணப்பர் நிலைமையைக் கண்டு கொண்டார்- அந்தப் பீரங்கிக்காரன்தான் முதன்மையான எதிரியென்று. வெவ்வேறு பக்கமாகப் பிரிந்து நின்றிருந்த வீரர்களை அருகில் அழைத்துக் கொண்டார். பீரங்கிக்காரனை இலக்காகக் கொண்டு ஈட்டிகளையும் கணைகளையும் எறிய உத்தரவு பிறப்பித்தார்.

பாக்குக் கடிக்கும் நேரம்தான். வெடிமருந்து கெட்டிப்பவனும், தீ வைத்துக் கொளுத்துபவனும் விழுந்தார்கள். உடனே வேறு பல செஞ்சி வீரர்கள் பீரங்கிக்குப் பாதுகாப்பாகச் சூழ்ந்து கொண்டார்கள்.

முன்பு, வெறுந்தரையில், இலக்குக்கு எளிதாக உயர்ந்து நின்றது பீரங்கி. இப்போது பெரிய பாறைகளும் கற்களும் சுற்றிலும் போடப்பட்டன. ஒரு சிறிய அரண் அமைக்கப்பட்டு விட்டது. 'சபாஷ்!" என்று முழங்கினார் கிருஷ்ணப்பர். 'அவர்களும் அந்தப் பீரங்கியைத்தான் பெரிதாய் நம்பியிருக்கிறார்கள் தெரிந்து விட்டது அது தாக்குங்கள் அதைக் குறி பார்த்து!" உற்சாக மிகுதி, கிருஷ்ணப்பரின் எச்சரிக்கையைக் கெடுத்து விட்டது. மறைவிடத்தில் பதுங்கியிருக்க வேண்டியவர், எதிரிக்குத் தெரியும்படி எழுந்து நின்றுவிட்டார். மறு கணமே, அவரது வலது புஜத்தைத் துளைத்துச் சென்றது செஞ்சியானின் ஈட்டியொன்று.

'ஆ' என்று அலறி விழுந்த கிருஷ்ணப்பர், பெருகி வரும் குருதிக்கு வஸ்திரத்தைக் கிழித்துக் கட்டுப் போட்டார். மீண்டும் ஆணையை மேற்கொள்ள எழுந்தார். 'வேண்டாம் பிரபு' துணைத் தளபதிகளில் ஒருவர் அவரைத் தடுத்து நிறுத்தினார். 'நாங்கள் சமாளிக்கிறோம். தாங்கள் அரண்மனைக்குத் திரும்பி சிகிச்சை செய்து கொள்ளுங்கள்."

முதலில் மறுத்தார் கிருஷ்ணப்பர். ஆனால் ரத்தம் பெருகியது. துணைவர்களின் வற்புறுத்தலும்தான்.

அரை மனத்துடன் அரண்மனைக்குத் திரும்பியவரை, தாமரையின் கலங்கிய முகம் வரவேற்றது.

"காஞ்சிபுரத்தாரைப் பார்த்தீர்களா?' என்று அவள் கேட்டாள்.

'இல்லையே?' என்று கிருஷ்ணப்பர் கை விரித்தார். "எவர் சொல்லுக்கும் கட்டுப்படாதவராயிற்றே அவர் என்ன செய்கிறாரோ தெரியவில்லையே?' என்று புலம்பினாள் தாமரை. கிருஷ்ணப்பரை அழைத்து வந்த துணைத் தளபதிகளில் ஒருவர், 'அரசியார் மன்னிக்க வேண்டும். நமது முன்னாள் தளபதி - காஞ்சிபுரத்தார் - போர்க்களத்துக்கே வரவில்லை' என்றார்.

தாமரை சிரித்தாள். 'சரிதான் குழந்தைக்கு, தாயின் மடி. அவருக்கு, போர் நடக்கும் பூமி தாங்கள் கவனிக்கவில்லையென்றால் அது காஞ்சிபுரத்தாரின் பிழையல்ல!"

'எல்லா வாசல்களையும் பார்த்துவிட்டு வருமாறு ஆளனுப்பினேன், அரசி. எங்கேயும் அவர் இல்லையென்று சொல்லிவிட்டார்கள். '

"மெய்யாகவா? கிருஷ்ணப்பர் படுத்தவாறே முனகினார். "அவர் அப்படிப்பட்ட கோழையல்லவே... ஏதாவது தந்திரம் செய்து பகைவனை அடக்கத்தான் சென்றிருப்பார்...'

இகழ்ச்சி நகையொன்று அரும்பியது துணைத் தளபதியின் இதழில். "அவருடைய தந்திரங்களை நம்பி ஏமாந்ததுதான் மிச்சம்...'

புழுதியெழுப்பியபடி பறந்து வந்தான் வீரனொருவன். 'அரசி! நமது முன்னாள் தளபதி - காஞ்சிபுரத்தான் - ஆஸ்தான நாதசுரக்காரரின் வீட்டில் இருக்கிறார். ஆபத்தை எடுத்துச் சொன்னேன். அசையவும் மறுக்கிறார்.'

'உளறாதே!' சென்னம்மா கண்களை உருட்டினாள். 'சொல்வதைத் திருத்தமாகச் சொல்லு, அவரை நீ எங்கே பார்த்தாய்? எப்போது பார்த்தாய்?"

'நெருக்கடி முற்றிக்கொண்டிருக்கிறது, மகாராணி! ஆகவே வீட்டுக்கு ஓர் ஆள் அனுப்ப வேண்டுமென்று அறிவிக்குமாறு என் படைப்பிரிவுத் தலைவர் கட்டளை யிட்டார். தெருத் தெருவாகக் கூவிக்கொண்டு சென்றேன். நாதசுரக்காரரின் வீட்டு வாசலில் காஞ்சிபுரத்தார் உட்கார்ந்திருந்தார். எனக்குக்கூடத் திகைப்பாயும் ஆச்சரியமாயுமிருந்தது. நிலைமையை எடுத்துச் சொன்னேன். பதிலொன்றும் கூறாமல் வீட்டுக்குள் எழுந்து போய்விட்டார்.'

'சரி, நீ போ,' கிருஷ்ணப்பர் அவனை அனுப்பினார். ‘‘என்ன வந்தது அவருக்கு? புத்தி கலங்கி விட்டதா என்ன?"

எதிர்பாரா விதமாய்த் தாமரையின் குரல் கேட்டது உறுதி யாக: "நான் போய்ப் பார்க்கிறேன்!'

துணைத் தளபதியின் குரலில் அதிர்ச்சி, அச்சம். 'அரசி! கோழியை அடிக்கக் குறுந்தடியா தேவை! ஆணையிடுங்கள், அரை நொடியில் அந்த அற்பனை இழுத்து வருகிறேன் இங்கேயே. '

“தாமரை, நாடு இருக்கும் நிலையில் நீ வெளியே போவது நல்லதல்லம்மா", சென்னம்மாவும் எதிர்த்தாள்.

"பரவாயில்லை," துணைத் தளபதியின் பக்கம் திரும்பினாள் தாமரை. 'அந்த நாதசுரக்காரரின் வீட்டுக்கு வழிகாட்டு.”

ஊரெங்கும் அழுகுரல். அந்த வீட்டுக்குள் இன்னிசை. வெளியே மரண கீதம். இங்கே மோகன ராகம்!

படபடவென்று கதவைத் தட்டினான் துணைத்தளபதி. வாசலில் பெரும் கூட்டம். நாடாளும் ராணி வந்திருக்கிறார், ஒரு சாதாரணக் குடிமகனின் இல்லத்துக்கு. ஏன்? ஏன்? கூடியிருந்தோரின் நினைவிலும் உதட்டிலும் அந்த ஒரே கேள்விதான். நாதசுரத்தை ஏந்தியவாறே வெளிப்பட்டான் காஞ்சிபுரத் தான். முதலில் வியப்பு. பின்னர் புன்சிரிப்பு. 'வாருங்கள் அரசி' என்றான்.

"அதையே நானும் சொல்கிறேன்; வாருங்கள்-வெளியே!” தாமரையின் விழியில் கனல் தெறித்தது. 'தகவல் வந்தபோது நம்பவில்லை நான். தங்கள் குறும்புத்தனம் இவ்வளவு தூரம் செல்லுமென எண்ணவேயில்லை."

'குறும்புத்தனமா? எது?”

'இதுதான்! ஊர் பற்றியெரியும்போது தாங்கள் ஊதிக் கொண்டிருக்கிறீர்களே நாதசுரம் வேடிக்கைக்கும் ஓர் அளவுண்டு. புறப்படுங்கள்! வாத்தியம் பிடித்த கரத்திலே வாளேந்திக்

கிளம்புங்கள்! மக்களுக்குத் தாங்கள் ஆற்ற வேண்டிய கடமையை மறவாதீர்கள்!'

'கடமையா! எனக்கா! ஏது?' என்று நகைத்தான் காஞ்சி புரத்தான். 'அரசி! கொடுங்கோலாட்சியிலிருந்து இவர்களை விடுவிக்க என் உடலைக் கொடுத்தேன். நேரத்தைக் கொடுத்தேன். சிந்தனை முழுவதையும் இவர்களுக்காகவே செலவழித்தேன். ஆனால் பதிலுக்கு அவர்கள் எனக்கு வழங்கியது என்ன?''

கூடியிருந்த மக்கள் தலை குனிந்து நின்றனர்.

தொடர்ந்தான் காஞ்சிபுரத்தான்: 'நினைவுபடுத்துகிறேன், கேளுங்கள். அன்று நாம் கண்ணயர்ந்தோம். சூழ்ச்சியின் துணை கொண்டு சதிகாரர்கள் அரியணை ஏறினார்கள். தங்கள் அனைவரையும் துரத்தினார்கள். பொருமி வெடித்தேன். பொங்கி எழுந்தேன். மக்கள் மன்றத்திலே கேட்டேன், 'நியாயமா? என்று. அரசி, என் குரல் தன்னந்தனியாக ஒலித்தது! நடுக்காட்டில் விடப்பட்ட அனாதைக் குழந்தையின் அழுகை போல, கேட்பாரற்றுப் போயிற்று என் கூக்குரல். கேவலம், அரைப் பணத்துக்கும் துண்டுத் துணிக்கும் அடைமானம் வைத்தார்கள் தன்மானத்தை மானத்தைக் காட்டிலும் சோறு பெரிதென்று நினைத்துவிட்ட மக்களுக்கு, இப்போது ஏன் சுதந்திரம் பெரிதாய்த் தோற்றமளிக்கிறது! லஞ்சம் கொடுத்து அவர்களைச் சரிகட்டிய சூராதி சூரர்களையே நம்பியிருக்கட்டும்! ஆபத்துக் காலத்திலும் அபயம் கொடுப்பார்கள்! பொறுமையோடு இருக்கச் சொல்லுங்கள்!"

சிலையாகி நின்றாள் தாமரை. உடுக்கை இழந்தவன் கை போல, துயர் கண்ட இடத்துக்கு விரைந்து கொண்டிருந்தாரே இவர்... எவ்வளவு மனம் புண்பட்டிருந்தால் இப்படியெல்லாம் வீறாப்புப் பேசுவார்!

அவனைச் சமாதானப்படுத்தும் வகையறியாமல் அவள் குழம்பியபோது

'தளபதி எங்களை மன்னியுங்கள்!"

'அண்ணே மன்னிச்சுடு அண்ணே!'

'தம்பி! ஏதோ தெரியாமல் செய்திட்டோம். மனசில் வைச்சுக்கலாமா தம்பி!'

தடால் தடாலென்று காஞ்சிபுரத்தான் முன்னே விழுந்து வணங்கினார்கள், தெருவிலிருந்த மக்கள்.

மறுகணம், நெகிழ்ச்சி அவன் கண்களைப் பனிக்க வைத்தது. 'போதுமா?' என்றாள் தாமரை புன்சிரிப்புடன். ''வேண்டாம், வேண்டாம்!' தடுத்து நிறுத்தினான் காஞ்சிபுரத்தான், தன்னைக் கும்பிட வந்தவர்களை "வருத்தத்தில் ஏதோ பேசிவிட்டேன். நீங்கள்தான் என்னை மன்னிக்க வேண்டும். நான் உங்கள் வேலைக்காரன். காலாலிடுங்கள் வேலையை. தலையால் செய்து முடிக்கிறேன்.'

"காஞ்சிபுரத்தார் வாழ்க!'' 'மக்கள் தளபதி வாழ்க!"

வானை முட்டியது உற்சாகப் பெருக்கெடுத்த கோஷம்!

‘‘திறவுங்கள் கதவுகளை' கட்டளை பிறந்தது காஞ்சி புரத்தானிடமிருந்து.

கோட்டைக் கதவைக் காத்து நின்றவர்களுக்குப் பெரும் அதிர்ச்சி. 'மன்னியுங்கள், தளபதி. ஏற்கெனவே நம் எதிரிகள் அகழியைக் கடந்து கோட்டை வாசலை அடைவதில் ஓரளவு வெற்றிபெற்றிருக்கிறார்கள். கதவைத் திறக்க முடியாதது ஒன்றுதான் அவர்களுக்குத் தடை... ' என்றான் துணைத் தளபதிகளில் ஒருவன்.

'பாதகமில்லை, திற' என்றான் காஞ்சிபுரத்தான். 'பாலத்தையும் இறக்கிவிடு. '

எவருக்கும் அவனை எதிர்க்கத் துணிவில்லை. கதவைத் திறக்கவும் பாலத்தை இறக்கவும் அவர்கள் முனைந்த வேளையில் யானையொன்றின் மீது ஏறிக் கம்பீரமாக அமர்ந்து கொண்டான் காஞ்சிபுரத்தான்.

'தளபதி தங்கள் வாள், ஈட்டி, வேல் எல்லாம் கீழே இருக்கின்றனவே!' கீழேயிருந்து குரல் கொடுத்தான் படை வீரனொருவன்.

சிரித்தான் காஞ்சிபுரத்தான். 'பகைவனைச் சந்திக்கும் போதுதான் அவை தேவை. நான் இப்போது சந்திக்கப் போவது - நீயே பார்!"

கோட்டைக் கதவுகளைப் பிளந்துகொண்டு, வெள்ளம் போல் பாய்ந்து வந்தது செஞ்சிக்காரனின் படை.

நீண்ட ஈட்டியை ஓங்கித் தூக்கிக்கொண்டு புலியெனச் சீறி வந்தான் ஒரு வீரன். "ஐயோ!' என்று கூவியது சிங்காவரப் படை. மயிரிழைதான். தவறியிருந்தால், ஈட்டி காஞ்சிபுரத் தானின் மார்பில் செருகி மறுபக்கம் வந்திருக்கும்.

எதிரி வீரனின் கை பின் வாங்கியது கடைசி வினாடியில். 'ஆ! தாங்களா!' என்று திகைத்துப் பின்னடைந்தன பல செஞ்சி வீரர்களின் கால்கள்.

காஞ்சிபுரத்தான் முறுவலித்தான். "ஆம், தோழர்களே! நானேதான்! யார் என்னைத் தாக்க வந்திருக்கிறீர்கள்? வாருங்கள் முன்னே! கவசமற்றுத் திறந்துதான் இருக்கிறது என் மார்பு!"

உலகமே அசைவற்று நின்றுவிட்டதா? அப்படியொரு நிசப்தம். 'இல்லை, இல்லை! தங்களைக் கொல்ல வரவில்லை நாங்கள்!' என்று ஒரே குரலில் முழங்கினார்கள் வீரர்கள்.

செஞ்சியின் தளபதி முன்னே வந்து, தன் வாளை வைத்தான் யானையின் முன்பு. "தோழரே! எங்களுக்கு இழைக்கப் பட்ட

அவமானத்துக்காக மட்டும் நாங்கள் வரவில்லை. புதிய ஆட்சியில் தங்களுக்குத் தீங்கு செய்யப்பட்டதாகவும் கேள்விப் பட்டோம். செஞ்சியின் உற்ற நண்பருக்காக வஞ்சம் தீர்க்கவே வந்தோம்.'

'நன்றி, நண்பரே! சத்ரபதியவர்களிடம் தயவு செய்து தெரிவியுங்கள். புத்தாட்சி பூத்து விட்டது சிங்காவரத்தில். வஞ்சம் தீர்க்கும் வேலையை மக்களே மேற்கொண்டு விட்டார்கள். இனி செஞ்சியின் வாள் தேவையில்லை - வாழ்த்துத்தான் தேவை. ஆள்பலம் வேண்டாம். ஆசிதான் வேண்டும்.'

அன்றைக்குள் இரண்டாம் முறையாக கோஷம் கிளம்பியது.

'வாழ்க சிங்காவரம் தளபதி!' 'வாழ்க செஞ்சி - சிங்காவரம் நட்பு!" கோஷங்கள் தேயத் தேய, செஞ்சியின் படைகள் திரும்பின. சிங்காவரம் கோட்டைக் கதவுகள் சாத்திக் கொண்டன. நிலம் சிவப்பாகவில்லை. அந்தி வானம்தான் ரத்தச் சிவப்பை உமிழ்ந்தது.

எங்கிருந்தோ ஓர் இரைச்சல். "துரோகி துரோகி!' 'யார்? யார்?' யானை மீதிருந்து இறங்கவிருந்த காஞ் புரத்தான் எழுந்து நின்று பார்த்தான். -

சென்னைப் பட்டணத்துத் திசையிலிருந்து இரண்டு புரவிகள் வந்து கொண்டிருந்தன. பறந்தது புழுதி. மறைத்தது கண்ணை. வளர்த்தது திகைப்பை.

சிங்காவரத்து வீரர்கள் சூழ்ந்து கொண்டார்கள் வந்தவர்களை.

"பட்டணத்துக்காரியை அரசியாக்கினர்களே போயும் போயும்... அவள் தகப்பன் அங்கே கும்பினிக்காரனிடம் உங்கள் நாட்டை விற்றுக் கொண்டிருக்கிறான். கும்பினியான் இவனுக்குப் படை உதவி செய்வானாம். இவன் அவனுக்குக் கோட்டை கட்டிக் கொள்ளச் சிங்காவர ராஜ்யத்தில் நிலம் கொடுப்பானாம்!"

"துரோகி தேசத் துரோகி!'

'அமைதி அமைதி!' கையமர்த்தினான் காஞ்சிபுரத்தான். 'ஓடிவிட்ட கோழை என்ன செய்தால் நமக்கென்ன?"

சென்னையிலிருந்து வந்தவன் சொன்னான்: 'யார் ஓடிவிட்டார்கள்? ரகுநாதரும் பெரியபெத்துவும் வேண்டுமானால் அங்கே வந்திருக்கலாம். பெரியபெத்துவின் மகள் - ராணியாக்கினர்களே, அந்தத் தெய்வநாயகி - இன்னும் அரண்மனைக்குள்தான் இருக்கிறாள் பத்திரமாய்!'

'அரண்மனையிலா! நமது அரண்மனையிலா!' எவனோ கூச்சலிட்டான்.

'வாருங்கள், போவோம்! இப்போதே தொலைத்து விடுவோம்!'

அரண்மனையை நோக்கிப்பாய்ந்தது படைவீரர் வெள்ளம்.

'கொண்டுவா தெய்வநாயகியை எங்கே ஒளிந்திருக்கிறாள் அவள்?' அரண்மனைக் காவலர்களை மீறிக் கொண்டு முன்னேறினர் வீரர்கள்.

'நில்லுங்கள்! நில்லுங்கள் கை விரித்து வழிமறித்தாள் தாமரை.

## (40)

கொந்தளித்துக் குமுறியது ஜனக்கூட்டம். முட்டியது. மோதியது, முன்னேறியது. தேசத்துரோகிக்கு அரண்மனைக்குள் இருப்பிடமா விடாதே விடாதே! - இதுவே அதன் கூச்சல்.

எதிர்பாராத விதமாய்த் தாமரையே இரு கை விரித்து எதிரே வழி மறித்தாள். ஒரு வினாடி கூட்டத்துக்குத் திகைப்பு. அதிர்ச்சி. மறுவினாடி

'அரசி! விலகுங்கள் தயவு செய்து!" என்றார்கள் மக்கள். "அதையே நானும் சொல்கிறேன். திரும்பிச் செல்லுங்கள் தயவுசெய்து!" என்றாள்

தாமரை. "இந்த அரண்மனைக்குள் இருக்கும் ஒவ்வோர் உயிருக்கும் பாதுகாப்புத் தரக் கடமைப் பட்டவள் நான்.'

'உள்ளேயிருப்பவள் ஒரு சதிகாரி!'

'அவளையும் சேர்த்துத்தான் சொல்கிறேன்.'

"தேசபக்தியுள்ள பிரஜைகள் என்ற முறையில்...'

'உங்களுடைய ராணி என்ற முறையில் என் உரிமை பெரியது!" என்றாள் தாமரை அழுத்தமாக. 'நான் வேண்டிக் கொள்ளவில்லை. ஆணையிடுகிறேன் - அகலுங்கள் என்று. மேலும் ஓரடி நீங்கள் முன்னே வந்தீர்களானாலும், இந்தத் தாமரை தன் மகுடத்தைக் கழற்றி வைத்து விடுவாள். நிச்சயமான, சத்தியமான வார்த்தை இது.'

சுரீலென விழுந்த சாட்டையடியோ அந்தச் சொல்? பார்வைகள் ஒன்றோடொன்று மோதின. திடுமென்று ஒருவன் குரலெழுப்பினான்: "அதோ வருகிறார் தளபதி! அவர் சொல்லட்டும் யோசனை!"

குதிரையை விட்டிறங்கி வந்த காஞ்சிபுரத்தான், கூட்டத்தில் ஒருவனாகக் கலந்து கொண்டான். 'உங்கள் ஆத்திரம் நியாய மானதுதான், நண்பர்களே! ஆனால் அரசியின் ஆணைக்குக் கட்டுப்படுவதுதான் அறிவுள்ள மக்களுக்கு அழகு. உங்களுக்கு நான் உத்திரவாதம் தருகிறேன் ஒரு விஷயத்தில், ' என்றான்.

''எதில்'

"அந்தச் சென்னைப் பட்டணத்துப் பெண்மணியை இங்கே வைத்திருக்க மாட்டோம். நாளை பொழுது விடிவதற்குள் அவளை அவளுடைய பிறந்த ஊருக்கே திருப்பியனுப்பி விடுகிறோம். திருப்திதானே?"

திருப்தி எப்படி ஏற்படும் கூட்டத்துக்கு? தலையை உருள வைக்கும் தீவிரத்துடன் வந்தவர்களுக்கு, தர்மோபதேசம் காதில்

ஏறுமா? ஆயினும், காஞ்சிபுரத்தானின் கண்டிப்பு, கலையச் செய்தது அவர்களை.

'எந்த ரகசிய அறையில் இருக்கிறாரோ தெய்வநாயகி?" தாமரை ஐயம் தெரிவித்தாள் சென்னம்மாவிடம்.

நகைப்பு வெளிப்பட்டது, அருகில் நின்றிருந்த கிருஷ்ணப்பரிடமிருந்து. "இத்தனை வருடம் ஆண்டதில் நான் கற்றது, ஆட்சிக் கலையல்ல. அரண்மனையில் மறைவிடங்களும் ரகசிய அறைகளும் எங்கெங்கு உள்ளன என்பதைத் தான். தளபதி, என்னுடன் வாருங்கள். தேடிப் பார்க்கலாம் தெய்வநாயகியை."

அதிக நேரம் கஷ்டப்படவில்லை அவர்கள். கொலு மண்டபத்தில், அரியணையின் நேர் கீழே சென்ற சுரங்கப் பாதையில் காத்திருந்தாள் தெய்வநாயகி - வெளியுலகத்தில் நடைபெற்ற மாறுதல்களை அறியாதவளாக.

'தோற்றோடினார்களா எதிரிகள்?' காஞ்சிபுரத்தானைக் கண்டதும் அவள் கேட்ட முதல் கேள்வி அது.

'தோற்றதும் உண்மை, ஓடியதும் உண்மை. ஆனால் அவர்கள் தாங்கள் நினைத்துள்ள எதிரிகளல்ல' என்றான் காஞ்சிபுரத்தான். 'சிங்காவரத்தைப் பிடித்திருந்த இரண்டு சாபக்கேடுகள் ஒழிந்தன. ஒன்று ரகுநாதர். மற்றது தங்கள் தந்தை. '

மகிழ்ச்சி, துயரம் - இரண்டின் பிடியிலும் ஒரே வேளையில் சிக்கினாள் தெய்வநாயகி. 'உரியவர்களுக்கே சேர வேண்டும் அரியணை என்று நான் அன்றைக்கே வாதாடினேன் என் தந்தையிடம். அவர் கேட்கவில்லை. இப்போது என் நிலை என்ன? சிம்மாதனத்தை எதிர்த்துச் சூழ்ச்சி செய்பவர்களுக்குச் சிரச்சேதம்தான் வழக்கம். காத்திருக்கிறேன் தளபதி. அழைத்துச் செல்லுங்கள் என்னைக் கொலைக் களத்துக்கு" உதட்டில்

முறுவலுடன் இரு கையையும் நீட்டிக் கொண்டு முன்னேறினாள் பெரியபெத்துவின் மகள்.

'உங்கள் நேர்மையே உங்களுக்கு மன்னிப்பு வாங்கித் தந்துவிட்டது. புறப்படுங்கள் போகலாம்' என்றான் காஞ்சி புரத்தான்.

"எங்கே? "சென்னைப் பட்டணத்துக்கு. தங்கள் தந்தையிடம். எல்லை வரையில் தங்களுக்குப் பாதுகாப்பாக என்னையே செல்லச் சொல்லியிருக்கிறார்கள் அரசி. அதன் பின்னரும் சிங்காவரத்து வீரர்கள் தங்களுக்குத் துணையாகச் சென்னைப் பட்டணம் வரை வருவார்கள். '

'மிக்க நன்றி, ' என்றவள், யாருடனும் பேசாமல் உடனேயே புறப்பட்டாள். தாமரையை ஆரத் தழுவினாள். சென்னம்மாவை வணங்கி எழுந்தாள். அவள் விடைபெற்றுக் கொண்ட போது, கூடியிருந்தோரின் பார்வையைக் கண்ணிர் மறைத்தது.

புயல் வீசிய காடுபோல போரிலிருந்து விடுபட்டிருந்த நாடு. ஓசைகள் குறைந்திருந்தன; தழும்புகள் மறையவில்லை. எரிந்து அடங்கிய இல்லங்கள்; காயங்களுக்கு மருந்திட்டுச் செல்லும் வீரர்கள்; துணியினால் வாயை அடைத்துக்கொண்டு விம்மும் தாய்மார்கள்.

காட்சிகளைப் பார்த்தவாறே மௌனமாகப் பயணமானாள். 'ஜனங்களின் ஆத்திரமெல்லாம் உங்கள்மீது திரும்பியது தெரியுமா? அரசிதான் காப்பாற்றினார், ' நடந்ததை விவரித்தான் காஞ்சிபுரத்தான்.

முதலை அகழியை அடைந்து கொண்டிருந்தார்கள் அவர்கள். பிரியும் இடம் நெருங்கிவிட்டது.

"என் தந்தையின் அடிமைப் புத்திக்காக நான் வெட்கப் படுகிறேன் நண்பரே," என்றாள் தெய்வநாயகி. "அவர் முகத்தில் விழிக்கக்கூட வெட்கமாயிருக்கிறது."

'ஆயினும் அவரிடம்தானே தாங்கள் செல்லவேண்டி யிருக்கிறது!'

தலையைக் குனிந்துகொண்டு யோசனையில் ஆழ்ந்தாள் தெய்வநாயகி. குதிரைகளின் குளம்புகள் பொத்பொத்தென்று புழுதியில் படியும் ஒசை மட்டுமே கேட்டுக் கொண்டிருந்தது. 'தளபதி, எனக்காக ஒர் உதவி செய்யமுடியுமா தாங்கள்?" என்றாள் தெய்வநாயகி.

‘'எதுவும் செய்கிறேன், சொல்லுங்கள். '

'சென்னைப் பட்டணத்தில் உள்ள என் இல்லத்துக்கு நான் செல்ல விரும்பவில்லை. துரோகிகளின் கூடாரமாகி விட்ட அந்த வாசற்படியை மிதிக்கக்கூட எனக்கு அருவருப்பா யிருக்கிறது. வேறெங்காவது தங்குவதற்கு எனக்கு வசதி செய்து கொடுங்கள். பின்...'

'பின் '

"கும்பினியாரின் கோட்டைக்குச் சென்று, எப்படி யாவது... '

"எப்படியாவது?" அவள் எதைச் சொல்லப்போகிறாள் என்று காஞ்சிபுரத்தானின் அறிவு ஊகித்தது. உள்ளம் படபடத்தது.

'அவரை... சிவசிதம்பரத்தை மீட்டு வந்து என்னிடம் சேர்ப்பித்துவிடுங்கள். கஞ்சியோ கூழோ எதைக் குடித்தேனும், குடிசையோ திறந்தவெளியோ எங்கே வசித்தேனும், தன்மானத்துடன் நான் வாழ்வேன் - சிவசிதம்பரத்தின் துணை மட்டும் இருந்தால். '

கலங்காத காஞ்சிபுரத்தானின் கண்களும் கலங்கின. 'சகோதரி, உங்கள் தந்தை புரிந்த அந்த மாபெரும் கொடுமை -மானக்கேடு - உங்களுக்குத் தெரியாதா?"

‘‘மானக்கேடா... கொடுமையா..? அவர். சிவசிதம்பரம்..."

"அவர் புகழுடம்பு எய்திப் பல நாட்களாகின்றன, சகோதரி.'

சுருக்கமாய்க் கூறி முடித்தான் காஞ்சிபுரத்தான். ஆவென் றலறி விழுந்தாள் தெய்வநாயகி.

எல்லா முன்னேற்பாடுகளும் முடிவடைந்து விட்டன, செயின்ட் ஜார்ஜ் கோட்டையில். பெரியபெத்துவுக்குப் பெரும் திருப்தி, ரகுநாதருக்கு எக்காளம்; கும்பினியானுக்கு ஆசைக் கனவுகள்.

தந்திரம் என்பது பரங்கிக்காரனுக்குப் பிறவியோடு வந்தது. வெளிப்படையாகச் செஞ்சி மன்னரைப் பகைத்துக் கொள்ள அவனுக்குத் தைரியம் கிடையாது. ரகசியமாகவே ஆட்களையும் தளவாடங்களையும் தயார்செய்து வைத்திருந்தான்.

இன்றோ நாளையோ பெரியபெத்துவும் ரகுநாதரும் புறப்பட்டு விடலாம் என்றிருந்த சூழ்நிலையில்...

'சிங்காவரத்திலிருந்து ஆள் வந்திருக்கிறது! செய்தியும் ஒரு பொருளும் கொண்டு வந்திருக்கிறார்கள்" கவர்னர் யேல் துரையிடம் தெரிவித்தான் கோட்டைக் காவலர்களில் ஒருவன். 'சபாஷ் வேறென்ன செய்தி வந்திருக்க முடியும்! செஞ்சியானை முறியடித்திருப்பார்கள் நம் உதவி இல்லாமலே!" என்றார் ரகுநாதர்.

பெரியபெத்துவோ, "ஏதோ பொருள் என்கிறார்களே, என்னவாக இருக்கும்?' என்று குழம்பினார்.

அந்தப் பொருள் ஒரு நீண்ட மரப்பெட்டி. நான்கு ஆட்கள் தூக்கி வந்து பெரியபெத்துவின் முன்னே வைத்தார்கள்.

இன்னொருவன், 'இந்த ஓலை தங்களுக்கு' என்று லிகிதமொன்றை யேல் துரையிடம் சமர்ப்பித்தான்.

பெட்டியைத் திறக்குமுன்பே பெரியபெத்துவின் முகத்தில் கலவரம் பெருகியது. திறந்ததுமோ....

'தெய்வநாயகி!' என்று அலறிக்கொண்டு அதன்மீது விழுந்தார். "தெய்வநாயகி என் செல்வமே கண்ணே உனக்கா இந்தக் கதி!'

அருகில் நின்றவர்கள் பேரதிர்ச்சியுடன் எட்டிப் பார்த் தார்கள். பெட்டிக்கு உள்ளே...

சிதைந்து பல துண்டங்களாக ஆகிவிட்ட தெய்வநாயகியின் சடலம் கிடத்தப்பட்டிருந்தது.

துடித்தெழுந்தார் பெரியபெத்து. "சும்மா விடமாட்டேன் உங்களை சொல்லுங்கள் யார் இந்த அக்கிரமத்தைச் செய்தது?" உலுக்கினார் சிங்காவரத்திலிருந்து வந்த படை வீரனை.

"இந்த மட்டாவது உங்கள் மகளின் உடல் கிடைத்ததே, அதை நினைத்துச் சந்தோஷப்படும், ஐயா!' என்றான் சிங்காவரத்து வீரன். 'இந்த அக்கிரமத்துக்குக் காரணமானவர்களைச் சிரச்சேதம் செய்வதென்றால் தங்கள் தலையே முதலில் விழும்!"

ரகுநாதரின் முகம் வெளுத்து விட்டது. திட்டமெல்லாம் சரிவதை அவர் தெளிவாகக் கண்டார். ஆனால் அதைக் காட்டிக் கொள்ளவில்லை. 'என்ன நடந்தது? விவரமாகச் சொல்லு, ' என்று கட்டளையிட்டார் சிங்காவரம் வீரனிடம்.

'சொல்வதற்கு என்ன இருக்கிறது?" என்று சொன்னான் அவன். 'இவர்களைப் பத்திரமாக இங்கே கொண்டுவந்து சேர்ப்பித்துவிட வேண்டுமென்று முயன்றோம். ஆனால், சிவசிதம்பரத்தின் மரணத்தைப்பற்றியும், அதில் பெரியபெத்துவின் பங்கைப் பற்றியும் இந்த அம்மாளுக்கு ஒன்றுமே தெரியாது போலிருக்கிறது. அதைச் சொன்னதுதான் தாமதம். ஐயோ! அப்படிப்பட்ட துரோகியா என் தந்தை' என்று அலறிக் கொண்டே, அருகிலிருந்த முதலை அகழியில் விழுந்து விட்டார். எங்கள் தளபதி காஞ்சிபுரத்தார்..."

'காஞ்சிபுரத்தானா! வந்துவிட்டானா மறுபடி?' குறுக் கிட்டார் ரகுநாதர். மேலும் வெளுத்தது முகம்.

'அவர் எங்கே போனார், இப்போது வருவதற்கு!' என்றான் படைவீரன், நகைப்புடன். 'அவர்தான் உயிரைத் துரும்பாக மதித்து

அகழியில் குதித்தார். தெய்வநாயகியைக் காப்பாற்ற முயன்றார். இந்தத் துண்டங்கள்தான் கிடைத்தன. தங்களிடம் சேர்ப்பிக்கச் சொன்னார்..."

பெரியபெத்துவின் மலைபோன்ற சரீரம் குலுங்கிக் கொண்டிருந்தது. மரப்பெட்டியை அணைத்தவர் எழுந்திராமலே விம்மிக் கொண்டிருந்தார்.

'விடக்கூடாது இவர்களை' என்று குதித்தவர் ரகுநாதர் தான். கையில் லிகிதத்துடன் மோவாயைத் தடவிக்கொண்டு குறுக்கும் நெடுக்குமாய் உலாவும் யேல் துரையின் முன்னே போய் நின்றார். 'இப்போதே புறப்பட வேண்டியதுதான்! திமிர் பிடித்தவர்களுக்குப் பாடம் கற்பிக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது.'

யேல் துரை பதறக் காணோம். குதிக்கக் காணோம். 'மெத்த வருந்துகிறேன் நண்பர்களே, ' என்றார். அவரது ஆழமான குரல் கேட்டு, சுருண்டு கிடந்த பெரியபெத்துகூடத் தலை நிமிர்ந்தார்.

செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் கவர்னர், கையிலிருந்த நிருபத்தை மீண்டுமொருமுறை நோக்கினார்: 'செஞ்சியிலுள்ள மராட்டிய சத்ரபதி இதை அனுப்பியிருக்கிறார். ராஜ்யத்துக்கு ராஜ்யம் கலகம் மூட்டி, நடுவில் ஆதாயம் பெறப் பார்க்கிறோமாம் நாங்கள் செஞ்சிக்கும் சிங்காவரத்துக்கும் உள்ள தகராறில் நாங்கள் பிரவேசிக்கக் கூடாதாம்! பிரவேசித்தால் மதுரை மங்கம்மா, ராமனாதபுரம் சேதுபதி, தஞ்சை ஏகோஜி, மைசூர் சிக்கதேவராயன் எல்லோரும் ஒன்றுசேர நேருமாம் எங்களுக்கு எதிராக...'

'ஒகோ, மிரட்டுகிறானா ராஜாராம்! அவனுக்கும் சேர்த்தே பாடம் கற்பிக்கலாம்!' என்றார் ரகுநாதர்.

'இல்லை, இல்லை! பலமாகத் தலையாட்டினார் யேல் பெருமகனார். 'உங்கள் தகராறுகளை நீங்களே தீர்த்துக் கொள்வதுதான் மேலென்று தோன்றுகிறது...'

கும்பினி டைரக்டர்களும் நிர்வாகிகளுமான சிலர் அவரருகில் இருந்தார்கள். ஒரே குரலில் அவர்கள், "ஆம், ஆம், ' என்று ஆமோதித்தார்கள்.

ரகுநாதரின் ரத்தம் கொதித்தது. பயந்து பின்வாங்குகிறான் பரங்கி என்று புரிந்துவிட்டது அவருக்கு. "கோழை என்று வரலாறு தங்களை ஏசும், துரையவர்களே!' என்றார்.

யேல் துரை சிரித்தார். "ரகுநாதர் அவர்களே, கிழக்கிந்தியக் கம்பெனி என்று ஒன்று இல்லாமலே போவதைக் காட்டிலும், கோழை என்ற பெயருடனாவது இருப்பது மேல். அதுதான் தற்போதைக்கு எங்கள் லட்சியம். '

தாளமுடியாத ஆத்திரம் ரகுநாதரின் உடம்பையே சிவக்க வைத்தது.

கயல்விழிகள் மெல்ல உயர்ந்தன. பவழ அதரங்கள் ஆசையுடன் துடித்தன. நிமிர்ந்து நோக்கினாள். சிவந்த கழுத்தில் பச்சை குத்திய சித்திரம் போல் பிரகாசித்தன மெல்லிய நரம்புகள். அவன் ஆர்வத்துடன் அவளை நோக்கினான். அவனுடைய திரண்ட தோள்களிலே தினவு எடுத்தது - அந்தக் கட்டழகியை அணைத்துக்கொள்ள. அவன் கரங்கள் துடித்தன - அவளுடைய செப்பு மோவாயை நிமிர்த்த: பட்டுக் கூந்தலை வருட வெல் வெட்டுக் கன்னத்தைக் கிள்ள. பெருமூச்சை விழுங்கி, பேராசைகளை அடக்கிக் கொண்டான் அவன். அந்த முதலை அகழியைக் கூடத் தூர்த்துவிடலாம். தனக்கும் இவளுக்குமிடையில் உள்ள இந்த அகழியைத் தூர்ப்பது எப்போது?

'அரசி! என் கடமைகளனைத்தையும் முடித்துவிட்டேனென்று நினைக்கிறேன்' என்றான் அவன்.

'கடமைகளை நிறைவேற்றினால், விருப்பங்களைப் பூர்த்தி செய்ததாகுமா?' என்று புன்னகையுடன் கேட்டாள் அவள்.

'அரசி... தங்கள் விருப்பம்...'

'அதுதான்... அதுதான்...'

'எது?"

'இப்போது அழைத்தீர்களே, அப்படிப் பதவியின் பெயரைச் சொல்லி அழைக்காமல், பழையபடி தாமரை என்று அழைக்கக் கூடாதா?’’

காஞ்சிபுரத்தானுக்கு மெய்சிலிர்த்தது. 'ஆனால்... அது... அதற்கு... நீங்களும் நானும்...'

'அதைத்தான் ஒன்று பாக்கியிருக்கிறது என்று சொன்னேன்..." தாமரை, செந்தாமரையானாள் நாணத்தினால்.

வெளியே காலடியோசை 'சரியாகச் சொல்லிவிட்டாயம்மா! அதையேதான் நாங்களும் தெரிவிக்க வேண்டுமென்று வந்தோம்... ' கிருஷ்ணப்பரும் சென்னம்மாவும் உள்ளே நுழைந்தார்கள்.

சட்டென நகர்ந்து விலகிக் கொண்டாள் தாமரை. காஞ்சிபுரத்தானுக்குத் திகைப்பு. "தாங்கள் எதைச் சொல்கிறீர்கள் பாக்கியென்று?"

'பிரதம ஆலோசகராகத் தாங்கள் பதவியேற்கும் வைபவத்தைத்தான், ' என்றார் கிருஷ்ணப்பர். 'என் மாமா - தப்பு, தப்பு. இவள் அப்பா...'

சுட்டிக் காட்டப்பட்ட சென்னம்மாவுக்கு ரோஷம் வந்தது. 'பழியை என் பக்கம் தள்ளிவிட வேண்டாம்!' என்றாள் கோபமாக.

கிருஷ்ணப்பர் சிரித்தார். "சரி, ரகுநாதர் என்று பொதுவாகத்தான் வைத்துக் கொள்வோமே? அவர் வகித்து வந்த பதவி அது. இப்போது அவரில்லை - ஆனால் பதவியும் பொறுப்பும் இருக்கின்றன. அதைத் தங்களுக்கு...'

"நானா' திடுக்கிட்டான் காஞ்சிபுரத்தான். 'தங்களைப் போன்ற பெரியவர்கள் இருக்கும்போது...'

'நான் எங்கே போகிறேன்? உங்களுக்கு உதவி ஆலோசக ராக இருக்கிறேன். '

“என் வாழ்த்துக்கள், ' என்றாள் தாமரை.

"என் ஆசிகள்,' என்றாள் சென்னம்மா. 'சதிபோல் அல்லவா இருக்கிறது?' என்றான் காஞ்சி புரத்தான்.

"ஆம், ஆம் நாடே சதி செய்கிறதே தங்களைப் பதவியில் இருத்த?' என்று நகைத்தார் கிருஷ்ணப்பர். "அதோ பாருங்கள், கம்பத்தில் பட்டொளி வீசிப் பறக்கும் கொடியை கொம்பு வாத்தியங்களின் முழக்கம் கேட்கவில்லை?"

காது கொடுத்துக் கவனித்தான் காஞ்சிபுரத்தான்.

"ஆமாம்... ராணுவ அணிவகுப்புக்கு ஏற்பாடு நடை பெற்றுக் கொண்டிருக்கிறது, தங்களுக்கு மரியாதை செலுத்துவதற்காக... இன்னும் சற்றைக்கெல்லாம் தாங்கள் அங்கே செல்ல வேண்டும்...' என்றார் கிருஷ்ணப்பர்.

காஞ்சிபுரத்தான் ஒவ்வொருவரையும் மாறி மாறிப் பார்த் தான். முகத்தில் புன்சிரிப்பும் அகத்தில் நல்லெண்ணமும் கொண்ட அந்த உற்றார்களை உற்று நோக்கினான். பிறகு மெல்ல நகர்ந்தான். அரண்மனைப் படிகளை ஒவ்வொன்றாய் எண்ணுவது போல் நின்று நின்று நடந்தான்.

திடீரென்று வாத்திய முழக்கங்களும் வாட்கள் ஈட்டிகளின் மோதல்களும் அவனுக்கு விழிப்பூட்டின. படைவீரர் அணி வகுப்பு நடைபெறவிருக்கும் இடத்துக்கே வந்து விட்டோமென அறிந்தான்.

வாதாமரமொன்றின் பின்னே அவன் நின்றிருந்தபோது துணைத் தளபதியொருவரின் இடிக்குரல் ஒலித்தது. 'ஒருவன் குறைகிறான் என்கிறீர்களே, அவன் வருவானா, மாட்டானா? '

'அழுது புலம்புகிறான், ஐயா! அவன் அன்னை சாகக் கிடக்கிறாளாம்!"

'நமக்கென்ன அதைப்பற்றி? நாளைய தினம் பதவியேற்கப் போகும் பிரதம ஆலோசகருக்கு இன்று மரியாதை செலுத்தப் போகிறோம். நமது பெருமைக்குரிய தளபதி அவர் வீரர்களில் ஒருவர் பாக்கியில்லாமல் வந்து சேர வேண்டும்... அவன் வீடு தெரியுமா உனக்கு?"

'தெரியும் ஐயா. எண்ணெய்க்காரத் தெருவில், பிள்ளையார் கோவிலுக்கு மேலண்டை வீடு. '

'போய் இழுத்து வாருங்கள் அந்தக் கழுதையை.' குதிரை மீதேறிப் பாய்ந்து சென்றார்கள் இரண்டு வீரர்கள். அவர்களுக்கும் முன்னால் காஞ்சிபுரத்தான் பறந்து விட்டான் அந்த வீட்டுக்கு!

## (41)

புலம்பிக் கொண்டிருந்தான் அந்தப் படைவீரன். மெல்ல மெல்ல விடை பெற்றுக் கொண்டிருந்தது அவன் அன்னையின் ஆவி. தாலாட்டிச் சீராட்டி வளர்த்த தனயனின் எஃகுக் கரத்தை, தளர்ந்து மெலிந்த மூதாட்டியின் எலும்புக் கைகள் தடவிக் கொடுத்தவாறிருந்தன.

"நான் போகவேண்டும் அம்மா' என்றான் அந்த வீரன், துயரம் தொண்டையை அடைக்க. 'அரச கட்டளையை மீற முடியாது. புதிய பிரதம ஆலோசகருக்கு மரியாதை செலுத்துவதற்காக நான் போயே ஆகவேண்டும்.'

அன்னையின் கடைசிச் சொற்கள் கண்ணிரில் நனைந்து வெளிப்பட்டன. 'உன் அம்மாவுக்கு... இப்படி என்று... சொல்லக் கூடாதா மகனே?"

'சொல்லிப் பயனில்லை, அம்மா. எனக்காகப் பரிந்து பேச எவரும் கிடையாதே'

'ஏனில்லாமல் நானிருக்கிறேன்!''

'ஆ! தாங்களா!' திடுக்கிட்டு எழுந்த படைவீரன், நேற்றைய தளபதியும் நாளைய பிரதம ஆலோசகருமான காஞ்சி புரத்தானைக் கண்டான்; பிரமித்தான்; கை குவித்தான்.

'வீரனே, யாருக்கு உண்மையாக மரியாதை செலுத்த வேண்டுமோ அவருக்குத்தான் செலுத்திக் கொண்டிருக்கிறாய்,' என்றான் காஞ்சிபுரத்தான். 'தளபதியும் ஆலோசகர்களும் அமைச்சர்களும் அரசியும் ஏன், ஆண்டவனும் கூட, இந்தத் தெய்வத்துக்குப் பிறகுதான். நீ எந்த அணி வகுப்புக்கும் வர வேண்டாம். அன்னையின் அருகிலேயே இரு!''

வாசல் கதவு மீண்டும் மடாரெனத் திறந்து கொண்டது. மடமடவென்று புகுந்தார்கள் சில வீரர்கள். 'உன்னைக் கைப் பிடியாய் இழுத்துவரச் சொன்னார், தளபதி வா' முரட்டுத் தனமாய் அவனைப் பிடித்து அப்புறப்படுத்த முற்பட்டார்கள் அவர்கள். விளக்கு வைக்கும் நேரமாகையால், அரையிருட்டில் நின்றிருந்த காஞ்சிபுரத்தானை அவர்கள் அடையாளம் காண வில்லை போலும்.

"ஐயோ! என் மகன்' அலறிக் கொண்டு எழுந்த கிழவி, ஒடிந்த ஈர்க்குச்சிபோல் விழுந்தாள். அவள் ஆவி அகன்று விட்டது. 'அம்மா!' என்று வீடே இடியக் கதறியவாறு அவள் மீது விழுந்து துடித்துப் புரண்டான் மகன்.

காஞ்சிபுரத்தான் அமைதியாகத் தன் குரலை வெளிப்படுத்தினான்: 'திருப்தியாயிற்றா தோழர்களே?"

தீயை மிதித்தார்களா என்ன? சரேலென விலகியவர்கள் காஞ்சிபுரத்தானைக் கண்டார்கள். பேசவும் வரவில்லை. சமாதானம் கூறவும் தெரியவில்லை. நழுவி வெளியேறவும் துணிவு ஏற்படவில்லை.

'பெற்றவளுக்கு ஈமக் கடன்களைச் செய்வதற்காவது அனுமதி கொடுப்பீர்களா? இல்லை, அன்னையின் சடலம் அழுகினாலும் பரவாயில்லை, காஞ்சிபுரத்தாருக்கு மரியாதை செலுத்துவதுதான் முக்கியம் என்பீர்களா?' என்றான் காஞ்சிபுரத்தான். அவன் குரலில் கோபத்தின் நிழலைக் கூடக் காணோம், எல்லையற்ற வேதனைதான் மண்டிக் கிடந்தது.

'இப்போதுதான் விஷயம் கேள்விப்பட்டேன்' என்றவாறு கிருஷ்ணப்பரும் நுழைந்தார் அந்தச் சிறிய இல்லத்துக்குள்.

காஞ்சிபுரத்தானின் தோளில் மெல்லக் கை வைத்தார் பரிவோடு. 'தங்கள் மதிப்பென்ன, பதவியென்ன? இனியும் இந்த மாதிரி பாமரர்களின் வீடுகளுக்கெல்லாம் வரலாமா நண்பரே? வாருங்கள், அரண்மனைக்குச் செல்லலாம்."

அன்புடன் அவர் கையை விலக்கினான் காஞ்சிபுரத்தான். வெறித்து அவரையே நோக்கின அவன் விழிகள். ஏதோ ஓர் உண்மையைக் காணுகின்ற மாதிரி அவை பளபளத்தன. சில வினாடிகள் மௌனமாக அங்குள்ள ஒவ்வொருவரையும் மாறி மாறிப் பார்த்தான். இறந்து விட்ட அன்னை, புரண்டு அழுகிற மைந்தன், இரும்புச் சட்டத்தின் காவலர்கள், அவர்களுக்குத் தலைமை வகிக்கும் கிருஷ்ணப்பர்- எல்லோரையும் பார்த்தான். எதுவும் பேசாமல், ஓர் ஓலைக் கிறுக்கையும் எழுத் தாணியையும் எடுத்தான்.

'மேன்மை தங்கிய அரசியாருக்குக் காஞ்சிபுரத்தானின் வணக்கங்கள். நேரில் பேசத் துணிவில்லாத காரணத்தினால் இதை எழுதுகிறேன். மன்னியுங்கள். என் சொந்த ஊரான காஞ்சிபுரத்திலிருந்து பல காலம் முன்பு கிளம்பினேன். அப்போது

என் நெஞ்சிலிருந்த எண்ணம் ஒன்றே ஒன்றுதான் ஏழைகளின் உலகத்தைக் காணவேண்டும், எளிய மக்களிடம் உறவாட வேண்டும் என்பதே அது உதவுவதையும் பரிவதையும் நான் உணர்ந்து செய்யவில்லை. இயல்பாகவே அது தான் வந்தது எனக்கு. ஆகவே என் சக்தியும் உற்சாகமும் யாரை நான் அண்டி நிற்கிறேனோ, அந்த மக்களிடமிருந்தே வந்தவை.

தாங்கள் என் வாழ்க்கையில் திடீரென்று ஒரு நாள் குறுக்கிட்ட போது, எனக்கு மிகவும் பிரியமான, நான் விரும்பிப் பழகுகின்ற ஏழைச் சமூகத்தில் ஒருத்தியாகவே இருந்தீர்கள். எனக்கு மிக மிக ஏற்றவளைக் கண்டுவிட்டோம் என்று என் உள்ளம் துள்ளிப் பறந்து குதுகலித்தது.

பிற்பாடு தாங்கள் அரியணைக்காகப் பிறந்திருப்பவர் என்ற உண்மை புலப்பட்டது. அந்த உரிமைகளைப் பறிக்க முயலுகிறவர்களை நான் எதிர்த்துப் போராடியது தங்களுக்காக அல்ல. நீதிக்காகவும், நியாயத்துக்காகவும்தான். தங்களுடன் சேர்ந்து என் தலையிலும் ஒரு மகுடத்தை ஏற்றிக் கொள்ளலாம் என்று எண்ணியல்ல.

மதிப்புக்குரிய அரசி! நான் வீட்டை விட்டுப் புறப்பட்ட திசைக்கும், வந்து சேர்ந்த இடத்துக்கும் சம்பந்தம் துளியும் இல்லாததை இப்போதுதான் காணுகிறேன். என் பெயரைச் சொல்லி, என் பதவியைக் காட்டிப் பயமுறுத்தி, அநீதி என் கண்முன் நிகழ்ந்துவிட்டது. இது யாருடைய தவறுமல்ல. பெரிய பதவிகளின் கூடவே பிறந்த நோய் அது. பதவியைப் பெரிதாய் நினைப்பவர்கள் இதைப் பரவாயில்லை என்று மன்னிப்பார்கள். இந்தக் காஞ்சிபுரத்தானால் அது முடியாத காரியம். நாளை என் பெயரில் என் பதவியைப் பயன்படுத்தி, எனக்குத் தெரியாமல் என்னென்ன அநீதிகளும் அக்கிரமங்களும் தலைவிரித்தாடுமோ! பிரதம ஆலோசகர் என்ற முறையில் எத்தனை அநீதிகளை நான் பார்த்தும்

பாராதது போல இருக்க வேண்டியிருக்குமோ அரசி! அதை நினைத்தாலே இந்தக் காஞ்சிபுரத்தானின் குலை நடுங்குகிறது.

பெருமரியாதைக்குரிய ராணி, ஏழையேனைத் தயவு செய்து மன்னியுங்கள். தங்களுக்கு எந்தவிதத் தொல்லையும் வேண்டாம். எனக்கும் எந்தவிதத் தளையும் தேவையில்லை. நான் விலகிச் செல்கிறேன், வந்த வழியில்.

எங்கே போனாலும், என்ன செய்தாலும், என் உள்ளத்திலே சிங்காவரத்தின் ராணிக்கு இன்னொரு சிம்மாதனம் இருந்து கொண்டிருக்கும். காஞ்சிபுரத்தான் என்ற இந்த முரடனின் நினைவு தங்கள் இதயத்திலும் என்றாவது இரண்டொரு வினாடிகள் தட்டுப் படுமானால் பெரிய பேறாகக் கருதுவேன்.

-காஞ்சிபுரத்தான்'.

கிருஷ்ணப்பரின் பாதங்களைத் தொட்டு வணங்கியெழுந் தான் காஞ்சிபுரத்தான். 'அரசியிடம் சேர்ப்பித்து விடுங்கள், ! என்று ஓலையைக் கொடுத்தான்.

வெளியேறினான், பின்னே பிரமித்து நிற்போரைத் திரும்பியும் பாராமல்.

வானத்தில் தாரகைக் கூட்டம் வரவேற்பு வாசித்தது. இனிய குளிர் காற்று, சுதந்திரத்தின் மந்தமாருதத்தைச் சொல்லாமல் சொல்லிற்று.

அவன் நடந்து கொண்டேயிருந்தான்.

வெள்ளி மீன்கள் துள்ளிக் குதித்தன. காலைச் சூரியனின் கிரணம், கபாலீசுரத் திருக்குளத்தின் தண்ணிரில் நவரத்தின ஒளிகளைப் பாய்ச்சிக் கொண்டிருந்தது.

கை கால்களைக் கழுவிக் கொண்டாள் ஒரு பெண்மணி. படியில் உட்கார்ந்தாள். பட்டுப் புடவையும் பவுன் நகைகளும் அணிந்தும் அவள் வதனத்தில் துயரம் தேங்கியிருந்தது. உயர்ந்து நிற்கும் ஈசன்

திருக்கோபுரத்தை நோக்கினாள். பெருமூச்சு வெளிப்பட்டது அவளிடமிருந்து.

துணியினால் கட்டியிருந்த வெள்ளிக் கலமொன்றை எடுத்தாள் வெளியே. மூடியைப் பிரித்தாள். கெட்டித் தயிர் சாதமும் எலுமிச்சை ஊறுகாயும் கம்மென்று மணம் வீசின. "தாயே கற்பகவல்லி, ' என்று கம்மிய குரலில் சொல்லிவிட்டு, ஓர் உருண்டையை எடுத்தாள். வாயிலிட்டுக் கொள்ளப் போனாள்.

'எனக்கும் ஒரு கவளம் கிடைக்குமா அம்மா?'

'என்ன என்ன அந்தக் குரல் நிஜம்தானா? விழித்துக் கொண்டுதான் இருக்கிறோமா!

'மகனே!" - கையில் சோறு இருப்பதையும் மறந்தாள் அந்த அன்னை. 'மகனே! நீதானா என்னையும் உன் அப்பாவையும் எப்படியெல்லாம் தவிக்க விட்டுவிட்டாய்? சொல்லாமல் கொள்ளாமல் வீட்டிலிருந்து வெளியேறி விட்டாயே, நியாயமா மகனே!"

'என்னம்மா நீங்கள்? பசி என்று கை நீட்டுகிறேன். சோறு போடாமல் கதை படிக்கிறீர்களே! நான் போய்விடுகிறேன் மறுபடி!' காஞ்சிபுரத்தான் எழுந்தான் போலிக் கோபத்துடன். 'ஐயோ என் ராஜா! உனக்கில்லாத சாப்பாடா? நீதான் பால் வேண்டாம், பாயசம் வேண்டாம், பட்டு மெத்தை வேண்டாம் என்று பரதேசி போல் போய்விட்டாய்... எவ்வளவு இளைத்துவிட்டாயப்பா!' சாதத்தை உருட்டி உருட்டி அவன் கையில் இட்டுக் கொண்டே பேசினாள் அந்த அன்னை.

'முன்னேதான் நன்றியில்லாமல் போனான், இனியாவது நன்றியோடு இருக்கட்டும் என்று பார்க்கிறீர்களா?' என்றான் காஞ்சிபுரத்தான்.

தாய் திகைத்தாள். "எதற்குக் கேட்கிறாய்?"

'உப்பு இவ்வளவு சேர்த்துத் தருகிறீர்களே ஒவ்வொரு உருண்டை சாதத்திலும் இரண்டு பொட்டுக் கண்ணிர் விழுந்து கொண்டேயிருப்பதைப் பாருங்கள்!"

'போ தம்பி!' கண்ணிரைத் துடைத்துக் கொண்டாள் அன்னை. 'அது போகட்டும். எங்கெல்லாமோ ஊர் சுற்றக் கிளம்பினாயே! எனக்கு என்ன சம்பாதித்து வந்திருக்கிறாய்?"

“என்ன... வந்து... ' காஞ்சிபுரத்தான் திணறினான்.

'ஏன் தயங்குகிறீர்கள்? 'ஒரு மருமகள் சம்பாதித்து வந்திருக்கிறேன் உங்களுக்காக என்று சொல்லுங்களேன்!'இருவருக்கும் பின்னாலிருந்து ஓர் இனிமையான குரல் கேட்டது! 'அம்மா எனக்கும் ஒரு கவளம் கொடுக்க மாட்டீர்களா?" இருவருக்கும் நடுவே ஒரு தந்தச் சிற்பமான பூங்கரம் நீட்டியது! தாமரைப் பூவும் இலையும் பச்சை குத்தப்பட்ட அழகிய கரம்!

“தாமரை... இல்லை இல்லை, அரசி!' பதறியெழந்தான் காஞ்சிபுரத்தான்.

'அரசியல்ல, அடிமை. தங்களுக்கு அடிமை", வெண் முத்துக்கள் பளிச்சிட்டன. பவழ அதரங்களுக்கு நடுவே. 'சிற்றப்பா தங்கள் நிருபத்தைக் கொண்டு வந்து தந்ததுமே உங்களைப் பின்பற்றிப் புறப்பட்டுவிட்டேன்...'

“தாமரை... ராஜ்யம்...'

'சீதையின் ராஜ்யம் எங்கே இருந்தது? அதுவேதான் எனக்கும், ' என்று பதிலளித்தாள் தாமரை. “சிற்றப்பாவும் சித்தியும்தான் அந்தப் பதவிக்குப் பழக்கப்பட்டவர்கள். தாங்கள் என்னை ராணியாக்கத் தீவிரமாக முயன்றதால் தடுக்கக் கூடாது என்று பொறுத்திருந்தேன். மற்றபடி உங்களுக்கு எந்த உலகம் பிடிக்குமோ அதிலேதான் எனக்கும் உயிர்...'

காஞ்சிபுரத்தானின் அம்மா கனைத்துக் கொண்டாள். 'தம்பி, நான் ஒருத்தி இருக்கிறேனப்பா இங்கே.'

‘‘மன்னியுங்கள் அம்மா, ' என்றான் காஞ்சிபுரத்தான். "இந்தப் பொல்லாத பெண்ணைப் பற்றிச் சொல்வதானால் ஜாமக் கணக்கில் சொல்ல வேண்டும். ஊரிலிருந்து வண்டியில் தானே வந்தீர்கள்?"-

"ஆமாம், அதோ நிற்கிறது பார், நம் வில் வண்டி.'

"சாயந்தரம் புறப்படலாம், அம்மா. ஊர் போய்ச் சேருகிற வரையில் சொல்கிறேன் எல்லாக் கதையையும். சத்திரத்திலே நீங்கள் கொஞ்ச நேரம் ஒய்வெடுத்துக் கொள்ளுங்கள்!" தாமரையின் கையைப் பற்றிக்கொண்டான் காஞ்சிபுரத்தான். குதி நடையில் புறப்பட்டது அந்த இளம் ஜோடி.

விரல்கள் பத்துதான். பரிமாறிக் கொண்ட இன்பக் கிளுகிளுப்புகளோ பதினாயிரம் பதினாயிரம். பார்த்தவர் கண்ணெல்லாம் பொறாமை கொழுந்து விட்டெரிந்தது. காதல் சிட்டுக்களோ கடுகத்தனையும் அதைப் பொருட்படுத்தாமல், பட்டணத்து வீதிகளில் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தன.

‘‘தாமரை எவ்வளவு பெரிய தியாகம் செய்துவிட்டாய்! அவ்வளவு பெரிய தியாகத்துக்குத் தகுதியுள்ளவனா நான்'

'உங்களுக்காகத் துறப்பதற்குக் கேவலம் சிங்காவரம் ஒன்றுதானே இருந்தது என்பது என் மனக்குறை!'

காஞ்சிபுரத்தான் கை நீட்டிக் காட்டினான்: 'தாமரை, அந்தப் பக்கம் போவோமா?"

'ஏன், என்ன இருக்கிறது அங்கே?' "நீயும் நானும் முதன் முதலில் சந்தித்த அன்பு மாளிகை' சிலிர்த்து அடங்கியது தாமரையின் கொடியுடல். "ஐயோ! கசையடி விடுதியா ஏன் நினைவுபடுத்துகிறீர்கள் அந்த எமனின் இருப்பிடத்தை!'

அவர்கள் பேச்சை வெட்டியது புதுக்குரலொன்று. 'எமனின் இருப்பிடத்துக்கு நீங்கள் போகவேண்டாம். எமனே எதிர்ப்பட்டால்?"

'யார்?' அதிசயித்துத் திரும்பினான் காஞ்சிபுரத்தான். 'அதுதான் சொன்னேனே - உங்கள் இருவருக்கும் எமனென்று!"

அட்டகாசமாய்ச் சிரித்தார் ரகுநாதர் சரக்கென்று உடை வாளை உருவியது அவர் கரம்.

## (42)

கண்ணிமைக்கும் நேரத்துக்குள் வளைந்து தப்பினான் காஞ்சிபுரத்தான். மறுபாய்ச்சலின் போது அவனுடைய உடும்புப் பிடியில் ரகுநாதருடைய வாள் பிடித்த கை சிக்கியிருந்தது.

காஞ்சிபுரத்தான் சிரித்தான்: 'ஏது தாங்கள் இப்படி மாறி விட்டீர்கள்! எதிராளியைப் பின்னாலிருந்து குத்துவதும் கவிழ்ப்பதும் அல்லவா தங்கள் வழக்கம்! இப்படியா நேருக்கு நேராகத் தர்மயுத்தத்துக்கு வருவது!" -

'விடடா நாயே!' என்று திமிறி விடுவித்துக் கொண்டார் ரகுநாதர்.

இரண்டாம் முறை அவர் வாளை ஓங்கியபோது கூட்டம் சேர்ந்துவிட்டது வேடிக்கை பார்க்க.

தாமரை வீரிட்டாள்: "இங்கே கேள்வி முறையில்லையா? நிராயுதபாணியாக இருப்பவரை வாளினால் தாக்குகிறாரே ஒருவர்!'

கூட்டத்திலிருந்து ஒருவர் முன்வந்தார். "ஆம், ஆம். இது முறையான சண்டையாகாது,' இருவரையும் பிரித்து விட்டார் அவர். 'எங்கள் தேசத்திலேகூட, அவமானமோ அபவாதமோ ஏற்பட்டால் வாட்போருக்கு எதிராளியை அழைப்பதுண்டு. ஆனால் இருவர் கையிலும் வாள் இருக்க வேண்டுமே?''

காஞ்சிபுரத்தான் புன்முறுவலுடன், “வணக்கம் சாமியாரே? எங்கே மோஸஸ்?' என்று விசாரித்தான்.

பச்சோந்திப் பாதிரியார், "நான் நடுவராகப் பணியாற்றப் போகிறேன். தயவு செய்து உறவு கொண்டாடாதே' என்றார். அவர் பார்வை சுழன்றது. ஒரு மராட்டிய வீரனிடம் நிலைத்தது. 'உன் வாளைக் கொஞ்சம் கொடப்பா, ' என்று கேட்டு வாங்கித் தந்தார் காஞ்சிபுரத்தானிடம்.

'ஒன்று, இரண்டு, என்று பச்சோந்திப் பாதிரியார் கை தட்டினார். 'மூன்று என்றதும் ஆரம்பிக்கவேண்டும் இருவரும்.' கையைப் பிசைந்தாள் தாமரை. "தடுத்து நிறுத்துவீர்கள் என்று உங்களிடம் முறையிட்டேன். மேலும் பெரிதாய் வளர்த்துவிட்டீர்களே!'

'மூன்று!" என்று கை தட்டினார் பாதிரியார். கிணிங் கிணிங் பறந்தது தீப்பொறி; வெடிடியது மின்னல்; கொட்டியது குருதி.

செருகினான் வாளை. "ஐயோ!' என்றலறி ரகுநாதர் விழ, "பலே!" என்று மக்கள் பாராட்ட, கண்களைப் பொத்திக்கொண்டு அச்சத்துடன் தாமரை கூச்சலிட- .'

'கொலை படுகொலை பச்சைப் படுகொலை நட்ட நடுப்பகலில்..." கூட்டத்தினரை முண்டித் தள்ளிக்கோண்டு வந்தவர் பெரியபெத்துதான்.

ஊருக்குப் பெரியவர் என்பதால் ஒதுங்கிக் கொண்டார்கள் மக்கள். பரிதாபத்துடன் நோக்கினான் காஞ்சிபுரத்தான். பழைய செருக்கும் ஆணவமும் பறந்தே போயிருந்தன. மீசை கூடச் செருக்கைப் பறிகொடுத்துத் துவண்டிருந்தது.

உடைவாளை உரியவனிடம் திருப்பினான் காஞ்சிபுரத்தான். 'போகலாம் வா தாமரை, ' என்றான்.

ரத்த வெள்ளத்தில் கிடக்கும் ரகுநாதரையும், திரும்பிச் செல்லும் அவர்களையும் மாறி மாறிப் பார்த்தார் பெரிய பெத்து. திடீரென அவர் கண்கள் எதையோ கண்டன; மகிழ்ச்சியுடன் மின்னின.

ஆனந்தத்துடன் கூச்சலிட்டார்: "அடிமைகள்! என் அடிமைகள் இந்த இரண்டு பேரும் முதுகில் பெயர் போட்டிருக்கிறேன், பாருங்கள் பிடியுங்கள் பிடியுங்கள்!'

கூட்டத்தில் எவரும் அவர் உதவிக்கு வரத் தயாராய் இல்லை. *

'பிடியுங்கள் அந்த அடிமைகளை" வெறிக் கூச்சலுடன் குதித்தார் பெரியபெத்து. 'ஆ அதோ வருகிறார்கள் கும்பினிச் சிப்பாய்கள்! வாருங்கள் பிடியுங்கள் இந்தக் கழுதைகளை! நீங்கள்தான் இந்தச் சென்னைப் பட்டணத்தில் சட்டத்தைக் காக்க ஏற்பட்ட நல்லவர்கள். இந்த ஜனங்களைப் போல் நீதியைக் காலால் மிதிப்பவர்களல்ல நீங்கள்!"

பெரியபெத்து பேசப் பேச அந்தச் சிப்பாய்கள் அவர்களை நோக்கியே வந்தார்கள்.

பச்சோந்திப் பாதிரியார் ஒரு மர்மப் புன்முறுவலுடன் நின்றிருந்தார் பேசாமல்.

சிப்பாய்கள் அருகில் வந்தார்கள். பெரியபெத்துவை ஒதுக்கி நகர்த்தினான் ஒருவன். இன்னொருவன், கையிலிருந்த ஒரு பெரிய துணியை அருகிலிருந்த சுவரில் ஆணி வைத்து அடித்தான். மூன்றாமவன், டமடமவென்று பறை அறைந்து கொண்டே துணியிலிருந்த வாசகத்தை உரக்கப் படித்தான்:

'மாட்சிமை தங்கிய இங்கிலாந்து மன்னருடைய பிரதிநிதியான கிழக்கிந்தியக் கும்பினியார் இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால்: கும்பினியாரின் ஆளுகைக்குட்பட்ட சென்னைப் பட்டணப் பிரதேசத்திலும், எழும்பூர், மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, வேப்பேர், புரசை வாக்கம் கிராமங்களிலும்

இன்று முதல் யாரும் அடிமைகளை வாங்கவோ விற்கவோ கூடாது என்றும், அப்படிச் செய்பவர்கள் ஈவிரக்கமின்றித் தண்டிக்கப்படுவார்கள் என்றும் தெரிவித்துக் கொள்கிறோம். தப்பியோடிய அடிமைகளைத் திரும்பிப் பிடிப்பதும், அயல்நாடுகளுக்குக் கப்பலேற்றி அனுப்புவதும் சட்டப்படி குற்றமாகும்...'

டமடம டமடம. கும்பினி சிப்பாய்கள் போய்விட்டார்கள். இடிந்து நின்ற பெரியபெத்துவை நோக்கி இடிஇடியென்று சிரித்துவிட்டுக் கூட்டமும் கலைந்தது.

பச்சோந்திப் பாதிரியாரும் புறப்பட்டார். 'தாங்கள்தான் இந்தச் சீர்திருத்தத்துக்குக் காரணகர்த்தர் என்று நினைக்கிறேன், ' என்றான் காஞ்சிபுரத்தான் நன்றியுடன்.

பாதிரியாரின் மெலிந்த இதழ்களில் மென்னகை அரும்பியது. 'காரணம் - கர்த்தர், ' என்றார் சிலேடையாக.

தாமரையின் கையைக் கோத்துக் கொண்டு நடந்தான் காஞ்சிபுரத்தான்.

வெகு தொலைவில் கோட்டை தெரிந்தது - அக்கரைச் சீமையிலிருந்து வந்த ஆட்சியாளர்களின் செயின்ட் ஜார்ஜ் கோட்டை, வான்முட்டும் கம்பத்தில் வீசிப் பறந்தது கும்பினிக் கொடி. எந்த வெள்ளைத் துரைக்காகவோ போடப்பட்ட வேட்டுச் சத்தத்தை உருட்டிக் கொண்டு வந்தது உப்புக் காற்று. அடிமைத் தளையிலிருந்து விலகி, காதல் தளையில் சிக்குண்ட இருவர் நெஞ்சிலும் ஒரே எண்ணம்.

எதிர்காலத்தில் இந்த மண்ணிலே எத்தனை எத்தனையோ காஞ்சிபுரத்தார்கள் வருவார்கள், செல்வார்கள், ஆளுவார்கள், நீதியை நிலைநிறுத்தப் போராடுவார்கள். இதே கோட்டைக் கம்பத்திலே இன்னும் எத்தனை எத்தனையோ கொடிகள்

படபடக்கும். சட்டங்கள் மாறும். ஆணைகள் கவிழும். எழுச்சிகளும் புரட்சிகளும், தியாகங்களும் தழும்புகளும், கொந்தளிப்புகளும் கூப்பாடுகளும் திரும்பத் திரும்ப இந்தத் தமிழ் மண்ணிலே எதிரொலித்துக் கொண்டே இருக்கும்.

அவ்வளவுக்கும் இடையில் மனிதன் அடிபடுவான், தோல்வியுறுவான், விழுவான், அவமானப்படுவான், அழுவான். ஆனால் எவ்லாவற்றுக்கும் இறுதியில் எழுவான், புஜத்தில் வலிவும் நெஞ்சில் துணிவும் கொண்டு செம்மாந்து நிற்பான். ¡

தோல்வி இரவாகி முடியும். வெற்றி பகலாக விடியும். ஆம் ஆம் என்று கூறியது காஞ்சிபுரத்தானின் விரல்; ஆம் ஆம் என்று ஆமோதித்தது தாமரையின் விரல்.

**- நிறைந்தது -**